பரதேசியின்
மோட்ச
பிரயாணம்

1882

O111 1K63,
31 N82
120989.
1882

T. DRC 2213
NO.
R. R. No 56-1-89

56
1-23

T. BOOK. 2213

முகப்புப்படம்.



(176-ம் பக்கம் பார்க்க.)

56/1-63

BUNYAN'S

# PILGRIM'S PROGRESS.

**TAMIL.**

*A NEW TRANSLATION*

BY

REV. S. PAUL, C. M. S.

---

பரதேசியின்

# மோட்ச பிரயாணம்.

இதில்

ஒருவன் பூலோகத்திலிருந்து

பரலோகத்துக்கு யாத்திரைபோவதை

சொப்பனப்போக்காய்ச் சொல்லியிருக்கிறது.

புதிய திருப்புதல்.

MADRAS:

THE RELIGIOUS TRACT AND BOOK SOCIETY,

C. K. S. PRESS, VEPERY.

1882.

O111,1KBJ,P
31M82
120989

# முகவுரை.

"பரதேசியின் மோட்ச பிரயாணம்" என்று அழைக்கப்படுகிற இந்தச் சொப்பனப் பிரபந்தம், இங்கிலீஷ் பாஷையில் முதலாவது எழுதப்பட்டு ஏறக்குறைய இருநூற்றிருபது வருஷங்கள் ஆகிறது. இத்தனை வருஷங்களுக்குள்ளாக இது அநேக பாஷைகளில் திருப்பப்பட்டு, உலகம் எங்கும் பிரபலம் பெற்றிருக்கிறதென்பதை யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள்.

பனியன் என்பவர் எழுதிய இப்பிரபந்தம், காகிதப் பிரதியாய் இருந்த காலத்தில், அச்சிடு என்று சிலரும்; அச்சிடாதே என்று சிலரும்; இது நன்மைசெய்யும் என்று சிலரும்; நன்மைசெய்யாதே என்று சிலரும் சொன்னபோதிலும்; இப்பொழுதோ, பூலோக பாஷைகளில் எல்லாம் இது அச்சிடப்படவேண்டும் என்று எவராலும் சொல்லப்படவேண்டிய ஒரு நூலாகவே இருக்கிறது.

இங்கிலாந்து தேசத்துச் சன்மார்க்கப் புஸ்தகச் சங்கத்தார்மாத்திரம் இதைச் சுமார் நூறுபது பாஷைகளில் திருப்பி அச்சிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள ஹிந்தர், தெலுங்கர், ஹிந்துஸ்தானர், வங்காளர், மகாராஷ்டியர், குஜாராத்தியர், கன்னடர், மலையாளர், தமிழர், இலங்கைச் சிங்களர் ஆகிய இந்தியாதியோரும் இப்பிரபந்தத்தைத் தங்கள் சொந்தப் பாஷையில் வாசிக்கும் சௌக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த நூல், கிறிஸ்தவ பிரபல்லிய விருத்திச் சங்கத்தாரால் (S. P. C. K.) 1793ல், தமிழில் முதலாவது அச்சிடப்பட்டதென்று அறிகிறோம்.* இந்தத் திருப்புதலிலும் இதற்குப் பின்வந்த திருப்புதல்களிலும் முதலாம் பங்குமாத்திரம் அடங்கியிருக்கிறது. ஆனால் இந்தப் பிரபந்தம் முழுவதும், 1853ல் யாழ்ப்பாணம் மானிப்பாய் அச்சில் [illegible] பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

இதற்குமுன் இந்தப் புஸ்தகத்தைத் தமிழ்ப்படுத்தினவர்கள் இதின் உள்ளவைகளில் சிலவற்றைக் குறைத்தும், இதிலேறி சிலவற்றைக்

---

* Murdoch's Catalogue of the Christian Vernacular Literature of India. p. 143.

பரதேசியின்

# மோட்ச பிரயாணம்.

( சொப்பனப் போங்கு. )

## பிரயாண ஆவல்.

இவ்வகண்ட லோகவனத்திலே நான் சஞ்சாரஞ்செய்த காலத்தில், ஒருதரம் ஒரு மலையடிவாரத்தில் தங்கினேன். அங்கே ஒரு கெபி இருந்தது;[1] அதனுள் போய்ப் படுத்து நித்திரை செய்தேன்; நான் அயர்ந்து நித்திரைசெய்கையில் மா மகிமையான ஒரு சொப்பனங்கண்டேன். அச்சொப்பனத்தைச் சொல்லுகிறேன் கேள்.

சிறைச்சாலை.

இதோ ஒரு மனுஷன் கந்தை[2] கட்டிக்கொண்டு தன் வீட்டைப் பாராமல் வேறோர் திசையை நோக்கிக்கொண்டு நின்

---

கவனிப்பு. அங்கங்கே குறிக்கப்பட்டிருக்கிற வேத ஒத்துவாக்கியங்களை வாசித்துக்கொண்டால், இப்புஸ்தகத்தில் அடங்கிய சங்கதிகள் அதிகத் தெளிவாய் விளங்கும்.

[1] கெபி. இது பன்னியன் என்பவர் அடைபட்டிருந்த சிறைச்சாலையைக் குறிக்கிறது. இங்கே இருந்த காலத்திலேயே இப்பிரபந்தம் எழுதப்பட்டது.

[2] கந்தை கட்டிப் பாரம் சுமந்த மனுஷன் என்பது, சத்தியவேதத்தை வாசிக்கிற ஒருவன் தன் முதல்தரமான கிரியைகள் முதலாய்க் கந்தைக்குச் சமமாய் இருக்கிறதென்றும், பாவமானது ஒரு பாரச் சுமையைப்போல் தன்னை இருக்குகிறது என்றும் அறிந்து உணருகிறதைக் காட்டுகிறது.

ருன். அவன் கையில் ஒரு புஸ்தகமும், முதுகில் ஒரு பாரச் சுமையும் இருந்தது.[a] நான் அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தேன்; அவன் தன் புஸ்தகத்தைத் திறந்து வாசித்தான். வாசிக்க வாசிக்க மாலைமாலையாய்க் கண்ணீர் சொரிந்தான்; அவன் உடம்பும் சிலிர்த்தது; கடைசியாக அவன் தன்னை



அடக்கிக்கொள்ள சக்தியற்று உரத்த சத்தமாய்: ஐயோ, நான் என்ன செய்வேன்? என்று வாய்விட்டுக் கதறி அழுது புலம்பினான்.[b]

இவ்வளவு வியாகுலத்தோடு அவன் தன் வீடுமுகமாய்த் திரும்பி நடந்து, தன் இலேசத்தையும் கண்ணீரையும் வீட்

[a] ஏசா. 61. 6. ஆரக். 14. 33. சங். 38. 4.
[b] அப். 2. 37. 16. 30. ஆப. 1. 2, 3.



டார் ஒருவரும் அறியாதபடி செய்துகொள்ளவேண்டும் என்று முகத்தை நன்றாய்த் துடைத்து, மனக்கவலை ஒன்றும் இல்லாதவனைப்போல வீட்டுக்குள் நுழைந்தான். நுழைந்து தன்னால் ஆனமட்டும் தன் மனவேதனையை அவர்கள் கண்டுகொள்ளாதபடி செய்தான். அவன் தன்னை வெகுநேரம் அடக்கிக்கொள்ளக்கூடாமல் போயிற்று. ஏனெனில் அவனுடைய கிலேசம் வரவர அதிகப்பட்டது. அவன் தன் மனைவியையும் மக்களையும் கூப்பிட்டுச் சொல்லுகிறான்: ஆ, என் நேச மனைவியே! கேள், என் கெர்ப்பக்கனிகளே! செவிகொடுங்கள், உங்கள் மகா பிரியமுள்ள சிநேகிதனாகிய நான், இதோ என் முதுகில் இருக்கும் சுமை, வரவர பாரமாகிறதால் மெத்தவும் அவதிப்படுகிறேன், அது என்னை நசுக்கிப்போடும்போல் இருக்கிறது; அதுவுமன்றி நாம் வாசம்செய்யும் இந்தப் பட்டணம்[1] வானத்திலிருந்து வரும் அக்கினியால் தகனிக்கப்படும் என்று திட்டமாய் அறிந்தேன். நாம் தப்பிக்கொள்ளுகிறதற்கு யாதொரு வழிவகையும் இல்லையானால், நானும், என் அருமை மனைவியே! நீயும், என் கண்மணிகளே! நீங்களும் ஏகமாய் அந்த அக்கினியில் அழிந்துபோவோம். நாம் தப்ப ஒரு வழி இருக்கிறதென்று இன்னம் எனக்குத் தோன்றவில்லை என்று சொன்னான்.

இந்த உலகம்.

தப்பும்வழி இன்னும் அவனுக்குத் தெரியாது.

இதைக் கேட்ட அவன் மனைவியும் மக்களும், உற்றாரும் பெற்றாரும் அதிசயப்பட்டார்கள்.[2] அவன் சொன்ன மோசங்கள் மெய்யாகவே நடக்கும் என்று நம்பி அஞ்சினதினால் அல்ல, பித்தம் சிரசில் ஏறிப் பிதற்றுகிறான், பித்தம் முற்றினால் வைத்தியனாலுங்கூடாதே என்றெண்ணிக் கலக்கமுற்றார்கள். இப்படி அவன் பிரலாபித்தது, பொழுது சாயப்போகிற நேரமாயிருந்தது; அவனுடைய பந்துக்கள் இவனுக்கு நல்ல தூக்கமில்லாமல் மண்டைக் கொதிப்பேறி புத்திமாறி இருக்கிறது, இவன் நித்திரைசெய்து எழு

நோய்கொண்ட ஆத்துமா வருந்த செய்யும் பூலோக மருந்து.

[1] பட்டணம் என்பது கடைசியில் அக்கினியால் தகனிக்கப்படும் இந்தப் பொல்லாத உலகத்தைக் குறிக்கிறது.

[2] அநேக ஜனங்கள் தங்கள் ஆத்தும இரட்சிப்பைக்குறித்து எவ்வளவும் கவலைப்படாமலிருக்கிறதுமன்றி, கவலைப்படுகிறவர்களைப் வைத்தியங்கொண்டவர்களைப்போல எண்ணிக்கொள்ளுகிறார்கள்.

ந்திருந்தால் சிரசில் ஏறிய பித்தம் விடியுமுன் வடியும், புத்தி சீராகும் என்று அவர்கள் எண்ணி அவன் தூங்குகிறதற்கேற்ற பிரயத்தனங்களை விரைவில் செய்தார்கள். அன்றிரவிலும் அவன் முந்தின பகலைப்போலவே உபத்திரவப்பட்டான். எல்லாரும் முக்காரம்போட்டுத் தூங்கினார்கள். இவனோ பெருமூச்சு விட்டு, கண்ணீர்சொரிந்து காலத்தைக் கடத்தினான். விடிந்தவுடனே, அயல் வீட்டுக்காரரும் அறிந்த சிநேகிதரும் வந்து, அண்ணா! நன்றாய்த் தூங்கினீரா? தம்பி, இப்போது சுகம் எப்படி என்று கேட்டார்கள். அவனோ முன்னிலும் கேடு, முன்னிலும் கிலேசம் என்று சொல்லி: தன் மனதின் பயங்கரங்களைக்குறித்து அவர்களோடு பேசும்படி ஆரம்பித்தான். அவர்கள் அதைக் காதுகொடுத்துக் கேளாமல் கடின இருதயமுள்ளவர்களாய் இருந்தார்கள். அவர்களில் சிலர் கூடி, கனிவுள்ள வார்த்தைகள் இவனுக்கு ஆகாது, கடிந்து கடிந்து பேசவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு, சிலதரம் அவனைக் கேலி பண்ணுவார்கள், சிலதரம் கடுப்பாய்ப் பேசுவார்கள், சிலதரம் பித்தா! நீ கெட்டாய் என்று கதவைப் பூட்டி ஒண்டியாய்க் கிடவென்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். அவன் தன் வீடு மட்டாயிருந்து, தன் ஊராருக்காகப் பரிதபித்து, ஜெபம் செய்து, தன்னுடைய சொந்த நிர்ப்பந்தத்தையும் உணர்ந்து கொண்டிருப்பான். அடிக்கடி அவன், வீடுவிட்டுக் காடுபோய், அங்குள்ள வயல்வெளிகளில் ஒண்டியாய் உலாவி: சிலதரம் வாசிப்பான், சிலதரம் ஜெபம்பண்ணுவான், சிலதரம் அழுவான், சிலதரம் புலம்புவான்; இப்படிச் சிலநாளைக் கழித்தான்.

## சுவிசேஷகனின் முதலாம் சந்திப்பு.

அவன் தன் வழக்கத்தின்படி வயல்வெளிகளில் உலாவிக்கொண்டிருந்த ஒருநாள்: தன்னுடைய புஸ்தகத்தை வாசித்து வாசித்து, மிகுந்த துக்கசாகரமுள்ளவனாய் இருக்கிறதை நான் கண்டேன். அவன் வாசிக்க வாசிக்க முன்போல வாய்விட்டு அலறி,[a] "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்னசெய்யவேண்டும்" என்று அழுதான். இப்படிச் சொல்லிக்கொண்டதுமல்லாமல், எத்திசையாய் ஓடலாம் என்று பார்க்கிறவனைப்போல், அந்த மைதானத்தில் அவன் அங்கும் இங்கும் சாடப்போகிறதைப்போலவும் நான் கண்டேன். என்றாலும் அவன் ஓடும் இடம் அறியாதிருந்ததால் நின்ற நிலையிலேதான் நின்றான்.

[a] அப். 16. 30, 31.



அவன் என்னதான் செய்கிறான் பார்ப்போம் என்று நான் அவனைப் பார்த்த வண்ணமாய் இருந்தேன். அப்பொழுது அந்த மைதானவழியாய் சுவிசேஷகன்[1] என்னும் பேருடைய ஒருவர் வந்தார். அவர் இந்த மனுஷன் அண்டைபோய், ஏன் அப்பா அழுகிறாய்? என்று கேட்டதையும் கண்டேன். அவன் சொல்லுகிறான்: ஐயா! என் கையில் இருக்கிற இந்தப் புஸ்தகத்தினால் எனக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்றும், மரணத்துக்குப்பின் நான் நியாயந்தீர்க்கப்பட வரவேண்டியவன் என்றும்[a] உணருகிறேன். மரணதண்டனையை அநுபவிக்கவோ எனக்கு மனதில்லை,[b] நியாயத்தீர்ப்புக்கு வரவோ என்னால் இயலாது,[c] என்று அறிகிறேன் என்பதாய்ச் சொன்னான்.

அதற்குச் சுவிசேஷகன்: சாக ஏன் உனக்கு மனதில்லை அப்பா? இவ்வையகத்தின் அவஸ்தைகளுக்கு ஒரு கணக்கு இல்லையே என்றார். அதற்கு அவன்: ஐயா! அது நிஜம்தான்; ஆனால், இதோ பாரும்; என் முதுகில் இருக்கும் பாரச்சுமை என் சாவோடு இறங்கி, கல்லறையோடு தொலைந்துபோகாமல், நரகபாதாளமட்டும் என்னை இழுத்துக்கொண்டுபோய் நித்தியாக்கினிப் பள்ளத்தில் உருட்டித் தள்ளிவிடுமே,[d] பூலோக சிறைச்சாலைகளில் இருக்கும் அவஸ்தைகளைத் தாங்க என்னால் ஆகாதானால், நியாயந்தீர்க்கப்படவும் பாதாள லோகத்து அக்கினிப்பள்ளத்தின் நித்திய வேதனைகளைச் சகிக்கவும் என்னால் இயலுமா? இவ்வெண்ணங்கள்தான் என் மனதைப் புண்ணாக்கி, பெருமூச்சுவிடவும் அழவும்பண்ணுகிறது என்று சொன்னான்.

நாசதேசத்தை விடுதல் அவசியம்.

உன் நிலைமை இப்படியானால் வேலையும் சேவையும் இல்லாதவனைப்போல் ஏன் இந்த வனத்தில் நின்றுகொண்டிருக்கிறாய்? என்று சுவிசேஷகன் கேட்டார். அதற்கு அவன்: ஐயா! நான் எங்கே போகவேண்டும் என்று எனக்குத் தெரியாமல்தான் இந்த வனத்தில் பெருமூச்சுவிட்டுத் திரிந்தலைகிறேன்

[1] சுவிசேஷகன்: இது ஒரு உண்மையுள்ள தேவஊழியக்காரனைக் குறிக்கிறது.

[a] எபி. 9. 27.
[b] யோபு. 16. 21, 22.
[c] எசே. 22. 14.
[d] ஏசா. 30. 33.

என்றான். அப்போது சுவிசேஷகன் ஒரு சுருளை அவன் கையிலே கொடுத்து இதைப் படித்துப்பார் என்றார். அதை அவன் மெதுவாய் விரித்து வாசிக்கவே! வருங்கோபத்துக்குப் பறந்தோடிப்போ,[a] என்ற வாசகம் பெரிய எழுத்துகளால் எழுதியிருந்ததைக் கண்டான்.

அவன் சுவிசேஷகனுடைய முகத்தைக் கனிவோடு பார்த்து, நான் எங்கே ஓடவேண்டும் ஐயா! என்று கேட்டான். சுவிசேஷகன் தன் கையை நீட்டி (விஸ்தாரமான ஒரு வனத்துக்கப்பால் காட்டி) அதோ இருக்கிறதே அந்தத் திட்டிவாசல்,[1] உனக்குத் தெரியுதா?[b] என்று கேட்டார். ஒன்றும் தெரியவில்லையே என்று புலம்பினான். அப்புறம் சுவிசேஷகன்: அதோ தூரத்தில் பிரகாசிக்கிற வெளிச்சமாவது[2] தெரிகிறதா?[c] என்று கேட்டார். ஆம் ஐயா ஆம், அதோ தெரிகிறாப்போல் இருக்கிறது என்றான். அப்புறம் சுவிசேஷகன்: அந்த வெளிச்சத்தையே நீ நோக்கிக்கொண்டு, நேரே நடந்துபோ! அங்கே போனால் அந்தத் திட்டிவாசல் தெரியும்; வாசலண்டை போய் தட்டினால் நீ செய்யவேண்டியது இன்னதென்று அங்கே உனக்குச் சொல்லப்படும் என்று சொன்னார்.

கிறிஸ்துவும் அவரிடம் போகும் வழியும் இவ்வுலகத்தில் கண்டுபிடிக்கப் படவேண்டியது.

## திட்டிவாசல் பயணம்.

அப்புறம் நான் என் சொப்பனத்திலே அவன் திட்டிவாசல் திசையாய் ஓடிப்போகக் கண்டேன். அவன் சற்றுதூரம்

[1] திட்டிவாசல் நெருக்கமாய் இருக்குமாதலால் அதின் வழியாக ஒருவன் பெரிய மூட்டையோடு பிரவேசிக்கக்கூடாது. இது நித்திய ஜீவனின் ஒரே வழியாகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறது. அவர் மூலமாய் இரட்சிப்படைய விரும்புகிறவர்கள் தங்கள் பாவங்களையும், அவபத்தமான தோழரையும் வெறுத்துப் பின்னாலே தள்ளிப்போடவேண்டும்.

[2] ஆத்தும இரட்சிப்பை நாடும் ஒருவன் கிறிஸ்துவின் மூலமாயுள்ள இரட்சண்யவழியைத் துவக்கத்திலேயே தெளிவாய்க் கண்டுகொள்ளக்கூடாமல் இருந்தாலும் இருக்கும். அப்படிப்பட்ட சமயத்தில், பாதைக்கு வெளிச்சம்போல் இருக்கும் தேவவசனத்தை அவன் கருத்தோடு வாசித்து வரவேண்டியது.

[a] மத். 3. 7.
[b] மத். 7. 13, 14.
[c] சங். 119. 105. 2 பே. 2. 19.



ஓடவே, அவன் மனைவியும் மக்களும் பின்னாலே ஓடி: அப்பா! அர்சே! வாரும் வாரும், திரும்பிவாரும் என்று அழுது கூப்பிட்டார்கள். அவனோ அச்சத்தத்தைக் கேட்டும், பின்னிட்டுப் பாராமல்,[a] தன் காதுக்குள் விரலை இட்டுக்கொண்டு, ஜீவனே ஜீவனே! நித்திய ஜீவனே![1] என்று கதறிக்கொண்டு அந்த மைதானத்தின் மத்தியவழியாய் அதிதீவிரமாய் ஓடினான்.[b]

அயல்வீட்டுக்காரரும் ஊராரில் அநேகரும்[c] அவன் ஓடுகிறதைப்பார்த்து, இதென்ன பைத்தியம்! இப்படியும் செய்வார் உண்டா? என்று பேசிக்கொண்டார்கள்; சிலரோ அவன் ஓட்டத்தைப் பார்த்து பகிடிபண்ணினார்கள்; வேறு சிலர் அவனைத் திட்டி பயப்படுத்தினார்கள்; வேறு சிலர் நயவசனங்களைச் சொல்லி திரும்பிவிடச் சொன்னார்கள்; அப்படிப்பட்டவர்களில் இரண்டுபேர் அவனைப் பலவந்தப்படுத்தியாவது திருப்பிக்கொண்டு வரும்படிக்கு கச்சைகட்டிப் புறப்பட்டார்கள். அவர்களில் ஒருவனுக்கு பிடிவாதன்[2] என்றும், மற்றவனுக்கு இணங்குநெஞ்சன்[3] என்றும் பேர். காரியங்கள் இப்படி ஒழுங்காகுமுன் அவன் வெகுதூரம் போய்விட்டான். அவ்விருவரோ, எவ்வளவு தூரமானாலும் போய் அவனைத் திருப்பிக்கொண்டு வரவேண்டும்

வரும் கோபத்துக்குத் தப்பி ஓடிப்போவோர் லோகத்தாருக்கும் பித்தம்பிடித்தவர்கள் போல்.

[1] இரட்சண்ய விசாரணையில் இருப்பவன், அதின்மேல் நீங்காத ஆசைகொள்ளுகிறதைப்பார்க்கிற அவனுடைய இனபந்துக்களும், மற்ற இஷ்டர்களும், அவன் மனதைக் கெடுத்து, முன்போல இரட்சண்யத்தைப்பற்றி ஏனோதானோவென்றிருக்கும்படி செய்ய முயலுகிறார்கள். சிலர் அவனைப் பகடிபண்ணுகிறார்கள், சிலர் பயமுறுத்துகிறார்கள், ஷ.

[2] பிடிவாதன் என்பது, தேவனுடைய வசனமானது தன் பாவ எண்ணங்களைக் கண்டிக்கிறபொழுது அதை அசட்டைசெய்கிற கர்வமும் இழிவுமான ஒருவனைக் குறிக்கிறது.

[3] இணங்குநெஞ்சன் என்பது, மற்றவர்களுடைய போதனைக்கு இலேசாய் மனதைச் சாய்க்கிறவனைக் குறிக்கிறது. அவனை இரட்சண்ய விசாரணையின் வழிக்குக் கொண்டுவருவது லேசாய் இருந்தாலும், மெய்யான கிருபை அவன் இருதயத்தில் இல்லை. எந்தவிதமான துன்பமானது இரட்சண்ய விசாரணையைவிட்டு அவனை விலக்கிப்போடலாம்.

[a] ஆதி. 19. 17.
[b] லூக். 14. 26.
[c] எரே. 20. 10.

என்று தீர்மானித்திருந்ததால், மான்வேகமாய் ஓடி, அவனை முன்னெட்டி மறித்தார்கள். அப்போது அவன் அவ்விருவரையும் பார்த்து: ஏதையா இவ்வளவு தூரம் வந்தீர்கள்? என்று கேட்டான். அதற்கு அவர்கள்: உன்னைத் தொடர்ந்து பிடித்துத் திரும்ப ஊருக்கு அழைத்துக்கொண்டுபோகத்தான் வந்தோம்; வாவா, திரும்பி நட என்றார்கள். அதற்கு அவன்: அந்த எண்ணம் பலியாதென்று சொல்லிவிட்டு, அண்ணே! பிடிவாதனே! தம்பி இணங்குநெஞ்சனே! கேளுங்கள். நீங்கள் நாசபுரியில் குடியிருக்கிறீர்கள்; அது, நான் பிறந்து வளர்ந்த ஊர்தான். அதிலிருந்து செத்தால் மண்ணறையைப்பார்க்கிலும் மகா ஆழத்தில் இருக்கிற நரகபாதாள பள்ளத்தில் இறங்கிவிடுவீர்கள். அங்கே அக்கினியும் கந்தகமும் கலந்தெரிகிறது, அப்படியே சம்பவிக்கும் என்பது மெய்; ஆகையால் என் சிநேகிதரே! நாம் மூவரும் நாசபுரிக்கு அல்ல, அதோ தெரிகிற திட்டிவாசலை நோக்கி நடந்து, அழிவினின்று தப்பிக்கொள்ளுவோமாக என்றான்.

**பிடி.** என்ன சொல்லுகிறாய்? பந்துக்களையும், பவுஷுகளையும், மக்களையும், மகிழ்ச்சிகளையும் விட்டுப்போட்டா வரச் சொல்லுகிறாய்? என்று பிடிவாதன் கேட்டான்.

அதற்குக் **கிறிஸ்தியான்** என்னும் பேரையுடைய அவன், ஆம், ஆம், எல்லாவற்றையும் தான்; நான் அநுபவிக்கும்படி ஓடுகிற பாக்கியத்திற்கு அவைகள் கடுகளவு இணை ஆகுமா?[a] நீங்கள் என்னோடேகூடவே வந்து, பின்வாங்காமல் இருந்தால், எனக்குக் கிடைக்கும் பாக்கியங்களெல்லாம் உங்களுக்கும் அகப்படும்; நாம் போகிற இடத்திலுள்ள பாக்கியங்கள் நமக்கும் போதும், இனி வருவோர் எல்லாருக்கும் போதுமானது; நீங்கள் என்னோடு வந்து நான் சொல்லுவது நிஜமோ பொய்யோ என்றுதான் அறியுங்களேன் என்றான்.

**பிடி.** ஏதோ பாக்கியங்களுக்கென்று இப்பூலோக வாழ்வுகளையெல்லாம் தள்ளிவிடுகிறாயே; அவ்வளவு உயர்ந்த பாக்கியங்கள்தான் என்ன?

**கிறி.** அழியாததும், மாசற்றதும், வாடாததுமான ஒரு சுதந்தரத்தையே நான் நாடுகிறேன்.[b] அதை ஜாக்கிரதையாய்த் தேடுகிறவர்கள் எவர்களோ அவர்களுக்கு அளிக்கப்படும்படி அது பரலோகத்தில் பத்திரம்பண்ணப்பட்டிருக்கிறது.[c] அதை

[a] 2 கொரி. 4. 18.
[b] 1 பே. 1. 4.
[c] எபி. 11. 16.



ப்பற்றிய விபரம் எல்லாம் என் புஸ்தகத்தில் இருக்கிறது; பிரியமானால் படித்துப்பாரும்.

**பிடி.** நீயும் கெட்டாய், உன் புஸ்தகமும் கெட்டது. உன் புஸ்தகத்தை அதோ அந்தப் புதரிலே போடு; அதிகப் பேச்சு வேண்டாம், இப்போது எங்களோடு ஊருக்குத் திரும்புகிறாயா இல்லையா?

**கிறி.** திரும்புகிறதா? அந்தப் பேச்சை விடும். நான் கலப்பையைப் பிடித்தாயிற்று; புரட்டி உருட்டி அடித்தாலும் பிடித்தபிடி விடேன்.

**பிடி.** தம்பி இணங்குநெஞ்சனே! நாம் திரும்புவோம் வா! இந்தத் தறுதலைப்பயல்கள் கூட்டம் ஒன்றுண்டு. அவர்கள் ஒன்றைச் சாதித்தால் கலைக்கியானிகளுடைய நியாயங்களும் அவர்கள் பிடித்தபிடியை விலக்கமாட்டாது. அவன் கெட்டான், நீ வா, நாம் வீட்டுக்குத் திரும்புவோம்.

**இணங்கு.** மாமா! அப்படித் திட்டவேண்டாம். இந்த நல்ல கிறிஸ்தியான் சொல்வதெல்லாம் நிஜமாயும் அவன் தேடிப்போகும் பரமவாழ்வு நாம் அநுபவிக்கிற பூமியின் வாழ்வுக்கு உயர்ந்ததாயும் இருக்கிறதால் அவனோடேகூடப் போகத்தான் எனக்கு மனம் இருக்கிறது.

**பிடி.** என்ன? என்ன? இணங்கனே! என்ன சொன்னாய்? உனக்கும் பித்தம் பிடித்துவிட்டதோ? என் புத்தியைக் கேட்டு ஊருக்குத் திரும்பு. இந்தப் பைத்தியகாரன்கூட நீயும் போகிறேன் என்கிறாயே, இது என்ன கெடுமதி? இவனை நம்பலாமா? படுகுழியிலும் பாழ்ங்கிணற்றிலும் கொண்டுபோய்த் தள்ளிவிடுவானே, திரும்பு, அப்பா திரும்பிவா!

கிறிஸ்தியானும் பிடிவாதனும் இணங்குநெஞ்சனுடைய மனதை அவரவர் மனதுக்கு இசைவசெய்ய முயலுகிறார்கள்.

**கிறி.** அப்போது கிறிஸ்தியான்: தம்பி இணங்கனே! நீ பயப்படாமல் என்னோடேவா, நான் போகும் இடத்து பாக்கியங்களைப்பற்றி சொன்னவை கொஞ்சம், இருக்கிறவைகளோ அனந்தம்; என் பேச்சை நம்பாவிட்டாலும் இந்தப் புஸ்தகத்தை வாசித்துப்பார்; இதில் காட்டியதெல்லாம் நிஜம் என்பதற்கு அத்தாட்சியாக அவைகளை உண்டுபண்ணினவருடைய இரத்தத்தால் அவை அனைத்தும் முத்திரையிடப்பட்டிருக்கின்றன என்றான்.[a]

**இணங்கு.** மாமா பிடிவாதனே! என் தீர்மானத்தைக் கேளும், நான் இந்த நல்ல மனுஷனோடேகூடப் போகிறேன். என்னை

[a] எபி. 9. 17—21.

நேரிட்டாலும் நேரிடட்டும், இதே என் கடைசிப் பேச்சு என்று சொல்லிவிட்டு, கிறிஸ்தியானைப் பார்த்து: என் நேச தோழரே! நாம் நாடும் ஊருக்கு நேர்வழி உமக்குத் தெரியுமா? என்று கேட்டான்.

கிறி. அப்போது கிறிஸ்தியான் சொல்லுகிறான்: தம்பி! வழி அறிய நான் பட்டபாடு கொஞ்சமல்ல; சுவிசேஷகன் என்ற மகானுபாவர் ஒருவர் ஒருநாள், நான் வழியறியப் படும்பாட்டைப் பார்த்து, நமக்கு முன்னே ஒரு இடுக்குவாசல் இருக்கிறதென்றும், அங்கே போய் விசாரித்தால் எல்லாம் அறிந்து கொள்ளுவாய் என்றும் சொன்னார்; அங்கே நாம் இருவரும் போய் கேட்டுக்கொள்ளலாம் வா என்றான்.

இணங்கு. ஆம், ஆம் அங்கே போய்க் கேட்டுக்கொள்ளலாம், நடவும் ஐயா என்று சொல்லி, கிறிஸ்தியானும் இணங்குநெஞ்சனும் வழிநடந்துபோனார்கள்.

*பிடிவாதன் திரும்பிவிடுகிறான்.*

பிடி. அவ்விருவரும் ஒரே மனமாய் வழிநடக்கத் துணிந்ததைப் பிடிவாதன் கண்டு, உன்னைப்போல நான் புத்திகெட்டவன் என்று எண்ணாதே; நான் என் தாய் பிள்ளைகளோடு சேர்ந்துகொள்ளப் போகிறேன் என்று சொல்லிக்கொண்டு திரும்பிவிட்டான்.

## வன சம்பாஷணை.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் பிடிவாதன் திரும்பியபின்பு, கிறிஸ்தியானும் இணங்குநெஞ்சனும் ஏகமனமாய் வழிநடந்து அந்தப் பெரும்வனத்தைக் கடக்கையில் சம்பாஷித்துக்கொண்டு போகிறதையும் கண்டேன். அவர்கள் பண்ணின சம்பாஷணையாவது:

*கிறிஸ்தியானும் இணங்குநெஞ்சனும்.*

கிறி. தம்பி இணங்கரே! சுகமா? என்னோடுகூட நீர் கூடிக்கொண்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன். பிடிவாதர் இருக்கிறாரே, அவருக்கு வரப்போகிற அழிவின் பயங்கரங்கள் சுத்தமாய்த் தெரியவில்லை. சரியாய்த் தெரியுமானால் அவர் நம்மோடு வரமாட்டேன் என்று திரும்பிவிடமாட்டார் என்றான்.

இணங்கு. அது மெய், அது நிஜம், அவருக்கு ஒன்றைக் குறிக்கும் உணர்ச்சி இல்லை. கிறிஸ்தியானே வாரும், எட்டி நடவும் என்று சொல்லிவிட்டு: ஐயா, நாம் நாடிப்போகும் இடத்து வாழ்வுகளையெல்லாம் எனக்கு விபரமாய்ச் சொல்லி,



அதைப் பெற்றுக்கொள்ளும் வகையையும் காட்டும்; இங்கே நம்மிருவரைத் தவிர வேறொருவரும் இல்லையே, சும்மா சொல்லும், ஒன்றையும் மறைத்துவையாதேயும், என்று இணங்குநெஞ்சன் கேட்டான்.

*தேவமகத்துவங்கள் சொல்லுக்கு அடங்காதவை.*

கிறி. நான் என் மனதில் உணருகிற மகத்துவங்களை நாவால் விவரிக்கக்கூடுகிறதில்லையே, நான் என்ன செய்வேன்; ஆனாலும் நீ அவைகளை அறிய விரும்புகிறபடியால் அதைப்பற்றி இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதை வாசிக்கிறேன் கேள்.

இணங்கு. உம்முடைய புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதெல்லாம் நிஜம் என்று நம்புகிறீரா?

கிறி. நம்பச் சந்தேகம் உண்டோ? அவை அனைத்தும்[a] பொய்யுரையாத தேவனால் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றன அல்லவா?

இணங்கு. அப்படியா? சந்தோஷந்தான்; அந்த வாழ்வுகளைச் சொல்லும் ஐயா!

கிறி. நாம் குடியேறும்படியாக முடிவில்லாத ஒரு ராஜ்யம் அங்கே இருக்கிறது; அங்கே வாசஞ்செய்யும்படியான நித்திய ஜீவனும் நமக்குக் கொடுக்கப்படும்.[b]

இணங்கு. ஆகா! நல்லது, அப்புறம் வேறென்ன?

கிறி. நமக்கு சூட்டும்படி மகிமையின் கிரீடங்களும் அங்கே இருக்கின்றன; நாம் தரித்துக்கொள்ளும்படி அங்கிகளும் இருக்கின்றன. அந்த அங்கிகளைத் தரித்துக்கொண்டால், நாம் உன்னத வானத்தில் வல்லமையாய்ப் பிரகாசிக்கும் சூரியனுடைய ஜோதிமயமாய் விளங்குவோம்.[c]

இணங்கு. சந்தோஷம், சந்தோஷம், பின்னும் வேறென்ன உண்டு?

கிறி. அங்கே அழுகையும் இராது; துக்கமும் இராது; அந்த நாட்டின் அதிபதி நம்முடைய கண்ணீர் யாவையும் துடைத்துப்போடுவார்.[d]

இணங்கு. அங்குள்ள நமது கூட்டாளிகளைப்பற்றி சிலவற்றைச் சொல்லும் ஐயா, நான் கேட்கட்டும்.

---

a தீத். 1. 3.
b ஏசா. 45. 17. யோவா. 10. 27, 29.
c 2 தீமோ. 4. 8. வெளி. 22. 5. மத். 13. 43.
d ஏசா. 25. 8. வெளி. 7. 16. 16; 21. 4.

மோட்ச மகிமைகள்.

கிறி. அங்கே நாம் கேருபீன்கள் சேராபீன்களோடு இருப்போம்,[a] நமது கண்ணைப்பகட்டும் பல ஜீவன்கள் அங்கே உண்டு. மேலும் அவ்விடத்துக்கு நமக்குமுன்னே போய்ச் சேர்ந்த லட்சாதிலட்சமும், கோடானுகோடியுமான ஆத்துமாக்களை நாம் பார்ப்போம். அங்குள்ள எவரும் ஆகாமியர் அல்ல, எல்லாரும் பரிசுத்தமும் நேசமும் உடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தேவசமுகத்தில் உலாவி, அவருடைய திருமுகதரிசனம்பெற்று, நீடூழிகாலம் வாழ்கிறார்கள். எல்லாவற்றையும் சுருக்கிச்சொன்னால், பொற்கிரீடங்கள் தரித்திலங்கும் மூப்பரையும்,[b] பொற்கின்னரங்களைப் பிடித்திலங்கும் பரிசுத்த கன்னியாஸ்திரீகளையும் நாம் அங்கே காண்போம். அதுவுமல்லாமல், அந்நாட்டு அதிபதிக்காக நேசாபிமானம் உடையவர்களாய் இருந்ததின் நிமித்தம் கண்டதுண்டமாக்கப்பட்டவர்களையும்,[c] அக்கினியில் கொளுத்தப்பட்டவர்களையும், மிருகங்களுக்கு இரையானவர்களையும், சமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்டவர்களையும் அங்கே பார்ப்போம்.[d] அவர்கள் எல்லாரும் அழிவில்லாமையை ஒரு அங்கியைப்போல தரித்துக்கொண்டு மகத்துவமாய் விளங்குவார்கள்.[e]

இணங்கு. ஆகா! என்னென்ன சந்தோஷங்களெல்லாம் இருக்கின்றன அப்பா! அதைப்பற்றிக் கேட்பதே மனதைப் பரவசப்படுத்துகிறதே; அநுபவித்தால் என்னமாய் இராது; இதில் நமக்குப் பங்கு அகப்படுமோ? எவ்விதமாக அப்பங்கைப் பெற்றுக்கொள்ளலாம்?

கிறி. அந்நாட்டு அதிபதியாகிய கர்த்தர் அதைக்குறித்து விபரமாய் இந்தப் புஸ்தகத்தில் காட்டியிருக்கிறார். அதின் மொத்தக்கருத்தைத் திரட்டிச்சொன்னால், நாம் அவை வேண்டும் என்று மெய்யான மனதைக் காட்டினால் அவை அனைத்தையும் அவர் இலவசமாய் அருளுவாராம்.[f]

இணங்கு. என் நேசதோழரே! எல்லாம் என் மனதை மகிழச்செய்கின்றன. இனி நாம் காலதாமதம்பண்ணாமல் எட்டி நடந்துபோவோம் வாரும்; அடிநடையைவிட்டு துடிநடை நடப்போமாக என்று சொல்லிக்கொண்டு அதுமுதல் விரைவாய் நடந்துபோனார்கள்.

---

a ஏசா. 6. 2. 1 தெச. 4. 16. வெளி. 6. 11.
b வெளி. 4. 4. c வெளி. 1. 5. d யோ. 12. 25.
e 2 கொரி. 5. 2, 3, 5.
f ஏசா. 55. 1, 2. யோவா. 6. 37. வெளி. 21. 6; 22. 17.



## நம்பிக்கையிழவின் அவதி.

அவர்கள் தங்கள் சம்பாஷணையை முடித்துத் தீவிரமாய் நடந்தவுடனே, கவலையீனத்தால் இருவரும் ஒரு உளையில் விழுந்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அதற்கு **நம்பிக்கையிழவு**[1] என்று பேர். இந்த உளையில் அவர்கள் பட்ட வருத்தங்கள் கொஞ்சமல்ல. உருண்டு புரண்டு கரைந்தாவது தப்பிப்பிழைக்கவேண்டும் என்று அவர்கள் பட்ட பிரயாசத்தால் தேகம் எல்லாம் சேறாய்ப்போயிற்று. கிறிஸ்தியான் முதுகில் ஒரு பளுவான சுமை இருந்ததால், அவன் அந்த உளையில் ஆழமாய் இறங்கிப்போனான். இணங்குநெஞ்சன் அவனைக் கூப்பிட்டு: ஐயா கிறிஸ்தியானே! எங்கே இருக்கிறீர் என்று கேட்டான். அதற்குக் கிறிஸ்தியான்: நான் இருக்கிற இடம் எனக்கே தெரியுதில்லை தம்பி என்றான்.

இணங்கிய மனம்மாத்திரம் இரட்சிப்புக்குப் போதாது.

அதைக் கேட்டவுடனே இணங்குநெஞ்சனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் கிறிஸ்தியானைப் பார்த்து: இதுதானோ ஐயா நீர் இம்மட்டும் சொன்ன வாழ்வு? கால் எடுத்து வைக்குமுன்னே இப்பாடுண்டானால், காரியம் கிட்டுமட்டும் எப்படி இராது? எனக்கு இந்தச் சங்கடம் என்னத்துக்கு? நான் என் ஊரை நோக்கி ஓடிப்போகிறேன்; என் பங்கையெல்லாம் நீரே அநுபவித்தால் போதுமானது என்று மனங்கொண்டமட்டும் திட்டி, தன்னாலான பலத்தோடு சேற்றிலிருந்து தன் வீட்டுக்கடுத்த திசையாய்த் தத்தித்தத்தி வெளியேறி ஓட்டம்பிடித்தான்.[2] அவனை அப்புறம் கிறிஸ்தியான் கண்டதேயில்லை.

---

1 நம்பிக்கையிழவு என்பது, புதிதாய் மனந்திரும்புகிறவர்களுக்கு உண்டாகும் பலவித பயங்கரங்களைக் குறிக்கிறது. அவர்கள் தங்கள் ஈனநிலைமையைத் திட்டமாய் அறிந்து, நமக்கேது நம்பிக்கை இருக்கிறது! என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் எவ்வளவுக்கு முயற்சிசெய்கிறார்களோ அவ்வளவுக்கு நம்பிக்கையில்லாதவர்கள் ஆகிறார்கள்.

2 இணங்குநெஞ்சன் தன் வீட்டுக்கடுத்த திசையாய் உளையிலிருந்து கரையேறினான். அவனுக்கு உண்டான உபத்திரவங்கள், அவன் தன் பழைய தோழரோடு போய்ச் சேர்ந்துகொள்ளச் செய்தது.

இணங்குநெஞ்சன் ஓட்டம்பிடித்ததால் கிறிஸ்தியான் ஒண்டியாய் அந்த உளையில் கிடந்து அவதிப்பட்டான்; என்றாலும் தன் வீட்டுக்குச் சமீபமான திசையாய் அல்ல, திட்டிவாசலுக்குக் கிட்டவிருந்த பக்கமாய் அந்த உளையிலிருந்து கரையேறப் பிரயாசப்பட்டான்.[1] அவன் எவ்வளவாய்ப் பிரயாசப்பட்டாலும், அவனுடைய முதுகிலுள்ள பாரத்தால் தானாக உளையிலிருந்து கரையேறிவிடக் கூடாமல் போயிற்று. அவன் அவதியில் உதவிசெய்து அவனைக் கரையேற்றும்படி ஒரு மனுஷன் வந்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அவருக்குச் சகாயர்[2] என்று பேர். சகாயர் கிறிஸ்தியானைப் பார்த்து: என்னசெய்கிறாய் அப்பா? என்று கேட்டார்.

கிறிஸ்தியான் அவதிப்பட்டாலும் தன் வீட்டை நோக்கவில்லை.

கிறி. அதற்குக் கிறிஸ்தியான்: ஐயா! சுவிசேஷகன் என்ற பேருடைய ஒருவர் இந்த வழியாய்ப் போனால், அப்பால் இருக்கும் ஒரு திட்டிவாசலைக் காண்பாய்; அங்கே சேர்ந்தால், வருங்கோபாக்கினைக்குத் தப்பும்படி வழி சொல்லப்படும் என்று சொன்னார்; அந்தப்படியே நான் புறப்பட்டு வழியே வருகையில் இந்த உளையில் விழுந்து, எழுந்திருக்க இயலாமல் அவதிப்படுகிறேன் என்று சொன்னான்.

சகா. அதெல்லாம் சரிதான்; ஆனால் படிகள்[3] எங்கே என்று பார்த்தாயில்லையோ?

கிறி. பயமானது பலமாய் என்னைச் சூழ்ந்துகொண்டதால் நான் படிகள் பாராமல் பக்கவழியாய் ஓடி, விழுந்துகிடக்கிறேன் ஐயா!

சகா. அப்படியானால் கையை நீட்டு என்று சகாயர் சொன்னார். கிறிஸ்தியான் கையை நீட்டினான், உடனே சகாயர் அவனைக் கைபிடித்து இழுத்து உளையிலிருந்து கரையேற்றி,[a] நல்லவழியில் அவனை நிறுத்தி, இனி நடந்துபோ என்று சொல்லி அனுப்பினார்.

1 கிறிஸ்தியான் எவ்வளவு தான் உபத்திரவப்பட்டபோதிலும் பின்வாங்கமாட்டான்.

2 சகாயர் என்பது, ஆத்தும ஆபத்துகளினால் வருந்துகிறவர்களை ஆறுதல்படுத்துகிற இயேசுகிறிஸ்துவை அல்லது அவர் பிரயோகிக்கும் பல ஏதுக்களைக் குறிக்கிறது.

3 படிகள் என்பது, மனந்திரும்புகிற பாவிகளுக்கு தேவன் தமது வசனத்தில் சொல்லியிருக்கிற வாக்குத்தத்தங்களைக் குறிக்கிறது.



அப்பொழுது நான் கிறிஸ்தியானை உளையிலிருந்து கரையேற்றிவிட்ட சகாயரைப்பார்த்து: ஐயா! நாசபுரியிலிருந்து அந்த வாசலுக்குப் போகிறதற்கு இவ்வழிதானே இருக்கிறது? ஏழைப் பிரயாணிகள் அவஸ்தைப்படாமல் போய்விடுவார்கள் என்று இது இன்னும் செப்பனிடப்படாமல் இருக்கிறது? என்று கேட்டேன்.

அதற்கு அவர்: இது செப்பனிடப்படக்கூடாததான ஒரு இடம். பாவஉணர்ச்சியால் வெளியாகிற கசிம்பும் அழுக்கும் இதில் ஓயாமல் வடிந்து இறங்கிக்கொண்டிருக்கிறது; அதினாலேதான் இது நம்பிக்கையிழவு என்று பேர்பெற்றிருக்கிறது. ஏனெனில் ஒருபாவி தன் நிர்ப்பந்த நிலைமையை அறிந்து உணருகிறபோது அவன் ஆத்துமாவில் மகா பயங்கரங்களும் சந்தேகங்களும் தளர்ச்சிகளும் உண்டாகி அவனை அதைரியப்படுத்துகின்றன. பல சிற்றோடைகளாகிய இவை அனைத்தும் கூடி ஒரு பெரிய ஆறாகி, இந்த இடத்தில் வந்து சேர்ந்து உறைந்துபோகின்றன; அதினாலேதான் இந்த இடம் இவ்வளவு கேடாய் இருக்கிறது.

நம்பிக்கை இழவைப்பற்றிய அர்த்தங்கள்.

இந்த இடம் இப்படியே கேவலமாய் இருக்கவேண்டும் என்பது எங்கள் மகாராஜாவின் பிரியம் அல்ல,[b] ராஜாவின் ஆட்கள் ராஜாங்க சிற்பாசாரிகளுடைய ஆலோசனையின்பிரகாரம் இந்த உளையைச் சீர்ப்படுத்தி, நல்வழியாக்கும்படி தங்களால் ஆனமட்டும், கடந்த ஆயிரத்து அறுநூறுவருஷக்காலமாய்ப் பல பிரயத்தனங்களையும் செய்ததுண்டு. நானே அறிந்தமட்டும் இந்த இடத்தில் இருபதாயிரம் வண்டிப்பாரமா? அல்ல, அல்ல; லட்சாதிலட்சமும், கோடானுகோடியுமான வண்டிப்பாரம் என்று சொல்லத்தக்க ஆரோக்கியமான உபதேசங்களை, இவ்வையகத்தின் நாலாதிசைகளிலுமிருந்து கொண்டுவந்து கொட்டியிருக்கிறார்கள். அவ்வுபதேசங்களின் தன்மையை அறிந்தவர்கள் இந்த உளை நல்வழியாக, இதைப்போலொத்த சாமான் வேறில்லை என்று சொல்லுவார்கள். அப்படியெல்லாம் செய்திருந்தும் இந்த இடம் பழையபடி நம்பிக்கையிழவாகவே இருக்கிறது. இன்னும் என்ன பிரயத்தனந்தான் செய்தாலும் இது எப்போதும் உளையாகவே இருக்கும்.

[a] சங். 51. 2. [b] ஏசா. 35. 3, 4.

ஆனால் ராஜாவின் சட்டதிருப்பனை அதிகாரியால் கட்டப்பட்டிருக்கிற சில உறுதியான படிகள் உளையின் நடுவில் உண்டென்பது மெய். பருவகாலபேதங்களால் சிலவேளை இவ்வுளை பொங்கி, அழுக்குகளைக் கக்குவதால் படிகள் மூடப்பட்டுத் தெளிவாய்த் தெரியாமல்போகிறது. தெரிந்தாலும் இதின் வழியே வருவோர் சிலர், தலைமயக்கத்தால் படிகளைக் கூர்மையாய்க் கவனியாமல், பக்கத்தில் மிதித்து உளையில் விழுந்து, சேறுபட்டு அழுக்காவோர்கள்; ஆனால் வாசலில் கால்மிதித்துவிட்டால் அப்புறம் நல்ல பாதைதான் என்று சொன்னார்.[a]

பாவமன்னிப்பைப்பற்றிய வாக்குத்தத்தங்களும், இயேசுவை விசுவாசிப்பதால் உண்டாகும் ஜீவனும்.

இப்பொழுது நான் என் சொப்பனத்தில் நம்பிக்கையிழவிலிருந்து கிறிஸ்தியானைவிட்டுப் பிரிந்தோடிப்போனானே, அந்த இணங்குநெஞ்சன் தன் ஊர்போய்ச் சேர்ந்து வீட்டுக்குள் நுழைந்ததைக் கண்டேன். அவனுடைய இனபந்துக்களும் வேறுசிலரும் அவனைப் பார்க்கவந்தார்கள்; அவர்களில் சிலர்: நீ புத்திசாலி அப்பா, திரும்பிவிட்டாயே, அது நற்புத்தி என்றார்கள்; வேறுசிலர்: அந்தப் பித்தம்பிடித்த கிறிஸ்தியானோடு நீ கூடப்போனாயே, உன்னைவிடப் பெரும்பித்தன் உண்டோ என்றார்கள்; வேறுசிலர்: போனதுபோனாயே! உளையைக் கண்டு ஓடிவந்துவிட்டாயே, உன்னைவிடத் தெம்மாடி உண்டோ? என்று சொன்னார்கள். ஆகவே, அவன் பதுங்கித் தலைகவிழ்ந்திருந்தான். சற்றுநேரமானபின், தலைகவிழ்ந்துகொண்டிருக்கிறதால் இவர்கள் நம்மை குரங்காட்டம் பார்க்கிறார்கள் என்று அவன் தைரியங்கொண்டு, அததற்கு எதிர்உத்தரம் சொல்லவே, எல்லாரும் அடங்கித் தங்கள் பேச்சைத் திருப்பி, ஏழைக்கிறிஸ்தியானைக் கண்டபடி எல்லாம் பேசினார்கள். இணங்குநெஞ்சனைப்பற்றிய காரியம் இம்மட்டோடே முடிந்தது.

இணங்குநெஞ்சன் வீடு போய்ச் சேருகிறான்.

## லோகஞானி சந்திப்பு.

லோகஞானியும் கிறிஸ்தியானும்.

கிறிஸ்தியான் சகாயரால் உளையிலிருந்து தூக்கிவிடப்பட்டபின்பு, ஒண்டியாய் அந்த வனவழியாய் நடந்தான். அவன் போகையில், வேறொரு குறுக்குவழியாய் ஒரு மனுஷன், அவனை எப்படியாவது சந்திக்கவேண்டும் என்று நோக்கங்கொண்டு வருகிறதை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அவ்விருவரும் எதிர்க்கெதிராய் ஒருவருக்கொருவர் சந்தித்தார்கள். இப்படிச் சந்தித்தவன்பேர் லோகஞானி.[1] இவன் மாமிசநேசபுரி என்னும் ஒரு பெரிய பட்டணத்தில் உள்ளவன். கிறிஸ்தியானுடைய ஊருக்கும் இதற்கும் மெத்தவும் சமீபம்தான். இவன் கிறிஸ்தியானுடைய சமாசாரங்களைப்பற்றி ஜாடையாய்க் கேள்விப்பட்டிருந்தான். ஏனெனில் அவன் ஊர்விட்டுப் புறப்பட்ட செய்தி நாசபுரியில்மாத்திரம் அல்ல, நாசதேசமுழுவதிலும் பேசிக்கொள்ளப்பட்டது. ஆகையால் லோகஞானி அவனுடைய ஆயாசத்தையும், பெருமூச்சையும், வியாகுலத்தையும், இவைபோன்ற வேறு சில குறிப்புகளையும் கண்டவுடனே, இவன் நாசபுரியைவிட்டு சீயோன்மலையை நாடிப்போகும் கிறிஸ்தியானாய் இருக்கவேண்டும் என்று உத்தேசித்துக்கொண்டு, அவனுடன் பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தான்.

லோக. ஏதப்பா இந்த அவஸ்தை? இந்தப் பாரத்தோடு எந்த ஊருக்குப் போகிறாய் அப்பா?

கிறி. ஐயா பெரியவரே! எனக்கு எப்போதும் இந்தப் பாரமே கெதியாய் இருக்கிறது; நான் மெத்த நிர்ப்பந்தன் ஐயா! மெத்த நிர்ப்பந்தன்; நான் எங்கே போகிறேன் என்று கேட்கிறீர்? அதோ அப்பாலே ஒரு வாசல் இருக்கிறதாம், அதற்குப் போகிறேன்; அங்கே போனால் என் பாரம் தொலைந்துபோவதற்கு ஏற்ற வகை இன்னதென்று அறிந்துகொள்ளுவேன், ஆகையால் அங்கேதான் போகிறேன்.

லோக. உனக்குப் பெண்சாதி பிள்ளைகள் உண்டா அப்பா?

கிறி. பெண்சாதியும் உண்டு, பிள்ளைகளும் உண்டு. என் முதுகில் இருக்கும் இந்தப் பாரச்சுமையைத்தொட்டு, அந்த இன்பங்களையெல்லாம் முன்போல் விரும்புகிறதில்லை. இப்போது எனக்கு மனைவியும் இல்லை, மக்களும் இல்லை என்றுதான் எண்ணம் உண்டாகிறது.[b]

---

[a] 1 சாமு. 12. 23.

[1] லோகஞானி என்பது, தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம்செய்யும்படி பிரயாசப்படுகிறவர்களைக் குறிக்கிறது. அவர்கள் உலகவிஷயங்களில் விவேகமுடையவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் கூடியமட்டிலும் சன்மார்க்கராய் நடந்து, தேவபக்திக்கடுத்த சில கடமைகளை அநுசரித்துவரலாம்; ஆனால் தங்களுடைய லோக வாழ்வைத் தடுக்கும் விஷயங்கள் எவைகளோ அல்லது அவர்கள் மனதை அதிலிருந்து பிரியப்பண்ணும் எத்தனங்கள் எவைகளோ அவைகளுக்கு அவர்கள் சேர்விரோதம்பண்ணுவார்கள்.

[b] 1 கொரி. 7. 29.

லோக. நான் ஆலோசனை சொன்னால் கேட்பாயா?

கிறி. ஆலோசனைசொல்ல ஆள் கிடையாமல்தானே இப்பாடு படுகிறேன்; உமது ஆலோசனை நல்லதானால் அதின்படியே செய்கிறேன் ஐயா!

லோக. அப்பா! நீ உன்னால் ஆன சீக்கிரத்துக்குள் அந்தப் பாரத்தை இறக்கிப்போட்டுவிடு. அதை நீ இறக்குமட்டும் உன் மனம் ஒரு நிலையில் இராது. அதுவுமல்லாமல், கடவுள் உனக்கு அருளும்படி பிரியமாயிருக்கும் ஆசீர்வாதங்களை நீ அநுபவிக்கவும் மாட்டாய்.

*லோகஞானியின் ஆலோசனை.*

கிறி. இறக்கிவிடத்தானே நான் இந்தப் பாடுபடுகிறேன்; என் முதுகின் பாரச்சுமை எப்படி இறங்கிவிடும்? அதை நானே எடுத்து எறிந்துவிட என்னால் கூடவில்லை, அப்படி எடுத்துவிடத்தக்க சாமர்த்தியன் எவனாவது நமது தேசத்தில் உண்டா? அதுவும் இல்லையே; ஆனதினாலேதான் நான் உமக்குச் சொன்னதுபோல என் பாரச்சுமையை இறக்கிவிடும்படியாக இந்த வழியாய்ப் போகிறேன் ஐயா!

லோக. உன் பாரச்சுமை தொலையும்படி இந்த வழியை உனக்குக் காட்டினது யார் அப்பா?

கிறி. மேன்மைபொருந்தியவராய்த் தோன்றின ஒரு மகாத்துமா இந்த வழியைக் காட்டினார்; அவருடைய பேர் சுவிசேஷகன் என்று சொன்னதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

லோக. அவன் நாசமாய்ப் போகட்டும்; அவன் காட்டியிருக்கிற வழியைப்போல மோசமும் நாசமுமான பாதை இந்தப் பூலோகத்தில் கிடையாது. இன்னும் அவன் சொல்லியபடியே நீ நடந்தால் நான் சொல்வது மெய் என்று அறிவாய். ஐயோ, முதுகெல்லாம் சேறு; முகமெல்லாம் மண் அப்பா! இதற்குள்ளாகவே வெகு சங்கடப்பட்டிருக்கிறாய்போலத் தோன்றுகிறதே. நம்பிக்கையீனத்தில் அகப்பட்டாயாக்கும்; இவ்வழி நடப்போருக்கு சம்பவிக்கும் துன்பங்களில் அதுதான் துவக்கம். உன்னைப்பார்த்தால் நல்லவன் என்று தெரியவருகிறது; அந்த சண்டாளனாகிய சுவிசேஷகன் உன்னை மோசம்பண்ணிப் போட்டான் அப்பா! என் பேச்சைக்கேள், நான் உன்னிலும் வயசானவன், பல காரியங்களையும் அறிந்து தெளிந்த ஞானி, லோகஞானி என்றால் இவ்வகண்டலோகமும் நடுங்கும், இப் பூலோக ஞானம் எல்லாம் என் கைத்தலத்துக்குள் அடக்கிவைத்திருக்கிறேன் என்று எண்ணிக்கொள். இவ்வழியே நீ போவது மெய்

*லோகஞானி சுவிசேஷகர் போதனையைப் பழித்தல்.*



ஆனால் இளைப்பு, நோவு, பசிதாகம், அபாயம், அம்மணம், அம்பு, பட்டயம், சிங்கங்கள், வலுசர்ப்பங்கள், அந்தகாரங்கள், மொத்தமாய்ச் சொன்னால் மரணமே சம்பவிக்கும். வேறென்னதான் சம்பவியாது? இவையெல்லாம் நிச்சயமாகவே நேரிடும் என்பதற்குப் பல உண்மையுள்ள சாட்சிகளும் இருக்கின்றன. முன்பின் முகமறியாத ஒருவன் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஏன் இந்தச் சங்கடப்படவேண்டும்?

கிறி. நீர் சொன்ன துன்பங்கள் எல்லாவற்றிலும் என் சுமையின் பளுவே பெருந்துன்பம் என்று எனக்குத் தோன்றுகிறது; இவ்வளவு பாடுகள் பட்டாலும் கடைசியாக இந்தச் சுமை நீங்கிப்போனால் தாவிலை என்றே நான் நினைக்கிறேன்.

*[illegible] தயவிலமை.*

லோக. இந்தச் சுமை, எப்போது உன்மேல் ஏற்றப்பட்டது அப்பா?

கிறி. இதோ, இந்தப் புஸ்தகத்தை வாசிக்க வாசிக்க ஏற்றப்பட்டது ஐயா!

லோக. நானும் அப்படியே நினைத்தேன். உன்னைப்போல இன்னும் சில பலவீனர் இப்படியே தங்களுக்கு அடாதகாரியத்தில் தலையிட்டுப் பிடரிமுறிந்து மாண்டதை அறிவேன்; உனக்கும் அந்த வாழ்வுதான் கிட்டும். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு லபிக்கும் நாசங்களை அறியாமல் ஒரே போக்காய்ப் போகிறார்கள்.

*சத்தியவேத வாசிப்பு லோகஞானிக்கு ஒவ்வாது.*

கிறி. எனக்கு அகப்படவேண்டும் என்று விரும்புகிற வாழ்வு இன்னதென்று நான் அறிவேன்; இந்தப் பாரச்சுமையினின்று விடுதலையாவதையே நான் எதிர்பார்க்கிறேன்; அதே என் வாழ்வு.

லோக. அப்படியானால் இப்படிப்பட்ட நாசவழியை நாடலாமா? இவ்வளவு துன்பங்களும் துயரங்களும் இருக்கின்றனவே? இவ்வளவு பொறுமையோடு நின்று என் பேச்சைக் கேட்கிற உனக்கு நான் வெகு சுலுவான ஒரு வழியைக் காட்டி, உன் பளுவை இறக்கிவிடக் கூடியவனாயிருக்க, இப்படி அவஸ்தைப்படுவானேன்? உன் ஆசை நிறைவேறும் வழியும் வகையும் கிட்ட இருக்கிறது. அதுவுமல்லாமல் அந்த வழியில் இந்த வழியைப்போல அபாயங்கள் ஏதாவதுண்டா? இல்லவே இல்லை; நீ போகப்போக க்ஷேமம், சிநேகிதர், திருப்தி எல்லாம் உண்டு.

கிறி. ஐயா பெரியவரே! அந்த இரகசியத்தைச் சற்றே சொல்லும் ஐயா! சொல்லும் துரையே! சொல்லும் மாபிரபுவே!

லோக. நல்லதப்பா, அந்த இரகசியத்தைக் கேள்: அதோ சற்றப்பால் ஒரு பட்டணம் இருக்கிறது. அதற்கு நல்லறம்[1] என்று பேர். அவ்விடத்தில் நியாயப்பிரமாணிக்கன்[2] என்று அழைக்கப்படுகிற ஒரு பிரபு இருக்கிறார், அவர் மகா திட்டவட்டம் அறிந்தவரும், பேரெடுப்புள்ளவருமாய் இருக்கிறார். உன்னைப்போல பாரஞ்சுமந்து பிரலாபப்படுகிறவர்கள் எவர்களோ அவர்கள் பளுவை இறக்கிவிடும்படி தகுதியான முறைகளைச் சொல்ல அவர் மகா சமர்த்தன். நான் அறிந்தமட்டும் அனந்தம்பேர் அவரிடத்தில்போய் பாரம் நீங்கித் திரும்பினதுண்டு. அது மாத்திரமா? தங்கள் முதுகின் பாரத்தால் புத்திமாறிப்போனவர்களையும் திருத்தி செவ்வைப்படுத்த அவருக்குப் பக்குவமும் தெரியும். அவரண்டைமாத்திரம் நீ போவது மெய்யானால், உன் பாரம் அந்நிமிஷமே நீங்கிப்போகும். அவர் வீட்டுக்கு இதிலிருந்து ஒரு நாழிகை வழி முதலாய் இல்லை, மெத்தவும் சமீபம்; நீ போகிற நேரத்தில் அவர் வீட்டில் இல்லாவிட்டாலும், மரியாதை[3] என்னும் அவருடைய மகன் இருப்பான், அவன் இருந்தாலும் சரிதான்; அங்கேபோய் உன் காரியங்களைச் சொன்னால் உன் முதுகின் பாரம் அறுந்து விழும்படியான சகாயம் உடனே கிட்டும். அப்புறம் நீ உன்னுடைய பழைய ஊருக்குப்போக எனக்குப் பிரியம் இல்லை; உனக்கும் அது பிரியப்படாவிட்டால் அந்த நல்லறத்திலேயே அநேக வீடுகள் காலியாய்க் கிடக்கின்றன. சொற்பவாடைக்கு ஒரு வீடு எடுத்து, உன் மனைவிமக்களை அவ்விடம் வந்து சேரும்படி திட்டம்செய்து, அங்கேயே குடியிருந்து

திட்டிவாசல் பயணத்திலும், சன்மார்க்க வழிப்பயணம் சிறந்ததாம்.

[1] நல்லறம். இது வெளியரங்கமான பாவங்களுக்கு விலகி, இருதயத்தில் தேவ அன்பில்லாமல், சன்மார்க்கர்போல காணப்படுகிறவர்களைக் குறிக்கிறது.

[2] நியாயப்பிரமாணிக்கன். இது மனுஷர் தங்கள் நற்கிரியைகளினாலே இரட்சிப்பை அடையலாம் என்று போதிக்கிறவர்களைக் குறிக்கிறது.

[3] மரியாதை. இது பட்சங்காட்டி, மரியாதைசெய்து இவ்வுலகத்தில் ஜீவனம்செய்துவருவதே நரகதண்டனைக்கு நம்மைத் தப்புவித்து, மோட்சலோகத்தில் சேர்க்கும் என்று எண்ணுகிறவர்களின் அடையாளமாய் இருக்கிறது.



கொள்ளலாம். அந்த ஊரிலே அகவிலை மெத்த நயம், அங்கேயே கொடுக்கல் வாங்கல் செய்து, பயிர் பச்சையிட்டு காலம் தள்ளலாம்.

கிறி. இவ்வளவையும் கேட்டவுடனே கிறிஸ்தியான் மனம் சற்றே மாறிற்று. இந்தப் பெரியவர் சொல்வது நிஜமானால், இதுதானே சரியானதாகத் தோன்றுகிறது; இதின்படி செய்கிறதல்லவா புத்தி என்று தனக்குள்ளே ஆலோசித்துக்கொண்டு, நியாயப்பிரமாணிக்கன் வீட்டுக்கு வழி எப்படி ஐயா என்று கேட்டான்.

லோகஞானியின் கபடத்துக்கு கிறிஸ்தியான் அகப்பட்டுக்கொண்டான்.



லோக. அதோ இருக்கிறதே, அந்த மலைச்சிகரம் தெரியுதா?

கிறி. ஆம் ஐயா! நன்றாய்த் தெரிகிறது.

லோக. அந்த மலையடிவாரமாய்த்தான் நீ போகவேண்டும், அவ்விடத்தில் தென்படுகிற முதல் வீடுதான் நியாயாதிக்கன் வீடு என்று சொன்னான்.

சீனாய் மலை.

அதுமுதல் கிறிஸ்தியான் தன் வழியைவிட்டுத் திரும்பி, நியாயப்பிரமாணிக்கன் வீட்டுப்பாதையாய்ப் போனதை நான் என்

சொப்பனத்தில் கண்டேன்.[1] அவன் அதின் அடிவாரம் சேரவே, அதின் சிகரம் வழியோரமாய் மிகவும் சாய்ந்து தலைமேல் விழுகிறாப்போலக் காணப்பட்டதால்,[2] கிறிஸ்தியான் பயந்து, ஓகோ நாம் தொலைந்துபோகும் நாள் இதுதான், இனி என்னசெய்யலாம் என்று புலம்பி ஏதும் அறியாதவனாக நின்றான். அவன் பாரம் முன்போன வழியைப்பார்க்கிலும் அந்த மலையடிவாரவழியில் அதிகப் பளுவாகக் காணப்பட்டது; அம்மலையிலிருந்து இடைக்கிடையே அக்கினிச் சுவாலைகளும் வீசின.[a] அதைக் கண்ட கிறிஸ்தியான், நான் வெந்தேபோவேன் என்று கலங்கினான். அவனுடைய கலக்கத்தால் தேகம் குலுங்கிற்று, சரீரமெல்லாம் வேர்வையாய்ப் பொழிந்தது.[b] ஐயோ லோகஞானி மோசம் அல்லோ பண்ணிவிட்டான், நான் அவன் பேச்சைக்கேட்டு என் வழியைவிட்டுத் திரும்பினது மகா புத்தியீனம் என்று உணர்ந்தான்.

நியாயப்பிரமாணத்தின் பயமுறுத்தல்கள்.

## சுவிசேஷகனுடைய இரண்டாம் சந்திப்பு.

அதுவுமல்லாமல் முன் அவனுக்கு வழிகாட்டின சுவிசேஷகன் என்றவர்[3] அவனைச் சந்திக்க வருகிறதையும் கண்டான். மலைச்சிகரமலைவோடும், அக்கினிச்சுடரின் அலைசடியோடும், ஏதும் அறியாத ஏக்கத்தோடும் இருந்த கிறிஸ்தியா-

சுவிசேஷகன் சந்திப்பு.

1 கிறிஸ்தியான் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் ஆத்துமரட்சிப்பைத் தேடவேண்டியவனாயிருக்க, தன் சொந்தக்கிரியைகளின் மூலமாய் அதைச் சம்பாதிக்கப் பிரயாசப்படுகிறான்.

2 மலைச்சிகரம். இது சீனாய்மலைமேல் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது. இரட்சணிய விழிப்படைந்த பாவி, தன் சொந்த நீதியின்மூலமாய் இரட்சிப்பை முயலும்போது, தன் நடக்கையை தேவனுடைய பிரமாணங்களுடன் ஒத்துப்பார்த்து, அதின் சாபம் தன்னை எங்கே பற்றிக்குமோவென்று அஞ்சி நடுங்குகிறான்.

3 இரட்சணியவழியைத் தேடுகிறவர்கள் வழிதப்பிப்போகிறதுண்டு; கிறிஸ்துவின் ஊழியக்காரர் அறிந்து, அவர்கள் போகும் பாதையின் அழிவைக் காட்டி, அவன் தன் மாறுபாடான நடத்தையைவிட்டு அஞ்சாமல், மறுபடியும் கிறிஸ்துவினிடத்திலே போகும்படி வழிகாட்டுகிறார்கள்.

a யாத். 19. 16, 18. b எபி. 12. 21.



னுக்கு அவர் காணப்பட்டது அதிகப் பயத்தையும், வெட்கத்தையும் கொடுத்தது. அவன் சுவிசேஷகனைக் கண்டவுடனே தலைகவிழ்ந்து குற்றவாளியைப்போல நின்றான். சுவிசேஷகன் மெதுவாய் அவன் கிட்டச்சேர்ந்து, கோபதாபமுகத்தோடு அவனைக் கீழும்மேலும் பார்த்தார்; உடனே கிறிஸ்தியான் கிடுகிடுக்கம் ஆனான்.

சுவி. கிறிஸ்தியானே! நீ இங்கே என்னசெய்கிறாய்? என்று சுவிசேஷகன் கேட்டார். அவன் பதில் சொல்ல மதியில்லாமல், மவுனமாய் நின்றான்; பின்னும் அவர் அவனைப்பார்த்து: நாசபுரியின் கோட்டைக்கு வெளியே அழுதுகொண்டு அலைந்து திரிய நான் கண்டவன் நீதான்அல்லவா? என்று கேட்டார்.

சுவிசேஷகர் வாதாடுகிறார்.

கிறி. அவன் நான்தான், அன்புள்ள ஐயாவே! என்று கிறிஸ்தியான் சொன்னான்.

சுவி. நான் உனக்குத் திட்டிவாசலின் திசையைக் காட்டி, அந்த வாசலுக்குப் போகிற பாதையாய் நடந்துபோகச் சொல்லவில்லையா?

கிறி. ஆம் ஐயா! தாங்கள் காட்டின வழி அப்படித்தான்.

சுவி. பின்னை இவ்வளவு சீக்கிரத்துக்குள்ளாக அந்த வழியை விட்டுவிட்டதென்ன? இது வேறுவழி ஆயிற்றே!

கிறி. ஐயா! நான் நம்பிக்கையிழவிலிருந்து தப்பிக் கரைசேர்ந்தவுடனே, ஒரு துரை என்னைக் கண்டு, அதோ முன்னே தெரிகிற ஊரில் என் பாரத்தை இறக்கிவிடத்தக்க ஒரு புண்ணியவான் உண்டென்று சொல்லி, இங்கே போகும்படி வருந்திச்சொன்னார். அவர் பேச்சைக்கேட்டு இந்த வழி திரும்பினேன்.

கிறிஸ்தியான் வழிவிலகினதை அறிக்கையிடுகிறான்.

சுவி. அவன் எப்படிப்பட்டவன்?

கிறி. அவனைப்பார்த்தால் ஒரு பெரியவர்போல் தோன்றிற்று; வெகுநேரம் என்னோடே வாதாடி, நான் என் வழியைவிட்டுத் திரும்பச்செய்தார்; அதினாலேதான் நான் இங்கே வந்திருக்கிறேன். இந்த மலையின் உச்சியையும், இது என்மேல் விழுகிறாப்போல் இருக்கிறதையும் பார்த்து எங்கே விழுந்துவிடுமோவென்று பயந்து, இங்கே நின்றுகொண்டிருக்கிறேன்.

சுவி. அந்தப் பெரியவன் உன்னிடத்தில் என்னகேட்டான்?

கிறி. அவர் கேட்டவைகளுக்குக் கணக்கில்லை; நீ எங்கே போகிறாய் என்று கேட்டார், நான் இன்ன இடத்துக்குப் போகிறேன் என்று சொன்னேன்.

சுவி. பின்னும் என்ன கேட்டான்?

கிறி. உனக்குப் பெண்சாதி பிள்ளைகள் உண்டா அப்பா என்று கேட்டார்; ஆம் உண்டென்றுசொல்லி, இந்தப் பாரச்சுமை ஏற்றப்பட்டதுமுதல் அந்தச் சந்தோஷங்கள் ஒன்றையும் நான் முன்போல் ஆசிக்கிறதில்லை என்றும் சொன்னேன்.

சுவி. அப்புறம் ஏதாவது சொன்னானா?

கிறி. உன் பாரத்தைக் கூடியசீக்கிரத்தில் எறிந்துபோடு என்று சொன்னார். அப்போது நான்: அதிலிருந்து விடுதலையாகும்படியாகத்தானே திட்டிவாசலை நோக்கிப்போகிறேன்; அங்கே போனால் என் பாரம் நீங்கும் வழியை அறிவேன் என்றேன். அதற்கு அவன்: உன் பாரந்தொலைந்துபோக, நீர் காட்டின வழியைப்பார்க்கிலும் சமீபமும், சுலபமும், தொல்லையற்றதுமான ஒரு பாதையைக் காட்டுகிறேன் என்று இந்தப் பாதையைக் காட்டி, இந்த வழியாய்ப்போனால் உன் பாரத்தை லேசில் நீக்கிப்போடத்தக்க ஒரு புண்ணியவானுடைய வீட்டைக் காண்பாய் என்று வழிதிருப்பிவிட்டான். ஐயா! நானும் அவன் பேச்சை நம்பி, எப்படியாவது பாரம் லேசானால் சரி என்று இம்மட்டும் வந்தேன். வந்தும் பாரம் பழைய படிதான் இருக்கிறது; ஆகையால் நான் முன்சொன்னதுபோல, எங்கே அழிந்துபோவேனோ என்று அஞ்சி என்ன செய்யலாம் என்று தெரியாமல், இப்படி நிற்கிறேன் தர்மத்துரையே!

சுவிசேஷகரின் கண்டிப்பான உணர்த்துதல்.

சுவி. அப்படியானால் உனக்குச் சொல்லவேண்டிய தேவனுடைய வார்த்தைகளைக் காண்பிக்கும்படி கைகட்டி, கால்கட்டி நில் என்று சுவிசேஷகன் சொன்னார். அவன் நடுநடுங்கி நின்றான். அப்போது சுவிசேஷகன் சொல்லுகிறார்:— "பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோம் என்று விலகாதபடி எச்சரிக்கையாய் இருங்கள்; ஏனெனில் பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்கமாட்டோம் என்று விலகினவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப்போவோம்"[a] என்று சொன்னதுமல்லாமல், "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது"[b] என்றும் சொல்லி, அவ்வாக்கியங்களின் கருத்து அவன் மனதில் படும்படி: நீதான் அந்த மனுஷன், நிர்ப்பாக்கியத்தை நாடிப்போகிறவன் நீதான்; உன்

[a] எபி. 12. 25. [b] எபி. 10. 38.



னதமானவருடைய ஆலோசனையை அசட்டைபண்ணவும், சமாதானத்தின் பாதையை விட்டு உன் பாதங்களை விலக்கிப் பின்வாங்கிப்போகவும், அழிவுக்கு நெருங்கவும் நீ துவக்கிவிட்டாய் என்று கடிந்துகொண்டார்.

அந்த வார்த்தைகள் அவனை எச்சரிக்கும் இடிபோல் இருந்தது. அவன் திடீர் என்று சுவிசேஷகனுடைய பாதத்தில் விழுந்து: ஐயோ! நான் நிர்ப்பாக்கியன், ஐயோ! அதமானேன் என்று அலறினான். உடனே சுவிசேஷகன் அவன் வலதுகையைப் பிடித்துத் தூக்கி: "எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷனுக்கு மன்னிக்கப்படும்."[a] "அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு"[b] என்று சொல்லி தைரியப்படுத்தினார். அப்புறம் அவன் காலூன்றி, சுவிசேஷகனுக்குமுன்பாகப் பழையபடி நடுக்கத்தோடு நிற்க நான் என் சொப்பனத்தில் கண்டேன்.

லோகஞானியின் துர்போதனம்.

பின்னும் சுவிசேஷகன் சொல்லுகிறார்: கிறிஸ்தியானே! நான் உனக்குச் சொல்லும் விஷயங்களைக் காதுகொடுத்து மகா கவனமாய்க் கேள்; உன்னை மோசம்போக்கினவன் யார் என்றும்; உன்னை எவனிடத்தில் போகச்சொன்னான் என்றும் சொல்லுகிறேன். உன்னைச் சந்தித்தானே அவன் லோகஞானி என்று பேருடையவன். அது அவனுக்கு ஏற்ற பேர் தான். ஏனெனில் அவன் பூலோக ஞானோபதேசங்களால் தன்னை மனமேற்றிக்கொண்டு,[c] அதின் சாரத்தால் ஊதிப்போகும்படி நல்லறத்தின் கோவிலுக்குப் போகிறான். மேலும் அவ்வுபதேசங்கள் சிலுவையின் உபதேசத்திலிருந்து அவனை விலக்கிப்போடுகிறதால்,[d] அவனுக்கு அதின்மேல் பிரியமாய் இருக்கிறது. அவன் மாம்சகுணமுடையவன் ஆகையால், நான் காட்டும் வழி செவ்வையானதாய் இருந்தாலும், அதிலிருந்து ஆட்களை விலகிப்போகும்படி செய்கிறான். இவனுடைய ஆலோசனையில் நீ அடியோடு வெறுத்துப்போடவேண்டிய மூன்று விஷயங்கள் இருக்கின்றன. அவையாவன:

லோகஞானியின் மோசம்.

1. வழியைவிட்டு உன்னைத் திருப்பினதும்,
2. சிலுவையைப்பற்றி உனக்குள் வெறுப்பை உண்டாக்க முயன்றதும்,
3. மரணவழியில் உன் பாதங்களைப் பிடித்துவைத்ததுமே.

[a] மத். 12. 31. [b] யோவா. 20. 27.
[c] 1 யோவா. 4. 5. [d] கலா. 6. 12.

முதலாவது: உன்னை வழிவிட்டுத் திருப்பினதையும், நீ அவன் பேச்சைக் கேட்டுத் திரும்பினதையும் அருவருக்கவேண்டும். ஏனெனில் இப்படிச் செய்வது, உலகத்திலுள்ள ஒரு சாஸ்திரியின் புத்தியை ஏற்றுக்கொள்ளும்படியாக, சர்வஞானமுள்ள தேவனின் ஆலோசனையை அசட்டைசெய்கிற முனைத்தனமாய் இருக்கிறது. "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள்"[a] என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அந்த இடுக்க வாசலுக்குப் போகவே நான் உனக்கு வழிகாட்டினேன்; ஏனெனில், "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாய் இருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்."[b] இந்த இடுக்கமான வாசலைவிட்டும், அதற்குப் போகும் வழியிலிருந்தும் அந்தப் பதிதோவதி உன்னை விலக்கி, அழிவின் ஓரத்தில் உன்னைக் கொண்டுவந்து விட்டான். ஆகையால் உன்னை வழிவிட்டுத் திருப்பின அவனையும், அவன் போதனையைக் கேட்டுத் திரும்பின உன்னையும் முழுப்பகையாய்ப் பகைக்கவேண்டும்.

இரண்டாவது: சிலுவையைப்பற்றி உனக்கு வெறுப்புண்டாக்க முயன்றதை நீ முற்றிலும் வெறுக்கவேண்டும். ஏனெனில் எகிப்தின் பொக்கிஷங்களைப் பார்க்கிலும் அதையே நாட வேண்டியது.[c] அதுவுமன்றி, "தன் ஜீவனை இரட்சித்துக் கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துபோவான்" என்றும், "தம்மைப் பின்பற்றுகிற ஒருவன் தன்னுடைய தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரனையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் தமது சீஷனாய் இருக்கமாட்டான்" என்றும் மகிமையின் ராஜா சொல்லியும் இருக்கிறார்.[d] ஆகையால் கிறிஸ்தியானே, சத்திய தேவனின் வழியை அபத்தமாக்கி, அந்த வழியில் அழிவும் நாசமும் உண்டென்று ஒரு மனுஷன் உணர்த்தினால் அவன் காட்டும் வழியில் நீ நித்தியஜீவனைக் கண்டடையமாட்டாய். இந்தப் போதனையையும் நீ தள்ளிவிடவேண்டும்.

மூன்றாவது: மரணவழியில் உன்னை உட்படுத்தினதையும் நீ அருவருக்கவேண்டும். லோகஞானி உன்னை யாரிடத்தில் போகச்சொன்னான் என்பதையும், அவன் உன் பாரத்தை நீக்கிவிட எள்ளளவும் சக்தியற்றவன் என்பதையும் நீ அறிந்துகொண்டால் அது விளங்கும்.

[a] லூக். 13. 24. [b] மத். 7. 13, 14. [c] எபி. 11. 25, 26.
[d] மாற். 8. 38. யோவா. 12. 25. மத். 10. 39. லூக். 14. 26.



உன்னை இளைப்பாறச் செய்வான் என்று குறிப்பித்தவன் யார் தெரியுமா? அவன்தான் இப்பொழுதிருக்கிற அடிமைப்பெண்ணின் குமாரனாகிய நியாயப்பிரமாணிக்கன் என்பவன்; அவன் தன் பிள்ளைகளோடு கூட அடிமைத்தனத்தில் இருக்கிறான்.[a] உன் தலைமேல் விழுந்துவிடும் என்று நீ பயந்துகொண்டிருக்கிற இந்த மலை அந்தரங்க அர்த்தப்படி, சீனாய்மலையைக் குறிக்கிறது. அவனே தன் பிள்ளைகளோடு இப்பொழுது அடிமைத்தனத்தில் இருக்கிறதானால், உன்னை விடுதலையாக்க அவனால் ஆகும் என்று எதிர்பார்க்கலாமா? ஆதலால் உன் பாரத்தை இறக்கிவிட அந்த நியாயப்பிரமாணிக்கனால் கூடாது. உலகம் உண்டானது முதல் இதுவரையும் ஒருவனை அவன் கரையேற்றினதும் இல்லை, இனிக் கரையேற்றப்போகிறதும் இல்லை; இதை நம்பிக்கொள். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் ஒருவனும் நீதிமான் ஆகக்கூடாது; ஏனெனில் நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறதால் எந்த நரஜீவியும் தன் பாரத்தினின்று விடுதலையாகிக்கொள்ளமாட்டான். ஆகையால் உனக்கு இந்த வழியைக் காட்டின லோகஞானி எதிரி; நியாயப்பிரமாணிக்கனோ எத்தன்; அவன் மகன் மரியாதையா! அவனை வெளியே சொல்லக்கூடாது; கண்ணைச் சொருகுவான், தலையைச் சரிப்பான், ஆனால் அவனைப்போலொத்த மாயக்காரன் ஒருவனும் இல்லை. உனக்கு உதவிசெய்ய அவனாலும் ஆகாது. நான் சொல்லுவதை நம்பு; இந்த உதவாத பயல்களைப்பற்றி நீ கேள்விப்பட்ட பெரும்பேச்செல்லாம் வெறும்பேச்சேயன்றி சாரமுள்ளதல்ல. இரட்சண்யத்தை நீ அடையாதபடி நான் காட்டிய வழியிலிருந்து உன்னை விலக்கிப்போடும்படியாகவே அவன் தன்னால் ஆனமட்டும் பிரயாசப்பட்டான் என்று சொல்லி; தாம் அவனுக்குச் சொன்னவையெல்லாம் மெய் என்பதற்கு வானங்களைச் சாட்சியாகக் கோரினார். உடனே அவன் நின்ற மலையின் கீழிருந்து அக்கினியும் அதிரடியுள்ள சத்தமும் புறப்பட்டன. அவன் மிகவும் பயந்தான், அவன் தேகத்தின் ரோமங்கள் நட்டுநின்றன. அந்தச் சத்தமானது: "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்துக்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன்" என்று விளம்பினது.[b]

[a] கலா. 4. 21—27.
[b] கலா. 3. 10.

இந்தச் சத்தத்தைக் கேட்ட கிறிஸ்தியான்: இனி நமக்கு ஜீவன் ஏது? சாவுதான் நமது பங்கென்று எண்ணிக்கொண்டு, மாலைமாலையாய்க் கண்ணீர் சொரிந்து, கதறி அழுது, லோக ஞானியையும் அவனைக் கண்டு சந்தித்த நேரத்தையும் சபித்து, அவன் பேச்சைப் பிரியமாய்க் கேட்ட என்னிலும் பெரும் மூடன் உண்டோ! என்னிலும் பெரும்பித்தன் உண்டோ! என்று புலம்புகிறான். அவன் பின்னும் ஆகா, அந்த ஞானியின் முகாந்தரமெல்லாம் என் மாம்சத்துக்கேற்றபடி இருந்ததினால் அல்லவா, நான் அவன் பேச்சின்படி சரியான பாதையை விட்டு வழிவிலகி இந்தக் கதி ஆனேன் என்று நினைந்து வெட்கப்பட்டான். இதன்பின் அவன் களித்த குரலோடும், பணிந்த முகத்தோடும் பின்வருகிற வார்த்தைகளைச் சுவிசேஷகனிடத்தில் கேட்கிறான்.

கிறிஸ்தியான் தனக்கு இன்னும் நம்பிக்கை உண்டா என்று கேட்கிறான்.

கிறி. தருமத்துரைகளே! அடியேனுக்கு இன்னும் நம்பிக்கை உண்டோ? நான் மறுபடியும் திரும்பித் திட்டிவாசல் நோக்கிப் போகலாமா? போனாலும் இப்படி வழிவிலகினதின் நிமித்தம் உனக்கிங்கே இடம் இல்லை; ஓடிப் போ என்பார்களோ? நான் வெட்கத்தோடு திரும்பிவிடவேண்டுமோ? அந்த மனுஷனுடைய ஆலோசனையின்படி நான் நடந்ததற்காக ஆராத்துயரம் அடைகிறேன். ஆனால் பரமநாதர் என் படுதோஷங்களை மன்னிப்பாரா? உமக்கு எப்படித் தோன்றுகிறது? என்று கேட்டான்.

சுவிசேஷகன் கிறிஸ்தியானை ஆறுதல்செய்கிறார்.

சுவி. அதற்குச் சுவிசேஷகன்: உன் பாவம் மா பெரிது, அதினால் நீ இரண்டு தீமைகளைச் செய்தாய்; விதிக்கப்பட்ட வழியிலிருந்து உன் காலை எடுத்துவிட்டாய், விலக்கப்பட்ட வழியில் உன் பாதங்களை வைத்துக்கொண்டாய்; என்றாலும் வாசலண்டை இருக்கிற மனிதன் உன்னை ஏற்றுக்கொள்ளுவார், ஏனெனில் மனுஷர்மேல் அவருக்குப் பிரியம் உண்டு; ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன் கேள்: நீ வழியிலே அழியாதபடிக்கு இந்தத் திசையை நோக்காதபடிமாத்திரம் கவனமாயிரு. ஏனெனில் கொஞ்சக்காலத்திலே அவருடைய கோபம் பற்றி எரியும்* என்று சொன்னார். உடனே கிறிஸ்தியான் திட்டிவாசல் வழியைச் சேரும்படி பயணப்பட்டான். சுவிசேஷகர் அவனை முத்தமிட்டு, ஒரு புன்சிரிப்பு சிரித்து, கடவுள் உன்

* சங். 2. 12.



பயணத்தை வாய்க்கச்செய்வாராக என்று ஆசீர்வதித்து வழிவிட்டனுப்பினார்.

கிறிஸ்தியான் சரியான வழிக்குத் திரும்புகிறான்.

அதுமுதல் அவன் வெகு விரைவாய் நடந்து தனக்கு எதிரே வந்தவர்கள் ஒருவரோடும் பேசவும் இல்லை, அவர்கள் பேசினாலும் இவன் பேச்சுக்கொடுக்கவும் இல்லை. அவன் லோகஞானியைச் சந்தித்த இடத்துக்கு வருமட்டும் சமனையில் நடக்கிறவனைப்போல் சுருக்க நடந்து, திட்டிவாசல் மார்க்கம் சேர்ந்து, அவ்வழியாய்த் திட்டிவாசல் படிகளின்மேல் ஏறினான். அந்த வாசல் நிலையின்மேல், "தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்"# என்கிற வாசகம் எழுதப்பட்டிருந்தது. கிறிஸ்தியான் வாசலண்டைபோய் நின்றுகொண்டு:

பல்லவி.

ஐயையா, நான் பாவி! திட்டிவாசல் திறவும் ஐயா!

நாசபுரிநீசன் கிறிஸ்தியானும் இதோ,
பாரஞ் சுமந்துவந்தேன்—ஐயா!
நேசமாய் வாசல் திறந்திடில் நானும்
பாரம் இறக்கிக்கொள்வேன்,— ஐயையா!

பாவி, துரோகி, விரோதி, சண்டாளன்நான்
படுதோஷி ஆனாலும்;—ஐயா!
பாடிப் புகழுவேன் பரனை என்னாளும்
வாசலுள் வந்துவிட்டால்,— ஐயையா!

நொறுக்குண்ட இருதயமுள்ள பாவிக்கு இரட்சணியவழி திறக்கப்படும்.

என்று புலம்பி இரண்டு மூன்றுதரம் கதவைத் தட்டினான்.[1] தட்டவே, பட்சதாபன்[2] என்று பெயருடைய ஒரு மகாத்துமா வாசலண்டை வந்து நின்று: யார் அங்கே? எங்கிருந்து வந்தாய்? என்ன விசேஷம்? என்று கேட்டார்.

1 தட்டுகிறது என்பது, இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பாவமன்னிப்பைப் பெறவேண்டும் என்று கனிவோடு ஜெபம்செய்வதைக் குறிக்கிறது.

2 பட்சதாபன் என்பது, தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்ப் பாவிகள்மேல் வைத்த அன்பைக் குறிக்கிறது.

# மத். 7. 7.




கிறி. நான், பாரஞ்சுமந்த பாவி ஐயா! நாசபுரியிலிருந்து வருகிறேன், வருங்கோபத்துக்குத் தப்பிப்பிழைக்கும்படி சீயோன் பர்வதத்திற்குப் போகிறேன்; மா பிரபுவே! இந்த வாசல்வழியாகவே நான் சீயோனுக்குப் போகவேண்டும் என்று கேள்விப் பட்டேன், நான் போக வழிவிடுவீரா ஐயா! என்று கிறிஸ்தியான் கேட்டான்.

பட்ச. சந்தேகமில்லாமல் வா அப்பா, கதவைத் திறக்கிறேன் என்று பட்சதாபன் சொல்லி, வாசலைத் திறந்தார்.[1]

1 வாசல் திறக்கப்படுகிறது, சரியான வழியாக இயேசுவினிடத்தில் வருகிற ஒவ்வொருவனும் ஏற்றுக்கொள்ளப்படுவான் என்பதைக் குறிக்கிறது.



## திட்டிவாசல் கோட்டை சேருதல்.

கதவு திறக்கப்பட்டவுடனே கிறிஸ்தியான் மெதுவாய் அடிஎடுத்துவைத்து உள்ளே போகப்போகிறான்; ஆனால் அக் கோட்டைக்குள் இருந்த பட்சதாபன் அவன் கையைப் பிடித்து வெடுக்கென்று உள்ளே இழுத்துக்கொண்டார். இப்படி இழுத்ததினால் என்ன ஐயா என்று கேட்டான். அதற்குப் பட்சதாபன் சொல்லுகிறார்: அப்பா இந்தக் கோட்டைக்குச் சற்று அப்பால், வேறொரு பலத்த கோட்டை கட்டப்பட்டிருக்கிறது; அதற்குப் பெயெல்செபூல் என்கிற பேருடைய ஒருவன் அதிபதியாய் இருக்கிறான். அவனும் அவனுடைய காரியக்காரரும் இவ்வாசலைத் தேடி வரும் பிரயாணிகள் உட்பிரவேசிக்கிறதற்குள்ளாக கொன்றுவிட்டால் நல்லதென்று எண்ணி அம்புகளைப் பிரயோகிப்பார்கள்.[1] ஆனதினாலேதான் நான் அவ்வளவு ஆத்திரத்தோடு உன்னை இழுத்துக்கொண்டேன் என்று சொன்னார். அதைக் கேட்ட கிறிஸ்தியான் அப்படியா செய்தி, எனக்குச் சந்தோஷம் பாதி, சஞ்சலம் பாதியாய் இருக்கிறது என்றான். பட்சதாபன் அவனைப்பார்த்து: இவ்விடம் வர உனக்கு வழிகாட்டினது யார்? என்று கேட்டார்.

சாத்தானின் சேனைகள்.

கிறி. சுவிசேஷகர் என்கிற பேருடைய ஒரு மகாத்துமா இந்த இடத்தைக் காண்பித்து, இக்கதவைத் தட்டச்சொன்னார். உம்மைக் கேட்டால் நான் இனிச் செய்யவேண்டியது இன்னதென்று சொல்லுவீர் என்றும் அவரே சொன்னார்.

பட்சதாபனும் கிறிஸ்தியானும்.

பட்ச. உனக்குமுன் விஸ்தாரமான ஒரு வாசல் திறக்கப்பட்டிருக்கிறது, அதைப் பூட்டிவிட ஒருவராலும் கூடாது, ஆகையால் கலங்காதே அப்பா!

கிறி. என் துன்பமெல்லாம் இன்பமாய் மாறும் காலம் துவக்கிற்று என்றெண்ணுகிறேன்.

பட்ச. நீ ஒண்டியாய் வந்ததெப்படி?

[1] பெயெல்செபூலின் அம்புகள் என்பது, சாத்தான் பொல்லாத நினைவுகளை மனுஷருடைய உள்ளத்தில் எழுப்பிவிட்டு, அவர்களைக் கிறிஸ்துவினிடம் வரவிடாமல் அதைரியப்படுத்தித் தடுப்பதைக் குறிக்கிறது.

கிறி. என் அழிவின் நிலைமையை நான் உணர்ந்துகொண்டதுபோல் என்னுடைய ஊரில் ஒருவரும் உணரவில்லை, ஆதலால் நான்மாத்திரம் பிரயாணப்பட்டேன்.

பட்ச. நீ புறப்பட்ட செய்தி அவர்களில் யாருக்காவது தெரியுமா?

கிறி. ஆம், தெரியும்; என் மனைவியும் மக்களும் நான் பயணப்பட்டதைக் கண்டு, திரும்பிவரும்படி கூப்பிட்டார்கள்; வேறு சில அயலாரும் அதிகமாய் வருந்தி அழைத்தார்கள், ஆனால் நான் என் காதுக்குள் விரலை வைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

பட்ச. யாராவது உன்னைப் பின்தொடர்ந்து வந்து நீ திரும்பிவரும்படி பலவந்தம் பண்ணவில்லையா?

கிறி. அப்படியும் நடந்தது; என் ஊரிலுள்ள பிடிவாதன், இணங்குநெஞ்சன் என்று பேருடைய இரண்டு வாலிபர் பின்னாலே ஓடிவந்து திரும்பும்படி தங்களாலான பிரயத்தனமெல்லாம் செய்தார்கள். நான் அதற்கு இணங்காததைக் கண்டபோது பிடிவாதன் கண்டபடி திட்டிக்கொண்டு திரும்பிப் போனான்; இணங்குநெஞ்சன்மாத்திரம் என்னோடு பின்னும் கொஞ்சதூரம் வந்தான்.

பட்ச. அவன் ஏன் உன் கூடவே வரவில்லை?

கிறி. நாங்களிருவரும் ஒன்றாய்க்கூடி நம்பிக்கையிழவு இருக்கிறதே, அதுமட்டும் வந்தோம். வந்த நாங்கள் தொப்பென்று அந்த உளையில் விழுந்துவிட்டோம். அதினாலே இணங்குநெஞ்சன் மனமுறிவடைந்து, அப்புறம் ஒரு அடிகூடவும் வரமாட்டேன்; அந்த சொர்க்கியமான தேசத்தை நீயே போய்ச் சுதந்தரித்துக்கொள்; எனக்கு வேண்டாம் அப்பா என்று சொல்லிவிட்டு அங்கிருந்தே ஊரைநோக்கி ஓட்டம் எடுத்தான். அவன் தன் வழியாய்ப் போனான், நான் என் வழியாய் நடந்தேன். அவன் பிடிவாதனைத் தொடர்ந்தான், நான் இடுக்கவாசலை நோக்கிவந்தேன்.

கெட்டவனைத்தானும் பலரோடு புறப்பட்டவன், தானும் தனிமையாய்ச் சேருவான்.

பட்ச. ஐயோ இணங்குநெஞ்சனுக்கு மேலோகத்து மகிமைதான் அவ்வளவு சொற்பமாய்க் காணப்பட்டதாக்கும், அதைப் பெற்றுக்கொள்ளும்படி அற்பசொற்ப துன்பங்களைச் சகிக்கப் பிரியம் இல்லையாக்கும் என்று பட்சதாபன் சொன்னார்.

கிறி. நான் இணங்குநெஞ்சன் காரியத்தை உள்ளபடி சொன்னேனே; என் காரியத்தை உள்ளபடி சொல்லவேண்டுமானால் அவனிலும் நான் யோக்கியன் அல்ல என்றே வெளி

கிறிஸ்தியான் தன் குற்றத்தை உணருகிறான்.



யாகும்; அவன் ஊரை நாடியல்லோ ஓடினான்; நானும் மாம்சத்துக்கேற்றவான வார்த்தைகளைப் பேசின லோகஞானி என்கிற ஒரு பாதகன் பேச்சைக் கேட்டு நேர்வழியை விட்டுப் பிரிந்து, மரணபாதை வழியாய்ப் போனேன்.

பட்ச. ஆகா, உன்னையும் கெடுக்கப்பார்த்தானோ? நியாயப்பிரமாணிக்கனண்டை போ, பாரம் இறங்கிப்போம் என்று சொன்னானோ? அவர்கள் இருவரும் பலத்த மோசக்காரர், அவன் பேச்சைக் கேட்டாயோ?

கிறி. ஆம், மனப்பூர்வமாய்க் கேட்டு நியாயப்பிரமாணிக்ர் வீடு சேரும்படி வெகுதூரம் நடந்துபோனேன்; அவ்வீட்ரத்தில் இருக்கிற மலையடிவாரத்தில் போனபோது அது மேல் விழுகிறதுபோல் இருந்ததால் பயந்து, அக்கம்பக்கம் காமல் அதிலேயே நின்றுவிட்டேன்.

ச. அம்மலை அநேகம்பேரைக் கொன்றதுண்டு; இன்னும் அநேகரைக் கொல்லும்; நீ அதினால் நசுக்கப்பட்டுப் போகாதபடிப் பிழைத்தது பெரியகாரியம்.

நான் அந்த மலைக்குள் இருக்கையில் எப்படி இருந்தே ச்சயமாய் எனக்கே தெரியவில்லை. நல்லவேளையில் சுவிகன் வந்தார்; அவர் வராவிட்டால் என்பாடு நாசந்தான், வந்தது தேவனுடைய பெரிய இரக்கம் என்று உணருகி உள்ளபடி அந்த மலையினால் நசுக்கப்பட்டு மரணம யவேண்டிய இந்தப் பெரும்பாவி, இங்கே உயிர்தப்பி என் ஆண்டவரோடு இப்படிப் பேசிக்கொண்டிருக்கி இவ்வளவு சிலாக்கியத்தை எனக்குக் கிடைக்கப்பண் தேவதயவை என்னசொல்ல!

மிக்குக. இவ்விடம் வருகிறவர்கள் முந்தினகாலங்களில் எவ்வளவு பஞ்சமாபாதகராய் இருந்தாலும் சரி, அதையிட்டு நாங்கள் தடைசெய்கிறதில்லை; எந்த முகாந்தரத்தையிட்டாகிலும் அவர்கள் தள்ளிவிடப்படமாட்டார்கள்.[a] ஆதலால் நல்ல சிநேகிதனே, சற்றுதூரம் என்னோடேகூட வா! நீ இனி நடக்கவேண்டிய வழியை உனக்குப் போதிப்பேன். முன்னே எட்டிப் பார்! இந்த இடுக்கமான வழி உனக்குத் தெரிகிறதா?[1]

ஆடை ... னார் ... வழி ... கு

---

[1] இடுக்கமான வழி. இது பரிசுத்தமான ஜீவனத்தைக் குறிக்கிறது. பாவவழி விசாலமாகவும், சௌகரியமாய் இருக்கிறது. அதின் வழியாய் நடக்க மனுஷர் பெரும்பாலும் நாடுகிறார்கள்.

[a] யோவா. 6. 37.

உன் வழி அதுதான். அது முற்பிதாக்கள், தீர்க்கதரிசிகள், இயேசுகிறிஸ்து, பரிசுத்த அப்போஸ்தலர் முதலியவர்கள் நடந்துபோனதால் படுத்தபாதையாய் இருக்கிறது. அது நூலைப் போல் நேரானது; நீ நடந்துபோகவேண்டிய வழி அதுதான்.

வழுவியும் வழிதப்பிப் போவேனோ என்று கிறிஸ்தியான் கலங்குகிறான்.

கிறி. புதுப்பிரயாணிகள் வழுவிவழுவி வழிதப்பிப் போகும்படியான பக்கவழிகளாவது, குறுக்குவழிகளாவது அதிலிருந்து பிரியுமோ?

பட்ச. அப்படிப்பட்ட பல வழிகள் வலப்பக்கமும் இடப்பக்கமும் இருக்கும், ஆனால் அவை ஒவ்வொன்றும் கோணலும் விசாலமுமாய் இருக்கும். உன் வழியை நீ லேசாய் கண்டுகொள்ளலாம்; அது பக்கவழிகளிலும், குறுக்குவழிகளிலும் இடுக்கமும் நெருக்கமுமாய் இருக்கும்[a] என்றார்.

கிறிஸ்தியான் பாரத்தின் விடுதலை கேட்டல்.

பின்பு நான் என் சொப்பனத்திலே கண்டதாவது; கிறிஸ்தியான் அவரைநோக்கி: நீர் என் முதுகின்மேல் இருக்கும் சுமையிலிருந்து என்னை விடுதலையாக்கமாட்டீரோ? என்று கேட்டான். ஏனெனில் இதுவரையும் அவன் தன் சுமையில்நின்று விடுதலையாகவும் இல்லை, அவன்தானே அதை இறக்கிப்போட்டுவிட சக்தி இருந்ததும் இல்லை.

கிறிஸ்துவின் மரணத்தாலும் இரத்தத்தாலுமன்றி, வேறெவ்வளவும் பாவக்கறையும் பாரமும் நீங்கமாட்டாது.

அதற்கு அவர்: அப்பா உன் பாரச்சுமையைப்பற்றியா கவலைப்படுகிறாய்? உன் சுமை ஓரிடத்தில் சேருமளவுடனே தானாய் விழுந்துபோம். இடத்திற்குப் போகும்வரையும் நீ பொறுமையோடு அதைச் சுமந்துகொண்டுபோகவேண்டியதுதான் என்று சொன்னார்.

அப்புறம் கிறிஸ்தியான் தன் அரையின் கச்சைகளை இறுக்கிக் கட்டிக்கொண்டு பயணம் புறப்பட ஆயத்தப்பட்டான். அப்பொழுது அவர்: கிறிஸ்தியானே, நீ புறப்படுகிறபோது கொஞ்சதூரத்தில் நீ முதலாவது வியாக்கியானி என்னும் விளங்கிய ஒரு முனிவர் வீட்டில் சேருவாய்;[1] அங்கே போய்

[1] வியாக்கியானி என்பவர், சத்தியவேதத்தின் மூலமாய்ப் பரிசுத்த ஆவியானவர் பாவிக்கு உணர்த்தும் போதனைகளுக்கும், தேவவழி பக்தர்களுக்கும், ஜெபம், தியானம், ஞானப்பிரசங்கங்களுக்கும் குறிப்பாய் இருக்கிறது. நமக்குப் போதிக்கும்படியாக சத்திய ஆவியானவரை அனுப்புவேன் என்று இயேசு தமது சீஷருக்கு வாக்குத்தத்தம் செய்தார். யோவா. 16. 13, 14.

[a] மத். 7. 14.



வுடனே வாசலைத் தட்டு,[1] அவர் உனக்கு அநேக மகத்துவமானவைகளைக் காட்டுவார் என்று சொல்லி, கைகுலுக்கி, போய் வா அப்பா, போய் வா, கடவுள் உன் பயணத்தை ஆசீர்வதிப்பாராக என்று சொல்லி அனுப்பினார்.

## வியாக்கியானி வீடு சேருதல்.

கிறிஸ்தியான் வியாக்கியானி வீட்டுக்கு வருகிறான்.

கிறிஸ்தியான் வழிநடந்து வியாக்கியானி வீட்டுக்கு வந்து கதவைப் பலதரம் தட்டினான். கடைசியாக ஒருவன் கதவண்டை வந்து, யார் அது? என்று கேட்டான்.

கிறி. ஐயா, நான் ஒரு வழிப்போக்கன்; இந்த வீட்டுப்பிரபுவுக்கு அறிமுகமாயிருந்த ஒரு நல்ல மனுஷன், எனக்கு வேண்டிய ஒரு சகாயத்துக்காகப் போகச்சொன்னார், ஆகையால் நான் வந்தேன்; இந்த வீட்டெஜமானோடே பேசவேண்டிய சில சமாசாரங்கள் உண்டு, தயவுசெய்து கதவைத் திறக்கமாட்டீரா? என்று கிறிஸ்தியான் சொன்னான்.

அதுகேட்டு அந்த மனுஷன் வீட்டெஜமானைக் கூப்பிட்டான். அவர் வந்து உனக்கு வேண்டியதென்ன? சொல் அப்பா என்று கேட்டார்.

அதற்குக் கிறிஸ்தியான்: மகாபிரபுவே! அடியேன் நாசபுரியிலிருந்து புறப்பட்டு சீயோன்மலைக்குப் பிரயாணமாய்ப் போகிறேன்; இந்தப் பாதையின் துவக்கத்தில் இருக்கிற வாசலில் உட்கார்ந்திருக்கிறவர், என்னை இவ்விடத்துக்குப் போகச்சொல்லி, நீ போனால் அந்த வீட்டெஜமான் உன் பிரயாணத்துக்கு அநுகூலமாகப் பல மகத்துவமான விஷயங்களை உனக்குக் காண்பிப்பார் என்று சொன்னார் என்றான்.

வீட்டெஜமான், பிரகாசனைக் கூப்பிடுதல்.

உடனே வியாக்கியானி, அப்பா உனக்குப் பிரயோசனமானவைகளைக் காட்டுகிறேன், கூடவா என்று சொல்லி, தமது வேலைக்காரனைக் கூப்பிட்டு, விளக்கைக் கொளுத்திக்கொண்டு வரச்சொல்லி, கிறிஸ்தியானை தமக்குப் பின்தொடரும்படிச் சொன்னார். வியாக்கியானி தனித்த ஒரு அறைக்குள் அவனைக் கூட்டிப்போய், அங்கிருந்த ஒரு கதவைத் திறக்கும்படி

[1] தட்டுகிறவனுக்குப் பரிசுத்தஆவியானவர் கொடுக்கப்படுவார். லூக். 11. 13. திரும்பத்திரும்ப தட்டுதல் என்பது கவிசெய்து ஜெபிப்பதைக் குறிக்கிறது.

தமது மனுஷனிடத்தில் சொன்னார்; அவன் திறந்தான். அங்கே ஒரு மகாத்துமாவின்[1] படம் சுவரில் தொங்குகிறதைக் கிறிஸ்தியான் கண்டான். அதின் கண்கள் வானத்தை நோக்கிக்கொண்டிருந்தன; மகா விசேஷமான ஒரு புஸ்தகம் அதின் கையில் இருந்தது; சத்தியப்பிரமாணம் அதின் உதடுகளில் எழுதப்பட்டிருந்தது; பூலோகம் அதின் முதுகின்மேல் இருந்தது; அது மனுஷரோடு வழக்காடுகிற பாவனையாய் நிற்கிறதாகக் காணப்பட்டது, அதின் சிரசின்மேல் ஒரு பொற்கிரீடம் தொங்கிற்று, இவைதான் அந்தப் படத்தின் சாயல்.

மகாத்துமாவின் படக்காட்சி.

கிறி. ஐயா, இதின் தாற்பரியம் என்னவென்று கிறிஸ்தியான் கேட்டான்.

**வியா.** இந்தப் படம் குறிப்பிக்கும் ஆள் பதினாயிரம் பேரிலும் சிறந்தவர். இவர் தம்மைக்குறித்து: "கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்திகள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன். கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்"[a] என்று அப்போஸ்தலனைப்போல் சொல்லவேண்டுமானாலும் சொல்லலாம். அவர் கண் வானத்துக்கு ஏறெடுக்கப்பட்டதாகவும், கையில் சிறந்த ஒரு புஸ்தகம் இருக்கிறதாகவும், உதட்டில் சத்தியப்பிரமாணம் எழுதப்பட்டிருக்கிறதாகவும் காண்கிறாயே; மறைவானவைகளைப் பாவிகளுக்கு வெளிப்படுத்தி, அந்தரங்க இரகசியங்களை அவர்களுக்கு அறியப்படுத்துவதே தமது வேலை என்பதை அவைகள் காட்டுகின்றன; அந்த ஆளின் சாயல் மனுஷரோடு வழக்காடுகிறதாகக் காணப்படுவதும் மேலேசொல்லிய கருத்தையே விளக்குகிறது. உலகம் அவர் முதுகுக்குப் பின்னாலும், கிரீடம் சிரசின்மேலும் தொங்குவது அந்த ஆள் தன் எஜமானின் நிமித்தம் இப்பூலோக இன்பங்களை ஒரு பொருட்டாய் எண்ணாமல், பரலோக பாக்கியங்களையே தன் பலனாக ஆசிப்பதைக் காட்டு

படத்தின் வியாக்தி.

[1] ஒரு மகாத்துமா என்பது, இயேசுகிறிஸ்துவின் மெய்யான ஊழியக்காரனைக் குறிக்கிறது. மகா விசேஷமான ஒரு புஸ்தகம் என்பது, வேதாகமத்தைக் குறிக்கிறது. அதின் போதனையைப் பின்பற்றவேண்டியது.

[a] 1 கொரி. 4. 15, கலா. 4. 19.



கிறது. இந்தச் சித்திரத்தால் குறிக்கப்படுகிறவரையே, நீ நாடிப்போகும் நல்ல தேசத்தின் அதிபதி உன்னுடைய வழிகாட்டியாக ஏற்படுத்தியிருக்கிறார். ஆனதினாலே இதை உனக்கு முதலாவது காண்பித்தேன்; பின்னும் கேள், நீ போகிற வழியில் யாராவது எதிர்ப்பட்டு, உனக்கு நல்வழி காட்டுகிறவர்கள்போல் பேசி, ஏமாற்றி, உன்னை மரணத்துக்கு உட்படுத்தாதபடி நான் உனக்குக் காண்பிக்கிறவைகளைக் கூர்மையாய்க் கவனித்துக்கொண்டு, நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் மறந்துபோகாதே என்று வியாக்கியானி முனிவர் சொன்னார்.

படக்காட்சியை முதலாவது காட்டிய காரணம்.

அப்புறம் அவர் கிறிஸ்தியான் கையைப் பிடித்து எத்தனையோ ஆண்டுகளாய்த் தூசி படிந்திருந்த ஒரு பெரியமடத்துக்குள் கொண்டுபோய்விட்டார். அந்த மடத்துள் சற்றுநேரம் அங்கு சுற்றினபின்பு, ஒரு மனிதனைக் கூப்பிட்டு இதைப் பெருக்கால் சுத்தம்பண்ணு என்று வியாக்கியானி சொன்னார். அப்படியே பெருக்கினபோது எழும்பின தூசியால் கிறிஸ்தியான் சுவாசம்விட வகையில்லாமல் மூச்சுமுட்டிப்போனான். அப்போது வியாக்கியானி, கிட்டநின்ற ஒரு பெண்ணைப் பார்த்து: பெண்ணே! சற்று தண்ணீர் தெளி அம்மா என்றார்; அவள் தண்ணீர் தெளித்தபின்பு யாதொரு வருத்தமுமின்றிச் சுத்தம் செய்யப்பட்டது.

தூசு மடத்தின் படம்.

கிறி. இதின் பொருள் என்ன முனிவரே! என்று கிறிஸ்தியான் கேட்டான்.

வியா. இதின் பொருள் கேட்டாயா? இந்த மடம் சுவிசேஷத்தின் சுத்த கிருபையினால் ஒருக்காலும் சுத்திகரிக்கப்படாத மனுஷனுடைய இருதயமாய் இருக்கிறது; இந்தத் தூசி முழுமனுஷனையும் தீட்டுப்படுத்திவிட்ட ஜென்மபாவமாகிய உட்கேடுதான். அதை முதலாவது பெருக்கி மூச்சுமுட்டச்செய்தவன் நியாயப்பிரமாணம்; அப்புறம் அதின்மேல் தண்ணீர் தெளித்த பெண் சுவிசேஷமாய் இருக்கிறது. முதலாவது துடைப்பம் எடுத்து சுத்தம்பண்ணினவன் கொஞ்சம் கூட்டுமுன்னே, தூசி எழும்பி, அவனைப் பெருக்கவும், உன்னை மூச்சுவிடவும் இடங்கொடாதபடி கலக்கினதைக் கண்டாயே; நியாயப்பிரமாணமானது தன் கிரியைகளால் மனுஷனுடைய இருதயத்திலுள்ள பாவங்களைச் சுத்திகரிக்கிறதற்குப் பதிலாக,

அவைகளுக்கு உயிர்கொடுத்து,[a] பலப்படுத்தி[b] அவை பெருகும்படி செய்கிறது என்றும்,[c] பாவத்தை அறிகிற அறிவை அது உணர்த்தி, பாவஞ்செய்யாதே என்று கட்டளையிட்டபோதிலும், பாவத்தைக் கீழ்ப்படுத்தத்தக்க பலத்தை மனுஷனுக்குக் கொடுக்கிறதில்லை என்றும் உனக்கு அது வெளிப்படுத்துகிறது. அப்பால் ஒரு சிறுபெண் தண்ணீர் தெளிக்கவே தூசி எல்லாம் அடங்கி, லேசாய்ப் பெருக்கப்பட்டு மடம் சுத்தமாய்ப் போயிற்றே; சுவிசேஷத்தின் மதுரமும், மேன்மையுமான உபதேசம் இருதயத்தில் இறங்கும்போது அந்தச் சத்தியங்களை உறுதியாய் விசுவாசிப்பதாலே, அந்தப் பெண் ஜலம் தெளிக்கத் தூசி அமர்ந்ததுபோல், பாவம் மேற்கொள்ளாமல் அடங்கி, அவளால் மடம் சுத்தமானதுபோல் பாவம் விலகி, இருதயம் மகிமையின் ராஜா உட்பிரவேசிக்கும்படியான மாளிகை ஆகிறது[d] என்றும் உனக்கு உணர்த்தப்படுகிறது என்று சொன்னார்.

இரண்டு பாலியர் காட்சி.

அதுவுமன்றி, நான் என் சொப்பனத்திலே: வியாக்கியானி கிறிஸ்தியான் கையைப் பிடித்து ஒரு சின்ன அறைக்குள் கொண்டுபோனதையும் கண்டேன். அங்கே இரண்டு பாலியர் எதிர்முகமாய் நாற்காலிபோட்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர்களில் மூத்தவனுக்குப் பொருமை என்றும் இளையவனுக்குப் பொறுமை என்றும் பேர். இவர்களில் பொருமை என்பவன் மூர்க்கவெறிகொண்டவனைப்போலும், பொறுமை என்பவன் அமர்ந்தகுணமுள்ளவனைப்போலும் அவரவர் முகச்சாயலில் காணப்பட்டது. அதைக் கண்ட கிறிஸ்தியான்: பொருமை என்கிற வாலிபன் மூர்க்கவெறிகொண்டவன்போல் இருக்கிறானே, அதின் காரணம் என்னவென்று கேட்டான். அதற்கு வியாக்கியானி சொல்லுகிறார்: அப்பா, இந்த வாலிபர் விரும்பும் பொருள்கள் என்னவுண்டோ அவை அனைத்தையும், அவர்கள் அதிபதி ஒரு வருஷத்துக்குப்பின்பு தான் தருவேன் என்று வாக்குக் கொடுத்திருக்கிறார்; பொருமை அப்படி நான் காத்திருக்க மாட்டேன், இப்போதே வேண்டும் என்றிருக்கிறான்; பொறுமை பாலியனோ, குறிக்கப்பட்ட காலம் வரட்டும் என்றிருக்கிறான் என்று சொன்னார்.

அப்பால், நான் என் சொப்பனத்தில்: ஒரு மனுஷன் நிறைந்த திரவியமுள்ள ஒரு சாக்கைத் தூக்கிவந்து, பொருமை என்

---

a ரோ. 7. 9. b 1 கொரி. 15. 56. c ரோ. 5. 20.
d யோ. 15. 3. எபே. 5. 26. அப். 15. 9. ரோ. 16. 25, 26. யோவா. 15. 13.



பவனுடைய பாதத்திலே கொட்டுகிறதைக் கண்டேன். அவன் அவ்வளவையும் வாரி சேர்த்துக்கொண்டு, பொறுமை என்பவனைக் கேலிபண்ணினான்; சற்றுநேரம் பொறுத்து நான் பார்க்கவே, பொருமை அவ்வளவு பொருளையும் ஆடம்பரியாய்ச் செலவழித்துவிட்டு, கந்தையன்றி வேறொன்றும் இல்லாமல் உட்கார்ந்திருக்கக் கண்டேன்.

பொருமையின் வாழ்வு சீக்கிரம் மாறிப்போகிறது.

கிறி. அதைக் கண்ட கிறிஸ்தியான்: மாமுனிவரே! அடியானுக்கு இந்த இரகசியம் விளங்குகிறதில்லையே என்று கேட்டான்.

வியா. முனிவர் சொல்லுகிறார்: இந்த இரண்டு வாலிபரும் இரண்டு அடையாளங்களாய் இருக்கிறார்கள். இவர்களில் பொருமை இவ்வுலக மக்களையும், பொறுமை என்பவன் மறுஉலக மக்களையும் குறித்துக்காட்டுகிறார்கள்; பொருமை என்பவனைப் போல் இப்பொழுதே எல்லாம் வேண்டும், இந்த வருஷமே அதாவது இவ்வுலகத்திலேயே எங்களுடைய பங்குபாக்கியங்களையெல்லாம் தந்துவிடவேண்டும் என்று இவர்கள் விரும்புகிறார்கள். மறுஉலகத்துப் பாக்கியங்கள் எல்லாவற்றிலும், இவ்வுலகவாழ்வே பதின்மடங்கு சிரேஷ்டம்போல் அவர்கள் எண்ணிக்கொண்டு, மறுலோக வாழ்வுகளைப்பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம், “கையில் இருக்கும் ஒரு குருவி, காட்டில் இருக்கும் இரண்டு குருவியைவிட லாபம்” என்கிற பழமொழிக்கு இணை அல்ல என்கிறார்கள்; ஆனால் பொருமையின் பாதத்தில் வைக்கப்பட்ட பொருளெல்லாம் சிறகுகட்டிப் பறந்தாற்போல, சீக்கிரம் தொலைந்துபோய் கந்தையோடு அவனை விட்டதே, அதுபோல உலகவாழ்வெல்லாம் சீக்கிரம் கடந்துபோய், தங்களை வெறுமையாய் விட்டுவிட்டதென்று, கடைசிக்காலத்தில் அவர்கள் உணர்ந்துகொள்ளுவார்கள் என்று விளக்கிச்சொன்னார்.

பொறுமை என்பவனின் நிலைவரமான வாழ்வு.

கிறி. கிறிஸ்தியான் அதைக் கவனமாய்க் கேட்டபின்பு, ஐயா! பொறுமை என்பவனைப்போல சிரேஷ்ட புத்திமான் ஒருவனும் இல்லை என்பதைப் பல முகாந்தரங்களினாலே அறிந்துகொள்ளுகிறேன். எப்படியெனில், (1) அவன் காலந்தாழ்ந்தாலும் நல்ல பொருள் அகப்படட்டும் என்று எண்ணிக் காத்திருக்கிறான். (2) அதோடு அவன் தன் அயலான், தனக்குக் கிடைத்த வாழ்வுகளையெல்லாம் இழந்து, கந்தைகட்டிய ஆண்டியாய் உட்கார்ந்திருக்கையில், இவன் தன் பங்குக்குரிய

வாழ்வுகளைப் பெற்றுக்கொள்ளும்படி இருக்கிறான் என்று சொன்னான்.

பாவியருடைய குற்றங்களின் ஞானபோதகம்.

வியா. அவைமாத்திரமோ? அதற்கேற்ற இசைவாகிற வேறொன்றையும் சேர்த்துச் சொல்லவேண்டும். பொறுமையின் வாழ்வெல்லாம் எவ்வளவு சீக்கிரம் மறைந்துபோயின; மறு உலகின் வாழ்வுகளோ ஒருக்காலும் மறைந்துபோகாத நித்திய வாழ்வுகளாய் இருக்கின்றன. ஆதலால் பொறுமை, தன் வாழ்வு முந்திக் கிடைத்துவிட்டது என்று பொறுமையைப் பார்த்துப் பரிகாசம்பண்ணி, சிரித்தது சரியல்ல; பொறுமை தன்னுடைய முதல்தரமான மகிமை பிந்திக் கிடைக்கிறபோது அவனைப் பார்த்துச் சிரிப்பானே, அது அவனுக்கு என்னமாய் இராது! எப்படியும் இகலோகவாழ்வு போய் பரலோகவாழ்வுக்கு இடங்கொடுக்கவேண்டியது; ஏனெனில் பரலோகவாழ்வு இனிமேல் வரவேண்டிய ஒரு வாழ்வாய் இருக்கிறது; அது வந்தபின்பு வேறொன்றுக்கு இடம் இல்லை, ஆனதால் நன்மையை முதலாவது பெற்றுக்கொண்டவனுக்கு அதைச் செலவழிக்கும்படி குறிக்கப்பட்ட ஒரு காலம் இருக்கவேண்டியது. ஆனால் நன்மையைக் கடைசியாகப் பெற்றவனோ என்றென்றைக்கும் அதை அநுபவிப்பான்; அந்த முகாந்தரத்தினாலேதான், ஐசுவரியவானைப் பார்த்து: "நீ பூமியிலே உயிரோடிருக்கும் காலத்தில் உன் நன்மைகளை அநுபவித்தாய், லாசரு அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்" என்று ஆபிரகாம் சொன்னதாக எழுதப்பட்டிருக்கிறது[a] என்று வியாக்கியானி விளம்பினார்.

கிறி. அப்பொழுது கிறிஸ்தியான்: அப்படியானால் தற்கால பாக்கியங்களை விரும்பாமல், வருங்கால வாழ்வுகளை விரும்பிக் காத்திருப்பதுதான் புத்தி என்று தோன்றுகிறது என்றான்.

வியா. அது மெய்யான வார்த்தை; "ஏனெனில் காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்;"[b] அப்படியிருந்தபோதிலும் "இகலோகவாழ்வும், நமது மாம்சசுபாவமும் ஒன்றுக்கொன்று அயல் வீட்டு உறவினரைப்போல் இருப்பதாலும், பரலோகவாழ்வும் நமது மாம்சசுபாவமும் ஒன்றுக்கொன்று தூரதேசத்து அந்நிய

[a] லூக். 16. 25.
[b] 2 கொரி. 4. 18.



ரைப்போல் இருப்பதாலும், இந்த மண்வாழ்வை வேண்டாம் என்று வெறுத்துப்போடுவதும், விண்வாழ்வு வருமட்டும் காத்திருப்பதும் வெகு சங்கடமாய் இருக்கிறது என்று சொன்னார்.[a]

அக்கினிச் சுவரின் காட்சியும் அதின் பொருளும்.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டதாவது: வியாக்கியானி கிறிஸ்தியானுடைய கையைப் பிடித்துக்கொண்டு அக்கினி பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு சுவரினண்டை கொண்டுபோய்க் காட்டினார். ஒரு மனுஷன் அதின் பக்கத்தில் நின்றுகொண்டு அந்த அக்கினியை அவிக்கும்படியாக, குடம் குடமாய்த் தண்ணீர் ஊற்றினாலும் அது அவியாமலும், தணியாமலும், அதிக காந்தியாயும் சுடராயும் எரிந்துகொண்டிருந்தது.

கிறிஸ்தியான் அதைக் கண்டு இதின் அந்தரங்கம் என்ன? என்று கேட்டான்.

அதற்கு முனிவர் உரைக்கிறார்: இந்த அக்கினிதான் இருதயத்துக்குள் நடக்கிற கிருபையின் கிரியை; அதை அவித்துப்போடவும் தணித்துப்போடவும் தண்ணீர் வார்க்கிறவன் தான் சாத்தான். அவன் எவ்வளவாய்த் தண்ணீர் வார்த்தாலும் அது அதிக உக்கிரமாய் எரிந்து, மட்டுமிஞ்சி அனல் வீசுகிறதே; அதற்கும் ஒரு முகாந்தரம் உண்டு என்று, இன்னும் கொஞ்ச நேரத்தில் காண்பாய் என்று சொல்லி, அந்தச் சுவரின் மறு பக்கத்துக்கு அவனை அழைத்துக்கொண்டு போனார். அங்கே ஒரு மனுஷன் தலைமறைவாய் இருந்துகொண்டு, எண்ணெயைக் குடம்குடமாய் அந்த நெருப்பில் ஊற்றிக்கொண்டிருந்தான்.

எண்ணெய் வார்க்கும் காட்சியும் அதின் பொருளும்.

அப்போது கிறிஸ்தியான்: முனிவரே, இதின் பொருள் என்ன? என்று கேட்டான்.

அதற்கு வியாக்கியானி முனிவர்: எண்ணெயை ஊற்றிக்கொண்டிருக்கிறவர்தான் இயேசுகிறிஸ்து அப்பா! இருதயத்தில் ஆரம்பமான கிருபையின் கிரியை ஒழிந்துபோகாதபடி அவர் பிரயாசப்படுகிறார். அவர் அப்படி ஓயாமல் கிரியைசெய்கிறதினாலேதான், சாத்தான் அதை அவித்துவிடும்படி முயன்றாலும் அவியாமல் அவருடைய தாசரின் இருதயம் இன்னும் கிருபைநிறைந்ததாய் இருக்கிறது.[b] அவர் சுவரின்பிறகே நிற்ப

[a] ரோ. 7. 15-25.
[b] 2 கொரி. 12. 9.

தற்கும் ஒரு காரணம் உண்டு; அதாவது, இருதயத்தில் தேவகிருபையின் கிரியை எந்தவிதமாய்க் காக்கப்படுகிறது என்று மனுஷர் அறிய முயன்றாலும், அறியமாட்டார்கள் என்கிற சத்தியத்தை உனக்கு விளக்கும்படி செய்யத்தான் என்று சொன்னார்.

அப்பால் நான் என் சொப்பனத்தில், வியாக்கியானி கிறிஸ்தியான் கையைப் பிடித்துக்கொண்டு, இன்பமான தோட்டத்தில் கட்டப்பட்டிருந்த மகா விசேஷமும், உன்னதமுமான ஒரு கம்பீர அரமனையை[1] அவனுக்குக் காட்டக்கண்டேன். அதைப் பார்க்கப் பிறருடையம் கண்கள் வேண்டும்; அதைக் கண்டவுடன் கிறிஸ்தியானுக்கு உண்டான ஆனந்தத்தை என்ன சொல்வேன்! அவ்வரண்மனையின் மேல்மெத்தையில் பொற்சரிகை உடுப்புகளைத் தரித்த சிலர் உலாவிக்கொண்டிருக்கிறதையும் அவன் கண்டான்.

(அரமனைக் காட்சி.)

அப்போது கிறிஸ்தியான் இதற்குள்ளே நாம் போகலாமா? என்று கேட்டான். வியாக்கியானி அவனை வழிநடத்தி அந்த மாளிகையின் வாசல்மட்டும் கொண்டுபோனார். இதோ, அந்த வாசலருகே எண்ணிறந்த ஜனங்கள் ஆசையோடு உட்பிரவேசிக்கக் காத்திருந்தும், போகத் துணியாமல் நின்றுகொண்டிருந்தார்கள். கதவுக்குச் சற்று அப்பால் உட்பிரவேசிக்க மனமானவர்களின் நாமங்களை எழுதும்படியாக, மேசை போட்டுக் கடுதாசி வைத்துக்கொண்டு பேனாவும் கையுமாய் ஒருவர் உட்கார்ந்திருந்தார். மேலும் அந்த வாசலின் நிலையருகே, ஒருவரையும் உள்ளே விடாதபடிக்கும், துணிந்து போகிறவர்களைத் தங்களால் ஆனமட்டும் வதைத்து வேதனைப்படுத்தும்படிக்கும் அநேகர் ஆயுதம் தரித்துக்கொண்டு நிற்கிறதையும் கிறிஸ்தியான் கண்டான்; இது கிறிஸ்தியானுக்குக் கலக்கத்தையும் ஆச்சரியத்தையும் கொடுத்தது. வாசலண்டை போனவர்கள் ஒவ்வொருவராய் விலகி, மெதுவாய்ப் பின்வாங்கித் திரும்பினார்கள். ஆயுதந்தரித்துநின்ற சேவகரைக் கண்ட பலர் பயந்து, விலகிப் பின்வாங்கினாலும், கடைசியாகப் பலத்தையுள்ள ஒரு மனுஷன் பேர் எழுத உட்கார்ந்திருக்கிறவருடைய மேசையண்

---

[1] அரமனை. இது மோட்சத்தைக் குறிக்கிறது. அதின்மேலுள்ள பொதுவான திட்டம், அதினுள் பிரவேசிக்கப் போதுமானதல்ல. அதினுள் சேர ஆசைப்பட்டால் விசுவாசத்தில் நல்ல போராட்டம் பண்ண ஆசையாய் இருக்கவேண்டும். "ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு மோட்சம்" என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது.



டை போய் என் பேரை எழுதும் ஐயா என்று கேட்டதைக் கிறிஸ்தியான் கண்டான். அப்படியே அவன் பேர் எழுதப்பட்டது; உடனே அவன் தன் சிரசின்மேல் ஒரு தலைச்சீராவைத் தரித்து, பட்டயத்தையும் உருவிக்கொண்டு, ஆயுதபாணிகளாய் நின்ற சேவகரை நெருக்கி, விலக்கிக்கொண்டு துணிந்து உட்பிரவேசித்தான். அந்தச் சேவகரோ தங்கள் பலத்தோடெங்கூடி அவனைப் புறம்பாக்கும்படி முயன்று அவன்மேல் விழுந்தார்கள். அவனோ அணுவளவு அஞ்சாமலும், தைரியத்தை விடாமலும் தன் வாளை இருபுறமும் வீசி, எதிர்ப்பட்டவர்களைக் கண்டதுண்டமும் சின்னாபின்னமும் ஆக்கி[a] தனக்குத் தடையில்லாத வழியை உண்டாக்கிக்கொண்டு அரமனைக்குள் பிரவேசித்ததைக் கிறிஸ்தியான் கண்டான். அவன் உள்ளே சேரவே, அரமனைக்குள் இருந்தவர்களும், அதின் மேல்மெத்தையின்மேல் உலாவிக்கொண்டிருந்தவர்களும் ஒன்றாய்க் கூடி;

(ஒரு வீரனின் சாதுர்யக்காட்சி.)

வா, வா உள்ளே!
வா, வா அப்பா!
நித்திய கனம் சம்பாதித்தாய்

என்று பாடும் இன்பகீதம் எக்காளம்போல தொனித்தது. அவன் உள்ளே போனான்; அவர்கள் அணிந்திருந்ததுபோல பொற்சரிகையுள்ள ஒரு உடுப்பு இவனுக்கும் உடுத்தப்பட்டது. கிறிஸ்தியான் இதைக் கண்டவுடனே, புன்னகைகொண்டு இதின் பொருள் எனக்கு நிச்சயமாய்த் தெரியும் என்று நினைக்கிறேன் என்றான்.

அப்புறம் கிறிஸ்தியான் சற்று உள்ளே போவோம் வாரும் என்றான்; மூனிவரோ: அத்திரப்படாதே அப்பா, இன்னும் சிலவற்றை உனக்குக் காட்டுகிறேன்; அதற்கு அப்புறம் நீ போகலாம் என்று சொல்லி, அவன் கையைப் பிடித்துக்கொண்டு மிகவும் இருட்டாய் இருந்த ஒரு அறைக்குக் கூட்டிக்கொண்டுபோய்க் காட்டினார்; அங்கே ஒரு மனுஷன் இரும்புக்கூட்டுக்குள் இருக்கிறதைக் கிறிஸ்தியான் கண்டான்.

(இரும்புக்கூண்டின் காட்சி.)

அவனைப்பார்த்தால் துக்கசாகரத்தில் மூழ்கினவனைப்போல் காணப்பட்டது. தன் இரு கைகளைக் கட்டிக்கொண்டு தலை

---

[a] மத். 11. 12. அப். 14. 22.

கவிழ்ந்து, கீழே பார்க்கிறவனும் இருந்தான். அவன் குலை வெடித்துப் போகிறாப்போலவே பெருமூச்சுவிட்டான், (அவனை மனிதன் என்று பொதுவாய்ச் சொல்லிக்கொண்டுபோகாமல், இருப்புக்கூட்டுக்குள் இருக்கிறதால், கைதி என்ற பேரால் அழைத்துக்கொள்ளுவோம்.) இதைக் கண்ட கிறிஸ்தியான்: ஐயா இதின் கருத்து விளங்குகிறதில்லையே என்றான்; அதற்கு முனிவர்: கைதிபோல் இருக்கிற இந்த மனுஷனோடே நீயே பேசிக்கொள் என்றார்.

அப்பொழுது கிறிஸ்தியான்: அவன் முகமட்டும் குனிந்துகொண்டு, நீர் யார் ஐயா, என்று கேட்டான். அதற்கு அந்தக் கைதி சொல்லுகிறான்:

முன் இருந்த சீரா எல்லாம்
பின் இழந்த பாவி அப்பா!

கிறி. உம்முடைய முன்சீர் என்ன?

கைதி. ஒருகாலத்தில் நான் என் மதிப்பிலும் பிறர் மதிப்பிலும் என்னைப்போல கிறிஸ்தவன் இல்லை என்று நினைத்ததும் உண்டு, பெயரெடுத்ததும் உண்டு.[a] மோட்சலோகத்தில் எனக்கு இடம் இல்லையானால் வேறு யாருக்குத்தான் அங்கே இடம் அகப்படும் என்று முன்னொரு காலத்தில் எண்ணிக்கொண்டதும் உண்டு; அங்கேயே சேர்வேன் என்று சொன்னதும் உண்டு.

கிறி. உம்முடைய பின்சீர் என்ன?

கைதி. பின்சீரா? இந்த இருப்புக்கூடுதான் என் வீடு, வியாகுலமே என் பானம், பெருமூச்சுவிடுவதே என் வேலை, அவநம்பிக்கையே என் போசனம். இதில் இருந்து வெளியேற என்றால் இயலாது, ஐயோ, இயலாதவனாய்க் கிடக்கிறேனே!

கிறி. உம்முடைய முன்சீர் போய் இந்தச் சங்கடங்களுக்குள் எப்படி அகப்பட்டீர்?

கைதி. விழிப்பையும் தெளிந்த புத்தியையும் கைவிட்டேன்; என் மனஇச்சையின் கடிவாளத்தைத் தளர்த்திவிட்டேன்; லோகதீபமாகிய தேவவசனத்துக்கும், அவருடைய கிருபைக்கும் விரோதமாய்ப் பாவஞ்செய்தேன்; ஆவியானவரைத் துக்கப்படுத்தினதினாலே அவர் பறந்துபோய்விட்டார்; பேயை இச்சகம்பண்ணிக் கூப்பிட்டேன், அவன் உடனே வந்து என்னோடு வாசம்பண்ணுகிறான்; நான் தேவனைக்

[a] லூக். 8. 13.



கோபம் மூட்டினேன், அவரும் என்னை விட்டு விலகிவிட்டார்; நான் ஒருக்காலும் மனந்திரும்பாதபடிக்கு என் இருதயத்தைக் கடினப்படுத்திக்கொண்டு இந்தக் கெதி ஆனேன் என்றான்.

அப்பொழுது கிறிஸ்தியான் முனிவரை நோக்கி: இப்படிப்பட்ட மனுஷர் தப்பிப் பிழைக்கத்தக்கதான நம்பிக்கை இல்லையோ என்று மெதுவாய்க் கேட்டான். அதற்கு வியாக்கியானி: அதைப்பற்றியும் அவனையே கேள் என்றார்.

கிறி. அதன்பின் கிறிஸ்தியான் அவனைப்பார்த்து: இந்த இருப்புக்கூடுதானே உமது முடிவு; நீர் இதை விட்டு வெளியேற வேறு வகை இல்லையோ என்று கேட்டான்.

கைதி. இல்லவே இல்லை; இல்லவே இல்லை.

கிறி. ஏன் அப்படிச் சொல்லுகிறாய்? ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரன் மிகவும் தயவுள்ளவர் அல்லவா?

கைதி. என் ஆகாமியத்தின் பக்குக்கு நானே அவரை மறுபடியும் சிலுவையில் அறைந்தேன்.[a] அவரையே புறக்கணித்தேன்.[b] அவருடைய நீதியை அவமதித்தேன், அவருடைய இரத்தத்தை அசுத்தம் என்று எண்ணினேன், கிருபையின் ஆவியை நிந்தித்தேன்;[c] ஆனதால் அவருடைய வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றுக்கும் என்னை நானே புறம்பாக்கிக்கொண்டேன்; இனி தேவகுரோதமாகிய என்னை விழுங்கிப் பட்சிக்கும் ஒரு நியாயத்தீர்ப்பையும், கோபாக்கினியையும் பற்றிய பயங்கரங்களும், கலக்கங்களும், அதிர்ச்சிகளுமே அல்லாமல் வேறொன்றும் எனக்கு இல்லை என்று அறிகிறேன்.

கிறி. எதின்நிமித்தம் இந்தக் கஷ்டங்களையெல்லாம் உனக்கு வருவித்துக்கொண்டாய்?

கைதி. என் இச்சைகள், சிற்றின்பங்கள், லோகஆதாயங்கள் இவைகளின் நிமித்தமே இந்தக் கஷ்டங்கள் எனக்கு வந்தன; அவைகளை நான் அநுபவித்த காலங்களில், அவை அனைத்தும் எனக்குப் பேரானந்தவாழ்வுகளைக் கொடுக்கப்போகிறவைகளைப்போல காணப்பட்டன. இப்பொழுது அவைகள் ஒவ்வொன்றும் சர்ப்பங்களைப்போல என்னைக் கடித்து, தேள்களைப்போல என்னைக் கொட்டி, புழுக்களைப்போல என்னை அரிக்கின்றன.

கிறி. நீ இப்பொழுது மனந்திரும்பிக் குணப்படலாகாதா?

[a] எபி. 6. 6. [b] லூக். 19. 14. [c] எபி. 10. 28, 29.

கைதி. அப்படிப்பட்ட குணப்படுதலுக்கு தேவன் இடம் பண்ணவே இல்லை; இந்த நிலைமையில் இருக்கிற நான் விசுவாசித்து ஒன்றைப் பிரயத்தனம் செய்யும்படி வழி ஒன்றையும் அவருடைய வசனம் எனக்குக் காட்டுகிறதில்லை; அவரே என்னை இந்த இருப்புக்கூட்டுக்குள் அடைத்தார். இவ்வுலகத்திலுள்ள மனுஷர் எல்லாரும் கூடி இதிலிருந்து என்னை விடுதலையாக்க முயன்றாலும் பலிக்கமாட்டாது; நித்தியமே! ஐயோ நித்தியமே! ஐயையோ நித்தியமே என் வேதனை. அந்த நித்திய வேதனையை நான் என்னமாய்த்தான் சகிப்பேன்! ஐயோ! எனக்கு ஐயோ என்று அலறினான்.

வியா. இந்த மனுஷன் அனுபவிக்கிற அவதிகள் உன்னை என்றென்றைக்கும் எச்சரிக்கும்படியாக, இதை எப்போதும் ஞாபகம்பண்ணிக்கொள் என்று வியாக்கியானி கிறிஸ்தியானுக்குச் சொன்னார்.

கிறி. அப்படியே ஆகட்டும் ஐயா! மெய்யாகவே இது மா பயங்கரமாய் இருக்கிறது; இவனுடைய நிர்ப்பந்தத்துக்குக் காரணமானவைகளை நானும் செய்து, இப்படி வேதனையை அனுபவியாதபடிக்கு விழிப்பும், தெளிந்த புத்தியுமாய் நடந்துகொள்ளும்படி ஆண்டவரை வேண்டுகிறேன்; ஐயா முனிவரே! நான் என் பயணத்தை நடத்த இன்னும் நேரமாகவில்லையோ? நேரம் ஆயிற்றுப்போல் இருக்கிறதே?

வியா. நான் இன்னும் ஒரு காரியத்தைக் காண்பிக்குமட்டும் புறப்படவேண்டாம்; அதின்பின்பு போ.

சொப்பனங்கண்டு விழித்தவன் காட்சி.

இப்படிச் சொல்லிக்கொண்டு வியாக்கியானி கிறிஸ்தியானுடைய கையைப் பிடித்து அவனை வேறொரு அறைக்கு அழைத்துப்போகிறதை நான் என் சொப்பனத்திலே கண்டேன். அங்கே ஒரு மனுஷன் அப்போதுதான் தூங்கி எழுந்து வஸ்திரங்களைக் கட்டிக்கொண்டிருந்தான். அணிகலை உடுத்தினபோது அவன் கால் கைகளெல்லாம் ஆட்டங்கொடுத்தது. ஐயா! இவன் இவ்வளவு நடுக்கங்கொள்வதற்குக் காரணம் என்னவென்று கிறிஸ்தியான் வியாக்கியானியைக் கேட்டான். அப்போது முனிவர் தூங்கி எழுந்து வஸ்திரங்கட்டினவனைப் பார்த்து: நீ நடுங்குகிற காரணத்தை நீயே இவனுக்குச் சொல்லு என்று உத்தரவுகொடுத்தார். உடனே அவன் சொல்லத்தொடங்குகிறான்:



அவன் கண்ட சொப்பனம்.

இன்றிரவு நான் அயர்ந்து நித்திரைசெய்கையில், அதிர்ந்து கலங்கும்படியான ஒரு சொப்பனங்கண்டேன்; இதோ வானங்கள் கார்மேகங்களால் மூடப்பட்டன, இடிகள் முழங்கின, மின்னல்கள் பிரகாசித்தன, அதுகண்டு நான் கலங்கி வியாகுலப்பட்டேன்; பின்னும் நான் என் சொப்பனத்தில் மேகங்கள் வேகமாய் விலகி ஓடினதையும், அவைகளின்மேல் எக்காளசத்தம் தொனிப்பதையும் கண்டேன். அந்த மேகத்தின்மேல் ஒருவர் உட்கார்ந்திருக்கவும், அவரைச் சுற்றிலும் ஆயிரம் பதினாயிரமான வானசேனைகள் சூழ்ந்துநிற்கிறதையும் கண்டேன். அவர்கள் எல்லாரும் அக்கினிச் சுடரைப்போல் இருந்தார்கள், வானங்களோ எரிகிற அக்கினிமயமாய்ப் பிரகாசிக்கக்கண்டேன். அப்புறம் நான்: மரித்தோரே எழும்புங்கள், நியாயந்தீர்க்கப்பட வாருங்கள் என்று இடிமுழக்கம்போல் தொனிக்கிற ஒரு சத்தத்தையும் கேட்டேன். அச்சத்தம் உண்டானவுடனே மலைகள் பிளந்தன, கல்லறைகள் திறந்தன, அதிலுள் அடக்கம்பண்ணப்பட்டவர்கள் எழுந்து புறப்பட்டார்கள். அவர்களில் சிலர் முகமலர்ச்சியாய் இருந்து தலைநிமிர்ந்து நின்றார்கள்; மற்றவர்கள் எங்கே ஓடி ஒளிக்கலாம் என்று திகைமுட்டுகிறவர்களைப்போலக் காணப்பட்டார்கள். அப்பால் மேகவாகனத்தில் வீற்றிருந்தவர், புஸ்தகத்தைத் திறந்து, சர்வலோகத்தையும் தமது சமூகத்துக்கு முன்வரும்படி கட்டளையிட்டார். அக்கினி அவர் முகத்துக்கு முன்பாக வீசிக்கொண்டிருந்ததால், நியாயாதிபதிக்கும் குற்றவாளிக்கும் எவ்வளவு தூரம் இருக்குமோ, அவ்வளவு தூரத்தில் சர்வஜனங்களும் நின்றார்கள்.

மேகத்தின் வீற்றிருந்தவர் தம்மைச் சுற்றிலும் நின்றவர்களை நோக்கி: "களைகளையும், பதரையும், தாளடிகளையும், ஒன்றாகச் சேகரித்து,[a] அக்கினிக் கடலில் தள்ளுங்கள்" என்று முழக்கமிட்டுச் சொன்னதையும் நான் கண்டேன்.[b] அச்சத்தம் உண்டானவுடனே, நான் நின்ற இடத்திற்குச் சமீபமாக அந்தப் பாதாளம் விரிவாகத் திறக்கப்பட்டது; அங்கிருந்து புகையும் நெருப்புத்தழலும் குமுறி எழும்பின. அப்புறம் மேகவாகனர்

---

a 1 கொரி. 15. அதி. 1 தெச. 4. 16. யூதா. 15. வச. யோவா. 5. 28, 29. 2 தெச. 1. 8—10. வெளி. 20. 11—14. ஏசா. 26. 21. மீகா. 7. 16, 17. சங். 5. 4. மல்கி. 3. 2, 3. தானி. 7. 9, 10.
b மத். 3. 12; 13. 30; 24. 30. மல்கி. 4. 1.

தமது ஆட்களைப் பார்த்து: "கோதுமையை என் களஞ்சியத்திலே சேருங்கள்" என்றார்.[a] அவர்கள் உடனே அங்கும் இங்கும் பறந்துபோய், அநேகரைப் பிடித்து மேகத்துக்குள் கொண்டு போனார்கள்; ஆனால் நான் கொண்டுபோகப்படவில்லை.[b] நான் எங்கேயாவது ஓடி ஒளித்துக்கொள்ளலாம் என்று பிரயாசப்பட்டும், காரியம் வாய்க்கவில்லை. ஏனெனில் மேகத்தில் வீற்றிருந்தவருடைய கண்கள், என்மேல்தான் நோக்கமாய் இருந்தது; நான் செய்த பாவங்கள் எல்லாம் என் ஞாபகத்தில் வந்தன; என் மனச்சாட்சி என்னை வேதனைப்படுத்தி குத்தினதுக்கு ஒரு அளவில்லை.[c] இந்தப் பயங்கரமான சொப்பனத்தைக் கண்டு இப்போதான் விழித்தேன் என்றான்.

அப்போது கிறிஸ்தியான் இந்தக் கனாக்கண்டாலும் இப்படியும் திகிலும் கலக்கம் அடைவார் உண்டோ? என்று கேட்டான். அதற்கு அவன்: கலங்காமல் என்ன? நியாயத்தீர்ப்புநாள் வந்து விட்டதென்றும், நான் அதற்கு இன்னும் ஆயத்தமாகவில்லை என்றும் என் மனதில் பட்டது; மேகநாதர், அநேகரைத் தெரிந்தெடுத்து மேகத்துக்குள் கொண்டுபோனதும், என்னைத் தனியே விட்டுவிட்டுப் போனார்கள் என்கிற விஷயமே என் மனதில் அதிக பயங்கரத்தைக் கொடுத்தது. அதோடு நான் நின்ற இடத்துக்குச் சமீபமாகவே நரகபாதாளம் தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்ததும், என் மனச்சாட்சியின் வேதனையும், நியாயாதிபதி பார்த்த கண் தட்டிவிழியாமல் என்னையே நோக்கினதும் எல்லாம் கூடி என்னை இவ்விதமாய் நடுங்கச் செய்கிறது என்றான்.

இதன்பின்பு வியாக்கியானி: அப்பா கிறிஸ்தியானே! நீ கண்டவைகளையெல்லாம் உணர்ந்துகொண்டாயா என்று கேட்டார். ஆம் ஐயா உணர்ந்துகொண்டேன், உணருகிறேன்; இந்தக் காட்சிகள் எனக்குள்ளே நடுக்கத்தையும் நம்பிக்கையையும் தருகின்றன என்று சொன்னான்.

அப்பொழுது முனிவர்: நீ கண்ட காட்சிகளெல்லாம் உன் வழியில் நீ ஜாக்கிரதையாய் முன்னுக்குச் செல்லும்படியாக உன்னை நடத்தும் தாற்றுக்கோல்போல் இருப்பதாக என்று சொல்லிமுடித்தார். அப்பால் கிறிஸ்தியான் தன் இடுப்பின் கச்சையை இறுக்கிக் கட்டிக்கொண்டு புறப்படத் தயாரானான். கடைசியாக முனிவர்: நல்ல கிறிஸ்தியானே! தேற்றுகிறவர் உன்

[a] லூக். 3. 17. [b] 1 தெச. 4. 16, 17. [c] ரோ. 2. 14, 15.



னோடு எப்போதும் இருந்து, நீ சீயோனுக்குப் போகும் பாதையில் உன்னை வழிநடத்துவாராக என்று வாழ்த்தி வழிவிட்டனுப்பினார். அவன் அந்த வாழ்த்துதலை தன் சிரசின்மேல் ஏற்றுக்கொண்டு:

களிக்கும்காட்சி இங்குகண்டேன்;
கலங்கும்காட்சியும் இங்குகண்டேன்;
பாடும்காட்சி இங்குகண்டேன்;
கூடும்காட்சியும் இங்குகண்டேன்;
சுடரொளிக்காட்சி இங்குகண்டேன்;
காரிருள்காட்சியும் இங்குகண்டேன்;
மோட்சக்காட்சி இங்குகண்டேன்;
நரகக்காட்சியும் இங்குகண்டேன்;
இந்தக்காட்சிகள் அனைத்துமே
என்னை ஸ்திரப்படுத்துமே.

இன்பக்காட்சி இங்குகண்டேன்;
துன்பக்காட்சியும் இங்குகண்டேன்;
உயரும்காட்சி இங்குகண்டேன்;
ஒளிக்கும்காட்சியும் இங்குகண்டேன்;
தறிக்கும்காட்சி இங்குகண்டேன்;
புலம்பும்காட்சியும் இங்குகண்டேன்;
எல்லாக்காட்சியும் ஈவாக
என்னை உணர்த்தின நன்றாக!
அனைத்தும் விளக்கின ஐயாவே!
அனந்தவந்தனம் முனிவரே!

என்று சொல்லிப் பாடிக்கொண்டே வழிநடந்துபோனான்.

கிறிஸ்தியான் நடந்துபோன பெரும்பாதையானது, இருபுறம் சுவர் கட்டப்பட்டிருந்தன. அந்தச் சுவருக்கு ஈடேற்றம் என்று பேர் வழங்கப்பட்டது.[a] இதின் வழியாகவே கிறிஸ்தியான் ஓடிப்போனான்; ஆனாலும் அவன் முதுகின்மேல் இருந்த பாரத்தினாலே அவன் பட்ட வருத்தம் அதிகமாய் இருந்ததென்று நான் என் சொப்பனத்திலே கண்டேன்.

## பிரயாணியின் சிலுவை தரிசனை.

கிறிஸ்தியான் மிகுந்த வருத்தத்தோடே ஓடிக் கடைசியாகத் தனக்குமுன் இருந்த ஒரு மேட்டின் அடிவாரம் சேர்ந்தான். அதின் உச்சியில் ஒரு சிலுவையும், அதின் அருகே ஒரு சமாதியும் இருந்தது. கிறிஸ்தியான் மெதுவாய் அந்த மேட்டேறி சிலுவையண்டை வந்தான். வரவே, அவன் முதுகில் இருந்த பாரத்

[a] ஏசா. 26. 1.

சுமையின் கயிறுகள் தெறிப்புண்டு விழுந்து பந்துபோல் அந்தச் சமாதிமட்டும் உருண்டுருண்டு அதனுள் விழுந்து அப்புறம் காணாமலே போயிற்று[1] என்று நான் என் சொப்பனத்தில் கண்டேன்.



அதுமுதல் கிறிஸ்தியான் மலர்ந்த முகமும், மகிழ்ந்த மனதுமுடையவனாய் நின்றுகொண்டு, "அவர் தமது துக்கத்தினால் எனக்கு ஆறுதலையும், தமது சாவினால் ஜீவனையும் தந்தார்" என்று ஆனந்த மனதோடு சொன்னான்.

பாவச்சுமையின் அகற்றம்.

1 உத்தம மனஸ்தாபமும், இயேசுவின்மேல் உண்மையுள்ள விசுவாசமும் உடைய ஒவ்வொருவனும், சிலுவையின் வழியில் இருக்கிறான்; ஆனால் அதின்பின், கொஞ்சக்காலத்துக்குப் பாவபாரம் மனதை வருத்தும்; அதோடே அற்ப சந்தோஷமும், சொற்ப சமாதானமும் இருக்கும். அவன் இயேசுவின் முழுமையுள்ள இரட்சிப்பைப் பூரணமாயும் தெளிவாயும் அறியும்பொழுது, பாரம் நீக்கப்படுகிறது. தனக்குப் பதிலாகக் கிறிஸ்து மரித்தார் என்று காண்கிறான். பாவமானது கிறிஸ்துவின் முதுகில் இருந்து எறியப்பட்டு, கிறிஸ்துவோடே அவருடைய கல்லறைக்குள் அடக்கம்பண்ணப்பட்டதுபோலவும், இனி ஒருகாலத்திலும் அவனுக்கு விரோதமாய் எழும்பி ஆக்கினைசெய்யமாட்டாதென்பதுபோலவும் உணருகிறான்.





அப்புறம் அவன் தனக்குண்டான பெரும்பாக்கியத்தை உணர்ந்து பிரமித்து, அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு அதிசயப்பட்டான். சிலுவையைக் கிட்டவும், கயிறுகள் தெறிக்கவும், சுமை உருளவும், பாரம் இறங்கவும் நேரிட்டது தனக்கே விளங்காத ஆச்சரியமாய் இருந்தது. ஆச்சரியத்தால் அவனுடைய கண்களாகிய சுனையிலிருந்து கண்ணீர் பெருகி



கன்னங்களின் வழியாய் வடிந்தது.[2] அதை அவன் துடைக்கவும் இல்லை, கவனிக்கவும் இல்லை, அவ்வளவு பிரமிப்பு அவனுக்கு உண்டாயிற்று. இப்படி அவன் அழுதுகொண்டும், சிந்தனையுச்

2 சகரி. 12. 10.

குமாய் இருக்கையில், மூன்று ஒளியுள்ள ரூபிகள்[1a] அவனண்டை வந்து: "உனக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று சொல்லி வாழ்த்தினார்கள். அவர்களில் ஒருவர்: "உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன" என்றார். மற்றவர்: அவனுடைய பழைய வஸ்திரங்களைக் கழற்றி புது வஸ்திரங்களை அவனுக்குத் தரிப்பித்தார்.[b] மூன்றாவதானவர்: அவனுடைய நெற்றியில் அடையாளம் போட்டு, முத்திரை பதிப்பிக்கப்பட்ட ஒரு சுருளையும்[2c] அவன் கையில் கொடுத்து, கிறிஸ்தியானே! நீ ஓடும் மார்க்கத்தில் இதைப் பார்த்துக்கொண்டே ஓடு, பரலோகத்தின் வாசலில் சேரும்போது இதைக் காட்டு என்று சொல்லிவிட்டு, காணாமல் மறைந்துபோனதை என் சொப்பனத்திலே கண்டேன். அப்பொழுது கிறிஸ்தியான் மும்முறை குதித்து, ஆனந்த பரவசங்கொண்டு:

7's.

பாவபாரஞ் சுமந்தேன்
இதுவரையும் வந்தேன்,
இங்கே வருமட்டுமே
பாரம் நீங்கவில்லையே.

இங்கே வந்த நிமிஷம்
என் பாவபாரம் காணேம்,
இது என்ன இடமோ!
பாரம் நீங்கிப்போயிற்றே.

இங்கென்பாரம் நீங்கவும்
இங்கென் கட்டு விடவும்,
என் வாழ்வு துவக்கிற்றே
இது என்ன இடமோ!

சிலுவையே நீ வாழ்க!
சமாதியே நீ வாழ்க!
சிலுவையிலே மாண்ட
ஏசுவே வாழ்க, வாழ்க

என்று பாடிக்கொண்டே வழிநடந்துபோனான்.

---

1 மனந்திரும்பின விசுவாசிக்குப் பிதாவாகிய தேவன் பாவங்களை மன்னிக்கிறார். குமாரன் தமது மாசில்லா அங்கியாகிய நீதி என்னும் உடுப்பால் உடுத்துகிறார். பரிசுத்தஆவியானவர் இருதயத்தைச் சுத்திகரித்து அதின் மாறுதல் மற்றவர்களுக்கு விளங்கும்படி செய்கிறார்.

2 முத்திரையிடப்பட்ட சுருள் என்பது, பாவமன்னிப்பின் நிச்சயத்தைக் குறிக்கிறது. "ஆவியானவர்தாமே நம்முடனேகூட சாட்சி கொடுக்கிறார்." ரோ. 8. 16.

a மாற். 2. 5. b சகரி. 3. 4. c எபே. 1. 13.



அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டதாவது: கிறிஸ்தியான் சிலுவைகண்ட மலையைக் கடந்து இறங்கி அதின் அடிவாரத்தில் சேரவே, சற்று அப்பால் மூன்றுபேர் படுத்து நித்திரைசெய்கிறதைக் கண்டான். அம்மூவருடைய கணுக்காலிலும் சங்கிலிகள் மாட்டப்பட்டிருந்தன. அவர்களில் ஒருவனுக்குப் பேதை என்றும், மற்றவனுக்குச் சோம்பன் என்றும், இன்னொருவனுக்குத் துணிகரன் என்றும் பேர்.[1]

பேதை, சோம்பன், துணிகரன்.

கிறிஸ்தியான் அவர்களண்டை போய் தட்டி எழுப்பி, தம்பிமாரே! இப்படியும் உறங்குவார் உண்டா? கடல் கொந்தளித்து காற்று பலமாய் அடிக்கிறபோது பாய்மரத்தின் உச்சியிலே படுத்துத் தூங்குகிறவர்களைப்போலல்லோ உங்கள் காரியம் இருக்கிறது?[a] அடியற்ற பாதாளமாகிய சாவின்கடல் உங்களுக்குக் கீழ் இருக்கிறது தெரியாதா? விழித்தெழுந்து வாருங்கள், ஏதேதோ என்று ஆலோசியாதேயுங்கள்; உங்கள் விலங்குகளை முறிக்கும்படி நான் உதவிசெய்வேன், எவர்களை விழுங்கலாமோ என்று வகைதேடித்திரிகிற சிங்கம் உங்களைக் கண்டால், நீங்கள் தப்பிப்பிழைக்க வகையில்லாமல் அதின் பல்லுக்கு இரை ஆவீர்கள் என்று சொன்னான்.[b] அதைக் கேட்ட அவர்கள் அவன் முகத்தை குடாகப் பார்த்து, அவரவர் பின்வருகிறபடி அவனுக்கு உத்தரவுசொல்லத் தொடங்குகிறார்கள்.

பேதை சொல்லுகிறான்: மோசம், மோசம் என்று மூச்சுவிடாமல் கத்துகிறாயே, எங்கடா மோசம்? என்றான். சோம்பன்: அப்பா, அப்பா அலட்டாதே; இன்னும் கொஞ்சம் தூக்கந்தான் என்றான். துணிகரன்: ஒவ்வொரு தொட்டியும் தன்

தேவகிருபையில்லாமல் மனுஷ பிரயத்தனம் விருதா.

---

1 மெய்க்கிறிஸ்தவன் தன் உயிருக்குப்பயந்துமாத்திரம் கவலைப்படுகிறவனாய் இராமல், இரட்சிப்பைப்பற்றி நாட்டமும் கவலையும் இல்லாத மற்றவர்களையும் உணர்த்துகிறார்கள். பேதை என்பது அறிவில்லாதவர்களையும், சோம்பன் என்பது அசதியினாலே மோட்ச பாக்கியங்களை இழந்துபோகிறவர்களையும், துணிகரன் என்பது இரட்சிப்பின் விஷயத்தில் தங்கள் காரியமெல்லாம் சரியாய் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, தங்களை எச்சரிக்கிறவர்களை, நீ உன் காரியத்தைமாத்திரம் பார்த்துக்கொள் என்று சொல்லுகிறவர்களையும் குறிக்கிறது.

a நீதி. 23. 34. b 1 பேது. 5. 8.

காலில் நிற்கவேண்டியது அப்பா, உன் பாட்டைப்பார் என்றான். இப்படி மூவரும் அவரவர் சொல்லவேண்டியதைச் சொல்லி மறுபடியும் படுத்துக்கொண்டார்கள்; கிறிஸ்தியான் தன் வழியே போனான்.

அவன் போகப்போக, தூங்கினவர்களை எழுப்பி அவர்களுக்கு வரும் அபாயத்தை உணர்த்தி, விலங்குகளையும் திறக்கும்படி உதவிசெய்வேன் என்று புத்திசொல்லும் சிநேகிதன் பேச்சை அகற்றிப்போட்டார்களே! இவர்கள் எப்படிப்பட்ட சுபாவமுடையவர்களோ என்று பலவாறாய் விசனப்பட்டுக்கொண்டே போனான். போகவே, இரண்டுபேர் அந்தப் பாதையின் இடதுபக்கத்துச் சுவரைத் தாண்டிவிழுந்து, விரைவாய் வந்து கிறிஸ்தியானோடு கூடினார்கள். அவர்களில் ஒருவனுக்கு வேஷக்காரன் என்றும், மற்றவனுக்கு மாயக்காரன்[1] என்றும் பேர்.

வேஷக்காரனும் மாயக்காரனும்.

கிறி. துரைமக்களே! நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்? என்று கிறிஸ்தியான் அவர்களைக் கேட்டான்.

வேஷ-மாய. நாங்களா? நாங்கள் வீண்மோடி தேசத்தில் பிறந்து, விருதுபெறும்படி சீயோன் மலைக்குப் போகிறோம் என்று வேஷக்காரனும் மாயக்காரனும் சொன்னார்கள்.

கிறி. அப்படியா? நீங்கள் இந்த வழியின் துவக்கத்தில் இருக்கிற திட்டிவாசலுக்கு வராமலேயே ஏதேன்? "ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய் பிரவேசியாமல் வேறுவழியாய் ஏறுகிறவன் திருடனும் கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்"[a] என்று விளம்பரஞ்செய்யப்பட்டது உங்களுக்குத் தெரியாதோ?

வேஷ-மாய. அதற்கு வேஷக்காரன்-மாயக்காரன்: வாசல்மட்டும்போய் அப்புறம் வழியில் சேருவது, மகா சுற்றுவழி என்று எங்கள் தேசத்தார் எண்ணிக்கொண்டு இந்தப்படியே சீயோனுக்குப் போகிற பாதையில் சேரத் தீர்மானித்திருக்கிறார்

[1] வேஷக்காரன், மாயக்காரன் என்பது, தாங்கள் நினைத்த காரியம் கைகூடும்படியான கோலமாய் கிறிஸ்துமார்க்கத்துக்குட்படுகிறவர்களைக் குறிக்கிறது. வேஷக்காரன் என்பது, தேவபக்திக்கடுத்த வெளியரங்க ஆசாரங்களைமாத்திரம் கைக்கொண்டு தன்னையே வஞ்சித்துக்கொள்ளுகிறவனைக் குறிக்கிறது. மாயக்காரன் என்பது, அதே வகையாய் மற்றவர்களை வஞ்சிக்கிறவனைக் குறிக்கிறது.

[a] யோவா. 10. 1.



கள்; ஆதிமுதலேதான் நாங்கள் இப்படிச் சுவர்தாண்டி விழுந்து வருகிறோம்.

கிறி. வட்டம் சுற்றி வழியேறினாலும், சுவர் ஏறிவிழுந்து வழியேறினாலும் வழிவழிதான்; ஆனாலும் இப்படிச் சுவரேறி வழியில் சேருகிறது கூடாது என்று நாம் நாடிப்போகும் தேசத்து ராஜா விளம்பரம் அடித்திருக்க, அதை மீறினால் அது முன்துணிகரமும், கீழ்ப்படியாமையுமாய் இருக்கும் அல்லவா? என்று சொன்னான்.

வேஷ-மாய. அதற்கு அவர்கள்: அந்தக் குப்பையை நீ ஏன் உன் தலைமேல் வாரிப் போட்டுக்கொள்ளுகிறாய்? நாங்கள் வழக்கப்படிதானே செய்திருக்கிறோம். இப்படிச் செய்வதே ஆயிரம் வருஷமாய் எங்கள் தேசத்து வழக்கம் என்பதை ருசுப்படுத்த உனக்குப் பதினாயிரம் சாட்சிவேண்டுமானாலும் இதோ தயாராய் இருக்கிறது.

கிறி. உங்கள் வழக்கம் எல்லாம் கோர்ட்டார் விசாரணையில் நிலைநிற்குமா?

வேஷ-மாய. பாரபட்சம் இல்லாத ஒரு நியாயாதிபதிமாத்திரம் இந்த வழக்கைத் தீர்க்கட்டும், அப்போ நியாயம் விளங்கும். ஆயிரம் வருஷத்து வழக்கமானபடியால், சட்டம் அதற்கு விரோதமானாலும், காலதோஷத்தினாலே ரத்தாய்ப்போயிற்று என்று மூடனும் சொல்லுவானே; அது போகட்டும், எந்த மார்க்கமாய் வந்தாலும் என்ன? சரியான வழியிலேதானே இருக்கிறோம்; வழியில் வந்தது வந்தாயிற்று. இனி என்ன? திட்டிவாசலில் இருந்து இந்த வழியில் வருகிறாயாக்கும்; நாங்கள் சுவர் ஏறி விழுந்து வந்தோமாக்கும்; இருவரும் கூடிப்போகிற வழி ஒன்றுதானே; எங்கள் காரியத்திலும் உன்னுடைய காரியம் எவ்விதத்தில் மேன்மை ஆயிற்று? அதைச் சொல்லு.

கிறி. நான் என் எஜமானுடைய சட்டப்படி இந்த வழியில் நடக்கிறேன், நீங்களோ உங்கள் மனங்கொண்டபிரகாரம் இதில் வந்து கூடினீர்கள். இந்த வழியின் ஆண்டவர், உங்களைப்போல் இவ்வழியில் வருகிறவர்களைத் திருடர் என்றும், கொள்ளைக்காரர் என்றும் தீர்மானித்திருக்கிறார்; ஆதலால் கடைசியிலே நீங்கள் உண்மையுள்ளவர்களாக ஒப்புக்கொள்ளப்படுவீர்களோ என்பதைப்பற்றிச் சந்தேகப்படுகிறேன். நீங்கள் அவர் சொல்லும் புத்தியின்படி அல்ல, உங்கள் சுயபுத்தியின்படி வருகிறவர்கள் ஆனதால், அவருடைய இரக்கத்தைப் பெறாமல் உங்கள்மட்டில் போகிறவர்களாய்த்தான் இருப்பீர்கள் என்று சொன்னான்.

இதை அவர்கள் கேட்டு: என் அப்பா மண்டைநோக, தொண்டைகாயப் பேசவேண்டும்? உன் பாட்டை நீ பார், எங்கள் பாட்டை நாங்கள் பார்ப்போம்; கட்டளைகளையும், ஆசாரங்களையும்பற்றி நாங்கள் அசிரத்தையுள்ளவர்கள் அல்ல; உன்னைப்போல நாங்களும் எங்கள் மனச்சாட்சிக்கு ஏற்றபடி நடந்துவருகிறோம் என்பதற்குச் சந்தேகம் இல்லை என்றுமாத்திரஞ் சொல்லிவிட்டு, அவரவர் தன்தன் வழியிலே நடந்துபோகையில், அவ்விரண்டுபேரும் சொல்லுகிறார்கள். இல்லாத ஞானமெல்லாம் பேசுகிறாய், உனக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசம்? உன் நிருவாணத்தை மூடிக்கொள்ளும்படி யாரோ ஒருவன் இந்த அங்கியைக் கொடுத்திருக்கிறான்; அந்த அங்கி ஒன்று தவிர[1] ஆளுக்கு அப்புறம் உண்டோ காட்டு என்றார்கள்.

கிறிஸ்தியானுக்குள்ள அடையாளங்கள்.

கிறி. நீங்கள் வாசல்வழியாய் வராதவர்கள் ஆனதால் கட்டளைகளாலும் ஆசாரங்களாலும் இரட்சிக்கப்படமாட்டீர்கள்.[2] அது போகட்டும்; என்மேல் இருக்கும் அங்கியோ நான் போகிற அரமனையின் அதிபதியினால் நீங்கள் சொல்லுகிறபடியே என் நிருவாணத்தை நான் மூடிக்கொள்ளவே எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்குக் கந்தையல்லாமல் வேறொன்றும் இல்லாததால், இதை நான், அவர் என்மேல் காண்பித்த அன்புக்கு அத்தாட்சி என்றே எண்ணிக்கொள்ளுகிறேன். என் கந்தைகளில் இருந்து நான் உரிந்துகொள்ளப்பட்ட நாளில் எனக்குக் கிடைத்த இந்த அங்கியை நான் போட்டுக்கொண்டிருக்கிறதால், நான் வாசலில் சேர்ந்தவுடனே பட்டணத்தின் அதிபதி என்னை நன்றாய் இனம் அறிந்துகொள்ளுவார். அதுவுமன்றி என் பாரச்சுமை விழுந்தநாளில், என் ஆண்டவருடைய உத்தம தாசரில் ஒருவரால் என் நெற்றியில் ஒரு அடையாளமும் போடப்பட்டது, அதை நீங்கள் இதுவரையும் கவனிக்கவில்லை என்று தோன்றுகிறது; அதுமாத்திரமா? என் வழியில் நான் வாசித்து ஆலோசனை பெற்றுக்கொள்ளும்படியாக முத்திரையிடப்பட்ட ஒரு சுருளும் எனக்கு அளிக்கப்பட்டது; இந்தச் சுருளை உன்னதத்திலுள்ள உச்சிதபட்டணத்தின் வாசலில் மதித்தவுடனே

---

[1] தங்கள் சொந்த நீதியானது கந்தைக்குச் சமம் என்பதை அறிந்து கொள்ளாத வேஷதாரிகள்; ஒவ்வொரு விசுவாசியும் உடுத்தப்படுகிற கிறிஸ்துவின் நீதியாகிய அங்கியை அசட்டையாய் நினைக்கிறார்கள்.

[2] கலா. 2. 16.



காண்பிக்கும்படியாகவும் எனக்குக் கற்பிக்கப்பட்டது. இவை ஒன்றும் உங்களுக்கு இல்லை என்று உத்தேசிக்கிறேன்; நீங்கள் திட்டிவாசலின் வழியாய் வராததால் இவை உங்களுக்கு இருக்கவேமாட்டாது என்று சொன்னான்.

இவையெல்லாம் அவர்கள் கேட்டாலும் உணராமலும், பதில் பேசாமலும் இருவரும் ஒருவரையொருவர் பார்த்து சிரித்துக்கொண்டார்கள் என்று நான் என் சொப்பனத்தில் கண்டேன்.

அம்மூவரும் அப்புறம் ஒன்றும் பேசாமல் அவரவர் பாட்டிலே போனார்கள்; கிறிஸ்தியான்மாத்திரம் தனக்குள் பேசிக்கொண்டும், பலவாறாய் ஆலோசித்துக்கொண்டும், ஆறுதல் அடைந்தும், பெருமூச்சுவிட்டும் நடந்துபோனான். சிலதரம் தன் கையில் இருந்த சுருளை வாசித்துத் தேறுதல் அடைவான்.

## பிரயாணி கஷ்டகிரி சேருதல்.

கஷ்டகிரி.

அப்புறம் நான் என் சொப்பனத்திலே கண்டது என்னவென்றால், வேஷக்காரன், மாயக்காரன், கிறிஸ்தியான் ஆகிய மூவரும் முன்னும்பின்னுமாய் வழிநடந்து தங்களுக்கு எதிரே இருந்த கஷ்டகிரி[1] என்னும் ஒரு மலையடிவாரம் சேர்ந்தார்கள்; அங்கே ஒரு நீரூற்று இருந்தது. திட்டிவாசலில் இருந்துவருகிற நேர்வழியையல்லாமல் மலையின் வலபக்கத்திலும் இடபக்கத்திலும் இரண்டு கிளைவழிகளும்[2] அவ்விடத்தில் பிரிந்திருந்தன. அவைகளில், திட்டிவாசலிலிருந்து வந்த இடுக்கமான வழி நேராக மலைச்சிகரத்துக்குப் போனது. கிறிஸ்தியானோ அந்த ஊற்றில் கொஞ்சம் தண்ணீர் குடித்து, தாகந்தீர்த்துக்கொண்டு கஷ்டகிரிமேலே ஏறினான். அவன் மலையில் ஏற ஏற;

---

[1] கஷ்டகிரி என்பது, ஒரு கிறிஸ்தவன் வருத்தங்களைச் சகிக்கவும், தன்னை வெறுத்துத் தவமுயற்சிக்கவும், துர்ப்பழக்கங்களை மேற்கொள்ளவும், தன்னை ஆளும் விசேஷமான பாவங்களை விடவும் செய்கிற பல சமயங்களைக் குறிக்கிறது.

[2] கிளைவழிகள் என்பது, மனுஷர் தேவனுடைய பிரமாணங்களுக்கு அடங்க மனதில்லாதிருக்கையில் தங்கள் மனச்சாட்சியைச் சாந்தப்படுத்தும்படி தேடும் பல கிளைப்போக்குகளைக் குறிக்கிறது.

கிறிஸ்தியான் கஷ்டகிரி ஏறுகிறன்.

ஜீவமலை மா உயரம்; ஏறுவேன், ஏறுவேன்.
இக்கிரம் கஷ்டம்; ஆனல் ஏறுவேன், ஏறுவேன்.
இப்பருங்கேடே ஜீவவழி; ஏறுவேன், ஏறுவேன்.
நெஞ்சே நீ அஞ்சாதே; ஏறுவேன், ஏறுவேன்.
மனமே மயங்காதே; ஏறுவேன், ஏறுவேன்.

கஷ்டம் ஆனால் நல்வழியே; ஏறுவேன், ஏறுவேன்.
ஏற்றம் ஆனால் நேர்வழியே; ஏறுவேன், ஏறுவேன்,
லேசுவழி நாசம்; இதில் ஏறுவேன், ஏறுவேன்.
மனமே நீ மூச்சடக்கு; ஏறுவேன், ஏறுவேன்.

என்று சொல்லிக்கொண்டே ஏறினன்.

மற்ற இரண்டுபேரும் மலைமேல் போகும் கஷ்டவழியைக் கண்டு கலங்கி, பக்கத்தில் இருந்து பிரியும் இருவழிகளும் மலையைச் சுற்றி, நேர்வழியில்தான் சேரும் என்று நினைத்துக் கொண்டு,[1] ஒருவன் வலபக்கத்து வழியிலும், மற்றவன் இடபக்கத்து வழியிலும் நடந்தார்கள். அவ்விருவழிகளுக்கும் முறையே, மோசம், நாசம் என்று பேர் வழங்கப்பட்டது. மோசத்தில் நடந்தவன் கடைசியாக மரம் அடர்ந்த ஒரு சோலைக்குள் போய் காணாமலே போனான். நாசத்தில் நடந்தவன் ஒரு இருண்ட மலைச் சிகரத்தில் சேர்ந்து வழுக்கிவிழுந்து எழுந்திருக்க இயலாமல் நாசமாய்ப் போனான்.

வேறுவழி பிடித்தோரின் முடிவு.

அப்புறம், கஷ்டகிரியின்மேல் ஏறின கிறிஸ்தியானை நான் நோக்கினேன். துவக்கத்தில் ஓடி, ஓடி ஏறினவன் அப்புறம் நடந்து, நடந்து ஏறினான். அப்பால் முழங்காலால் நடந்து கல்லையும், கட்டையும், செடிகளையும் பிடித்துப் பிடித்து ஏறினான். பாதிமலை ஏறவே பச்சென்று தோன்றிய ஒரு நந்தவனத்தை[2] அவன் கண்டான். அந்த மலையின் அதிபதி பிரயாணிகள் இளைப்பாறிக்கொள்ளும்படி அதை அங்கே ஸ்தாபித்திருந்தார். கிறிஸ்தியான் அந்த நந்தவனம் சேர்ந்து சற்று

1 மனிதர் இந்தக் கஷ்டம் தொலையட்டும், அதற்கு அவசியமாய் வேண்டிய கிரியைகளைச் செய்துவிட்டு அப்புறம் கிட்டுவோம் என்று நினைக்கிறார்கள். இது எப்போதும் அவர்களை மோசத்துக்குட்படுத்திக் கடைசியாக நாசப்படுத்தும்.

2 நந்தவனம் என்பது, சங்கடங்களின் ஓய்வை அல்லது ஆவிக்குரிய மட்டிலிருக்கிற ஆறுதல்களைக் குறிக்கும். இப்படிப்பட்ட சமயங்களில் உத்தமகிறிஸ்தவர்கள் முதலாய் அசதியாய் இருந்து விடப்பட்டுச் சோதனைக்கு உட்படுகிறார்கள்.



நேரம் உட்கார்ந்து இளைப்பாறினான்; சற்றுநேரம் தன் மடியில் இருக்கும் சுருளை எடுத்து வாசித்துத் தேறுதல் அடைந்து, சிலுவையின் அடிவாரத்தில் தனக்குக் கொடுக்கப்பட்ட அங்கி முதலானவைகளைக்குறித்துத் தியானித்துக்கொண்டே தலைசாய்த்தான். தலைசாயவே அயர்ந்து பொழுது அஸ்தமிக்கப் போகிற நேரமட்டும் தூங்கிவிட்டான். தூக்கத்தில் அவன் சுருளும் கையில் இருந்து விழுந்துவிட்டது. இப்படி அவன் அயர்ந்து தூங்குகையில் யாரோ ஒருவன் வந்து தட்டி எழுப்பி: "சோம்பேறியே, நீ எறும்பண்டை போய் அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக் கொள்"[a] என்று சொன்னார். அதைக் கேட்ட கிறிஸ்தியான் திடும்பிரவேசமாய் எழுந்து, உடனே அங்கிருந்து மலையேறி உச்சியில் சேர்ந்தான்.

கிறிஸ்தியான் தூங்குகிறன். அவன் சுருள் விழுந்துபோகிறது.

கஷ்டகிரியைக் கடந்துவிட்டேன் அப்பா என்று கிறிஸ்தியான் மகா சந்தோஷத்தோடு உட்கார்ந்திருக்கையில், இரண்டு பேர் தலைகீழ்கோலமாய் ஓடிவந்து அவனண்டை சேர்ந்தார்கள்; அவர்களில் ஒருவனுக்கு அச்சன் என்றும், வேறொருவனுக்கு சந்தேகி என்றும் பேர்.[1] கிறிஸ்தியான் அவ்விருவரையும் நோக்கி: ஐயா! முதலாளிமாரே, என்ன விசேஷம் என்று கேட்டு, தப்பான பாதை வழியில் அல்லோ ஓடுகிறீர்கள் என்று சொன்னான். அதற்கு அச்சன் சொல்லுகிறான்: நாங்கள் சீயோனுக்கு ஓடினோம், இதோ இந்த சங்கடமான இடத்தையும் கடந்துபோனோம்; ஆனால் என்னடா அப்பா, இந்த அவதியும் உண்டா? போகப்போக வருத்தமா? போகப்போகச் சங்கடமா? ஒன்றுதாண்டி ஒன்று அதிக வருத்தமாய் இருக்கிறது. இந்த அவஸ்தைகளை யார்தான் சகிப்பார்கள்? ஆனதினால் சீயோனும் வேண்டாம், அதின் வாழ்வும் வேண்டாம் என்று திரும்பி ஓடிப்போகிறோம் என்று சொன்னான்.

கிறிஸ்தியான் அச்சனையும் சந்தேகியையும் சந்திக்கிறன்.

அவன் இவ்வளவும் சொல்லிமுடித்தவுடனே சந்தேகி சொல்லுகிறான்: இதோ நமக்குமுன்னே கொஞ்சத் தூரத்

1 அச்சன், சந்தேகி என்பது, மனுஷருக்கு அஞ்சியாவது, துன்பத்தின் நிமித்தமாவது, கிறிஸ்தமார்க்கத்தை விட்டுப்போகிறவர்களுக்கு அடையாளமாய் இருக்கிறது.

a நீதி. 6. 6.

சிங்கங்களைப்பற்றிச் சொல்லி கிறிஸ்தியானைப் பயப்படுத்துகிறார்கள்.

தில் இரண்டு சிங்கங்கள் கிடக்கின்றன; அது தூங்குகிறதோ, விழித்திருக்கிறதோ தெரியுதில்லை; நல்லவேளைக்கு அதின் கண்ணில் அகப்படாதபடிக்குத் தப்பினோம்; எங்களைமாத்திரம் கண்டது நிஜமானால் இதற்குள் நாங்கள் சதைவேறு எலும்புவேறாய்ப் போயிருப்போம் என்று சொன்னான்.

கிறி. அப்போது கிறிஸ்தியான்: ஐயோ, நீங்கள் என்னைப் பயங்காட்டுகிறீர்களே; நான் எங்கே ஓடிப்போய் ஒளிப்பேன்? என் ஊருக்குத் திரும்பி ஓடிப்போகவேண்டுமானாலும் அது அக்கினிக்கும் கந்தகத்துக்கும் இரை ஆகும்படி நிர்மாணிக்கப்பட்டாயிற்று. அது அழியும்போது நானும் அழியவேண்டியதுதான்; உன்னதத்தில் இருக்கும் உச்சிதபட்டணம் சேர்ந்தாலோ நான் சந்தோஷமாய் வாழ்ந்திருப்பேன்; ஆகையால் அங்கேயே போகத் துணிவேன். திரும்பிப் பின்னேபோவது மரணமாய் முடியும். திரும்பாமல் முன்னேபோனால் சாவோம் என்கிற பயங்கரம்மாத்திரம் இருக்கிறது; ஆனால் அது நித்தியஜீவனாய் முடியும். ஆகையால் இன்னும் முன்னாகவே செல்லுவேனாக என்று சொன்னான். இப்படிச் சொன்னபின் அச்சனும் சந்தேகியும் மலையில் இறங்கி எதிர்முகமாய் ஓடினார்கள், கிறிஸ்தியானோ தன் வழியே போனான். ஆனாலும் தன்னைச் சந்தித்த இரண்டுபேரும் சொன்ன வார்த்தைகள் அடிக்கடி அவன் மனதில் ஞாபகம் வந்தது; அப்போது வழக்கப்படி தன்னைத் தேற்றிக்கொள்ளும்படியாகத் தன் மடியில் இருந்த சுருளை எடுக்கப்போனான்.

## பிரயாணி சுருளை இழத்தல்.

ஐயோ அதைக் காணேம்[1] என்று கண்டான். அத்தருணத்தில் அவன் மனதில் உண்டான துக்கத்தை என் வாயால் சொல்லிமுடியாது. என்ன்செய்வேன் என்றறியாமல் திகைத்துநின்றான்; ஏனெனில் அந்தச் சுருள் இல்லாமல் முடியாது; வழியில் அவனுக்குத் தேறுதலைக் கொடுக்கவும், உன்னத நகரத்தின்

---

[1] சுருளை இழந்தது; கிறிஸ்தவனுக்கு உண்டாய் இருந்த சந்தோஷமும் சமாதானமும், சோம்பற்றனத்தினாலும் அசட்டைத்தினாலும் இல்லாமல் போகிறதைக் குறிக்கிறது. இந்தக் காணமல்போன நல்லவிதியை திரும்பத் தேடவேண்டியது.



வாசலில் காட்டி உட்பிரவேசிக்கவும் அது அவசியம் வேண்டியதாய் இருந்தது. இதையெல்லாம் அவன் நினைந்து மிகவும் கலக்கம் அடைந்தான்; கலக்கத்தோடு கலக்கமாய் ஆஹா, நான் கஷ்டகிரி மத்தியத்தில் இருக்கிற சத்திரத்தில் படுத்துத் தூங்கினேனே, சுருள் விழுந்தால் அங்கேதான் விழுந்திருக்கும் என்கிற நினைவு வந்தது. உடனே அவன் முழங்கால்படியிட்டு தன் புத்தியீனத்துக்காக தேவனை நோக்கி மன்றாடி, மறுபடியும் திரும்பி சுருளைத் தேடவந்தான். கிறிஸ்தியான் வழியில் இருந்த சத்திரத்தில் தூங்கினபோது அது அவனை அறியாமல் மடியில் இருந்து நழுவி விழுந்துபோயிற்று. அவன் சுருளைத் தேடித் திரும்பிவந்தபோது அவனுக்கு உண்டாய் இருந்த கவலையையும் மனநோவையும் யார்தான் சரியாய்ச் சொல்லக்கூடும்? ஐயோ! அவன் சிலதரம் பெருமூச்சு விடுவான், சிலதரம் புலம்புவான், சிலதரம் அழுவான், சிலதரம் தலையோடு அடித்துக்கொள்ளுவான், சிலதரம் கையை உதறிக்கொள்ளுவான்; இளைப்பாறும்படி ஏற்படுத்தப்பட்ட சத்திரத்தைப் பஞ்சமெத்தை என்று எண்ணி அங்கே தூங்கின என்னைப்போல் புத்தியீனன் உண்டோ என்று தன்னைக் கடிந்துகொள்ளுவான். அவன் போகப் போக இந்தச் செடிமறைவில்தான் கிடக்குமோ, இந்தக் கல்லுக்குள்தான் காற்று கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டதோ என்று அங்கும் இங்கும் கூர்மையாய்ப் பார்த்துக்கொண்டே போனான். கடைசியாக அந்த சத்திரம் அவன் கண்ணுக்குத் தோன்றிற்று. தோன்றவே அவன் மனநோவு அதிகப்பட்டது. அது தன் அஜாக்கிரதையையும் சோம்பலையும் மறுபடியும் புதுப்பிக்கிறதுபோல் இருந்தது.[a] அவன் தன்னைக் குறித்து, ஐயோ நிர்ப்பாக்கிய மனுஷன் நான்; பகற்காலத்தில் தூங்குவதுபோலப் பட்டப்பகலில் தூங்கின என்னிலும் மூடன் உண்டோ? இவ்வளவு வருத்தங்கள் இருந்தும் தூங்கினேனே! இம்மலையின் ஆண்டவர் பிரயாணிகளுடைய ஆவியின் இளைப்பாறுதலுக்கென்று ஸ்தாபித்த இந்த

சுருள் இழந்ததை உணர்ந்து தன் புத்தியீனத்தை அறிக்கையிடுதல்.

சத்திரத்தில் மாமிச இளைப்பாறுதலுக்கு இடங்கொடுத்தேனே; எவ்வளவுதூரம் வீணாக நடந்தேன்; இப்படித்தானே இஸ்ரவேலருக்கும் ஒருகாலத்தில் சம்பவித்தது. அவர்கள் தங்கள் பாவத்தினிமித்தம் சிவந்த சமுத்திரப் பாதையாய் அலைந்து

---

a வெளி. 2. 4. 1 தெச. 5. 6—8.

திரிய அனுப்பப்பட்டார்கள். இப்போது இந்தப் பாதையைத் தூக்கத்தோடு மிதிக்கிற நான், தூங்காமல் இருந்தால் எவ்வளவு சந்தோஷத்தோடு நடந்து கடந்திருப்பேன்; நான் தூங்காதிருந்தால் இதற்குள் எவ்வளவோ தூரம் போயிருப்பேன்; ஒருதரம் மாத்திரம் நடக்கவேண்டிய இந்த வழியில் என் புத்தியீனத்தால் மூன்றுதரம் மிதிக்கல் ஆயிற்றே; ஐயோ பொழுதும் அஸ்தமித்து இருட்டாகப்போகிறதே, நான் தூங்காதிருந்தால் இவ்வளவு கஷ்டங்களில் ஒன்றும் எனக்கு வந்து சம்பவித்திராதே என்று சொல்லிக்கொண்டான்.

சுருள் அகப்படுகிறது.

இதற்குள்ளாக அவன் அந்த நந்தவனம் சேர்ந்து சற்றுநேரம் உட்கார்ந்து அழுதான்; அப்புறம் தான் தூங்கின இடத்தில் போய்த் தேடவே சுருள் அகப்பட்டது; அவன் அதை நடுங்கின ஆவலோடும், பதைபதைப்போடும் எடுத்து மடியில் வைத்துக்கொண்டான்.[1] அந்தச் சுருளைக் கண்டுபிடித்தவுடனே அவனுக்குள் உண்டான சந்தோஷத்துக்கு ஒரு கணக்கில்லை. இந்தச் சுருள் அவனுடைய ஜீவனின் நிச்சயமும், மோட்சத்தில் சேர்க்கப்படுதலின் சீட்டுமாய் இருந்தது. ஆகையால் அது கண்டுபிடிக்கப்பட்டவுடனே, தன் கண்ணுக்கு அதைக் காட்டிக்கொடுத்த தேவனுடைய தயவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, ஆனந்தக் கண்ணீர் சொரிந்துகொண்டு தன் வழியே மறுபடியும் ஏறிப்போனான். அவன் எவ்வளவு விசையாய்த்தான் ஏறி ஏறிப்போனான் அப்பா! என்றாலும் அவன் மலையின் உச்சியில் சேருமுன்னே பொழுதடைந்துபோயிற்று; இப்படிப் பொழுதுபோனதும் அவனுடைய பழைய தூக்கத்தை மறுபடியும் நினைப்பூட்டிற்று. அவன் மறுபடி பெருமூச்சு விட்டு, ஆ! பாவத்தூக்கமே! உன்நிமித்தம் என் பிரயாணம் எவ்வளவாய்த் தடைப்பட்டுப்போயிற்று! என்னைப் பகலின் வெளிச்சத்தில் அல்ல, இருளின் நிழலில் நடக்கப்பண்ணிவிட்டாயே, நரிகளின் ஊளையையும், சிங்கங்களின் கர்ச்சிப்பையும், புலிகளின் சீறலையும், வண்டுகளின் இரைச்சலையும் நான் கேட்கப்பண்ணிவிட்டாயே. ஆ, தூக்கமே! பாவத்தூக்கமே என்று புலம்புகிறான். இந்த விசனத்தோடு விசனமாய் அச்சன், சந்தேகி என்னும் இரண்டுபேரும் சொன்ன சிங்கங்களின்

[1] இழந்த சுருளைக் கண்டுபிடித்தல் என்பது, தேவனுடைய பாவ மன்னிப்பின் அன்பையும், பரிசுத்தஆவியின் சந்தோஷத்தையும், மறுபடியும் புதிதாய் உணரும் உணர்ச்சியையும் காட்டுகிறது.



செய்தியும் அவன் மனதில் வந்தது; அவன் சொல்லுகிறான்: பொழுது அஸ்தமிக்குமுன் சிங்கங்களின் கெபியையாவது கடந்திருந்தால் நன்மையாய் இருந்திருக்குமே! அப்போது அவைகள் கண்மூடித் தூங்கினாலும் தூங்கும், இப்பொழுதோ அவைகள் விழித்து இரைதேடுகிற சமயம்; ஒருவேளை அவை இரண்டும் என்னைக் கண்டு பட்சிக்கும்படி வரவே வந்தால் அவைகளைத் துரத்த என்னால் ஆகுமா? அவைகளின் பல்லுக்கு விருந்தாவேனேயன்றி வேறு வழி உண்டா? என்று பிரலாபித்துக் கடைசியாக உயிர் நின்றாலும் நிற்கட்டும் போனாலும் போகட்டும், அணுவளவு அடி விலகமாட்டேன் என்று தீர்மானம் பண்ணி, பெருமூச்சு விட்டு, அண்ணாந்து பார்த்து, வானமே நீயே துணை என்றான்.

## பிரயாணி சிங்கார மாளிகை சேருதல்.

சிங்கார மாளிகை.

அவன் அண்ணாந்து பார்க்கவே சற்று அப்பால் மா உயரமும் விநோதமுமாய்க் கட்டப்பட்டிருந்த ஒரு அரமனை காணப்பட்டது. அதற்குச் சிங்கார மாளிகை[1] என்று பேர். அதைக் கண்டவுடனே கிறிஸ்தியான், இங்கே சேர்ந்தாவது இராத்தங்கலாம் என்று எகிற நடந்துபோகிறதை நான் என் சொப்பனத்தில் கண்டேன். சற்றுநேரத்தில் மகா இடுக்கமான ஒரு வழியில் அவன் நடக்கவேண்டியதாய் இருந்தது; அப்படிப்பட்ட வழி ஒரு கூப்பிடுதூரம் இருக்கலாம். அங்கே அரமனைவாசற்காப்போனுடைய குடிசை இருந்தது; அந்த இடுக்குவழியில் அவன் கூர்மையாய்ப் பார்த்து நடந்துபோகவே வழியில் இரண்டு சிங்கங்கள்[2] படுத்திருக்கக் கண்டான்; ஆகா, அச்சனும், சந்தேகியும் பார்த்துத் திரும்பிவிட்ட இடம் இதுதா

[1] சிங்கார மாளிகை. இது ஒரு கிறிஸ்தசபையைக் குறிக்கிறது. அதில் பிரவேசித்தல் என்பது, கிறிஸ்து சபையில் சேர்ந்துகொள்ளுகிறதைக் காட்டும் வெளிப்படையான அறிக்கையைக் குறிக்கிறது.

[2] இரண்டு சிங்கங்கள் என்பது, மனிதரை கிறிஸ்தசபையோடு சேரவிடாமல் தடைபண்ணுகிற பிசாசு உலகம் என்னும் இரண்டு சத்துருக்களையும் குறிக்கலாம். ஆனால் அவைகள் தேவனால் கட்டப்பட்டிருக்கிறபடியால் மெய்விசுவாசிகளுக்குக் கஷ்டத்தை உண்டாக்க அவைகளால் கூடாது.

௨ வெளி. 3. 2; 1 தெச. 5. 7, 8.



றுக்கும் என்று எண்ணிக்கொண்டான். அச்சிங்கங்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தன; அந்தச் சங்கிலிகளைக் கிறிஸ்தியான் காணவில்லை. சிங்கங்களைக் கண்டவுடனே இவனும் அவர்களைப்போலத் திரும்பிவிடலாமோ என்று யோசித்தான்; ஏனெனில் இனிமேல் சாவே அல்லாமல் ஜீவன் ஏது என்று அவன் மனதில் தோன்றிற்று. கிறிஸ்தியான் பின்வாங்க யோசனையாய் இருப்பதை விழிப்பாளன்[1]

சிங்கங்களைப்பற்றிய பயம் விசுவாசத்தால் நீங்குகிறது.

1 உண்மையுள்ள தேவபணிவிடைக்காரர், ஒரு வாசல் காக்கிறவனைப்போல விழித்திருக்க, அதைரியமுள்ள விசுவாசிகளை தைரியப்படுத்துகிறார்கள்.



என்கிற பேருடைய வாசல்காக்கிறவன் கண்டு, நீ அவ்வளவு தெம்மாடியா?[a] இந்தச் சிங்கங்கள் விலங்குமாட்டப்பட்டிருக்கின்றன; இவ்விடத்தில் வருகிறவர்களிடத்தில் விசுவாசம் கொஞ்சமாவது உண்டோ, முற்றிலும் இல்லையோ என்று கண்டறிந்துகொள்ளும்படி இது சோதனைக்காகக் கட்டி வைக்கப்பட்டிருக்கின்றன. நீ அங்கும் இங்கும் விலகாமல் நடுமத்தியில் நடந்துவந்தால் யாதொரு சேதமும் உனக்கு வராது என்று சொன்னான்.

அவன் தான் எச்சரிக்கப்பட்டபடியே கவனமாய் நடந்துபோனான். சிங்கங்கள் அவனைக் கண்டு கர்ச்சித்ததே அல்லாமல் வேறொரு சேதமும் செய்ய இடம் இருந்ததில்லை. சிங்கங்களைக் கடந்தவுடனே அவன் ஆனந்தத்தால் கைதட்டி, பிழைத்தேன், பிழைத்தேன் என்று சொல்லிக் காவல்சேவகனண்டை சேர்ந்தான். சேர்ந்தவுடன் கிறிஸ்தியான்: ஐயா இது என்ன மாளிகை? இங்கே நான் இராத்தங்கலாமா? என்று கேட்டான். அதற்குச் சேவகன்: இம்மலையின் அதிபதி சீயோனுக்குப் போகும் பிரயாணிகளுடைய ஆதரவுக்காகவே இதைக் கட்டுவித்தார் என்று சொன்னதோடு, நீ எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாய்? என்றும் கேட்டான்.

கிறிஸ்தியானும் மாளிகை சேவகனும்.

கிறி. நான் நாசபுரியில் இருந்து புறப்பட்டு சீயோன் மலைக்குப் போகிறேன்; பொழுதடைந்துபோனதால் இன்றிரவு இவ்விடத்தில் இராத்தங்கலாமோ என்றுதான் கேட்கிறேன்.

வாச-சேவ. உன் பேர் என்ன?

கிறி. என் பேர் இப்போது கிறிஸ்தியான்; ஆனால் என் பழைய பேர் பக்தியற்றோன். நான் யாப்பேத்தின் சந்ததியில் பிறந்தவன். அந்த யாப்பேத்தை தேவன் சேமுடைய கூடாரங்களில் போய்க் குடியேறும்படி ஏவிவிடுகிறவராய் இருக்கிறார்.[b]

வாச-சேவ. இப்படி இராவிருட்டில் வந்த காரணம் என்ன? பொழுது அஸ்தமித்துப்போயிற்றே.

கிறி. பொழுது அஸ்தமிக்கிறதற்கு வெகுநேரத்துக்குமுன்னே வந்துவிடுவேன்; ஆனால் நான் ஒரு நீசன்தான். மலைக்கு அந்தப் பக்கத்தில் இருக்கிறதே, அந்த சந்தவனத்தில் தூங்கிவிட்டேன். அப்படியும் முந்திவந்திருப்பேன். ஆனால் நான் தூங்

a மாற். 4. 40. b ஆதி. 9. 27.

னபோது என் சாட்சிப்பத்திரத்தை இழந்துவிட்டு உச்சி மலைமட்டும் வந்துவிட்டேன், அங்கே வந்து பத்திரத்தைத் தேடினேன், காணேன்; உடனே நான் மறுபடியும் திரும்பி, தூங்கின சந்தவனம்மட்டும் ஓடி, பத்திரத்தைக் கண்டெடுத்துக் கொண்டு வருகிறேன்; அதினாலேதான் இப்படி வந்து சேரும்படி ஆயிற்று.

வாச-சேவ. நல்லது, நான் இந்த மாளிகையில் இருக்கும் கன்னிமாப்பெண்களில் ஒருத்தியை அழைப்பிக்கிறேன்; அவள் வந்து உன்னோடே பேசுவாள்; உன் பேச்சு அவள் மனதுக்குச் சரியாய் இருந்தால், இந்த மாளிகையின் சட்டப்படி, மற்றக் கன்னிமாப்பெண்களுடன் உன்னைக்குறித்து விசாரிச்சுப் பண்ணி, உனக்கான வேண்டிய உபசரணைகளைச் செய்வார்கள் என்று சொல்லி, விழிப்பாளன் ஒரு மணியை அடித்தான். மணிச்சத்தம் கேட்டவுடனே யூகி[1] என்கிற காம்பீரியமுடைய சிறப்பும் சௌந்தரியமுமுள்ள ஒரு மாது புறப்பட்டு வாசலண்டை வந்து ஏது விசேஷம் என்று கேட்டாள்.

வாச-சேவ. அதற்கு வாசற்சேவகன் சொல்லுகிறான்: இந்த வழி மனுஷன் நாசபுரியிலிருந்து புறப்பட்டு சீயோன் மலைக்குப் போகிறான்; பிரயாணத்தால் இளைப்பாய் இருக்கிறதினாலும், நேரம் இருட்டிப்போனபடியினாலும் இவ்விடத்தில் இராத்தங்கிவிட்டுப் போகலாமா, ஐயா என்று என்னைக் கேட்டான். நான் இந்த அரமனைச் சட்டத்தின்படி உன்னைக் கூப்பிடுவேன், அந்த அம்மாள் தனக்கு நலமாய்த் தோன்றுகிறபடி உன்னை நடத்துவாள் என்று சொல்லி மணி அடித்தேன் என்று சொன்னான்.

யூகியும் கிறிஸ்தியானும்.

அப்பொழுது யூகியானது நீ எவ்விடத்தான் என்றும், எங்கே போகிறாய் என்றும் கேட்டாள். அதற்கு அவன் தான் சொல்லவேண்டியதைச் சொன்னான். அப்புறம் அவள் நீ வழியில் கண்ட காட்சிகளும், பட்ட பாடுகளும் என்ன என்று கேட்டாள்; அதற்கும் உத்தரவுசொன்னான். கடைசியாக உன்பேர் என்ன என்று கேட்டாள். அதற்கு அவன்: என் பேர் கிறிஸ்தியான்; இங்கே இராத்தங்கி இளைப்பாறிக்கொள்ளும்படியாக எனக்கு மகா ஆவல் இருக்கிறது; சீயோனின் பிர

[1] யூகியை அனுப்பின விஷயம், மனுஷனைச் சோதித்து ஒருவனைக் கிறிஸ்து சபையில் சேர்க்கவேண்டியது என்பதை உணர்த்துகிறது.



யாணிகள் இளைப்பாறிக்கொள்ளும்படி இந்த மாளிகை சீயோன் மலைகர்த்தரால் கட்டப்பட்டிருக்கிறதென்று கேள்விப்பட்டேன் என்று சொன்னான். இப்படிச் சொன்னவுடனே அவள் முகத்தில் புன்னகை தோன்றினதாலும், கண்களில் கண்ணீர் ததும்பிற்று. சற்றுநேரமானபின், நல்லது நான் என் தோழிப்பெண்களில் இரண்டுமூன்றுபேரைக் கூட்டிவருகிறேன் என்று சொல்லி வீட்டுக்குள்ளே போய், விவேகி! பயபக்தி! நேசமணி! என்று கூப்பிட்டாள். அச்சத்தம் கேட்டு மணிமாதுகள் மூவரும் வாசலண்டை சேர்ந்தார்கள். அவர்கள் மூவரும் கிறிஸ்தியானுடன் சற்றுநேரம் சம்பாஷித்தபின்பு,[1] உள்ளே வாவென்று அழைத்துக்கொண்டு போனார்கள்.

விவேகி, பயபக்தி, நேசமணி.

அந்த மாளிகைக்குள் இருந்த கன்னிமாடத்து முற்றத்தில் கிறிஸ்தியான் போனவுடன் அங்கிருந்த கன்னியாஸ்திரீகள் எல்லாரும் அவனைச் சந்தித்து: "கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே, உள்ளே வா" என்று வாழ்த்தி, இந்த மலையின் அதிபதி உன்னைப்போலொத்த பிரயாணிகளுடைய நன்மைக்கென்றே இந்த அரண்மனையைக் கட்டுவித்தார் என்று சொன்னார்கள். கிறிஸ்தியான் அதைக்கேட்டுத் தலைவணங்கிக்கொண்டான். அப்புறம் அவர்களைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் போய் ஒரு ஆசனத்தில் உட்கார்ந்தான்; உடனே தாகத்துக்குக் கொடுத்தார்கள். அவன் தாகம் தீர்ந்தபின்பு, இராச்சாப்பாடு தயாராகும்மட்டும் காலம் வீணாய்க் கழியாதபடி நம்மில் யாராவது பிரயோசனமான சில விஷயங்களைப்பற்றி இவனோடு பேசிக்கொண்டிருப்பது நல்லதல்லவா என்று ஆலோசித்து, விவேகி, பயபக்தி, நேசமணி ஆகிய மூவரும் தீர்மானித்தார்கள். அப்படியே மேல் சொல்லிய மூன்று மாதரும் சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

பயபக்தி அவனோடு சம்பாஷித்தல்.

**பயபக்தி.** கிறிஸ்தியான் என்னும் சிநேகிதனே! இந்த அர்த்தராத்திரியில் உனக்கு எங்கள் வீட்டில் மிகுந்த அன்போடு இடங்கொடுத்திருக்கிறோமே, உன்னுடைய நெடும்பிரயாண

[1] சம்பாஷணை செய்த விஷயம், கிறிஸ்தவர்கள் சபையில் சேரும்படியாக ஒருவருக்கொருவர் புத்தி சொல்லி, எழுப்ப வேண்டும் என்பதை உணர்த்துகிறது. மேலும், கிறிஸ்துமார்க்கத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறவர்கள் பக்தியும், விவேகமும், நேசமும் முன்னான சபையின் அவயவங்களால் ஒப்புக்கொள்ளப்படவேண்டும் என்பதையும் உணர்த்துகிறது.

விசேஷங்களைச் சொல்லி என்களை எழுப்புதலடையச் செய்தால் மெத்த சந்தோஷப்படுவோம் என்றாள்.

கிறி. மெத்த சந்தோஷத்தோடு நான் பட்டபாடுகளை எல்லாம் சொல்லுகிறேன்; நீங்கள் கேட்கிறதே பெரிய காரியம்.

பயபக்தி. நீ தேசம்விட்டுத் தேசம்போக பயணப்பட்ட காரணம் என்ன?

கிறி. என் காதில் தொனித்த பயங்கரமான ஒரு சப்தமே என்னைப் பரதேசியைப்போல் பயணம் புறப்படச்செய்தது. நான் என் ஜனனபூமியில் இருப்பது மெய்யானால் அழிவு என்மேல் வரும் என்றும், அதைத் தடுக்க என்னால் இயலாதென்றும் அச்சத்தம் தொனித்தது.

பயபக்தி. ஊரைவிட்டது சரிதான்; இந்த வழியை எப்படிக் கண்டுபிடித்தாய்?

கிறி. அது தேவசெயல் என்று நான் சொல்லவேண்டும். நான் அழிவின் செய்தியைக் கேட்டு மனக்கவலைகொண்டு, எங்கே போகவேண்டும் என்று அறியாதிருந்தேன்; ஒருநாள் நான் நடுநடுங்கி அழுதுகொண்டிருக்கையில் சுவிசேஷகன் என்கிற பேருடைய ஒருவர் தற்செயலாய் என்னண்டை வந்து, திட்டிவாசலின் திசையைக் காட்டி வழிதிருப்பிவிட்டார். மற்றப்படி எனக்கு வழி தெரியாது. நான் திட்டிவாசலைச் சேர்ந்தது முதல் இந்தப் பாதையாய்க் கடந்து, இன்றிரவு உங்கள் நடுவில் சந்தோஷமாய்த் தங்கி இளைப்பாறுகிறேன்.

பயபக்தி. நீ வியாக்கியானி வீட்டுவழியாக வரவில்லையா?

கிறி. ஆம், அம்மா! அந்த வழியாய்த்தான் வந்தேன். அங்கே கண்ட காட்சிகளின் மகத்துவங்களை நான் என்னசொல்ல! என் ஜீவகாலம்மட்டும் அக்காட்சிகளை மறக்கக்கூடுமா? அப்பேர்ப்பட்ட காட்சிகளெல்லாம் கண்டேன். விசேஷமாக, கிறிஸ்துநாதர் பிசாசின் விரோதங்களோடு தமது கிருபையின் கிரியை நடத்திக்கொண்டு வருகிறார் என்பதைக் காட்டும் காட்சியும், பாவவிலங்கில் அடைபட்டு தேவனுடைய இரக்கத்தைப்பற்றி நம்பிக்கையற்றுப்போன இருப்புக்கூண்டுக் காட்சியும், நடுத்தீர்வை நாள் வந்துவிட்டதுபோலக் கனாக்கண்டவனுடைய காட்சியும் ஆகிய இம்மூன்றும் என் மனதிலிருந்து ஒருநாளும் மாறிப்போகமாட்டாது.

பயபக்தி. அவன் கண்ட சொப்பனத்தைச் சொல்லக் கேட்டாயா?

கிறி. அவன் தன் சொப்பனத்தைச் சொல்லச்சொல்லக் காதுகொடுத்துக் கேட்டேன். ஆகா! என்ன பயங்கரமான



சொப்பனம்! அதைக் கேட்கக் கேட்க என் இருதயம் நடுக்கம் கொண்டது, என்றாலும் அதைக் கேட்டதற்காகச் சந்தோஷப்படுகிறேன்.

பயபக்தி. வியாக்கியானிவீட்டில் கண்டவை இவ்வளவுதானா?

கிறி. இவ்வளவா? அவர் என்னைக் கூட்டிக்கொண்டு ஒரு சிங்காரமான மாளிகையண்டை போய் அதை எனக்குக் காட்டினார்; அதிலுள்ளவர்கள் பொற்சரிகை உடுப்பு உடுத்தினவர்களாய் இலங்கினார்கள். ஒரு பராக்கிரமன் அதினுள் பிரவேசிக்கும்படி புறப்பட்டு, வழியில் ஆயுதபாணிகளாய் நின்று தடுத்தவர்களையெல்லாம் கண்டதுண்டமாக்கி உட்சென்றான். உடனே அங்கே இருந்தவர்கள் உள்ளே வரவும் நித்திய மகிமையைப் பெற்றுக்கொள்ளவும் வாழ்த்தினார்கள். அக்காட்சிகள் என் மனதுக்கு அவ்வளவு சந்தோஷத்தைத் தந்ததால், வியாக்கியானி வீட்டிலேயே இன்னும் ஒரு வருஷம் இருக்கலாமோ என்று முதலாய் எண்ணம் வந்தது. ஆனால் நான் பின்னும் பிரயாணம் பண்ணவேண்டியதிருந்ததால் அந்த ஆசையை விட்டுவிட்டேன்.

பயபக்தி. வேறேதாவது காட்சியை வழியில் கண்டதுண்டா?

கிறி. வேறு காட்சியா? அங்கிருந்து சற்றுதூரம் போனவுடனே என் மனதில் இரத்தசோரையாய் ஒரு மரத்தில் தொங்கும் ஆளைக் கண்டேன். அவரைப் பார்த்ததுதான் தாமதம், உடனே என் முதுகில் இருந்த பாரச்சுமை விழுந்துவிட்டது; எனெனில் நான் ஒரு பாரச்சுமையால் வெகுகாலம் அமிழ்ப்பட்டுக்கொண்டிருந்தேன்; அந்த மரத்தடியில் அது விழுந்துபோயிற்று. இது எனக்கு மகா ஆச்சரியமாய் இருந்தது. இப்படிப்பட்ட அதிசயத்தை நான் என் ஜீவகாலத்தில் கண்டதே இல்லை. அவ்வதிசயத்தால் நான் பிரமைகொண்டு அண்ணாந்துபார்த்தேன். அண்ணாந்துபாராமலிருக்கத்தான் எனக்கு மனம் இருக்குமா? அண்ணாந்துபார்க்கவே, ஒளிமய ரூபிகள் மூவர் என்னிடத்தில் வந்தார்கள். அவர்களில் ஒருவர், என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சாட்சிபகர்ந்தார். வேறொருவர், என் பழைய கந்தைகளை என்னைவிட்டு எடுத்துப்போட்டு, இதோ நான் அணிந்திருக்கும் பொற்சரிகை ஓரமுள்ள இந்த அங்கியைத் தந்தார். இன்னொருவர், என் நெற்றியில் நீங்கள் பார்க்கிற இந்த அடையாளத்தைப் போட்டு, முத்திரை பதிக்கப்பட்ட இந்தச் சுருளையும் தந்தார் என்று சொல்லி, மடியில் கைபோட்டு அந்தச் சுருளையும் எடுத்துக் காட்டினான்.

பயபக்தி. இம்மட்டும் நீ சொன்னவைகளேயல்லாமல் இன்னும் அநேக காட்சிகளையும் கண்டிருப்பாய் அல்லவா?

கிறி. நான் கண்டவைகளில் முதல்தரமான காட்சிகள் இவைகள்தான்; ஆனால் வேறுசில விஷயங்களையும் கண்டேன். நான் வருகிற வழியில் பேதை, சோம்பன், துணிகரன் என்னும் மூன்றுபேர் சங்கிலியும் காலுமாய்ப் படுத்துத் தூங்குகிறதைக் கண்டேன்; அம்மணி! அவர்களை எழுப்பிவிட என்னால் ஆகுமா, நீயே சொல்லு. அப்புறம் வேஷக்காரன் மாயக்காரன் என்னும் இருவர் சுவரேறிக் குதித்து என்னுடன் வழியில் கூடி, நாங்களும் சீயோனுக்குத்தான் போகிறோம் என்று சொன்னார்கள். கடைசியாக அவர்கள் போன வழியும் தெரியாது, தொலைந்த வகையும் தெரியாது; நீங்கள் போகும் வழி சரி அல்ல என்று நான் அவர்களுக்குச் சொன்னதென்ன? அவர்கள் என் பேச்சை நம்பவார்களா? அதற்கப்பால் இந்த மலை ஏற நான் பட்டபாடுதான் என்ன? மலை தாண்டி இறங்கும் போது சிங்கங்களைக் கண்டு கலங்கின கலக்கத்துக்கு ஒரு கணக்குண்டா? வாசல்சேவகனாகிய விழிப்பானன் இருக்கிறானே! அந்தப் புண்ணியவான்மாத்திரம் சத்தங்காட்டி, எனக்குத் தைரியம் சொல்லாவிட்டால், இதற்குள்ளாகத் திரும்பி வெகுதூரம் போயிருப்பேன். இப்போது தேவன் என்னை இந்த இடத்தில் கொண்டுவந்து சேர்த்ததற்காகவும், நீங்கள் என்னைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டு உபசரிக்கிறதற்காகவும் அவரை ஸ்தோத்திரிக்கிறேன் என்றான்.

பயபக்திமாது இவ்வளவு நேரம் சம்பாஷித்தபின்பு, விவேகிமாது கிறிஸ்தியானுடன் சில காரியங்களைப் பேச ஆசைப்பட்டாள்.

விவேகி அவனோடு சம்பாஷிக்கிறாள்.

விவேகி. ஒரு வேளாவேளை நீ உன் ஜனனபூமியை நினைப்பாயா?

கிறி. நான் புறப்பட்ட ஊரின் நினைவு சிலவேளை வரும். அந்த நினைவு வந்தவுடனே என் மனம் குன்றி, மூஞ்சி செத்துப்போம். அந்த ஊருக்கு மறுபடியும் ஒருதரம் போக வேண்டும் என்கிற நாட்டம் இருந்தால் அப்போதே திரும்பிப் போய் இருப்பேனே! இப்போதோ நான் ஒரு நல்ல தேசத்தையும், ஒரு பரம நாட்டையும் அல்லோ நாடுகிறேன்?[a]

விவேகி. உன் பழைய வாழ்க்கைகளில் சிலவற்றையும் கூடவே கொண்டுவந்திருக்கிறாய் அல்லவா?

[a] எபி. 11. 15, 16.



கிறி. கொண்டுவந்தது உண்மைதான். ஆனால் அப்படிக் கொண்டுவருகிறது என் மனதுக்குப் பிரியமாய் இருக்கவில்லை. என் தேசத்தார் அனைவரும், நானுங்கூடப் பிரியமாய் வளர்த்து வந்த மாம்சசிந்தை என்னோடேவந்து விடு[illegible]ன்; இப்பொழுது அவைகளெல்லாம் எனக்கு மனஸ்தாபமாயிருக்கின்றன. என் வாழ்வுக்கேற்ற விஷயங்களை நானே தெரிந்துகொள்ளுகிறதாய் இருந்தால், அந்தப் பழையவைகளில் ஒன்றையும் வேண்டும் என்று விரும்பமாட்டேன். நன்மையானதைச் செய்யவேண்டும் என்கிற விருப்பம் எனக்கு இருக்கிறபொழுதே தீமையானதைச் செய்யும் விருப்பமும் இருக்கிறதென்று காண்கிறேன்.[a]

விவேகி. ஒருவேளையில் உன் மனதைக் கலக்கச்செய்யும் காரியங்கள் இன்னொருவேளையில் கடந்துபோனதுபோலக் காண்கிறாயா?

கிறி. ஆம், ஆனால் அடிக்கடி அல்ல; எப்போதாவது ஒரு சமயத்தில் அப்படிக் காண்கிறேன்; அப்படி உண்டாகிற நேரம் எனக்குப் பொன்போல் அருமையாயிருக்கும் காலம் என்று சொல்லவேண்டும்.

விவேகி. எப்போதாவது ஒரு சமயாசமயங்களில் உன் மனக்கலக்கம் மாறிப்போனதுபோலத் தோன்றுகிறதாகச் சொன்னாயே; அதற்கு ஏதாவது முகாந்தரங்கள் உண்டா?

கிறி. உண்டு; நான் சிலுவையண்டை பார்த்தவைகளை நினைவுகூருகையில் அது விலகும்; நான் என் [illegible] அங்கியைக் கூர்மையாய் நோக்குகையிலும் அது விலகும்; என் மடியில் இருக்கும் இந்தச் சுருளை எடுத்துப் பார்த்தாலும் விலகும். நான் எவ்விடத்தை நோக்கிப் பயணம் செய்கிறேன் என்று சற்று ஆழமாய் யோசித்தாலும் உடனே அது விலகுகிறது.

விவேகி. சீயோன்மேல் உனக்கு ஏன் நாட்டம் இருக்கிறது?

கிறி. நாட்டம் இராதா? எனக்காக சிலுவையில் தொங்கினவர் ஜீவனோடிருக்கிறாரே! இந்த என் கண்களால் அவரைக் காண்பேனே! இங்கானால் என் மனதைக் கலக்குகிறவை எல்லாம் நீங்கி அங்கே சுகமாய் இருப்பேன்; அங்கே சாவே இல்லையாம்.[b] என் மனதுக்கேற்ற சிநேகிதரோடேகூட உறவாடுவேன். அம்மணி! சத்தியத்தைச் சொல்லுகிறேன்

[a] ரோ. 7. 15—21.
[b] ஏசா. 25, 8. வெளி. 21. 4.

டேன். அவரால் என் பாரச்சுமை நீங்கிவிட்டதால், அவர்மேல் எனக்கிருக்கும் நேசம் கொஞ்சம் அல்ல; என் உள்நோவை இட்டு மெத்தவும் இளைத்துப்போகிறேன்; சீயோனுக்கு நான் போனால் ஒருநாளும் சாகாமல் இருந்து, ஓயாமல் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று பாடிக்கொண்டிருக்கும் கூட்டத்தோடே வாழுவேன் என்றான்.

நேச. விவேகியும் இப்படிச் சம்பாஷித்தபின்பு, நேசமணி சம்பாஷிக்கத் தொடங்கி: உனக்குக் [illegible]சாரம் உண்டா? நீ கலியாணஞ் செய்திருக்கிறாயா? [1] என்று கேட்டாள்.

நேசமணி அவனுடைய [illegible] விசாரிக்கிறது.

கிறி. எனக்கு ஒரு பெண்சாதியும், நாலு பிள்ளைகளும் உண்டு.

நேச. உண்டா? பின்னை நீ ஏன் அவர்களை உன்னோடே கூட்டிக்கொண்டு வரவில்லை?

கிறி. இப்படிக் கேட்டவுடனே கிறிஸ்தியான் அழுதுவிட்டான். அப்புறம் சொல்லுகிறான்: அவர்கள் கூட வந்திருந்தால் எனக்கு எவ்வளவோ சந்தோஷம் இருக்கும்! நான் மோட்சபிரயாணம் செய்வது அவர்களுக்கு முற்றிலும் விரோதமாய் இருந்தது.

நேச. நீ அவர்களோடே பேசி, இப்படி நீங்கள் கூட வராவிட்டால் இன்னமோசம் வரும் என்று அவர்களுக்கு உணர்த்திக்காட்டவேண்டியதாய் இருந்ததல்லவா?

கிறி. அப்படியே சொன்னேன்; தேவன் இந்தப் பட்டணத்தை அழிக்கும்படி தீர்மானித்திருக்கிறதைப்பற்றி எனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார், ஆகையால் என்னோடே சீயோனுக்குப் பயணப்படுங்கள் என்று அடிக்கடி சொன்னேன். இதுவன் சத்தம் கின்னரத்துக்கிசையுமோ என்கிறபடி, என் பேச்சு அவர்கள் மனதுக்கு ஏற்கவில்லை. என்னைப் பயித்தியகாரன் என்றே தீர்மானித்துப் போட்டார்கள். [2] அப்புறம் நான் என்னசெய்ய?

நேச. நீ அவர்களுக்குச் சொன்ன ஆலோசனையை தேவன் பலிக்கச் செய்யும்படி அவரை நோக்கி மன்றாடினதுண்டா?

---

[1] ஒரு மனுஷன் தன் ஆத்துமாவின் அருமையை உணர்ந்துகொண்டவுடனே தன் வீட்டாருடைய இரட்சிப்புக்காக முயலாதே பிரயாசப்படவேண்டும். என்ன பிரயத்தனத்தினாலாவது அவர்கள் நித்திய அழிவுக்குத் தப்பும்படி இயேசுவினிடத்திற்கு வர அவர்களை வழி நடத்தவேண்டியது.

[2] ஆதி. 19. 14.



கிறி. ஆம், மிகுந்த கனிவோடே ஜெபஞ்செய்ததுண்டு; ஏனெனில் என் மனைவியும் மக்களும் என்மேல் மட்டற்ற அன்புபாராட்டி வந்தார்கள் என்பதை நீ நினைத்துக்கொள்ளவேண்டியது.

நேச. சரிதான், ஆனால் உன் ஊர் நாசமாவதைப்பற்றிய அறிவு உனக்குத் தெளிவாய்த் தெரிந்ததுபோல் இருக்கிறதே; அந்த அறிவைப்பற்றி உன் மனதில் இருக்கிற துக்கத்தையும், பயத்தையும் எப்போதாவது அவர்களுக்குச் சொன்னாயா?

கிறி. ஒருதரமா? இரண்டுதரமா? நானுஞ் சொல்லிச் சொல்லி, என் மண்டையும் நொந்து, தொண்டையும் கம்மிப்போயிற்று. என் முகச்சாயலை அவர்கள் பார்த்தால் தெரியும். என் கண்ணீராவது காட்டும்; அழிவும் நியாயத்தீர்ப்பும் என் தலைமேல் இறங்கினதுபோல நான் நடுங்கிக்கொண்டு திரிந்ததினாலே அவர்கள் அறியலாம். நான் எவ்வளவு சொன்னாலும் என்ன? என்னோடே கூடப் புறப்படும்படி அவர்கள் மனதை ஏவுகிறதற்கு இவை எல்லாம் போதுமானதாய் இருக்கவில்லை.

நேச. அவர்கள் கூட வராததற்கு என்ன முகாந்தரந்தான் சொல்லக்கூடும்?

கிறி. முகாந்தரமா? என் மனைவி உலகத்தை விடுகிறதற்குப் பயந்தாள்; என் மக்களோ புத்தியீனமான வாலிப இன்பங்களில் பிரியங்கொண்டிருந்தார்கள்; இப்படி ஒருவருக்கு ஒரு வழி, இன்னொருவருக்கு வேறு கோளாறு, என்னை இப்படித் தனியே பிரயாணம்பண்ணும்படி விட்டுவிட்டார்கள்.

நேச. சரிதான், ஆனால் அவர்களை உன்னோடே வரும்படியாக உன் போதனைகளினால் சொன்னதெல்லாம், அவர்கள் மனதில் பலங்கொள்ளாதபடி உன் நடக்கையால் கெடுத்துப் போட்டாயாக்கும்?

கிறி. என் நடக்கையைக்குறித்து நான் மெச்சிக்கொள்ளக் கூடாதென்பது மெய்; அடிக்கடி நான் தீவழிகளில் விழுந்ததுண்டு, ஒருவன் தன் வாய்மொழிகளால் வற்புறுத்தி உணர்த்தின சத்தியங்களை, அதற்கு விரோதமான தன் நடக்கையினால் அபத்தமாக்கக்கூடும் என்றும் நான் அறிவேன். என்றாலும் நான் ஒன்று சொல்லக்கூடும்; பரிசுத்த பிரயாணம் போகும் ஆசையைக் கெடுத்துப்போடுவதற்கு ஏதுவான எந்தத் தகாத காரியத்தையும் செய்து, அவர்களுக்கு இடறலாய் இருந்ததில்லை என்பது நிஜம். இந்தக் காரியத்துக்காக நான் எவ்வளவோ கண்டிப்பாய் இருந்தேன் என்று அவர்களே என்னைக்குறித்து சாட்சிசொல்லக்கூடும்; அவர்கள் மனதில் தீமை அல்ல என்று காணப்பட்ட

கிரியைகளை முதலாய், அவ்சன்னிதியில் நான் செய்யாமல் இருந்தேன் என்றும் அவர்களே அறிக்கையிடுவார்கள். அதுவுமன்றி அவர்களுக்குத் தடை உண்டாக என்னிடத்தில் காணப்பட்ட செய்கை ஏதாவது இருக்கும் என்று சொன்னால், அவை பரிசுத்தமுள்ள தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடி பிரயாசப்பட்டதினிமித்தம் என்னுடைய பிறருக்கு எந்த விஷயத்திலும் பொல்லாப்புச் செய்யாதபடி நடக்க முயன்றதுமேயன்றி வேறொன்றும் இல்லை என்று நான் சொல்லக்கூடும் என்று எண்ணுகிறேன்.

தேச. மெய்தான்; காயீன் தன் சகோதரனைப் பகைத்தான், [a] ஏன் பகைத்தான்? "தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரன் கிரியைகள் நீதியுள்ளவைகளுமாய் இருந்ததினாலே தானே" பகைத்தான். உன் மனைவியும் மக்களும் நீ பொல்லாப்பை வெறுத்ததைவிட்டு உன்னை வெறுத்து, உன்மேல் கோபமுடையவர்களாய் இருந்தால், அவர்கள் நன்மையை நாடுகிறவர்கள் அல்லவென்று அதினாலே வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள்; நீ இரத்தப்பழியினின்று உன் ஆத்துமாவைத் தப்புவித்துக்கொண்டாய் [b] என்று சொன்னாள்.

இராச்சாப்பாடு.

இவ்வண்ணமான பல பேச்சுகளையும் பேசி இராச்சாப்பாடு ஆயத்தம் ஆகுமட்டும் [1] அவர்கள் காலம் கழித்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். சாப்பாடு தயாரானவுடனே பந்தியில் உட்கார்ந்தார்கள். பந்திமேசை கொழுத்த பதார்த்தங்களாலும், வடிகட்டித் தெளிவாக்கப்பட்ட திராட்சரசத்தாலும் நிறைந்திருந்தது. போஜனவேளையில் அவர்கள் பேசினதெல்லாம், அந்த மலையின் அதிபதியைக் குறித்த விஷயங்கள்தான். அவர் செய்த பல கிரியைகளும், அக்கிரியைகளைச் செய்த அவருடைய நோக்கமும், அந்த மாளிகையைக் கட்டின முகாந்தரமும் இன்னதென்று பேசினதுமன்றி, அவரைக்குறித்து அவர்கள் பேசின வார்த்தைகளால் அந்த மலைக்கு எஜமான் மா பராக்கிரம வீரர் என்றும், அவர் தமது வீரத்துவத்தால், மரணத்துக்கு அதிபதியாகிய பெரிய அரக்கனோடு போர்புரிந்து அவனைக்

[1] இராச்சாப்பாடு. இது கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருதலும் விசுவாசிகளின் ஞானபோஜனமுமாகிய கர்த்தருடைய ராப்போஜனத்தைக் குறிக்கிறது.

[a] 1 யோவா. 3. 12, [b] எசே. 3. 19.



கொன்றார் என்றும், [a] அந்தச் சண்டையில் அவர் அடைந்த சங்கடங்களுக்கும், அவருக்குண்டான அபாயங்களுக்கும் ஒரு கணக்கில்லை என்றும் அறிந்துகொண்டேன். இதினாலே நானும்கூட அவரை அதிகமாய் நேசிக்கும்படி ஏவப்பட்டேன்.

ஏனெனில் அவர்கள் பந்தியில் பேசிக்கொண்டபடிக்கும், நான் நம்புகிறபடிக்கும் அவர் அந்தப் போரில் அதிகமாய் இரத்தம் விட்டார் என்று கிறிஸ்தியான் சொன்னான். ஆனால் அவர் பட்ட அவஸ்தைகளெல்லாம் இந்த தேசத்தின்மேலுள்ள பூரண அன்பினால் பட்டார் என்கிற செய்தி அவருடைய எல்லாக் கிரியைகளையும் கிருபையின் மகிமையால் அலங்கரித்து சிறப்பிக்கிறது; மேலும் அந்த மாளிகையில் இருந்த சிலர், அந்தப் புண்ணியவான் சிலுவையில் மரணமடைந்தபிற்பாடு அவரைக் கண்டு அவரோடு பேசிக்கொண்டிருந்ததாகவும், நான் ஏழைப் பரதேசிகளையே நேசிக்கிறேன் என்று அவர் தமது திருவாயால் சொன்னதைத் தங்கள் காதாரக் கேட்டதாகவும் சொன்னதுமன்றி, சூரியன் உதிக்கும் திசை துவக்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் அவரைப்போலொத்த நேசர் அகப்படவேமாட்டார் என்றும் சொன்னார்கள். இப்படி அவர்கள் சொன்னது மிகவும் சரியென்பதைத் திருஷ்டாந்தப்படுத்தும் ஒரு காரியத்தையும் சொன்னார்கள்; அதாவது: ஏழைகளுக்கு இந்தச் சகாயத்தைச் செய்யும்படியாக அவர் தமது மகத்துவங்களையெல்லாம் உரிந்து போட்டாராம். மேலும் அவர் சீயோன்மலையில் தனிமையாக வாசஞ்செய்யமாட்டேன் என்று சொன்னதையும் கேட்டார்களாம். மேலும் இந்த மலையின் அதிபதியானவர், சுபாவத்தின்படி தரித்திரரும் குப்பைமேட்டில் கிடக்கிறவர்களுமாய் இருந்த அநேக பரதேசிகளைப் பிரபுக்களாக்கிவிட்டார் என்றும் சொன்னார்கள். [b]

இப்படிப் பலவாறாக அவர்கள் வெகுநேரமட்டும் சம்பாஷணை செய்துகொண்டிருந்தார்கள். அப்புறம் தேவபராமரிப்புக்குள் தங்களை ஒப்புவித்துக்கொண்டு அவரவர் கட்டிலில் இளைப்பாறும்படி எழுந்திருந்தார்கள். அந்த பிரயாணிக்கு ஒரு பெரிய மேலறையைக் காட்டினார்கள், அதின் ஜன்னல் சூரியன் உதிக்கும் திசையில் இருந்தது; அந்த மேல் அறைக்கு சமாதானம் [1] என்று பேர் வழங்கப்பட்டது. கிறிஸ்தியான் அதிலே

[1] சமாதானம் என்னும் மாடம்: இயேசுகிறிஸ்துவினால் நீதிமான்களாக்கப்படுகிறவர்கள் அநுபவிக்கிற மனச்சமாதானத்தைக் குறிக்கிறது. ரோம. 5. 1.

[a] எபி. 2. 14, 15. [b] 1 சாமு. 2. 8. சங். 113. 7.

படுத்திருந்து தூங்கி, கிழக்கு வெளுக்கும்போது எழுந்திருந்து பின் வரும் பாட்டைப் பாடினான்.

B. 7's.

நான் இங்கே இருப்பது
யேசு காட்டும் பட்சமோ?
இவ்விடு கிடைத்தது
யேசு தந்த தயவோ?
நீசப் பரதேசிக்கு
பாவத்தையும் மன்னித்தார்;
மோட்சத்தையுள் வீட்டிக்கு
என்னையுங்கொண்டு சேர்த்தார்.

சௌந்தரியமனையின் அதிசயங்கள், புஸ்தகசாலை.

அந்த மாளிகையில் உள்ளவர்களெல்லாரும் விழித்தெழுந்தபின் பாடு வேறு சில சம்பாஷணைகளைச் செய்தார்கள். அப்புறம் அவ்விடத்து அதிசயங்களையெல்லாம் அவனுக்குக் காண்பித்த பின்புதான் பயணம் புறப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதின்பின்பு முதலாவது அவ்வரண்மனையின் புஸ்தகசாலைக்குக் கூட்டிக்கொண்டுபோய் வெகு பூர்வமான காரியங்களெல்லாவற்றையும்[1] காட்டினார்கள். அந்த ஆவணங்களில் என் சொப்பனத்தில் நான் கண்டதாக ஞாபகம் இருக்கிறபடி அந்த மலையின் ஆண்டவருடைய வம்சாவளியை அட்டவணை இருந்தது. அந்த அட்டவணையிலே மலையாதிபர் நீண்ட ஆயுசானவருடைய குமாரன் என்றும், அநாதிநிலைமுறையாய்த் தோன்றினவர் என்றும் அவர்கள் காட்டினார்கள். மேலும் அதிலே அவருடைய கிரியைகள் விரிவாய்க் காட்டப்பட்டிருந்ததோடு, அவர் தமது ஊழியத்தில் அமர்த்திக்கொண்ட அநேகருடைய நாமங்களும், வருஷாதி வருஷங்கள் சென்றாலும் பருவகாலங்கள் மாறினாலும், அழியாமலும் மாறாமலும் இருக்கிற வாசஸ்தலங்களில் அவர்களைக் குடியேற்றினதுமான[*] விஷயங்களும் எழுதப்பட்டிருந்தன என்று கண்டேன்.

அப்பால் அவர்கள் மலையாதிபரின் தாசர் சிலருடைய மகிமையான ஊழியங்களில் சிலவற்றை வாசித்தார்கள். அதிலே

[1] பூர்வமான காரியங்கள் என்பது, இப்புஸ்தக ஆசிரியன் காலத்திலும் முத்திரையிடப்பட்டவைகளாய் இருந்த வேதாகமப் பகுதிகளைக் குறிக்கிறது.



அவர்கள் எவ்விதமாய் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், கட்கத்தின் கூருக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலங்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்கள் ஆனார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்[a] என்று நன்றாய் விளக்கப்பட்டிருந்தது.

அது முடிந்தபின்பு அந்தப் புஸ்தகசாலையின் வேறொரு இடத்திலிருந்து ஒரு நாளாகமப்புஸ்தகத்தை எடுத்து வாசித்தார்கள்; அதிலே தங்கள் ஆண்டவரை முன்னொருகாலத்தில் அவமதித்து, அற்பமாய் எண்ணின யாரானாலும் சரி அவர்களையும் அவர் திரும்ப ஏற்றுக்கொண்டு தமது தயவுக்குப் பாத்திரராக்கும்படி பிரியமுடையவராய் இருக்கிறார் என்கிற காரியம் எழுதப்பட்டிருந்தது. இவைகளையல்லாமல், பகைஞரைப் பயந்து நடுங்கச்செய்கிறதும், பிரயாணிகளுக்கு ஆறுதலை அளித்து அவர்களைப் பிரியப்படுத்தி வருகிறதுமான முன்கால சரித்திரங்களும், பின்கால நடபடிகளுமாகிய தீர்க்கதரிசனங்கள், முன் அடையாளங்கள், அவைகளின் நிறைவேறுதல் முதலியவைகள் அடங்கிய பல சரித்திர அம்சங்களையும் கிறிஸ்தியானுக்குக் காட்டினார்கள்; அதையெல்லாம் அவன் பார்த்தான்.

ஆயுதசாலை.

மறுநாள் அவர்கள் கிறிஸ்தியானை ஆயுதசாலைக்குக் கூட்டிப்போய், பிரயாணிகளுக்கென்று அம்மலையாதிபர் சம்பாதித்து வைத்திருக்கிற பல ஆயுதங்களாகிய பட்டயம், கேடகம், தலைச்சீரா, மார்க்கவசம், சருவஜெபமாலை, ஒருநாளும் தேய்ந்து போகாத பாதரட்சை முதலிய அனைத்தையும் காட்டினார்கள். அங்கிருந்த ஆயுதங்களின் தொகையைப் பார்த்தால், வானத்தின் நட்சத்திரங்களின் தொகை அவ்வளவு ஆட்களைப் போர்வீரராக ஆயுதந்தரிக்கவேண்டியதாய் இருந்தபோதிலும் போதுமானதாய் இருக்கும்.

மலைநாதருடைய தாசரில் சிலர் மகத்துவமான கிரியைகளைச் செய்து முடிக்கும்படியாகப் பிரயோகித்த பல இயந்திரங்களையும் கிறிஸ்தியானுக்குக் காட்டினார்கள். மோசேயின் கோலையும், யாகேல் சிசேராவின் சிரசில் கடாவிக்கொன்ற கடாரமுளையையும் சுத்தியையும், கிதேயோன் மீதியானியரைக் கலங்க

[a] எபி. 11. 33, 34.

டிக்கச் செய்த பந்தங்களையும் அவனுக்குக் காட்டினார்கள். அப்பால் ஷம்கார் அறுநூறுபேரை மடங்கடித்த தாற்றுக்கோலைக் காட்டினார்கள். சிம்சோன் பெலிஸ்தியரை அபஜெயப்படுத்தின தாடை எலும்பையும் காட்டினார்கள்; தாவீது காத் ஊரானாகிய கோலியாத்தை ஜெயித்த கவணையும் கூழாங்கற்களையும் காட்டினார்கள்; இவைகளையல்லாமல் அவர்களுடைய ஆண்டவர் தமது கோபத்தின் நாளிலே பாவ மனுஷனை சங்காரஞ்செய்யும்படிப் பிரயோகிக்கும் பட்டயத்தையும் கிறிஸ்தியானுக்குக் காட்டினார்கள். இன்னும் இவைபோன்ற அநேக விதமான ஆயுதங்களையும் அவர்கள் கிறிஸ்தியானுக்குக் காட்டினார்கள்; அவன் அவை அனைத்தையுங்கண்டு மிகுந்த சந்தோஷப்பட்டான். அப்புறம் அவரவர் இடத்தில் போய் இளைப்பாறினார்கள்.

ஆனந்த மலைக்காட்சி.

அதின்பின் நான் என் சொப்பனத்தில் கண்டதாவது: மறுநாள் அதிகாலையில் கிறிஸ்தியான் எழுந்து பயணம் புறப்பட ஆயத்தம் ஆனான். அப்போது அவர்கள், இல்லை இல்லை, இன்றைக்கு நின்றுபோ, மேகமந்தாரம் இல்லாவிட்டால் ஆனந்த மலைத்தொடரை[1] உனக்குக் காட்டுவோம். ஆனந்த மலைக்கும் மோட்சலோகத்துக்கும் இடைவெளி வெகு சமீபம்; அதையும் பார்த்துக்கொண்டால் உன் மனதுக்கு மெத்த ஆறுதலாய் இருக்கும் என்றார்கள். அதுகேட்டுக் கிறிஸ்தியான், உங்கள் மனதின்படியே ஆகட்டும் என்று பயணத்தை நிறுத்திவிட்டான். மறுநாள் அதிகாலையில் அவர்கள் அவனை வீட்டின் மேல்மெத்தையின் தளவரிசைக்குக் கூட்டிக்கொண்டுபோய் தெற்கே பார் என்றார்கள்; அப்படியே அவன் பார்த்தபோது, மகா மகிமையுள்ள காட்சிகளைத் தரும் இன்பமான மலைநாடு காணப்பட்டது. வானத்தை அளாவிய விருட்சங்களும், ஆகாயத்தை மூடிய கொடிமுந்திரிகைத் தோட்டங்களும், பலமாதிரிக் கனிவர்க்கங்களும், பூமியை அலங்கரிக்கும் புஷ்பாதிகளும் அவன் கண்ணுக்குத் தெரிந்தன. அந்த மலைச்சாரலில் வெள்ளிக் கம்பிகள்போன்ற கால்வாய்களும், வெள்ளைத் தப்பட்டி விரித்தாற்போன்ற சுனைகளும், தடாகங்களும் தெரிந்தன.[a] நிச்சய

[1] ஆனந்த மலைத்தொடர் என்பது, இவ்வுலகத்தில் விசுவாசிகளுக்குக் கிடைக்கும் அருளப்படுகிற மெய்த்தேவபக்தியின் பாக்கியங்களைப் பற்றிய பல பரவசமான எண்ணங்களைக் காட்டுகிறது.

[a] ஏசா. 33. 16, 17.



மாக அதைப் பார்ப்பதே ஆனந்தமாய் இருந்தது. அந்த மலைநாட்டின் பேர் என்ன என்று கிறிஸ்தியான் கேட்டான். அதற்கு அவர்கள்: மனுவேலர் மண்டலம் என்பதே அதின் பேர். இந்த மலையைப்போல அந்த மலைநாடு முழுவதும் மோட்ச பிரயாணிகளுக்குப் பொதுஸ்தலமாய் இருக்கிறது; நீ அங்கே சேரும்போது தேவநகரமாகிய மோட்சபட்டணத்தின் வாசல்கள் தெரியும், அங்குள்ள மேய்ப்பர் வெளிப்பட்டு நடமாடும் காட்சியால் அது உனக்குத் தெரியவரும் என்று சொன்னார்கள்.

கிறிஸ்தியான் ஆயுதந் தரித்தும் பயணம் புறப்படுகிறான்.

இதன்பின் கிறிஸ்தியான் தன் பிரயாணத்தை நடத்தும்படி ஆசைப்பட்டான்; அவர்களும், ஆம் ஆம், புறப்படு என்று சொல்லி, ஆனால் மறுபடியும் ஒருதரம் ஆயுதசாலையின் வழியாய்ப் போவோம் வா என்று அழைத்துக்கொண்டுபோய் எதாவது அபாயம் நேரிட்டால் அவனைப் பாதுகாக்கும்படியான பல ஆயுதங்களை அவன் உச்சிமுதல் உள்ளங்கால்வரையும் தரிப்பித்தார்கள்.[1] அவன் சர்வாயுதபாணியாய் அவர்களுடன் வாசலண்டைக்கு வந்து சேவகனைப் பார்த்து, பிரயாணிகள் யாராவது இவ்வழி போனார்களா என்று கேட்டான். ஆம், ஒருவன் போனான் என்று வாசல் சேவகன் சொன்னான்.

கிறி. அவன் இன்னான் என்று உமக்குத் தெரியுமா?

வா—சே. உன் பேர் என்ன என்று கேட்டேன்; என் பேர் உண்மை என்று சொன்னான்.

கிறி. உண்மையா போனான்? அவனை நான் அறிவேன்; என் ஊரான்தான்; என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரன்தான். நான் பிறந்த ஊரில் இருந்துதான் வருகிறான். இதற்குள்ளாக அவன் எவ்வளவு தூரம் போயிருப்பான் என்று நினைக்கிறீர்?

வா—சே. இதற்குள்ளாக அவன் மலை இறக்கத்துக்குப் போயிருப்பான் என்று நினைக்கிறேன்.

கிறி. நல்லது சேவகரே! கர்த்தர் உம்மோடே இருப்பாராக. நீர் எனக்குக் காட்டின அன்புக்காக தேவன் உம்மை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக என்று கிறிஸ்தியான் சொன்னான்.

[1] கிறிஸ்தவனுடைய சர்வாயுதவர்க்கத்தைக் குறித்த எபே. 6. 10—18 வரையும் பார்.

இதின்பின்பு அவன் விரைவாய்ப் பிரயாணஞ் செய்யும்படி ஆவலாய் வழிப்படுகிறான். அப்போது புத்தி, பயபக்திமணி, நேசமணி, விவேகி முதலிய கன்னிமாப்பெண்கள், அல்ல அல்ல, இம்மலையின் அடிவாரமட்டும் உன்னோடேகூட வந்து, அப்புறம் திரும்புகிறோம் என்றார்கள். அப்படியே ஆகட்டும் என்று அவன் சம்மதித்து, எல்லாரும் ஏகமாய் முன் பேசின விஷயங்களைக் குறித்தே சம்பாஷித்துக்கொண்டு, அடிவாரமட்டும் போனார்கள். இந்த மலையில் ஏறும்பொழுது எவ்வளவு வருத்தமோ அவ்வளவு இறங்கும்போதும் இருக்கிறது என்று காணக்கூடுகிறது என்று கிறிஸ்தியான் சொன்னான். அதற்கு விவேகி: அது மெய்யான வார்த்தை, இப்போது நீ போகிறாயே; அதைப்போல தாழ்மையின் பள்ளத்தாக்கைக் கடந்து போகிற எவனும் சறுக்கிவிழாமல் இருக்கமாட்டான். ஆதலால்தான் நாங்கள் அடிவாரமட்டும் உனக்குத் துணையாக வரும்படி ஆசைப்பட்டோம் என்றாள். அவன் எவ்வளவு எச்சரிக்கையோடு காலெடுத்து வைத்து இறங்கினபோதிலும் இரண்டொரு இடங்களில் சறுக்கிவிழுந்தான்.

மலையடிவாரம் சேர்ந்தபின்பு அவர்கள் கிறிஸ்தியானுக்கு ஒரு ரொட்டியும், ஒரு புட்டி திராட்சரசமும், ஒரு கொத்து முந்திரிகைக் குலையும் கொடுத்து வழியனுப்பிக்கொண்டு திரும்பினார்கள்.

## அப்பொல்லியோன் சந்திப்பு.

(தாழ்மைப் பள்ளம்.)

கிறிஸ்தியான் தாழ்மைப் பள்ளத்தில் சேருகிறான்.

கிறிஸ்தியான் தனிமையாய் தாழ்மை[1] என்னும் பள்ளத்தாக்கின் வழியாய் நடந்துபோகிறான். இந்தப் பள்ளத்தில் அவனுக்கு உண்டான அல்லல்களுக்கு அளவில்லை; எப்படியெனில் அவன் தன்னை வழிவிட்டனுப்பும்படி வந்த நாலு கன்னிகைப்பெண்களையும் விட்டுப் பிரிந்து சற்றுத்தூரம் வரவே, ஒரு அசுத்தரூபிப் பிசாசு அவனுக்கு

[1] தாழ்மையின் பள்ளம் என்பது, தேவனுடைய பிள்ளைகள் அவிக்குறிய பெருமையினுடைய அழிக்கப்போகாமைக்கு அவர்கள் தாழ்த்தப்படுகின்ற பல கஷ்டங்களைப் பிரவேசிக்கும் சமயங்களைக் குறிக்கிறது. இப்படிப்பட்ட சமயங்களில் கிறிஸ்தவனுக்கு ஆம், அதுமுதல் இல்லாமலும் இருப்பது மகா பிரயாசை.



எதிரே வந்தான். அவனுக்கு அப்பொல்லியோன்[1] என்று பேர். அவனைக் கண்டவுடனே கிறிஸ்தியான் கலங்கி, இவனை எதிர்க்கிறதா அல்லது திரும்பிவிடுகிறதா? ஏது செய்வது என்று தனக்குள் ஆலோசித்து, கடைசியாக, ஆனா, எனது முதுகைப் பேணிக்கொள்ளும் சீரா ஒன்றும் இல்லையே, பின்னிட்டுத் திரும்பினேனானால், "அப்பொல்லியோனின் அம்புகள் சொரி மழையில் பாய்வதுபோல, என் திறந்த முதுகில் பாயும்; அப்புறம் நான் எது பிழைப்பது? ஆகையால் நின்று நிலைபேராமல் எதிர்ப்பதே புத்தி; என் ஜீவனைப் பேணவேண்டும் என்று இருந்தால் பின்வாங்கல் ஆகாது என்று தீர்மானித்துக்கொண்டான்.

அப்பொல்லியோன் சந்திக்கிறான்.

இத்தீர்மானத்தோடு பின்னும் கொஞ்சதூரம் செல்லவே, அப்பொல்லியோன் அவனுக்கு எதிர்ப்பட்டான். அந்த இராட்சதனின் ஆலங்கோலரூபத்தை என்னசொல்வேன்! பார்த்தவுடனே உடம்பு சிலிர்த்துவிடும். அவன் தேகம் மீன்செதிள்போல் இருந்தது; அதுவே அவனுடைய பெருமையாய் இருந்தது. வல்ல சர்ப்பத்தைப்போல அவனுக்குச் செட்டைகளும், கரடியைப்போல அவனுக்குக் கால்களும் இருந்தன. அவன் வயிற்றுக்குள்ளிருந்து அக்கினியும் புகைக்காலும் புறப்பட்டன. சிங்கத்தின் வாயைப்போல வாயும் அவனுக்கு இருந்தது. அவன் கிறிஸ்தியானைக் கண்டவுடனே, ஏளனமாய்ச் சிரித்து, முறைத்துப் பார்த்துக்கொண்டு பின்வருகிறபடி கேட்டான்.

அப். நீ எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே பிரயாணம் போகிறாய்?

கிறி. சகல ஆசாரியங்களுக்கும் உறைவிடமாய் இருக்கிற நாசபுரியிலிருந்து புறப்பட்டு சீயோன் நகருக்குப் போகிறேன்.

[1] அப்பொல்லியோன். எபிரேய பாஷையில் அபத்தோன் என்று அழைக்கப்படுகிறதுபோல, கிரேக்கு பாஷையில் அவன் "அப்பொல்லியோன்" என்று அழைக்கப்படுகிறான். வெளி. 9, 11; இவ்விருபதங்களும் "அழிப்பவன் அல்லது நாசகாரன்" என்னும் பொருளைக் கொடுக்கிறது. ஒரு கிறிஸ்தவன் சமயத்திலும், அக்கிரமத்திலும் வருந்துகையில், அவன் தன் பக்தியை விட்டுவிடவும், பலமான சோதனைகளுக்கு மனதையும் திருப்பவும் சாத்தான் அவனை ஏவுகிறான்.

அப்பொல்லியோனுக்கும் கிறிஸ்தியானுக்கும் நடந்த சம்வாதம்.

அப். அப்படியானால் நீ நம்முடைய குடிகளில் ஒருவன் என்று வெளியாகிறது. அதெல்லாம் நம்முடைய தேசம் ஆயிற்றே, அதின் ஆண்டவனும் அதிபதியும் நாம்தான். காரியம் இந்தப்படி இருக்க நீ உன் அரசனை விட்டுப் பிரிய துரோகஞ்செய்த காரணம் என்ன? நீ இன்னும்



நமது அடிமையாய் இருந்து நமக்குத் தொண்டுசெய்வதான பூரண நம்பிக்கையைத் தராதபட்சத்தில், ஒரே அடியில் உன்னை அதோகதி ஆக்குவேன் பார்.

கிறி. உன் அரசாட்சிக்குட்பட்ட தேசத்தில் நான் பிறந்தது மெய்தான்; ஆனால் உனக்கு ஊழியஞ்செய்ய என்றால் இயல



வில்லை. வேலைவாங்கினாலும் கூலிகொடாதவனிடத்தில் எவன்தான் இருப்பான்? நீ கொடுக்கும் கூலி அரைவயிற்றுக்குப் பற்றுமா? பாவத்துக்குச் சம்பளம் மரணந்தானே. அதினாலே எனக்குப் புத்தி தெளிந்தபின்பு, தெளிந்த புத்தியுள்ள பலரும் செய்கிறதுபோல என் வாழ்வுக்கு அநுகூலமான வழியை நான் தேடிக்கொண்டேன்.

அப். எந்த ராஜாவானாலும் இப்படித் தன் குடிகளை இவ்வளவு லேசாய் இழந்துபோகமாட்டான்; நாமும் உன்னை இழந்துவிட இடங்கொடுக்கமாட்டோம். ஆனால் நீ நம்முடைய வேலை கடினம் என்றும், கூலி கொஞ்சம் என்றும் முறையிடுகிறாயே; நல்லது, அதை உன் மனதின்படியே ஒழுங்குசெய்து கொள்ளலாம். நீ திரும்பவும் நம்முடைய நாட்டுக்குப் போய், பழையபடி உன் வேலைகளைச் செய்; நமது நாட்டின் வருமானங்கள் எவைகள் உண்டோ அவைகளை உன் மனம்போல தரும்படி நாம் இதோ வாக்குக்கொடுக்கிறோம்.

கிறி. நான் ராஜாதிராஜாவுக்கு என்னை ஒப்புவித்து அவருக்கு அடிமையாகிவிட்டேன்; ஆகையால் இனிமேல் திரும்பி உன் பிறகாலே வருகிறது நியாயமாய் இருக்குமா?

அப். நீ பேசுகிறதைப் பார்த்தால் "நிலைமையை விட்டுவிட்டு அதிநிலைமையில் விழுந்தான்" என்கிற பழமொழிபோல் இருக்கிறது; போயும் போயும் அங்கேயா சேர்ந்தாய்? ஆனால் போனது போகட்டும், நம்மை விட்டுப்போட்டு அவருக்கு அடிமைகள் ஆகிறவர்கள் கொஞ்சக்காலத்துக்குப்பின்பு வழுவாய் அவரை விட்டு விலகி மறுபடியும் நம்மிடத்திற்கே வந்துவிடுகிறது உண்டு; நீ அந்தப்படியே வந்துவிட்டால் எல்லாக் காரியமும் உனக்கு க்ஷேமமாய் இருக்கும்.

கிறி. நான் ஆணையிட்டு, சத்தியம்பண்ணி, இனி நான் உமக்கே அடிமை என்று என்னை ஒப்புவித்தாயிற்று; அதை நான் மீறி நடந்தால் என்னைப்போல் துரோகி இல்லை; அப்படிப்பட்ட துரோகியைத் தூக்கிப்போடவேண்டாமா?

அப். நீ நமக்கும் இப்படியே துரோகம் செய்திருக்கிறாயே; இப்பொழுது நீ நம்முடைய பேச்சைக் கேட்டுத் திரும்பிவிடுவாயானால் நாம் அதையெல்லாம் மறந்துபோவோமே.

கிறி. எனக்குப் புத்தி தெரியாதகாலத்தில் நான் உனக்கு அடிமையாய் இருக்க வாக்குக் கொடுத்தது உண்டு; நான் இப்பொழுது யாருடைய கொடியின்கீழ் இருக்கிறேனோ அவர் எனக்கு அதை மன்னித்து, உனக்கு உட்பட்டிருந்த காலத்தில் நான் நடப்பித்துவந்த பாவங்களையெல்லாம் மறந்துபோவார் என்று உறு

தியாய் நம்புகிறேன். நாசகாலனாகிய அப்பொல்லியோனே, பின்னும் கேள்: உள்ளபடி சொன்னால் அவருடைய வேலையையும், அவர் தரும் கூலியையும், அவருடைய ஊழியக்காரரையும், அவருடைய ஆளுகையையும், அவருடைய தாசனையும், அவருடைய தேசத்தையுமே நான் விரும்புகிறேன். ஆதலால் நீ இனி வம்பும் தும்பும் பேசி என்னை வழி மறிக்கவேண்டாம்; நான் அவருடைய ஊழியன், அவரையே பின்தொடருவேன்.

அப். நீ கலங்காத மனச்சந்தோஷத்தோடே போகிறாயே, வழியில் உனக்கு உண்டாகும் நாசமோசங்களைப் பற்றியாவது சற்று யோசித்துப்பார். நமக்கு இரண்டகம்பண்ணி நம்முடைய வழிகளில் நடவாத அவருடைய ஊழியக்காரர் எல்லாருக்கும் எவ்வளவு கேவலமான முடிவு வந்திருக்கிறது என்று உனக்கே தெரியுமே. அப்படிப்பட்டவர்கள் எத்தனையோ பேர் அவமானமான மரணம் அடைந்திருக்கிறார்கள்; அது போகட்டும், நமது ஊழியத்தைப்பார்க்கிலும் அவருடைய ஊழியத்தை உயர்த்திப் பேசுகிறாயே, அவர் தம்மைச் சேவிக்கிறவர்களுக்குச் சகாயம் செய்யும்படியாக, எப்போதாவது தாம் இருந்த இடத்தைவிட்டு அசைந்தது உண்டா? சொல்லு. நம்முடைய குணமோ அப்படி அல்ல, வல்லமையினாலாவது, தந்திரத்தினாலாவது நாடும் உலகமும் அறிந்தபடி, நம்மை அடுத்தவர்களுக்குச் சகாயம் செய்யவும், அவர்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போனாலும் அவர்களை அவருடைய கைக்கும், அவருடைய ஊழியக்காரருடைய கைக்கும் தப்புவிக்கும்படியாகவும், படாதபாடெல்லாம் பட்டு, செய்யாத பிரயத்தனம் எல்லாஞ் செய்கிறோம்! அந்தச் சகாயத்தை உனக்கும் செய்வோம் என்று நம்பு.

கிறி. அவர் இப்பொழுது அவர்களுக்கு உதவிசெய்யப் பின்வாங்குகிறதுபோல் இருப்பது, அவர்கள் முடிவுபரியந்தம் தம்மைப் பற்றிக்கொள்ளுவார்களோ அல்லவோ என்று அவர்களுடைய அன்பைப் பரிசோதிக்கவேயல்லாமல் வேறு காரணத்தால் அல்ல. நீ அவர்களுடைய முடிவைப்பற்றி, அது அவமானமுள்ள முடிவு என்றல்லோ சொல்லுகிறாய்; அவர்களுக்கு அதுதான் மகிமையுள்ளதாக எண்ணப்படுகிறது. ஏனெனில் தற்கால விடுதலையை அவர்கள் அவ்வளவாய் நாடாமல், பிற்கால மகிமைக்காக எதிர்நோக்கிக் காத்திருக்கிறார்கள். அவர்களுடைய அதிபதி தமது மகிமையோடும், தமது தூதருடைய மகிமையோடும் வருங்காலத்தில் அதை அவர்கள் பெற்றுக்கொள்ளுவார்கள்.



அப். அவரிடத்தில் ஊழியத்துக்கு அமர்ந்து இவ்வளவு காலத்துக்குள்ளாக நீ காண்பித்திருக்கிற உண்மைத்தாழ்ச்சி அதிகமாய் இருக்கிறதே; இனி அவரிடத்தில் கூலிவாங்கிச் சுகிக்கலாம் என்று எண்ணுகிறாயோ?

கிறி. எந்த விஷயத்தில் நான் அவர் ஊழியத்தில் உண்மை அற்றவனாய் நடந்திருக்கிறேன்? சொல்லு, அழிம்பனே!

அப். நம்பிக்கையிழவில் நீ விழுந்து திக்குமுக்கடைந்தபோது என்தான் வந்தேன் என்று பயந்தாய்; உன் அதிபதி உன்னுடைய சுமையை இறக்கும்காலத்துக்கு நீ காத்திராதபடி வேறுவழியாய் நடந்து அதைச் சீக்கிரம் இறக்கிவிடவேண்டும் என்று போனாய்; நீ அக்கிரமத்தால் தூங்கி உனக்கு அவசியமான பொருட்களை இழந்தாய்; சிங்கங்களைக் கண்டவுடனே திரும்பி ஓட்டம்பிடிக்கக் காலெடுத்து வைத்தாய்; உன் பிரயாணத்தைப் பற்றியாவது, நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் பற்றியாவது சொல்லும்போது வீண் மகிமையைக் காமிக்கட்டவே உன் உள்ளத்துக்குள் இருக்கிறது, இவையெல்லாம் உண்மைத்தாழ்ச்சி அல்லவா?

கிறி. இதெல்லாம் உள்ளதுதான்; இன்னும் நீ சொல்லாமல் விட்டவை அநேகம் உண்டு. என்றாலும் நான் கனப்படுத்திச் சேவிக்கும் மாபிரபு, இரக்கமும் மன்னிக்கும்படி ஆசையும் உடையவராய் இருக்கிறார். ஆனால் இந்தப் பலவீனங்கள் உன் நாட்டில்தான் என்னைத் தொற்றிக்கொண்டது; அந்த ஆகாரியங்களின் முலைப்பாலே அங்கேதான் நான் உண்டு, அவைகளின்கீழ் அகப்பட்டுக்கொண்டு பெருமூச்சு விட்டேன்; இப்பொழுது அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு, என் அதிபதியினிடத்தில் மன்னிப்பையும் பெற்றுக்கொண்டேன் என்றான்.

அப். இப்படிச் சொன்னவுடனே அப்பொல்லியோன் பெருஞ்சத்தம் போட்டு உக்கிரகோபத்தோடு, நான் அந்த அதிபதியின் விரோதி; நான் அவரையும் அவருடைய சட்டங்களையும், அவருடைய ஜனங்களையும் பகைக்கிறேன்; உன்னோடு போர் புரியவே இங்கே எழுந்தருளினோம் என்று முழங்கினான்.

கிறி. முழக்கவே கிறிஸ்தியான்: அப்பொல்லியோனே கேள்! நீ செய்யப்போகிறதைக்குறித்து எச்சரிக்கையாய் இரு; ஏனெனில் நான் பரிசுத்த மார்க்கமாகிய ராஜபாதையில் இருக்கிறேன், ஆதலால் பத்திரமாய் நடந்துகொள் என்றான்.

அப். அதைக் கேட்டவுடனே அப்பொல்லியோன் தன் இரண்டு கால்களையும் அகலவிட்டுவைத்து, பாதை முழுவதையும் மறித்துக்கொண்டு, என்னவந்தாலும் அஞ்சேன், நீ சாகும்படி தயா

ராய் இரு; நாம் வசிக்கும் பாதாளலோகப் பகுதியின்மேல் ஆணைப்படிக்கு நீ இதற்கப்பாலே போகமாட்டாய்; உன் ஆத்துமாவை இந்த இடத்திலேயே சிதறித்துவிடுகிறேன் பார் என்று சொல்லிக்கொண்டு, ஒரு அக்கினி அஸ்திரத்தை அவன் மார்புக்கு எதிரே விட்டான். கிறிஸ்தியான் கையில் ஒரு கேடகம் இருந்ததால்[1] அதைக்கொண்டு அஸ்திரத்தைத் தடுத்து ஆபத்துக்குத் தப்பிப் பிழைத்தான்.

கிறிஸ்தியான் அப்பொல்லியோனோடே போர்புரிகிறான்.

உடனே கிறிஸ்தியான் இனி நின்றால் காரியம் இல்லை, ஒரு கை பார்க்கத்தான் வேண்டும் என்று கிட்ட நெருங்கினான். நெருங்கவே கல்மழை சொரிந்தாற்போல் சரமாரியாய் அப்பொல்லியோன் அக்கினி அஸ்திரங்களை அவன்மேல் விட்டான். கிறிஸ்தியான் எவ்வளவு சாமர்த்தியமாய் அவைகளைத் தடுக்க முயன்றாலும் அப்பொல்லியோனின் அம்புகள் அவனைத் தலையிலும், கையிலும், காலிலும் காயப்படுத்தின.[2] கிறிஸ்தியான் பட்ட காயங்களினாலே சற்றுப் பின்வாங்கினான், பின்வாங்கவே அப்பொல்லியோன் வீரங்கொண்டு முன்னேறி கணக்கற்ற அஸ்திரங்களை முன்போல விட்டான். கிறிஸ்தியானும் தைரியம் அடைந்து வெகு சாமர்த்தியமாய் அந்த அஸ்திரங்களைத் தடுத்தான்; இந்தப் போர் அரைநாள் மட்டும் நடந்தது; கிறிஸ்தியானும் களைத்துச் சோர்ந்துபோனான்; ஏனெனில் கிறிஸ்தியானுக்கு உண்டான பலகாயங்களினால் அவன் வரவரப் பலவீனமும், ஆயாசமும் அடைவான் என்று நீயே அறிந்துகொள்ளவேண்டியது.

அப்பால் அப்பொல்லியோன் சமயம்பார்த்து, கிட்டநெருங்கி, மல்லுக்கட்டி கிறிஸ்தியானைக் கீழேவிழத் தள்ளினான்.

---

1 கேடகம் (விசுவாசம்) என்பது, தேவனுடைய வாக்கினாலே உண்டான விசுவாசத்தைக் குறிக்கிறது; இதினால் அக்கினியாணங்களை ஒத்த ஆகாத நினைவுகள் எல்லாவற்றையும் அவித்துப்போடலாம்.

2 பனியன் என்பவர் இந்த வாசகத்தை, கிறிஸ்தியான் தன் புத்தியிலும், விசுவாசத்திலும், சம்பாஷணையிலும் காயப்பட்டான் என்று சொல்லி விஸ்தரித்திருக்கிறார். அவன் மனதின் காரியங்கள் முன்போல் அவ்வளவு தெளிவாய் அவனுக்குத் தெரிகிறதில்லை; அவன் விசுவாசம் முன்போல பலமாய் இருக்கிறதில்லை. அவன் நடக்கையும் அவ்வளவு சீராய் இல்லை. மெய்யான கிறிஸ்தவன் முதலாய் சோதனைக்கு இடங்கொடுத்தபோதிலும். அதற்கு விரோதமாய் யுத்தம் செய்கிறான்.



தள்ளவே அவனுடைய பட்டயம்[1] கையிலிருந்து நழுவி தூரத்தில் விழுந்துவிட்டது. அதைக் கண்ட அப்பொல்லியோன்: பயலே அகப்பட்டாய், இப்போது உன் உயிர் என் கையில் இருக்கிறது என்பது நிச்சயம் என்று சொல்லி அவன் மூர்ச்சையாகுமட்டும் நசுக்கினான்; கிறிஸ்தியானும் "நான் இதோடு தொலைந்தேன்" என்று எண்ணிவிட்டான். கடைசியாக அப்பொல்லியோன், அந்த நல்ல மனுஷனை இதோடு கொன்றுபோடும்படி தீர்மானித்து, கையை ஓங்கினான்; ஆனால் ஜெயம் கர்த்தருடையதாகும்படி[2] அவர் சித்தங்கொண்டதால், ஓங்கின குத்து விழுகிறதற்குள்ளாக அவன் தன் கையை மெதுவாய் நீட்டி, விழுந்துபோன தன் பட்டயத்தை மறுபடியும் எடுத்துக்கொண்டு, என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே; நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்[a] என்று சொல்லிக்கொண்டு ஒரே குத்தாய்க் குத்தினான். குத்தவே அப்பொல்லியோன் சாவுக்குத்து விழுந்தவன்போல் பின்வாங்கினான். அது கண்ட கிறிஸ்தியான் தைரியங்கொண்டு, "இவைகள் எல்லாவற்றிலேயும் நாங்கள் எங்களில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம்"[b] என்று சொல்லிக்கொண்டு அவன்மேல் விழுந்து அவனைக் குத்தி மடங்கடித்தான். அதோடு அப்பொல்லியோன் தன் வல்லசர்ப்பச் செட்டைகளை விரித்துக்கொண்டு பறந்துபோய்விட்டான். கிறிஸ்தியான் அவனை அப்புறம் கண்டதே இல்லை.[c]

அப்பொல்லியோன் அபஜெயம்.

இந்தப் போர் நடந்த சமயத்தில் அப்பொல்லியோன் போட்ட சத்தமும், இட்ட முழக்கமும் மகா பயங்கரமாய் இருந்தது. என்னைப்போல கிட்ட நின்று பார்த்தவர்களுக்கும் கேட்ட

---

1 பட்டயம். இது தேவவசனத்தைக் குறிக்கிறது. இயேசுகிறிஸ்து "எழுதி இருக்கிறதே" என்று சொன்ன சமயத்தில் அதைக்கொண்டே சாத்தானை எதிர்த்தார். கிறிஸ்தியான் கையிலிருந்த பட்டயம் விழுந்துவிட்டது என்பது, அவன் தேவனுடைய வசனத்தினால் தனக்கு யாதொரு பாக்கியமும் கிடைக்கமாட்டாது என்று நினைக்கும்படியான சோதனைக்குட்பட்ட சமயத்தைக் குறிக்கிறது.

2 தேவன் தமது பிள்ளைகளுக்கு உண்டாகும் சோதனைகளையெல்லாம் விழிப்போடு பார்த்துக்கொண்டிருக்கிறார்; அவர்கள் சகிக்கிறதற்கு மிஞ்சி சோதிக்கப்பட அவர் இடங்கொடாமல், கடைசியில் அவர்கள் அதிகமாய் ஜெயங்கொள்ளும்படி கிருபைசெய்கிறார்.

a மீகா. 7. 8. b ரோ. 8. 37. c யாக். 4. 7.

வர்களுக்குமே அன்றி மற்றவர்களுக்கு அதின் தன்மை தெரியாது. அவன் வலுசர்ப்பத்தைப்போல பேசினான்; அவனுடன் போர்புரிந்த கிறிஸ்தியானுடைய இருதயத்திலிருந்து வியாகுலங்களும், பெருமூச்சுகளும் புறப்பட்டன. அவர்கள் இருவருக்கும் சண்டை நடந்துகொண்டிருக்கையில் நான் கிறிஸ்தியானுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். ஒரு அற்பச் சந்தோஷமாவது அவன் முகச்சாயலில் காணப்படவில்லை; தன் பட்டய நுனியால் அப்பொல்லியோனைக் குத்தி மலத்தினதுமுதல்தான் அவன் முகம் சந்தோஷமாய்த் தோன்றிற்று; அப்போது அவன் புன்னகைகொண்டு வானத்தை அண்ணாந்துபார்த்தான். நானும் கண்டேன், கேட்டேன்; இப்படிப்பட்ட பயங்கரமான யுத்தம் நடந்திருப்பதே இல்லை.

போர் முடிந்தபின்பு கிறிஸ்தியான் என்னைச் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சித்தவரும், அப்பொல்லியோனின் கைக்குத் தப்பும்படி சகாயம் செய்தவருமான என் பத்தாவை இந்த இடத்திலேயே துதிப்பேனாக என்று சொல்லி;

ஆனந்தக் களிப்பு.

துத்தியம், துத்தியம் என்றும்—திருநாமத்
துயயேசுநாதனைத் துதிப்பேனே என்றும்
துட்டனை நான் வெல்லமுற்றும்—அருள்தந்த
துரையேசுநாதரே! துத்தியம் என்றும்.

1. போராகும் பேயல்லோனுடனும்—என்னோடு
போராட அறியவே விட்டானே பாரும்
அக்கினிப் பாணங்களேவிட்டும்—இன்றவனை
விட்டேனோ? நான் அவனை விட்டேனோ? கேளும்— துத்தி.

2. பாதாளபூத அப்பொல்லோன்—தாக
கோபவெறி, சாபவெறி, மூர்க்கவெறி கொண்டோன்
விட்டானே பாணங்கள் என்மேல்—என்றாலும்
விட்டேனோ? நான் அவனை விட்டேனோ? கேளும்— துத்தி.

3. மித்தான ஆதர்மிகாவேல்—துணைதந்தார்
வாள்வீசி வெற்றிபெற அவன்மேல்
குத்தினேன் பட்டயநுனியால்—உடனே
பறந்தானே இனிமேல் தொடானே என்மேல்— துத்தி.

என்று இந்த ஆனந்தக்களிப்பைப் பாடினேன்.



அச்சமயத்தில் ஜீவவிருட்சத்தின் இலைகளை ஏந்திய ஒரு கை[1] அவனிடத்திற்கு நீட்டப்பட்டது. அவன் அதை வாங்கி போரில் உண்டான பலகாயங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இலையைக் கிள்ளிவைத்தான். அக்ஷணமே அந்தக் காயங்கள் குணமாயின; அவன் சற்றுநேரம் அவ்விடத்தில் உட்கார்ந்து, கன்னிமைப்பெண்களால் வழிக்கென்று கொடுக்கப்பட்ட அப்பத்தைப் புசித்து, திராட்சரசத்தைப் பானம்பண்ணி இளைப்பாறினான். சற்று நேரம் ஆனபின் அவன் மறுபடியும் பயணம்பண்ண எழுந்து, இன்னும் எந்தச் சத்துரு வருமோ தெரியுதில்லை, ஆனதால் பட்டயமும் கையுமாய் இருப்பதே யுக்தம் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு உருவின வாளோடு புறப்பட்டான். அந்தப் பள்ளத்தாக்கைக் கடக்கும் மட்டும் அப்பொல்லியோனால் வேறு யாதொரு தொந்தரவும் அவனுக்கு உண்டானதில்லை.

## பிரயாணி மரணநிழல் பள்ளத்தாக்கைக் கடக்குதல்.

மரணநிழலின் பள்ளத்தாக்கு.

தாழ்மையின் பள்ளத்தாக்கின் அந்தத்தில் மரணநிழல்[2] என்னப்பட்ட வேறொரு பள்ளத்தாக்கும் இருந்தது. உத்தரபட்டணத்தின் பாதை அதினூடே போனதால் கிறிஸ்தியான் அந்தப் பள்ளத்தாக்கையும் கடந்துபோக வேண்டியவனாய் இருந்தது. இது ஒரு ஏகாந்தவெளியாய் இருந்தது. இதின் தன்மையைக் குறித்துத் தீர்க்கதரிசியாகிய எரேமியா "அவாந்தரவெளியும், பள்ளங்களுள்ள தேசம், வறட்சியும் மரண இருளுமுள்ள தேசம்" என்றும், கிறிஸ்தியானையன்றி "ஒருவனும் கடவாததும் ஒரு மனுஷனும் குடியிராததுமாய் இருக்கிற தேசம்"[a] என்றும் சொல்லியிருக்கிறார். இங்கே கிறிஸ்தியான் அனுபவித்த துன்பங்கள் அப்பொல்லியோனின் அம்பு

[1] ஒரு கை என்பது, பலத்த சோதனைக்குப்பின்பு தேவன் தமது ஊழியக்காரனைக்கொண்டு அருளும் ஆறுதல்களைக் குறிக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவன் பாவமன்னிப்படைந்தேனென்றபொழுது சமாதானம் மறுபடியும் அருளப்படுகிறது.

[2] மரணநிழலின் பள்ளத்தாக்கு என்பது, ஒரு கிறிஸ்தவன் பயத்தினாலும் சந்தேகத்தினாலும் நிறைந்து, தேவபக்திக்கேதுவான முயற்சிகளில் இன்பங்கொள்ளாதிருக்கிற ஒரு சமயத்தைக் குறிக்கிறது.

[a] எரே. 2. 5.

களாலும் உண்டான படுகாய கோவிலும் பதின்மடங்கு அதிகம் என்று பின்வரும் குறிப்புகளால் நீ அறிந்துகொள்வாய்.

அப்பொழுது நான் என் சொப்பனத்திலே கண்டதாவது: கிறிஸ்தியான் தாழ்மைப் பள்ளத்தாக்கைக் கடந்து மரணப்பள்ளத்தின் எல்லையை மிதிக்கையில் நல்ல தேசத்தைக்குறித்து கெட்டசாட்சி சொன்னவர்களின் புத்திராகிய[a] இரண்டு மனுஷர்[1] கிறிஸ்தியானுக்கு எதிர்ப்பட்டு, போ, போ திரும்பிப் போ என்று சொன்னார்கள். அவர்களைப் பார்த்துக் கிறிஸ்தியான் கேட்கிறான்:

கிறி. நீங்கள் எங்கே போகிறீர்கள்?

மனு. திரும்பி, திரும்பி, திரும்பிப்போகிறோம். உன் ஜீவனையும் சமாதானத்தையும் நீ தேடினால் திரும்பிவிடுவது நலம் என்று சொல்லுகிறோம்.

கிறிஸ்தியானும் பேடிச்சாட்சிக்காரரும்.

கிறி. ஏன்? அப்படி என்ன விசேஷம் அங்கே இருக்கிறது?

மனு. விசேஷமா? நீ போகிற வழியிலேயே எங்களால் கூடியமட்டும் நடந்துபோனோம். கூடக் கொஞ்சத்தூரம்மாத்திரம் நாங்கள் போனது மெய்யானால் இதற்குள் நாசந்தான். நல்ல வேளையில் திரும்பிவந்துவிட்டோம்; மற்றப்படி உனக்குச் செய்தி சொல்ல வந்திருக்கமாட்டோம்.

கிறி. உங்களுக்கு நேரிட்டதுதான் என்ன? சொல்லுங்களேன்.

மனு. நேரிட்டதா? நாங்கள் மரணநிழலின் பள்ளத்தாக்குக்குள் கொஞ்சங்குறையப் புகுந்துவிட்டோம், எங்களுக்கு நற்காலம் இருந்ததென்று சொல்லவேண்டும். கண்ணை விறைத்துப் பார்க்கவே அங்கிருந்த மோசங்கள் எல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்தது.[b]

கிறி. நீங்கள் அங்கே கண்டதுதான் என்ன?

மனு. கண்டதா? அந்தப் பள்ளம் கருங்கிலேப்போல் கரேல் என்று இருட்டாய் இருக்கிறது. அதனுள் காளிகளையும், கூளிகளையும், காட்டேரிகளையும், வல்லசர்ப்பங்களையும் கண்டோம். விலங்கு மாட்டப்பட்டு வாயால் சொல்லக்கூடாத வலியுந்தன்

[1] இரண்டு மனுஷர். இவர்கள் இரட்சணிய மார்க்கத்தின் காரியபாகங்கள் எல்லாவற்றையும் பரிசோதனைசெய்து, அதினால் மெய்ப்பாக்கியம் உண்டாகிறதில்லை என்று அறிந்துகொண்டதுபோல சொல்லுகிறவர்களுக்குச் சமமானவர்கள்.

[a] எண். 13. 32. [b] சங். 44. 19; 107. 10.



பங்களை அனுபவிக்கிற ஜனக்கூட்டம் இடும் கூக்குரலையும், புலம்பலையும் அங்கே கேட்டோம். அதைரியத்தை உண்டாக்கும் கலக்கம் என்னும் கார்மேகம் அப்பள்ளத்தாக்கைக் கவிந்துகொண்டிருக்கிறது. ஒரு வேளைவேளை மரணமும் தன் செட்டைகளை அதின்மேல் விரிக்கிறதும் உண்டு; மொத்தமாய்ச் சொன்னால் அங்கே நோக்கும் திசையும், பார்க்கும் பக்கமும் எல்லாம் குழப்பமும் பயமுமாய் இருக்கிறது அப்பா![a]

கிறி. நீங்கள் சொல்லுகிறது எல்லாம் மெய்யானால், நான் நாடிய தேசத்திற்குப் போகும்வழி இதல்ல என்று இன்னும் எனக்குத் தோன்றுகிறதில்லையே.[b]

மனு. இதுதான் உன் பாதையாய் இருந்தால் இருக்கட்டும்; எங்களுக்கு இந்தச் சங்கடம் வேண்டியதில்லை; நாங்கள் எங்கள் பாட்டிலே போகிறோம் அப்பா என்று சொல்லிக்கொண்டு தங்கள் வழியே திரும்பிப்போனார்கள்.

கிறிஸ்தியானோ, வழியில் சத்துருக்கள் வந்து எதிர்த்தாலும் எதிர்ப்பார்கள் என்று அஞ்சி உருவின பட்டயமும் கையுமாய் முன்னுக்கு நடந்துபோனான் என்று என் சொப்பனத்திலே கண்டேன்:

மரணநிழலின் பள்ளத்தாக்கின் நெடுக, பாதையின் வலது பக்கத்தில் கெடுபாதாளம் இருந்தது;[1] இந்தப் பாதாளத்தில்தான் காலாகாலங்களாய்க் குருடருக்கு வழிகாட்டின குருடர் எல்லாரும் ஏகமாய் விழுந்து மாண்டார்கள். அதுமாத்திரமோ? பாதையின் இடதுபக்கத்தில் மோசமான ஒரு சேற்றுப்பள்ளம் இருந்தது;[2] அதிலே எப்படிப்பட்ட நல்லவன் விழுந்தாலும் மறுபடியும் கால் ஊன்றி நின்றுகொள்ள வகை காணமாட்டான். இந்த உளையில் அரசனும் இருந்தானே தாவீது ஒருதரம் விழுந்தான்; அவனினும் வல்லவர் வந்து தூக்கி எடாவிட்டால் அவனும் அதினுள் திக்குமுக்கிட்டு சங்கடப்படுவான் என்பது நிஜம்.[c]

மரணநிழல் பள்ளத்தாக்கின் பயங்கரங்கள்.

[1] கெடுபாதாளம் என்பது, அறிவில்லாதவர்கள் பெரும்பாலும் தங்களைப்போலொத்தவர்களுக்குச் சொல்லி, அவர்கள் மனதை வழிநடத்தும் மோசமான கள்ள உபதேசங்களைக் குறிக்கிறது:

[2] சேற்றுப்பள்ளம். தாவீது விழுந்ததற்குச் சமமான வெளியரங்க பாவங்களை இது குறிக்கிறது.

[a] யோபு. 3. 5; 10. 21.
[b] சங். 44. 18, 19. எரே. 2. 6.
[c] சங். 69. 14.

மேலும் இந்தப் பள்ளத்தாக்கின் வழியாய்ப் போன பாதையும் மகா நெருக்கமாய் இருந்தது; இதுவும் கிறிஸ்தியானுக்குப் பெரிய சோதனை ஆயிற்று. ஏனெனில் மேகமந்தாரக் காரிருளில் அவன் வலதுபக்கத்துப் படுகுழிக்கு விலகிக்கொள்ள காலெடுத்து வைக்கையில் இடதுபக்கத்து உளையில் கால் அகப்பட்டுக்கொள்ளுகிறதுபோல் இருந்தது; அவன் உளையைப்பற்றி மிகுந்த எச்சரிக்கையோடு நடந்தால் படுகுழியில் விழுகிறதுபோல் இருந்தது. இப்படியே தள்ளாடி நடந்துபோனான். போகப் போக அவன் அழுத கண்ணீருக்கும் விட்ட பெருமூச்சுக்கும் ஒரு அளவில்லை. இவைமாத்திரமோ? போகப் போகக் குறுகிறதாய் இருந்ததால் அவன் அடிக்கடி தன் காலைத் தூக்கி, எங்கே வைக்கலாம் என்று தெரியாமல் ஒற்றைக்காலோடு நின்று அசைந்து அழுவான்.

இந்த மரணப்பள்ளத்தாக்கின் மத்தியில் நரகலோகத்தின் வாயிருக்கக் கண்டேன். நரகவாயின் விளிம்பே பாதையின் ஓரம் என்று சொல்லும்படி அவ்வளவு கிட்ட இருந்தது. கிறிஸ்தியான்: ஐயோ, இப்போது நான் என்னசெய்வேன்? என்று நினைத்தான். அதிலிருந்து திகுர் திகுர் என்று குமுறிக்கொண்டு அக்கினிப் பொறிகளும், புகைத்திரள்களும் ஓயாமல் எழும்பின. பறந்த அப்பொல்லியோனைக் குத்திக் கிடத்தின பட்டயம் இவைகளை அடக்க உதவுமா? உதவாதே. ஆகையால் கிறிஸ்தியான் தன் பட்டயத்தை அதின் உறையிலே சொருகிக்கொண்டு சகலவித ஜெபமாலை[1] என்னும் [a] வேறொரு ஆயுதத்தைத் தன் அம்பறாத் தூணியிலிருந்து உருவி வைத்துக்கொண்டு: "கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும்" [b] என்று இப்படிப் பலவாறாகச் சொல்லி வெகுநேரம் அபயமிட்டான். அப்படி இருந்தும் அக்கினிச் சுவாலைகள் அவன்மட்டும் எட்டின; பயங்கரமான இரைச்சலும் குமுறலும் முன்னிலும் அதிகமாய் எழும்பின. அந்தக் குமுறல்கள் கிறிஸ்தியானை இங்கும் அங்கும் பிடித்துத் தள்ளுகிறதுபோல் இருந்ததால், நான் ஒன்று சின்னபின்னமாய்ப் போவேன், அல்லது வழியில் கிடக்கும் சேற்றைப்போல மிதிக்கப்படுவேன் என்று சிலதரம் தன்னைக் குறித்து நினைத்தான். இந்தப் பயங்கர காட்சியும் அதிரடிக்

1 சகலவித ஜெபமாலை- ஒரு கிறிஸ்தவனுக்குச் சோதனைகள் நேரிட்டால் அவன் ஜெபம் செய்யவேண்டியது.

a எபே. 6. 18.
b சங். 116. 4.



குமுறலும் அநேக மைல் தூரமட்டும் இருந்தது. இவற்றோடு போயிற்றா? அவன் இவ்வளவு தத்தளிப்போடு நடந்துபோகையில் பூதசேனை ஒன்று தனக்கு எதிரே வருகிறதைக் கண்டான். உடனே அவன் நிலைபெயராமல் நின்றுகொண்டு: பூதகணங்கள் வருகிறதே, இனி நான் என்னசெய்வது நல்லதாய் இருக்கும் என்று ஆலோசித்தான். திரும்பிவிடுவோமோ என்று ஒருதரம் யோசித்தான்; மறுபடியும் பாதிப் பள்ளம் கடந்தாயிற்றே; இனித் திரும்பவா என்று சொல்லிக்கொண்டான். இம்மட்டும் எத்தனையோ பெரும் ஆபத்துகளையெல்லாம் கடந்தேன், இனிமேல் பின்னிட்டுத் திரும்புவதால் உண்டாகும் வருத்தங்கள் முன்னிட்டுச் செல்லுவதால் உண்டாகும் வருத்தங்களிலும் அதிகமாகவே இருக்கும் என்று அதோடு உணர்ந்துகொண்டான். கடைசியாக முன்னுக்கு நடப்பதே நிர்மாணம் என்று சொல்லிக்கொண்டு நடந்தான்; ஆனால் பூதகணக் கூட்டம் வர வர நெருங்கிவருகிறதைக் கண்டான். மிகு சமீபத்தில் அவைகள் வந்தவுடனே கிறிஸ்தியான் சிங்கம் கர்ச்சிக்கிறதுபோல் முழங்கி, தேவனாகிய கர்த்தருடைய வல்லமையைக் கொண்டு நடந்துபோவேன் என்று சத்தமிட்டுச் சொன்னான். அச்சத்தம் தொனித்தவுடனே பூதகணங்கள் அப்படியே விலகிக் கரையிலே போயின.

இதின் இடையில் கிறிஸ்தியானிடத்தில் நான் கண்ட ஒரு விசேஷத்தையும் சொல்லாமல் விடலாகாது. அவன் நரகலோக வாயின் பக்கத்தில் நடந்துவரும்போது தன்னை மறந்தவனாய் இருந்தான். அவன் பேசுகிறதும் செய்கிறதும் தனக்கே தெரிந்ததில்லை என்று என் மனதில் பட்டது. எப்படியெனில் எரிகிற பாதாளவாய்க்கு எதிரே அவன் நடந்தபோது தீயோன் ஒருவன் அவன் பிறகாலே போய் அரவங்கேளாதபடி அவனுடைய முதுகின் கிட்ட நெருங்கி மனநோவு உண்டாகத்தக்கதான பல தேவதூஷணங்களை புசுபுசென்று காதுக்குள் ஓதினான். கிறிஸ்தியானோ அத்தூஷணம் எல்லாம் தன் மனதில் இருந்து புறப்பட்டதாகவே எண்ணிக்கொண்டான். இம்மட்டும் உண்டான மனவியாகுலங்களில் எல்லாம் இதுவே அவனுக்குப் பிரமாண்டமாகக் காணப்பட்டது; நான் அவ்வளவாய் நேசித்தவரை இவ்வளவாய்த் தூஷித்தேனோ என்கிற எண்ணம் அவன் மனதை வாதித்தது. அந்தத் தீயோனின் செய்கையைத் தடுக்கக்கூடுமானால் கிறிஸ்தியான் தடுத்தே இருப்பான்; ஆனால் அவனுக்குச் செவிகொடாதபடி தன் காதை அடைத்துக்கொள்ளவாவது, அந்தத் தேவதூஷண ஊசல் எத்திசையிலிருந்து

வந்ததென்று பகுத்தறிந்துகொள்ளவாவது சக்தியற்ற நிலைமையில் அவன் இருந்தான் என்று நான் நன்றாய் அறிந்தேன்.

இப்படி ஆறுதலற்றவனாகக் கிறிஸ்தியான் வெகுதூரம் நடந்துபோகிறபோது, "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" என்று தனக்கு முன்னாக ஒரு மனுஷன் சத்தமிட்டுச் சொல்லுகிறதுபோலவும் கேட்டான்.[a] இதினால் அவன் மனம் பூரித்தது. அவன் மனப்பூரிப்புக்கு இரண்டொரு முகாந்தரங்களும் இருந்தன, எப்படியெனில்;

1. அவன் கேட்ட அந்த சத்தத்தின் தொனியினால், கர்த்தருக்குப் பயந்து நடக்கிற யாரோ சிலர் தன்னைப்போல இதின் வழியே நடந்துபோனதாக அறிந்தான்.

2. இருளும் மருளுமுள்ள இடத்தில் அகப்பட்டபோதிலும், தன்னோடு தேவன் இருக்கிறார் என்றும் உணர்ந்துகொண்டான். இவ்விடத்தில் அவனை மறைக்கும் பல திரைகள் இருப்பதால் தான் அவரைக் காணக்கூடவில்லையாகிலும், மற்றவர்களோடு இருந்தவர் என்னோடிருக்கமாட்டாரோ என்று நினைத்துக்கொண்டான்.

3. நான் சற்றே எட்டி நடப்பேனேயானால் முந்திப்போகிற அவர்களோடு சேர்ந்து ஒரே கூட்டமாகத் திரண்டுபோகலாம் என்றும் நினைத்தான்.

மேலே சொல்லிய முகாந்தரங்களை அவன் ஆலோசித்துக் கொண்டு மனப்பூரிப்போடு விசையாய் நடந்து முன் சத்தம் காட்டின ஆளைக் கூப்பிட்டான். கூப்பிடும் குரலை அவன் கேட்டும் இந்த ஏகாந்த மைதானத்தில் நாம்தான் தனிமையாய் இருக்கிறோம் என்று எண்ணிக்கொண்டு, யாதொரு மறுமொழியும் கொடாமல் தன் பாட்டிலே போனான். வரவர இருள் நீங்கி ஒளிதோன்றிப் பொழுதும் விடிந்தது. கிறிஸ்தியான் அகமகிழ்ந்து "அவர் மரண இருளை விடியற்காலமாக மாற்றுகிறார்"[b] என்று சொன்னான்.

பொழுது உதித்தபின்பு அவன் தான் வந்த வழியை ஏறிட்டுப் பார்த்தான். திரும்பிப்போய்விடும் சிந்தையோடல்ல, இரவில் அவன் நடந்துவந்த துன்பங்களும், சங்கடங்களும் எவை என்று அறியும்படியாகவே பார்த்தான். பார்க்கவே வழியின் வலதுபக்கத்துப் படுகுழியும், இடதுபக்கத்து உளை

[a] சங். 23. 4.

[b] ஆமோ. 5. 8.



யும் நன்றாய்த் தெரிந்தது. படுகுழிக்கும் உளைக்கும் மத்தியில் தான் நடந்துவந்த பாதை எவ்வளவு இடுக்கமும் நெருக்கமுமாய் இருக்கிறதென்று அறிந்துகொண்டான். அதோடு பள்ளத்தாக்கில் வசித்த கூளிகள், காளிகள், காட்டேறிகள், வல்லசர்ப்பங்கள் இவைகளின் ரூபமுழுதும் வெகுதூரத்தில் தெரிந்தன; எனெனில் விடிகிற நேரம் வருகிறபோது அவைகள் அவனை முன்போலப் பின்தொடராமல் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிவிட்டன. அவை அனைத்தும் எவ்வளவு தூரத்தில் இருந்தபோதிலும் "அவர் அந்தகாரத்தில் இருக்கிற ஆழங்களை வெளியரங்கமாக்கி, மரண இருளை வெளிச்சத்தில் கொண்டுவருகிறார்"[a] என்று எழுதப்பட்டிருக்கிறதின்படி கிறிஸ்தியானுக்கு அவைகள் எல்லாம் தெளிவாய்க் காண்பிக்கப்பட்டன.

இவ்வளவு உபத்திரவங்களின் வழியாகத் தனிப்பயணஞ்செய்துவந்த அவன் யாதொரு மோசமும் இல்லாமல் காப்பாற்றப்பட்டதை அதிகமாய் உணர்ந்து சந்தோஷப்பட்டான். முன்பு அவன் இந்த உபத்திரவங்களுக்கு அஞ்சினதும் கிழக்கு வெளுக்கவே அவை எல்லாவற்றையும் பரிஷ்காரமாய்ப் பார்த்துக்கொண்டான். மேலும் இச்சமயத்தில் பகலோனும் தன் சுடரொளிக் கதிர்களை வீசத் துவக்கினன். இது அவன் மனமகிழ்ச்சியை அதிகப்படுத்தும் கருவிபோலும் இருந்தது. எனெனில் மரணப்பள்ளத்தாக்கிலே இதுவரையும் அவன் நடந்துவந்த முன்பாகம் மெத்த வருத்தமுள்ளதாய் இருந்தபோதிலும், இன்னும் நடக்கவேண்டிய பின்பாகம் முன்னிலும் அதிக சங்கடங்களுள்ளது என்பதை நீ கவனித்துக்கொள்ளவேண்டியது. இப்பொழுது அவன் நின்ற இடம்முதல் கடைசி எல்லைமட்டுமுள்ள பாதை முழுவதும் கண்ணிகளாலும், பொறிகளாலும், சுருக்குகளாலும், வலைகளாலும் நிறையப்பட்டிருந்தது. அதுவும் அன்றி, வழிநெடுகப் பள்ளங்களும், மேலே மண்மூடிய படுகுழிகளும், ஆழமான உளைக்கிடங்குகளும், செங்குத்தான மேடுகளும் இருந்தன. மரணப்பள்ளத்தின் முன்பாகம் இருந்ததுபோல இருளும், அந்தகாரமும், கார்மேகமும் இங்கே இருக்குமானால், ஒரு உயிர் அல்ல, ஆயிரம் உயிர்களுக்கு இருந்தாலும் அவை அனைத்தையும் ஒவ்வொன்றாய் இழந்து கடைசியாக மாண்டேபோவான். ஆனால் சற்று முன்னே சொன்னபடி அவனுக்கு நல்வாழ்வு இருந்தபடியால் இத்தரு

[a] யோபு. 12. 22.

ளைத்தில் சூரியனும் தன் கதிர்களை வீசினது, ஆதலால் பகலின் வெளிச்சத்திலே அவன் நடந்து மரணப்பள்ளத்தாக்கைக் கடந்தான். கடந்தவுடனே, "அவர் தீபம் என் தலையின்மேல் பிரகாசித்தது, அவர் அருளின் வெளிச்சத்தினால் இருளைக் கடந்து போனேன்" [a] என்று அகமகிழ்ந்து அறிக்கையிட்டான்.

## பாப்பு ராட்சதன் சந்திப்பு.

பாப்பு ராட்சதன் கெபி, அதைக் கடந்து சென்றது.

அப்புறம் நான் என் சொப்பனத்திலே கண்டதாவது: மரணப்பள்ளத்தாக்கின் அந்தத்தில், இரத்தக்கட்டிகளும், எலும்புக் குவியல்களும், கரிக்காட்டுக் குப்பைகளும், சின்னபின்னமாக்கப்பட்ட பல பிரயாணிகளின் தேகங்களும், எலும்புக்கூடுகளும் கிடக்கக் கண்டேன். இதின் இரகசியம் என்ன? இரத்தமும் எலும்பும் குப்பையும் பிணங்களும் இங்கே எப்படி வந்தது என்று சற்றுநேரம் ஆழமாய் ஆராய்ந்து பார்த்தபோது, எனக்குச் சற்றுமுன்னே பாப்பு, பல தேவபத்தன்[1] என்னும் இரண்டு ராட்சதர் முன் ஒருகாலத்தில் வசித்துவந்த குகை இருக்கிறதென்றும், அவர்களுடைய ஆக்கிரமத்தினாலே கண்டதுண்டமாக்கப்பட்டு, அக்கினியில் தகனிக்கப்பட்ட அநேக மனுஷருடைய இரத்தமும் எலும்புகளும் குப்பைகளுமே இங்கே குவிந்துகிடக்கிறது என்றும் அறிந்துகொண்டேன். கிறிஸ்தியான் இந்த வழியே நடந்துபோகையில் கொஞ்சமும் அச்சமின்றித் தாராளமாய் நடந்துபோனான். ஏது இவ்வளவு தாராளத்தில் போகிறான் என்று கவனித்து நானே அதிசயப்பட்டேன்; அப்புறம் அந்தச் சந்தேகம் நீங்கிப்போயிற்று. எப்படி என்று கேட்பாயோ? பல தேவபத்தன் மாண்டு வெகுவருஷங்களாகிவிட்டதாம்; பாப்பு ராட்சதன் இருக்கிறானே, அவன்

[1] பாப்பு, பல தேவபத்தன் என்னும் இராட்சதர், முற்கால காலங்களில் ரோமாபுரியில் ஆண்ட பல அஞ்ஞான ராயர் கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றிக்கொண்டதின் நிமித்தம் அநேகரைக் கொலைசெய்தார்கள். சில காலங்களுக்குமுன் ரோமைமார்க்கத்தை ஆதரித்திருந்த தேசங்களில், பாப்புவின் கட்டளைப்படி புரொட்டெஸ்டாண்டர் தங்கள் மார்க்கத்தின் நிமித்தம் துன்பப்படுத்தப்பட்டு, அநேகர் உயிரோடு முதலாய் தகனிக்கப்பட்டார்கள். முன்நாளைத்தைவிட இப்பொழுது மார்க்கவிஷயத்தில் அதிக சுயாதீனம் இருக்கிறது.

a யோபு, 29. 3.



இன்னும் உயிரோடிருந்தாலும் கடைப்பிணம் என்றுதான் சொல்லவேண்டுமாம். இப்பொழுது கிழவனாகிவிட்டதோடு, தன் வாலிப காலத்தில் அட்டகாசம் பண்ணினதில் பல தட்டுப்பாடுகளும், நோவுகளும் உண்டானதால், இடுப்பு ஒடிந்து, மூட்டுகள் பூரண்டு, கைகால்கள் திமிர்ந்து, இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க அவகாசம் இல்லா



ர் அவ

மல் குகையின் வாசலில் உட்கார்ந்திருக்கிறானாம். சியோனுக்குப் போகிற பிரயாணிகளைப் பழையபடி பலவந்தமாய்ப் பிடித்து மானபங்கம்செய்து, அவர்கள் உயிரை வாங்கி இரத்தத்தைக் குடிக்கும்படி அவன் இப்போதும் பிரியப்பட்டாலும், காரியம் சித்திக்க வகை இல்லையாம். அதினாலேதான் இவ்வழியாய்ப் போகிறவர்களைக் கண்டால், வெகு காரியங்களையெல்

லாம் நிறைவேற்றிப்போடுகிறவனைப்போல் அவன் கையை நீட்டுகிறதும், விரலை மடக்குகிறதும், பல்லைக் காட்டுகிறதும், கண்ணை உருட்டுகிறதும், நகத்தைக் கடிக்கிறதுமாய் இருக்கிறானாம். இதினாலேதான் கிறிஸ்தியான் அவ்வளவு அமைதலோடு நடந்துபோய் இருக்கிறான்.

இந்த ராட்சதர் சங்கதி இப்படியிருக்க, கிறிஸ்தியான் அவர்கள் குகைவழியாகவே போனான். கிழப்பாப்பு, குகையின் வாசலில் உட்கார்ந்துகொண்டு அவன் நடந்துபோகிறபோது எழுந்துபோய்ப் பிடிக்க சக்தியற்றிருந்தாலும் சொல்லுகிறான்: இன்னும் உங்களில் அநேகரை அக்கினிப்பிரவேசம் செய்யும்மட்டும் உங்களுக்குப் புத்தி வரப்போகிறதில்லை என்று சொன்னான். இதைக் கேட்கவே கிறிஸ்தியான் என்ன பதில் சொல்லலாம் என்று தெரியாமல் சற்றுநேரம் நினைத்தாலும், அப்புறம் ஒன்றும் பேசாமல் தன் வழியே விரைவாக நடந்துபோய்விட்டான். அவனுக்கு அந்த இடத்தில் ஒரு அபாயமும் உண்டானதில்லை; அதின் பின்பு கிறிஸ்தியான்,

அதிசய பூலோகமே!
மரண பள்ளத்தாக்கிலே,
யேசுவே துணை தந்தார்.
பேய், பாவம், நரகம், கண்ணி,
வலை, குழி, இருள், பொறி,
யாவும் என்னைச் சூழ்ந்தன
நீசன் நானும
மற்றப்படி நாசம் ஆவேன், யேசுவே நீர்
வாழ்க, வாழ்க, நான் பிழைத்தேன்

என்று தோத்திரம் பாடிக்கொண்டு; தன் வழியே போகிறதை நான் என் சொப்பனத்தில் கண்டேன்.

## உண்மையோடு கூடுதல்.

கிறிஸ்தியான் ராட்சதர் செபியைத் தாண்டி சற்றுதூரம் போகவே அவனுக்கு முன்னாக ஒரு மேடு இருந்தது. பிரயாணிகள் அதின்மேல் ஏறிக்கொண்டு, போகவேண்டிய பாதையைப் பார்த்துக்கொள்ள நோக்கமாகவே அது உயர்த்தப்பட்டிருந்தது. கிறிஸ்தியான் அதின்மேல் ஏறிப் பார்த்தபோது, உண்மை[1] தனக்குமுன்னே கூப்பிடுதூரத்தில் போகிறதைக்

[1] உண்மை. இது ஒரு கிறிஸ்தவனுடன் அதிமுகமாகிற பலத்த விசுவாசி ஒருவனைக் குறிக்கிறது.



கண்டான். உடனே அவனுக்கு உண்டான அகமகிழ்ச்சிக்கு அளவில்லை. அவன் திரும்பிப் பார்க்கும்படியாக ஓ, ஓ, ஓய் நில்லும், நானும் கூட வருகிறேன் என்று சத்தமிட்டுக் கூப்பிட்டான். உடனே உண்மை திரும்பிப் பார்த்தான். கிறிஸ்தியான்: நான் கிட்ட வருமட்டும் நில்லும், நில்லும் என்று சொன்னான். உண்மையோ, இல்லை, இல்லை பிராணன் தப்ப ஓடுகிறேன், பழிகாரன் பின்னாலே தொடருகிறான் என்று சொல்லிவிட்டு, விரைவாய் நடந்துபோனான்.

*கிறிஸ்தியான் உண்மையோடே கூடிக்கொள்கிறான்.*

அதைக் கேட்டவுடனே கிறிஸ்தியான் மெய்மறந்து அவனுடன் கூடிக்கொள்ளவேண்டும் என்று ஓட்டமாய் ஓடி உண்மையையும் முந்திவிட்டான். இப்படி முந்தினவன் பிந்தி, பிந்தினவன் முந்தினான்; முந்தினாலும் எச்சரிக்கையோடு நடவாமல், பிந்தியிருந்த தான் முந்திவிட்டதையிட்டு வீண்மகிமையினால் புன்னகைகொண்டு, கால் தட்டி தொப்பென்று விழுந்து, உண்மை வந்து அவனைத் தூக்கிவிடும்மட்டும் எழுந்திருக்க இயலாமல் கிடந்தான்.[1]

அப்புறம் அவ்விருவரும் நெருங்கிய நேசத்தோடு கூடி நடந்து தங்கள் பிரயாணத்தில் சம்பவித்த பல விஷயங்களைக் குறித்து ஒருவரோடொருவர் சம்பாஷித்துக்கொண்டு போகிறதை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அவர்கள் பண்ணிக்கொண்ட சம்பாஷணையாவது:

**கிறி.** நான் வெகுவாய் மதித்துவந்த என் உத்தம தோழனாகிய உண்மையே! உம்மோடு கூடிக்கொண்டதற்காகவும், நாம் இருவரும் ஏகமனதோடு வழிநடந்துபோகக் கிருபைசெய்ததற்காகவும் நான் மெத்தவோ சந்தோஷப்படுகிறேன்.

**உண்.** என் தோழனே, நம்முடைய ஊரில் இருந்தே உன்னுடன் கூடிப் புறப்படும்படி நினைத்திருந்தேன்; ஆனால் நீ சற்று முந்திவிட்டாய், அதினாலே இவ்வளவு தூரம் ஒண்டியாய்ப் பயணம்பண்ணலாயிற்று.

*உண்மையின் பிரயாண ஆரம்பம்.*

**கிறி.** நான் மோட்ச பிரயாணம்பண்ணப் புறப்பட்டதற்குப்பின் எவ்வளவு காலம் நீர் நாசபுரியில் இருந்தீர்?

[1] கிறிஸ்தவர்களில் சிலர் வீண்புகழ்ச்சியை நாடி, தங்கள் [illegible]யைவிட மற்றவர்களுடையதிலும் மிஞ்சிப்போகவேண்டும் என்று பிரயாசப்படும்போது, அவர்கள் தங்களைத் தாழ்த்தும்படி ஒரு விழுதல் உண்டாகிறது. பேதுரு தன்னை உயர்த்தினபின்பு இப்படிப்பட்ட ஒரு விழுதல் அவனுக்கு நேரிட்டது. மத். 26. 33.

உண். அந்த ஊர் பொறுக்குமட்டும் இருந்தேன்; நீர் என்னைக்குப் புறப்பட்டீரோ அன்றுமுதல் நம்முடைய பட்டணம் அக்கினியால் தகனிக்கப்பட்டு சீக்கிரத்திற்குள் சாம்பலாய்ப் போகும் என்பதைப்பற்றிய செய்தி அதிகமாய்ப் பேசிக்கொள்ளப்பட்டது.

கிறி. அப்படியா? உம்முடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரும் இப்படிப் பேசிக்கொண்டார்களா?

உண். சிலகாலமாக எவன் வாயெடுத்தாலும் இந்தச் செய்தியைக்குறித்தே பேசுவான்.

கிறி. என்ன? அப்படி இருந்தும் உம்மைத்தவிர வேறொருவரும் அந்த அழிவிலிருந்து தப்பிக்கொள்ளும்படி புறப்பட்டு வரவில்லையா?

உண். நான் சொன்னபடி நாசபுரியின் அழிவைப்பற்றி பெரும்பேச்சு உண்டானபோதிலும், அவர்கள் அதை நம்பவில்லைபோல் இருக்கிறது. நீர் புறப்பட்ட சமாசாரத்தைக் குறித்துப் பேச்சுண்டானால் அநேகர் உம்மைப் பரிகாசமாயும், இழிவாயும் பேசுகிறதை அடிக்கடி கேட்டு இருக்கிறேன். உம்முடைய பிரயாணத்தை நாசமாய்ப் போகும் பயணம் என்று சொல்லுகிறது உண்டு. ஆனால் நானோ நமது பட்டணம் வானத்திலிருந்து இறங்கும் அக்கினியாலும் கந்தகத்தாலும் தகனிக்கப்படும் என்கிற செய்தியை நம்பினதினாலும், நம்புகிறதினாலும் தப்பி ஓடிப்போனால் நலமாயிற்றே என்று புறப்பட்டு பயணஞ்செய்கிறேன்.

கிறி. இணங்குநெஞ்சன் இருக்கிறானே, அவன் சமாசாரம் ஒன்றாவது கேள்விப்பட்டீரா?

இணங்குநெஞ்சன் விஷயம்.

உண். ஆம் கிறிஸ்தியானே, கேள்விப்பட்டேன்; நம்பிக்கையிழவு உளைமட்டும் உம்மோடேகூட வந்தானாம்; அதிலே விழுந்தான் என்று சிலர் சொல்லுகிறார்கள், ஆனால் இவன் உளையில் விழுந்ததாகத் தன்னைக் காட்டிக்கொள்ளாதபடி பிரயாசப்படுகிறான். அவன் எப்படி மூடினாலும் என்ன? உளையில் விழுந்து சேறும் சகதியும் ஆனான் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

கிறி. அவனுடைய அயல்வீட்டுக்காரர் எல்லாரும் என்ன சொன்னார்கள்?

உண். அதை என்னசொல்ல! அவன் திரும்பித் தன் வீட்டு வாசலுக்குள் புகுந்ததுதான் தாமதம்; எல்லாருங்கூடி அவனைப் பழித்தது, சிலர் பரியாசம் பண்ணினார்கள், சிலர் இட்



டார்கள், அவனைக் கேட்ட கேள்விகளுக்கு ஒரு கணக்கில்லை; அவனை ஒருவரும் வேலையில் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அவன் புறப்படுகிறதற்கு முன்னிருந்ததிலும் இப்போது அவன் பேர் ஏழுபங்கு நாற்றமாய் இருக்கிறது.

கிறி. நாசபுரியாருக்கு அவன் புறப்பட்ட பயணம் பிரியம் இல்லையே; பின்னைத் திரும்பிவந்துவிட்டவனை பகைப்பானேன்?

உண். அதுவா! அவன் கெட்டான், தலைப்பாமாற்றி, எடுத்த காரியத்தை நிறைவேற்ற சக்தியில்லாத தெம்மாண்டி என்று சொல்லுகிறார்கள். அவன் சத்தியவழியை விட்டுப் பின்வாங்கினதினாலே, தேவன் அவன் சத்துருக்களை ஏவிவிட்டு அவனை நிந்திக்கவும், நகை இகழ்ச்சிக்கு இடமாகவும், பழமொழியாகவும் பண்ணிவிட்டார் என்று என் மனதில் தோன்றுகிறது.[a]

கிறி. நீர் புறப்படுமுன் அவனைக் கண்டுபேசவில்லையோ?

உண். எங்கே கண்டுபேசுகிறது? ஒருதரம் தெருவிலே கண்டேன், அவனுக்கே வெட்கமாய் இருந்ததாக்கும்; என்னைப் பார்த்தவுடனே பக்கத்து சந்துவழியாய்ப் போய்விட்டான்; அதினாலே நான் அவனுடன் பேச ஏது இருந்தது இல்லை.

கிறி. என் பயணத்தின் துவக்கத்தில் அவனைக்குறித்துக் கொஞ்சம் நம்பிக்கை இருந்தது; இனி அவன் நாசபுரியின் அழிவோடு நாசமாகிறவன்தான் என்று இப்போது பயப்படுகிறேன். "நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது"[b] என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படி அவனுக்குச் சம்பவித்தது.

உண். நானும் அப்படியே எண்ணி அவனைக்குறித்துப் பயப்பட்டதுண்டு; ஆனாலும் வரப்போகிறதற்கு யார் தடைசெய்யக்கூடும்?

கிறி. அண்ணே உண்மை! அவன் காரியத்தை அம்மட்டில் நிறுத்திவிட்டு, நம்முடைய சொந்த காரியங்களைக்குறித்துப் பேசிக்கொள்ளுவோமாக. நீர் வந்த வழியில் நேரிட்ட கஷ்டங்களைப்பற்றிச் சொல்லும்; எப்படியும் உமக்கு சில கஷ்டங்கள் சம்பவித்திருக்கும். கஷ்டமே இல்லையானால் அதைப்போலொத்த அதிசயமே இல்லை என்று சொல்லவேண்டியது.

---

a எரே. 29. 18, 19. b 2 பே. 2. 22.

உண்மை மோகினியால் மோசம்பண்ணப்பட்டது.

உண். நம்பிக்கையிழவு இருக்கிறதே, அதில் நீ விழுந்து அவதிப்பட்டதுபோல் இருக்கிறது. நான் அதை அபாயமின்றிக் கடந்து யாதொரு மோசமின்றி இட்டிவாசல் சேர்ந்தேன். ஒரே ஒரு அபாயம்மாத்திரம் நேரிட இருந்தது. மோகினிதான்[1] என்னை மோசம்பண்ணப்பார்த்தாள்.

கிறி. அவளுடைய கண்ணிக்குமாத்திரம் நீர் தப்பிக்கொண்டீரானால் அதைப்போல சந்தோஷம் வேறொன்றும் இல்லை. யோசேப்பைப் பிடிக்கும்படி முதல்தரமான கண்ணியை அவள் வைத்தாள்; அவனும் உம்மைப்போலவே தப்பிக்கொண்டான். வெளியிலே தப்பினானோ? அவன் பிராணனே போகிறது போல் இருந்ததல்லவா?[a] உம்மை எப்படி மோசம்பண்ணப் பார்த்தாள்?

உண். அவளைக்குறித்து உமக்குக் கொஞ்சம் தெரிந்திருக்கலாம், என்றாலும் அவளுடைய வாய் அலங்காரத்தை முற்றிலும் அறியமாட்டீர்; அவள் என் மடியின்மேல் கைபோட்டு, என்னுடன் கூடவா, என்னென்ன இன்பங்கள் உண்டோ அதையெல்லாம் உன் என்று தருகிறேன் என்பதாகக் கூப்பிட்டாள்.

கிறி. அவள் நல்ல மனச்சாட்சியின் மனரம்மியத்தை உமக்குத் தருகிறேன் என்று வாக்களிக்கவில்லை அல்லவா?

உண். சிற்றின்பத்துக்கும், மாமிச இச்சைக்கும் திருப்தி உண்டாக்கும் பொருட்கள் என்னவோ அவை அனைத்தையும் தான் தருகிறதாக வாக்களித்தாள் என்று நான் சொல்லுகிறதை நீர் நன்றாய் அறிவீர்.

கிறி. அவள் கண்ணிக்கு நீர் தப்பினதற்காக தேவனுக்குத் தோத்திரம்; கர்த்தருடைய கோபத்துக்கு ஏதுவானவர்கள் அதிலே விழுவார்கள்.[b]

உண். நான் அவளுடைய கண்ணிக்கு முழுதும் தப்பிக்கொண்டேனோ அல்லவோ என்று தெரியவில்லை.

கிறி. அவளுடைய ஆசைபதங்களுக்கெல்லாம் நீர் இணங்கவில்லை என்றே நான் நம்புகிறேன்.

உண். நான் என்னைத் தீட்டுப்படுத்திக்கொள்ளும்படியான அவ்வளவுதூரம் இடங்கொடுக்க இல்லை. "அவள் நடைகள்

[1] மோகினி, இது காமவிகாரத்துக்கடுத்த சோதனையைக் குறிக்கிறது.

[a] ஆதி. 39. 11–13. [b] நீதி. 22. 14.



பாதாளத்தைப்பற்றிப் போகும்"[a] என்று சொல்லப்பட்ட பழைய சுலோகம் ஒன்று என் நினைவில் இருந்தது. அதினாலே நான் அவளுடைய மையிட்ட கண்விழிகளால் மயங்கிவிடாதபடிக்கு என் கண்களை மூடிக்கொண்டேன்.[b] அப்பொழுது அவள் மனங்கொண்டபடி என்னைத் திட்டினாள், நானோ என்பாட்டில் வந்துவிட்டேன்.

கிறி. நீர் வரும்போது வேறு யாராவது உமது வழியை மறிக்கவில்லையா?

உண்மை பழைய ஆதாமால் சோதிக்கப்பட்ட விதம்.

உண். கஷ்டகிரிமலையின் அடிவாரத்தில் நான் வரும்போது பழுத்தக்கிழவன் ஒருவன் எனக்கு எதிர்ப்பட்டு, நீ யார் என்றும், எங்கே போகிறாய் என்றும் கேட்டான். அதற்கு நான்: ஒரு பரதேசி ஐயா! மோட்ச பட்டணத்துக்குப் போகிறேன் என்று சொன்னேன். அப்புறம் கிழவன் சொல்லுகிறான்: அப்பா, உன்னைப் பார்த்தால் மரியாதை உள்ள பிள்ளையாண்டானாய்க் காணப்படுகிறது; என்னோடு கூட வாசம்பண்ணி, நான் இடும் வேலைகளைச் செய்து, சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள உனக்குப் பிரியம் இருக்குமா? என்று கேட்டான். அப்புறம் நான் அவன் பேரையும், ஊரையும் கேட்டேன்; என் பேர் முதலாம் ஆதாம்[1] என் ஊரின் பேர் பித்தலாட்டம் என்றும் சொன்னான். அதன் பின்பு நீர் கொடுக்கும் வேலை என்ன? கூலி என்ன? என்று கேட்டேன். பல இன்பப்பயிர்ச்சியே என் வேலை, என் சொத்துக்கெல்லாம் சுதந்தரவாளியாகிறதே கூலி என்று சொன்னான். அப்புறம் நான் உமது வீட்டுவாசல் எப்படி? வேலைக்காரர் காரியம் என்ன? என்று வினவினேன். அதற்கு அவன்: என் வீடு பூலோக இன்பங்களால் அலங்கரிக்கப்பட்டு இருக்கின்றது. நான் வளர்த்த பிள்ளைகள்தான் என் வேலைக்காரர் என்று சொன்னான். எத்தனை பிள்ளைகள் உண்டென்று கேட்டேன், கருவேலம் கன்றுபோல மூன்று பெண்குமாரர்கள்மாத்திரம் இருக்கிறது; அவர்களுக்கு மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்று பேர். உனக்கு மனம் இருந்தால் அவர்களை நீ கலியாணம் செய்துகொண்டு எனக்கு மருமகன் ஆகிவிடலாம் என்று சொன்னான். எத்தனை வருஷம் உம

[1] முதலாம் ஆதாம். இது மாம்ச இச்சைக்கும், பொருளாசைக்கும், பெருமைக்கும் நம்மை ஏவுகிற பாவச்சுபாவத்தைக் குறிக்கிறது.

[a] நீதி. 5. 5. [b] யோபு. 31. 1.

து வீட்டில் உம்மோடுகூட இருக்கவேண்டும் என்று கேட்டேன். நான் என் கட்டையைக் கிடத்துமட்டும் கூட இருந்தால் போதும் என்று சொன்னேன்.

கிறி. நல்லது, கடைசியாகக் கிழவனும் நீரும் என்ன தீர்மானத்துக்கு வந்தீர்கள்.

உண். தீர்மானமா? அவன் பேசுகிறதெல்லாம் நியாயம் போல் இருந்ததால், அவனோடு போகிறது நலம் என்று துவக்கத்தில் சற்று மனமாய் இருந்தேன். அப்புறம் பேச்சோடு பேச்சாய் நெற்றியைப்பார்த்தேன்; அதில் "பழைய மனுஷனையும், அவனுடைய கிரியைகளையும் களைந்துபோடுங்கள்" என்று எழுதி இருந்தது.

கிறி. அப்புறம், அப்புறம், அப்புறம் என்ன?

உண். இவன் என்னதான் சொல்லட்டும், எப்படித்தான் பசப்பட்டும், வீட்டுக்குப் போனவுடனே அடிமையைப்போலத்தான் நடத்துவான் என்று நன்றாய் அறிந்து, மனதில் குபீர், குபீர் என்று கோபம் பற்றி எரிந்தது. அதின்பின்பு நான் போதும், போதும், அதிகம் பேசவேண்டாம், உன் வாசற்படியண்டை முதலாய் மிதிக்கமாட்டேன் என்று ஒரே தீர்மானமாய்ச் சொல்லிவிட்டேன். அப்புறம் அவன் என்னைக் கண்டபடி திட்டி, நல்லது போ, போ, உன் ஆத்துமா வழியேகவிடாதபடித் தகுந்த ஆள் ஒருவனைப் பின்னாலே அனுப்புகிறேன் பார் என்று சொன்னான். நீ கெட்டாய், போ என்று திரும்பிவந்தேன்; திரும்பவே என் மாம்சத்தைக் கெட்டியாய்ப் பிடித்து இழுக்கிறான்.[1] என் பாதியுடலை இழுத்துக்கொண்டான் என்றே நினைத்தேன்; அப்போது "நிர்ப்பந்தமான மனுஷன் நான்" என்று புலம்பிக்கொண்டே கஷ்டகிரியில் ஏறினேன்; பாதி மலை ஏறினபின்பு பின்னிட்டுப் பார்த்தேன், பார்க்கவே ஒரு மனுஷன் வாயுவேகமாய் என்னைத் தொடரும்படி ஓடிவருகிறதைக் கண்டேன். நான் எவ்வளவு விரைவாய் ஏறினாலும் அவன் என்னைக் கஷ்டகிரி நந்தவனத்தண்டை கிட்டிச் சேர்ந்தான்.

கிறி. நானும் அந்த இடத்தில்தான் இளைப்பாறும்படி சற்று நேரம் உட்கார்ந்து அப்படியே தூங்கிவிட்டு, மடியில் இருந்த சுருளையும் இழந்தேன்.

[1] மாம்சத்தைத் திருத்தினது. இது மெய்க்கிறிஸ்தவர்களுடைய சன்மார்க்கக் கடமைகளுக்கும் பாவ ஆசைகளுக்கும் இடையில் உண்டாகிற போராட்டத்தைக் குறிக்கிறது.



உண். தம்பி, தம்பி வேறு பேச்சைக் கொண்டுவராமல் நடந்த சமாசாரத்தை முழுதும் கேளும்; அவன் என்னண்டை வந்தவுடனே உன் மண்டையை உடைக்கிறேன் பார் அடா! என்று சொல்லிக்கொண்டே ஒரு குத்துப்போட்டான்; அப்படா என்று நானும் விழுந்து செத்தவனைப்போல கிடந்தேன். சற்றுநேரம் பொறுத்து எனக்குத் தன்னறிவு வந்தது; அப்போது நான் இப்படி ஏன் என்னைக் குத்திவிழத் தட்டினாய் என்று கேட்டேன். அதற்கு அவன்: முதல் ஆதாமோடு உனக்கிருக்கும் அந்தரங்க ஐக்கியத்தைவிட்டதினால் அடித்தேன் என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் நெஞ்சில் ஒரு குத்துப்போட்டு, அப்படியே மல்லாக்கக் கிடத்திவிட்டான். அதினாலே அவன் காலின்கீழ் முன்போல செத்தவனைப்போல கிடந்தேன். கொஞ்சநேரத்துக்குப்பின்பு எனக்கு தன்னறிவு வந்தது; அப்போது நான்: ஐயா அடியாதேயும், அப்பா கொல்லாதேயும், இரங்கும், இரங்கும் என்று கெஞ்சினேன்; நான் கெஞ்சக் கெஞ்ச அவன் கோபம் மிஞ்சி, இதுதான் இரக்கம் என்று மறுபடியும் ஒரு குத்துப்போட்டான். அச்சமயத்தில் ஒரு புண்ணியவான் வந்து பொறு, பொறு என்று தடுக்காவிட்டால் கஷ்டகிரி நந்தவனத்தின் மண்ணுக்குள்ளே இதற்குள் மக்கிப்போய் இருப்பேன்; என்னைப் புதைத்த இடமும் புல்முளைத்துப்போம்.

மோசே முனிவரின் தண்டாயுதம்.

கிறி. அப்படிப் பொறுக்கச்சொல்லித் தடுத்தது யார்?

உண். அவர் இன்னார் என்று துவக்கத்தில் நான் கண்டுகொள்ளவில்லை; அவர் பொறுக்கச்சொல்லித் தடுத்துவிட்டுத் தமது வழியே கடந்துபோகையில் இவர் யாராய் இருக்கலாம் என்று கவனித்துப் பார்க்கும்போது, அவருடைய கைகளிலும், கால்களிலும் துவாரங்கள் தெரியப்பட்டன. அதினாலே அவர் நமது ஆண்டவர் என்றே தீர்மானித்துக்கொண்டேன்; அதின்பின்பு நான் மலையேறிப்போனேன்.

கிறி. உன்னைப் பின்தொடர்ந்து பிடித்தது மோசேமுனிவர்,[1] அவர் ஒருவருக்கும் இரங்கமாட்டார்; தமது பிரமாணங்களை மீறினவர்களுக்கு எப்படி தயாளம் காட்டுகிறது என்றும் தெரியவே தெரியாது.

[1] மோசே. இது, பாவஇச்சைகள் அனைத்தையும் அக்கினைக்குள் படுத்துகிற தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிறது.

உண். அவருடைய குணபாகங்களையெல்லாம் நான் நன்றாய் அறிவேன். இது அவர் என்னை இப்படி மடக்கின முதலாம் தடவை என்று எண்ணாதே; நான் நாசபுரியில் வீடுமட்டாயிருந்து, சாங்கோபாங்கமாய்ப் பஞ்சமெத்தையில் படுத்து நாட்கழித்த காலத்தில் என்னிடத்தில் வந்து, இங்கே குடியிருந்தால் உன் தலைமேல் விழும்படியாக இந்த வீட்டைத் தீயைக் கொளுத்திவிடுவேன் பார் என்று சொல்லி, பயமுறுத்தி துரத்தினவரும் அவர்தான்.

கிறி. அப்படியானால் மோசேமுனிவர் உம்மைச் சந்தித்த இடத்துக்கு அடுத்தாற்போல் மலையின்மேல் இருக்கும் அந்த வீட்டை நீர் காணவில்லையோ?

உண். ஆம், அந்த வீட்டையும் கண்டேன். அதின் வாசலின்முன் படுத்திருந்த சிங்கங்களையும் முந்தியே கண்டுகொண்டேன்; அந்தச் சிங்கங்கள் தூங்கிக்கொண்டிருந்தன; ஏனெனில் நான் அவ்விடத்தில் வரும்போது உச்சிவேளையாய் இருக்கலாம், இன்னும் அதிகப்பொழுது இருக்கிறதே, வெகுதூரம் போய்விடலாமே என்றுதான் நான் வாசல்சேவகனையும் கடந்து மலை இறங்கி வந்துவிட்டேன்.

கிறி. அது நிஜந்தான். வாசல் சேவகன் உம்மைக் கண்டதாகவும் சொன்னான்; ஆனால் நீர் அந்த வீட்டுக்கு வந்துவிட்டுப்போனீர் இல்லையே என்று நினைத்தேன். அவ்விடத்துக் காட்சிகளைத்தான் என்ன சொல்ல! அவ்விடத்தில் உள்ளவர்கள் காட்டுகிற காட்சிகளை நீர் கண்டது மெய்யானால் சாகும் மட்டும் மறந்துபோவீரா? மறக்கமாட்டீர்; அது இருக்கட்டும். தாழ்மையின் பள்ளத்தாக்கில் நீர் ஒருவரையும் சந்திக்கவில்லையா? சந்தித்தது உண்டானால் தயவுசெய்து சொல்லும்.

நிரம்மியம் உண்மையை மோசம்பண்ணப் பார்த்தது.

உண். ஆம், **நிரம்மியம்**[1] என்று ஒருவன் என்னைச் சந்தித்தது உண்டு, அவன் என்னைத் தன்னுடன் திரும்பிவந்துவிடும்படி பிரயத்தனம் பண்ணினான். இந்தப் பள்ளம் முழுதும் மேன்மையுள்ளதல்ல, அந்த வழிபோனால், அகங்காரன், கர்விதன், ஏமாப்பன், இடம்பன் முதலிய என் சிநேகிதர் எல்லாருக்கும் மனத்தாங்கல் ஆகும். பள்ளத்தின் வழியே போனால் என்னைப்போல் மூடன்

[1] நிரம்மியம். உண்மை உலகப்பிரகாரமான சிநேகிதரை இழந்து போனதையிட்டு, துக்கப்படுகிறதான சோதனையில் விழுந்தாலும்.



இல்லை என்று அவர்கள் எண்ணுவார்கள் என்றும் பல நியாயங்கள் சொன்னான்.

கிறி. நல்லது, அதற்கு நீர் சொன்ன மறுமொழி என்ன?

உண். நான் சொன்ன உத்தரவு இதுதான்; அகங்காரன், கர்விதன், ஏமாப்பன், இடம்பன் முதலியவர்கள் எல்லாரும் என்னைத் தங்கள் பந்துவழி என்று சம்பந்தங்கூறுவது சரிதான், ஏனெனில் அவர்கள் என் இனத்தை ஒட்டினவர்கள் தான். என்றாலும், நான் பரதேசியான காலம்முதல் அவர்கள் என்னை வெறுத்துவிட்டார்கள், நானும் அவர்களைத் தள்ளிவிட்டேன். இப்பொழுது இருக்கிற காரியத்தைப் பார்த்தால் அவர்கள் ஒருகாலத்திலும், என் இனத்தை ஒட்டினவர்களாய் இருக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டியது என்று சொன்னேன். இந்தப் பள்ளத்தாக்கைப் பற்றியோ நீ தப்பான எண்ணங்கொண்டு இருக்கிறாய். ஏனெனில், "மேன்மைக்கு முன்னானது தாழ்மை; அழிவுக்கு முன்னானது அகங்காரம்;" ஆதலால் உன் மனதில் நமது ஆசை இச்சைகளுக்கு ஏற்ற வழி ஒன்று தோன்றின மார்க்கமாய் அல்ல, ஞானிகள் எல்லாராலும் நல்வழி என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற பாதையின் வழியாய்ப் போய் மேன்மையைச் சம்பாதிக்கிறது எனக்கு நலமாகத் தோன்றுகிறது என்று சொன்னேன்.

கிறி. இந்தப் பள்ளத்தாக்கில் வேறொருவரையும் சந்திக்கவில்லையோ?

வெட்கம் என்பவன் அவனை மோசம்பண்ண வகை தேடினது.

உண். ஆம், **வெட்கம்**[1] என்கிறவனைச் சந்தித்தேன். என் பிரயாணத்தில் குறுக்கிட்ட ஆட்கள் எல்லாரிலும் இவனுக்குமாத்திரம் இத்தப்பேர் தகாது; மற்றவர்கள் எல்லாரையும் இரண்டொரு நியாயங்களில் கிழ்ப்படுத்திவிடலாம், இவனோ வெகு முரட்டுமுகமுள்ளவன்; இவனை மடக்க எவராலும் முடியாது.

கிறி. அவன் உம்மிடத்தில் என்ன சொன்னான்?

உண். அவன் என்ன? தேவபக்தி என்னப்பட்டதையே அடியோடு ஆட்சேபிக்கிறான்; பக்தி, பக்தி என்று அதைக் கனிசமாக எண்ணி நாடுவதைப்போல கேவலமும், பரிதாப

[1] வெட்கம். உண்மைமார்க்கத்தின் நிமித்தம் வெட்கப்பட்டுப்போனதால், மற்றவர்களுடைய தப்பிதங்களை அவர்களுக்கு எடுத்துக் காட்டிப் புத்திசொல்லவேண்டியது அவன் கடமையாய் இருந்தாலும் அப்படிச் செய்யாமல் இருக்கிற சோதனைக்குட்பட்டாலும்.

மும், நீசத்தனமுமானது ஒன்றும் இல்லையாம்; இளகிய மனச்சாட்சி புருஷலட்சணம் இல்லை என்று சொல்லுகிறான்; ஒரு மனுஷன் அந்தந்தக் காலத்து அறிவாளிகளின் மனதுக்குத் தோன்றுகிறபடி பல விஷயங்களையும் ஒப்புக்கொண்டு தன் மனம் கொண்டபடித் துணிந்து செய்யாமல், நாள்தோறும், நாழிகைதோறும் தன் வார்த்தைகளையும், செய்கைகளையும் விலங்குபோட்டாற்போல் அவைகளின்மேல் கவனமாயிருந்து, ஓயாமல் அஞ்சி நடந்துவருகிறதைக் காண்கிறவர்களும் கேட்கிறவர்களும் சிரிப்பார்களாம். அதுவுமன்றி அவனுடைய அபிப்பிராயத்தைக் கனவான்களிலும், தனவான்களிலும், ஞானிகளிலும் சிலர், சிலர்மாத்திரம் உன்னைப்போல் அசட்டையாய் எண்ணினதுண்டு என்றும் சொன்னான். அந்தக் கனவான்களும் தனவான்களுமான பெரியோருங்கூடப் பைத்தியக்காரராகி, ஒருவரும் அறியாத நன்மைக்காக தங்கள் தனம் யாவற்றையும் வேண்டும் என்று வெறுத்துவிட்டார்களாம்.[a] எவர்கள் பரதேசிகள் ஆனார்களோ அவர்களெல்லாரும் அந்தந்தக் காலத்து நீசரும், பேதைகளும், இழிகுலத்தோருமே அன்றி, சாஸ்திரிகளும், அறிவாளிகளும், மேன்மக்களும் இல்லை என்று ஆட்சேபித்தான். உலகசாஸ்திரங்கள் ஒன்றும் அவர்களுக்குத் தெரியாதபடியினாலேதான், தேவபக்தி, தேவபக்தி என்று தலைபோட்டு அடித்துக்கொள்ளுகிறார்கள் என்று சொன்னான். இவன் பின்னே நான் சொல்லும் விஷயங்களைப்பற்றி அதிகமாய் வற்புறுத்தி அநேகநேரம் ஆட்சேபித்துப் பேசினான்; எப்படியெனில், ஒரு பிரசங்கத்தைக் கேட்கையில் துக்கமும், வியாகுலமுமாய் இருப்பது மகா வெட்கமாம்; கோவிலைவிட்டு பெருமூச்சோடும், மன உணர்வோடும் புறப்படுகிறதைப்போல நாணங்கெட்ட வேலை வேறொன்றில்லையாம். அற்பசொற்ப குற்றங்களுக்காக ஒருவன் மற்றவனிடத்தில் மன்னிப்புக் கேட்கிறதையும், திருடின பொருளைத் திரும்பக் கொடுத்துவிடுகிறதையும்போல் சுரணைகெட்ட தன்மை வேறொன்றில்லையாம். அதுவுமன்றி அவன் பல துன்மார்க்கங்களைச் சிறந்தபேர்களால் வரிசையாய்ச் சொல்லிக்கொண்டு, இப்படிப்பட்ட சில செய்கைகள் பெரியோரிடத்தில் காணப்படுகிறதினால் ஒருவன் அவர்களை விட்டுத் தன்னைப் பிரித்துக்கொள்ளுகிறதும், தனவானும், தரித்திரனும், ஞானியும், மூடனும் ஒரே மார்க்கத்தை அநுசரிக்கிறதையிட்டு சம அந்தஸ்து உண்டு என்கிறது

[a] 1 கொ. 1. 26; 3. 18. பிலி. 3. 7—9. யோவா. 7. 48.



மான விஷயங்கள் பெரியோர் எண்ணத்தில் தேவபக்தியை விரோதப்படுத்துகிறதல்லவா? இவையெல்லாம் மெத்த வெட்கக்கேடில்லையா? என்று இப்படியெல்லாம் சொன்னான்.

கிறி. இப்படியெல்லாம் பேசின அவனுக்கு நீர் சொன்னது என்ன?

உண். சொன்னதா? என்னத்தைச் சொல்ல என்றுகூட முதலாவது தெரியாமல் போயிற்று; அவ்விதமாய் என் மனதை அலைக்கழித்துவிட்டான். என் இரத்தம் சிரசில் ஏறி முகம் எல்லாம் சிவந்துபோயிற்று; என் மனதை மடிந்துபோகச் செய்தான் என்றே சொல்லவேண்டும். கடைசியாக, மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாய் இருக்கிறது[a] என்கிற சத்தியத்தை யோசிக்கும்படி ஆரம்பித்தேன். அப்புறம் நான், மனுஷர் இப்படி இருக்கிறார்கள் என்று இந்த வெட்கம் என்பவன் சொல்லுகிறானே அன்றி, தேவன் எப்படிப்பட்டவர், அவருடைய வசனம் எப்படிப்பட்டது என்பதைக்குறித்து ஒன்றையும் சொல்லுகிறான் இல்லையே என்று உணர்ந்துகொண்டேன். பிற்பாடு என் மனதில் நாம் நடுத்தீர்வை நாளில் உலகத்தாருடைய தீர்மானங்களின்படியும், சொற்சாதுரிய எண்ணங்களின்படியும் நியாயந்தீர்க்கப்பட்டு ஜீவனை அல்லது சாவை நித்திய தீர்ப்பாகப் பெற்றுக்கொள்ளாமல், உன்னதமானவருடைய ஞானத்துக்கு ஏற்றபடி பிறக்கும் தீர்ப்பின்படி அல்லவா அடங்கிப்போகவேண்டியது என்ற எண்ணம் ஓடினது. ஆகலால் உலகம் முழுவதும் அல்ல அல்ல என்று சொன்னபோதிலும், தேவன் சரி என்றால் அதுவே சரியான தீர்மானம் என்று என் மனதில் எழும்பிற்று. ஆண்டவர் தேவபக்தியை விசேஷித்துக்கொள்ளுகிறார் என்றும், அவர் நல்மனச்சாட்சியை முக்கியப்படுத்துகிறார் என்றும், பரலோக ராஜ்யத்துக்காகத் தங்களைப் பைத்தியக்காரர் ஆக்கிக்கொள்ளுகிறவர்களே மற்றவர்களைப் பார்க்கிலும் ஞானிகள் என்றும், தேவனை நேசித்துவருகிற ஒரு ஏழைக்கிறிஸ்தவன் அவரைப் பகைத்துவருகிற ஒரு ஐசுவரியவானைவிடப் பெரியவன் என்றும் நன்றாய் உணர்ந்துகொண்டு, அவனை நோக்கி: வெட்கம் என்பவனே! விலகி ஓடு, நீ என் இரட்சிப்பின் பகைஞனாய் இருக்கிறாய், என் ஆண்டவராகிய ராஜாவுக்கு விரோதமாக உன்னை நான் ஏற்றுக்கொள்ளலாமா? அப்படி உன்னை ஏற்றுக்கொண்டதுண்டானால் அவர் வெளிப்ப

[a] லூக். 16. 15.

வெப்பொழுது அவருடைய திருமுகத்தை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? அவருடைய வழிகளையும், அவருடைய ஊழியக்காரரையும் குறித்து இப்போ நான் வெட்கப்பட்டால், அவரால் ஆசீர்வாதத்தைப் பெறுவது எப்படி? என்று அவனுடன் மெத்தக் கண்டிப்பாய்ப் பேசினேன். என்னதான் சொன்னால் என்ன? அவனைப்போலொத்த துணிகரமான சர்வசண்டாளனை நான் கண்டதில்லை; அவனைத் தொலைத்துவிட எவ்வளவாய் முயன்றாலும் அவன் பிரிகிறானோ? என்கிறதைப்போல் அவனும் தொடர்ந்துவந்து, தேவபக்தியாய் இருப்பதினால் உண்டாகும் பல அவமானங்கள், கஷ்டங்கள் முதலியவைகளைக்குறித்து ஓயாமலும் அதையும் இதையும் காதுக்குள் ஓதிக்கொண்டிருப்பான். கடைசியாக நான் அவனைப் பார்த்து: இந்தக் காரியத்தைக்குறித்து உன் மண்டையை உடைத்துக்கொள்ளுகிறதினாலே யாதொரு லாபமும் இல்லை, ஏனெனில் நீ எவைகளைக் கனவீனம் என்று நினைக்கிறாயோ அவைகளையே நான் கனம் என்று அறிந்துகொள்ளுகிறேன் என்று சொல்லி அவனை உதப்பினேன். அதோடு அவன் கண்மண்டை பிதுங்கிற்று என்று சொல்லலாம்; அவன் அப்புறம் என்னை விட்டுத் தொலைந்தான். அவனைத் தொலைத்தவுடனே நான்;

ஆனந்தக்களிப்பு.

பத்தனாய்ப் பலதொல்லை சுற்றும்—அவையெல்லாம்,
மாமிச சம்பந்தமார்க்கமேயாக்கும்,
அலைமேலே அலைபோலே என்றும்—ஓயாமல்
தொடருமே, பிடிக்குமே, தள்ளுமே முற்றும்— பத்தனா.

மோட்சபிரயாணிகளே நின்று—அவைகள்
மோசமோ, நாசமோ, க்ஷேமமோ என்று
விழிப்போடு கவனித்துக்கொண்டு—புருஷராய்
நடவுங்கள், நடவுங்கள் கிட்டுமே உண்டு— பத்தனா.

என்று ஆனந்தக்களிப்பு பாடிக்கொண்டு என் வழியே நடந்துவந்தேன் என்றான்.

கிறி. என் பிரியமுள்ள சிநேகிதனே! நீ பரமசண்டாளனாகிய வெட்கம் என்கிறவனை இவ்வளவு பலமாய்த் தாக்கித் துரத்திவிட்டதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீர் சொல்லுகிறபடி அவன் பேர் அவனுக்குத் தக்கதுதான், நாம் நடுத்தெருவில் நின்றாலும் நம்மை அவன் பின்தொடர்ந்து நாணங்கெடுக்கும்படி அஞ்சுகிறதில்லை; அதாவது நன்மையானதிலெல்லாம் நமக்கு வெட்கம் உண்டாகும்படி செய்கிறான்; அவனுக்குச் சண்டித்தனமான குணம் இல்லாவிட்டால் இதைப்போல



ஒருக்காலும் செய்யத் துணியமாட்டான். ஆனால் நாம் அவனை இன்னும் எதிர்த்து மடக்குவோமாக. இப்படியெல்லாம் அவன் கேட்கிறதினாலே தன்னை அதிகப் பைத்தியக்காரன் என்று ருசுப்படுத்துகிறானே அல்லாமல் மற்றொன்றும் இல்லை. "ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள், மதியீனரோ கனவீனத்தை அடைவார்கள்"[a] என்று ராஜனாகிய சாலொமோன் சொல்லுகிறார் என்றான்.

உண். சத்தியத்திற்காக நித்தமும் ஜாக்கிரதையோடு போராடும்படி கற்பித்திருக்கிற ஆண்டவரை நோக்கி, வெட்கம் என்பவனை எதிர்த்துப் போராடும் பலத்தை அவர் நமக்கு அருளும்படி மன்றாடவேண்டியது.

கிறி. நீர் சொல்லுவது சரிதான்; அந்தப் பள்ளத்தாக்கிலே வேறொருவனையும் நீர் சந்திக்கவில்லையா?

உண். வேறொருவனையும் நான் சந்திக்கவில்லை; ஏனெனில் அந்தப் பள்ளத்தாக்கு முழுவதையும், அதன்பின் இருந்த மரணபள்ளத்தாக்கு முழுவதையும் நான் தாண்டி வருமட்டும் சூரியபிரகாசமாய் இருந்தது.

கிறிஸ்தியான் தனக்கு உண்டான சோதனைகளைச் சொல்லுகிறான்.

கிறி. அப்படியானால் உமக்கு க்ஷேமந்தான்; எனக்கோ அங்கே விபரீதமான அநேக பொல்லாப்புகள் நேரிட்டன. நான் அந்தப் பள்ளத்தாக்கில் இறங்கி நடந்தவுடனே அப்பொல்லியோன் என்கிற பூதத்துக்கும் எனக்கும் வெகுநேரமாய் ஒரு சண்டைப்போர் நடந்தது. அவன் என்னைக் கொன்றுபோட்டான் என்றே நான் எண்ணினதுண்டு. அவன் என்னைக் கீழே விழத்தள்ளி என்மேல் ஏறிக்கொண்டு நசுக்கினபோது இன்று நான் செத்தேன் என்று நிர்மானமாய் நினைத்துக்கொண்டேன். அவன் என்னைக் கீழே தள்ளினபோது விழுந்தவிசையில் என் கையில் இருந்த பட்டயம் தவறித் தூரத்தில் விழுந்துவிட்டது. அதுகண்ட அப்பொல்லியோன்: இனி எது நீ தப்புவது என்று முதலாய்ச் சொன்னான். ஆனால் நான் உடனே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் என்னைக் கேட்டருளி, என் இக்கட்டுகளிலெல்லாம் இருந்து என்னை இரட்சித்தார். அப்புறம் நான் மரணநிழலின் பள்ளத்தாக்கின் வழியாய் நடந்துவந்தேன். அதின் பாதிதூரம் வருமட்டும் சுற்றிலும் இருட்டாய் இருந்தது; அவ்விடத்திலேயே கொலைசெய்யப்படுவேன் என்று திரும்பத்

[a] நீதி. 3. 35.

திரும்ப நினைத்தது உண்டு. கடைசியாகக் கிழக்கு வெளுத்து சூரியன் உதித்தது. அதுமுதல் மீதியான வழியை அதிக வருத்தமின்றி நடந்து கடந்துவிட்டேன் என்றான்.

## வாயாடி வந்து கூடுதல்.

வாயாடி வந்து கூடுதல்.

பின்னும் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், கிறிஸ்தியானும் உண்மையும் ஒருவரோடு ஒருவர் பலகாரியங்களைக்குறித்துப் பேசிக்கொண்டே வழி நடந்துபோகையில் உண்மை தற்செயலாய்த் திரும்பி வாயாடி[1] என்கிற ஒரு மனுஷன் தங்கள் பக்கத்தில் நடந்துவருகிறதைக் கண்டான். அவர்கள் இப்போது நடந்துபோன இடத்தில் அவனும் கூட நடக்கத்தக்கதாக பாதை சற்று அகலமாய் இருந்தது. அவன் அதிக நெட்டையன். தூரத்தில் அவன் அதிக அழகாய்த் தோன்றினாலும், சமீபத்தில் அலங்கோலமாய்க் காணப்பட்டான். அவனும் உண்மையும், பின்வருகிறபடி சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்:

உண். சிநேகிதனே, எங்கே பயணம்? மோட்சலோகத்துக்கா?

வாயா. ஆம், ஆம். அங்கே போகிற பயணந்தான்.

உண். அதுசரி; நீர் எங்களுக்கு நல்ல வழித்துணையாய் இருப்பீர் என்று நம்புகிறேன்.

வாயா. நான் உங்களுக்கு வழித்தோழனாய் இருப்பேன் என்று என் நல்மனதோடும் அறிக்கையிடுகிறேன்.

உண். பின்னை வாரும், கூடிப்போவோம், நடவும்; பிரயோசனமான பல விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொண்டே நடப்போம் வாரும்.

வாயாடிக்கு நல்ல சம்பாஷணையே பிரியம்.

வாயா. உங்களோடானாலும் சரி, வேறு யாரோடானாலும் சரி, நல்ல காரியங்களைக்குறித்துச் சம்பாஷித்துக்கொண்டு போவது எனக்கு மெத்தப் பிரியமான காரியமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட நல்மனதுடையவர்களோடு நான் கூடி வழி

[1] வாயாடி என்பது, இருதயத்தில் மெய்யான கிருபையில்லாமல் இருந்தாலும், மார்க்கவிஷயத்தைப்பற்றிய அநேக அறிவை உடையவர்களாய் இருந்து, அதைப்பற்றி வெகு சாமர்த்தியமாய்ப் பேச சக்தி உடையவர்களைக் காட்டுகிறது.



நடக்கும்படி நேரிட்ட சமயத்துக்காக அதிக சந்தோஷப்படுகிறேன். உள்ளதைச் சொன்னால், உங்களைப்போல் நலமான காரியங்களைப் பேசிக்கொண்டு தங்கள் வழிப்பிரயாணத்தைக் கழிக்கிறவர்கள் கொஞ்சப்பேர்; மற்றவர்கள் எப்போதும் வீணான காரியங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு போக ஆசைப்படுகிறார்கள். இது அடிக்கடி என் மனதுக்கு அலட்டாய் இருந்ததுண்டு.

உண். இது மனஸ்தாபப்படவேண்டிய விஷயந்தான்; பரலோகத்தின் தேவனுடைய காரியங்களைப் பேசுகிறதைப்போல் மனுஷருடைய வாய்க்கும் நாவுக்கும் அருமையான விஷயம் வேறென்ன இருக்கிறது!

வாயா. உம்மை நான் அதிகமாய் விரும்புகிறேன்; ஏனென்றால் உமது வாயின் பேச்செல்லாம் மகா உணர்வை ஊட்டுகின்றன. அதுவுமன்றி தெய்வீக விஷயங்களைப்பற்றிப் பேசுகிறதைப்போல இன்பமானதும் பிரயோசனமுள்ளதுமான வேறு விஷயங்கள்தான் என்ன? இன்பமான வேறு செய்திகள் உண்டோ? அதாவது அதிசய சம்பவங்களைக்குறித்துப் பேச ஆசைப்பட்டால்: திருஷ்டாந்தரமாக, ஒரு மனுஷன் இதிகாச விஷயங்களை, அல்லது இரகசிய விஷயங்களைப்பற்றிச் சம்பாஷிக்க விருப்பங்கொண்டாலும், அல்லவென்று ஒரு மனுஷன் அற்புதவிஷயங்களை அல்லது அடையாளங்களைக்குறித்துப் பேசிக்கொள்ள விரும்பினாலும் அப்படிப்பட்ட விஷயங்களைக்குறித்து பரிசுத்த வேதாகமங்களில், மனதைக் கவர்ந்துகொள்ளும்படியாக அவ்வளவு இன்பமாய் வரையப்பட்டிருக்கிறதைப்போல, வேறெங்கே எழுதப்பட்டிருக்க நாம் காணலாம்?

வாயாடியின் சாமர்த்தியம்.

உண். அது மெய்; ஆனால் அந்த விஷயங்களால் நமக்குப் பிரயோசனத்தைத் தரும் காரியங்களைப் பேசிக்கொள்ளுகிறதே நமது நோக்கமாய் இருக்கவேண்டியது.

வாயா. அதுதான்; நானும் அதைத்தான் சொல்லுகிறேன். அதுபோலொத்த காரியங்களைப் பேசுவது அதிக பிரயோசனத்தைத் தரும்; அப்படிப் பேசிக்கொள்ளுகிறதால், ஒரு மனுஷன் பூமிக்கடுத்த விஷயங்களின் மாயை இன்னதென்றும், வானத்துக்கடுத்த விஷயங்களின் மாட்சிமை இன்னதென்றும், கிரகித்துக்கொள்ளத்தக்க அநேக விஷயங்களைப்பற்றிய அறிவை அடையலாம். பொதுவான பிரயோசனத்தைப்பற்றிச்

சொன்னால் இதுதான்: ஆனால், விசேஷ பிரயோசனத்தைப்பற்றிச் சொன்னாலோ, இவைகளைப்பற்றிப் பேசிக்கொள்ளுகிறதால் ஒரு மனுஷன், மறுபிறப்பின் அவசியம், நமது கிரியைகளின் போதாமை, கிறிஸ்துவின் நீதியின் தேவை முதலியவைகளைப்பற்றிப் படித்துக்கொள்ளலாம். அதுவும் அல்லாமல் இவைகளைப்பற்றி எத்தனைக்குப் பேசிக்கொள்ளுகிறோமோ அத்தனைக்கு மனந்திரும்புகிறதாவதென்ன? விசுவாசிக்கிறதாவதென்ன? ஜெபிக்கிறதாவதென்ன? சகிக்கிறதாவதென்ன? என்கிற இவை போன்ற பல காரியங்களையும் கற்றுக்கொள்ளலாம். இவை மாத்திரமா? சம்பாஷிப்பதால் ஒரு மனுஷன் தன் ஆத்துமாவைத் தேற்றிக்கொள்ளும்படியான சுவிசேஷத்தின் பிரதான வாக்குத்தத்தங்களும், ஆறுதலான வாய்மொழிகளும் இன்னதென்றும் படித்துக்கொள்ளலாம். இதுவுமன்றி முடிந்தமட்டும் இப்படிக் கலந்து பேசிக்கொள்ளுவதால் ஒரு மனுஷன் தப்பான எண்ணங்களைக் கண்டிக்கவும், சத்தியத்தை நிலைநிறுத்தவும் சமர்த்தனாகிறதோடு, அறிவீனருக்கு அறிவை உணர்த்தும்படியான சாஸ்திரப் பண்டிதனும் ஆகிவிடலாம்.

உண். இதெல்லாம் சரிதான். இவைகளைப்பற்றி உமது வாயிலிருந்து புறப்படுவதைக் கேட்பது எனக்குச் சந்தோஷந்தான்.

வாயா. இப்படிப்பட்ட சம்பாஷணைகளைச் செய்து தங்கள் அறிவை விர்த்தியாக்கிக்கொள்ளாததினால்தான், ஐயோ! அநேகம்பேர் நித்தியஜீவனுக்கு ஏதுவான விசுவாசத்தின் அவசியத்தையும் கிருபையின் கிரியைகளின் தாபத்தையும் தங்கள் ஆத்துமாவில் அறியாதிருந்து, தேவனுடைய ராஜ்யத்தில் தங்களைச் சேர்க்கமாட்டாத நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை அறிவீனத்தினாலே கைக்கொண்டு காலங்கழிக்கிறார்கள்.

உண். ஐயா! உம்முடைய பேச்சு நிலைக்குமேல்—ஆனால் பரமகாரியங்களைப்பற்றிய அறிவு தேவவரமாய் அல்லவோ இருக்கின்றன; அவைகள் மனுஷமுயற்சியினால் அல்லது அவைகளைக்குறித்துப் பேசிக்கொள்ளுகிறதால்மாத்திரம் சம்பாதிக்கக் கூடியவைகள் அல்லவே.

வாயா. அதெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும்; உன்னதத்தில் இருந்து ஒருவனுக்கு அருள் அளிக்கப்படாவிட்டால் ஒரு மனுஷன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான். எல்லாம் கிருபையால் கிடைக்கிறது; கிரியைகளினால் அல்ல. இதை மெய் என்பதற்கு நூறு வேத அத்தாட்சிகள் உமக்கு வேண்டுமானாலும் சாமர்த்தியமாய்ப் பொழிய இதோ தயாராய் இருக்கிறேன்.



உண். நல்லது, நாம் இப்போது பேசிக்கொள்ளவேண்டிய சங்கதி இன்னது என்று ஒன்றைக் குறிப்பித்துச் சொல்லும்.

வாயா. அதை உமது இஷ்டம்போல தெரிந்துகொள்ளுமேன்; நீர் தெரிந்துகொள்ளும் பொருள் பரலோக விஷயமானாலுஞ்சரி, பூலோக விஷயமானாலுஞ்சரி, சன்மார்க்க விஷயமானாலுஞ்சரி, சுவிசேஷ விஷயமானாலுஞ்சரி, வைதீக விஷயமானாலுஞ்சரி, லௌகீக விஷயமானாலுஞ்சரி, நடந்தகாரியங்களானாலுஞ்சரி, வருங்காரியங்களானாலுஞ்சரி, நாட்டுவிஷயமானாலுஞ்சரி, வீட்டு விஷயமானாலுஞ்சரி, நமக்கு வேண்டிய விஷயமானாலுஞ்சரி, வேண்டாத விஷயமானாலுஞ்சரி, எதுவோ அதை நீர் சொல்லும். அதினால் நமக்குப் பிரயோசனம் உண்டாகும்படியான முறையாய் நான் பேசுவேன்.

உண்மை வாயாடியைப் புகழுகிறது.

வாயாடியினுடைய சாதுரிய வார்த்தைகள் உண்மையைப் பிரமிக்கச்செய்தது. அவன் மெதுவாய் நகன்று பக்கத்தில் நடந்துவந்த கிறிஸ்தியானண்டை போய், காதோடு வாய் வைத்து: நமக்கு அகப்பட்ட வழித்தோழன் எவ்வளவு தைரியமுள்ளவனாய் இருக்கிறான் பாரும்; மெய்யாக இவன் வெகு சாமர்த்தியமுள்ள மோட்சபிரயாணி ஆவான் என்று சொன்னான்.

கிறி. உண்மை இப்படிச் சொன்னவுடனே கிறிஸ்தியான் புன்னகைகொண்டு, நீர் மெச்சிக்கொள்ளுகிற ஆள் தன்னை அறியாத இருபதுபேரோடு போனாலும் அவ்விருபதுபேரையும் தன் வாயாட்டத்தால் மயக்கிப்போடுவான் என்றான்.

உண். அப்படியானால் நீர் இவனை அறிவீரோ?

கிறி. அறியமாட்டேனா? தன்னை அவன் அறிந்துகொண்டதைவிட நான் அவனை அறிவேனே.

வாயாடியின் பூர்வோத்தரத்தைக் கிறிஸ்தியான் சொல்லுகிறான்.

உண். அவன் யார் என்று தயவுசெய்து சொல்லும்.

கிறி. அவன் பேர் வாயாடி. நம்முடைய ஊரான்தானே, நீர் அவனை அறியாதது ஆச்சரியமாய் இருக்கிறது. நம்முடைய ஊர் பட்டிக்காடாய் இராமல் பெரிய பட்டணமாய் இருக்கிறதைத்தொட்டு, உமக்குத் தெரியவில்லைபோல் இருக்கிறது.

உண். நம்முடைய ஊரான்தானா? எனக்கு இனம் தெரியவில்லையே, இவன் யாருடைய மகன்? இவன் வீடு எந்தத் தெருவில் இருக்கிறது?

கிறி. இவனையா இனம் அறியமாட்டீர்? இவன் அலப்புத் தெருவில் குடியிருக்கிற நயப்பேச்சு என்கிறவனுடைய மகன்; அலப்புத்தெரு வாயாடியென்றால், தெருவில் விளையாடுகிற குழந்தைகளுக்கும் தெரியுமே. அவன் வாய் நன்றாய்த்தான் இருக்கிறது, ஆனால் மற்ற விஷயத்தில் மெத்த அற்ப மனுஷன்.

உண். அப்படியா? பார்த்தால் மகா யோக்கியன்போல காணப்படுகிறான்.

கிறி. அவனுடைய உள்காரியங்களை அறியாதவர்கள் அவனைப்பற்றி இப்படியே சொல்லுவார்கள். நீர் அவனை மகா யோக்கியன் என்று சொன்ன வார்த்தை, சித்திரவேலையைப்பற்றி நான் கவனித்த ஒரு காரியத்தை நினைப்பூட்டுகிறது. சித்திரக்காரன் எழுதிய படம் தூரத்தில் மகா அழகாய்க் காணப்பட்டாலும் சமீபத்தில் அவலட்சணமாய்த் தோன்றுகிறது; வாயாடி காரியமும் அப்படி என்று சொல்லலாம். அவனைக் குறித்து நாட்டுக்குள் நல்ல பேர்தான்; வீட்டுக்குள் இருக்கிற நாற்றம் கொஞ்சம் அல்ல.

உண். நீர் சிரித்ததைப்பார்த்தால் இதெல்லாம் பரியாச வார்த்தைகள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது?

கிறி. நான் புன்சிரிப்புக்கொண்டபோதிலும் இப்படிப்பட்ட விஷயங்களில் நான் ஒருவனைப் பரியாசம்பண்ணுகிறதபடிக்கும், அல்லது இல்லாததைச் சொல்லி ஒருவனைக் குற்றப்படுத்தாதபடிக்கும் கடவுள் என்னைக் காப்பாராக. அவன் காரியங்களைப்பற்றி இன்னும் சற்று விவரமாய்ச் சொல்லுகிறேன் கேளும்: இவன் எந்தக் கும்புக்கும் ஏற்ற கோமாளியாயும், எந்தப் பேச்சுக்கும் ஏற்ற வாயாடியாயும் இருக்கிறான். கூட்டத்தில் பேசுகிறதெப்படியோ, அப்படியே சாராயக்கடை மேடையிலிருந்தும் பேசுவான்; சாராயவெறி சிரசில் ஏறுகிறதற்குத்தக்கதாக வாய்வழியாய் இப்படிப்பட்ட பேச்செல்லாம் எழும்பும். அவன் இருதயத்திலாவது, வீட்டிலாவது, சம்பாஷணையிலாவது தேவபக்தியின் வாசனையை முதலாய்க் கண்டுபிடிக்கக்கூடாது. அவன் பக்தியெல்லாம் அண்ணாக்குமுதல் நுனிநாக்குவரையும்மாத்திரம் இருக்கிறது. இப்படி வாயாடியாய்க் காலங்கழிப்பதே மதாபிமானம் என்று அவன் தன் சிந்தையில் எண்ணியிருக்கிறான்.

உண். நீர் இப்படியா சொல்லுகிறீர்? அப்போ நான் அவனால் ஏமாந்துபோனேன்போல் இருக்கிறதே!



கிறி. போல் இருக்கிறதா? ஏமாந்தே போனீர், இது நிஜம். "அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்"[a] என்ற பழமொழியை நினைத்துக்கொள்ளும். தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே இருக்கிறது.[b] அவன் ஜெபத்தைக்குறித்தும், விசுவாசத்தைக்குறித்தும், மனந்திரும்புதலைக்குறித்தும், மறுபிறப்பைக்குறித்தும் பேசுகிறானே; இப்படிப் பேசத் தெரியுமேயல்லாமல் வேறொன்றும் தெரியாது. நான் அவனோடு குடியிருந்து, வீட்டிலும் வெளியிலும் அவனுடைய காரியபாகங்கள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறேன். நான் அவனைப்பற்றிப் பேசுவதெல்லாம் நிஜம் என்று நன்றாய் அறிவேன். முட்டையின் வெள்ளைக்கரு எப்படி ருசியற்றிருக்கிறதோ அப்படி அவன் வீடும் பக்தியற்ற பாழ்வீடாய் இருக்கிறது. அங்கே ஜெபமும் இல்லை, பாவத்துக்காக உண்டாகும் உத்தம மனஸ்தாபமும் இல்லை, உள்ளதைச் சொன்னால், இவனைப்பார்க்கிலும் மிருகம் தன் நிலைமையில் தேவனை அதிகமாய்க் கனப்படுத்துகிறது என்று சொல்லலாம். அவன் கிறிஸ்துமார்க்கத்தின் அழுக்கும், அவமானமும், நிந்தையுமாய் இருக்கிறான் என்று அவனை அறிந்த எல்லாரும் சொல்வார்கள்.[c] அவன்நிமித்தம் அவனுடைய வீட்டின் அக்கம்பக்கத்திலெல்லாம் கிறிஸ்துமார்க்கம் தூஷிக்கப்படுகிறது. அவனை அறிந்த சாதாரண ஜனங்கள் எல்லாரும், "வெளியில் பரிசுத்தன், வீட்டில் பசாசு" என்று அவனைக் குறித்துச் சொல்லுகிறார்கள். அவன் வீட்டார் எல்லாருக்கும் அவனுடைய நடபடிக்கை தெரிந்திருக்கிறது. அவன் வண்டனாயிருந்து, சண்டைக்கு விழுந்து, வேலைக்காரரோடு முண்டுத்தனமான வார்த்தைகளைப் பேசுகிறதையிட்டு அவனுக்கு என்னதான் செய்யவேண்டும் என்றும், அவனுடன் எப்படித்தான் பேசலாம் என்றும் தெரியாமல்திகைத்துப்போகிறார்கள். அவனோடு கொடுக்கல் வாங்கல் பண்ணுகிறவர்கள், இந்த வாயாடியோடு கூடி வியாபாரம் செய்கிறதைப்பார்க்கிலும், வழிப்பறிகாரனோடு வியாபாரம் செய்யலாம் அப்பா என்று அன்னம்பாறுகிறார்கள். இவனோ? கூடுமானால் அவர்

வாயாடிக்குப் பேச்சே அன்றி செய்கை இல்லை.

அவன் வீடு பக்தியற்ற பாழ்வீடு.

அவன் வெளியில் சுத்தன், வீட்டில் சாத்தான்.

---

[a] மத். 23. 3. [b] 1 கொரி. 4. 20.
[c] ரோ. 2. 24, 25.

களையும் ஏமாற்றி, சூதுசெய்து, தந்திரம்பண்ணி, குல்லாப் போட்டுவிடுவான். அதுவுமல்லாமல் தன் பிள்ளைகளும் தன்னைப்போல பித்தலாட்டக்காரர் ஆகும்படி இவன் அவர்களுக்கு நன்றாய்ப் படிப்பிக்கிறான். அவர்களில் யாராவது தன் மனதுக்குப் புத்தியீனராய் அல்லது பயங்காளிகளாய் இருக்கிறதாக (ஏனெனில் இளகிய மனச்சாட்சியின் ஆரம்பத்தை வாயாடி இப்படியே எண்ணுகிறான்) தெரியவந்தால் அவன் அவர்களை மூடர் என்றும், மரத்தலையுள்ளவர்கள் என்றும் தீர்மானித்து, உயர்ந்த உத்தியோகங்களில் அவர்களை வைக்காமலும், மற்றவர்களிடத்தில் அவர்களைக்குறித்துப் புகழ்ந்து பேசாமலும் இருக்கிறான். என் மனதில் பட்டிருக்கிற எண்ணத்தின்படி அவன் தன்னுடைய துன்மார்க்கமான செய்கைகளால் அநேகர் இடறவும், விழுந்துபோகவும் காரணமாய் இருந்தது உண்டு. தேவன் அவனைத் தடுக்காதபட்சத்தில் அவன் இன்னும் அநேகருடைய அழிவுக்கு ஏதுவாய் இருப்பான் என்றே அபிப்பிராயப்படுகிறேன்.

அவன் உறவை நாடுவோர் இல்லை.

உண். என் நல்ல சகோதரனே! நீர் அவனை அறிந்திருக்கிறதினாலேமாத்திரம் அல்ல; ஒரு உத்தம கிறிஸ்தவனைப்போல மற்றவர்களுடைய சங்கதிகளைப்பற்றித் தெரியப்படுத்துகிறதினாலும் நான் உமது பேச்சை நம்பக் கடமைப்பட்டவனாய் இருக்கிறேன். ஏனெனில், வாயாடியைப்பற்றி நீர் சொல்லியதெல்லாம் துர்ச்சிந்தையினாலே அல்ல, காரியம் அப்படி இருக்கிறபடியினாலேதான் சொல்லுகிறீர் என்று நான் நம்புகிறேன்.

கிறி. உம்மைப்போல் அவனை நான் முந்தி அறியாதிருந்தால் நானும் துவக்கத்தில் நீர் நினைத்தபடியே ஒருவேளை நினைக்க இடமாயிருக்கும். அவனைக்குறித்து நான் சொல்லிய சங்கதிகளை, சத்தியமார்க்க விரோதிகளால் கேள்விப்பட்டு இருந்தால் அதைப் புறங்கூறுதல் என்று தள்ளிவிடவேண்டியது. சத்தியமார்க்க விரோதிகள் எப்போதும் மெய்மார்க்கத்தாருக்கு விரோதமாய்ப் பேசுகிறதே அவர்கள் வழக்கம். இவனைக் குறித்து இம்மட்டும் சொன்னவைகளாலும், இன்னும் நான் அறிந்திருக்கிற இவைபோன்ற பல விஷயங்களாலும் அவனைக் குற்றவாளியாக ருசுப்படுத்த என்னால் கூடும். அதுவுமன்றி நல்லவர்கள் அவனைக்குறித்து வெட்கப்படுகிறார்கள். அவனை அவர்கள் சகோதரன் என்று அழைக்கவாவது, சிநேகிதன் என்று சொல்லவாவது இடம் இல்லை. வாயாடி என்ற பேர்



காதில் விழுந்தவுடனே அவனை அறிந்தவர்களுடைய முகம் சுண்டிப்போகிறது.

உண். நல்லது; சொல்லுகிறது வேறே, செய்கிறது வேறே என்று எனக்கு இப்போது நன்றாய் விளங்குகிறது. இந்த வித்தியாசத்தை இனி நான் கவனித்துக்கொள்ளுவேன்.

கிறி. சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் எவ்வளவு பேதம் உண்டோ அவ்வளவு பேதம், சொல்லுக்கும் செய்கைக்கும் உண்டென்பது நிஜமான காரியம். ஆத்துமா இல்லாத சரீரம் செத்ததாய் இருக்கிறதுபோல, சொல்லுதல்மாத்திரம் இருந்து செய்கை இல்லாவிட்டால் செத்தபிணம் என்றே சொல்லவேண்டும். தேவபக்திக்கு உயிர் நடக்கையே. "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படும் உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைப்படாதபடி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக சுத்தமான பக்தியாய் இருக்கிறது."[a] இந்த ரகசியம் வாயாடிக்குத் தெரியாது. காது கொடுத்துக் கேட்கிறதும், வாய்திறந்து பேசுகிறதுமே ஒருவனை நல்ல கிறிஸ்தவனாக்கிப்போடும் என்று அவன் நினைத்துக்கொண்டு தன்னுடைய ஆத்துமாவை வஞ்சித்துக்கொள்ளுகிறான். கேட்பது விதை ஊன்றுவதுபோல்மாத்திரம் இருக்கிறது; அந்த விதை இருதயத்திலும் நடக்கையிலும் பலனைக் கொடுத்திருக்கிறது என்று காட்ட வாய்ப்பேச்சு போதாது, நியாயத்தீர்ப்பு நாளில் மனுஷர் அவரவருடைய கனிகளின்படியே நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று நாம் நிச்சயமாய் நம்பிக்கொள்ளவேண்டியது.[b] அந்த நாளிலே நீங்கள் விசுவாசித்தீர்களா என்று கேட்கப்படாமல், செய்கிறவர்களாய் இருந்தீர்களா? அல்லது சொல்லுகிறவர்களாய்மாத்திரம் இருந்தீர்களா? என்று கேட்கப்படும். அவரவர் வாயில் இருந்து அதற்கு வரும் உத்தரவுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். உலகத்தின் முடிவு நமக்குள் இருக்கும் பயிர் அறுப்புக்கு ஒப்பிடப்பட்டு இருக்கிறது.[c] அறுப்பில் சம்சாரி பலனைத் தவிர வேறொன்றையும் விரும்புகிறது இல்லை என்று உமக்குத் தெரியும்; மெய்விசுவாசத்திலுண்டாகாதவொன்றும் நடுத்தீர்வை நாளில் சபைக்கு உதவாமல்போகும். வாயாடியினுடைய தேவபக்தி அந்த நாளில் ஒரு பொருட்டாய் இருக்கமாட்டாது என்று உமக்கு விளக்கிக் காட்டும்படியாகவே இதையெல்லாம் சொன்னேன்.

[a] யாக். 1. 27: 1. 22-26. [b] மத். 13. 23. [c] மத். 13. 30.

உண். இவைகளை நீர் சொல்ல நான் கேட்கிறதினாலே சுத்தமான மிருகங்கள் இவை என்று கண்டுபிடிக்கும்படி மோசே முனிவர் சொல்லும் குறிப்புகள் என் ஞாபகத்தில் வருகிறது.[a] உத்தமபக்தன் விரிகுளம்புள்ளதும், அசைபோடுகிறதுமான ஜந்துவுக்குச் சமம் என்கலாம். அவன் விரிகுளம்புமாத்திரம் உள்ள ஜந்துவைப்போலும் அல்ல, அசைபோடுகிறதுமாத்திரமுள்ள ஜந்துவைப்போலும் அல்ல; முயல் அசைபோடுகிறது ஆனாலும் அது சுத்தமுள்ளதல்ல, ஏனெனில் அதற்கு விரிகுளம்பில்லை. வாயாடி இருக்கிறானே, அவன் உள்ளபடி முயலுக்கு ஒப்பானவன். அவன் அசைபோடுகிறான், எப்படியெனில் பல அறிவையும் சம்பாதிக்கிறான், வார்த்தைகளை அரைத்து குவிக்கிறான், ஆனால் அவனுக்கு விரிகுளம்பில்லை; அதாவது பாவிகளின் வழியைவிட்டுப் பிரிகிற சுபாவம் அவனிடத்தில் இல்லை. முயல் அசைபோட்டும், அதின் கால் நாயின் காலைப்போல், அல்லது கரடியின் காலைப்போல் இருக்குமட்டும் அது அசுத்தமானதுதான். இந்த வாயாடி காரியமும் அப்படியே என்று நினைத்துக்கொள்ளும்.

அவன் ஜீவனற்ற இரண்டு வாத்தியங்களுக்குச் சமம்.

கிறி. இவ்வாக்கியங்களை நான் அறிந்தமட்டும் நீர் சுவிசேஷ உபதேசங்களின் சாரத்துக்கேற்றதாகத் தாற்பரியப்படுத்தி இருக்கிறீர் என்று காண்கிறேன். அதோடு நான் வேறொரு கருத்தையும் வெளியிட விரும்புகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல்: வாய்ச்சம்பிரதாயக்காரரும், மற்றவர்களுமான பல மனுஷரை சத்தமிடுகிற வெண்கலம் என்றும், ஓசையிடுகிற கைத்தாளம் என்றும் அழைக்கிறார்.[b] அதாவது அவரே வேறொரு இடத்தில் விளக்கிக்காட்டுகிறபடி அவர்கள் சத்தம் இடுகிற உயிரில்லாத வாத்தியங்களுக்குச் சமானமாய் இருக்கிறார்கள்.[c] உயிரில்லாதவைகள் என்பது மெய்யான விசுவாசமும், சுவிசேஷ கிருபையும் இல்லாதவர்கள் என்பதைக் குறிக்கிறது. இப்படிப்பட்டவர்களுடைய வாயில் இருந்து புறப்படும் வார்த்தைகள் சம்மனசுக்களுடைய சத்தத்திற்கு ஒத்திருந்தாலும், அதினாலே அவர்கள் நித்தியஜீவனைச் சுதந்தரிக்கிற தேவனுடைய புத்திரரோடு கூட வாழும்படி குடியேற்றப்படமாட்டார்கள்.

உண். அது சரி; அவனுடைய கூட்டுறவு எனக்குத் துவக்கத்தில் அவ்வளவு பிரியமாய் இருக்கவில்லை, இப்போது முற்

[a] லேவி. 11. அதி. உபா. 14. அதி. [b] 1 கொரி. 13. 1—3. [c] 1 கொரி. 14. 7.



றிலும் வெறுத்துப்போயிற்று; அவனை நம்மைவிட்டுத் தொலைக்கிறதற்கு என்ன பிரயத்தனம் பண்ணலாம்?

கிறி. நீர் என் புத்தியைக் கேட்டு நான் சொல்லுகிறபடி மாத்திரம் செய்யும்; கடவுளாய் அவனுடைய இருதயத்தைத் தட்டி அவன் மனதைத் திருப்பிவிட்டால் அன்றி, மற்றப்படி இவன் சங்காத்தம் நமக்கு வேண்டாம் என்று அவனே ஓட்டம் பிடிக்கிறான் பாரும்.

உண். நான் என்ன செய்யச் சொல்லுகிறீர்?

கிறி. என்ன செய்ய? நீர் மறுபடியும் அவனண்டை போய், மெய்த்தேவபக்தியின் வல்லமையைக்குறித்து, மன உணர்வுக்கேற்றதாகப் பேச்சுக் கொடுக்கும்படி கருத்தாய் இருந்துகொண்டு, அதைக்குறித்துப் பேசுவோமா என்று கேளும். அவன் அதைக்குறித்து நானெச்சென்று இணங்கிக்கொள்ளுவான். அவன் இணங்கின பின்பு, அந்த மெய்த்தேவபக்தியின் வல்லமை அவன் இருதயத்திலும் வீட்டுக் குடித்தனத்திலும் வெளிச் சம்பாஷணைகளிலும் உண்டா இல்லையா என்று தெளிவாய்க் கேட்டு பரிசோதனைசெய்து பாரும்.

நல்லது அப்படியே ஆகட்டும் என்று உண்மை கடிய நடந்து மறுபடியும் வாயாடியண்டைபோய், வாரும்; ஆகா, வந்தீரா, மெத்த சந்தோஷம், என்ன விசேஷம் என்று கேட்டான்.

வாயா. மெத்த சலாம், வாரும், எல்லாம் க்ஷேமந்தான். இதற்குள் அனந்தம் காரியங்களை நாம் பேசி முடித்திருக்கலாம் என்று நினைத்தேன்.

உண். நல்லது; உமக்கு இஷ்டமானால் உடனே பேசத்தொடங்குவோமே; நாம் பேசும் விஷயம் இன்னது என்று என்னையே தீர்மானிக்கச் சொன்னீரே, தேவனுடைய இரட்சண்ய கிருபை மனுஷர் உள்ளத்தில் இருக்கும்போது எவ்விதமாய் வெளியாக்கப்படும் என்ற விஷயத்தையே நமது சம்பாஷணையின் பொருளாக வைத்துக்கொள்ளுவோமாக.

வாயா., கிருபையின் கிரியையைப் பற்றிக்கொண்ட தப்பெண்ணம்.

வாயா. நீர் குறித்த பொருளைக் கூர்மையாய்க் கவனிக்கிறபோது, வஸ்துக்களின் வல்லமையின் பேரில் போகிறீராக்கும்; நல்லதுதான், இது முதல்தரமான கேள்விதான்; இதற்கு உத்தரவு சொல்ல மனப்பூர்வத்தோடு இருக்கிறேன். அதின் மறுமொழியை சுருங்கச்சொல்லி விளங்க

வைக்கிறேன் கேளும்: முதலாவது, தேவ கிருபை எந்த இருதயத்தில் இருக்குமோ அங்கே அது பாவத்துக்கு விரோதமாக பெருங்கூக்குரலை எழும்பச்செய்கிறது. இரண்டாவது:

உண். இல்லை, பொறும், பொறும்; நாம் ஒவ்வொன்றாய்ப் பரிசோதனை செய்துவிட்டு அடுத்ததுக்குப் போவோம்; நீர் அப்படிச் சொன்னதைவிட, தேவ கிருபையுள்ள ஆத்துமாவானது தன் பாவங்களை அரோசிக்கும்படியாக இணங்குகிறது என்று இப்படிச் சொல்லி இருந்தால் நன்றாய் இருந்திருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது.

பாவத்தைப்பற்றி இரைந்து கூக்குரலிடுதல் கிருபையின் அடையாளம் அல்ல.

வாயா. அதென்ன? அப்படிச் சொல்லுகிறீர்? பாவத்துக்கு விரோதமாகக் கூப்பாடு போடுகிறது என்றால் என்ன? பாவ அரோசிப்புக்கு இணங்குகிறது என்றால் என்ன? இரண்டுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

உண். ஓ! இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் இருக்கிறதே. லோக முறைப்படி ஒரு மனுஷன் தன் பாவங்களுக்கு விரோதமாய் கூக்குரலிடலாம்; ஆனால் தெய்வீகபக்தியினால் உண்டாகிற விரோதத்தின் வல்லமையினால் அன்றி மற்றப்படி அவன் தன் பாவங்களை அருவருக்கக்கூடாதவனாய் இருப்பான். நான் அடிக்கடி அநேகர் பிரசங்கமேடையில் நின்றுகொண்டு பாவத்துக்கு விரோதமாய்க் கூக்குரலிடக் கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர்கள் பின்னும் தங்கள் உள்ளத்திலும் வீட்டிலும் சம்பாஷணையிலும் பாவத்தை வைத்திருக்கிறதையும் அறிவேன்.[a] யோசேப்பின் எஜமாட்டி, தான் மகா பதிவிரதாபத்தினிபோல கூக்குரலிட்டாளே, கூக்குரலிடும் குணம் அவளுக்கு இருந்தபோதிலும், யாதொரு தடையும் நேரிட்டிராவிட்டால் அவன் நினைத்த அசுத்தத்தில் அன்று விழுந்திருப்பாள் அல்லவா? சில தாய்மார் தங்கள் பிள்ளைகளை மடியில் வைத்துக்கொண்டு, நீ கெட்ட பிள்ளை, துஷ்டப் பிள்ளை, உனக்குப் பால் இல்லை, சோறில்லை என்று திட்டுகிறதுபோலவே அநேகர் தங்கள் பாவங்களுக்கு விரோதமாய்க் கூக்குரலிட்டு, திட்டுவார்கள்; அப்படித் திட்டின தாயானவள் கொஞ்சநேரத்துக்குப் பிற்பாடு, என் கண்ணே, மணியே, கரும்பே, மருக்கொழுந்தே என்று சொல்லிக் கழுத்தைக் கட்டி முத்தமிடுகிறாளே; அதுபோல் அவர்கள் மறுபடியும் பாவத்தைக் கட்டி அணைத்துக்கொள்ளுவார்கள்.

[a] ஆதி. 39. 15.



ஆகையால் பாவத்துக்கு விரோதமாகக் கூக்குரலிடுகிறதில் பிரயோசனம் இல்லை.

வாயா. நீர் பேச்சிலே பிடி அகப்படாதா என்று பதிவிருந்து ஆளை மடக்கலாம் என்றிருக்கிறாப்போலே காணுது.

உண். அல்ல, அல்ல; அது என் சுபாவம் அல்ல. அந்தந்தக் காரியத்தை அதினதின் இடத்தில் ஒழுங்குப்படுத்தவே பார்க்கிறேன். இனி இருதயத்தில் இருக்கும் தேவகிருபை வெளியாகும் முறையை உணர்த்தும் இரண்டாவது காரியத்தைச் சொல்லும்.

வாயா. சுவிசேஷ இரகசியங்களைப்பற்றிய உயர்ந்த அறிவுதான்.

உண். இந்த அடையாளத்தை முந்திச் சொல்லவேண்டியதிருந்தது; முந்திச் சொன்னால் என்ன, பிந்திச் சொன்னால் என்ன, இதுவும் தப்பான அடையாளந்தான், ஏனெனில் சுவிசேஷ இரகசியங்களைப்பற்றிய சாதாரண அறிவுகளை அல்ல, உயர்ந்த அறிவுகளையோ ஒருவன் உடையவனாய் இருந்தாலும் இருதயத்தில் என்னளவும் தேவ கிருபையற்றவனாய் இருக்கலாமே. அவன் சகல அறிவுகளையும் உடையவனாய் இருந்தபோதிலும் அவனிடத்தில் தேவ கிருபையே இல்லாததினால் அவன் தேவனுடைய பிள்ளையாய் இருக்கமாட்டான்.[a] "இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா" என்று இயேசு ஒருதரம் கேட்டபோது, சீஷர்: "ஆம்" என்றார்கள். இயேசுவோ: "இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்" என்றார். அவர் அவர்களுடைய அறிவின்மேல் ஆசீர்வாதங்களைப் பொழியாமல் செய்கையின்மேல் பொழிகிறார். ஏனெனில் செய்கையோடு கூடாத ஒரு அறிவும் இருக்கிறது; "எஜமானுடைய சித்தத்தை அறிந்தும் அதின்படி செய்யாதவன் எவனோ" என்று இரட்சகர் வேறொருதரம் சொல்லி இருக்கிறார். இதினாலே எஜமான் சித்தம் அறிந்தும் அதின்படி செய்யாத வேலைக்காரரும் உண்டென்று விளங்குகிறது. ஒரு மனுஷன் சம்மனசுகளுக்கொத்த அறிவுடையவனாய் இருந்தும் கிறிஸ்தவனாய் இராமலிருக்கலாம்; ஆகையால் நீர் சொல்லும் அடையாளம் சரியான அடையாளம் அல்ல, ஒன்றைக்குறித்த அறிவு, வாய்ச்சம்பிரதாயருக்கும், வீம்பருக்கும் பிரீதியாயிருக்கும் என்பது மெய்யானாலும், தேவனுக்குப் பிரீதியானதோ செய்கை

உயர்ந்த அறிவும் அதின் அடையாளம் அல்ல.

[a] 1 கொரி. 13. 2.

தான். ஆகையால் அறிவு—அறிவு என்னப்படுகிற இரண்டு காரியம் உண்டு;—பல விஷயங்களைப்பற்றியும் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசையால் சம்பாதிக்கிற அறிவும் உண்டு; விசுவாசம், அன்பு ஆகிய இவைகளின் கிருபை கலந்த அறிவும் உண்டு. இந்த அறிவு தேவ சித்தத்தை முதலாய் இருதயத்திலிருந்து நிறைவேற்றும்படி ஏவி எழுப்பும். முந்தின அறிவு வாய்ப்பேச்சை விரும்புகிறவர்களைத் திருப்திசெய்யும்; ஆனால் பிந்தின அறிவு இல்லாவிட்டால் மெய்க்கிறிஸ்தவன் மனரம்மியம் அடையமாட்டான். "எனக்கு உணர்வைத் தாரும், அப்பொழுது நான் உமது வேதத்தைப் பற்றிக்கொண்டு என் முழு இருதயத்தோடும் அதைக் கைக்கொள்ளுவேன்" [a] என்று ஒரு பக்தன் சொன்னார்.

இரண்டுவித அறிவுகள்.

வாயா. நான் முன் சொன்னது சரிதான்; மறுபடியும் நீர் பேச்சிலே பிடி அகப்படாதாவென்று ஆளைமடக்கப் பதிவிருந்திருக்கிறீர்; கூ—க்கூ—க்கூ இது யார் செய்கிற வேலை; இப்படியானால் மனதில் எப்படி எழுப்புதல் உண்டாகும்?

உண். அது போகட்டும்; இருதயத்தில் இருக்கும் தேவகிருபை வெளியாகிற வேறொரு வகையையாவது சொல்லுமேன்?

வாயா. இனி சொல்ல நான் பைத்தியக்காரனோ? நாமே ஒருவருக்கு ஒருவர் ஒத்துவரக் காணோமே.

உண். உமக்குச் சொல்ல மனம் இல்லையானால் நான் சொல்லவாவது உத்தரவு தருவீரா?

வாயா. உமதிஷ்டம், உமதிஷ்டம்.

உண். ஒரு ஆத்துமாவில் தேவகிருபை இருக்கிறது மெய்யானால், அது தன்னை உடையவனுக்குள் நடத்தும் கிரியையாலும், அக்கம்பக்கம் அவனோடு பழகுகிறவர்களுக்குள் அது நடத்தும் கிரியையாலும் வெளிப்படும் என்று சுருக்கிச் சொல்லலாம்.

தன்னை உடையவனுக்குள் நடத்தும் கிரியையால் எப்படி விளங்கும் என்றால்; அந்தக் கிருபை அவனுக்குள் பாவ உணர்வையும், விசேஷமாய் அவனுடைய சுபாவத்தின்படியுள்ள அழுக்கையும், அவிசுவாசமாகிய பாவத்தையும் அவனுக்குத் தாண்டிக்காட்டி, இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் அவன் தேவனிடத்தில் இரக்கத்தைப் பெற்

தேவ கிருபையின் ஒரு குறிப்பு.

[a] சங். 119. 34.



றுக்கொள்ளாவிட்டால், அவைகளின் நிமித்தம் நிச்சயமாகவே தண்டனைக்கு உட்படுத்தப்படுவான் என்று அவனுக்குள் உணர்த்தும். இவ்வகையான தோற்றமும் அறிவும் அவனுக்குள் கிரியைசெய்து அவனைப் பாவத்துக்காகத் துக்கப்படவும், வெட்கப்படவும் பண்ணும். [a] அதுவும் அல்லாமல், லோகரட்சகர் தம்மை அவனுக்குள் வெளிப்படுத்தி இருக்கிறார் என்று கண்டறிந்து நித்தியஜீவன் கிட்டும்படி அவரோடு கூடவாழ்ந்து காலங்கழிப்பதே அவசியம் என்றும் அறிகிறான். இதினாலே அவர் இல்லாமல் தீராது என்ற பசியும் தாபமும் அவர்மேல் உண்டாகிறது; இப்படிப் பசிதாக முதலிய வாஞ்சையுடையவர்களுக்காகவே தேவன் அநேக வாக்குத்தத்தங்களை அருளிச்செய்திருக்கிறார். இப்படிப்பட்டவன் தன் இரட்சகர்பேரில் தனக்கு இருக்கும் விசுவாசத்தின் பலத்துக்கு அல்லது பலவீனத்துக்குத் தக்கதாக சந்தோஷத்தையும் சமாதானத்தையும் உடையவனாய் இருக்கிறான். அவன் தன் விசுவாச அளவுக்குத் தக்கதாகவே பரிசுத்தத்தின்மேல் நேசமுடையவனாய் இருக்கிறான்; இரட்சகரை மென்மேலும் அறிய ஆசையாய் இருக்கிறான்; இவ்வுலகத்தில் அவருக்கு ஊழியம் செய்ய ஊக்கம் கொள்ளுகிறான். ஆனால் ஒருவனுடைய இருதயத்தில் இருக்கிற தேவ கிருபை இவ்வண்ணமாக வெளிப்படும் என்று நான் சொன்னபோதிலும், இவை அனைத்தும் தேவ கிருபையின் தொழிலேயன்றி வேறல்ல என்று அம்மனிதனே அறிந்து தீர்மானமாய்ச் சொல்லக்கூடுவது அபூர்வம் என்று சொல்லவேண்டியது. ஏனெனில் அவனுக்கு இந்நிலைமையிலும் இருக்கும் சுபாவக்கேடும், துர்ப்பத்திக்குச் சாயும் மனமும் அவனுடைய உள்ளத்தில் இவைகளைப்பற்றி சரியான தீர்ப்பைச் செய்துகொள்ள விடுகிறது இல்லை. ஆதலால் ஒருவனுக்குள் இந்தக் கிரியை நடந்தேறுகையில், இது கிருபையின் கிரியையேயல்லாமல் வேறில்லை என்று அவன் உறுதியாய் தீர்மானப்படுத்திக்கொள்ளும்படி தெளிந்த புத்தியும், பகுத்தறியும் மனமும் அவசியமாய் வேண்டியது. [b]

தேவகிருபை தன்னை உடையவனுக்குள் எப்படி விளங்கும் என்று முன் சொன்னேனே, இப்போது அந்தக் கிருபை

[a] சங். 37. 18. எரே. 31. 19. யோவா. 16. 8. ரோ. 7. 24. மாற். 16. 16. கலா. 2. 16. வெளி. 1. 6.

[b] யோவா. 19. 6. கலா. 2. 15, 16. அப். 4. 12. மத். 5. 6. வெளி. 21. 6.

அக்கம்பக்கம் அவனோடே பழகுகிறவர்களுக்கு எப்படி விளங்கும் என்று சொல்லுகிறேன் கேளும்.

வேறொரு குறிப்பு.

1. கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசத்தை தன் ஆத்துமாவின் அநுபவப்படியே அவன் மற்றவர்களுக்கு அறிக்கையிடுகிறதிலே அது வெளியாகும்.

2. அந்த அறிக்கைக்கேற்ற நடக்கையினாலும் வெளியாகும்; பரிசுத்தமாய் ஜீவனம் செய்யும்படியாக, அவன் இருதயம் பரிசுத்தமாய் இருக்கும்; அவன் குடும்பமும் பரிசுத்தமாய் இருக்கும்; உலகத்தில் அவன் சம்பாஷணையும் பரிசுத்தமாய் இருக்கும்; இவ்விதமான ஜீவனம் பொதுவாகத் தனக்குள் இருக்கும் தன் பாவத்தை அருவருக்கவும் செய்கிறது; பாவத்துக்காகத் தன்னை அருவருக்கவும், பாவத்தைத் தன் குடும்பத்தில் இருந்து அகற்றிவிடவும், பரிசுத்தத்தை உலகத்தில் விருத்தியாக்கவும் அந்தரங்கத்திலே அவன் ஏவப்படுகிறான். அவன் சில மாயக்காரரும் அலப்பரும் வலதைப்பேசித் தங்களைப்போல பக்தியுள்ளவர்கள் ஒருவரும் இல்லையே என்று வெளிக்குக் காண்பிக்கப் பிரயாசப்படுகிறதுபோல் அல்ல; தேவவசனத்தின் வல்லமைக்கு விசுவாசத்தினாலும் அன்பினாலும் தன்னைக் கீழ்ப்படுத்திக்கொண்டு அதின்படி நடந்துவருகிறதினாலே அந்தக் கிருபையின் கிரியை வெளியாகும்.[a]

ஐயா, வாயாடியே! தேவகிருபையின் கிரியை இன்னது என்றும், அது வெளியாகும் வகை இப்படி என்றும் நான் சுருக்கமாய்ச் சொன்னேனே; இவைகளைக்குறித்து நீர் ஏதாவது ஆட்சேபிக்க மனமானால் ஆட்சேபியும்; அப்படி இல்லையானால் இரண்டாவது கேள்வியைச் சொல்ல உத்தரவு தாரும்.

**வாயா.** இல்லை அப்பா; நீர் சொல்லச்சொல்ல கேட்டுக்கொண்டு இருப்பது இனி என் வேலையே தவிர ஆட்சேபிப்பது என் வேலை அல்ல; இரண்டாம் கேள்வியைக் கேளும் பார்ப்போம்.

வேறு குறிப்பு.

**உண்.** அடுத்த கேள்வி இதுதான்: தேவகிருபை தன்னை உடையவனுக்குள் நடத்தும் கிரியைகளால் விளங்கும் என்பதைப்பற்றிச் சொன்ன குறிப்புகளுக்கு உமது அநுபோகம் இசைந்து இருக்கிறதா இல்லையா? உமது ஜீவனத்தரும் சம்பா-

[a] யோபு. 42. 5, 6. சங். 50. 23. எசே. 20. 43. மத். 5. 8 யோவா. 14. 15. ரோ. 10. 10. எசே. 36. 25. பிலி. 1. 27: 3. 17.



ஷணைகளும் அதைப்பற்றி சாட்சிசொல்லக்கூடுமோ? கூடாதா? உம்முடைய பக்தியெல்லாம் உதட்டிலும் நாவிலும்மாத்திரம் இருக்கிறதா? அல்லது செய்கையிலும் சத்தியத்திலும் இருக்கிறதா? சொல்லும்; ஆனால் ஒரு மன்றாட்டுண்டு. இவைகளுக்கு நீர் மறுமொழிசொல்ல மனம் இசைந்தால், நீர் அறிந்து இருக்கிறதற்கு மிஞ்சி ஒன்றையும் கூட்டவேண்டாம்; நீர் சொல்லும் காரியங்கள் எல்லாம் தேவன் ஆமென் என்று சொல்லத்தக்கதாகவும், உம்முடைய மனச்சாட்சியும் யதார்த்தம், யதார்த்தம் என்று ஒத்துக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கட்டும்; ஏனெனில் தன்னைப் புகழுகிறவன் உத்தமன் அல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.[b] மேலும் நீரே சொல்லும். என் சம்பாஷணைகளும், என் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும் என்னைக்குறித்து இவன் பொய்யன் என்று அறிக்கையிட, நான்மாத்திரம் என்னைப்போல் யோக்கியன் இல்லை, என் காரியம் அப்படி அல்லது இப்படி என்று சொல்லிக்கொண்டு இருந்தால் அதைப்போல் அக்கிரமம் வேறுண்டா?

உண்மையின் போக்கு வாயாடிக்குப் பிடிக்கவில்லை.

**வாயா.** இப்படிக் கேட்டவுடனே வாயாடியினுடைய முகம் செத்துப்போயிற்று; மறுபடியும் அவன் தனக்குள்ளே திடன் அடைந்து சொல்லுகிறான்: ஐயோ, நீர் ஞான அநுபோகத்துக்கும், மனச்சாட்சியின் ஒத்தாசைக்கும், தேவ சாட்சிக்கும் வந்துவிட்டீரோ? பேசுகிறதற்கெல்லாம் ஆமென் சொல்ல ஆண்டவரைப் பிடித்து வைக்கிறீரோ? சரி, சரி—இப்படிப்பட்ட சம்பாஷணையை இழுத்துவிடுவீர் என்று நான் கனவிலும் எண்ணினது இல்லை; இப்படிப்பட்ட கேள்விகளுக்கு மறுமொழி சொல்ல என் வாயைத் திறக்கவும்மாட்டேன்; அப்படி எனக்கு அக்கறை இல்லை; நான் உமது பள்ளிக்கூடத்துக்கு வந்து படித்து, நீர் எனக்கு உபாத்தியாயராய் உட்கார்ந்துகொண்டு இருப்பீரே, அன்றைக்கு வேண்டுமானால் உத்தரவு சொல்லுகிறேன்; அப்போதுங்கூட உம்மை என் நியாயாதிபதியாய் இராதபடித் தள்ளிப்போட மனமானால் தள்ளிப்போடுவேன்; ஆனால் நீர் என்னிடத்தில் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கிறதற்குக் காரணந்தான் என்ன? தயவு செய்து சொல்லும்படி மன்றாடுகிறேன்.

**உண்.** காரணமா? உம்முடைய வாய்ச்சம்பிரதாயங்களை

[b] 2 கொரி. 10. 18.

எல்லாம் பார்த்துக்கொண்டபடியினாலும், இந்த வாய்ச்சம்பிரதாயமேயன்றி தேவபக்தியின் வயிரம் இல்லை என்ற காரியம் எனக்குத்தெரியாமல்போனபடியினாலும்இப்படிக்கேட்டேன். அதுவுமன்றி உள்ளதையெல்லாம் சொல்லவேண்டுமானால், நீர் தேவபக்தியை வாய்ப்பேச்சுக்குள்ளே அடக்கிவைத்திருக்கிறீர் என்றும், உமது வாயின் வார்த்தைகளெல்லாம் பொய் என்று உம்முடைய சம்பாஷணைகள் ருசுப்படுத்துகிறதென்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். கிறிஸ்தவர்களுக்குள்ளே நீர் ஒரு கறும்புள்ளியாய் இருக்கிறீர் என்றும், உம்முடைய அவபக்தியுள்ள நடக்கை தேவபக்தியை நாசப்படுத்துகிறதென்றும், உம்முடைய தீயவழிகளைப் பின்பற்றி இடறி விழுந்தவர்கள் வெகுபேர் என்றும், இன்னும் கெட்டுப்போகிற நிலைமையில் இருக்கிறவர்கள் வெகுபேர் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். உம்முடைய பக்திக்கும், சாராயக்கடைக்கும், பொருளாசை மனுஷனுக்கும், அசுத்த மனுஷனுக்கும், பொய் உதட்டுக்கும், ஆணையிடும் நாவுக்கும், போக்கிரிகள் கூட்டத்துக்கும் ஒத்துப்போகுமாம். ஆகவே சொல்லவேண்டுமானால், "ஒரு வேசி எல்லாப் பெண்களுக்கும் வெட்கம் வருவிக்கிறாள்" என்று துன்மார்க்க ஸ்திரீகளைப்பற்றிச் சொல்லப்படுகிற பழமொழி உமக்கே தகும். நீர் தேவபக்தர் எல்லாருடைய வெட்கமாகவும் இருக்கிறீர்.

உண்மையின் கண்டனை.

வாயா. சொல்வார் பேச்சைக் கேட்டுக்கொண்டு, நீர் விசாரியாமல், இப்படிப் படபடப்பாய்த் தீர்மானங்கள் செய்துவிடுகிறாய்; ஆகையால் நீ வெடுவெடுத்து, முகங்கோணித் திரிகிற புத்தியுடைய ஒரு மனுஷன்; உனக்கும் நமக்கும் ஒத்துவராது என்று சொல்லிவிட்டு வாயாடி மெதுவாய் விலகிப் போய்விட்டான்.

வாயாடி மெதுவாகப் போய்விடுகிறான்.

அப்பால் கிறிஸ்தியான் தன் சிநேகிதனண்டை நெருங்கி வந்து, இப்போ பார்த்தீரா? நான் சொன்னதும் சரி, இங்கே நடந்ததும் சரி; உம்முடைய பேச்சுக்கும் அவனுடைய இச்சைக்கும் ஒருக்காலும் சரிப்படாது; அவன் தன் நடக்கையைச் சீர்ப்படுத்துகிறதைப் பார்க்கிலும் உம்முடைய உறவை விட்டு விலகிக்கொள்ளும்படி பிரியப்படுகிறான். நான் சொன்னபடி தொலைந்துபோனான், அவன் போனால் போகட்டும்; அவன் போனதினாலே யாருக்கு நஷ்டம்? அவனுக்குத்தான்



நஷ்டம். நாம் அவனை விட்டுப் பிரிந்தோம் என்றிராதபடி அவனே நம்மை விட்டுப் பிரிந்துபோனது ஒரு சகாயம்தான்; இந்தக் குணத்தை அவன் விடமாட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது. விடாமல் அதின்படியே பேசிவருவானானால் அவன் நம்மோடுகூட வருகிறது நமக்குப் பெரிய லச்சையாய்த்தான் இருக்கும்; அதுவுமன்றி அப்போஸ்தலனும் இப்படிப்பட்டவர்களுக்கு விலகு என்றே கற்பித்திருக்கிறார் என்றான்.

உண். எப்படியும் அவனுடன் கொஞ்சம் சம்பாஷித்துக்கொண்டதற்காக நான் சந்தோஷப்படுகிறேன். ஒருவேளை அவன் அவைகளைப்பற்றி மறுபடியும் நினைத்தாலும் நினைப்பான்; எப்படி இருந்தாலும் நான் ஒன்றையும் மூடிவைக்காமல் எல்லாவற்றையும் தெளிவாயும் தீர்க்கமாயும் சொல்லிப்போட்டேன். ஒருவேளை அவன் கெட்டுப்போனாலும், நான் அவன் இரத்தப்பழிக்கு நீங்கலாய் இருக்கிறேன்.

கிறி. நீர் இவ்வளவு தெளிவாய்ப் பேசினது மெத்த நல்லது. இந்தக்காலங்களில் இப்படி உம்மைப்போல தெளிவாயும் தீர்க்கமாயும் சத்தியங்களை உணர்த்துகிறவர்கள் மெத்தக் கொஞ்சப்பேர்; அதினாலேதான் தேவபக்தி அநேகருடைய மனதுக்கு, நாற்றம் மூக்கில் ஏறுவதுபோல் இருக்கிறது. இப்படிப்பட்ட வாயாடிப்பயல்களுக்கெல்லாம் வாயிலே மாத்திரம் தேவபக்தி இருக்கிறது; நடக்கையோ தாறுமாறு. இப்படிப்பட்டவர்களை நமக்குள்ளே சேர்த்துப்போடுகிறதினாலே உலகத்துக்கு அதிசயமும், கிறிஸ்துமார்க்கத்துக்கு ஈனமும், பக்தருக்கு மனநோவும் உண்டாகிறது. எல்லா மனுஷரும் இப்படிப்பட்ட மூடரை உம்மைப்போல நடத்துவார்களானால் எனக்கு மெத்தச் சந்தோஷமாய் இருக்கும். அப்படிச் செய்தால், ஒன்று மெய்த்தேவபக்திக்கு இசைவாய் நடப்பார்கள்; அல்லது பரிசுத்தவான்களின் ஐக்கியத்துடன் நமக்கு இசையாது என்று சொல்லி விலகிக்கொள்ளுவார்கள் என்று சொன்னான். அப்புறம் அவர்கள் இருவரும்,

(இராகம்—தன்ன தான.)

வாயாடி என்போனுமே
வழிபோடு கூட—மிகக்
கூடியோடி ஓடி—தன்
பெருமை அலங்காரங்களைப்
பிரித்துக் காட்டினனே.— தன்ன தான.

மெத்தவோ சமர்த்தன் போல
  ஆடி ஆடி அசைந்து—அவன்
கூடி ஓடி நடந்து—தனக்
கெவரும் நிகரில்லைப் போல
கெருவம் பேசினனே— தன்ன னான,

உண்மையோன் என்போனுமே
  வாயின் வாளைத் திட்டி—ஒரு
இட்டிபோல நீட்டி—இரு
நயவிலமையைக் கேட்டபோது
தேய்பிறைபோல் மறைந்தான்— தன்ன னான.

என்று பாடிக்கொண்டு, அவரவர் தங்கள் வழிப்பயணங்களில் கண்ட காட்சிகளையும் பட்ட வருத்தங்களையும்பற்றிப் பேசிப் பேசி வழி நடந்தார்கள். இவ்விதமாய் அவர்கள் வழி நடக்க விட்டாலும், மெத்தவும் மனஞ்சோர்ந்துபோவார்கள். ஏனெனில் அவர்கள் இப்போது ஒரு பாழ்வனத்தைக் கடந்துபோகிறவர்களாய் இருந்தார்கள்.

## சுவிசேஷகரின் மூன்றும் சந்திப்பு.

சுவிசேஷகரின் சந்திப்பு.

இவ்வண்ணமாய் அவர்கள் இருவரும் வழிநடந்து, அந்த வனத்தைக் கடந்து முடிகிற சமயத்தில் உண்மை தற்செயலாய்ப் பின்னோட்டிப் பார்த்து ஒரு ஆள் வருகிறதைக் கண்டான். அது முன் அறிந்த ஆள்போலவும் அவனுக்குக் காணப்பட்டது. உடனே அவன் தன் சிநேகிதனாகிய கிறிஸ்தியானைக் கூப்பிட்டு: அதோ வருகிறது யார்? என்று கேட்டான். உடனே கிறிஸ்தியான் திரும்பிப்பார்த்து, ஆகா என் உத்தம சிநேகிதனாகிய சுவிசேஷகன்[1] வருகிறார் என்றான். அப்படியா?" அவர்தாமோ? அவர் எனக்கும் உத்தம நேசர்தான், அவர்தான் எனக்குத் திட்டிவாசலின் திசையைக் காட்டினவர் என்று சொன்னேன். இதற்குள்ளாக அவரும் கிட்டிவந்து, அவர்களுடன் கூடிக்கொண்டு பின்வருகிறபடி சம்பாஷித்தார்.

சுவி. பிரியமான சகோதரரே! உங்களுக்குச் சமாதானம்; உங்களுக்குச் சகாயம் செய்கிறவர்களுக்கும் சமாதானம்.

1 சுவிசேஷகன். கிறிஸ்தியான் சிலகாலம் விட்டுப் பிரிந்திருந்த அவனுடைய பழைய போதகனைக் குறிக்கிறது. இப்பொழுது அவர் அவனையும் அவன் தோழனையும் உற்சாகப்படுத்தி அவர்கள் பயணத்தை நிறுத்திவிடாதபடிச் சொல்லுகிறார்.



கிறி. வாரும், வாரும் புண்ணிய குருவே! உமது முகத்தைக் கண்டவுடனே, என்னுடைய நித்திய நன்மைக்கென்று நீர் செய்த உதவிகளும், இளைப்பில்லாத பிரயாசங்களும் என் ஞாபகத்தில் வருகிறது.

உண். சுவிசேஷகரே! வந்தனம், வந்தனம்; ஆயிரந்தரம் வந்தனம் ஐயா! எங்களைப்போலொத்த ஏழைப் பிரயாணிகளுக்கு அருமையான சுவிசேஷகரே! உம்முடைய சகவாசம் எவ்வளவோ உதவியாய் இருக்கிறது என்று உண்மை சொன்னான்.

சுவி. நான் உங்களுடன் பேசிப் பிரிந்ததுமுதல் உங்களுடைய சீர் நிருவாகங்கள் எப்படி? உங்களுக்கு என்னென்ன சம்பவித்தது? நீங்கள் எப்படி எப்படி நடந்துகொண்டீர்கள்? என்று சுவிசேஷகர் கேட்டார்.

அப்போது கிறிஸ்தியானும் உண்மையும் அவரவர் அநுபவித்த சங்கடங்களையும், பட்ட பாடுகளையும், அவைகளிலிருந்து தப்பி இவ்வளவு தூரம் வந்து சேர்ந்த வகைகளையும் விஸ்தாரமாய்ச் சொன்னார்கள்.

அதைக் கேட்ட சுவிசேஷகர்: ஆகா! என் உள்ளம் சந்தோஷத்தால் பூரிக்கிறது. நீங்கள் சங்கடப்பட்டதையிட்டல்ல, மெத்தவும் பலவீனராயிருந்தும் அவைகளை நீங்கள் ஜெயித்து, வெற்றியடைந்து, இதுகாண்மட்டும் பிரயாணம் செய்கிறீர்களே, அதுவே எனக்குச் சந்தோஷமாய் இருக்கிறது.

சுவிசேஷகரின் போதனை.

ஆகா! இதையிட்டு என் நிமித்தமாகவும், உங்கள் நிமித்தமாகவும் என் ஆவியில் உண்டாகிற ஆனந்தத்துக்கு அளவில்லை என்று நான் மறுபடியுஞ்சொல்லுகிறேன். எப்படியெனில் நான் விதைத்தேன் நீங்கள் அறுத்தீர்கள்; "விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்க காலம் இதோ வருகிறது."[a] அதாவது நீங்கள் முடிவுபரியந்தம் உங்கள் பயணத்தை நடத்துகிறதற்கு "தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்பீர்கள்."[b] உங்களுக்கு முன்னே கிரீடம் இருக்கிறது; அது அழிந்துபோகமாட்டாத ஒரு கிரீடமாய் இருக்கிறது; "அதை நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்."[c] உங்களைப்போல அநேகர் இந்தக் கிரீ

[a] யோவா. 4. 36. [b] கலா. 6. 9. [c] 1 கொரி. 9. 24–27.

டத்தைப் பெற்றுக்கொள்ளும்படி பிரயாணப்பட்டு, வெகு தூரம் நடந்தும், வேறொருவன் அவர்களுக்கு முந்திக்கொண்டு அதைக் கொண்டுபோய் விடுகிறதும் உண்டு. ஆகையால் ஒருவரும் உங்கள் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உங்களுக்குள்ளதைப் பற்றிக்கொண்டு இருங்கள்.[a] நீங்கள் பிசாசின் குண்டு அடி தூரத்தை இன்னும் தாண்டிவிடவில்லை, "பாவத்துக்கு விரோதமாகப் போராடுகிறதில் இரத்தம் சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லை."[b] பரம ராஜ்யம் எப்போதும் உங்கள் முன் இருப்பதாக; காணப்படாதவைகளைப்பற்றிய விசுவாசத்தில் உறுதியாய் இருப்பீர்களாக; மறு உலகத்துக்கு இந்தப் பக்கத்தில் இருக்கும் எந்த விஷயங்களும் உங்களுக்குள் பிரவேசிக்கவே வேண்டாம்; எல்லாவற்றுக்கும் மேலாக, உங்கள் சொந்த இருதயங்களை உற்றுறாய்ந்து, அதின் இச்சைகளைப் பரிசோதனை செய்யுங்கள்; ஏனெனில் அது எல்லாவற்றைப்பார்க்கிலும், "திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது."[c] உங்கள் முகம் தீத்தட்டிக் கற்பாளம்போல் திடமாய் இருக்கட்டும்; வானத்திலும் பூமியிலும் உள்ள சகல வல்லமைகளும் உங்கள் பட்சத்தில் இருக்கிறது என்று சொன்னார்.

கிறி. அப்புறம் கிறிஸ்தியான், சுவிசேஷகர் சொன்ன ஆறுதலான வார்த்தைகளுக்கு நன்றியறிதல் செலுத்தி, அதோடு மீதிப் பிரயாணத்துக்கு உதவியான பல புத்திபோதனைகளையும் (அவரை அவர்கள் தீர்க்கதரிசி என்று அறிந்திருந்தபடியால்) பிரயாணத்தில் உண்டாக இருக்கிற விபத்துகளையும், அவைகளை ஜெயங்கொள்ளும்படியான முறையையும், சற்று சொல்லும்படியாகவும் கேட்டான். அதற்கு சுவிசேஷகர் சம்மதித்துக் கொண்டு பின்வருகிறபிரகாரம் சொல்லுகிறார்.

சுவி. என் மக்களே! நீங்கள் "அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" என்றும், பட்டணங்கள் தோறும் "கட்டுகளும் உபத்திரவங்களும் உங்களைச் சூழ்ந்திருக்கிறது" என்றும், சத்திய சுவிசேஷ வாசகங்களில் எழுதப்பட்டிருக்கிறதைக் கேட்டிருக்கிறீர்கள்; ஆதலால் அப்படிப்பட்ட துன்பங்கள் ஏதாவது ஒருவிதமாய் உங்களுக்குச் சம்பவியாதபடிக்கு நீங்கள் உங்கள் பிரயாணங்களை நடத்திவிடலாம் என்று கனவிலும் நினைக்கவேண்டாம்.

---

[a] வெளி. 3. 11. [b] எபி. 12. 4. [c] எரே. 17. 9.



அந்த வாசகங்களின் உண்மையை நீங்கள் இதற்குள்ளாக அநுபவித்திருக்கிற பல பாடுகளால் அறிந்து இருக்கிறீர்கள். இன்னும் வெகு சீக்கிரத்துக்குள்ளாக வேறு அநேக துன்பங்கள் உங்களைப் பின்தொடரும். இந்த விஸ்தாரமான வனத்தைக் கடந்து முடிக்கப்போகிற நீங்கள், இன்னுங் கொஞ்சத்தூரம் போனால், உங்களுக்குத் தெரியப்போகிற ஒரு பட்டணத்தில் சேரவேண்டியதிருக்கும்; அங்கு சேர்ந்தவுடன் பல சத்துருக்கள் நாலாதிசையிலும் உங்களைச் சூழ்ந்துகொண்டு, உங்களைக் கொலைசெய்யும்படியாக தங்களால் ஆன பிரயத்தனங்களை எல்லாம் செய்வார்கள்; எப்படியாவது உங்களில் ஒருவனாவது அல்லது இருபேருமாவது உங்கள் சாட்சியை இரத்தத்தினாலே முத்திரை இடவேண்டியது இருக்கும் என்பதை உறுதியாய் நம்பிக்கொள்ளுங்கள்; ஆனால் மரணபரியந்தம் உண்மையாய் இருங்கள், மகிமையின் ராஜா ஜீவ கிரீடத்தைத் தருவார்; அங்கே சாகிறவனுடைய சாவு குரூரமாய் இருந்தாலும் அவனுக்கு உண்டாகும் துன்பங்களுக்கும் வேதனைகளுக்கும் ஒரு அளவு இல்லாதிருந்தாலும், அவன் உயிரோடு இருக்கும் தன் தோழனிலும் பாக்கியம் உள்ளவன் என்றே சொல்லவேண்டியது. அவன் மற்றவனுக்கு முந்திப் பரலோகத்தின் படிகளில் ஏறிவிடுவான் என்பதினாலேமாத்திரம் அல்ல, மற்றவன் இன்னும் தன் பிரயாணம் முடியுமட்டும் அநுபவிக்கவேண்டிய பெருந்துன்பங்களுக்கெல்லாம் தப்பிக்கொள்ளுவான் என்பதினாலும் அவன் அதிக பாக்கியவானாய் இருக்கிறான். நீங்கள் அந்தப் பட்டணத்தில் பிரவேசித்தவுடன் நான் உங்களுக்குச் சொல்லுகிறவைகள் எல்லாம் சம்பவிக்கும். அப்பொழுது உங்கள் சிநேகிதனையும், அவன் சொன்ன காரியங்களையும் நினைவுகூர்ந்து, தைரியமுள்ள புருஷராக உங்களை வெளிப்படுத்தி, நன்மைசெய்கிறவர்களாய் உங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவீர்கள் என்று சொன்னார்.

சுவிசேஷகன், மாயாபுரியில் பிரயாணிகளுக்கு நேரிடும் பாடுகளை முன்னறிவித்து, அவர்கள் மனோ தைரியமாய் இருக்க எச்சரிக்கிறது.

## பிரயாணிகள் மாயாபுரி சேருதல்.

அவர்கள் மாயாபுரி சேர்தல்.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால்; கிறிஸ்தியானும், உண்மையும் அந்த வனத்தை முற்றிலும் கடந்தபிற்பாடு, தங்களுக்கு எதிரே இருக்கிற பட்

டணத்தைக் கண்டார்கள்; அதற்கு **மாயாபுரி** என்று பேர் வழங்கப்பட்டது. அவ்விடத்தில் மாயச்சந்தை[1] என்று அழைக்கப்படுகிற ஒரு சந்தைக்கடையும் இருந்தது. அது மற்றச் சந்தைகளைப்போல ஒரு வேளைவேளை கூடுகிறதாயிராமல், வருஷமுழுவதிலும் நாடோறுங்கூடி, நிமிஷத்தோறும் அதில் வியாபாரம் நடந்துவந்தது. அந்தச் சந்தை கூடுகிற பட்டணமானது மாயையிலும் இலேசாய் இருக்கிறபடியினாலும்,[a] "வந்து சம்பவிப்பதெல்லாம் மாயையே" என்று ஞானி சொல்லுகிற பிரகாரம் அவ்விடத்தில் விற்கப்படுகிற சரக்குகளும், வந்து சேருகிற சரக்குகளும் எல்லாம் மாயையாய் இருப்பதினாலும், அச்சந்தைக்கு மாயச்சந்தை என்று பேர் வழங்கப்படுகிறது.[b]

இவ்விடத்தில் சந்தை நடப்பது நூதன ஏற்பாடு அல்ல; அதிபூர்வமாய் இது நடந்துவருகிறது; இச்சந்தையின் பூர்வோத்தரங்களைச் சொல்லுகிறேன் கேள்:

மாயச்சந்தையின் பூர்வோத்தரம்.

சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்னே, இந்த இரண்டு உத்தமரைப்போல சில பிரயாணிகள் மோட்சபட்டணத்துக்குப் பயணம்போனார்கள்; மோட்ச பிரயாணிகளின் காலடிகள் மாயாபுரி வழியாகவே போயிருக்கிறது என்பதை பெயெல்செபூலும், அப்பொல்லியோன் லேகியோன் என்பவர்களும், அவர்களுடைய படை பண்டாரங்களும் கண்டுபிடித்து, இவ்விடத்தில் சகலவிதமான மாய்கைகளும் விற்பனை ஆகும்படியான ஒரு சந்தையை ஸ்தாபித்து, வருஷம் முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் நடந்துவரும்படி திட்டம் செய்து இருக்கிறார்கள். ஆகையால் இந்தச் சந்தையில் வீடுகள், பூமிகள், வர்த்தகங்கள், அந்தஸ்துகள், மகிமைகள், உத்தியோகங்கள், பட்டப்பேர்கள், தேசங்கள், ராஜ்யங்கள், இச்சைகள், இன்பங்கள் ஆகிய இவைபோன்ற வியாபாரங்களும்; வேசிகள், மனைவிகள், புருஷர், பிள்ளைகள், எஜமான்கள், வேலைக்காரர், ஜீவன்கள், இரத்தங்கள், சரீரங்கள், ஆத்துமாக்கள், வெள்ளிகள், பொன்கள், முத்துகள், விலையேறப்பெற்ற ரத்தினங்கள் ஆகிய சகலவித சந்தோஷத்துக்கேற்ற சரக்குகளும் வியாபாரம் செய்யப்படுகின்றன.

சந்தைச் சரக்குகள்.

அதுவும் அல்லாமல் இந்தச் சந்தையில், இந்திரஜாலம், தந்திரஜாலம், சூதாட்டம், கூத்தாட்டம், குரங்காட்டம், மடையர் கூட்டம், வஞ்சகர்கூட்டம், பக்காளிகள் கும்பு இவை முதலியவைகளை எந்நேரமேனாலும் பார்க்கலாம்.

இவைமாத்திரமோ? அல்ல, அல்ல; இந்தச் சந்தையில் களவுகளையும், கொலைகளையும், விபசாரங்களையும், பொய்யாணைகளையும், அதினதின் பூரண கோலங்களோடு விலையுமின்றிப் பணமுமின்றி பார்க்கலாம்.

இந்தப் பெரிய சந்தைக்கூட்டத்தையல்லாமல், இவைகள் விற்கப்படுகிற அநேக சில்லறைக் கடைத்தெருக்களும் இருந்தன. அத்தெருக்களில் இன்னின்ன வஸ்துகள் விற்பனை ஆகிறது என்பதை வழிப்போக்கர் லேசாய் அறிந்துகொள்ளும்படியாகப் பலகைகளில் பெரிய எழுத்தாய் எழுதிவைக்கப்பட்டிருந்தன. எந்த தேசத்தின் சரக்கு வேண்டுமோ அத்தேசத்தின் சரக்கை இலகுவில் கண்டறிந்துகொள்ளும்படியாக, இவ்விடத்தில் தேசங்கள், நாடுகள், நகரங்களாகிய வீதிகளின் பேரையும், தெருக்களின் பேரையும் காணலாம். இங்கே பிரித்தானிய தெருவையும், பிரான்சிய தெருவையும், ஜர்மானிய தெருவையும்,[1] இத்தாலிய தெருவையும், ஸ்பானிய தெருவையும் பார்க்கலாம். அந்தந்தப் பேருடைய தெருக்களில், அந்தந்த தேசத்து மாயச் சரக்குகள் விற்பனையாகி வருகின்றன. ஆனால் ஒவ்வொரு சந்தைகளிலும் எதாவது ஒரு இடத்துச் சரக்கு அதிக உயர்த்தியாக எண்ணப்பட்டு, பலராலும் பிரியமாக வாங்கப்படுகிறதுபோலவே இவ்விடத்தில் ரோமாபுரிச் சர

சில்லறைக் கடைகள், வீதிகள்.

---

1 மாயச்சந்தை. இது உலகத்தையும், அதின் பாவகிரமமான ஆசைகளையும் இன்பங்களையும் குறிக்கிறது. இவ்வுலகத்திலுள்ளவைகளெல்லாம் வெறுமையாயும், ஆத்துமாவைத் திருப்திசெய்ய மாட்டாததாயும் இருக்கிறபடியால், இது மாயச்சந்தை என்று அழைக்கப்படுகிறது. என்றாலும், உலக இன்பங்கள், ஐசுவரியம், கனம் இவற்றின்மேல் மனுஷருக்கு இருக்கிற ஆவல் சந்தைச் சரக்கு வியாபாரத்துக்கு ஒப்பாயிருக்கிறது.

a சங். 62, 9.

b பிர. 11. 8. 1. 2—14; 2. 11—17. ஏசா. 40. 17.



1 பிரித்தானிய தெரு, ஆ. இது வெவ்வேறு தேசங்களைக் காட்டுகிறது.

க்கு[1] அதிகப் பிரியமாய் எடுபட்டுவந்தது. இங்கிலாந்து ஜாதியும், வேறு சில தேசத்தாருமாத்திரம் அதை ஒரு பொருட்டாய் எண்ணுகிறது இல்லை.

நான் முன்னே சொன்னபடி மோட்சபட்டணத்துப் பிரயாணிகளின் பாதை சிற்றின்பங்களால் நிறைந்திருக்கிற இந்த மாயச்சந்தை வழியாகவே போகிறது. ஆகையால் எந்தப் பிரயாணி மோட்சபட்டணத்துக்கு யாத்திரை போகிறானோ, அவன் இதின் வழியாய்ப் போகாதிருந்தால் "உலகத்தை விட்டு நீங்கிப்போக வேண்டியதாயிருக்கும்."[a] பிரபுக்களின் கோதிபதி முதலாய் இவ்வுலகத்திலிருந்து தமது தேசத்துக்குப் புறப்பட்டபோது இந்தச் சந்தைப் பாதையாகவே வழி நடந்து போனார். அவர் இந்த இடத்தைக் கடந்துபோன அன்று மாயாச் சந்தை தன் சகல மகிமையோடுங்கூடத் தன்னுடைய வியாபாரத்தை நடத்தினது. அவர் இதைக் கடக்கிற சமயத்தில் எனக்குத் தோன்றுகிறபடி இந்தச் சந்தைக்கு அதிபதியாய் இருக்கிற பெயெல்செபூல் என்பவனே கூடவந்து தன் மாயமத்துவ சரக்குகளில் சிலதை அவர் வாங்கிக்கொள்ளும்படி வருந்தி அழைத்தான்; அவர் அவனுடைய மனதின்படி சில சரக்குகளை வாங்கி இவ்விதமாய் அவனைக் கனப்படுத்தினது மெய்யானால், அவன் அவரையே அச்சந்தைக்கு ஆண்டவனுமாக்கியிருப்பான். அவர் அவ்வளவு கர்த்தத்துவமுடைய பிரபு ஆகையால், பெயெல்செபூல் தெருத்தெருவாய் அவரைக் கூட்டிப்போய் கொஞ்ச நேரத்துக்குள் உலகம் முழுதையும் அவருக்குக் காண்பித்து, அந்த மகத்துவர் தன் மாய்கையில் சிலவற்றையாவது கொள்ளமாட்டாரா என்று மிகவும் பிரயாசப்பட்டான். ஆனால் அந்தச் சரக்குகள் ஒன்றின்மேலும் அவர் பிரியப்பட்டதும் இல்லை; அந்த மாயைகளின்மேல் ஒரு காசும்[2] அவர் செலவிட்டதும் இல்லை.[b] இவைகளினால் இந்தச் சந்தை வெகு பூர்வமானதும், பிரமாண்டமானதுமாய் இருக்கிறதென்பதை நீ நன்றாய் அறிந்துகொள்ளவேண்டியது.

இயேசுவும் இந்தச் சந்தை வழியாய்க் கடந்தார்.

---

[1] ரோமாபுரிச் சரக்கு. இது, ரோமை மார்க்கத்தைக் குறிக்கிறது. சுமார் முன்னூறுவருஷங்களுக்கு முன்னே அங்கிலேயரில் அநேகர் ரோமான் சபையாராய் இருந்தார்கள், இப்பொழுது அதின் அதிகமான பேர் புரோட்டெஸ்டண்டராய் இருக்கிறார்கள்.

[2] இது இதின்து சாத்தானால் சோதிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

[a] 1 கொரி. 5. 10. [b] மத். 4. 8—10. லூக். 4. 5—8.



இந்தப் பிரயாணிகளும் இச்சந்தையின் ஊடே நடந்துதான் போகவேண்டும் என்று முன் சொன்னேனே; அப்படியே அவர்கள் கடந்துபோனார்கள். இதோ அவர்கள் சந்தைக்குள் சேரவே, சந்தைக்குள் இருந்த ஜனம் முழுவதும் தத்தளித்தது; அவர்களையிட்டு மாயாபுரி எங்கும் அமளிகுமளியானது.[1] இந்த அமளிக்குச் சில முகாந்திரங்களும் இருந்தன. எப்படியெனில்;

பிரயாணிகள் சந்தைக்குள் போனது.

1-வது. இந்தப் பிரயாணிகள் உடுத்தியிருந்த உடை அச்சந்தையில் இருந்தவர்களுடைய உடைக்கு முற்றிலும் வேறுபட்டிருந்தது; ஆகையால் இந்த விபரீத உடுப்போடு இங்கே திரிகிறது யார் என்று எல்லாரும் அவர்களை உறிட்டுப் பார்த்தார்கள்; சிலர் அவர்களைப் பைத்தியகாரர் என்று சொன்னார்கள்; வேறு சிலர் அவர்களைப் பித்தங்கொண்டவர்கள் என்று தீர்மானித்தார்கள்; மற்றும் சிலர் அவர்களை மறுதேசத்து மிலேச்சர் என்று சொன்னார்கள்.[a] இப்படி அவர்கள் உடையே அமளிக்கு ஒரு காரணமாய் இருந்தது.

அமளி உண்டான முகாந்தரங்கள்.

உடை வித்தியாசம்.

2-வது. உடை வித்தியாசத்தோடு அவர்கள் பேச்சும் வித்தியாசப்பட்டதால் அமளிக்கு ஆதாரம் ஆயிற்று; இவர்கள் பேசினதை அறிந்துகொண்டவர்கள் வெகு கொஞ்சப்பேர். ஏனெனில் அவர்கள் கானான் பாஷையைப் பேசுகிறவர்களாய் இருந்தார்கள்; சந்தையின் வியாபாரிகளோ இவ்வுலகத்தின் மக்களாய் இருந்தார்கள். ஆகையால் அந்தச் சந்தையின் துவக்கமுதல் கடைசிவரையும் இந்தப் பிரயாணிகளும் அவர்களும் ஒருவருக்கொருவர் அந்நியரும், அறியப்படாதவர்களும் போலவே இருந்தார்கள்.[b]

பாஷை வித்தியாசம்.

---

1 மெய்விசுவாசிகள் தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளப் பிரயாசப்படுகிறபொழுது, உலகத்தார் அவர்கள் தங்களைப்போல நடவாததினாலே அவர்களைப்பார்த்து நகைக்கவும் நிந்திக்கவும் இடம் ஆகிறார்கள்.

[a] யோபு. 12. 4. 1 கொரி. 4. 9.
[b] 1 கொரி. 2. 7, 8.

சரக்கு வாங்காமல் அசட்டை செய்தது.

6-வது. இந்தப் பிரயாணிகள் மாயாபுரி வியாபாரிகளின் சரக்குகளை எவ்வளவேனும் சட்டை பண்ணாததே அமளிக்கு விசேஷ காரணமாய் இருந்தது என்று சொல்லவேண்டும். இவர்கள் அந்தச் சரக்குகளை எட்டிப்பார்க்க முதலாய்ப் பிரியங்கொள்ளவில்லை; யாராவது அவர்களைக் கூப்பிட்டு, இங்கே வாருங்கள், நல்ல சரக்கு, நயமாய்த் தருகிறோம் என்று சொன்னால் அவர்கள் தங்கள் காதுகளில் விரலையிட்டு அடைத்துக்கொண்டு, "மாயையைப் பாராதபடி நீர் என் கண்களை விலக்கும்" என்று சத்தமிட்டுச் சொல்லிக்கொண்டு,[a] தாங்கள் கொள்ளும் சரக்கும், வாங்கும் வியாபாரமும் எல்லாம் பரலோகத்தில் இருக்கிறது என்பதாகக் காட்டும்படி, கண்களை எறெடுத்து, வானத்தை அண்ணாந்து பார்ப்பார்கள்.[b]

சத்தியத்தை வாங்குவோம் என்று சொன்னது.

இப்படி அவர்கள் சிலதூரம் நடந்துபோகவே, ஒரு பரியாசக்காரன் வந்து: "என்ன பொருள் தேவை அப்பா" என்று கேட்டான். அவனைப் பிரயாணிகள் சற்று முறுக்காய்ப் பார்த்து: "நாங்கள் சத்தியத்தை வாங்குவோம்"[c] என்று சொன்னார்கள். இந்த வார்த்தையானது அவ்வூரார் அவர்களை முன்னிலும் அதிகமாய் அவமதிக்க ஏதுவாய் இருந்தது. உடனே அவர்களில் சிலர் பரியாசம்பண்ணினார்கள்; சிலர் நையாண்டி செய்தார்கள்; சிலர் பழிப்பாய்ப் பேசினார்கள்; சிலர் இந்தப் பயல்களை உதையுங்கள் என்று சொன்னார்கள்; இவைகள் எல்லாவற்றாலும் கடைசியாக ஊர் முழுவதிலும் அமளி உண்டாயிற்று. சந்தை முழுவதிலும் சந்தடி அதிகப்பட்டது; சந்தை வியாபாரம் எல்லாம் காலாகோலப்பட்டுப்போயிற்று. இச்செய்தி அனைத்தும் சந்தைக்கு எஜமானுடைய காதில் போய் விழுந்தது; அவரும் உடனே புறப்பட்டுவந்து, இவ்வளவு தாறுமாறுக்கும் காரணமாயிருந்த பிரயாணிகள் இருவரையும் பிடித்துக் கட்டி, விசாரணை செய்யும்படி தமக்கு நம்பிக்கையாய் இருந்த சில ஆட்களுக்குக் கட்டளை பண்ணினார்.

பிரயாணிகள் கைதிகளாக்கப்பட்டது.

அந்தக் கட்டளையின் பிரகாரம் அவ்விருவரும் கைதிகளாக்கப்பட்டு விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டார்கள்; அவர்களை விசாரணை செய்யும்படி நியமிக்கப்பட்டவர்கள் அந்தப் பிரயா-

[a] சங். 119. 37. [b] பிலி. 3. 20, 21.
[c] நீதி. 23. 23.



ணிகள் எங்கே இருந்து வந்தார்கள் என்றும், எங்கே போகிறார்கள் என்றும், மாயாபுரியின் ஆசாரத்துக்கு விரோதமான உடுப்போடு தெருவீதிகளில் நடப்பித்த கலகங்கள் எவை என்றும் பல கேள்விகளைக் கேட்டார்கள். அந்த மனிதரோ: தாங்கள்



அவர்கள் விசாரிக்கப்பட்டது.

மறு உலகத்துக்குப் பிரயாணிகளும், இவ்வுலகத்துக்கு அந்நியருமாய் இருக்கிறோம் என்றும்; பரம எருசலேமாகிய தங்கள் சொந்த நாட்டுக்குப் பயணம் புறப்பட்டுப்போகிறோம் என்றும்;[a] நகரத்தாரும் வியாபாரிகளும் தங்களை ஏசவும், இப்படி ஈனமாய் நடத்தவும், பிரயாணத்தைத் தடுக்கவும் தாங்கள் யா-

[a] எபி. 11. 13—16.

தொரு விதத்திலும் எதுபண்ணிக்கொள்ளவில்லை என்றும் சொன்னதோடு, இந்த நகரத்து வியாபாரி ஒருவன் உங்களுக்கு என்ன சரக்குத் தேவை என்று கேட்டபோது, சத்தியம் இருந்தால் வாங்கிக்கொள்ளுகிறோம் என்று சொன்னதேயன்றி, வேறே எவர்களுடனேயும் பேச நாங்கள் வாய் திறந்ததில்லை என்றும் சொன்னார்கள். ஆனால் விசாரணைசெய்த அதிபதிகள் அவர்கள் பேச்சை அணுவளவு நம்பாமல், இவர்கள் ஒன்று பித்தம்பிடித்த பைத்தியகாரராய் இருக்கவேண்டும், அல்லது மாயாபுரியின் நிலை எல்லாம் தாறுமாறாக்கும்படி துணிந்துவந்த சண்டாளராய் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டார்கள். ஆதலால் அவர்கள் அவ்விரு பிரயாணிகளையும் பிடித்து அடிதண்டமாய் அடித்து, தேகமுழுவதும் சேற்றைப்பூசி, சந்தைக்கு வந்தவர்கள் எல்லாருக்கும் இவர்கள் விந்தைக்காட்சியாய் இருக்கும்படி ஒரு கூண்டிக்குள் அடைத்துப்போட்டார்கள்.

ஒரு கூண்டிக்குள் அடைக்கப்பட்டது.

அந்தக் கூண்டிக்குள் இருந்த கொஞ்சநேரமும் அவர்கள் எல்லா மனுஷருடைய நிந்தைக்கும், அவமானத்துக்கும், பரியாசத்துக்கும் ஆளானார்கள்; அவர்களுக்கு நேரிடுகிற அவமானங்களை எல்லாம், சந்தைக்கு எஜமானானவர் சற்று தூரத்தில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டு, சிரித்துச் சிரித்து அகமகிழ்ந்தார். சத்துருக்கள் அவர்களுக்கு என்னதான் செய்தபோதிலும் அவர்கள் இருவரும் பொறுமையோடு சகித்துக்கொண்டு: "தீமைக்குத் தீமையையும், உதாசினத்துக்கு உதாசினத்தையும் சரிக்கட்டாமல்" அதற்குப் பதிலாக ஆசீர்வதிக்கிறதையும், தீமை செய்தலை நன்மை செய்தலாலும், அநியாயத்தை அன்புபாராட்டுதலாலும் ஜெயித்துக்கொண்டு வருகிறதையும் அச்சந்தையில் நிற்கிறவர்களில் சிலர் கண்டு, அநுதாபப்பட்டு, அவர்களை இம்சைபண்ணுகிறவர்கள்மேல் சற்று ஆயாசமடைந்து, அப்படி நிஷ்டூரங்கள் செய்யவேண்டாம் என்று கோபித்துக் கடிந்துகொண்டு தடுத்தார்கள்; உடனே அந்தத் துஷ்டர்கள் அவர்கள்மேல் சீறி விழுந்து, கூண்டிக்குள் இருந்தவர்களைப்போல் நீங்களும் கெட்டவர்கள் என்று தீர்த்து, அவர்களும் நீங்களும் ஒன்றாகையால் அவர்களுக்குச் சம்பவிப்பதே உங்களுக்கும் சம்பவிக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். அதற்கு அவர்கள்: அப்படி அல்ல, இந்த மனிதர்கள் மகா அமைதலும் மரியாதையும் உள்ளவர்கள். ஒருவனுக்கும் தீமைசெய்வது இவர்கள் எண்ணம் இல்லை; இவர்களைக் கூண்டில் அடைத்து இப்படி அநியாயம் செய்வதைப்

அவர்கள் நடந்துகொண்ட விதம்.



பார்க்கிலும், இந்தச் சந்தை வியாபாரிகளில் அநேகரை இப்படி அடைக்கிறதுமாத்திரம் அல்ல, கழுமரத்தில் ஏற்றுவதுங்கூட நியாயமாய் இருக்கிறது என்று மறுமொழி சொன்னார்கள். இதின்பின்பு பேச்சு வளர்ந்துவிட்டது; அவர்கள் ஒருவருக்கொருவர் எதிர் வாதாடிக்கொண்டு சண்டையை அதிகப்படுத்தினார்கள். (இச்சமயத்தில் பிரயாணிகள் வெகு விவேகமாயும், ஞானமாயும் நடந்துகொண்டார்கள்.) அவ்விருபட்சத்தாரும் ஒருவரோடொருவர் மோதி, ஒருவனையொருவர் அடிக்கவும், மிதிக்கவும், குத்தவும், உதைக்கவும் ஆரம்பித்ததால் இருபட்சத்திலும் பல சேதம் உண்டாயிற்று. அப்புறம் நகரத்தில் உண்டான அடிபிடிகளுக்கும், மண்டையுடைவுகளுக்கும் இவ்விருவரே காரணர் என்று மறுபடியும் விசாரணைக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அந்த விசாரணைக்காரன் பின்னும் அவர்களை அநேக அடிகளால் அடித்து, பளுவான இருப்புக் குண்டுகளை அவர்கள் கழுத்திலே தொங்கவைத்து, ஒருவரும் இவர்களுக்கு இரங்கிப் பேசாதபடிக்கும், அல்லது இவர்கள் பட்சமாய்த் திரும்பாதபடிக்கும் எச்சரிப்பு உண்டாகும்படியாக, விலங்குமாட்டப்பட்டவர்களாய் மாயாபுரி வீதிக்கு வீதி அங்குமிங்கும் நடத்திக்கொண்டு போகப்பட்டார்கள். கிறிஸ்தியானும் உண்மையுமோ இச்சமயத்தில் முன்னிலும் அதிக ஞானமுள்ளவர்களாய் நடந்துகொண்டு, தங்களுக்கு விரோதமாய்ப் பேசப்பட்ட நிந்தைகளையும், செய்யப்பட்ட அவமானங்களையும், அவ்வளவு சாந்தத்தோடும், பொறுமையோடும் சகித்துக்கொண்டபடியால் அவ்வூரில் அநேகரைத் தங்கள் பட்சத்துக்கு இழுத்துக்கொண்டார்கள். இப்படி அவர்கள் பட்சம் திரும்பின மாயாபுரியாரின் தொகை அவ்விடத்துத் துன்மார்க்கருடைய தொகையுடன் ஒத்துப்பார்த்தால் கொஞ்சமாய் இருந்தது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டியது. மாயாபுரியாரில் பலர் அவர்கள் பட்சம் சேர்ந்ததே மறுபட்சத்தாருடைய மூர்க்கத்தை அதிகமாய் எழுப்பிவிடுவதாய் இருந்தது. ஆதலால் அந்தத் துன்மார்க்கர் பிரயாணிகள் இருவரையும் கொன்றுபோடுவதே நலம் என்று ஏகோபியாகத் தீர்மானித்தார்கள். அப்புறம் அவர்கள் இந்த மனுஷர் கலகம் உண்டாக்கினதோடு, ஊராரில் அநேகரையும் மயக்கித் தங்கள் பட்சம் திருப்பிக்கொண்டார்கள்; ஆகையால்

அவர்கள் வீதிக்கு வீதி கொண்டுபோகப்பட்டது.

மாயாபுரியார் பலர் அவர்களுடன் சேர்ந்துகொண்டது.

அவர்களைக் கொல்லும்படி தீர்மானித்தது.

இவர்களை அடைக்கிறதும் அடிக்கிறதும்மாத்திரம் பற்றாது, இவர்கள் கொலைசெய்யப்படவும் வேண்டும் என்று சொல்லி பயமுறுத்தினார்கள்.

அதின்பின்பு அவர்களை மறுபடியும் கூண்டில் அடைத்து வைத்து வேறு கட்டளை பிறக்குமட்டும் வெளியே விடக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது; அத்தீர்மானத்தின்படியே அவர்கள் இருவரும் அடைக்கப்பட்டார்கள்; அவர்கள் கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டன.

இந்தச் சமயத்தில் பிரயாணிகள் தங்கள் சிநேகிதராகிய சுவிசேஷகனின் வார்த்தைகளை நினைவுகூர்ந்து: அவர் சொன்னவைகளில் ஒன்றும் தப்பவில்லை, எல்லாம் நிறைவேறி வருகிறது என்று எண்ணிக்கொண்டார்கள். அதுவுமன்றி அவ்விருவரும் நம்மில் எவன் இங்கே சாகவேண்டியதிருக்குமோ அவனே அதிக பாக்கியன் என்று ஒருவரை ஒருவர் தேற்றிக்கொண்டு, அவரவர் உள்ளுக்குள்ளாக தனக்கே அந்த பாக்கியம் கிடைக்கவேண்டும் என்கிற ஆசையுடையவர்களாய் இருந்தார்கள். கடைசியாக, சகலத்தையும் ஆளுகிற சர்வஞானியின் திருவுள தீர்மானத்துக்குத் தங்களை ஒப்புவித்து, தீர்ப்பு பிறக்குமட்டும் மனத்திருப்தியோடு காலங்கழித்தார்கள்.

மாயாபுரி கச்சேரி விசாரணை.

அதிபதிகளுக்குச் சாவகாசமான காலம் வந்தபோது பிரயாணிகளை மரணாக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தும்படியாக, கடைசி விசாரணை நாளைக்குறித்து அவ்விருவரையும் நியாயாதிபதியின் சிம்மாசனத்துக்கு முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தினார்கள்; அவர்களை விசாரணை செய்த நியாயாதிபர்க்கு நன்மைவெறுப்போன்[1] என்று பேர். இவர்கள்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் வார்த்தைகளில் சற்று வேறுபட்டிருந்தாலும், பொருளில் ஒன்றாகவே இருந்தது. அதை மொத்தமாய்ச் சொல்லவேண்டும் என்றால், இவர்கள் மாயாபுரி வியாபாரங்களின் விரோதிகளாயும், சரக்குகளைத் தாறுமாறுசெய்கிறவர்களாயும் இருக்கிறார்கள்; இவர்கள் நகரத்துக்குள் சச்சரவுகளையும், அமளிகளையும் உண்டாக்கி, ராஜசட்டங்களை அவமதிக்கும்படி குடிகளில் சிலரைத் தங்கள் பட்சமாக்கிக்கொண்டார்கள் என்பதுதான்.

குற்றங்கள்.

[1] நன்மைவெறுப்போன் என்பது, தேவனுக்குப் பிரியமில்லாததும், நன்மைக்கு விரோதமானதுமே துன்பத்துக்கு ஆரம்பம் என்பதைக் காட்டுகிறது.



உண்மையின் மறுமொழி.

இவர்கள்மேல் சாட்டப்பட்ட குற்றங்கள் இவைகள் என்று மொத்தமாய்ச் சொல்லப்பட்டவுடனே, உண்மை அதற்கு மறு உத்தரவு சொல்லத் துவக்கினான்; அவன் சொன்ன உத்தரவாவது: நான் உன்னதமானவைகளுக்கு எல்லாம் மேலான மகா உன்னதமானவருக்கு விரோதமாய் எதிர்த்துநின்றவனோடு எதிர்த்துநின்றேனே அல்லாமல் வேறொன்றும் செய்யவில்லை; நடந்ததாகச் சொல்லப்படுகிற தாறுமாறுகளைப்பற்றியோ, நான் ஒன்றும் செய்ததில்லை; நானோ சமாதான புருஷனாய் இருக்கிறேன்; எங்கள் பட்சம் திரும்பின ஆட்கள், எங்களுடைய உண்மையையும் குற்றமில்லாமையையும் பார்த்துச் சேர்ந்தார்களே அன்றி மற்றப்படி அல்ல; மேலும் அவர்கள் கஷ்டத்திலிருந்து நலத்துக்கே திரும்பி இருக்கிறார்கள். உங்கள் ராஜாவை வெகுவாய் உயர்த்துகிறீர்களே, ஆனால் அவன் எங்கள் ஆண்டவருடைய பகைஞனாகிய பெயெல்செபூல் ஆனபடியால், நான் அவனையும், அவனுடைய தூதர்கள் அனைவரையும் சீ என்று அருவருக்கிறேன் என்றான்.

அதைக் கேட்டவுடனே நன்மைவெறுப்போன் உக்கிர கோபமாகி, இந்தக் கைதிகளுக்கு விரோதமாய், மகா ராஜாவின் பட்சம் நின்று குற்றஞ்சாற்றக்கூடியவர்கள் இச்சணமே நியாயசபைமுன் வந்து ஆஜராக வேண்டியது என்று விளம்பரம்பண்ணினான். அச்செய்தி எங்கெங்கும் பறைசாற்றப்பட்டவுடனே: வன்கண்ணன்,[1] அவபக்தி,[2] இச்சகன்[3] என்னும் மூவர், அடியார் மூவரும் இதோ சாட்சிசொல்லத் தயாராய் இருக்கிறோம் என்று புறப்பட்டு வந்தார்கள். அப்புறம் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிற கைதிகளை அவரவர் அறிவார்களா

சாட்சிக்காரர்.

[1] வன்கண்ணன். பொறாமையே துன்பப்படுத்துவதற்கு ஒரு காரணம். இயேசு பிலாத்துவின் முன் குற்றம் சாட்டப்பட்டு நிற்கையில் அவன் இதன் முகாந்தரம் பொறாமையே என்று அறிந்திருந்தான். மத். 27, 18.

[2] அவபக்தி. இது புறம்பான சடங்குகளிலே நம்பிக்கையை வைத்து அதின் போதனையைப்பற்றிப் பேசுகிறவர்கள்மேல் தீரா விரோதம் உடையவர்களாய் இருக்கிறதை உணர்த்துகிறது.

[3] இச்சகன். மெய்த்தேவபக்தியில்லாத அதிகாரிகளிடத்தில் சகவாசிக்கத் தாவித்தப்பேசி அவர்கள் தயவைச் சம்பாதித்துக்கொள்ளும்படி முயலுகிறவர்களை இது குறிப்பிக்கிறது.

என்றும், கைதிகளுக்கு விரோதமாகவும், ராஜன்பட்சமாயும் சொல்லத்தக்க சாட்சிகள் எதாவது உண்டா என்றும் வினவப்பட்டார்கள்.

வன்கண்ணன் சாட்சி.

அப்போது வன்கண்ணன் எழுந்துநின்று பின்வருகிறபடி சாட்சிசொன்னான்; அதாவது: துரைகளே! அடியேன் இவனை வெகு நாளாய் அறிவேன்; இந்த நியாயசபைக்கு முன்பாக நான் இந்த மனுஷனைக்குறித்து சத்தியபிரமாணத்தோடு சொல்லுகிற—

நியாயாதிபதி. பொறு, பொறு; இவனைச் சத்தியம் வாங்கு— அப்படியே அவன் சத்தியம் செய்தபின்பு சொல்லுகிறான்: என் ஆண்டவனே, இவனுக்கு உண்மை என்ற சிறந்தபேர் இருந்தாலும், இவனைப்போலொத்த உண்மை துரோகி நமது தேசத்தில் எவனும் இல்லை. இவனுக்கு அரசன் என்றும் இல்லை, குடிகள் என்றும் இல்லை, இவனுக்கு மகாராஜாவின் கட்டளை என்றும் இல்லை, மாமூல்வழக்கம் என்றும் இல்லை, எல்லாவற்றையும் அசட்டைசெய்து அவமதிக்கிறான்; இவன் தனக்குள் இருக்கும் ராஜதுரோகக் கருத்துகளை, உண்மைக்கும் பரிசுத்தத்திற்கும் ஏற்ற சட்டங்கள் என்று பேரிட்டுக்கொண்டு மற்றவர்களுக்குப் போதிக்கும்படியாக வெகுவாய்ப் பிரயாசப்படுகிறான். அதுவும் அல்லாமல் ஒருநாள் இவன் வந்து நின்றுகொண்டு கிறிஸ்துமார்க்கத்துக்கும், நமது மாயாபுரியின் மாமூல்சட்டங்களுக்கும் ஒன்றுக்கொன்று நேர்விரோதமாய் இருக்கிறது, அந்த விரோதத்தைச் சமரசப்படுத்தக் கூடவே கூடாது என்று சொல்ல இந்த என் இரண்டு காதாலும் கேட்டேன். இப்படி இவன் சொல்வதினாலே, என் ஆண்டவனே! இவன் நமது நகரத்தின் சிறந்த சட்டங்களைக் குற்றமாகத் தீர்க்கிறதுமாத்திரம் அல்ல, அச்சட்டங்களைத் தங்கப்பிரமாணமாக எண்ணி அதின்படி செய்துவருகிற நம்மெல்லாரையும் குற்றவாளிகளாகத் தீர்க்கிறவனாய் இருக்கிறான்.

நியாயா. இன்னும் நீ சொல்லவேண்டிய சமாசாரங்கள் உண்டா?

வன்கண்ணன். என் ஆண்டவனே! நான் இன்னும் சொல்லவேண்டுமானால் அதிகம் உண்டு; என்றாலும் அது நியாயசபையை அலட்டுகிறதாய் இருக்கும் என்றே சொல்லாதிருக்கிறேன்; ஆனாலும், வேறு சாட்சிக்காரர் சாட்சிசொன்னபிற்பாடு, இவனை மரணாக்கினை செய்வதற்குப் பின்னும் சாட்சி



கள் குறைவாய் இருக்குமானால் அடியேன் சொல்லத் தயாராய் இருக்கிறேன் என்று சொன்னான்; அப்போது அவனை ஒரு பக்கத்தில் கொண்டுபோய் நிற்கவைத்தார்கள்.

அப்புறம் அவபக்தியைக் கூப்பிட்டார்கள். உடனே அவன் நியாயசபைமுன் வந்து கைகட்டி நின்றான். நியாயாதிபதி அவனை நோக்கி: கிராதிக்குள் நிற்கும் கைதியைப் பார்த்துக்கொள்; அவனுக்கு விரோதமாக அரசர் பட்சத்தில் நீ சொல்லவேண்டிய சாட்சிகளைச் சொல்லவேண்டியது என்று சொன்னான். அப்புறம் அவனிடத்தில் சத்தியம் வாங்கினார்கள். சத்தியம்பண்ணி ஆனவுடன் அவன் சொல்லுகிறான்:

அவபக்தியின் சாட்சி.

அவபக்தி. என் ஆண்டவனே! இவனோடு எனக்கு அதிகப் பழக்கமும் இல்லை, இனிமேல் இவனுடன் அதிகப் பழக்கமாக மனமும் இல்லை. என்றாலும் சில தினங்களுக்கு முன்னே இவனுடன் நான் பேசிக்கொண்டிருந்த சம்பாஷணையினால் இவன் தொத்துவியாதியைப்போலொத்த நாசகாலன் என்று தீர்மானமாய் அறிந்துகொண்டேன். எப்படியெனில் நாங்கள் சம்பாஷித்துக்கொண்டு இருக்கையில், உங்கள் மார்க்கம் ஒரு காசுக்கும் உதவாது, அதின்படி நடக்கிறதினாலே ஒரு மனுஷனும் தேவதயவைப் பெற்றுக்கொள்ளமாட்டான் என்று இவன் சொல்லக்கேட்டேன். இப்படி இவன் சொன்ன வார்த்தைகளின் கடைசித் தீர்மானம் எப்படி முடியவேண்டியதென்பது, என் ஆண்டவனே, தாங்களே நன்றாய் அறிவீர்கள். அது எதுபோல் இருக்கிறது என்றால், நாம் இன்னும் வீணான ஆராதனை செய்துகொண்டு வருகிறோம் என்றும், இன்னும் நமது பாவங்களோடேயே இருக்கிறோம் என்றும், கடைசியாக நாம் அனைவரும் நாசமாய்ப் போவோம் என்றும் சொன்னால் போல்தான் இருக்கிறது. அடியேன் சொல்லக்கூடிய வாக்குமூலம் இவ்வளவுதான் சாமி! என்று சொல்லி முடித்தான்.

அப்புறம் இச்சகனைக் கூப்பிட்டு சத்தியம் வாங்கி, அவன் தன் ராஜன் பட்சமாகவும், குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிற கைதிக்கு விரோதமாகவும் சொல்லத்தக்க சாட்சியை வெளியிடச் சொன்னார்கள். அப்படியே இச்சகன் பின்வருகிற பிரகாரம் சாட்சிசொல்லத் துவக்குகிறான்:

இச்சகன் சாட்சி.

இச்சகன். மகா பிரபுவே! மற்றப் பிரதானிகளே! கேளுங்கள்; இந்தத் துரோகிப்பயலை வெகுகாலமாக நான் அறிந்தும் இருக்கிறேன், பேசக்கூடாத வார்த்தைகளையெல்லாம்

இவன் துணிந்து பேசினதைக் கேட்டும் இருக்கிறேன். மாட்சிமை தங்கிய மகாமன்னராகிய பெயெல்செபூல் என்னும் நமது அதிபதியை இவன் தூஷித்ததுமன்றி, அவருடைய பட்டவர்த்தனராகிய பழைய மனித நாயகனார், மாம்ச இச்சை நாயகனார், சம்பிரமநாதர், இடம்பநாதன், காமாதிபதி, லோபத்துரை முதலிய அவருடைய உத்தம சிநேகிதராகிய பிரபுக்களையும், மற்றும் துரைமக்களையும் பற்றி பல அவதூறுகளைச் சொல்லியும் இருக்கிறான். அதுவுமன்றி, இந்நகரத்தில் உள்ளவர்கள் எல்லாரும் தன் மனம்போல் ஏகமனதுடையவர்களாய் இருந்தால், இப்பிரபுக்கள் ஒருவரையும் இவ்விடத்தில் தங்க இடம் இல்லாமலும், தாபரிக்க ஸ்தலம் இல்லாமலும் ஓட்டிவிடுவேன் என்றும் இவன் சொன்னது உண்டு. அதுவும் அன்றி, என் ஆண்டவனே! உமக்காவது அவன் மரியாதை கொடுத்திருப்பானோ? இல்லவே இல்லை. அவனை நியாயம் தீர்க்கும்படி ஏற்படுத்தி இருக்கிற உம்மையே பக்தியற்ற பரிசண்டாளன் என்றும், இன்னும் இவைபோலொத்த தூர்ச்சன வார்த்தைகளாலும் இவன் திட்டும்படி அஞ்சவில்லை. இப்படியாக இவன் மாயாபுரியின் பெரிய மனுஷரையெல்லாம் கண்டபடி அவதூறு பண்ணியிருக்கிறான் என்று சொல்லிமுடித்தான்.

இவ்வண்ணம் மூவரும் அவரவர் சொல்லவேண்டிய சாட்சிகளைச் சொல்லி முடித்தபின்பு, நியாயாதிபதி குற்றஞ்சாட்டப்பட்ட கைதியைப் பார்த்து: அடா, வேதப்புரட்டா! அடா, பதிதா! அடா துரோகி! இந்த உத்தம புருஷர் உனக்கு விரோதமாய்ச் சொன்ன சாட்சியைக் கேட்டாயா? என்று சொன்னான்.

உண். அப்போது உண்மை: நியாயாதிபதியே! என் குற்றமில்லாமையை விளக்கும்படியாக நான் பேச விரும்பும் சில காரியங்களைச் சொல்லும்படி உத்தரவுதாரும்? என்று கேட்டான்.

நியாயா. அதற்கு நியாயாதிபதி: போடா, போடா. இனி நீ பிழைத்திருக்கப் பாத்திரன் அல்ல; இந்த இடத்திலேயே உன்னைக் கொய்துபோடவேண்டியது நியாயம்; என்றாலும் நாங்கள் உன்மட்டில் பாராட்டுகிற தயாளகுணத்தை உலகமே அறியட்டும்; நீ சொல்லவேண்டியதைச் சொல்லு.

உண்மையின் அறிக்கை.

உண். 1. வன்கண்ணன் எனக்கு விரோதமாய்ச் சொன்ன சாட்சியைப்பற்றி நான் சொல்லவேண்டியது இதுதான்: — தேவவசனத்துக்கு இசைவாய் இராத எந்தக் கட்டளையாவது, பிரமாணமாவது, வழக்கமாவது, ஜனக்கூட்டமாவது கிறிஸ்து



மார்க்கத்துக்கு நேர்விரோதம் என்று நான் சொன்னதேயல்லாமல் வேறொன்றும் சொன்னதில்லை என்று அறிக்கையிடுகிறேன். இப்படி நான் சொன்னது தப்பிதமேயானால், அந்தத் தப்பிதத்தை எனக்கு உணர்த்திக் காட்டுங்கள்; அப்போது நான் சொன்னது சரி அல்ல என்று ஒத்துக்கொண்டு அறிக்கையிட ஆயத்தமாய் இருக்கிறேன்.

2. அவபக்தி எனக்கு விரோதமாய் சாட்சி சொன்னதைப் பற்றி நான் சொல்லவேண்டிய காரியம் என்னவென்றால்: தேவவணக்கத்தில் தெய்வீக விசுவாசம் வேண்டியது அவசியம்; ஆனால் கடவுளுடைய சித்தத்தைப்பற்றிய தெய்வீக வெளிப்படுத்தல் ஒன்று இல்லாவிட்டால், தெய்வீக விசுவாசம் உண்டாக வழி இல்லை. ஆதலால் தேவவணக்கத்தில் தெய்வீக வெளிப்படுத்தலுக்கு இசையாததான எவைகள் நுழைக்கப்பட்டு இருக்குமோ, அவைகள் மனுஷீக விசுவாசத்தின்படி அன்றி வேறு வகையாய் நுழைக்கப்பட்டு இருக்கமாட்டாது; இப்படிப்பட்ட விசுவாசம் நித்தியஜீவனுக்கு உதவமாட்டாது என்று சொன்னதற்கு மிஞ்சி வேறொன்றும் சொன்னது இல்லை என்று அறிக்கையிடுகிறேன்.

3. இச்சகன் எனக்கு விரோதமாய்ச் சொன்ன சாட்சியில் நான் பேசினதாக அவன் குறித்த தூஷணங்களும், அவதூறான வார்த்தைகளும் என் வாயில் வந்ததே இல்லை. ஆனால் இந்த நகரத்தின் அதிபதியும், அவருடைய பட்டவர்த்தனராக இச்சகன் பேர்சொன்ன பிரபுக்களும், மற்றும் துரைமக்களும் இந்த நாட்டுக்கும், நகரத்துக்கும் ஏற்றவர்களாய் இராமல், நரகத்தில் இருக்கவே தகுந்தவர்கள் என்றுமாத்திரம் சொன்னது உண்டு.—கடவுள் என்மேல் கிருபையாய் இருப்பாராக என்று சொல்லிமுடித்தான்.

நியாயாதிபதி ஜூரிமாருக்கு உணர்த்தல்.

அப்புறம் நியாயாதிபதியானவர், இம்மட்டும் தமது சிம்மாசனத்தின் பக்கத்தில் நின்று நடந்த விசாரணையைக் கவனித்துக்கொண்டு இருந்த பல பொது மனுஷரைப் பார்த்து: ஓ! ஜூரிமாராகிய துரைமாரே! கேளுங்கள்: இந்த நகரம் முழுவதையும் கலாபனைசெய்து குற்றஞ்சாட்டப்பட்டு நிற்கிற கைதியை நீங்கள் உங்களுக்கு முன்னே பார்க்கிறீர்கள்; இவனுக்கு விரோதமாய் மரியுள்ள கனவான்களில் சிலர் சாட்சிசொன்னவைகளைக் கேட்டும் இருக்கிறீர்கள்; அந்த சாட்சிகளை மறுத்து கைதி பேசின வார்த்தைகளையும், அவன் பண்ணின அறிக்கை

யையும் கேட்டீர்கள்; அவனைத் தூக்கில் போடுகிறதோ, விடுதலைசெய்கிறதோ என்பது உங்கள் மனதுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எப்படி இருந்தபோதிலும் நீங்கள் உங்கள் தீர்மானத்தை வெளியிடுமுன், உங்களுக்கு நமது ராஜ்யபாரத்து நியாயப்பிரமாணங்களின் சாரத்தை ஊட்டிவைப்பது நமக்கு அவசரமாகத் தோன்றுகிறது.

நமது அதிபதியின் உத்தம ஊழியக்காரரில் ஒருவனாகிய பெரிய பார்வோன் என்பவன் காலத்தில், எதிர் மார்க்கத்தார் பலுகிப் பெருகி, பலத்தில் வளர்ந்துவிடாதபடிக்கு, அவர்களுக்குள் பிறக்கும் ஆண் குழந்தைகள் எல்லாம் ஆற்றில் போடப்படவேண்டும் என்று ஒரு கட்டளை பிறந்தது.[a] அவருடைய தாசரில் வேறொருவனாகிய மகா நேபுகாத்நேச்சாருடைய நாட்களில், அரசன் நிறுத்தின பொற்சிலையைக் குப்புறவிழுந்து கும்பிடாதவன் எவனோ, அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச்சூளையில் போடப்படும்படி ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.[b] அதுவும் அல்லாமல் தரியு மகாராஜாவின் காலத்தில், குறிக்கப்பட்ட ஒரு காலத்துக்கு, எந்த மனுஷனும் அவ்வரசனை அல்லாமல் வேறு தேவனையாவது, எந்த மனுஷனையாவது நோக்கி ஜெபம் செய்கிறது உண்டானால், அப்படிப்பட்டவனை சிங்கங்களின் குகையிலே போடவேண்டும் என்று தாக்கீதும் பிறந்தது.[c] நமது அரசரின் ஆஞ்ஞைச் சட்டங்கள் இப்படியிருக்க, இப்பொழுது இந்தக் கைதி அவைகளின் சாரத்தை நினைவினால்மாத்திரம் மீறி இருந்தாலும் அதை சகிக்கக்கூடாது, இவனோ வார்த்தையினாலும் கிரியையினாலும் மீறி இருக்கிறான் என்று தெரியவருகிறது; இந்த அநியாயத்தை யார்தான் சகிக்கக்கூடும்!

பார்வோனின் கட்டளையைப்பற்றிச் சொல்லவேண்டுமானால், அது ஒரு குற்றமும் நடவாதிருந்த காலத்தில் சம்பவிக்கிறதற்கு இடமான பொல்லாப்பை விலக்கிப்போடும்படி சந்தேகத்தால்மாத்திரம் ஏற்படுத்தப்பட்டது. இப்போதோ ஒரு துரோகம் வெளிப்படையாய் நடந்திருக்கிறது; இரண்டாம் மூன்றாம் சட்டங்களைப்பற்றிச் சொல்லவேண்டுமானால், இவன் நமது மார்க்கத்தை அடியோடு ஆட்சேபிக்கிறதாகத் தெரியவருகிறது. ஆகையால் அவன் அறிக்கையிடுகிற ராஜதுரோகத்திற்காக அவன் மரணமடையப் பாத்திரனாய் இருக்கிறான்; இவை

[a] யாத். 1. 22.   [b] தானி. 3. 6.   [c] தானி. 6. 7.



களை நீங்கள் மனதில் ஆராய்ந்து பார்த்து, ஓ! பிரபுக்களே! துரைமக்களே! கனவான்களே! ஜூரிமாரே! உங்கள் தீர்ப்பைத் தீர்க்க ஆலோசனையோடு கூறக்கடவீர்கள் என்று சொன்னான்.

ஜூரிமாரும் அவர்கள் ஆலோசனையும்.

நியாயாதிபதியாகிய நன்மைவெறுப்போன் இவ்வளவும் சொன்னவுடனே, அவரைச் சுற்றிலும் நின்ற ஜூரிமாராகிய கபோதி, நலமில்லான், குரோதி, காமி, நெறிகேடன், குறும்புத்தனன், மனமேட்டிமை, விரோதி, பொய்யன், நிஷ்டூரன், ஜோதிப்பகை, தீராப்பகை[1] ஆகிய பன்னிருவரும் தங்களுக்குள் அந்தரங்க ஆலோசனை செய்துகொள்ளும்படி, நியாய சபையை விட்டு வெளியே போய், தனித்திருந்து, அவரவர் தீர்மானங்களைப்பற்றி ஆலோசித்துக்கொண்டு, கடைசியாக எல்லாரும் கைதியை மரணாக்கினைத் தீர்ப்புச்செய்யும்படி ஏக மனதுடையவர்கள் ஆனார்கள். ஜூரிமாரில் முதல்வராகிய கபோதி, இவன் பதிதன் என்று நான் பரிஷ்காரமாய்ப் பார்க்கிறேன் என்றார்; அப்புறம் நலமில்லான் என்பவர், இப்படிப்பட்ட பயலைப் பூமியில் இருந்து அகற்றவேண்டும் என்றார்; அப்பால் குரோதி, ஆம், ஆம், அவன் தொலைந்தால் நலம், அவன் முகத்தைப்பார்க்கவே எனக்கு அவ்வளவு வெறுப்புண்டாகிறது என்றார்; அதின்பின் காமி, நான் அவனைச் சகிக்கமாட்டேன் என்றார்; பின்பு நெறிகேடன், நானும் சகிக்கமாட்டேன், இவனை விட்டுவிட்டது நிஜமானால் என் வழிகளையெல்லாம் குற்றப்படுத்தத் துணிவான் என்றார்; அப்பால் குறும்புத்தனன், இனி ஆலோசனை என்ன, பயலைக் கழுவில் ஏற்றுங்கள், கழுவில் ஏற்றுங்கள் என்றார்; அதின்பின் மனமேட்டிமை, இவன் ஒரு காசும் பெறாத பயல் என்றார்; என் மனம் இவனுக்கு விரோதமாய்க் கொதிக்கிறது என்று விரோதி விளம்பினார்; இவன் மகா திருட்டுப்பயல் என்று பொய்யன் சொன்னார்; இவனைக் கழுவில் ஏற்றுவதுகூடப் பற்றாது என்று நிஷ்டூரன் சொன்னார்; இவனை நமது நடுவில் இராதபடிக்கு நிர்மூலம்பண்ணவேண்டியது என்று ஜோதிப்பகை என்பவர் சொன்னார்; இந்த உலகம் முழுவதையும் எனக்குத் தந்துவிட்டபோதிலும் அவன் சங்காத்தம் செய்யமாட்டேன் ஆகையால் அவனுக்கு மரணாக்கினைத் தீர்ப்பிடுவோமாக என்று தீராப்பகை விளம்பினார்.

[1] ஜூரிமார் பேர்; நல்லோரைத் துன்பப்படுத்தும்படி பொல்லாதவர்களை ஏவிவிடுகிற துர்க்குணங்களைக் காட்டுகிறது.

ஜூரிமாருடைய தீர்மானத்தின்படியே தீர்ப்பும் பிறந்தது. அந்தத் தீர்ப்பாவது: "இவனை இப்பொழுது இருக்கிற இடத்திலிருந்து இவன் புறப்பட்டுவந்த இடத்துக்குக்கொண்டுபோய், அவ்விடத்திலே தங்களால் செய்யக்கூடிய குரூரமான மரணத்தினையை அவனுக்குச் செய்யவேண்டியது" என்பதே.

தீர்ப்பு.

அவர்கள் தங்கள் நியாயப்பிரமாணத்தின்படி அவனை வெளியே கொண்டுவந்தபிற்பாடு, முதலாவது வாரால் அடித்தார்கள், அப்புறம் அவனைக் குட்டினார்கள், பின்பு கத்திகளால் அவன் சதையில் குத்தினார்கள், அப்பால் அவன்மேல் கல்லெறிந்தார்கள், அதின்பின் தங்கள் ஈட்டிகளால் அவனைக் குத்தினார்கள், கடைசியாக, தட்டைகளை அடுக்கி அதின்மேல் அவனைக் கட்டிவைத்து, அக்கினியைக் கொளுத்திச் சாம்பலாக்கினார்கள். இவ்வண்ணமாய் உண்மையின் சமாசாரம் முடிந்தது.[1]

தீர்ப்பை நிறைவேற்றின வகை; உண்மையின் முடிவு.

அப்புறம் நான் உண்மையைக் கொலைசெய்த ஜனக்கூட்டத்தின்பின்னே ஒரு ரதமும் இரண்டு குதிரைகளும் அவனுக்காகக் காத்துக்கொண்டு நிற்கக்கண்டேன். சத்துருக்கள் அவனுக்குச் செய்யவேண்டிய ஆக்கினை அனைத்தும் முடிந்தவுடனே, அவன் அதின்மேல் ஏற்றிக்கொள்ளப்பட்டு, உன்னத நகரத்தின் வாசலுக்கு நேர்வழியாக எக்காள சத்தத்தோடு மேகங்களுக்கு ஊடே கொண்டுபோகப்பட்டான்; கிறிஸ்தியானோ மறுபடியும் சிலகாலம் காவலில் அடைக்கப்பட்டிருந்தான். ஆனால் எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற தேவன், துஷ்டரின் சீற்றங்களையும் தமது கையின்கீழ் அடக்கிக்கொண்டு, தமது கிரியையை நடத்திக்கொண்டிருந்தார். அந்தக் காலத்தில் கிறிஸ்தியான் தெய்வாதீனமாய் எப்படியோ தப்பிப் பிழைத்து தன் வழியே நடந்து பிரயாணம்போனான்.

கிறிஸ்தியான் தெய்வாதீனமாய்த் தப்பிக்கொள்ளுகிறான்.

1 முந்தின காலங்களில் கிறிஸ்துமார்க்கத்தைப் பற்றிக்கொண்டதின்நிமித்தம் [illegible] கொலைசெய்யப்பட்டபோதிலும், இப்பொழுது அப்படி இந்த தேசத்தில் நடக்க இடம் இல்லை. என்றாலும், சுவிசேஷத்தின் நிமித்தம் சிலர் தகப்பனையும், தாயையும், வீட்டையும், சொத்தையும் விட்டுவிடவேண்டியதாய் நேரிடுகிறது. ஏதாவதொரு விதமான துன்பத்தை எல்லாரும் எதிர்பார்க்கவேண்டியது.



அவன் தன் வழியே போகப்போக, ஆனந்தபரவசங்கொண்டு,

## "Victory"

1 உண்மை என்னும் வீரனே நீ
வெற்றிகொண்டாய், ஜெயம்பாடி
துதிகீதம் முழக்குவாய்—அல்லேலூயா.

2 பிதாமுகம் தரிசித்தாய்
தூதருடன் கூடிக்கொண்டாய்
துதிகீதம் பாடுகிறாய்—அல்லேலூயா.

3 பாவிகள்தான் பாதாளத்தில்
புலம்பியே அழுகையில்
பரிசுத்தர் பாடுகிறார்—அல்லேலூயா.

4 உடலைக் கொன்றுபோட்டாலுமே
இன்னும் உயிர் உனக்குண்டே
துதிகீதம் முழக்குவாய்—அல்லேலூயா

என்று பாடிக்கொண்டே போனான்.

இப்பொழுது நான் என் சொப்பனத்திலே, கிறிஸ்தியான் தனிமையாய் அல்ல, திடநம்பிக்கை[1] என்னும் ஒரு தோழனோடு பயணம்பண்ணுகிறதைக் கண்டேன். மாயச்சந்தையின் குடிகளில் ஒருவனாகிய இவன், கிறிஸ்தியானும், உண்மையும் மாயாபுரியில் மானபங்கப்பட்டபோது பேசின சாந்தத்தையும், காட்டின சகிப்பையும் கவனித்து கிறிஸ்தியானுடன் சேர்ந்து பயணம் செய்யும்படி தீர்மானித்து உடன்படிக்கை பண்ணிக்கொண்டவனாய் இருந்தான். இவ்விதமாக ஒருவன் சத்தியத்திற்கு சாட்சியாக மரித்தான்; வேறொருவன் கிறிஸ்தியானுக்குத் தோழனாகி, மோட்சபிரயாணம் செய்யும்படிக்கு அவனுடைய சாம்பலில் இருந்து எழுந்தருளி ஆகிறான். தன்னையல்லாமல் இன்னும் அனந்தம்பேர் மாயச்சந்தையில் இருந்து அவர்களுக்குப் பின்னாலே வரும்படி ஆசையாய் இருக்கிறதாகவும் திடநம்பிக்கை கிறிஸ்தியானுடன் சொன்னான்.

திடநம்பிக்கை கிறிஸ்தியானுடன் கூடுகிறான்.

1 திடநம்பிக்கை என்பது பழைய கிறிஸ்தவர்கள் பூரண நம்பிக்கை கொள்ளும்படியாக, கிறிஸ்துமார்க்கத்தின் வழிகளில் நடத்திவருகிற புதுக் கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது.

## உபாயியைச் சந்தித்தல்.

உபாயி.

இப்படி அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு மாயாபுரியின் கோட்டைவாசலைக் கடக்கவே, தங்களுக்கு முன்னே நடந்துபோன ஒருவனைக் கண்டு அவனுடன் கூடினார்கள்; அவனுக்கு **உபாயி** [1] என்று பேர். இவர்கள் அவனை நோக்கி: நீர் எந்த ஊர் ஐயா! இவ்வழியாக எவ்வளவு தூரம் போகிறீர்? என்று கேட்டார்கள். அதற்கு அவன்: நான் **நயவசனபுரியில்** இருந்து புறப்பட்டு வருகிறேன், உச்சிதபட்டணம் சேர நடந்துபோகிறேன் என்றான்; ஆனால் தன் பேரையோ அவன் சொல்லவில்லை.

நயவசனபுரியில் இருந்தா புறப்பட்டீர்? அவ்வூராருக்குள் எவனாவது யோக்கியன் உண்டா? a என்று கிறிஸ்தியான் கேட்டான்.

**உபா.** ஆம், நயவசனபுரியில் நல்லவர்கள் இல்லாவிட்டால் பின் எங்கேதான் இருப்பார்கள்?

**கிறி.** ஐயா! நான் உம்மை என்ன பேரால் அழைக்கவேண்டும் தயவு செய்து சொல்லும்.

**உபா.** நான் உங்களை அறியமாட்டேன், நீங்கள் என்னை அறியவும்மாட்டீர்கள். நீங்கள் இந்த வழியே போகிறது மெய்யானால் உங்களுடன்கூட வழி நடப்பது எனக்குச் சந்தோஷந்தான்; மற்றப்படி நான் தனிமையாகத்தான் போகவேண்டும்.

**கிறி.** உம்முடைய நயவசனபுரியைக்குறித்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; அது மகா ஐசுவரியமுள்ள ஒரு பட்டணம் என்று கேள்விப்பட்டதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது.

**உபா.** அதற்கும் சந்தேகமா? அது வாழ்வுள்ள ஒரு பட்டணம் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அவ்விடத்து மகாராஜரான பலர் எனக்கு பந்துக்கள்தான்.

---

[1] **உபாயி.** இது லோகவாழ்வுக்கடுத்த விஷயங்களில் அநுகூலமாயிருக்கும்மட்டும் பக்தர்போல் நடந்துகொண்டு அதற்கு விரோதமான சம்பவங்கள் சம்பவிக்கும்போது பக்தியை முற்றிலும் விட்டுவிடுகிறவர்களைக் குறிக்கிறது. இவனுடைய பந்துக்களின்பேர் மாயக்காரரின் குணங்களைக் காட்டுகிறது.

a நீதி. 26. 25.



**கிறி.** நான் துணிந்துகேட்பதையிட்டு நீர் விசனமடைய வேண்டாம்; அவ்விடத்திலுள்ள உமது இனபந்துக்கள் யார் ஐயா?

அவன் பந்துக்கள்.

**உபா.** ஏறக்குறைய எல்லாரும் என் பந்துக்கள்தான்; ஆனால் கிட்டின இனத்தாரைமாத்திரம் சொல்லுகிறேன். கட்சிமாறிநாயனார் இருக்கிறாரே அவர், சமய தந்திரமன்னர், இந்தப் பட்டணத்திலே முதலாவது குடியேறி, தமது பேரையே அதற்கு இட்ட குடும்பத்தலைவராகிய நயவசனி இருக்கிறாரே அவர் ஆகிய உயர்குலத்தோரும், இனியன் இருமுகன் ஏதாவது ஆகிய இவர்களும் என் பந்துக்கள்தான். எங்கள் ஊர் மூலஸ்தான குருவாகிய இருநாக்கு இருக்கிறாரே அவரும் தூர உள்ளவர் அல்ல; அவர் என் பிதா வழியில் தாய்மாமன்தான். இன்னும் நிஜத்தைச் சொல்லவேண்டுமானால், நான் பேரெடுப்புள்ள ஒரு பிரபுவாக்கும். எனது பாட்டனாரோ ஒரு படவோட்டிதான்; அவர் ஒரு திசையாய் நோக்கி மறுதிசையாய்த் தண்டுவலிக்கிற சமர்த்தர்; நானும் அந்தப்படி தண்டுவலித்தே திரண்ட பொருளைச் சம்பாதித்துக்கொண்டேன் என்றான்.

**கிறி.** நீர் ஒண்டிக்காரரா? கலியாணம் செய்தவரா?

அவன் மனைவி.

**உபா.** கலியாணக்காரன்தான். என் மனைவி மகா பதிவிரதாபத்தினி; அவள் பத்தினி வயிற்றில் பிறந்த பத்தினி 'ன் அப்பா! யாருடைய மகள் சொல்லட்டுமா? அவள் போலியம்மாள் பெற்ற செல்வபுத்திரியாக்கும்; ஆகையால் அவள் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவள்தான்; பெரிய வீட்டுக்காரி மகள் ஆனபடியால் அரசனானாலும் சரி, ஆண்டியானாலும் சரி எல்லாருக்கும் இணக்கமானபடி நடந்துகொள்ளத்தக்க பெரும் பத்தியுடையவளாய் இருக்கிறாள். எங்களுக்கும் மார்க்க விஷயங்களில் நுட்பமாய் நடந்துகொள்ளப் பிரயாசப்படுகிறவர்களுக்கும் அவ்வளவு ஒத்துவராது என்பது மெய்தான்; ஆனால் என்ன? இரண்டு அற்பகாரியத்திலேதான் அந்தப் பேதம் இருக்கிறது. அதென்னவென்றால்: (1—வது.) நாங்கள் காற்றுக்கும் அலைக்கும் எதிர்த்துப்போகிறதில்லை. (2—வது.)

அவனுடைய கோட்பாடு.

ஆனாலும் மார்க்கமானது வெள்ளிச் சப்பாத்தைப் போட்டுக்கொண்டு தெருவீதி ஏறுகிறபோது நாங்கள் அதிக வைராக்கியமுடையவர்கள் ஆகிறோம்; அச்சமயத்தில் சூரியபிரகாசம் பளிச்

சென்று பிரகாசிக்கவும், ஜனங்கள் ஆர்ப்பரித்துப் புகழவும் நேரிட்டால் எங்களுக்கு மெத்தவோ மகிழ்ச்சி உண்டாகிறது என்று சொன்னான்.

இவ்வளவும் கேட்டவுடனே கிறிஸ்தியான் சற்றே விலகி நடந்து தன் தோழனாகிய திடநம்பிக்கையண்டைபோய், காரியத்தைப் பார்த்தால் இவன் நயவசனபுரியின் உபாயி என்றுதான் என் மனதில் படுகிறது; இவன் அவனேயானால் அவ்விடத்து துஷ்டர் எல்லாரிலும் பரமதுஷ்டன் நமக்குத் தோழன் ஆனான் என்று அறிந்துகொள்ளவேண்டியது என்றான். அதற்குத் திடநம்பிக்கை: அவன் பேரைத்தான் கேளுமேன், பேரைச் சொல்லவும் அவனுக்கு வெட்கம் இருக்குமா? அப்படி வெட்கப்படமாட்டான் என்று எனக்குத் தோன்றுகிறது என்றான். அப்புறம் கிறிஸ்தியான் மறுபடியும் மெதுவாய் அவனண்டை சேர்ந்து, ஐயா நீர் பேசுகிறதைப் பார்த்தால் உம்மிடத்திலுள்ள அறிவு உலகம் முழுவதிலும் உள்ளவர்களிடத்திலும் இல்லை போலக் காணப்படுகிறது; ஆனால் நான் வாய்புதப்பிப் பேசுகிறதாக நீர் எண்ணவேண்டியதில்லை; உம்மைப்பற்றி எனக்கு இனம் தெரியும்போல் இருக்கிறது; உம்முடைய நாமதேயம், நயவசனபுரியின் உபாயி அல்லவா?

உபாயி. ஆ—கா—கா—அது என்னுடைய பேர் அல்ல, ஆனால் என்மேல் காய்மகாரப்படுகிற சிலர் இந்த வக்கணைப்பேரால்[1] என்னைக் கூப்பிடுகிறதுண்டு. நல்லோர் அநேகர், நிந்தையான பல பேர்களை மகிமை [illegible] இதற்குமுன் ஏற்றுக்கொண்டதுபோல, நானும் இதை மகிமையாக ஏற்றுக்கொள்ளவேண்டியதாய்த்தான் இருக்கிறது.

கிறி. ஆனால் இதற்குமுன் பலரும் இந்தப்பேரால் உம்மை அழைக்கும்படி நீர் இடம் பண்ணிக்கொண்டதில்லையோ?

உபாயி. இல்லவே இல்லை; இந்தப்பேரால் என்னை அவர்கள் அழைக்கும்படி இடம் பண்ணிக்கொண்ட கெட்டகாலம் ஏதுவென்றால், காலத்துக்கும் சமயத்துக்கும் தக்கதாக நான் என் சொந்தப்புத்தியின்படி நடந்து, நல் அதஷ்டம் அடைகிறதுண்டு; அந்த முறையாக நல்வாழ்வும், பாக்கியமும் எனக்குப் பெருகிற்று; சிலர் என் அதஷ்டத்தைப் பார்த்து மனம் பொறாமல் இப்படி வக்கணைப்பேர் சொல்லுகிறதுண்டு; ஆனாலும் இப்படிப்பட்ட காரணத்தைத் தொட்டு ஒரு அவகீர்த்தி உண்டானால் அதை நான் ஆசீர்வாதம் என்றே எண்ணிக்கொள்ளவேண்டியது; அதினாலே பொறாமைக்காரர் என்மேல் அவகீர்த்தியைக் குவிக்கவேண்டியதில்லை.

[1] மாயக்காரர் நாடகம் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தம்பம் பொறுக்கமாட்டாமல் இப்படி இருப்பதற்கும் இணங்கி நடக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் வேறு கள்ளப்பேர்களால் தங்களை அழைக்கிறார்கள். பொறாமைக்காரன் தான் விவேகமாய் நடக்கிறேனென்று வேறல்ல என்று சொல்லிக் கொள்ளுகிறான்.



கிறி. நான் கேள்விப்பட்டிருந்த ஆள் நீர்தான் என்று நினைத்தது சரிதான்; என் மனவிருப்பத்தை உள்ளபடி சொல்லவேண்டுமானால், நீர் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி இந்தப் பேர் உமக்கே தகுமானதாய் இருக்கிறது என்று எனக்கு நன்றாய்த் தோன்றுகிறது.

உபா. உம்முடைய மனதில் அப்படி அபிப்பிராயப்பட்டால் அதற்கு நான் என்னசெய்யக்கூடும்? ஆனால் என்னை உங்கள் கூட்டாளியாகச் சேர்த்துக்கொள்ளப் பிரியம் இருக்குமானால் என்னை நல்லதோழன் என்று அறிந்துகொள்வீர்கள் என்பது மெய்.

கிறிஸ்தியானுடைய போதனை.

கிறி. நீர் எங்களோடு கூடவருகிறது மெய்யானால், காற்றுக்கும் அலைக்கும் எதிர்த்துப்போகவேண்டியது, அப்படி எதிர்ப்பது உமது மனதுக்கு விரோதமாய் இருக்கிறதுபோலத் தோன்றுகிறதே; நீர் மார்க்கமானது வெள்ளிப்பாதரட்சைபோட்டு வீதிவழி வரும்பொழுதுமாத்திரம் அல்ல, அது கந்தைகட்டினதாய்க் கடைத்தெருவில் வரும்போதும் அதைச் சார்ந்திருக்கவேண்டியது. தெருக்களில் புகழ்ச்சி பெறும்பொழுதுமாத்திரம் அல்ல, இருப்புவிலங்குகளோடு போகும்போதும் அதைச் சார்ந்திருக்கவேண்டியதாயிற்றே.

உபா. நீங்கள் என் மனதைக் கட்டாயப்படுத்தி என் விசுவாசத்துக்கு ஆண்டவன்மாராய் இருக்கக்கூடாதே; என்னை என் இஷ்டத்துக்கு விட்டுவிடுங்களேன்; நான் கூடவே வருகிறேன்.

கிறி. அதெப்படி ஆகும்? நான் முன் சொல்லியபடி நீரும் செய்யாவிட்டால் ஒரு அடி எடுத்துவைக்கல் ஆகாது என்று கிறிஸ்தியான் சொன்னான்.

இப்படிச் சொன்னவுடனே உபாயி சொல்லுகிறான்: நீங்கள் என்ன சொன்னாலும் சொல்லுங்கள்; என்னுடைய அபிப்பிராயங்களில் யாதொரு குற்றம் இல்லை, மேலும் அதினால்

அதிக லாபமும் இருக்கிறது; ஆகையால் என் பழைய எண்ணங்களை நான் விடமாட்டேன். உங்களுடன்கூட வருகிறதற்கு வகை இல்லையானால், உங்களைச் சந்திக்குமுன் நடந்துவந்ததுபோலத் தனித்து நடந்துபோவேன்; என் நோக்கத்துக்கு இசைந்தவன் எவனாவது பின்னாலே வந்து சேர்ந்தால் அப்புறம் நாங்கள் சல்லாபமாய்ப் பேசி உல்லாசமாய் நடந்துவருவோம்; நீங்கள் போங்கள் என்று சொன்னான்.

அவன் பிரிந்துபோகிறேன்.

## உபாயியின் தோழர் சந்திப்பு.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், கிறிஸ்தியானும் நிடம்பிக்கையும் உபாயியை விட்டுப் பிரிந்து, முன்னெட்டி நடந்துபோனார்கள். சற்றுதூரம் போனவுடன், இருவரில் ஒருவன் பின்னெட்டிப் பார்த்தான்; பார்க்கவே உபாயியோடு வேறு மூன்று பேர் கூடிவருவதைக் கண்டான். அவர்கள் கிட்டவந்தவுடனே உபாயி அவர்களுக்குத் தலைகுனிந்து வந்தனம்செய்தான், அவர்களும் அவனுக்கு மரியாதை செய்தார்கள். அம்மூவரில் ஒருவனுக்கு **உலகப்பற்று**[1] என்றும், மற்றவனுக்குப் **பணவாஞ்சை** என்றும், வேறொருவனுக்குப் **பிசிநாறி** என்றும் பேர். இவர்கள் மூவரும் உபாயியினுடைய பள்ளித்தோழர்தான். இவர்கள் எல்லாரும் இச்சித்தல் என்று பேர் வழங்கப்பட்ட வடநாட்டு வியாபாரப் பட்டணங்களில் ஒன்றாகிய ஆதாயவாரிபுரி என்னும் ஊரில் இருந்த சர்வகலாசாலைத் தலைவராகிய **பணம்பிடுங்கி** என்னும் வித்வசிரோமணியின் பாதத்தில் படித்தவர்களாய் இருந்தார்கள். இந்த உபாத்தியாயர் பலவந்தமாயாவது, தந்திர உபாயமாயாவது, இதம்பேசியாவது, பொய்பேசியாவது, தேவபக்தியின் வேஷம் போட்டாவது மாயம்போட்டாவது தமது மாணாக்கர் பணம்பிடுங்கி பெரிய குடித்தனக்காரராகி விட நன்றாய்ப் படிப்பித்து வந்தார். அவருடைய கல்விச் சாலையில் படித்த மாணாக்கர் அனைவரிலும் இந்த நாலுபேரும் கல்வியில் தேறின ஆசாமிகள் ஆகிவிட்டதால் அப்புறம்

அவனுடைய தோழர்.

[1] உலகப்பற்றும் அவன் தோழரும், கிறிஸ்தவைப் பின்பற்றுகிறவர்களைப்போல காணப்பட்டு தங்கள் மனதை உலகத்துக்குச் சாய்க்கிறவர்களைக் குறிக்கிறது.



அவரவரே இப்படிப்பட்ட ஒவ்வொரு பள்ளிக்கூடத்தை சுதாவில் ஏற்படுத்தி நடத்திவந்தார்கள்.

அவர்களுடைய பூர்வோத்திரம் இப்படியிருக்க, நான் முன் சொல்லியபடி அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து, மாற்றி மாற்றி வந்தனங்கள் பண்ணிக்கொண்டபின்பு பணவாஞ்சை என்பவன், அதோ நமக்கு முன்னே போகிறார்களே அவர்கள் யார்? என்று உபாயியை கேட்டான். ஏனெனில் கிறிஸ்தியானும் நிடம்பிக்கையும் அவர்கள் கண்ணெட்டும் தூரத்துக்குள்தான் போனார்கள்.

உபா. அவர்கள் யாரோ தூரதேசத்தார்; அவர்கள் தங்கள் மனப்போக்கின்படியே பிரயாணம் செய்கிறார்களாக்கும் என்றான்.

பண. ஐயா! ஏன் நின்றார்கள் இல்லை? எல்லாருங்கூடி ஒரே கும்பலாகப் போகலாமே; அவர்களும் நாங்களும், ஐயா, ஒருவேளை நீரும் கூட மோட்சபிரயாணந்தானே போகிறோம்?

பணவாஞ்சை.

உபா. ஆம், நாம் எல்லாரும் அந்தப் பயணத்தில்தான் இருக்கிறோம்; ஆனால் அதோ முந்திப்போகிறார்களே அவர்கள் வெகு கண்டிப்புக்காரர்; தங்கள் மனதின் அபிப்பிராயங்களின் மேல் பிரியங்கொண்டிருக்கிறார்கள்; ஒரு மனுஷன் எவ்வளவு பக்தியுடையவனாய் இருக்கட்டுமேன், அவன் அவர்கள் கருத்துக்கு இசைந்து நடவாவிட்டால், அவனை முற்றிலும் அசட்டைபண்ணி தங்களோடுகூட வரக்கூடாது என்று தூரத்திவிடுகிறார்கள்.

உபாயி பிரயாணிகளைப் பற்றிச்சொல்லும் அபிப்பிராயம்.

பிசிநாறி. அது மகா கெட்டகுணம்; சில பூரண பக்தரைப் பற்றி நாம் வாசித்திருக்கிறோம், அப்படிப்பட்டவர்களுடைய அதனபக்தியானது தங்களைத்தவிர மற்றவர்களுக்கு இரட்சிப்பே இல்லை என்று அனித்து சொல்லும்படி அவர்களை ஏவிவிடுகிறது. ஆனால் உமக்கும் அவர்களுக்கும் வித்தியாசப்பட்ட விஷயங்கள்தான் என்ன? எந்தக் காரியங்களில் நீங்கள் ஒருவருக்கொருவர் பேதப்பட்டிருக்கிறீர்கள் என்று சொல்லும்படி உம்மை மன்றாடுகிறேன்.

உபா. அவர்கள் தங்கள் முரட்டுக்குணத்துக்குத் தக்கதாக, மழை ஆனாலும் சரி, வெயில் ஆனாலும் சரி, அடை ஆனாலும் சரி, கோடை ஆனாலும் சரி, பிரயாணத்தை நடத்தவேண்டும் என்

கிறார்கள்; நானோ காற்றின்று கடலின் அலை தணிகிறது பார்த்துப் புறப்படலாம் என்கிறேன்; அவர்கள் தேவசகாயத்தை நம்பிக்கொண்டு திடும்பிரவேசமாய் சகலத்தையும் முடிக்கப்பார்க்கிறார்கள்; நானோ ஜீவநாசமாவது பொருள்நஷ்டமாவது சம்பவியாதபடி சகலத்தையும் ஆற அமர நடத்தப் பிரயாசப்படுகிறேன். எல்லாரும் அவர்கள் நோக்கத்துக்கு விரோதமாய்ச் சொன்னபோதிலும் அவர்கள் தங்கள் கருத்தே சிறந்ததென்று சொல்வார்களேயன்றி, மாறுகிறதில்லை. நானோ என்மட்டுக்கு காலத்துக்கேற்றதாகவும் பொருள்நஷ்டம் ஆகாமலும் எல்லா விஷயங்களிலும் தேவபக்தியைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் கந்தைகட்டி கனவீனப்படுகிற சமயத்திலும் பக்தியை விடக்கூடாது என்கிறார்கள்; நானோ அந்த பைத்தியமான புத்தியைத் தள்ளிப்போட்டு, அது தன் வெள்ளிப்பாதரட்சைகளைத் தொடுத்துக்கொண்டு, சூரியப் பிரகாசவேளையில் சம்பிரமமாய் வீதிவழிவரும்போது அதைப் பிடித்துக்கொள்ளுவேன் என்று சொல்லுகிறேன் என்றான்.

**உலகப்பற்று.** அதைக் கேட்டவுடனே உலகப்பற்று என்பவன் சொல்லுகிறான்: ஆம், ஆம், அது சரி; என் பிராண சிநேகிதராகிய உபாயி என்பவரே! உமது கருத்தை விடாதேயும்; ஒருவன் தனக்கு அகப்படும் ஆதாயங்களைக் காபந்துபண்ணிக்கொள்ள சுயாதீனமுடையவனாய் இருந்தும், விவேகமில்லாமல் அதைக் கைசோர விட்டுவிடுவானானால் அவனைப்போல மூடன் இல்லை என்று என் புத்திக்குத் தோன்றுகிறது. நாமோ சர்ப்பங்களைப்போல விவேகமுள்ளவர்களாய் இருப்போமாக. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது உத்தமம். தேனீக்களைப் பாருமேன், அவை மாரிகாலமெல்லாம் சும்மா இருந்து, வெயில்காலத்தில் லாபமடையும்படியாக சந்தோஷத்தோடு பூவுக்குப் பூ பறந்து திரிகின்றன. தேவன் சிலகாலத்தில் மழைபெய்யவும், சிலகாலத்தில் வெயில் எரிக்கவும் செய்கிறார். அவர்கள் மழைகாலத்தில் பயணம்போகவேண்டும் என்று சாதிக்கிற மதிகேடராய் இருந்தால் இருக்கட்டும்; நாம் வெயில்காலத்தில் சுகமாய் நடந்துபோகலாம். என்மட்டுக்குச் சொன்னால் தேவன் நமக்கு அருளும் ஆசீர்வாதங்களைப் பேணிக்கொடுக்கிற மாதிரியான தேவபக்தி எதுவோ அப்படிப்பட்ட பக்தியின்மேலேதான் எனக்குப் பிரியம் இருக்கிறது. இச்சீவியத்திற்கு அடுத்த நல்ல வாழ்வுகளை தேவனே தந்திருக்கையில், அவர்நிமித்தம் நாம் அவைகளைப் பேணிக்கொள்ளல் ஆகாது என்று தன் சுய யோசனையின்படி எவனாவது தீர்மானிக்கக்கூடுமோ? ஆபிரகாமும்,



சாலொமோனும் பக்தியோடு பக்தியாய்ப் பணக்காரராயும் இருந்தார்கள். மேலும் யோபு என்பவர், நல்ல மனுஷன் பொன்னைத் தூளைப்போல் சேர்த்துவைப்பான் என்றும் சொல்லியிருக்கிறார். அதோ முன்னே நடக்கிறார்களே அவர்கள் நீர் சொன்ன குணம் உடையவர்களானால், யோபு சொல்லுகிற மனுஷன் அவர்களைப்போல் இருக்கக்கூடாதே.

**பிசிநாறி.** எனக்குத் தோன்றுகிறபடி நாம் எல்லாரும் இந்தக் காரியத்தில் ஏகமனமுடையவர்களாய் இருக்கிறதினால், அதைப் பற்றிப் பேச்சை வளர்ப்பது அவசியம் இல்லை.

**பணவாஞ்சை.** அந்தப் பேச்சை நிறுத்தவேண்டும் என்பது சரிதான்; ஏனெனில் நாம் நம்முடைய அபிப்பிராயத்தை வேதத்துக்கும் புத்திக்கும் இசைவாகத் தீர்மானித்திருப்பதுபோல், எவனொருவன் தன் அபிப்பிராயத்தை ஸ்தாபியாமல் இருப்பானோ, அவன் தனக்குள்ள சுயாதீனத்தை அறியாமலும் தன் வாழ்வைத் தேடாமலும் இருப்பான்.

**உபா.** நாம் எல்லாரும் ஏகமாய்ப் பரலோக பிரயாணம் போகிறவர்களாய் இருக்கிறோமே; நாம் ஆகாமியத்திற்கு விலகிக்கொள்ளும்படியாக நான் ஒரு பொதுக்கருத்தை உங்களுக்கு எடுத்துச் சொல்லும்படி நீங்கள் உத்தரவுகொடுக்கவேண்டியது.

ஒரு குரு, அல்லது ஒரு வியாபாரி, அல்லது வேறு எவனாவது இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம்; அவனுக்கு முன்பாக, இந்த ஜீவனுக்குரிய மேலான பாக்கியங்கள் சில வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பாக்கியங்களை அவன் தேவபக்திக்குரிய சில காரியங்களில் வேஷம்போட்டால் அன்றி மற்றப்படி அடைந்துகொள்ள ஏதுவே இல்லை என்றும் வைத்துக்கொள்ளுவோம்; இப்படிப்பட்ட சமயத்தில் அவன் தேவபக்தியின் வேஷம் தரித்து அவைகளைச் சம்பாதித்துக்கொண்டு அத்தோடு நல்லவனாயும் இருப்பது தோஷம் ஆகுமோ?

**பணவாஞ்சை.** ஓகோ! உமது கேள்வியின் அர்த்தம் எனக்கு விளங்குகிறது; இந்தக் கனவான்களுடைய சம்மதிப்படி நான் அதற்குத் தகுமான உத்தரவை அமைத்துச் சொல்லுகிறேன் கேளும். முதலாவது: ஒரு குருவின் சம்பந்தமாய் நீர் சொல்லுகிறதைப்பற்றிப் பேசுவோம்; ஒரு குரு இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளும், அவருக்கு குருயோக்கியதை எல்லாம் இருந்தும், அற்ப வரும்படியுள்ள ஒரு சபையே கிடைத்திருக்கிறது. அவர் அதிக வருமானமும், செல்வாக்கும், அந்தஸ்தும் தருகிறதற்கு ஏதுவான ஒரு கோவிலையும், சபையையும்

காடுகிறபோது, அதுவும் தேவாதீனமாய் அகப்பட்டுக்கொண்டது போல் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம்; அச்சமயத்தில் அவர் அதிக ஆராய்ச்சிசெய்கிறதும், அந்தக்காலத்து ஜனங்களின் குணகுணத்துக்கு ஏற்றபடி அடிக்கடி பிரசங்கிக்கிறதும், வைராக்கியமாய் விளங்குகிறதும், சபையாரின் கருத்துக்கு இசைவாகத் தமது சொந்தத் தீர்மானங்களில் சிலதை மாற்றிக்கொள்ளுகிறதுமாய் இருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம்; இப்படிப்பட்ட ஒரு அழைப்பு தனக்கு இருக்குமானால், அந்தக் குரு இந்தப்படி செய்கிறதினாலே, அல்லது இதற்கு மிஞ்சி செய்தபோதிலும் தப்பிதம் என்று சொல்லக்கூடுமா? என் மனதுக்குத் தோன்றுகிறபடி அவர் இவையெல்லாவற்றைச்செய்துங்கூட நல்லவராய் இருக்கலாமே. — எப்படியெனில்:

1. அதிக வரும்படியுள்ள கோவில் உத்தியோகம் தேவாதீனமாய் அவருக்குக் கிடைக்கிறதானபடியால் அதை அவர் நாடுவது நியாயந்தான்; அது நியாயம் அல்ல என்று ஒருவரும் சொல்லக்கூடாது. மனச்சாட்சியின்மாத்திரம் அவருக்கு மயக்கம் இல்லையானால் சும்மா பெற்றுக்கொள்ளலாம்.

2. அதுவும் அல்லாமல், அதிக வரும்படியுள்ள கோவில் உத்தியோகத்தின்மேலுள்ள ஆசையானது அதிக ஆராய்ச்சிக்கும், அதிக வைராக்கியத்துக்கும், நல்ல பிரசங்கத்துக்கும் அவனை ஏவி எழுப்பி முன்னிலும் தேறினவராக்குகிறது; இவையெல்லாம் தேவசித்தந்தானே.

3. அந்தக் குரு ஜனங்களின் குணகுணங்களுக்குத்தக்கதாக தமது போக்கை மாற்றிக்கொள்ளுகிற விஷயத்தைப்பற்றிச் சொன்னால் அப்படி அவர் மாற்றுகிறதினாலே, 1-வது. தன்னை வெறுக்கிற, குணமுடையவர் என்றும்; 2-வது. மற்றவர்களைத் தனதுபண்ணிக்கொள்ளும் நேசகுணமுடையவர் என்றும்; 3-வது. குருமுறைக்கேற்ற அதியோக்கிய குணசாலி என்றும் தானே நன்றாய் விளங்குகிறார்.

4. ஆகையினாலே என் தீர்மானம் என்னவென்றால், ஒரு குரு அதிக வரும்படிக்காக, சொற்ப வரும்படியுள்ள சபையை விட்டுவிடுகிறது பொருளாசையினால் என்று தீர்ப்புச் சொல்லுவது நியாயமாய் இராமல், தனக்குக் கிடைத்த நற்காலத்துக்குத் தக்கதாகத் தன் உத்தியோகத்துக்கு அடுத்தவைகளைத் தேர்ச்சியாக்கி, சமயசமயப்போடு தன் அழைப்பில் முயற்சிசெய்கிறவர் என்றே சொல்லவேண்டியது.



இப்போது நீர் வியாபாரிகளையும் மற்றவர்களையும் குறித்துச் சொன்ன இரண்டாம் பாகத்தைக்குறித்து நான் சொல்லுகிறதைக் கேளும்: ஒரு மனுஷன் தாழ்ந்த உத்தியோகத்தில் இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம்; அவன் பக்தியுள்ளவனாகிறதினாலே தன் வாழ்வை வர்த்திக்கப்பண்ணக்கூடுமே; ஒருவேளை ஒரு பணக்காரியை விவாகம்பண்ணிக்கொள்ளலாம், அல்லது பணக்காரரான அதிகபேரை தன் கடைக்கு வாடிக்கைக்காரராகப் பிடித்துக்கொள்ளலாம்; இப்படிச் செய்கிறது தோஷம் அல்ல என்றே என் மனதுக்குத் தோன்றுகிறது; அதெப்படி என்று கேட்பீரோ?

1. ஒரு மனுஷன் எந்த உபாயங்களினால் ஆனாலும் சரி, அவன் பக்தியுள்ளவனாகிறது சற்குணந்தான்.

2. பணக்காரியைக் கலியாணஞ்செய்வதும், பெரியோரை வாடிக்கை பிடிப்பதும் அநியாயமா?

3. அதுவுமன்றி தேவபக்தியுள்ளவன் ஆகிறதினாலே, இவ்வளவு லாபத்தையும் சம்பாதித்துக்கொள்ளுகிற ஒரு மனுஷன், தானே நல்லவன் ஆகிறதினால் நல்லவர்களிடத்தில் உள்ள நல்லவைகளையே தனக்கு அகப்படுத்திக்கொள்ளுகிறான், அவனுக்கு நல்ல மனைவி அகப்பட்டிருக்கிறாள், நல்ல வாடிக்கைக்காரர் அகப்பட்டிருக்கிறார்கள், நல்ல லாபம் கிடைத்திருக்கிறது, இவையெல்லாம் அவன் பக்தியுள்ளவன் ஆகிறதினாலேதான் அகப்பட்டன; அந்த பக்தியும் நலமானதுதானே. ஆகலால் இந்த நன்மைகளை அடையும்படி ஒருவன் பக்தியுள்ளவனாகிறது நன்றாய் அநுகூலமுமான யோசனையாகவே இருக்கிறது.

உபாயி என்பவர் ஸ்தாபித்த கருத்துக்கு, பணவாஞ்சை என்பவர் விபரமாய்ச் சொல்லிய இந்தத் தாற்பரியம் கெட்டி, கெட்டி என்று அவர்கள் எல்லாராலும் புகழ்ந்துகொள்ளப்பட்டது. ஆதலால் அந்தக் கருத்து மொத்தத்தில் ஆரோக்கியமும், ஆதாயமுமான முறை என்று அவர்களால் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தை எதிர்த்து மடக்கிப்போட எவனாலும் கூடாது என்று அவர்கள் எண்ணிக்கொண்டபடியினாலும், கிறிஸ்தியானும் நிடகம்பிக்கையும் இன்னும் கூப்பிடு தூரத்துக்குள்ளேதான் போகிறபடியினாலும், விசேஷமாய் முன்னே அவர்கள் உபாயியை எதிர்த்துப் பேசினபடியாலும், சற்று எட்டி நடந்து அவர்களைப் பிடித்து, இந்தக் கேள்வியைப் போட்டு மடக்கிவிடவேண்டும் என்று ஏகமாய் யோசித்துக் கொண்டார்கள். அந்த யோசனையின்படியே இவர்கள், அவர்

உபாயியும் அவன் தோழரும் விசுவாசியைமடக்குதல்.

களை நின்றுபோகும்படிக் கூப்பிட்டார்கள்; அப்படியே இவர்கள் வந்து சேருமட்டும் கிறிஸ்தியானும் நம்பிக்கையும் நின்றார்கள். இவர்கள் அவர்களண்டை நடந்துபோகும்போதே ஒருவருக்கொருவர் சொல்லுகிறார்கள்: உபாயி என்பவனுக்கும் அவர்களுக்கும் விவாதம் கேளிட்டுப்போனதால், அவன் இனி அவர்களை மடக்கும் இந்தக் கேள்வியைப் போட்டால் எரிகிற கொள்ளிக்கு எண்ணெய்வார்த்தால்போல் இருக்கும்; ஆதலால் உலகப்பற்று என்பவர் கேட்டால்தான் நலம், அப்போது அவருக்குப் பழையபடி எரிச்சலோடு உத்தரவு சொல்லாமல் சாவதானமாய்ச் சொல்லுவார்கள் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டார்கள்.

அப்படியே அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்து ஒருவருக்கொருவர் வினவிக்கொண்டபின்பு, உலகப்பற்று என்பவன் அந்தக் கேள்வியைக் கிறிஸ்தியானுக்கும் அவன் கூட்டாளிக்கும் சொல்லி, இதற்கு மறுமொழி கொடுங்கள் பார்ப்போம் என்றான்.

கிறிஸ்தியான் அவர்களுக்குச் சொன்ன மறுமொழி.

அதற்குக் கிறிஸ்தியான் சொல்லுகிறான்: தேவபக்தியில் குழந்தையாய் இருக்கிறவன் முதலாய், இந்தமாதிரி பதினாயிரம் கேள்விகளுக்கு உத்தரவு சொல்லக்கூடும். யோவான் சுவிசேஷத்தில் சொல்லிய வண்ணம்[a] போஜனத்துக்காக இரட்சகரைப் பின்பற்றுவது நியாயம் அல்ல ஆனால், அவரையும் தேவ பக்தியையும் உலகத்தின் வாழ்வுகளைச் சம்பாதிக்கும்படி ஏறிப்போகிற குதிரையைப்போல வைத்துக்கொள்ளுகிறது எவ்வளவு அநியாயம் என்று சொல்லவேண்டியது. இப்படிப்பட்ட எண்ணம் அஞ்ஞானிகளுக்குள்ளும், மாயக்காரருக்குள்ளும், பிசாசுகளுக்குள்ளும், பில்லிசூனியக்காரருக்குள்ளும் இருக்கிறதாக நான் கண்டேனேயல்லாமல் மற்றவர்களுக்குள் நான் கண்டதில்லை.

முதலாவது: அஞ்ஞானிகள் இப்படி நினைக்கிறார்கள் என்று சொன்னேனே, அது எப்படி என்று கேளுங்கள். ஏமோருக்கும் சிகேமுக்கும் யாக்கோபின் மகள்மேலும் ஆடுமாடுகள்மேலும் நாட்டம் உண்டானபோது, தாங்கள் விருத்தசேதனம் பெற்றால் அன்றி அவைகளில் ஒன்றும் தங்களுக்குக் கிட்டாது என்று கண்டு, தங்கள் சிநேகிதரை நோக்கி: அந்த மனிதர் விருத்

[a] யோவா. 6. 26.



தசேதனம் பண்ணப்பட்டவர்களாய் இருக்கிறதுபோல, நம்மிலுள்ள ஆண்மக்கள் யாவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டால், அவர்களுடைய ஆடுமாடுகள், ஆஸ்திகள், மிருகஜீவன்கள் எல்லாம் நம்மோடு சேரும் அல்லவா? என்று சொன்னான். அவர்கள் விரும்பியதெல்லாம் யாக்கோபின் குமாரத்தியும் அவளுடைய ஆடுமாடுகளுமே. அவைகளைச் சம்பாதிக்கும்படி அவர்கள் ஏறிப்போன பக்தியின் குதிரையும் இதுதான்.[a]

இரண்டாவது: மாயக்காரராகிய பரிசேயரும் இப்படிப்பட்ட பக்தியுடையவர்கள்தான்; அவர்கள் வெளிக்கு நீண்ட ஜெபங்களைச் செய்வார்கள், உள்ளுக்கு எந்தக் கைம்பெண்ணின் வீட்டைக் கட்டைமண்ணாயும் குட்டிச்சுவரும் ஆக்கிவிடலாம் என்று கருத்துடையவர்களாய் இருப்பார்கள். இவர்கள்மேல் தேவன் அதிக ஆக்கினையைச் சுமத்தியிருக்கிறார்.[b]

மூன்றாவது: யூதாஸ் என்ற பிசாசும் இவ்விதப் பக்தியில் சேர்ந்தவன்தான். அவன் பணப்பையில் போடப்படுகிறதை அபகரித்துக்கொள்ளும்படியாகக் கருத்துக்கொண்ட பக்தனாய் இருந்தான். ஆகையால் அவனைப் பணப்பையின் பக்திமான் என்று சொல்லவேண்டியது; அவன் கைவிடப்பட்டு, புறம்பாகத் தள்ளப்பட்டு, கேட்டின் மகனாகக் கெட்டுப்போனான்.

நாலாவது: பில்லிசூனியக்காரனாகிய சீமோனும் இவ்விதப் பக்தியில் சேர்ந்தவன்தான். இவன் திரண்ட பணத்தைச் சம்பாதிக்கும்படியாகப் பரிசுத்த ஆவியானவர் தனக்கு வேண்டும் என்று விரும்பினான். அவனுக்குப் பேதுரு சொன்ன உத்தரவு தகுமானதுதான்.[c]

ஐந்தாவது: என் மனதில் இருக்கிற இன்னொரு தீர்மானம் ஒருக்காலும் மாறமாட்டாது. அதாவது: லோகவாழ்வுகளைச் சம்பாதிக்கும்படி தேவபக்தியைக் கருவியாகப் பிரயோகிக்கிறவன், லோகவாழ்வுக்காகத் தன் பக்தியை விட்டுவிடுவான். ஏனெனில் யூதாஸ் உலகத்தை நாடி பக்தியுள்ளவனானது எப்படியோ, அப்படியே உலகத்துக்காகத் தன் பக்தியையும் தன் எஜமானையும் விற்றேபோட்டான். ஆதலால் உங்கள் கேள்விக்கு நான் நினைக்கிறபடி நீங்கள் எல்லாரும் ஒத்துக்கொண்டபிரகாரம், ஆம், ஆம், அதுசரி என்று சொல்லுகிறதும், அது மெய்தான் என்று ஏற்றுக்கொள்ளுகிறதும், அஞ்ஞானமும், மாய்மாலமும், பேய்த்தனமுமாய் இருக்கின்றன. உங்களுக்குக் கிடைக்

[a] ஆதி. 34. 20–24. [b] லூக். 20. 46, 47. [c] அப். 8. 19–22.

கிற பலனும் உங்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாகவே இருக்கும் என்று சொல்லிமுடித்தான்.

அவர்கள் வெட்கப்பட்டுப் பேசாதது.

கிறிஸ்தியான் இப்படிச் சொல்லவே, அவர்கள் எல்லாரும் எதிர்வார்த்தை பேச சக்தியற்று, திருகத் திருக விழித்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு இருந்தார்கள். திடநம்பிக்கை என்பவரும் கிறிஸ்தியானுடைய தெளிந்த புத்தியுள்ள உத்தரவைக் கவனித்து அது சரி என்று ஒத்துக்கொண்டார். ஆகவே அனைவரும் கம்மென்று சற்றுநேரம் அமைதலாய் இருந்தார்கள். அப்புறம் கிறிஸ்தியானும் அவன் தோழனும் முந்திப் போகட்டும் என்ற மனம் உடையவர்கள்போல், உபாயியும், அவனுடைய தோழரும் மெதுவாய் நடந்தார்கள். அப்பொழுது கிறிஸ்தியான் தன் தோழனைப் பார்த்து: இவர்கள் மனிதருடைய நியாயத்தோரணைக்கு முன்நிற்கவே கூடாதானால் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு எப்படி எதிர்நிற்கக்கூடும்? களிமண்பாண்டங்களுக்கு முன்பாகக் கட்டைபோல் நிற்கிற இவர்கள், பட்சிக்கிற அக்கினிச்சுவாலை பற்றியெரியும்போது என்னசெய்வார்கள்! என்றான்.

## பிரயாணிகள் திரவியகிரி சேருதல்.

பிரயாணிகள் திரவியகிரி சேர்ந்தது.

அப்பால் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால்; கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் எட்டி நடந்து ஒரு மைதானத்தில் சேர்ந்தார்கள்; அதற்கு முசிப்பாற்றி[1] என்று பேர் வழங்கப்பட்டது. அங்கே வெகு சந்தோஷமாய் வழிநடந்து போனார்கள். அந்த வனம் மகா சுருக்கமானதாய் இருந்ததால், அவர்கள் சீக்கிரம் அதைக் கடந்துவிட்டார்கள். அந்த மைதானத்தின் முடிவில் ஒரு பரம்பு இருந்தது, அதற்குத் திரவியகிரி[2] என்று பேர். அதிலே ஒரு வெள்ளிச்சுரங்கம் இருந்தது. அதின் சிறப்பைப் பார்க்கும்படியாக ஆசைகொண்டு, அவ்வழியாய் முன்னே போன பலர், சுரங்கத்தின் விளிம்புமட்டும் போனதில், அதின் கீழுள்ள மண் எல்லாம் குடைந்து

1 முசிப்பாற்றி. இது சபை சமாதானத்தோடிருக்கும் காலத்தைக் குறிக்கிறது.

2 திரவியகிரி. இது லோக ஆதாயத்தைக் குறிக்கிறது. பண ஆசையினால் உண்டாகும் நஷ்டம் இன்னதென்று 1 தீமோ. 6. 10ல் சொல்லியிருக்கிறது.



போடப்பட்டதால் இடிந்து விழுந்து அவர்களில் சிலர் மாண்டார்கள்; சிலர் கால்கை ஒடிந்து பழைய சீருக்கு வராமல் சாகுமட்டும் முடவராய்ப் போய்விட்டார்கள்.

வெள்ளிக்கேணி, தேமாவின் அழைப்பு.

அந்தப் பாதைக்குச் சற்று தூரத்தில் வெள்ளிக்கேணிக்கு எதிராக, பிரபுவைப்போல் காணப்பட்ட தேமாஸ்[1] என்ற ஒரு மனிதன் பிரயாணிகள் வெள்ளிச்சுரங்கத்தை வந்து பார்க்கும்படியாகக் கூப்பிடுகிறதற்கு நின்றுகொண்டு இருக்கிறதை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அவன் கிறிஸ்தியானையும் அவன் கூட்டாளியையும் கண்டவுடனே, ஏகோ—கோ—ஓகோ—வாருங்கோ—வந்து பாருங்கோ! அதிசயம் காட்டுவேன் திரும்புங்கோ என்று சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

கிறி. அப்படி வழியைவிட்டுத் திரும்பிவந்து பார்க்கும்படியான அதிசயம் என்ன இருக்கிறது?

தேமா. இங்கே ஒரு வெள்ளிக்கேணி; சுத்த வெள்ளிக் கேணி இருக்கிறது; அநேகர் புதையல் எடுக்கும்படி தோண்டுகிறார்கள்; நீங்களும் வந்து கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தோண்டினால் கோடீஸ்வரர் ஆகிவிடுவீர்கள் என்றான்.

திடநம்பி. அப்படியானால் போய்ப் பார்ப்போமே என்று திடநம்பிக்கை சொன்னான்.

கிறி. நான் வரமாட்டேன்; இந்த இடத்தைக்குறித்து நான் முன்னமே கேள்விப்பட்டிருக்கிறேன்; அங்கே மாண்டவர்களுக்கு ஒரு கணக்கில்லை; அதுவும் அல்லாமல் அந்தப் புதையலைத் தேடிப்போகிறவர்களுக்கு அதுவே கண்ணியாய் இருக்கிறது; ஏனெனில் அவர்கள் பிரயாணத்துக்கு அது மெத்தத் தடையாய் இருக்கிறது என்று சொன்னான்.

அப்புறம் கிறிஸ்தியான் தேமாசைக் கூப்பிட்டு: அந்த இடம் மோசமானதல்லவோ? இது அநேக பிரயாணிகளைத் தடைசெய்துபோட்டதல்லவோ? என்று சொன்னான்.[a]

1 தேமாஸ். இவன் பவுல் அப்போஸ்தலனோடு சிலகாலம் தேவ ஊழியம் செய்துவந்து அப்புறம் லோக ஆதாயத்தை நாடி அதை விட்டுவிட்டான். இந்தக் காலத்தில் அநேகர் சர்க்கார் உத்தியோகத்தையும் அதிகச் சம்பளத்தையும் நாடி சுவிசேஷ பிரபலியத்துக்கடுத்த வேலையை விட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் மாற்றிக்கொண்ட ஊழியம் மகா நிர்ப்பந்தமானது என்று கடைசியாக உணருவார்கள்.

a ஓசி. 4. 16—19.

தேமா. அப்பொழுது தேமாஸ்: கவலையீனமாய் இருக்கிறவர்களுக்குத் தவிர, மற்றவர்களுக்கு அவ்வளவு மோசமானது அல்லவென்று மகா சத்தத்தோடு சொன்னான்.

கிறி. கிறிஸ்தியான் திடநம்பிக்கையைப் பார்த்து: நாம் நமது வழியே போவோமாக, அங்கே ஒரு அடிமுதலாய் எடுத்துவைக்கவேண்டாம் என்று சொன்னான்.

திடநம்பி. உபாயி இவ்விடம் வரும்போது, தேமாஸ் நம்மைக் கூப்பிட்டதுபோல அவனையும் கூப்பிடுவது மெய்யானால், அவன் போய் அதைப் பாராமல் இருக்கமாட்டான் என்று நான் சத்தியம் செய்யக்கூடும்.

கிறி. அதற்குச் சந்தேகம் இல்லை; அவன் கருத்து அந்த வழியாக அவனைக் கொண்டுபோகும் என்பது நிஜம்; அங்கேயே அவன் சாவான் என்பது நூற்றில் தொண்ணூற்றொன்பது பங்கு நிஜமே நிஜம் என்று சொல்லவேண்டியது என்றான்.

தேமா. அப்புறம் தேமாஸ்: நீங்கள் வந்து பார்த்துவிட்டுப் போகமாட்டீர்களாக்கும் என்று மறுபடியும் கேட்டான்.

கிறி. அப்போது கிறிஸ்தியான்: நீ செம்மைமார்க்கமாகிய இவ்வழிக்கு ஆண்டவரின் விரோதியாய் இருக்கிறாய்; அவருடைய நியாயாதிபதிகளில் ஒருவரால் நீ முன்னமே ஆக்கினைத் தீர்ப்படைந்து இருக்கிறாய்.[a] எங்களையும் அந்த அழிவுக்கு வரும்படி ஏன் தேடுகிறாய்? அதுவும் அன்றி, நாங்கள் வழியைவிட்டு அக்கம்பக்கம் விலகினால், ஆண்டவராகிய ராஜா அதைக் கேள்விப்படுவார்; அங்கே அவருக்கு முன்பாகத் தைரியமாய் நிற்கக்கூடிய நாங்கள், அவரால் வெட்கத்துக்கு உட்படவேண்டியதாய் இருக்கும் என்று தெளிவாய்ச் சொன்னான்.

தேமா. அதற்குத் தேமாஸ்: நானும் உங்களோடு சேர்ந்த ஒரு மோட்சபிரயாணிதான்; சற்றே தாமதித்தால் நானும் உங்களுடன் கூடிவருவேன் என்றும் சொன்னான்.

கிறி. அப்பொழுது கிறிஸ்தியான்: உன் பேர் என்ன? தேமாஸ்தானே.

தேமா. ஆம், என் பேர் தேமாஸ்தான்; நான் ஆபிரகாமின் புத்திரனாயும் இருக்கிறேன்.

கிறி. உன்னை அறிவேன், அறிவேன்; யூதாஸ் உன் தகப்பன், கேயாசு உன் பாட்டன் அல்லவா? அவர்களுடைய வழிகளை நீ பின்பற்றியிருக்கிறாய், இப்பொழுது நீ செய்கிற உபாயதந்திரங்கள் பிசாசுக்கடுத்தவைகள், உன் தகப்பன் துரோகத்தால் தூக்கப்பட்டான்; நீயும் அதற்கே பாத்திரனாய் இருக்கிறாய்.[a] நாங்கள் ராஜதரிசனை பெறும்போது நீ செய்த மோசத்தைக் குறித்துத் திட்டமாய்ச் சொல்லுவோம் என்று அறிந்துகொள் என்று சொல்லிவிட்டுத் தங்கள் வழியே போய்விட்டார்கள்.

[a] 2 தீமோ. 4. 10.



இதற்குள்ளாக உபாயியும், அவன் தோழரும் வருகிறது தூரத்தில் தெரிந்தது. அவர்களைத் தேமாஸ் கூப்பிட்டான். முதல் சத்தம் கேட்டவுடனே அவர்கள் தேமாசண்டை போனார்கள். அவர்கள் சுரங்கத்தின் கரையோரத்தில் போனவுடன் அது இடிந்து விழுந்ததால் மாண்டார்களோ, அல்லது உள்ளே போய்ப் புதையலைத்தான் தோண்டினார்களோ, அல்லது அதின் அடியிலிருந்து எழும்புகிற திரண்ட புகையினாலேதான் திக்குமுக்கிட்டுச் செத்தார்களோ என்பதைப்பற்றி எனக்கு ஒன்றும் நிர்ணயமாய்த் தெரியாது; ஆனால் ஒன்றைமாத்திரம் கவனித்தேன், அவர்கள் மறுபடியும் வழியில் தலைகாட்டவே இல்லை. அப்புறம் கிறிஸ்தியான்:

உபாயி முதலியவர்கள் முடிவு.

உபாயி என்பவனுமே
வெள்ளி தேசத்தேமாவோடே
பங்குபெறப் புதையலில்
ஒத்து இணங்கிப் போனார்கள்.
தேமாவும் நின்று கூப்பிட்டான்
அவனும் விரைந்தோடினான்
அங்கே முடிவாயிற்று
அப்பாலே செல்லார் முத்திக்கு

என்று பாடினான்.

இப்பொழுது நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால்; இந்த மைதானத்திற்கு அப்பால் ராஜவீதியோரமாய் நின்ற ஒரு பழைய ஞாபகச் சிலையண்டை பிரயாணிகள் இருவரும் வந்து சேர்ந்தார்கள்; அந்தச் சிலையின் உருவம் அவர்களுக்கு மகா விந்தையாகத் தோன்றினதால் அதைக் கண்டவுடன் இருவருக்கும் கலக்கம் உண்டாயிற்று. ஏனெனில் ஒரு ஸ்திரீ ஸ்தம்பரூபமாய் மாறிப்போனதுபோல் அது தோற்றப்

ஞாபகஸ்தம்பமும் அதின் வாசகமும்.

[a] 2 இரா. 5. 20—27. மத். 26. 14, 15: 27. 3—5.

பட்டது. ஆகையால் அவர்கள் அதின் ஓரம் நின்றுகொண்டு அதை உற்றுப்பார்த்து பிரமித்து, அதின் தாற்பரியம் என்னவென்று அறிந்துகொள்ளக்கூடாமல் இருந்தார்கள். கடைசியாக அதின் நெற்றியில், கை பழகாத ஒருவனால் எழுதப்பட்டதுபோல் காணப்பட்ட சில எழுத்துகளைத் திடநம்பிக்கை என்பவன் கண்டான். அவன் கல்லாதவனாய் இருந்தபடியால், படித்துத் தேறின வித்வானாய் இருந்த கிறிஸ்தியானைக் கூப்பிட்டு, அவனாவது அதின் கருத்தைக் கண்டுபிடிப்பானோ என்று கேட்டான். கிறிஸ்தியான் வந்து அவ்வெழுத்துகளை ஒவ்வொன்றாய்க் கூட்டிப்பார்த்து: "லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்" என்று எழுதப்பட்டு இருக்கிறதாக வாசித்தான்; உடனே அவர்கள் இருவரும் ஓகோ, லோத்து சோதோமில் இருந்து தப்பித்தபோது, அவன் மனைவி பொருள் ஆசையினாலே பின்னிட்டுத் திரும்பி உப்புத்தூண் ஆனாளே, இதுதான் அந்த உப்புத்தூண் என்று நிர்ணயமாய் அறிந்துகொண்டார்கள்.[a] அதிசயமாய்க் காணப்பட்ட இந்த விந்தையான காட்சி பின்வரும் சம்பாஷணைக்கு ஆஸ்பதம் ஆயிற்று.

கிறி. ஆ, என் சகோதரமே! இது காலத்துக்கேற்ற காட்சிதான்; திரவியகிரியைப் பார்க்கும்படி தேமாஸ் நம்மைக் கூப்பிட்ட சமயத்துக்குத் தகுந்தாற்போல இங்கே இது காணப்படுகிறது; அவன் நம்மை விரும்பி அழைத்தபடிக்கும், என் சகோதரனே நீ போகவேண்டும் என்று விரும்பிக் கூப்பிட்டபடிக்கும் நாம் போயிருந்தது மெய்யானால், நமக்குப் பின்வருகிறவர்களுக்கு எச்சரிப்பு உண்டாக நாமும் இப்படியே நிறுத்தப்பட்டு இருப்போம் என்று நான் நன்றாய் அறிவேன் என்று சொன்னான்.

திடநம்பி. நான் அத்தனை புத்தியீனனாய் இருந்ததைவிட்டு மிகவும் துக்கப்படுகிறேன்; லோத்தின் மனைவியைப்போல நான் சபிக்கப்பட்ட ஒரு ஸ்தம்பம் ஆகாமல்போனதை நினைத்து அதிசயப்படுகிறேன்; ஏனெனில் அவள் பாவத்துக்கும் என் பாவத்துக்கும் என்னபேதம் இருக்கிறது? அவள் பின்னிட்டு மாத்திரம் திரும்பினாள், நானோ போய்ப் பார்க்கும்படி ஆசைப்பட்டேன்; தேவகிருபைக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; இப்படிப்பட்ட ஆசை என் மனதில் வந்ததால் நானே வெட்கப்படுவேனாக என்று சொல்லி விசனப்பட்டான்.

கிறி. அதற்குக் கிறிஸ்தியான்: இனி நாம் எச்சரிக்கையாய்

a ஆதி. 19. 26.



நடந்துகொள்ளத்தக்கதாக இப்போது பார்க்கிறவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்வோமாக; இந்த ஸ்திரீ ஒரு தண்டனைக்குத் தப்பினாள், மறுதண்டனைக்குள் அகப்பட்டாள்; ஏனெனில் சோதோமின் அழிவுக்குத் தப்பின இவள் நாம் பார்க்கிறபடி இங்கே உப்புத்தூணாய் நிற்கிறாள் என்று சொன்னான்.

திடநம்பி. மெய், இவள் நமக்கு எச்சரிப்பும், அடையாளமுமாய் இருக்கலாம். நாம் அவளுடைய பாவத்துக்கு விலகிக்கொள்ளும்படிக்கு எச்சரிப்பாகவும், அவ்வெச்சரிப்பை உணர்ந்துகொள்ளாதவர்களுக்கு வரும் தண்டனைக்கு அடையாளமாகவும் அவள் நிறுத்தப்பட்டிருக்கிறாள். அப்படியே கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களும், அவர்களுடைய பாவத்திலே அதமான இருநூற்றைம்பதுபேரும் மற்றவர்களுக்கு எச்சரிப்பாய் இருக்கும்படியான அடையாளமாய் அல்லது திருஷ்டாந்தமாய் இருக்கிறார்கள்.[a] ஆனால் எல்லாவற்றிலும் என்னை பிரமிக்கச்செய்கிற ஒரு விஷயம் இருக்கிறது: அதென்னவென்றால், இந்த ஸ்திரீ தான் திரும்பிப்பார்த்த இடத்துக்கப்பால் ஒரு அடி முதலாய் எடுத்துவைக்கவில்லையே, அந்த இடத்திலேயே உப்புத்தூணாய்ப் போனாளே. அப்படி இருக்க இந்தத் தேமாசும் அவனுடைய தோழரும் அதைப்பார்க்கும்படி இவ்வளவு தைரியத்தோடே நாடிப்போகிறார்களே; அதிலும் விசேஷமாக, அவள் யாவருக்கும் திருஷ்டாந்தமாக உப்புத்தூணான இந்த ஸ்தம்பம் அவர்கள் கண்ணெட்டும் தூரத்துக்குள்ளேதான் இருக்கிறது; அவர்கள் சற்றே தங்கள் கண்களை ஏறிட்டுப்பார்த்தார்களானால் இதைக் கண்டுகொள்ளக்கூடுமே; இதுதான் என் மனதுக்குப் பலத்த யோசனையாய் இருக்கிறது என்றான்.

கிறி. அது ஆச்சரியப்படத்தக்க ஒரு காரியமாய்த்தான் இருக்கிறது; இந்தக் காரியத்தில் அவர்கள் இருதயம் முற்றிலும் சீர்கெட்டுப்போயிற்றென்றே வெளியாகிறது; இவர்களை யாருக்கு ஒப்பிடலாம் என்றால், நியாயாதிபதிக்கு முன்பாக நின்று முடிச்சு அவிழ்க்கிற திருடருக்கும், தூக்குமரத்தின்கீழ் நின்று கத்தரிக்கோலால் பணப்பைகளைக் கத்தரிக்கிற கள்ளருக்குந்தான் ஒப்பிடவேண்டியது. சோதோம் பட்டணத்தார் பஞ்சமாபாவிகள் என்று காட்டும்படியாக அவர்களுடைய பாவம் கர்த்தருடைய சமுகத்தில் பெரிதாய் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது அவர் அவர்களுக்குப் பல கிரு

a எண். 16. 31, 32; 26. 9, 10.

பைகளைச் செய்திருந்தும், அவருடைய முகத்துக்கு முன்பாகப் பாவஞ்செய்தார்கள்; ஏனெனில் சோதோமின் பூமி முன் இருந்த ஏதேன் என்னும் சிங்காரத் தோப்புபோல் இருந்தது.[a] இதுவே தேவகோபத்தை அவர்கள்மேல் அதிகரிக்கச்செய்து, கர்த்தருடைய அக்கினி வானத்திலிருந்து வந்தால் எவ்வளவு அழிவை உண்டாக்கக்கூடுமோ அவ்வளவு பெரிய வாதைகள் அவர்கள்மேல் இறங்கிற்று. நேமாகம் அவன் கூட்டாளிகளும் தங்கள் கண்களுக்கு முன்பாக எச்சரிப்புக்கென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற இவ்வகையான அடையாளங்களையெல்லாம் அசட்டைபண்ணி அவர்களைப்போல பாவஞ்செய்கிறபடியால், இவைபோலொத்த கடூரமான தண்டனைகளை அடையப் பாத்திரராய் இருக்கிறார்கள் என்று நிர்மாணமாகச் சொல்லவேண்டியது என்று சொன்னான்.

திடநம். அதற்குத் திடநம்பிக்கை: சந்தேகமில்லாமல் நீர் சத்தியத்தையே சொன்னீர் என்பது நிஜம்; ஆனால் நீராவது, விசேஷமாக நானாவது இந்தத் திருஷ்டாந்தமாய் இராதது எவ்வளவு பெரிய இரக்கம்! இந்த ஞாபகநிலை நாம் தேவனை ஸ்தோத்திரிக்கவும், அவருக்கு அஞ்சிநடக்கவும், எப்போதும் லோத்தின் மனைவியை நமக்கு நினைப்பூட்டவும் ஏதுவாய் இருக்கிறது என்று சொன்னான்.

## பிரயாணிகள் தேவநதி சேருதல்.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், பிரயாணிகள் இருவரும் தங்கள் வழியே நடந்து ஒரு இன்பமான ஆற்றண்டை வந்து சேர்ந்தார்கள். அந்த ஆறு தாவீது அரசனால் "தேவநதி" என்றும், யோவான் அப்போஸ்தலனால் "ஜீவத்தண்ணீருள்ள நதி"[1] என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது.[b] பிரயாணிகளின் பாதை அந்த ஆற்றங்கரைமேலே

[1] ஜீவதண்ணீருள்ள நதி. இது, ஞான ஜீவனின் ஊற்றாகிய பரிசுத்த ஆவியைக் குறிக்கலாம். அதில் பானம்பண்ணினார்கள் என்பது, பரிசுத்தமான அன்பினாலும் சந்தோஷத்தினாலும் நிறைந்திருப்பதையும், இவ்வுலகத்தின் கவலைகளையும் வருத்தங்களையும் தாண்டியிருப்பதையும் உணர்த்துகிறது.

[a] ஆதி. 13. 10–13.
[b] சங். 65. 9. வெளி. 22. 1. எசே 47. 1—9.



பிரயாணிகள் தேவநதியண்டை வந்து சேர்தல்.

போயிற்று; கிறிஸ்தியானும் அவன் தோழனும் இங்கே நடக்கையில், அவர்களுக்கு உண்டான சந்தோஷங்களுக்கு ஒரு அளவு இல்லை; அவர்கள் அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தார்கள், அதால் இளைத்த அவர்கள் ஆவி தழைத்துப் பலப்பட்டது; அதுவும் அல்லாமல் அவ்வாற்றின் இருகரைகளிலும் பலவித கனிகளைக் கொடுக்கும் அநேக விருட்சங்கள் பச்சென்று இருந்தன; அதின் இலைகளை அவர்கள் பிடுங்கித் தின்று பெருந்தீனியால் உண்டாகும் பல நோய்களையும், வழிப்பிரயாணத்தால் உண்டாகும் இரத்தக் கொதிப்புகளையும் தீர்த்துக்கொண்டார்கள். அதுவும் அல்லாமல், நதியின் இருபக்கங்களிலும் லீலியா புஷ்பங்கள் நிறைந்த புல் மைதானங்களும் இருந்தன. அது வருஷமெல்லாம் பசுமையாகவே காணப்பட்டது. இங்கே படுத்துக்கொள்ள ஏதுவாய் இருந்தபடியால் அவர்கள் இந்த மைதானத்தில் படுத்துத் தூங்கினார்கள்;[a] விழித்து எழுந்தவுடனே அந்த மரத்துக் கனிகளைப் பிடுங்கித் தின்று, ஆற்றின் தண்ணீரைக் குடித்து மறுபடியும் படுத்துத் தூங்குவார்கள்; அவர்கள் அநேக இரவையும் அநேக பகலையும் இப்படியே கழித்தார்கள்; அந்த இடத்தில் இருக்கும்போது அவர்கள் ஆனந்தபரவசங்கொண்டு,

1. பார் இன்ப நதிதான்
ஓடுதே பார்!
பளிங்கொளி போலதான்
தோணுதே பார்!
ராஜபாதையாக
நடப்பவருக்காக;
பார் இன்பநதிதான்
ஓடுதே பார்!

2. மைதானம் பச்சென்று
காணுதே பார்!
புஷ்பம் கம்மென்று
வீசுதே பார்!
ஆற்றோரத்து மரக்
கனி இலைகள் பார்!
ஆரோக்கியம் தரும்
அமிர்தமாம்.

[a] சங். 23. 2. ஏசா. 14. 30.

3. அவ்வின்பம் கண்டவன்
இப்பூமியை
வாங்கத் தனக்குள்ள
எல்லாம் விற்பான்;
ராஜபாதையாக
நடப்பவருக்காக
யா இன்பாறு தான்,
ஓடுதே பார்!

என்று பாடினார்கள். இம்மட்டோடு அவர்கள் பயணம் முடியவில்லை; அவர்கள் மறுபடியும் பிரயாணம்பண்ண மனங்கொண்டபோது, புசித்துக் குடித்துப் புறப்பட்டார்கள்.

## பிரயாணிகள் பக்கத்துவழி மைதானம் திரும்புதல்.

*அவர்கள் பக்கத்து வழி மைதானத்துக்குத் திரும்புதல்.*

அவர்கள் கொஞ்சதூரம் போகவே, வழி ஆற்றைவிட்டுப் பிரிகிறதுபோல கண்டார்கள். அதினால் அவர்களுக்கு உண்டான ஆயாசம் கொஞ்சம் அல்ல; என்றாலும் வழியைவிட்டு விலகவோ அவர்கள் துணிந்ததில்லை. ஆற்றுக்கு அப்பால் அந்த வழி மிகவும் கரடுமுரடாய் இருந்தது; இம்மட்டும் அவர்கள் நெடுந்தூரம்செய்த பிரயாணத்தினால் பாதம் நொந்துபோயிருந்ததுபோலவே, இந்த வழியையிட்டும் அவர்கள் மனம் தொய்ந்துபோயிற்று.[a] ஆதலால் அவர்கள் போகப்போக நல்ல பாதை கிட்டாதா என்று எண்ணிக்கொண்டே போனார்கள்; போகவே பாதையின் இடதுபக்கத்தில் ஒரு வயல்வெளியும், அதற்குப் போகும் ஒரு படிக்கட்டுப் பாதையும் காணப்பட்டது. அந்த வயல்வெளிக்குப் பக்கத்துவழி மைதானம்[1] என்று பேர். அந்தப் பாதையைக் கண்டபோது கிறிஸ்தியான் தன் தோழனைப்பார்த்து: இந்த மைதானம் நமது வழியின் ஓரத்தில் இருக்குமானால் அதைக் கடந்துபோவோமே என்று சொல்லிக்கொண்டு அதை அறியும்படி படிக்கட்டுப் பாதையண்டை போனான். அங்கே வெளிக்கு அப்பால் ஒரு பாதை தாங்கள் போகிற வழிக்கு அருகாமையாய்ப் போயிற்று. அதைக் கண்ட கிறி

1 பக்கத்துவழி மைதானம் என்பது, சத்தியபாதையிலிருந்து விலகுகிறதைக் குறிக்கிறது. மெய்க்கிறிஸ்தவர்கள் முதலாய் துன்பகாலத்தில் சிலவேளை சுருளவிழும்படியான சோதனைக்குள் படுகிறார்கள்.

[a] எண். 21. 4.



ஸ்தியான் தன் தோழனைப்பார்த்து: நான் நினைத்தபடியே இங்கே வழி இருக்கிறது, நிடம்பிக்கையே வாரும், இந்த இலகுவான பாதையாகவே போவோம் என்று கூப்பிட்டான்.

நிடநம். ஒருவேளை இந்தப் பாதை நம்மை வழியைவிட்டு விலகிப்போகப்பண்ணினால் என்ன செய்கிறது? என்று நிடம்பிக்கை சொன்னான்.

கிறி. அப்படி நாம் வழிவிலகிப்போவோம் என்பதுபோல தோன்றக்காணோம்; அதோ பாரும், இந்தப் பாதை வெளியோரமாய் நம்முடைய பாதையை அடுத்துத்தானே போகிறது!! என்று காட்டினான்.

அப்படியே நிடம்பிக்கை தன் சிநேகிதன் பேச்சுக்கு இணங்கி அவன் பின்னாலே சென்று, படிக்கட்டைக் கடந்து போனான். அவர்கள் வெளியோரமாய்ப் போன பாதையில் சேர்ந்த அந்த வழி கால்நடைக்கு வெகு லேசாய் இருந்தபடியால் மெத்த சந்தோஷத்தோடு நடந்துபோனார்கள்; சற்றுதூரம் போகவே, தங்களைப்போல் வேறொரு பிரயாணியும் அவ்வழியாய் முன்னாக்கு நடந்துபோகிறதை அவர்கள் கண்டார்கள். அவனுக்கு வீணுறுதி என்று பேர்.[2] அவனை அவர்கள் கூப்பிட்டு, இது எவ்விடத்துக்குப் போகிற வழி அப்பா என்று கேட்டார்கள். "இது உச்சிதபட்டணத்தின் அலங்காரவாசலுக்குப் போகிற பாதை" என்று அவன் சொன்னான். பார்த்தாயா? நான் சொன்னது சரி ஆயிற்று?[3] இதினாலே நாம் நேர்பாதையில் தான் இருக்கிறோம் என்று அறிந்துகொள்ளுகிறோம் என்று கிறிஸ்தியான் நிடம்பிக்கையைப் பார்த்துச் சொன்னான். அந்த வழியே முன்னே போகிறவன் பிறகாலே இவர்களும் நடந்து போனார்கள். இங்கே பொழுதும் அஸ்தமித்தது; காரிருள் ஆனது; முன்னே போனவனைப் பின்னே போகிறவர்கள் காணக்கூடாமல்போயிற்று.

1 சாத்தான் கிறிஸ்தவர்களை இழுக்கும்படி படிப்படியாய்ப் பிரயாசப்படுகிறான்.

2 வீணுறுதி என்பது, இருதயத்தில் தேவகிருபை இல்லாமலும் வெளிப்பிரகாரமாய்ப் பாவவழியில் நடந்தும், தாங்கள் மோட்சத்துக்குத்தான் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு சாக்கோபாக்கமாய்க் காலங்கழிக்கிறவர்களைக் குறிக்கிறது.

3 கிறிஸ்தவர்கள் தங்களுக்குச் சந்தேகமாய் இருக்கும் தப்பிதங்களை மற்றவர்களுடைய மாதிரியால் தப்பிதம் அல்ல என்று சொல்ல ஆயத்தமாய் இருக்கிறார்கள்.

வீணநம்பி முன்னே நடந்துபோகவே வழி தெரியாமல், தனக்குமுன் வெட்டப்பட்டிருந்த ஒரு ஆழமான குழியில் பொதிரென விழுந்தான். வீண் மகிமைகொண்ட மதிகேடரைப் பிடிக்கும்படியாகவே இப்படுகுழி அந்த மைதானத்துக்கு எஜமானால் வெட்டிவைக்கப்பட்டிருந்தது. அவன் விழுந்த விசையில் எலும்புவேறு சதைவேறாய்ச் சிதறிப்போனான்.

அவன் விழுந்த சத்தத்தைக் கிறிஸ்தியானும் நிடநம்பிக்கையும் கேட்டார்கள்; உடனே அவர்கள் ஏது விசேஷம் என்று சத்தமிட்டுக் கூப்பிட்டுக் கேட்டாலும், ஏங்கலையும் பெருமூச்சையுமேயன்றி வேறொரு மறுமொழியையும் கேட்கவில்லை. அப்போது நிடநம்பிக்கை தன் தோழனைப் பார்த்து: நாம் இப்போது எங்கே இருக்கிறோம் என்று கேட்டான். கிறிஸ்தியானோ: ஐயோ நாம் இவனை வழிவிலகப்பண்ணி இப்படி மோசமான இடத்துக்குக் கொண்டுவந்து விட்டோமே என்று கலங்கி, ஒன்றும் பேசாமல் மௌனமாய் இருந்தான். இந்த வருத்தத்தோடு வருத்தமாய் அச்சமயத்தில் பெருங்காற்று அடித்தது; கார் மேகங்கள் திரண்டன; மின்னல்கள் பளிச்சென்று வீசின; இடிகள் மட, மட என இடித்தன;[1] கடைசியாகக் கனத்த மழையும் பெய்தது. வெள்ளமும் புரண்டோடினது.

அப்பொழுது நிடநம்பிக்கை: ஆ! நான் என் வழியை விட்டுப் பிரியாதிருந்தேன் இல்லையே என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

கிறி. இந்த வழி இப்படி நம்மை மோசம்பண்ணும் என்று யார் நினைத்தது?

நிடநம். துவக்கத்திலேயே இந்த வழியைப்பற்றி எனக்கு அச்சம் தோன்றிற்று, ஆகையால்தான் சாந்தத்தோடு உம்மை எச்சரித்தேன்; நீர் என் வயதுக்கு மூத்திராதிருந்தால், அதை விடக் கண்டிப்பாய்ப் பேசியிருப்பேன்.

கிறி. நல்ல சகோதரனே, கோபித்துக்கொள்ளவேண்டாம். உன்னை வழிவிலகச்செய்ததற்காகவும், இவ்வளவு மோசமான நிலைமையில் சேர்த்ததற்காகவும் நான் மிகவும் துக்கப்படுகிறேன். சகோதரனே, எனக்கு மன்னிக்கும்படி உன்னை வேண்டுகிறேன், நான் தகாத நோக்கத்தோடு இப்படிச் செய்ததே இல்லை.

[1] இடிகள் என்பது, பாவத்துக்கு விரோதமாய் இடிமுழக்கமிடும் தேவனுடைய பிரமாணங்களை மீறிப்போட்டோமே என்று கிறிஸ்தியானும் நிடநம்பிக்கையும் பயந்த நினைவைக் குறிக்கிறது.



நிடநம். என் சகோதரனே, நீர் உமது மனதில் அதைக்குறித்துக் கலக்கமடையவேண்டாம், நான் மன்னித்துக்கொண்டேன்; இதுவும் நமக்கு ஒரு நன்மைக்காக இருக்கலாம்.

கிறி. இவ்வளவு தயாளகுணமுள்ள ஒரு சகோதரன் என்னோடிருக்கிறதற்காக நான் சந்தோஷப்படுகிறேன்; இனி நாம் இவ்விடத்தில் நிற்கலாகாது; திரும்பிப்போகலாம் வாரும்.

நிடநம். என் உத்தம நேசனே, நான் முந்தி நடக்கிறேன், நீர் பின்னாலே வாரும்.

கிறி. அல்ல, அல்ல உமக்கு மனமானால் நான் முந்திப்போகிறேன், ஏதாவது ஒரு மோசம் இருந்தால் நான் உம்மை வழியைவிட்டு விலகினபடியால், எனக்கு அது முதலாவது சம்பவிப்பது நியாயமாய் இருக்கும்.

பாதை விட்டு விலகுதல் ஆபத்தானது.

நிடநம். அப்படி அல்ல, நீர் முந்திப்போகக் கூடாது, ஏனெனில் உமது மனதில் இப்போது கலக்கம் இருக்கிறபடியால், மறுபடியும் பாதையை விட்டு விலகிவிடுவீர் என்று சொல்லிக்கொண்டிருக்கிற சமயத்தில் "நீ நடந்தவழியாகிய பாதையின்மேல் உன் மனதை வை; திரும்பு, இந்த உன்னுடைய பட்டணங்களுக்கே திரும்பு" என்று அவர்களுக்குத் தைரியம் உண்டாகும்படி பின்னை ஒரு சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். இதற்குள்ளாக வெள்ளம் பெருகி வழியை மறைத்துவிட்டதால் அப்புறம் போவது அதிக மோசத்துக்கு ஏதுவானதாகக் காணப்பட்டது. (அப்பொழுது நான்: நல்வழியை விட்டுத் தகாத வழியில் போய்விடுவது அதிக லேசாக இருந்தாலும், தகாத வழியிலிருந்து நல்வழிக்குத் திரும்ப வருவது எவ்வளவோ வருத்தம் என்று என் மனதில் எண்ணிக்கொண்டேன்.) என்றாலும் அவர்கள் திரும்பி நடக்கும்படியாகத் துணிந்து பிரயாசப்பட்டார்கள்; ஆனால் கனத்த இருளினாலும், கழுத்தளவு ஜலம் பெருகினபடியாலும், ஒன்பது பத்துத் தடவை அமிழ்ந்துபோகிறதுபோல[1] காணப்பட்டார்கள். அவர்கள் எவ்வளவு பிரயாசப்பட்டாலும் அன்றிரவு படிக்கட்டைச் சென்றுபிடித்துக்கொள்ளக் கூடாமல் போயிற்று. ஆகையால்

[1] ஒரு கிறிஸ்தவன் பாவத்தில் விழுந்துவிட்டால், அதிலிருந்து திரும்பிவருகிறது மகா பிரயாசை. அது இருட்டில் வழிதெரிவது போலும், வெள்ள ஆழமும் இருப்பதுபோல ஆற்றைக் கடப்பதுபோலுமாயிருக்கிறது.

விடியுமட்டும் என்று ஒரு அற்ப ஒதுக்கிலே[1] உட்கார்ந்து சற்று இளைப்பாறினார்கள். அவர்கள் அந்த இரவெல்லாம் பட்ட வருத்தங்களின் ஆயாசத்தால் அப்படியே தூங்கிவிட்டார்கள்.[2]

## அகோர பயங்கர ராட்சதன் பிரயாணிகளைப் பிடித்தல்.

அவர்கள் படுத்துத் தூங்கின இடத்துக்குச் சமீபத்திலேயே ஒரு அரமனை இருந்தது. அதற்குச் சந்தேகத் துருக்கம்[3] என்று பேர். இந்த அரண்மனையும் பிரயாணிகள் படுத்திருந்த பூமியும் அகோர பயங்கர ராட்சதன்[4] என்று அழைக்கப்பட்ட ஒரு அரக்கனுக்குச் சொந்தமாய் இருந்தது. அவன் மறுநாள் அருணோதயத்தில் எழுந்திருந்து தனது மைதானத்தில் அங்கும் இங்கும் உலாவி சுகத்தை அநுபவிக்கிற வேளையில், பிரயாணிகள் இருவரும் தன் நிலத்தில் நித்திரைபண்ணுகிறதைக் கண்டுகொண்டான். உடனே அவன் உக்கிரகோபத்தோடு முகத்தைச் சுளித்துக்கொண்டு, அவர்களண்டை போய், யார் இங்கே? எழும்புங்கள் என்று பெருஞ்சத்தம் போட்டான்; அவர்கள் துடிதுடித்து விழித்து எழுந்தார்கள். நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள்? என் பூமியில் என்ன செய்கிறீர்கள்? என்று ராட்சதன் கேட்டான்; அதற்கு அவர்கள்: ஐயா! நாங்கள் மோட்சபிரயாணிகள், வழிதப்பி உமது பூமியில் வந்துவிட்டோம் என்று

அகோர பயங்கர ராட்சதன் பிரயாணிகளைப் பிடிக்கிறான்.

[1] அற்ப ஒதுக்கு என்பது, அவர்கள் தங்கள் மனச்சாட்சியைச் சாந்தப்படுத்திக்கொண்ட ஏதோ ஒரு தப்பான அபிப்பிராயத்தைக் காட்டுகிறது.

[2] விடியுமட்டும் உட்கார்ந்து இளைப்பாறினார்கள் என்பது, அவர்கள் தங்கள் பழைய ஞான ஜீவநிலையை அடையும்படி சமயோசிதமான ஒரு காலம் வரட்டும் என்று இருந்ததைக் காட்டுகிறது.

தூங்கிவிட்டார்கள் என்பது, தேவபக்தியைப்பற்றி மனம்விட்டுப் போய், தங்கள் நிர்ப்பந்த ஸ்திதியைப்பற்றி எவ்வளவேனும் உணர்வில்லாதிருந்ததைக் குறிக்கிறது.

[3] சந்தேக துருக்கம் என்பது, மெய்க்கிறிஸ்தவர்கள் முதலாய் பாவத்துக்கு இடங்கொடுத்தபின்பு, தங்களுடைய ஆத்தும ரட்சிப்பைக் குறித்து பயந்து சந்தேகிப்பதைக் குறிக்கிறது.

[4] அகோர பயங்கர ராட்சதன் என்பது, எல்லா நம்பிக்கையும் அற்றுப்போகிறதைக் குறிக்கிறது. இது ஒரு பலத்த ராட்சதனைப் போல் அவிசுவாசிகளை கடைசியாகப் பிடித்துக்கொள்ளும்.



சொன்னார்கள். உடனே ராட்சதன் முன்னிலும் அதிக மூர்க்கமாகி, நீங்கள் எவ்வளவேனும் நம்மை மதியாமல் நமது பூமியில் வந்து அதைக் காலாகோலமாய் மிதித்து, கெடுத்து, அதிலே படுத்து உறங்கிப் பாழாக்கிப்போட்டீர்கள்; ஆகையால் நடவுங்கள், முன்னே நடவுங்கள் என்று ஓட்டினான். ராட்சதன் அவர்களைவிட அதி பராக்கிரமனானபடியால் அவர்கள் ஏதும் பேசாமல், அவனுக்கு முன்னே நடந்துபோனார்கள். மேலும் தப்பிதம் தங்கள்மேல் இருக்கிறதென்று உணர்ந்தபடியால் ஒன்றும் பேச அவர்கள் துணியவில்லை. ராட்சதன் அவர்களை நடத்திக்கொண்டு தன் கோட்டைக்குள் இருந்த ஒரு அரமனைக்குள் கொண்டுபோய் அடைத்துவைத்தான். அது மகா இருளும் நாற்றமுமுள்ள ஒரு கிடங்காயும், அவ்விருவருடைய மனதுக்கு எவ்வளவேனும் பொருந்தாத இடமாயும் இருந்தது. இவ்விடத்தில் அவர்கள் புதன்கிழமைக் காலைமுதல் சனிக்கிழமை இராவுமட்டும் அடைபட்டுக்கிடந்தார்கள். ஒரு பிடி அன்னமாவது, ஒரு சொட்டு ஜலமாவது அவர்களுக்கு அகப்படவில்லை; மின்மினிப்புழுவுக்கொத்த வெளிச்சமாவது அங்கே வீசவில்லை; என்னமாய் இருக்கிறீர்கள் என்று வந்து விசாரிப்பாரும் இல்லாதிருந்தார்கள். ஆகையால் அவர்கள் நிலைமை மகா நிர்ப்பந்தத்தில் இருந்தது. தங்கள் சிநேகிதருக்கும் அறிமுகமானவர்களுக்கும் விலகி வெகு தூரத்தில் இருந்தார்கள்.[2] இவ்விடத்தில் கிறிஸ்தியானுக்கு இரண்டுபங்கு துக்கம் இருந்தது. சிறைச்சாலையின் துன்பத்தோடு தம்முடைய விவேகத்தாழ்ச்சியினாலும் ஆத்திரப்புத்தியினாலுந்தானே இவ்வளவு சங்கடம் நேரிட்டதென்கிற கவலையும் அவனை வேதனைப்படுத்திற்று.

அவன் சிறையில் அடைக்கிறான். (புதன்.)

சிறைச்சாலையின் நிர்ப்பந்தங்கள்.

இந்த அகோரபயங்கர ராட்சதனுக்கு, கூச்சம்[1] என்னப்பட்ட ஒரு மனைவி இருந்தாள். அவன் அன்று படுத்துக்கொள்ளப் போகும்போது தன் மனைவியை நோக்கி: ஆ என் நேசக் கூச்சமே! இன்று பகல் நடந்த ஓர் சமாசாரத்தைக் கேள்; நமது

ராட்சதன் தன் மனைவியுடன் ஆலோசிக்கிறான்.

[1] கூச்சம் என்பது, தேவனுடைய வாக்குத்தத்தங்களைப்பற்றி உண்டாகும் அவநம்பிக்கையைக் குறிக்கிறது.

[2] சங். 88. 18.

பூமியில் இரண்டு பிரயாணிகள் படுத்திருந்தார்கள்; அவர்களை நான் கைபோடு பிடித்து, நமது காவற்கிடங்கு ஒன்றில் அடைத்து வைத்திருக்கிறேன் என்று சொல்லி, இன்னும் அவர்களுக்குச் செய்யவேண்டிய சிட்சை ஏதாவது உண்டானால், உன் கூச்சாலோசனையோடு சொல்லுவாயாக என்று கேட்டான். அது கேட்ட கூச்சம்: ஆ என் ராட்சதமன்னனே! அவர்கள் யார்? எவ்விடத்தார்? எங்கே போகிறார்கள்? என்று கேட்டாள். அதற்கு ராட்சதன்: சொல்லவேண்டியதைச் சொன்னான். அது கேட்ட கூச்சம் சொல்வாள்: நீர் அதிகாலையில் விழித்தெழுந்தவுடனே போய், அவர்கள் இருவரையும் இரக்கமில்லாமல் அடிக்கிறதைப்போல நல்ல யோசனை வேறொன்றில்லை என்று சிந்திக்கிறேன் என்றாள். அந்த ஆலோசனையின் பிரகாரம் ராட்சதன் மறுநாள் பலார் என்று விடிகிற சமயத்தில் எழுந்து, கணுக்கணுவாய் இருந்த ஒரு கனத்த தடியையும் எடுத்துக்கொண்டு, பிரயாணிகள் அடைபட்டிருந்த கிடங்கினுள்ளேபோய், உக்கிரகோபத்தோடு கூச்சலிட்டு, அவர்களை நாய்களைப்போலவே பாவித்து, மானபங்கமாய்த் திட்டினான். இப்படி அவன் திட்டும்படியாக அவர்கள் ஒரு வார்த்தையாகிலும் பேசினதே இல்லை. அப்புறம் அவன் அவர்கள்மேல் விழுந்து அடிதண்டமாய் அடித்தான்; அவர்கள் அவனை எதிர்த்து மடக்கவாவது, அக்கம்பக்கம் புரளவாவது சத்துவமில்லாமல் போனார்கள். அப்புறம் அவர்கள் தங்கள் நிர்ப்பந்தஸ்திதியைப்பற்றிப் புலம்பவும், தங்களுக்கு உண்டான வருத்தத்தை உணர்ந்து துக்கிக்கவும் தனியே விட்டுப் போட்டுப் போய்விட்டான். ஆகவே அந்த நாள் முழுவதையும் அவர்கள் பெருமூச்சுவிடுகிறதிலும் அங்கலாய்த்து ஏங்குவதிலுமே கழித்தார்கள்.

வியாழக்கிழமை அவர்களை அடிக்கிறான்.

மறுநாள் இரவு கூச்சம் அவர்களைக்குறித்துத் தன் மணாளனிடத்தில் விசாரித்தபோது, அவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு: என் கணவரே! நீர் நாளையத்தினம் அதிகாலையில் போய், அவர்கள் தங்கள் உயிரை தாங்களே மாய்த்துக்கொள்ளும்படியாக ஆலோசனை சொல்லும் என்று சொல்லிக்கொடுத்தாள். அதின்படியே அகோர பயங்கர ராட்சதன் மறுநாள் அருணோதயத்தில் எழுந்து புறப்பட்டு, அவர்களண்டை முன்போல கோபாக்கினியோடு போய் தான் முந்தினநாள் அடித்த அடிக

வெள்ளிக்கிழமை ராட்சதன் மனைவி சொன்ன ஆலோசனை.



ளால் அவர்கள் படுகாயப்பட்டு, படுத்த இடம் போகாமல் கிடக்கிறதைக் கண்டு, அவர்களைக் கூப்பிட்டு, நீங்கள் இந்தக் கிடங்கைவிட்டு வெளியேறப் பிரியம் இல்லாதிருக்கிறபடியால், ஒரு கத்தியால் குத்திக்கொண்டாவது, கயிற்றால் நான்றுகொண்டாவது, விஷநாவியால் நஞ்சிட்டாவது உங்கள் உயிரை மாய்த்துக்கொண்டாலன்றி வேறு வழி உங்களுக்கு இல்லை. உங்கள் ஜீவன் இவ்வளவு கசப்பாய் இருக்கிறதென்று நீங்கள் கண்டும், அதைக் காப்பாற்றிக்கொள்ளக் கருத்தாய் இருப்பதினால் என்ன பலன்? என்று சொன்னான். ஆனால் அவர்கள் தங்களை அனுப்பிவிடும்படி அவனைக் கேட்டார்கள்; உடனே அவன் தன் முகத்தைச் சுளித்துக்கொண்டு, சீற்றத்தோடு அவர்கள்மேல் பாய்ந்தான்; பாயவே வெயில் காலத்தில் அவனுக்கு வழக்கமாய் வருகிற வலிப்பு வந்துவிட்டது.[1] இந்த வலிப்புமாத்திரம் வராவிட்டால் அவர்களைத் தப்பாமல் கொன்றுபோட்டிருப்பான். வலிப்பு வந்துவிட்டதால் அவன் நிதானம் தப்பி தொப்பென்று விழுந்து, கை கால் விளங்காமல் கிடந்தான்; ஆதலால் அவன் அவர்களை முன்போல் கிடங்கில் விட்டுவிட்டு, இன்னும் இவர்களை என்னசெய்யலாம் என்று ஆலோசிக்கும்படி போய்விட்டான். அவன் போனவுடனே அவர்கள் இருவரும்: நாம் அகோரபயங்கர ராட்சதனுடைய தீர்மானத்தின்படி செய்யலாமா, செய்யக்கூடாதா என்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள்.

தற்கொலை செய்துகொள்ள ராட்சதன் கட்டளையிடுகிறான்.

**கிறி.** கிறிஸ்தியான் தன் தோழனைப் பார்த்து: தம்பி! நாம் இனி என்னசெய்யலாம்?[2] இந்தப் பிழைப்பைப்போல நிர்ப்பந்தமான பிழைப்பு இல்லையே; இப்படியே காலத்தைத் தள்ளிவிடலாமோ, அல்லது நாமே நமது உயிரை மாய்த்துக்கொள்ளலாமோ என்பதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

கைதிகளின் ஆலோசனை.

---

[1] ராட்சதனுக்கு வலிப்பு வருகிறது என்பது, மகா நிர்ப்பந்த நிலைமையில் இருக்கும்பொழுதும் விசுவாசிகள் முற்றிலும் திகைத்துப் போய்விடாதபடி தேவனாலேயே சில ஆறுதல்களை அடைகிறார்கள் என்பதைக் குறிக்கிறது.

[2] கிறிஸ்தவர்கள் பாவத்தின் நிமித்தம் வெகுவாய் மனம்கசந்து பச்சாதாபப்படுகையில் தற்கொலைசெய்துகொள்ளுவோமா என்று எண்ணும் சோதனைக்குள் படுகிறதும் உண்டு.

இப்படியே நாளைத் தள்ளாமல் நான்றுகொண்டு சாவதற்கே என் ஆத்துமா விரும்புகிறது; இந்தச் சிறைச்சாலையைவிட கல்லறைக் குழியையே என் மனம் தெரிந்துகொள்ளுகிறது.[a] ஆதலால் ராட்சதனுடைய யோசனையின்படியே செய்வோமா, என்ன? என்று கேட்டான்.

திடநம்பி. அதற்குத் திடநம்பிக்கை சொல்லுகிறான்: இப்பொழுது இருக்கிற நம்முடைய ஸ்திதி பயங்கரமானது என்பது நிஜந்தான். இப்படி எக்காலமும் அவதிப்படுவதைப்பார்க்கிலும் சாவே எனக்குச் சந்தோஷமாய் இருக்கிறது. ஆனால் நாம் நாடிப்போகும் நாட்டின் ஆண்டவர் "கொலை செய்யாதிருப்பாயாக" என்று ஆக்கியாபித்து இருக்கிற கட்டளையைச் சற்றே கவனித்துக்கொள்ளுவோமாக. நாம் மற்றவர்களைக் கொல்லக்கூடாதென்று கட்டளையிடப்பட்டு இருக்குமானால், அவன் பேச்சைக்கேட்டு நமது உயிரை நாமே மாய்த்துக்கொள்ளக் கூடாது என்றும் கட்டளையிடப்பட்டு இருக்கிறது என்றும் உணர்ந்துகொள்ளவேண்டியது. மேலும் மற்றவர்களைக் கொலைசெய்தவன் அவனுடைய சரீரத்தைக் கொன்ற கொலையை மாத்திரம் கட்டிக்கொள்ளுகிறான், ஆனால் தன்னைத்தானே கொன்றுகொண்டால் அது சரீரத்தையும் ஆத்துமாவையும் ஒருமிக்கக் கொலைசெய்கிறதாய் இருக்கிறது. அதுவும் அன்றி என் சகோதரமே, நீர் கல்லறையில் அல்லல் இல்லாமல் கிடப்பதை நினைத்தீரே, கொலைகாரர் எல்லாரும் போய்ச்சேருகிற நரகபாதாளத்தை மறந்துபோனீரோ? ஏனெனில் கொலைபாதகன் ஒருவனுக்கும் நித்தியஜீவனில் பங்கில்லை. அதுதவிர நாம் பின்னும் யோசிப்போமே; சர்வ அதிகாரமும் அகோரபயங்கரராட்சதனுடைய சக்கரத்துக்குள்ளாக இருக்கிறதில்லையே; நம்மைப்போல் எத்தனையோபேர் இந்த அரக்கன் கையில் அகப்பட்டு அடைபட்டாலும், மறுபடியும் அவன் கைக்குத் தப்பிப்போய் இருக்கிறார்கள் என்று நான் அறிந்திருக்கிறேன். அண்டசராசரங்களையும் படைத்த ஆண்டவராகிய தேவன் இந்த அகோரபயங்கரராட்சதனைக் கொன்றாலும் கொல்லலாமே, யாருக்குத் தெரியும்? அல்லது எப்போதாவது ஒருவேளை அவன் நம்மைச் சாத்தாதபடிக்கு மறந்துபோய்விடச் செய்தாலும் செய்யலாமே; அல்லது நமக்கு முன்பாக முன்வந்த வலிப்புப்போல் வந்து அவன் கால் கைகளை முடக்கிப்போட்டாலும் போடலாமே,

a யோபு. 7: 15.



அதை யார் அறிவார்? மறுபடியும் எப்போதாவது அப்படிப்பட்ட வலிப்பு வந்தது மெய்யானால், நான் உடனே ஆண்பிள்ளையைப்போல் தைரியங்கொண்டு அவனுடைய கைக்குத் தப்பும்படி ஒரு கை பார்க்கலாம் என்றுதான் என்மட்டுக்குத் தீர்மானம்பண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் ஒரு மூடன் என்றே சொல்லவேண்டும்; அன்றைக்கு வலிப்பெடுத்து விழுந்தானே, அப்போதே தப்பி ஓட பிரயத்தனப்பட்டேன் இல்லை; எப்படி இருந்தபோதிலும் என் உத்தம சகோதரமே! நாம் சிலகாலம் பொறுமையாயிருந்து, வரும் கஷ்டத்தை எல்லாம் சகித்துக்கொள்ளுவோமாக; நாம் சந்தோஷத்தோடே வெளிபெயரும்படியான நற்காலம் பிறக்கும்; நம்முடைய உயிரை நாமே மாய்த்துக்கொள்ளுகிற கொலைபாதகர் ஆகவேண்டாம் என்று சொன்னான். இந்த வார்த்தைகளால் திடநம்பிக்கை கிறிஸ்தியானுக்கு உண்டாகிய கொதித்த மனதைக் குளிரப்பண்ணினான். ஆதலால் இருபேரும் அன்றையத்தினமும் முன்போல, துக்கமும் மனநோவுமான ஸ்திதியோடு அந்த இருட்டறையில் இருந்தார்கள்.

பொழுது சாய்கிற வேளையில் ராட்சதன் மறுபடியும் அவ்விருவரும் இருந்த கிடங்குக்குப் போய், தன் ஆலோசனையின்படி அவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டார்களோ இல்லையோ என்று பார்த்தான். பார்க்கவே அவர்கள் பின்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்று கண்டுகொண்டான். என்ன உயிர் அதை [illegible] அன்னபான தண்ணீர் இல்லாமையினாலும் அடிபட்ட காயங்களினாலும் அவர்களுக்கு மூச்சுவிடப் பலம் இருந்ததே ஒழிய, வேறுபலம் இருந்ததில்லை. எப்படியும் அவர்களுக்கு உயிர் இருந்தது; அதைக் கண்டு ராட்சதன் கோபாக்கினியால் பொங்கி, நீங்கள் என் ஆலோசனையின்படி செய்யாதபடியினால், உங்களுக்கு ஒருக்காலும் சம்பவியாத கேட்டைப்பார்க்கிலும் பெருங்கேடு சம்பவிக்கும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அதைக் கேட்டவுடனே அவ்விருவருக்கும் உண்டான நடுக்கத்துக்கு ஒரு அளவு இல்லை. கிறிஸ்தியான் மயங்கி விழுந்து விட்டான்போல தோன்றுகிறது; அப்புறம் அவன் சற்று தெளிவடைந்து, மறுபடியும் ராட்சதனுடைய ஆலோசனையைக் குறித்து இருவரும் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். கிறிஸ்தியானுக்கு இந்த சங்கடத்தைப் படுவதைப்பார்க்கிலும் உயிரை மாய்த்துக்கொள்ளுகிறதே நலம் என்று காணப்பட்டது. ஆனால்

திடநம்பிக்கையோ அதற்கு இணங்காமல், இந்த இரண்டாம் உத்தரவை அவனுக்குச் சொல்லுகிறான். எப்படியென்றால்:

நிறைநம்பி. என் உத்தம சகோதரனே, இதுமட்டும் நீர் எவ்வளவு வீரனாய் விளங்கினீர் என்பதை நினைத்தீர் இல்லையோ? அப்பொல்லியோன் முதலாய் உம்மை அடக்கக்கூடாமற்போயிற்று; அவனை நீர் அதோகதியாக்கிவிட்டீர்; மரண நிழலின் பள்ளத்தாக்கில் நீர் கேட்ட கெடுதிகளும் பார்த்த பயங்கரங்களும் உம்மை அசைக்கக்கூடாமல்போயிற்று; இதுமட்டாக நீர் சகித்த சங்கடங்கள் எவ்வளவு? பயங்கரங்கள் எவ்வளவு? அதிசயங்கள் எவ்வளவு? இப்பொழுது உமக்குப் பயமா கெதி? அபாயத்தின்படி உம்மிலும் பலவீனனாய் இருக்கிற நான் உம்மோடேகூடக் கிடங்கில் இருக்கிறதைப் பார்க்கிறீரே; அந்த ராட்சதன் உம்மைப்போல என்னையும் பங்கப்படுத்தினனே; உம்மைப்போல நானும் அன்னந்தண்ணீர் இல்லாமல்தானே இருக்கிறேன்; உம்மைப்போல நானும் இந்தக் கிடங்கின் காரிருளுக்குள் காலங்கழிக்கிறேனே; ஆகையால் நாம் இன்னும் கொஞ்சக்காலம் பொறுத்துக்கொள்ளுவோமாக. மாயாபுரிச் சந்தையில், நீர் எவ்வளவு புருஷலட்சணம் காண்பித்தீர் என்பதை நினைத்துக்கொள்ளும்; அங்கு நீர் விலங்குகளையாவது, கூண்டையாவது, பயங்கரமான மரணத்தையாவது ஒரு பொருட்டாக எண்ணவில்லையே; ஆதலால் எந்தக் கிறிஸ்தவனுக்கும் நேரிடக்கூடாத வெட்கம் நமக்கு வந்து நேரிடாதபடிக்கு நம்மால் ஆனமட்டும் பொறுத்துக்கொள்ளுவோமாக என்றான்.

அன்று இரவு ராட்சதன் தன் மனைவியோடே தனி அறையில் இருக்கையில், அவள் மறுபடியும் இந்தக் கைதிகளைப்பற்றி அவனிடத்தில் விசாரித்து, அவர்கள் தன் ஆலோசனையின்படி தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டார்களா, இல்லையா என்று கேட்டாள். அதற்கு அவன் சொல்லுகிறான்: அவர்கள் முரட்டுக்குணமுள்ள திருட்டுப்பயல்கள்; தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளுவதைப் பார்க்கிலும், வந்ததை எல்லாம் சகிக்கும்படி துணிந்திருக்கிறார்கள் என்றான். அதற்கு அவள்: அப்படியானால் நீர் நாளையதினம் அவர்களை அரண்மனை கொல்லைப்புறத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய் இதுமட்டும் உம்மாலே கொலைசெய்யப்பட்டிருக்கிறவர்களின் எலும்புகளையும் மண்டையோடுகளையும் காண்பித்து,[1] இன்னும் ஒரு கிழமைக்குள்

[1] இது, அவர்கள் யூதாஸ்காரியோத்தையும் மற்றவர்களையும்போல தங்கள் பாவங்களிலேயே சாகும்படிப் போதிக்கப்பட்டதைக் குறிக்கிறது.



ளாக முன்பினை அவர்கள் கூட்டாளிகளுக்குச் செய்யப்பட்டதுபோல் இவர்களையும் சந்துசந்தாய்க் கிழித்துப்போடுவதாய்ப் பயமுறுத்தி, அவர்கள் மனதில் நன்றாய்ப் படும்படி சொல்லும் என்று சொன்னாள்.

அப்படியே மறுநாள் கிழக்கு வெளுத்தவுடனே ராட்சதன் எழுந்திருந்து கைதிகளண்டை போய், தன் மனைவி தனக்குச் சொன்னபடியே அவர்களைக் கூட்டிக்கொண்டு அரண்மனை கொல்லைப்புறம்போய், அவர்களுக்குக் காட்டவேண்டிய எலும்புக்குவியல்களை எல்லாம் காட்டுகிறான்; காட்டுகிறபோதே அவன் சொல்லுகிறான்:

ராட்சதன் எலும்புக்குவியலைக் காட்டி பயப்படுத்துகிறான்.

உங்களைப்போலவே முன்னொருகாலத்தில் பிரயாணம்போன மோட்சபிரயாணிகளில் பலர், உங்களைப்போலவே நியாயமின்றி என் பூமியில் நுழைந்தார்கள்; அவர்களை என் மனதுக்கேற்ற சமயத்தில் சந்துசந்தாகக் கிழித்துவிட்டேன். அப்படியே உங்களை இன்னும் பத்துநாளைக்குள்ளாகச் செய்யவே செய்வேன்; கிடங்கில் போய்க் கிடங்கள் என்று சொல்லி அடித்தடித்துத் துரத்திக்கொண்டு கிடங்குக்குள் சேர்த்தான். ஆகையால் அவர்கள் சனிபகல் முழுவதும் முன்போல் புலம்பித் தவித்துக்கொண்டே இருந்தார்கள். அன்று இரவாகி ராட்சதனும், கூச்சமும் தங்கள் பள்ளியறைக்குப் போனபோது திரும்பவும் இந்தக் கைதிகளைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அந்தக் கிழ ராட்சதன் அதிசயத்தோடு சொல்லுகிறான்: ஆ, என் நேசக்கூச்சமே! நான் எவ்வளவாய் அடித்தாலும் எப்படி ஆலோசனை சொன்னாலும் அவர்கள் சட்டைபண்ணக்காணோம், இதுவே எனக்கு அதிசயமாயிருக்கிறது என்றான். அதற்கு அவள் சொல்லுகிறாள்: ஓ! அதிவீரபராக்கிரம ராட்சதரே! கேளும், அடியாளுக்கு அவர்களையிட்டு ஒரு அச்சம் தோன்றுகிறது; யாரோ ஒருவர் வந்து அவர்களை விடுதலையாக்குவார் என்கிற நம்பிக்கையோடு இருக்கிறார்களாக்கும்; அல்லவென்று, அவர்கள் மடிக்குள்ளே பல மாதிரியான திறவுகோல்கள் இருக்கிறதாக்கும்; அதைக்கொண்டு திறந்து, வெளியேறிவிடலாம் என்ற தைரியத்தோடு இருக்கிறார்களாக்கும் என்று சொன்னாள். உனக்கு அப்படியா தோன்றுகிறது? என் நேசகூச்சமே! உனக்கு அப்படியாகவா தோன்றுகிறது? பொறுத்தது பொறுத்தோம், இனி விடியுமட்டும் பொறுப்போம்; விடிந்தவுடன் நான் போய் அவர்கள் மடிகளைப் பரிசோதனை செய்துபோடுகிறேன் என்று சொல்லி முடித்தான்.

காரியம் இப்படியிருக்கவே, கைதிகள் இருவரும் சனிக்கிழமை அர்த்தராத்திரிபோல் ஜெபம்செய்யத்தொடங்கி, கொஞ்சங்குறைய விடியுமட்டும் ஜெபம்செய்துகொண்டிருந்தார்கள். விடிகிறதற்கு சற்றுமுன் கிறிஸ்தியான் ஏதோ ஒரு பேராச்சரியம் கண்டவன்போல, படபடப்போடு பேசிச் சொல்லுகிறான்: நான் தடையின்றி வெளியே போய் ஒரு ஆனையைப்போல உலாவுகிறதற்கு வழி இருக்கும்போது, இந்த நாற்றம்பிடித்த இருட்டறையில் நாளெல்லாம் கிடக்கிற என்னைப்போல் பைத்தியக்காரன் உண்டா? என் மடிக்குள்ளே வாக்குத்தத்தம்[1] என்று பேர் வழங்கப்படுகிற திறவுகோல் இருக்கிறது; அதைக்கொண்டு சந்தேகத் துருக்கத்தின் எந்தப் பூட்டையும் திறந்துவிடலாம் என்பதற்குத் தடையில்லையே என்றான். அப்படியானால் அதைப்போல் சந்தோஷசெய்தி வேறொன்றும் இல்லை; இனி வேறு யோசனை என்னத்துக்கு, மடியில் இருக்கிற திறவுகோலை எடுத்துத் திறவும் என்று திடநம்பிக்கை சொன்னான்.

சூரிய விடியற்காலத்தில் பிரயாணிகள் அவ்விடத்தினின்று தப்ப வழியைக் கண்டுபிடித்தார்கள்.

அப்படியே கிறிஸ்தியான் எடுத்து, சிறைச்சாலையின் கதவுகளை ஒவ்வொன்றாய்த் திறந்தான். திறவுகோலைத் திருப்பினவுடனே தாழ்ப்பாள்கள் எல்லாம் தானாய்த் திறக்கிறதுபோல லேசாக விலகிவிட்டது. உடனே கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் கிடங்கைவிட்டு வெளியே வந்தார்கள்; அப்புறம் அரமனை முற்றத்துக்குப் போகும் வெளிவாசலின் கதவை கிறிஸ்தியான் திறந்தான்; அதுவும் திறந்துவிட்டது. அதைக் கடந்து கடைசியாகத் திறக்கவேண்டிய இரும்புக் கதவண்டை போனார்கள். அதின் பூட்டுத் துருப்பிடித்து வெகு சிக்குப்பட்டு இருந்தது; என்றாலும் திறவுகோல் அதையுந்திறந்துவிட்டது. கதவு படார் என்று திறந்தபோது, கிறீச் என்று ஒரு இரைச்சல் உண்டாயிற்று; அந்த இரைச்சல் அயர்

கதவின் சிறைச்சாலையை திறந்து தப்பி ஓடுதல்.

[1] வாக்குத்தத்தம் என்னும் திறவுகோல்: இது, விசுவாசிக்கிற ஒவ்வொருவனுக்கும் நித்திய ஜீவன் உண்டென்று சொல்லப்பட்ட கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களைக் குறிக்கின்றது. கிறிஸ்தியான் அதை மறந்துபோனான். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்ற வாசகம் இரட்சிப்பைப்பற்றித் திகைக்கும் ஒவ்வொருவனையும் உற்சாகப்படுத்தப் போதுமானதாய் இருக்கவேண்டியது.



ந்து தூங்கின ராட்சதன் காதுக்குள் சற்று ஏறி எழுப்பினதுபோல் ஆயிற்று. அவன் அவசரமாய் ஓடி, கைதிகளைப் பிடிக்கும்படி குதித்து எழும்பப்போனான்; ஆனால் அவன் கை, கால் வழங்கவில்லை; அவனுடைய பழைய வலிப்பு வந்துவிட்டது; ஆகையால் அவர்களைப் பின்தொடர்ந்து பிடிக்கக்கூடாமல் போயிற்று. அப்புறம் அவர்கள் சற்றுதூரம் வழிநடந்து, ராஜபாதையில்[1] மறுபடியும் வந்து சேர்ந்துகொண்டார்கள். அகோர பயங்கர ராட்சதனுடைய அரசாட்சிக்கு உட்பட்ட பூமியை அவர்கள் கடந்துவிட்டதால், அப்புறம் அவனால் அவர்களுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடக்கூடாதிருந்தது.

பிரயாணிகள் இருவரும் அகோர பயங்கர ராட்சதனுடைய ஆளுகையின் பூமிக்குள் திரும்பின படிக்கட்டை ஏறி, ராஜபாதையில் சேர்ந்தவுடனே: இனி பயணம்பண்ணி வரும் பிரயாணிகள் சந்தேக துருக்கத்தின் கைதிகளாகிவிடாதபடி, என்ன பிரயத்தனம் செய்யலாம் என்று இருவரும் ஆலோசித்தபோது, அந்த இடத்தில் ஒரு ஸ்தம்பம் எழுப்பி, அதில் பிரயாணிகளுக்கு எச்சரிப்பு உண்டாக சில வரிகளை எழுதிவைப்பது உத்தமம் என்று தீர்மானித்தார்கள். அத்தீர்மானப்படியே, படிக்கட்டு அண்டை அவர்கள் ஒரு ஸ்தம்பம் நிறுத்தி அதின்மேல்:

இந்தப் படிக்கட்டுப் பாதையை,
பயங்கர ராட்சதன் கட்டி இருக்கிறான்;
இப்படி ஏறி நீ போனால்,
சந்தேக துருக்கம் சேருவாய்.
மோட்சலோக ராஜாவுக்கு,
அவன் பலத்த விரோதி;
அவன் பரிசுத்த பிரயாணிகளை
அழிக்க வகைதேடுகிறான்

என்று பெரிய எழுத்தில் வெட்டிவைத்தார்கள்.

பின்னே வந்த அநேக பிரயாணிகள் அந்த வாசகத்தைப் படித்துப்பார்த்து, வழிவிலகாமல் நேர்பாதை நடந்து, மோசம் இன்றி மோட்சலோகப் பிரயாணத்தில் சென்றார்கள். அப்புறம் தாங்கள் அகோர பயங்கர ராட்சதன் கைக்குத் தப்பினதை நினைவுகூர்ந்து,

[1] ராஜபாதையில் மறுபடியும் வந்து சேர்ந்துகொண்டார்கள்: எல்லாப் பாவங்களையும் விட்டுவிட்டு, நீதியின் பாதையில் நடக்கிறதைக் குறிக்கிறது.

அம்மானை.

வழிதப்பிப் போனோமே வந்தபலன் கண்டோமே,
விழிப்பாய் நடப்பீரே! மோட்சபிரயாணிகளே!
ராஜவழி விட்டுடனே பக்கவழியாய் நடந்தால்
சந்தேகத்துருக்கத்துச் சத்துராதி பிடிப்பான்,
அவன்பேர் பயங்கரமாம், அவன் அரண்பேர் சந்தேகம்;
விழிப்பாய் நடப்பீரே, சொல்லிவிட்டோம், சொல்லிவிட்டோம்

என்று பாடினார்கள்.

## ஆனந்த மலை சேருதல்.

பிரயாணிகள் ஆனந்த மலை நாடு சேர்ந்தது.

அப்புறம் அவர்கள் இருவரும் ஆனந்தமலை[1] சேருமட்டும் பேசிப்பேசி வழிநடந்தார்கள். இந்த மலைகாடு முழுவதும் முன்னே சொன்ன மலையாதிபனைச் சேர்ந்ததுதான். அவர்கள் அந்த மலைமேல் இருந்த தோட்டங்களையும், சந்தவனங்களையும், கொடிமுந்திரிகைப் பந்தல்களையும், நீருற்றுகளையும் பார்க்கும்படியாக ஏறிப்போனார்கள். அவர்கள் போய் நீராடி, குடித்து, அங்குள்ள திராட்சக்குலைகளைப் பிடுங்கித் தின்றார்கள். அந்த மலைமேலேயே ராஜபாதையின் ஓரமாய் இடையர் தங்கள் மந்தைகளை மேய்த்துக்கொண்டு நின்றார்கள்; பிரயாணிகள் இருவரும் அவர்களண்டை போய், இளைப்படைந்த வழிப்போக்கர் ஆயாசத்தோடு வழியில் வருத்தப்போக்காய் இருக்கிறவர்களுடன் பேசும்போது, தங்கள் தடியின்மேல் சாய்ந்துகொண்டிருக்கிறதுபோல் சாய்ந்து நின்றுகொண்டு, இதின்மேல் மேய்ந்துகொண்டு இருக்கும் ஆடுகள் யாருடையவைகள் என்று கேட்டார்கள்.

இடையர். இவை அனைத்தும் மனுவேலர் மண்டலத்தைச் சேர்ந்த மலைகள்; அவருடைய தேசத்து ஆட்களுடைய பார்வையில்தான் இது இருக்கிறது; ஆடுகளும் அவருடையவைகள்தான், அவைகளுக்காக அவர் தமது ஜீவனையும் கொடுத்திருக்கிறார் என்று மறுமொழி சொன்னார்கள்.

கிறி. உச்சிதபட்டணம் போகும் பாதை இதுதானோ?

---

1 ஆனந்தமலை. இது கிறிஸ்தவர்கள் தங்கள் விருத்தாப்பிய வயதில் வெகுதாம் அநுபவிக்கிற அமைதலையும் களிப்பையும் குறிக்கிறது. அவர்கள் தங்கள் உடன் கிறிஸ்தவர்களோடு தேவ அன்பையும், தங்களுக்கு முன்னே இருக்கும் பட்டணத்து மகிமையையும்பற்றி சம்பாஷிக்கிறார்கள்.



இடையர். இதுதான், இதுதான். நீங்கள் நேர்பாதையில்தான் இருக்கிறீர்கள்.



கிறி. உச்சிதபட்டணம் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?

இடையர். அதில் சேரத்தகாதவர்களுக்கு வெகுதூரம்தான்.

கிறி. வழி க்ஷேமமா? மோசமா?

இடையர். க்ஷேமமாய் நடந்துபோகிறவர்களுக்கு க்ஷேமம்தான்; மோசம்பண்ணப் பார்க்கிறவர்களுக்கு மோசம்தான்.[a]

---

a ஓசி. 14. 9.

இந்த வழியில் இளைப்படைந்துபோகிற பிரயாணிகளுக்கு உதவியாக இளைப்பாறும் சத்திரம் சாவடி ஏதாவது உண்டா?

இடையர். இம்மலையாதிபர், இவ்வழி வரும் பிரயாணிகளை அருந்தபடி பராமரிக்கவேண்டும் என்று, எங்களுக்குக் கண்டிப்பாய் உத்தரவு கொடுத்திருக்கிறார்; ஆகையால் இம்மலையின் பாக்கியம் எல்லாம் உங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது[a] என்று சொன்னார்கள்.

பின்னும் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், மற்ற இடங்களில் உள்ளவர்கள் இவர்களைப்பார்த்து: எங்கேயிருந்து வருகிறீர்கள்? எங்கே போகிறீர்கள்? இந்த வழியாய் வந்த வகை எப்படி? இம்மட்டும் இந்த வழியாய் வரும்படி செய்த பிரயத்தனங்கள் எவை? என்று கேட்டால்போலவே, இந்த இடையரும் பல கேள்விகளை அவர்களிடத்தில் கேட்டார்கள். அதற்குச் சொல்லவேண்டிய உத்தரவை அவர்கள் முன்போலவே சொன்னார்கள்; ஏனெனில் இவ்விதமாய் இந்த மலைக்கு வந்து சேருகிற பிரயாணிகள் மொத்த சொற்பப்பேர்மாத்திரம் இருந்தார்கள். ஆனால் அவர்கள் சொன்ன மறுத்தரங்களைக் கேட்ட இடையர் சந்தோஷப்பட்டு, மட்டற்ற அன்பு பாராட்டி: நீங்கள் ஆனந்த மலை வந்து சேர்ந்தது, ஆனந்த மலைவாசிகள் அனைவருக்கும் ஆனந்தமே என்று சொன்னார்கள்.

ஆனந்தமலை கோனார்.

அப்புறம் அறிஞன், அநுபவசாலி, விழிப்பாளி, கபடின்மை என்று பேர்வழங்கப்பட்ட நாலு இடையரும்[1] பிரயாணிகளைக் கைபிடித்துக் கூட்டிக்கொண்டு தங்கள் கூடாரத்துக்குக் கொண்டுபோய் அச்சமயத்தில் தயாராய் இருந்த பண்டபதார்த்தங்களை அவர்கள் உண்டுகளிக்கச் செய்தார்கள். மேலும் அந்த இடையர் பிரயாணிகளைப் பார்த்து: நாம் ஒருவருக்கொருவர் அறிமுகம் ஆகும்படியாகவும், ஆனந்த மலையின் மகத்துவங்களை நீங்கள் கண்டு களிகூரும்படியாகவும் எங்களு

[1] இடையர் என்பது, ஆடுகளுக்காகத் தமது ஜீவனைவிட்ட பிரதான மேய்ப்பராகிய இயேசுகிறிஸ்துவின் உத்தம ஊழியக்காரரைக் குறிக்கிறது. மேய்ப்பரின் நாமங்கள் கிறிஸ்துவின் மந்தையின் மேய்ப்பராகிய குருக்களுக்கு இருக்கவேண்டிய பிரதான லட்சணங்களைக் குறிக்கிறது.

[a] எபி. 13. 2.



டன் சிலகாலம் பின்னிட்டால் நலமாய் இருக்கும் என்று கேட்டார்கள்; பிரயாணிகளும் அதற்குப் பூரண மனதோடு சம்மதித்தார்கள். இதற்குள்ளாக இரவில் வெகுநேரம் ஆகிவிட்டதால் அவரவர் தனியே இளைப்பாறும்படி பிரிந்துவிட்டார்கள்.

பொழுது விடிந்தவுடனே, அந்த இடையர் கிறிஸ்தியானையும் திடநம்பிக்கையையும் கூப்பிட்டு: நீங்கள் எங்களோடு ஆனந்த மலைமேல் ஆனந்தத்தோடு உலாவும்படி வாருங்கள் என்று அழைத்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அப்படியே அவர்கள் கூடப்போய் அங்கும் இங்கும் உலாவி, எங்கும் பாராத காட்சிகளை அம்மலையின் எத்திக்கிலும் கண்டார்கள். அப்புறம் அந்த இடையர்: நாம் இந்தப் பிரயாணிகளுக்குச் சில அதிசயங்களைக் காட்டுவோமா என்று பேசிக்கொண்டார்கள்; நல்லது காட்டுவோம் என்று அவர்கள் எல்லாரும் தீர்மானித்தபின்பு, அவர்கள் பிரயாணிகளை ஒரு உயர்ந்த பரும்பின் மேல் கூட்டிக்கொண்டுபோனார்கள். அதற்குத் தப்பறைப்பரும்பு[1] என்று பேர். அது ஒரு பக்கம் செங்குத்தாய் இருந்தது; அதின் அடித்தரையை உற்றுப்பார்க்கும்படி இடையர் சொன்னார்கள். கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் எட்டிப்பார்க்கவே, அதின்மேல் இருந்து விழுந்த பலர் உடல்வேறு தலைவேறாகச் சின்னபின்னப்பட்டுக் கிடக்கிறதைக் கண்டார்கள். இதன் இரகசியம் என்ன? என்று கிறிஸ்தியான் கேட்டான். அதற்கு இடையர்: சரீர உயிர்த்தெழுதலைப்பற்றி இமெநேயும் பிலேத்தும் போதித்த உபதேசத்துக்கு செவிகொடுத்தவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டது இல்லையா? என்று கேட்டார்கள். ஆம், ஆம், கேள்விப்பட்டிருக்கிறோம் என்றார்கள். அப்புறம் இடையர் சொல்லுகிறார்கள்: இந்த மலையின் அடியில் சின்னபின்னப்பட்டுக் கிடக்கிறவர்கள் அவர்கள்தான். இவ்வளவு செங்குத்தான பரும்பை எப்படித் தொட்டு ஏறலாம்? இவ்வளவு வழுக்கலான மலையை எப்படி நெருங்கலாம் என்று மற்றவர்கள் எச்சரிப்பு அடையும்படி, நீங்கள் பார்க்கிறவண்ணம் அவர்கள் இந்நாள்மட்டும் புதைக்கப்படாமல் கிடக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

தப்பறைப்பரும்பின் காட்சி.

[1] தப்பறைப்பரும்பு என்பது, கிறிஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளும் மோசமான கோட்பாடுகளை அல்லது வேதப்புரட்டுகளைக் குறிக்கிறது. இதின் முடிவு நாசமாய் இருக்கும்.

சாக்கிரதை மலைக்காட்சி.

அப்புறம் இடையர் அவர்களை வேறொரு மலையுச்சிக்குக் கூட்டிக்கொண்டு போனதாக என் சொப்பனத்தில் கண்டேன். அதற்குச் சாக்கிரதை மலை[1] என்று பேர். அங்கிருந்து வெகுதூரத்துக்கு அப்பால் பார்க்கும்படி சொன்னார்கள்; அப்படியே பிரயாணிகள் பார்த்தபோது, அங்கே காணப்பட்ட கல்லறைக்கு ஊடே பலர் இங்கும் அங்கும் உலாவிக்கொண்டிருக்கிறதாகத் தெரிந்தது; அவர்களில் சிலர் வேளைவேளையில் கல்லறைகள்மேல் இடறி விழுந்து விழுந்து திரிந்ததாலும், அங்கிருந்து வெளியேற வழிதெரியாமல் தட்டுக்கெட்டு தடுமாறித் திரிந்ததாலும் அவர்கள் அனைவரும் குருடராய் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்தார்கள். இதன் அர்த்தமென்னவென்று கிறிஸ்தியான் கேட்டான்.

அதற்கு இடையர் சொல்லுகிறார்கள்: சீக்கிரம் வழியிலே இம்மலைக்கு வெகு சமீபமாகவே ராஜபாதைக்கு இடதுபுறமாக விலகுகிறதற்கு ஒரு படிக்கட்டுவழி இருக்கிறதே, அதைக் கண்டீர்களா? என்று கேட்க, அவர்கள் கண்டோம், கண்டோம் என்றார்கள். அப்புறம் இடையர்: அந்தப் படிக்கட்டுப் பாதை அகோர பயங்கர ராட்சதனுடைய அரமனையாகிய சந்தேக துருக்கத்துக்குப் போகிறது, அதோ கல்லறைக்குள் உலாவுகிற அவர்கள், உங்களைப்போலவே ஒருகாலத்தில் உத்தம மோட்ச பிரயாணிகளாகி அந்தப் படிக்கட்டுப் பாதைமட்டும் வந்தார்கள்; அந்த இடத்துக்குச் சமீபமாய் உள்ள ராஜபாட்டையானது மகா கரடோடாய் இருந்ததைவிட்டு அவர்கள் படிக்கட்டுப் பாதையில் ஏறி, அகோர பயங்கர ராட்சதன் கையில் அகப்பட்டு சந்தேகத் துருக்கத்தின் சிறைச்சாலையில் அடைபட்டிருந்தார்கள். சிலகாலம் போனபின்பு ராட்சதன் அவர்கள் கண்களைப் பிடுங்கிப்போட்டு, "விவேகத்தின் வழியை விட்டுத் தப்பிநடக்கிற மனுஷன், செத்தவர்களின் கூட்டத்தில் தாபரிப்பான்" என்று ஒரு ஞானி சொல்லிய வாசகம் நிறைவேறும்படியாக இவ்வண்ணம் கல்லறைக்கு ஊடே கண்ணற்ற குருடர்களாய் அலையும்படி விட்டுவிட்டான் என்று சொன்னார்கள். அதைக் கேட்ட கிறிஸ்தியானும் நம்பிக்கையும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்ணீர் விட்டு அழுதார்களே அல்லாமல் வேறொன்றையும் இடையருக்குச் சொல்லவில்லை.

[1] சாக்கிரதை மலை என்பது, அவர்களுக்கு முன்னவர்களுக்குச் சம்பவித்திருக்கிற காரியங்களை உணர்ந்துகொண்டு எச்சரிப்படையவேண்டியது என்று உணர்த்துகிறது.



நரகத்தின் குறுக்கு வழிக் காட்சி.

அதற்கு அப்பால் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், அந்த இடையர் பிரயாணிகளை ஒரு பள்ளத்தாக்குக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள்; அங்கே ஒரு மேட்டின் பக்கத்தில் ஒரு கதவு இருந்தது, அந்தக் கதவைத் திறந்து உள்ளே பார்க்கும்படி சொன்னார்கள்; பார்க்கவே, காரிருளும் கனத்த புகையுமே அங்கே இருந்ததாகக் கண்டார்கள். அதுவும் அன்றி, அதனுள்ளே நெருப்பு எரிகிற இரைச்சலும், வேதனைப்படுகிறவர்களுடைய கூக்குரலும் கேட்டார்கள்; அதோடு கந்தக வீச்சத்தையும் முகர்ந்தார்கள். இதின் பொருள் என்ன? என்று கிறிஸ்தியான் கேட்டான். அதற்கு இடையர்: நரகத்துக்கு இது ஒரு குறுக்கு வழி; மாயக்காரர் போகிற வழி இதுதான்; ஏசாவைப்போல் தங்கள் முதற்பேறு சுதந்தரத்தை விற்கிறவர்களும், அலெக்சாந்தரோடேகூட சுவிசேஷத்தைத் தூஷிக்கிறவர்களும், அனனியா, சப்பீராளோடேகூட பொய்பேசிப் பித்தலாட்டம் செய்கிறவர்களும் போகிற வழி இதுதான் என்று சொன்னார்கள்.

நம்பி. அப்போது நம்பிக்கை மேய்ப்பரைப் பார்த்து: இவர்கள் ஒவ்வொருவரும் எங்களைப்போல் மோட்சபிரயாணிகளின் வேஷம் பூண்டிருந்தார்களோ? என்று கேட்டான்.

இடை. ஆம், ஆம், வெகுகாலமாய் அந்த வேஷம் பூண்டிருந்தார்கள் என்று இடையர் சொன்னார்கள்.

நம்பி. இவர்கள் தள்ளப்படுமுன்னே இந்த வேஷத்தோடு எவ்வளவுதூரம் பிரயாணம் செய்திருந்தார்கள்?

இடையர். சிலர் இம்மலைமட்டும் வந்ததுண்டு; சிலர் இதுவரையும் வரவில்லை என்றார்கள்.

அதைக்கேட்ட பிரயாணிகள் இருவரும்: வல்லமையுள்ளவர் வல்லமை தரும்படியாக[1] நாம் வேண்டுதல் செய்வது எவ்வளவோ அவசியம் என்று சொல்லிக்கொண்டார்கள்.

இதற்குள்ளாக பிரயாணிகள் தாங்கள் பயணம் புறப்பட ஆசைப்பட்டார்கள், இடையரும் அப்படியே செய்யுங்கள்

[1] தேவபக்தியின் அடையாளம் இடைக்கண்ட தேவசகாயத்தைப் பெற்றுக்கொள்ளாவிட்டால் ஒருவரும் கிறிஸ்துமார்க்க நெறியில் நிலைத்திருக்கக்கூடாது. ஆனதால் "என்னை ஆதரித்தருளும், அப்பொழுது நான் இரட்சிக்கப்படுவேன்" என்று சொல்லு.

என்று ஆலோசனை சொன்னார்கள். அந்தப்படியே அவர்கள் எல்லாரும் ஏகமாய்க் கூடி அந்த மலைகளின் கடைசிமட்டும் வந்தார்கள். அப்புறம் இடையர்: நாம் உச்சிதபட்டணத்தின் அலங்காரவாசலை இவர்களுக்கு இங்கிருந்து காட்டுவோம்; இவர்கள் அதை நமது தூரதிருஷ்டிக் கண்ணாடியினால்[1] கண்டுகொள்ளுகிறார்களா பார்ப்போம் என்று பேசிக்கொண்டார்கள். அது பிரயாணிகளுக்கு மிகுந்த சந்தோஷமான செய்தியாய் இருந்தபடியால், அவர்களும் அதைக் காட்டும்படி விரும்பிக் கேட்டார்கள். அதற்காக அவர்களை ஒரு உயர்ந்த மலைச்சிகரத்தின்மேல் கூட்டிக்கொண்டு போனார்கள்; அதற்குத் தெளிவுசிகரம் என்று பேர். அங்கே போய் ஒரு கண்ணாடியைக் கொடுத்து இதின் வழியாய்ப் பாருங்கள் என்று சொன்னார்கள்; அவர்கள் அப்படியே நோக்கி நோக்கிப் பார்த்தார்கள். என்றாலும் சற்றுமுன் இடையர் அவர்களுக்குக் காட்டின பயங்கர காட்சி அப்போதும் அவர்கள் மனதை வாதித்தபடியினாலே கை ஆடினதால், திடமாய்க் கண்ணாடியைப் பிடித்து அதின் வழியாய்ப் பார்க்கக் கூடாமல்போயிற்று. எப்படியும் அவர்கள் அந்த வாசலையும், அங்குள்ள சில மகத்துவங்களையும் கண்டதாக உணர்ந்துகொண்டு,

தெளிவுசிகரக் காட்சி.

அந்தரங்கமானதை
அறிவித்தார் மேய்ப்பர்
மற்றவர்களுக்கதை
மறைவாக வைத்தார்.
ஆழ்ந்த மறைந்ததான
அந்தரங்க மேதோ
ஆனந்த மேய்ப்பரை
தெளிவிப்பார், நீ போ

என்று பாடிக்கொண்டு பயணம் போனார்கள்.

அவர்கள் புறப்பட்ட சமயத்தில், மேய்ப்பரில் ஒருவன் இனி அவர்கள் நடக்கும் பாதையைக்குறித்துப் பல விஷயங்களையும் எழுதிய ஒரு சீட்டைக் கொடுத்தான்; வேறொருவன்

---

[1] கண்ணாடி. இது வேதவசனத்தைக் குறிக்கிறது. விசுவாசம் என்னும் கைகளால் அதை எடுத்துக்கொண்டு ஆத்துமாவின் கண்கள் வழியாய்ப் பார்க்கவேண்டியது. ஆனால் அவிசுவாசத்துக்கு ஏதுவான நினைப்பும் பயமும் கைகளை ஆட்டச்செய்து கண்களின் மங்கலாக்குகின்றன.



முகஸ்துதிக்கு இடங்கொடுக்கக்கூடாது என்று எச்சரித்தான்; இன்னொருவன் மயக்கபூமியில் சயனம் என்று தூங்கிவிடக் கூடாது என்று சொன்னான்; பின்னொருவன் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக என்று வாழ்த்தி வழியனுப்பினான்; உடனே நான் என் சொப்பனத்திலிருந்து விழித்தேன்.

பிரயாணிகள் பெற்ற [illegible] குறிப்புகள்.

## அறிவீனனைச் சந்தித்தல்.

மறுபடியும் நான் நித்திரை போய் திரும்பவும் சொப்பனம் கண்டேன். நான் முன்னே கண்ட பிரயாணிகள் இருவருமே அந்த மலைத்தொடர்களைக் கடந்து உச்சிதபட்டணத்துக்குப் போகும் இராஜபாதையில் நடந்து போனார்கள். அந்த மலை அடிவாரத்தில் ராஜபாதைக்கு இடதுபாரிசமாய் அகந்தைதேசம் எனப்பட்ட ஒரு ராஜ்யம் இருக்கிறது. அதிலிருந்து ராஜபாதையில் வந்து சேர்ந்த ஒரு கோணலான வழி இருந்தது. அந்த இடத்தில் இவர்கள் ஒரு துடுக்குள்ள வாலிபனைச் சந்தித்தார்கள். அவனுக்கு அறிவீனன்[1] என்று பேர்.

பிரயாணிகள் அறிவீனனைச் சந்தித்தல்.

கிறி. கிறிஸ்தியான் அவனைக் கண்டவுடனே, தம்பி எவ்விடம் இருந்து; எவ்விடம் போகிறாய்? என்று கேட்டான்.

அறிவீ. ஐயா! நான் அதோ இடதுபக்கத்தில் இருக்கிறதே, அந்த தேசத்தில் பிறந்து வளர்ந்தேன்; இப்பொழுது மோட்சபட்டணத்துக்குப் பயணம் போகிறேன்.

கிறி. அதன் வாசலுக்குள் எப்படிப் பிரவேசிப்பாய்? அங்கே போனபின் உனக்கு சங்கடங்கள் நேரிடாதோ?

அறிவீ. மற்ற நல்லவர்கள் புகுகிறதுபோல், நானும் புகுந்து கொள்ளுவேன்.

கிறி. வாசலைத் திறந்து உன்னை உள்ளே சேர்த்துக்கொள்ளும்படியாக, நீ காண்பிக்கும்படியான தஸ்தாவேஜுகள் ஏதாவது உண்டோ?

அறிவீ. தஸ்தாவேஜு — என்னத்துக்கு? — என் ஆண்டவருடைய சித்தம் இன்னதென்று அறிவேன்; அவனவனுக்குச் செலுத்தவேண்டியதைச் செலுத்திவிடுகிறேன்; நான் ஜெபம் பண்ணுகிறேன், உபவாசம் பண்ணுகிறேன்; தருமதானம் பண்

---

[1] அறிவீனன் என்பது, தங்களுடைய நற்கிரியைகளின் மூலமாய் இரட்சிக்கப்படலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிற அறிவீனரைக் குறிக்கிறது.

றுகிறேன்! என் தர்மகாரியங்களுக்கு ஒரு குறைவுண்டா? இப்போதும் என் ஜெனதேசத்தை மறந்து மோட்சலோக யாத்திரை செய்கிறேன். இப்படியெல்லாம் இருக்க அஞ்சவேணும் என்னத்துக்கு?

கிறி. ஆனால் நீ ராஜபாதையின் துவக்கத்தில் இருக்கிற திட்டிவாசல் வழியாய் வரவில்லையே; இதோ இந்த குறுக்குப் பாதையாய் அல்லவோ வந்தாய். ஆகையினாலே நீ உன்னைப்பற்றி எப்படி எண்ணிக்கொண்டாலும் சரி, எனக்கு அச்சம் அச்சந்தான். கணக்கு ஒப்புவிக்கவேண்டிய கடைசிநாள் வரும்போது, மோட்சபட்டணத்தில் நீ சேர இடங்கிடையாமல், திருடனும் கொள்ளைக்காரனுமாய் இருக்கிறாய் என்று உன்பேரில் குற்றஞ் சாட்டப்படும்.

அறிவீ. துரைகளே! நீங்கள் எனக்கு முற்றிலும் அந்நியர், உங்களை நான் அறியமாட்டேன்; நீங்கள் உங்கள் நாட்டு மார்க்கத்தை அநுசரித்து நடவுங்கள், நான் என் நாட்டுமார்க்கத்தின்படி நடக்கிறேன்; எல்லாம் நன்றாய் முடியும் என்று நம்புகிறேன். நீங்கள் ஒரு வாசலைப்பற்றிச் சொல்லுகிறீர்களே, அது எங்கள் நாட்டுக்கு அதிக தூரத்தில் இருக்கிறது என்பது உலகத்துக்கே தெரிந்தவிஷயம்; எங்கள் நாட்டான் ஒருவனுக்கும் அதற்குப் போகும் பாதை தெரியவே தெரியாது என்று எண்ணுகிறேன். அது தெரிந்திருந்தாலும் சரி, தெரியாதிருந்தாலும் சரி அதைப்பற்றி அக்கறை இல்லை. எங்கள் நாட்டில் இருந்து மோட்சலோகபாதையில் வந்து சேரும்படி, நீங்கள் பார்க்கிறதுபோல சேர்த்தியான ஒரு வழி, பசும்புல் மைதானவழியாக இருக்கிறதே, அதுவே போதுமானது என்றான்.

கிறி. அவன் தன் சுயபெருமைக்கேற்ற புத்திமான்போல் நினைக்கிறதைக் கிறிஸ்தியான் அறிந்துகொண்டு, தன் தோழனாகிய திடநம்பிக்கையண்டைபோய் மெதுவாக, "இவனைப் பார்க்கிலும் மூடனைக்குறித்து அதிக நம்பிக்கையாய் இருக்கலாம்"[a] என்று காதுக்குள் ஓதிப்போட்டு பின்னும் சொல்லுகிறான்: "மூடன் வழியிலே நடக்கும்போதும் மதிகெட்டவனாயிருக்கிறான், தான் மூடன் என்று அவன் எல்லாருக்கும் சொல்லுகிறான்."[b] நம்முடைய யோசனை என்ன? அவனோடு இன்னும் பேசிக்கொண்டிருக்கலாமா? அல்லது தற்சமயத்துக்கு நாம் எட்டி நடந்து, இம்மட்டும் அவன் நம்மிடத்தில் கேட்ட போத

[a] நீதி. 26. 12. [b] பிர. 10. 3.



னைகளை உணரும்படி விட்டுவிட்டு, மறுபடியும் நின்று அவனுடன் பேசி, படிப்படியாக அவனுக்கு நன்மைசெய்யக்கூடுமா என்று பிரயத்தனம் செய்யலாமா என்ன? என்று கேட்டான். அதற்குத் திடநம்பிக்கை:

அறிவீனன் கேட்டதை
ஆய்ந்தோய்ந்து பார்க்கட்டும்,
நல்லாலோசனைகளை
அல்லத்தட்டி விட்டால்
மா மேலான லாபத்தை
காணுமலே போவான்;
மூடர் அனைவரையும்
ஏகன் படைத்தாலும்
மூடர் ஒருவரையும்
ரட்சியோம் என்கிறார்

என்று கவிபோல் சொல்லி, பின்னும் சொல்லுகிறான்: எனக்குத் தோன்றுகிறபடி அவனுக்கு எல்லாவற்றையும் ஒரேயடியாய்ச் சொல்லிவிடுவது நல்லதல்ல; இவனை விட்டுவிட்டு நாம் முந்திப் போய்விடுவோம்; இவனுடைய திராணிக்குத்தக்கதாக அப்பால் கொஞ்சங்கொஞ்சமாய் இவனுக்குச் சொல்லலாம் என்றான்.

அறிவீனனைவிட்டு விலகிப் போகிறார்கள்.

அப்படியே அவர்கள் இருவரும் முந்தினார்கள், அறிவீனன் கொஞ்சம் பிந்தி நடந்துபோனான். அவர்கள் அவனை விட்டுப் பிரிந்து சற்றுதூரம் போகவே, பக்கத்தில் இருந்த இருட்டான ஒரு சந்துக்குள் சேர்ந்தார்கள். அங்கே ஒரு மனுஷனை ஏழு பிசாசுகள் கூடி, பலமான ஏழு கயிறுகளால் கட்டி இழுத்து, ஒரு பள்ளத்தாக்கின் சரிவில் முன்கண்ட வாசலுக்கு நேராய்க் கொண்டுபோகிறதைப் பார்த்தார்கள்;[a] பார்த்தவுடனே கிறிஸ்தியான் பயந்து நடுநடுவென்று ஆடிவிட்டான்; திடநம்பிக்கையும் திகைத்துப்போனான்; ஆனாலும் பிசாசுகள் இழுத்துக்கொண்டு போகிறபோதே, இவன் பாதித்திய பட்டணத்தில் குடியிருந்த மறுதலிப்பு[1] என்கிறவனாய் இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டு இவனை நான் அறிவேனா என்று கிறிஸ்தியான் கூர்மையாய்க் கவனித்தான். என்றாலும் கையும்

ஏழு பிசாசுகள் கையில் அகப்பட்ட மறுதலிப்பு.

[1] மறுதலிப்பு. இது துன்பத்தினாலே கிறிஸ்துமார்க்கத்தை மறுதலித்துவிட்ட ஒரு பேர்கிறிஸ்தவனைக் குறிக்கிறது.

[a] மத். 12. 45. நீதி. 5. 22.

மெய்யுமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு திருடனைப்போல், தலை கவிழ்ந்துகொண்டுபோனதால் கிறிஸ்தியான் அவனை இன்னான் என்று இனங்கண்டுபிடித்துக்கொள்ளவில்லை. அவன் சற்றுதூரம் கடந்துபோனபிற்பாடு திடநம்பிக்கை திரும்பிப்பார்க்கவே, அவனுடைய முதுகின்மேல்,

வீண் மத வெறி கொண்டவன்
பாழ் நரகப் பரத்ரோகி

என்று எழுதப்பட்டிருக்கிறதைக் கண்டான்.

அப்பொழுது கிறிஸ்தியான் தன் தோழனோடு சொல்லுகிறான்: ஒரு நல்ல மனுஷனுக்கு இந்தத் திசையில் நடந்ததாக நான் கேள்விப்பட்டிருக்கிற செய்தி என் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த நல்ல மனுஷனுக்கு அற்பவிசுவாசி[1] என்று பேர். ஆனால் அவன் குணத்துக்கு வெகு கெட்டிக்காரன்தான்;

பிரயாணிகள் அற்பவிசுவாசியைப்பற்றி சம்பாஷித்தல்.

யதார்த்தபுரியிலே குடியிருந்தான். அவன் சமாசாரத்தைச் சொல்லுகிறேன் கேளும்: இந்தத் தெருவின் முகப்பிலே விசாலவழி வாசலிலிருந்து வருகிற ஒரு சிறுவழி இருக்கிறது. அதற்கு இறந்தோர் சந்து[2] என்று பேர். அவ்விடத்தில் நடக்கிற படுகொலைகளைத்தொட்டு அதற்கு இந்தப் பேர் வழங்கப்படுகிறது. இந்த அற்பவிசுவாசி என்பவன், இப்படி நம்மைப்போல் மோட்சபிரயாணம் போகையில், அந்தத் தெருவில் சற்று உட்கார்ந்து தூங்கினான்.[3] அச்சமயத்தில் விசாலவழி வாசலில் இருந்து புறப்பட்ட மூன்று கள்ளர் இறந்தோர் சந்துவழியாய் வந்தார்கள்; அவர்களுக்கு அதைரியன், சந்தேகி, பாவப்பழி[4] என்ற பேர் வழங்கப்பட்டது; இவர்கள் மூவரும் அண்ணன் தம்பிமார்தான். அற்பவிசுவாசி உட்கார்ந்தி-

அவனைக் கொள்ளையிட்ட திருடர்.

[1] அற்பவிசுவாசி. இது விசுவாசத்திலே நடந்தாலும் உண்மையாய்த் தேர்ந்திருக்கிற கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது.

[2] இறந்தோர் சந்து. இது பேர்க்கிறிஸ்தவர்களின் அநேகர் அழிவுக்குப் போகும் விஸ்தாரமான பாதையில் வெளியரங்கமாய்ப் பிரவேசித்து நடப்பதை விளக்குகிறது.

[3] அற்பவிசுவாசி தூங்குவது. ஒருவன் தான் பற்றிக்கொண்டிருக்கும் கிறிஸ்துமார்க்க பக்திவிசேஷங்களை அடக்கி, மறைத்துக்கொண்டு, அதின் வழிப்பாதைகளில் முயற்சியோடு நடவாமல் இருக்கிறதைக் குறிக்கிறது.

[4] மூன்று திருடர் என்பது, மனிதர் பாவத்துக்குச் சாயும்போது அவர்கள் மனதை வேதனைப்படுத்தும் பயங்கரங்களைக் குறிக்கிறது.



ருக்கிறதை அவர்கள் தூரத்திலே கண்டு, கும்மாளம் போட்டுக்கொண்டு வெகு வேகமாய் வந்தார்கள்; அப்போதுதான் அந்த நல்ல மனுஷன் தூக்கம் விழித்து, பிரயாணம்போகும்படி ஆயத்தப்பட்டான். அவர்கள் வந்தவுடனே பெருஞ்சத்தம் போட்டு, நில்லடா என்றார்கள். உடனே அவன் முகம் வெளுத்துப் போயிற்று; எதிர்த்து சண்டைபோடவாவது, ஒளித்து ஓடவாவது அவனால் கூடாமற்போயிற்று. அப்போது அதைரியன் என்பவன், உன் பணப்பையை அவிழ்த்து வை என்றான்; அவன் பணத்தை எப்படி இழந்துபோகிறது என்று சற்றுப் பின் வாங்கினான். சந்தேகி உடனே அவன் மடியில் கைபோட்டு, வெள்ளிநாணயங்கள் நிறைந்திருந்த ஒரு பையைப் பிடுங்கி எடுத்தான்.[1] உடனே அவன் கூவோ கூ! கள்ளன், கூவோ கூ! கள்ளன், கள்ளன் என்று கத்தினான். அச்சமயத்தில் பாவப்பழி, தன் கையில் இருந்த பெரிய தடியினால் அவன் மண்டையில் அடித்தான். அற்பவிசுவாசி அப்படியே விழுந்தான். அவனைப் பார்க்கிறவர்கள் எல்லாரும், இவன் எது பிழைப்பது என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு இரத்தம் அவன் மண்டையிலிருந்து வடிந்தது. இம்மட்டும் அந்தத் திருடர் கிட்டவே நின்றார்கள்; கடைசியாக யாரோ பிரயாணிகள் வருகிற அரவங்கேட்டது. அப்போது அவர்கள் திடநம்பிக்கை நகரில் வசிக்கும் அருளாதிக்கன்[2] வந்தாலும் வருவான் என்று பயந்து, இவன் எப்படியோனும் நாசமாய்ப் போகட்டும், நாம் ஓடிப்போவோம் என்று சொல்லிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்கள் போய் கொஞ்சநேரத்துக்குள்ளாக அற்பவிசுவாசிக்கு புத்திதெளிந்து மெதுவாய் எழுந்திருந்து தன் வழியேபோனான். இதுதான் நான் கேள்விப்பட்ட சமாசாரம் என்று சொன்னேன்.

தி. நம். அவனுக்குள்ள பொருள் எல்லாவற்றையும் அடியோடே பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்களோ?

[1] அற்பவிசுவாசி தன் பணப்பையைப் பறிகொடுத்தது; இவ்வுலகத்தில் சுவிசேஷத்தினால் கிடைக்கிற ஆறுதல்களை இழந்துபோகிறதைக் காட்டுகிறது.

[2] அருளாதிக்கன். இது சோதனையினாலே விழுந்துபோனவர்களைத் தாங்கி எடுத்து, தேவனுடைய இரட்சணிய இரக்கத்தின்மேல் நம்பிக்கை வைக்கும்படி உற்சாகப்படுத்துகிற உண்மையுள்ள கிறிஸ்தவனைக் குறிக்கிறது.

கிறி. அவனுடைய நகை[1] பெட்டிகள் இருந்த இடத்தைத் திருடர்கள் கண்டுகொள்ளவில்லை, ஆதலால் அவைகள் இன்னும் அவன் வசத்தில் இருக்கின்றன; ஆனால் நான் முன் சொன்னபடி, வழிச்செலவுப் பணம் எல்லாம் கள்ளர் கைக்குப் பறிமுதலாய்ப் போனதையிட்டு அவனுக்கு ஆபத்தாயிருந்தது. நகைகள் எல்லாம் தப்பிக்கொண்டது, அதினாலே கொஞ்சம் ஆறுதலும் இருந்தது; அது அவன் பிரயாணம் முடியுமட்டும் செலவுக்குப் பற்றாது. அதினாலே (நான் கேள்விப்பட்ட செய்தி பிழையானால்) அவன் தன் நகைகளை விற்றுப்போடக் கூடாதிருந்தபடியால்[2] தன் ஜீவனைப் பிழைப்பூட்டும்படி வழி நெடுகப் பிச்சை எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு போனானாம். எத்தனைதான் பிச்சை எடுத்தால் என்ன, அவன் அடிக்கடி வயிறு காய்ந்துதான் போயிருப்பான்.[a]

திடநம். அவனை மோட்ச வாசலுக்குச் சேர்க்கிறதற்கு உதவியான பத்திரம் கள்ளர் கையில் அகப்படாதது பெரிய அதிசயம் அல்லவா?

கிறி. அது அதிசயம் என்று ஒருதரமா சொல்லவேண்டும்? அந்தத் தஸ்தாவேஜு கள்ளர் கையில் அகப்படாதது, அவன் அதை மறைக்கும்படி செய்த சாமர்த்தியத்தினால் என்று சொல்லக் கூடாது; கள்ளர் வந்து அவனைக் கொள்ளையிட விழுந்தபோது அவன் விதி மறந்துபோனான். பத்திரத்தை மறைக்கவேண்டுமே என்ற யுக்தியாவது வல்லமையாவது அவனுக்கு இல்லாமற்போயிற்று; ஆனாலும் எப்படியோ தேவசெயலாய்த்தான் அது அவர்கள் கையில் அகப்படவில்லை என்று சொல்லவேண்டியது.[b]

திடநம். எப்படியும் அந்த நகைகள் கள்ளர் கையில் அகப்படாதது அவனுக்குப் பெரிய ஆறுதலாய் இருக்கவேண்டியது அல்லவா?

கிறி. அவன் அந்நகைகளைப் பிரயோகிக்கவேண்டியபடி பிரயோகித்திருந்தானேயானால், அது ஆறுதலாகத்தான் இருந்திருக்

[1] நகைகள் என்பன, விசுவாசிகள் பெற்றிருக்கும் ஊக்க பக்தியும், ஆவியானவரின் பரிசுத்தமாகுதலையும் குறிக்கின்றன.

[2] அற்பவிசுவாசி தன் நகை விற்கக்கூடாதிருந்தது, அவன் இவ்வுலக இன்பங்களின் நிமித்தம் தேவபக்தியை விட்டுவிடாததைக் குறிக்கிறது.

[a] 1 பேது. 4. 18. [b] 2 தீமோ. 1. 12, 14. 1 பேது. 1. 5, 9.



கும். ஆனால் இந்தச் சமாசாரத்தை எனக்குச் சொன்னவர்களால், அவன் துவக்கத்தில் பணத்தைப் பறிகொடுத்த பயங்கரத்தினாலே, மீதியான வழியில் அவன் தன் நகைகளை அவ்வளவாய்ப் பிரயோகிக்க நாடவில்லை என்று கேள்விப்பட்டேன். உள்ளபடி தன் பிரயாணத்தின் பெருந்தூரமட்டும் அவன் தன் நகைகளை மறந்தே போய்விட்டானாம். எப்போதாவது நகைகளைப்பற்றிய நினைவு வந்தால், அப்போது பணம் பறிபோன நினைவும் வந்து அவன் மனதை வாதிக்கிறதால், பழைய நினைவு நகை நினைவைப் புறந்தோடிப்போகச் செய்யுமாம்.

திடநம். ஐயோ எத்தனை பரிதாபம்! இது அவன் மனதுக்குத் துயரமாய் இருக்கும் என்பதற்கு ஐயம் இல்லை.

கிறி. துயரமா? ஆழ்த்துயரம் என்று சொல்லவேண்டியது. நம்மில் யாருக்காவது இப்படி நேரிட்டு, நம்முடைய பணமும் போய், பயமும் அடைந்து, அந்நிய இடத்தில் இவ்வளவு நஷ்டமும் நேரிட்டால் நமக்குத் துயரம் இருக்கமாட்டாதா? அந்த ஏழை மனுஷன் விசனத்தினாலே சாகாமல் இருந்தது பெரிய அதிசயம். அவன் தன் மீதியான வழி முழுவதும் நிர்ப்பந்தப்பட்டுத் துக்கத்தோடு அலைந்து திரிந்தான் என்றே கேள்விப்பட்டேன். போகப்போக, வழியில் சந்தித்த ஆட்களிடத்திலும், வந்து கூடின மனிதரிடத்திலும், இப்படி இன்ன இடத்தில் இன்னாரால் அடியும் மிதியும் பட்டு, மடியில் இருந்த பணத்தையும் பறிகொடுத்து மண்டையில் இந்தக் காயத்தை வாங்கிக்கொண்டேன், நான் பிழைத்ததே மறுபிழைப்பு என்று சொல்லுவானாம்.

திடநம். இப்படி எல்லாம் அவதிப்பட்ட சமயத்தில் அவன் தன் நகைகளில் இரண்டொன்றை விற்றாவது, அடைமானம் வைத்தாவது வழிப்பிரயாணத்தில் செலவுசெய்து தனக்குச் சௌக்கியத்தைத் தேடாமல் மடியவிட்டுப்போனது என்ன அதிசயம்?

கிறி. நீ என்ன? இன்னும் முட்டைக்குள் இருக்கிற குஞ்சைப்போல பேசுகிறாயே. என்னத்துக்காக அதை அடைமானம் வைப்பான்? அல்லது அதை யாருக்கு விற்பான்? அவன் அடிபட்ட தேசத்திலுள்ள ஒருவனும் இவனுடைய நகைகளை ஒரு தம்பிடிக்கு மதிக்கமாட்டானே. மேலும் அந்தவிதமாய்த் தனக்குச் சகாயத்தைச் சம்பாதிக்க அவன் விரும்பவும் இல்லை. அதுவும் அல்லாமல் அவனுடைய நகைகளே மோட்

கிறிஸ்தியான் தன் சோதரனைக் கண்டிக்கிறான்.

சுவாசவன்மை அவனிடத்தில் இல்லாவிட்டால், அவ்விடத்து சுதந்தரத்துக்குப் புறம்பாக்கப்படுவான் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. பதினாயிரம் திருடர்கூடி அவனைக் கொள்ளையிட்டு நஷ்டப்படுத்தினாலும் என்ன, மோட்ச சுதந்தரத்தை இழந்துபோவது அல்லவா பெரிய நஷ்டமாய் இருக்கும்.

திடநம். ஏது சகோதரனே! இவ்வளவு கடினமாய்ப் பேசுகிறீர்? ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை எவ்வளவுக்கு விற்றான்? கொஞ்சம் பயற்றங்கூழுக்குத்தானே, அந்த சேஷ்டபுத்திரபாகம் அவனுடைய விசேஷித்த பூஷணமாய் இருந்தது.[a] அவன் அதையே விற்றானானால், அற்பவிசுவாசி ஏன் அவனைப்போல் செய்யக்கூடாது?

கிறி. ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றது மெய்தான். அவனைப்போல வேறே அநேகரும் விற்கிறார்கள் என்பதும் மெய்தான்; அப்படிச் செய்வதால் அவர்கள் அந்தக் கேடுகெட்டவனைப்போல் தங்களுக்கு அகப்படவேண்டிய பிரதான ஆசீர்வாதத்திலிருந்து தங்களை விலக்கிக்கொள்ளுகிறார்கள். ஆனால் நீ ஏசாவையும் அற்பவிசுவாசியையும், அவன் சொத்தையும் இவன் சொத்தையும், வித்தியாசப்படுத்தி யோசிக்கவேண்டியது. ஏசாவின் சேஷ்டபுத்திரபாகம் ஒரு முன்னடையாளமாய்மாத்திரம் இருந்தது, அற்பவிசுவாசியின் ஆபரணங்களோ அப்படி அல்ல. ஏசாவின் வயிறே அவனுக்கு தேவனாய் இருந்தது, அற்பவிசுவாசியின் தேவன் அப்படி அல்ல. ஏசாவின் ஆவல் அவன் மாமிசபசியில் இருந்தது, அற்பவிசுவாசியின் ஆவல் அப்படி அல்ல. மேலும் ஏசா தன் இச்சை நிறைவேறுகிறது எப்படி என்று கவனித்தானே அல்லாமல், அதற்கப்பால் ஒன்றையும் கவனிக்கவில்லை. "இதோ நான் சாகப்போகிறேனே, இந்த சேஷ்டபுத்திரபாகம் எனக்கு என்னத்துக்கு"[b] என்று சொன்னான். அற்பவிசுவாசியின் காரியம் அப்படி அல்ல; அவனுக்கு அகப்பட்ட விசுவாச அளவு அற்பமாய்மாத்திரம் இருந்தபோதிலும், அந்த அற்பவிசுவாசத்தைக்கொண்டு தன் வரம்பு தப்பி நடவாமல் தன்னைக் காத்துக்கொண்டு, ஏசா தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றதுபோல் இவன் தன் நகைகளை விற்றுப்போடாமல், அவைகள் விலைமதிக்கப்படாதவைகள் என்று எண்ணி இருக்கிறான். ஏசாவுக்கு விசுவாசம் இருந்தது என்று நீ எந்த இடத்திலாவது வாசிக்கிறதில்லை; அவனுக்கு ஒரு அணுவளவு விசுவாசமுள்ளவனாய் இருந்ததில்லை. ஆதலால் எதிர்த்து நிற்கத்தக்கதான விசுவாசம் இல்லாமல், மாமிச இச்சையினால் ஆளப்படுகிற மனிதன், தன் சேஷ்டபுத்திரபாகத்தையும், தன்னுடைய ஆத்துமாவையும், மற்றெல்லாவற்றையும் கூட நரகத்துப் பிசாசுக்கு விற்றுப்போட்டானானால் அது அதிசயம் அல்லவே. மதவெறிகொண்டோடும் கழுதையைத் திருப்பக்கூடாததுபோல, இப்படிக்கொத்தவனுடைய மனதையும் திருப்பக்கூடாது. அவர்கள் மனம் அவர்கள் இச்சைகளின் பேரில் ஓடுகையில், அதினால் எவ்வளவு நஷ்டமானாலும் சரி அதைக் கவனியாமல், தங்கள் இச்சை நிறைவேறவேண்டும் என்றே கவலையாய் இருப்பார்கள். ஆனால் அற்பவிசுவாசியின் காரியம் முற்றிலும் வேறாய் இருந்தது. அவன் மனம் தெய்வீக விஷயங்களின்பேரில் இருந்தது. அவன் ஜீவனார்த்தம் உன்னதத்திலிருந்து வரும் ஆவிக்குரிய விஷயங்களின்மேல் இருந்தது. ஆகையால் இப்படிப்பட்ட குணங்கொண்ட அவன், தன் ஆபரணங்களை விலைக்கு வாங்கிக்கொள்ளத்தக்க ஒருவன் அவ்விடத்தில் இருந்தாலும், என்ன லாபத்துக்காக தன் நகைகளை விற்பான்? தன் மனதை வீணானவைகளினாலே நிரப்பவா? ஒரு மனிதன் தன் வயிற்றை நிரப்பும்படி வைக்கோலுக்குப் பணம் கொடுப்பானோ? அல்லது ஒரு மணிப்புறாவை, காகத்தைப்போல் பிணம் பிடுங்கித் தின்க உன்னால் பழக்கக்கூடுமோ? விசுவாசமில்லாதவர்கள் மாமிச இச்சையின் நிமித்தம் தங்களுக்குண்டானதை மாற்றிக்கொண்டு, அல்லது அடைமானம் வைத்து, அல்லது விற்று, தங்களையும் சமூலமாய் விலைப்படுத்திவிட்டாலும், விசுவாசமுள்ளவர்கள் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் தங்களுக்கு அணுவளவுமாத்திரம் இருந்தபோதிலும் அப்படிச் செய்யமாட்டார்கள், இதைப்பற்றித்தான் என் சகோதரனே! உன்னிடத்தில் தப்பிதம் இருக்கிறது.

ஏசாவின் சரித்திர பேதமே.

திடநம். அது சரி என்று ஒத்துக்கொள்ளுகிறேன், என்றாலும் உம்முடைய கடுமையான வார்த்தைகள் என்னை கொஞ்சங்குறைய கோபதாபங்கொள்ளச் செய்துவிட்டது.

கிறி. அப்படிக் கோபதாபப்படுவானேன்? நான் உம்மை முட்டைத்தோட்டோடு நகர்ந்துபோகிற சில துடுக்கான குருவிக்குஞ்சுகளுக்கு ஒப்பிட்டதுண்டு; அதை மனதில் வைக்கவேண்டாம். நாம் சம்பாஷிக்கிற பொருளின் அர்த்தத்தைப் பிடித்துக்கொண்டு ஆராய்ந்துபார்த்தால், நம் இருவருக்கும் இணக்கமாய் இருக்கும்.

[a] எபி. 12. 16. [b] ஆதி. 25. 32.

திடநம். அந்த மூன்று திருட்டுப்பயல்களும் என் மனதுக்குத் தோன்றுகிறபடி தெம்மாடிகளாக்கும்.[1] மற்றப்படி ஆள் வருகிற அரவங்கேட்ட உடனே ஓட்டம்பிடிப்பார்கள் என்று நீர் நினைக்கிறீரா? அற்பவிசுவாசி ஏன் வீரத்துவம் காட்டவில்லை? ஒரு கை பார்த்துக்கொண்டு, அப்புறம் முடியாதானால் தாழ்ந்துகொள்ளவேண்டியதிருந்தது என்று எனக்குத் தோன்றுகிறது.

கிறி. அவர்கள் தெம்மாடிகள் என்று பலரும் சொல்லக்கேட்டிருக்கிறேன்; ஆனால் உபத்திரவகாலத்தில் அவர்கள் தெம்மாடிகள்தான் என்று கண்டுபிடித்தவர்கள் வெகு கொஞ்சப்பேர்தான். அற்பவிசுவாசி வீரத்துவம்காட்டுவதைப்பற்றிச் சொன்னால், அவனுக்கு அப்படிப்பட்ட தைரியமே இல்லை. என் சகோதரா! நீர் சொல்லுகிறதைப்பார்த்தால், இப்படிப்பட்ட சங்கடம் உமக்கு நேரிட்டால் நீர் ஒரு கைபார்த்து, பலிக்கவில்லையானால் அவர்கள் பாதத்தில் படுத்துக்கொள்வீர்போல் இருக்கிறது. அவர்கள் இப்போது நமக்குத் தூரத்தில் இருக்கிறபடியினாலே நீர் இந்தத் தைரியம் பேசுகிறீர்; இப்போதே கிட்ட வந்து அற்பவிசுவாசிக்குச் செய்தபடியே உமக்கும் செய்தால், இந்த நினைவெல்லாம் பறந்து வேறு எண்ணமாகிவிடும்.

மேலும் நீர் கவனித்துக்கொள்ளவேண்டியது என்னவென்றால், அவர்கள் வழிப்பறிகாரர், அடியற்ற பாதாளத்தரசனுடைய வேலையாட்கள்; அவசரம் நேரிட்டால் அவனே அவர்களுக்கு ஒத்தாசையாக வந்து சேருவான். அவன் சப்தம் சிங்கக் கெர்ச்சிப்புக்கு ஒத்தது.[a] இந்த அற்பவிசுவாசி பட்டபாடெல்லாம் நானும் ஒருதரம் அவர்களிடத்தில் பட்டேன். அப்போது என் பிராணனே போய்விட்டது என்று எண்ணிக்கொண்டேன்; இந்த மூன்று துஷ்டரும் என்மேல் வந்து விழுந்தார்கள், நானோ ஒரு கிறிஸ்தவனைப்போல எதிர்த்துநிற்க ஆரம்பித்தேன்; உடனே அவர்கள் ஒரு முழக்கமிட்டுக் கூப்பிடவே அவர்கள் அதிபதி வந்துவிட்டான். அப்போது என் நிலைமை "ஒரு காசுக்கு உயிரையும் விட்டானும்" என்ற பழமொழிக்கு ஒத்தாற்போலவே இருந்தது. ஆனால் என் ஜீவன் கர்த்தருக்

[1] இளமையான விசுவாசிகள் தாங்கள் சோதனைகளை இலேசாய் ஜெயித்துவிடக்கூடும் என்று அடிக்கடி நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் அனுபோகப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு ஆத்துமாவின் பலவீனம் நன்றாய்த் தெரிகிறது.

a 1 பேது. 5. 8.



கென்று தப்பும்படியாக ஒரு சீரா எனக்கு இருந்தது. எத்தனை கவசந் தரித்திருந்தாலும் என்ன? நான் அவர்களிடத்தில் என் புருஷத்துவத்தைக் காட்டுவது வெகு கஷ்டத்தில் இருந்தது. அப்படிப்பட்ட போரில் இருந்தவனுக்கு அது தெரியுமே தவிர மற்றொரு மனுஷனும் அந்தச் சங்கடங்களை அறியமாட்டான்.

திடநம். எப்படியும் அருளாதிக்கன் வந்தாலும் வருவார் என்று அவர்கள் அஞ்சி ஓடிவிட்டார்கள் அல்லவா?

கிறி. அது நிஜந்தான், அவர்களும் அவர்கள் எஜமானும்கூட அருளாதிக்கன் வந்தவுடனே அடிக்கடி ஓடியிருக்கிறார்கள். அது அதிசயம் அல்ல; அவர் ராஜாவின் சேனைத்தலைவன். அற்பவிசுவாசிக்கும், ராஜாவின் சேனைத்தலைவனுக்கும் நீ சற்று வித்தியாசம்பண்ணிக்கொள்ளுவாய் என்று நம்புகிறேன். அரசனுடைய குடிகள் எல்லாம் அவனுடைய சேனாபதி ஆவார்களா? யுத்தபரீட்சையில் அவர்கள் சேனாபதியைப்போல போர்புரியவும் கூடாது. தாவீது கோலியாத்தை மடங்கடித்ததுபோல், ஒரு குழந்தையும் மடங்கடித்துவிடலாம் என்று சொல்வது சரியா? சிலர் பலவான்களாய் இருக்கிறார்கள், சிலர் பலவீனராய் இருக்கிறார்கள்; சிலருக்கு அதிக அளவான விசுவாசம் இருக்கலாம், சிலருக்கு அளவுள்ளவான விசுவாசம் இருக்கலாம்; இந்த மனிதன் பலவீனரோடு சேர்ந்தவன், ஆகையினாலேதான் தோற்றுப்போனான்.

a அருளாதிக்கன்.

திடநம். அவர்களை உதைக்கும்படி அருளாதிக்கன் வந்திருந்தானால் நன்றாய் இருந்திருக்கும்.

கிறி. அவர் வந்திருந்தாலும் மடியிறைய வாங்கிக்கொண்டுதான் போயிருப்பார்; ஏனென்றால் அருளாதிக்கன் ஆயுதப்பரீட்சையில் சமர்த்தராய் இருந்து பட்டய நுனியின் தூரத்துக்குள்ளே அவர்கள் நெருங்காதபடி காபந்து பண்ணிக்கொள்ளுமட்டும் அவர் காரியம் ஜெயமாய்த்தான் இருக்கும். ஆனால் அதைரியமாவது, சந்தேகமாவது, பாவப்பழியாவது கைக்குள் மையமாய் நெருங்கிவிட்டாலோ, அப்போது அவர் காரியமும் அப்படி அப்படித்தான்; காலேவாரித் தரையில் அடித்துவிடுவார்கள். ஒருவன் கீழே விழுந்துவிட்டால் அப்புறம் அவனால் என்ன செய்யக்கூடும்? என்பது உமக்கே தெரியுமே.

அருளாதிக்கருடைய முகத்தைக் கூர்ந்துபார்க்கிறவன் எவனோ, அவன் அவர் முகத்தில் இருக்கிற கீறலையும், காயங்களையும் கண்டுகொண்டு நான் சொன்னதெல்லாம் நிஜம் என்று நம்

பிக்கொண்டுவான். அவர் ஒருதரம் போர்புரிந்தபோது, நாங்கள் செத்தோம் என்றே நினைத்தோம் என்று அவர் சொன்னதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஐயோ இந்தத் திருட்டுச் சண்டாளரும், அவர்கள் தோழரும் தாவீது என்பவரை எவ்வளவாய் அழுது புலம்பி அங்கலாய்க்கச் செய்துவிட்டார்கள். ஏமானும், எசேக்கியா ராஜனும் தங்கள் காலத்தில் வீரபராக்கிரமராய் இருந்தபோதிலும், இந்தத் திருடரால் குறும்பட்ட சமயத்தில் அவர்களோடு போர்செய்வது அவசியமாய் இருந்தது. அச்சமயத்தில் அவர்களைக் காயந்து செய்துகொள்ளத்தக்க தான மெறுப்பு அவர்களுக்கு இருந்தாலும் அதை எல்லாம் கந்தை கந்தையாகப் பீறலாக்கிவிட்டார்கள். ஒரு காலத்தில் பேதுருவும் தம்மாலான சாமர்த்தியங்கொண்டு அந்த துஷ்டரை மடக்கிவிடலாம் என்று போய்ப் பார்த்தார். சிலர் அவரை அப்போஸ்தலரின் பிரபுவென்று சொல்லுகிறார்கள், ஆனால் அவர் பட்டபாடு கடும்பாடு. அவர்கள் ஒரு வேலைக்காரப் பெண்ணைக்கொண்டு அவரைப் பயப்படுத்தி, இப்படி அவரைக் கலவரப்படுத்திவிட்டார்கள்.

அதுவுமல்லாமல் ஒரு கூப்பிடு தூரத்துக்குள்தான் அவர்கள் அரசனும் இருக்கிறான். ஒரு சகல் போட்டவுடனே அவன் கேட்டுக்கொண்டிருக்கிறான்; தன் சேவகர்கள் கைதாழ்ந்துபோகிறார்கள் என்று கண்டால், அக்கணமே அவனே வந்து ஒத்தாசை செய்கிறான். "அவனைத் தாக்குகிறவனுடைய பட்டயம், ஈட்டி, வல்லயம், கவசம் ஒன்றும் அவனுக்கு முன் நிற்காது; அவன் இரும்பை வைக்கோலாகவும், வெண்கலத்தை உளுத்த மரமாகவும் எண்ணுகிறான்; அம்பு அவனைத் துரத்தாது, கவண் கற்கள் அவனுக்குத் துரும்பாகும்; அவன் பெருந்தடிகளைத் தாளடிகளாக எண்ணி ஈட்டியின் அசைவை இகழுவான்"* என்று அவனைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இருக்கிற விஷயத்தில் ஒரு மனுஷனாலே என்ன செய்யக் கூடும்? மெய்தான் ஒவ்வொரு சமயத்திலும் ஒரு மனுஷனுக்கு யோபுவின் குதிரை அகப்பட்டு அதின்மேல் ஏறுகிற தைரியமும், அதை நடத்துகிற சாமர்த்தியமும் இருந்தால் அப்போது பெருங்காரியங்களையும் செய்துவிடலாம். ஏனெனில் அந்தக் குதிரையின் தொண்டையில் குமுறல் இருக்கிறது, ஒரு வெட்டுக்கிளியைப் போல அதை மிரட்டலாகாது. அதினுடைய நாசியின் செருக்கு பயங்கரமாய் இருக்கிறது. அது தரை

* யோபு. 41. 26—29.



யிலே தாளடித்துத் தாளடித்து தன் பலத்தில் களித்து, ஆயுதங்களைத் தரித்தவர்களுக்கு எதிராகப் புறப்படும். அது கலங்காமலும் பட்டயத்துக்குப் பின்வாங்காமலும் இருந்து, பயப்படுதலை அலட்சியம்பண்ணும். அம்பறாத்தூணியும், மின்னுகிற ஈட்டியும், கேடகமும் அதின்மேல் கலகலக்கும்போது கர்வமும், மூர்க்கமுங்கொண்டு, தரையை விழுங்கிவிடுகிறதுபோல அது மாவித்து, எக்காளத்தின் தொனிக்கு அஞ்சாமல் பாயும். எக்காளம் தொனிக்கும்போதும் அது நிகி என்று கனைக்கும். யுத்தத்தையும் படைத்தலைவரின் ஆர்ப்பரிப்பையும் சேனைகளின் ஆரவாரத்தையும் தூரத்தில் இருந்து மோப்பம் பிடிக்கும்.*

ஆனால் என்னைப் பிரயாணிகளாகிய நீயும் நானும் சத்துரு வருகிறான் இல்லையே என்று எதிர்பார்க்கவேண்டாம்; அவர்கள் பட்ட பலனைப்பற்றி கேள்விப்படும்போது, நாம் அவர்களைப்பார்க்கிலும் பராக்கிரமம் காட்டலாம் என்று வீம்பு பாராட்டி மனம் மகிழவும் தகாது. சோதனை உண்டாகிற சமயத்தில் சற்றேனும் எதிர்த்துநிற்க இயலாமல் தோற்றுப்போய் விடுகிறவர்கள் வாயிலேதான் இப்படிப்பட்ட வார்த்தைகள் எல்லாம் வரும். இது மெய் என்பதற்கு முன்னே நான் சொன்ன பேதுருவே அத்தாட்சி. அவன் இல்லாத சாமர்த்தியம் எல்லாம் பேசியே பேசுவான். அவனுடைய வீணான மனம் ஏவினபடி எல்லா மனிதரைப்பார்க்கிலும் நான்தான் என் ஆண்டவருக்காக வந்ததை எல்லாம் சகிப்பேன் என்று சொல்லுவான். ஆனால் இவனைப்போல துஷ்டரைக் கண்டவுடன் எவன் அப்படித் தெம்மாடித்தனமாய் ஓட்டம் பிடிப்பான்?

ராஜபாதையிலே இப்படிக்கொத்த கொள்ளைகள் நடக்கிறது என்று கேள்விப்படும்போது, நாம் செய்யவேண்டிய காரியங்கள் இரண்டு உண்டு; அவையாவன:—

மோட்ச பிரயாணிகளின் பயண ஆயுதங்கள்.

முதலாவது: நாம் ஆயுதந்தரித்தவர்களாய்ப் புறப்படவும், கேடகம் இல்லாமல் கால் எடுத்து வைக்காமல் இருக்கவும் வேண்டும். ஏனெனில் இவைகள் இல்லாமையினால் லெவியாதான்மேல் விழுந்த ஒருவன் அதைத் தனக்குக் கீழ்ப்படுத்தும்படி கூடாமல்போயிற்று, இவைகள் நமக்கு இல்லாவிட்டால் அது நமக்கும் அஞ்சமாட்டாது என்பது நிச்சயம். அதினாலே தான் ஞானமுள்ள ஒருவர்: "பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களை எல்லாம் அவித்துப்போடத்தக்கதாக எல்லாவற்

* யோபு. 39. 19—25.

திருக்கும் மேலாக விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாய் நில்லுங்கள்" [a] என்று சொல்லியிருக்கிறார்.

இரண்டாவது: ராஜ சேவகன் ஒருவன் நம்மோடு அனுப்பப்படவும், ராஜாவே நம்மோடேகூட இருக்கவும் நாம் கேட்டுக்கொள்வது நலமாய் இருக்கும். தாவீது என்பவர் மரணப்பள்ளத்தாக்கில் இருக்கையில் இந்தத் துணையால் மிகவும் சந்தோஷப்பட்டார்; மோசே என்பவரும் தேவ துணையில்லாமல் ஒரு அடி வைக்கிறதைவிட நின்ற இடத்திலேயே செத்துப்போகிறேன் என்று சொன்னார். [b] ஆ! என் சகோதரனே, அவர் ஒருவர் மாத்திரம் நம்மோடு வருவாரானால், நமக்கு விரோதமாய் எழும்புகிற பதினாயிரம் பேருக்கும் பயப்படோம். [c] அவருடைய துணை இல்லாவிட்டால், உதவிசெய்யத்தாய் வரும் அகங்காரிகள் எல்லாரும் கொலைசெய்யப்பட்டவர்களுக்குள் விழுவார்கள். [d]

என்மட்டுக்கு, நான் ஒருதரம் இந்தச் சங்கடத்தைப் பட்டேன்; சர்வ தயாபரனுடைய காருண்ணியத்தினால் நீர் பார்க்கிறபிரகாரம் இன்னும் உயிரோடு இருக்கிறேன். என்றாலும் நான் என் புருஷத்துவத்தையிட்டு மேன்மைபாராட்டல் ஆகாது. இப்படிப்பட்ட துஷ்டனை நான் மறுபடியும் சந்தியாவிட்டால் அதைப்போல சந்தோஷம் இல்லை; இன்னும் நாம் மோசங்கள் உண்டாகும் எல்லையைக் கடந்து தீரவில்லை. எப்படியும் சிங்கமும் கரடியும் என்னை விழுங்கிப்போடாததினாலே, தேவன் அசுத்த சத்துருவாகிய பெலிஸ்தியன் கையிலே என்னை ஒப்புக்கொடுக்கமாட்டார் என்றும் நம்புகிறேன் என்று சொன்னதும் அல்லாமல்,

8. 7. 4.

கள்ளர் கையில் விழுந்தாயோ?
அற்பவிசுவாசியே!
நீ கொள்ளையிடப்பட்டாயோ?
அற்பவிசுவாசியே!
இதை நீ
விசுவாசித்தவனே.
உனக்குள்ள விசுவாசம்
வலுவாக இருந்தால்
பதினாயிரம் பேரையும்
அதமாக்கிப் போடுவாய்;
அல்லாவிட்டால்
மூவரை வெல்லமாட்டாய் என்று பாடுகிறான்.

[a] எபே. 6. 16. [b] யாத். 33. 15.
[c] சங். 3. 5—8: 27. 1—3. [d] ஏசா. 10. 4.



## முகஸ்துதி சந்திப்பு.

அதன்பின் அவர்கள் இருவரும் வழிநடந்துபோனார்கள்; அறிவீனனும் அவர்களைப் பின்தொடர்ந்தான். தாங்கள் நடக்கிற ராஜபாதையைப்போல் நேராய்ப் போகிற ஒரு இடைப்பாதையின்[1] துவக்கம்மட்டும் அவர்கள் போனார்கள். அப்புறம் இரண்டில் எதின்வழியாய் நடக்கலாம் என்று அவர்களுக்குத் தெரியாமல்போயிற்று; ஏனெனில் இரண்டும் ஒன்றுபோல் நேர்வழியாகக் காணப்பட்டன. ஆதலால் என்ன செய்யலாம் என்று சற்றுநேரம் அவ்விடத்திலே நின்று ஆலோசித்தார்கள். வழியின் மயக்கத்தையிட்டு அவர்கள் ஆலோசித்துக்கொண்டிருக்கவே: கன்னங்கரேர் என்ற மேனியின்மேல் ஒளிமயமான உடுப்பைத் தரித்திருந்த ஒருவன் வந்து, நீங்கள் இங்கே நின்றுகொண்டிருக்கிற காரணம் ஏது? என்று கேட்டான். அதற்கு அவர்கள்: நாங்கள் உச்சிதபட்டணத்திற்குப் பிரயாணம் போகிறோம், இந்த இரண்டு வழிகளில் எதின் வழியாய் நடக்கலாம் என்று தெரியாமல் திகைத்துநிற்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு முகஸ்துதி: அப்படியானால் என் பின்னே வாருங்கள்,[2] நானும் அங்கேதான் போகிறேன் என்று சொன்னான். நல்லது வருகிறோம் என்று அவன் பின்னாலே போனார்கள். போகப்போக அந்த வழி அவர்கள் நாடிப்போகும் பட்டணத்துக்குத் தூர விலகி விலகிக் கடைசியாக எதிர்த்திசையாகவே கடந்துக்கொண்டு போயிற்று. அவர்கள் பின்னும் அவனை விடாமல் பின்சென்றார்கள். அவர்கள் ஆகா! வழிதப்பிப் போனோம் என்று அறிந்துகொள்ளுகிறதற்கு முன்னமே அவன் அவர்களை ஒரு வலைக்குட்படுத்திவிட்டான். இருவரும்

முகஸ்துதி பிரயாணிகளை மோசம்பண்ணுகிறது.

[1] இருவழிகள். கிறிஸ்தவர்கள் தாங்கள் நடந்துகொள்ளவேண்டிய வகையைப்பற்றிச் சிலசமயம் ஒன்றும் அறியாமல் கலங்கிப்போகிறார்கள்: அவர்கள் வேதத்தை ஆராயாமலும், ஜெபஞ்செய்யாமலும், தாங்களே மனதில் சம்பார ஆலோசித்து, மற்றவர்களுடைய ஆலோசனையையும் கேட்டு நடந்தால் அவர்கள் தப்பான வழிகளில் விழுந்துவிடலாம்.

[2] முகஸ்துதியைப் பின்பற்றுதல். அவரவர் தங்களுடைய நற்கிரியையின் மூலமாய் இரட்சிப்பைப் பெறலாம் என்ற போதகங்களுக்கு இணங்கிக்கொள்ளுகிறதைக் குறிக்கிறது. இப்படி இணங்கிப்போகிறவர்கள் சத்தியவழியை விட்டுப் பிரிந்து கள்ளப்போதகியாகிய வலைக்குள் அகப்படுகிறார்கள்.

வலையில் அகப்பட்டுக்கொண்டு, என்ன செய்யலாம் என்று தெரியாமல், ஒருவரையொருவர் திருகத் திருகப் பார்த்தார்கள். அச்சணமே தங்கள் வழிகாட்டியின்மேல் இருந்த ஒளிமயமான உடுப்பு தானாக அவிழ்ந்து விழுந்துவிட அவனுடைய சுயரூபம் வெளிப்பட்டது; உடனே தாங்கள் இருக்கிற இடம் இன்னதென்று கண்டார்கள். அவர்கள் தங்கள் சாமர்த்தியத்தால் அவ்விடத்தை விட்டு வெளியேறக் கூடாதிருந்தபடியால், அழுது, அங்கலாய்த்துக்கொண்டு கொஞ்சநேரம் வலைக்குள்ளேயே கிடந்தார்கள்.

கிறி. அப்பொழுது கிறிஸ்தியான் தன் கூட்டாளியைப் பார்த்துச் சொல்லுகிறான்: நானே மோசத்துக்குள் அகப்பட்டுக்கொண்டதை இப்போது அறிகிறேன். அந்த இடையர் முகஸ்துதிக்கு இடங்கொடுக்கவேண்டாம் என்று சொல்லவில்லையா? "பிறனுக்கு முகஸ்துதி செய்கிறவன் அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான்"[a] என்று ஒரு ஞானவான் சொல்லிய வாசகம் சத்தியம் என்று நாமே கண்டுகொண்டோம் என்றான்.

திடநம். அதற்குத் திடநம்பிக்கை மறுமொழியாகச் சொல்லுகிறான்: அண்ணா! அவர்கள் வழியின் விபரங்களைக் காட்டும் ஒரு சீட்டையும் தந்தார்களே, அதைப் படித்துப்பார்க்கவும் மறந்துபோய் இப்படி அதிலேயும் அகப்பட்டுக்கொண்டோம். இந்த விஷயத்தில் தாவீது என்பவர் நம்மைவிடப் புத்திசாலியாய் இருக்கிறார். ஏனெனில் அவர்: "மனுஷரின் செய்கைகளைக்குறித்து நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக் கொண்டிருக்கிறேன்"[b] என்று சொன்னார் என்றான்.

இவ்வண்ணமாக அவர்கள் பலவாறாகச் சொல்லி வலைக்குள்ளேயே புலம்பிக்கொண்டு கிடந்தார்கள்.

அவர்கள் வலையில் அகப்பட்டது.

கடைசியாக ஜோதிமயமான[1] ஒரு ஆள், மெல்லிய மணிக்கயிறுகள் தொங்கும் ஒரு சவுக்கும் கையுமாய்ப் புறப்பட்டுவருகிறதை அவர்கள் கண்

1 ஜோதிமயரூபி. இது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது. விசுவாசிகள் வழிவிலகிப்போகையில், அவர் கர்த்தர் பாவ உணர்வோடு அவர்களைச் சந்திக்கப் பின்தொடர்ந்து அவர்கள் தங்கள் வழிகளின் பொல்லாப்பைக் கண்டு மனந்திரும்புவதற்கு வழிநடத்தி, கிறிஸ்துவில் நம்பிக்கைவைக்கும்படி திரும்பவும் அவர்களைக் கொண்டுவருகிறார்.

a நீதி. 29. 5. b சங். 17. 4.



டார்கள். அவர் கிட்டவந்தவுடனே அவர்களை நோக்கி: நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்? இவ்விடத்தில் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர்கள்: நாங்கள் சீயோனுக்குப் போகும் பிரயாணிகளாய் இருக்கிறோம்; வந்த வழியில் ஒளிமய உடைதரித்த ஒரு கறுப்பன் எங்களை இப்படி வழிவிலகச் செய்துவிட்டான். நானும் அங்கே போகிறவன்தான், என் பிறகாலே வாருங்கள் என்று எங்களை ஏமாற்றி இப்படி வலைக்குள் மாட்டிவிட்டான் என்றார்கள்.

ஒளிமயரூபி அவர்களை விசாரித்தல்.

அதற்கு சவுக்குப் பிடித்துவந்தவர் சொல்லுகிறார்: அவன்தான் ஒளியின் வேஷம் தரித்த முகஸ்துதி என்று அழைக்கப்படுகிற ஒரு கள்ள அப்போஸ்தலன்[a] என்று சொல்லி வலையை அறுத்து அவ்விருவரையும் வெளியே வரவிட்டார். அப்புறம் என் பிறகாலே வாருங்கள் என்று கூட்டிக்கொண்டுபோய் அவர்கள் ராஜபாதையில் இருந்து பிரிந்த இடத்தில் சேர்த்தார்.

பின்பு அவர்: நீங்கள் நேற்று இரவு எங்கே தங்கியிருந்தீர்கள் என்று கேட்டார்; ஆனந்தமலை இடைச்சேரியில் தங்கியிருந்தோம் என்றார்கள். வழியின் விபரங்களை எழுதிய ஒரு சீட்டை அவர்கள் உங்களுக்குத் தரவில்லையா? என்று கேட்டார்; தந்தார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். நீங்கள் அந்த இரு வழியின் தொடக்கத்தில் நின்று ஆலோசிக்கும்போது அந்தச் சீட்டை எடுத்து வாசித்துப் பார்க்கவில்லையா? என்று கேட்டார்; இல்லை என்றார்கள். ஏன் வாசிக்கவில்லை என்று கேட்டார்; மறந்துபோனோம் என்றார்கள். முகஸ்துதிக்கு எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்று இடையர் உங்களுக்குச் சொல்லவில்லையா? என்று கேட்டார்; ஆம் சொன்னார்கள். ஆனால் இப்படி வயிற்றுப் பிள்ளை வழுகி விழுகிறதுபோல் பேசுகிற இவன் நம்மை ஏமாற்றுவானோ என்று நாங்கள் எண்ணிவிட்டோம் என்றார்கள்.[b]

அப்புறம் அவர் அவர்கள் இருவரையும் படுக்கவைத்து, அவர்கள் படித்தபின்பு இனி அவர்கள் நடந்து கொள்ளவேண்டிய நல்வழியைப் போதிக்கும்படி[c] தமது கையிலிருந்த சவுக்கால் தண்டித்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன்.

ஒளிமயரூபி தண்டித்தல்.

a தானி. 12. 32. 2 கொரி. 11. 13, 14.
b ரோம. 16. 17, 18. c உபா. 25. 2. 2 நாளா. 6. 26, 27.

அவர் அவர்களை வீதி அடிக்க அடிக்க, "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாய் இருந்து மனந்திரும்பு"[5] என்று சொல்லிக்கொண்டே அடித்தார். அடித்தானபின்பு, இனிமேல் இடையர் சொன்ன போதனைகளை மனதில் வைத்துக்கொண்டு உங்கள் வழியிலே நடவுங்கள் என்று சொன்னார். அவர்கள் அவர் செய்த உபகாரங்களுக்காக நன்றிசெலுத்தி ராஜபாதை வழியாக மெதுவாய் நடந்து:

வாருங்கள், வாருங்கள்
வந்தெங்களைக் கேளுங்கள்;
பாருங்கள், பாருங்கள்
பட்டபாட்டைப் பாருங்கள்;
வழிதப்பிப் போவோர்க்கு வரும் வாழ்வைப் பாருங்கள்—வாருங்கள்.

உத்தம பத்தியைத்
தள்ளும் பிரயாணிகள்,
இச்சக மூர்க்கரால்
ஏமாந்துபோய்க் கண்ணியில்;
சிக்குண்டு அலறுவார், தேவனே தண்டிசெய்வார்—வாருங்கள்.

தேவனை நினைந்து
தெத்தளர்ந்து விட்டாலும்,
ஏகனே! திரும்பவும்
ஏங்க, ஏங்க அடிப்பார்;
எச்சரிப்பாய் நடக்க, எச்சரிக்கையாய் இரு—வாருங்கள்

என்று பாடிக்கொண்டே போனார்கள்.

## நாஸ்திக சாஸ்திரி சந்தித்தல்.

அவர்கள் இப்படிப் பாடிப்பாடிச் சற்றுதூரம் வழிபோகவே, அன்னநடையும், ஆனைக் கைவீச்சுமாய் தங்களுக்கு எதிராக தனியாய் வருகிற ஒருவனைத் தூரத்திலே கண்டார்கள். பிரயாணிகளைச் சந்திக்கவேண்டும் என்றே அவன் வந்தான். அவனைக் கண்டவுடனே கிறிஸ்தியான் தன் தோழனைக் கூப்பிட்டு: அதோ சீயோனுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு, நம்மைச் சந்திக்கும்படி எதிரே வருகிற மனுஷனைப் பார் என்றான். ஆமாம், அவன் வருகிறது அதோ தெரிகிறது. அவனும்

அவர்கள் நாஸ்திக சாஸ்திரியைச் சந்தித்தல்.

5 வெளி. 3. 19.



நமக்கு ஆசைவார்த்தை சொல்லி, நாம் மோசம் போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருப்போமாக என்று நம்பிக்கை சொன்னான்.

இதற்குள்ளாக அவனும் மெதுவாய் நடந்து நடந்து, கிட்ட வந்துவிட்டான்; அவனுக்கு நாஸ்திகன்[1] என்று பேர் வழங்கப்பட்டது. நீங்கள் எங்கே போகிறீர்கள்? என்று அவன் அவர்களைக் கேட்டான்.

கிறி. நாங்கள் சீயோன் மலைக்குப் போகிறோம்.

அவன் சிரிக்கிறான்.

இந்த உத்தரவைக் கேட்டவுடனே நாஸ்திகன் விழுந்து விழுந்து சிரித்தான்.

கிறி. அதென்ன அப்படிச் சிரிக்கிறீர்?

நாஸ்தி. இவ்வளவு சங்கடமான பயணத்தில் தலையிட்டுக்கொண்ட உங்களுடைய மதியீனத்தை நினைத்துத்தான் சிரிக்கிறேன். நீங்கள் படுகிற கஷ்டத்துக்கு, இந்த வழிநடைத் தாபமேதவிர, வேறு லாபத்தை நீங்கள் காணப்போகிறதில்லை; இதினாலும் எனக்குச் சிரிப்பு வருகிறது.

கிறி. அதென்ன அப்படிப் பேசுகிறீர்? நாங்கள் உச்சிதப் பட்டணத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டோம் என்று நினைக்கிறீரோ?

நாஸ்தி. ஏற்றுக்கொள்ளப்படுகிறதேது? சேர்த்துக்கொள்ளப்படுகிறதேது? நீங்கள் சொப்பனம் கண்டு சொல்லும் அந்த இடம் இவ்வையகம் முழுவதிலும் போய்த் தேடினாலும் கிட்டாதே.

கிறி. ஆனாலும் மறுலோகத்தில் அது இருக்கிறது.

நாஸ்தி. நான் என் வீட்டிலேயாய் என் சுயதேசத்தில் இருந்தபோது, நீங்கள் இப்போது சொல்லுகிறீர்களே அந்த இடத்தைப்பற்றிக் கேள்விப்பட்டேன்; கேள்விப்பட்டபடியே அதைப் பார்க்கும்படி புறப்பட்டேன்; நான் மூட்டை கட்டிப் புறப்பட்டு இதோடு இருபது வருஷமாயிற்று. இரு

மோட்சமே இல்லை என்கிறான்.

1 நாஸ்திகன் என்பது, தேவன் இல்லை என்று சொல்லி, எல்லா மார்க்கங்களையும் குறித்து நகைப்போரைக் குறிக்கிறது. இவர்களில் சிலர் துவக்கத்தில் பக்தியுள்ளவர்களாய் இருந்து, பாவத்தில் விழுந்து அதில் நிலைபெற்றபின்பு, வரும் நியாயத்தீர்ப்பைப்பற்றிய பயத்திலிருந்து, தங்கள் மனதைத் தேற்றிக்கொள்ளும்படியாக எல்லா மார்க்கமும் பித்தலாட்டந்தான் என்று சொல்லுகிறார்கள்.

பதுவருஷமாய் அந்தப் பட்டணத்தைத் தேடியும், புறப்பட்ட அன்று கண்டதைவிட அதிகம் ஒன்றும் காணவில்லை. [a]

கிறி. அப்படிப்பட்ட ஒரு நகரத்தைக் கண்டுபிடிக்கலாம் என்று நாங்கள் கேட்டும் இருக்கிறோம், நம்பியும் இருக்கிறோம்.

நாஸ்தி. நானும் வீட்டில் இருக்கும்போது அப்படி நம்பா விட்டால் இவ்வளவு தூரம் அலைந்து வந்து தேடியிருக்கமாட்டேன்; அப்படிப்பட்ட ஒரு இடம் உண்டு என்பது மெய்யானால் நான் கண்டுபிடித்திருப்பேன்; ஏனெனில், உங்களைவிட அதிகத் தொலைதூரம் போய்த் திரும்பிவருகிறேன், ஒரு இடத்தையும் காணோம்; ஒரு குடிசையையும் காணோம் - நான் அகப்படும் என்று தேடிப்போன பொருள் இப்போது இல்லை என்று கண்டுபிடித்ததினால், முன்னே அருவருத்துத் தள்ளினவைகளை மறுபடியும் அநுசரித்து மனமகிழப்போகிறேன் என்றான்.

கிறி. அப்பொழுது கிறிஸ்தியான் தன் தோழனாகிய திடநம்பிக்கையண்டை போய், இந்த மனுஷன் சொல்லுகிறது மெய்யாய் இருக்குமா? என்று கேட்டான்.

திடநம். உடனே திடநம்பிக்கை சொல்லுகிறான்: பத்திரம், இவனைப்போல இதமான வார்த்தைகளைப் பேசுகிற ஒருவனையும் நாம் சட்டைபண்ணக்கூடாது; இப்படி ஆனதும் பேசின ஒருவன் பேச்சைக் கேட்டு, பட்ட பாட்டை நினைத்துக்கொண்டோம். என்ன! சீயோன் மலை இல்லையா? ஆனந்த மலைச் சிகரத்தில் இருந்து நாம் அதின் அலங்கார வாசலைக் காணவில்லையா? மேலும் இப்போது நாம் விசுவாசித்து நடக்க வேண்டாமா? [b] நாம் நடந்துபோவோம், சவுக்குப் பிடித்திருக்கிற சம்மனசு வந்து நம்மைப் பிடித்து அடித்தாலும் அடிப்பார்; நியாயமானபடி நீர் எனக்குப் புத்திசொல்லவேண்டியது; ஆனால் இப்போது நான் அதை உமது காதுக்கு ஏறச் சொல்லுகிறேன் கேளும்: "என் மகனே, அறிவைத் தரும் வார்த்தைகளை விட்டு விலகச்செய்யும் போதகங்களை நீ கேளாதே." [c] என் சகோதரமே, என் பேச்சைக் கேளும், ஆவலுக்குச் செவிகொடுக்கவேண்டாம். நாமோ ஆத்தும ரட்சிப்புக்கு விசுவாசிக்கிறவர்களாய் இருப்போமாக [d] என்றான்.

---

a பிர. 10. 15. எரே. 17. 15. b 2 கொரி. 5. 6.
c நீதி. 19. 27. d எபி. 10. 39.



கிறி. என் சகோதரனே! நான் சத்தியத்தைக்குறித்து சந்தேகப்பட்டதினாலே அந்தப்படி உம்மிடத்தில் கேள்விகேட்காமல், உம்மைச் சோதித்து, உமது உத்தம இருதயத்தின் கனி ஒன்றை உம்மிடத்தில் இருந்து வெளிப்படுத்துகிறதற்காகவே அப்படிக் கேட்டேன். இந்த மனிதன் இவ்வுலகத்தின் தேவனால் குருடாக்கப்பட்டதை அறிவேன்; சத்தியத்தைப்பற்றிய விசுவாசிகளும், சத்தியத்தினால் ஒரு பொய்யும் உண்டாயிராதென்று அறிந்திருக்கிறவர்களுமாகிய நாம் இருவரும் நடந்து போவோம் வாரும் என்றான். [a]

திடநம். அதற்குத் திடநம்பிக்கை: நான் தேவனுடைய மகிமையை அடைவேன் என்கிற நம்பிக்கையினால் இப்பொழுது களிகூருகிறேன் என்று சொன்னான். அப்பால் இவர்கள் இருவரும் நாஸ்திகனைச் சட்டைபண்ணாமல் தங்கள் பாதையில் நடந்துபோனார்கள். அவனோ குலுங்கக் குலுங்கச் சிரித்துக்கொண்டு தன் வழியே போனான்.

## மயக்கபூமி சம்பாஷணை.

பிரயாணிகள் மயக்கபூமி வந்து சேர்ந்தது.

அப்பொழுது நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், பிரயாணிகள் இருவரும் தங்கள் வழியே நடந்து ஒரு புது நாட்டில் சேர்ந்தார்கள். அந்நாட்டுப் பிரஜையை அல்லாமல், அந்நிய நாட்டார் யார் வந்தாலும், அந்தத் தேசத்துக் காற்று அவர்களை மயக்கித் தூக்கமூட்டிக் கிடத்திவிடும். இவ்விடத்தில் திடநம்பிக்கை மந்தம் பிடித்துத் தூங்கும்படி ஆசைப்பட்டான். அவன் கிறிஸ்தியானைக் கூப்பிட்டு: அண்ணா! தூக்கம் கண்ணை மயக்கிவிட்டது; ஆகையால் சற்று நேரம் இவ்விடத்தில் படுத்திருந்து போவோம் என்றான்.

கிறி. கூடவே கூடாது. சற்றுத் தூங்கினால் அப்புறம் எழுந்திருக்கவேமாட்டோம்.

திடநம். என்ன அண்ணா! அப்படிச் சொல்லுகிறீர்? கஷ்டவாளிக்கு நித்திரை இன்பம் அல்லவா? நாம் சற்றே தூங்கிக்கொண்டால் இளைப்பு தீர்ந்துபோகுமே.

கிறி. ஆனந்தமலைக் கோனர் ஒருவர், மயக்க பூமியே சகம்

---

a 1 யோவா. 2. 21.

என்று தூங்கிவிடல் ஆகாது[1] என்று சொன்னதை மறந்துபோனீரோ? நாம் தூக்கத்திற்கு இடங்கொடுக்கக்கூடாது என்பதே அவர் சொன்னதின் கருத்து; "ஆகையால் மற்றவர்கள் தூங்குகிறதுபோல் நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாய் இருக்கக்கடவோம்."[a]

நிடநம். நான் சொன்னது தப்பிதம் என்று அறிக்கையிடுகிறேன். நான் ஒண்டியாய்மாத்திரம் இவ்விடத்திற்கு வந்திருந்தால், நித்திரைசெய்து சாகவேண்டியதிருக்கும். "ஒண்டியாய் இருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்"[b] என்று ஞானியார் சொன்னது சரி என்று காண்கிறேன். இதுமட்டும் உமது துணை எனக்கு அகப்பட்டது பெரிய இரக்கந்தான். உம்முடைய பிரயாசத்துக்குத்தக்க பலன் உமக்கு அகப்படும் என்றான்.

கிறி. அப்பொழுது கிறிஸ்தியான்: நல்லது, இந்த நாட்டின் தூக்கம் மாறும்படியாக, ஒரு நல்ல சம்பாஷணையைத் துவக்குவோமாக என்றான்.

நிடநம். மெத்த சந்தோஷம்; அதுவே என் மனம்.

கிறி. எந்த விஷயத்தில் இருந்து சம்பாஷிக்கத் தொடங்கலாம்?

நிடநம். தேவன் நம்மிடத்தில் ஆரம்பித்த கிருபையில் இருந்து துவக்கிப் பேசுவோமே; ஆனால் தயவுசெய்து நீர்தான் முந்திப் பேசவேண்டும்.

கிறி. இந்தப் பாட்டை முந்திப் பாடுகிறேன் கேளும் என்று கிறிஸ்தியான் சொல்லி,

"Stephanos."

1. மோட்சம் போகும் சுத்தருக்கு
   தூக்கம் உண்டானால்,
   வந்து இந்தச் சம்பாஷணை—கேளுங்கள்.
2. தூங்கும் முகம், மூடின கண்ணும்
   மாறிப்போகவே,
   எப்படியும் புத்தி கேட்க—வாருங்கள்.

---

[1] மயக்கபூமி என்பது, துன்பம் இல்லாத சமாதான காலத்தையும் லோகவாழ்வுள்ள சமயத்தையும் குறிக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் கடினமாகத் தூங்குகிறவர்களாய் மாறி தங்கள் தேவபக்தியின் ஜீவியத்தை முற்றிலும் மறந்துபோகிறார்கள். உத்தம கிறிஸ்தவர்களுடன்கூட செய்யும் ஆவிக்குரிய சம்பாஷணைகள் இந்த மோசத்தில் இருந்து விலகிக்கொள்ளப் பெரிய உதவியாய் இருக்கும்.

[a] 1 தெச. 5. 6. [b] பிர. 4. 9.



3. சுத்தர்நேசம் தக்கபடி
   காப்பாற்றப்பட்டால்,
   சாத்தான் வந்து தூங்கென்றாலும்—தூங்காரே

என்று பாடினான். பாடி முடிந்தவுடனே: கிறிஸ்தியான் நான் ஒரு கேள்விகேட்கிறேன் என்று சொல்லி, இப்படிப் பிரயாணம் செய்யும்படியான ஆசை முதல் முதல் உனக்கு எப்போ உண்டாயிற்று? என்று கேட்டான்.

நிடநம். என் ஆத்துமவாழ்வைப்பற்றிய கவலை முதலாவது எப்போது எனக்குள் ஆரம்பித்தது என்பதா உம்முடைய கேள்வியின் கருத்து?

கிறி. ஆமாம், அதுதான் என் கருத்து.

நிடநம். வெகுகாலமாய் எங்கள் சந்தை வீதியில் காணப்பட்டதும், விற்கப்பட்டதுமான பொருட்களின்மேல் தாபந்தம் கொண்டிருந்தேன். அந்தத் தாபந்தத்தோடே நான் இதுவரையும் இருந்தது மெய்யானால், அவைகள் என்னைக் கெடுக்கும் அழிவுக்கும் நேராக ஆழ்த்திப்போடும் என்றே நம்புகிறேன்.

கிறி. எந்தப் பொருட்கள்மேல் அப்படித் தாபந்தம் கொண்டிருந்தீர்?

நிடநம். உலகத்தின் சுகவாழ்வுகள், திரவியங்கள் என்ன உண்டோ அவை எல்லாவற்றின்மேலும் நான் ஆசைகொண்டிருந்தேன். அதுவுமன்றி, பெருந்தீனி, உல்லாசம், மதுபானம், சத்தியம்பண்ணுகிறது, அசத்தியம் பேசுகிறது, அசுத்தங்கள், ஓய்வுநாளை மீறுதல், பின்னும் ஆத்துமநாசத்துக்கு ஏற்றவை எவ்வெவ்வை உண்டோ அதின்மேல் எல்லாம் ஆசைகொண்டிருந்தேன். ஆனால் கடைசியாக உம்மாலும், மாயாபுரிச் சந்தையிலே விசுவாசத்தின் நிமித்தமும், நல்லொழுக்கத்தின் நிமித்தமும் கொலைசெய்யப்பட்ட உத்தமநேசராகிய உண்மையாலும் கேள்விப்பட்ட ஞானபோதனைகளை ஆராய்ந்து கவனித்தபோது, நான் கொண்டிருக்கும் தாபந்தங்களின் முடிவு சாவுதான் என்றும்,[a] இப்படிப்பட்டவைகளின் நிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும் என்றும்[b] திட்டமாய் அறிந்துகொண்டேன்.

நம்பிக்கைக்கு முன் னின நிலைமை.

---

[a] ரோ. 6. 21—23. [b] எபே. 5. 6.

கிறி. இந்த அறிவு உமது இருதயத்தில் பலங்கொள்ளும்படியாக உடனேதானே இணங்கிப்போனீரா?

திட.நம். இல்லை; பாவத்தின் தீமைகளையாவது, அதினால் சம்பவிக்கும் ஆக்கினைகளையாவது அறிந்துகொள்ளும்படி உடனே எனக்கு இஷ்டம் இருக்கவில்லை; என் மனம் தேவ வசனத்தால் முதலாவது அசைக்கப்பட்டபொழுது, அதின் வெளிச்சத்தைப் பார்க்காதபடிக்கு என் கண்களை மூடிக்கொள்ள வெகுவாய்ப் பிரயாசப்பட்டேன்.

கிறி. தேவ ஆவியானவர் உம்மில் நடப்பிக்க ஆரம்பித்த கிரியைகளுக்கு, நீர் துவக்கத்தில் இணங்காமல் போனதற்குக் காரணம் என்ன?

ஆவியின் கிரியையை அசட்டைசெய்த முகாந்தரங்கள்.

திட.நம். காரணங்களா? 1. இது தேவனால் எனக்குள் நடக்கும் கிரியைதான் என்று நான் அறியாமல் போனேன். பாவங்களைக் காணும்படி செய்கிறதினாலேயே, முதலாவது தேவன் ஒரு பாவியைக் குணப்படுத்தும்படி துவக்குகிறார் என்று நான் ஒருக்காலும் நினைத்ததில்லை. 2. பாவம், இப்பொழுதும் என் மாமிசத்துக்கு அதிக மதுரமாகவே காணப்பட்டது; அதை விட்டுவிட எனக்கு மனமே வரவில்லை. 3. என் பழைய தோழருடைய சகவாசமும், அவர்களோடுகூடிச் செய்யும் வேலைகளும், எனக்கு அதிகப் பிரியமாய் இருந்ததினால் அவர்களை விட்டுப் பிரிகிறது எப்படி என்று தெரியாமல் இருந்தது. 4. பாவ உணர்வு என்னுடைய மனதில் வருகிற சமயத்தில் உண்டாகிற வியாகுலமும், பயங்கரமும் என்னால் சகிக்கக் கூடாது; அந்த நினைவே வரவேண்டியதில்லை என்கிற எண்ணம் எனக்கு இருந்தது.

கிறி. நீர் சொல்லுகிறதைப் பார்த்தால் சிலவேளைகளில் உமது மனவருத்தம் எல்லாம் நீங்கிப்போகுமோ?

திட.நம். ஆம், மெய்யாகவே நீங்கிப்போகும்; ஆனால் மறுபடியும் என் மனதுக்குள் வந்துவிடும். அந்த வேளையில் நான் முன்னிலும் கெட்டவனாய் இருப்பேன்.

கிறி. எது பாவங்களைத் திரும்ப உமது மனதுக்குள் இழுத்துக்கொண்டுவரும்?

திட.நம். ஒன்று இழுத்துக்கொண்டு வரும்; இல்லை, அநேகம் இருக்கின்றன.

1. ஒரு நல்ல மனுஷனை நான் வீதியிலே கண்டால்; அல்லது,



2. யாராவது வேதம் வாசிக்கிறதைக் கேட்டால்; அல்லது,

பாவங்களை நினைப்பிக்கச் செய்த காரணங்கள்.

3. எனக்குத் தலைவலி துவக்கினால்; அல்லது,

4. என் அயலாரில் சிலர் பாயும் படுக்கையுமாய்க் கிடக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால்; அல்லது,

5. செத்துப்போன யாருக்காவது சாவுமணி அடிக்கும் சத்தம் என் காதில் விழுந்தால்; அல்லது,

6. என் சாவைப்பற்றிய சிந்தையே வந்துவிட்டால்; அல்லது,

7. யாராவது சடுதியிலே செத்துப்போனார்கள் என்று கேள்விப்பட்டால்; அல்லது,

8. விசேஷமாய் நான் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்கிற கவலை சீக்கிரம் என்னைப்பற்றி உண்டானால், அப்பொழுதே என் பாவங்கள் எல்லாம் என் முன்பாக வந்து நின்று, எனக்கு வியாகுலத்தையும் பயங்கரத்தையும் கொடுக்கும்.

கிறி. இவைகளால் உமது மனதில் உண்டாகும் பாவத்தின் வியாகுலங்களை, நீர் எவ்விதமாயாவது மாற்றிக்கொள்ளக் கூடுமா?

திட.நம். இல்லை, கூடாது; அது என் மனச்சாட்சியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளுகிறது; அப்புறம் நான் மறுபடியும் பாவஞ்செய்யும்படி ஆசைப்பட்டால், (என் மனம் பாவத்தினின்று திரும்பிப்போனாலும்) அது எனக்கு இரட்டிப்பான மனவேதனையாகவே இருக்கும்.

கிறி. அந்தச் சமயத்தில் நீர் என்ன செய்வீர்?

திட.நம். நான் என் நடக்கைகளைச் சீர்ப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைப்பேன்; அல்லது இனி நமக்கு ஆக்கினைதான் கதி என்று நினைத்துக்கொள்ளுவேன்.

கிறி. நீர் உம்மைச் சீர்ப்படுத்தும்படி முயற்சிசெய்தீரா?

திட.நம். ஆம், முயற்சிசெய்து, என் பாவங்களில் இருந்து விலகி ஓடினதுமாத்திரம் அல்ல; பாவிகளுடைய கூட்டத்தையும் விட்டு விலகி, தனிஜெபம், வேதவாசிப்பு, பாவத்துக்காக அழுதல், சத்தியத்தையே பேசுதல் முதலிய நன்மார்க்கமான விஷயங்களில் தலையிட்டுக்கொண்டேன். இன்னும் நான் முயற்சிசெய்துவந்த கிரியைகளின் பேரைச் சொன்னால் அதிகமாகும்.

கிறி. அப்பொழுது நீர் உம்மைக்குறித்து திருப்தியாக என்னிக்கொண்டீரா?

திடநம். அந்த திருப்தியான எண்ணமும் கொஞ்சநாளைக்குத்தான் இருந்தது; என் வியாகுலங்கள் மறுபடியும் என் இருதயத்தின்மேல் விழுந்தது; அது விழவே, அது என் சீர்ப்படுதலின் கழுத்தை முறித்துப்போட்டது.

கிறி. நீர் சீர்திருந்திப்போனபின்பே, அந்த வியாகுலம் மறுபடியும் வந்தது எப்படி?

திடநம். வேறு அநேக விஷயங்கள் அதை இழுத்துக்கொண்டுவந்தது; அவைகளில் விசேஷமாக, "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல் இருக்கிறது."[a] "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுகிறதில்லையே."[b] "நீங்களும் உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையைமாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள்"[c] என்ற வாசகங்களும், இவைபோன்ற வேறு அநேக வாக்கியங்களுந்தான். இவ்வசனங்களை நானே எனக்குள் தியானிக்கையில், பின்வருகிறபடி நான் எண்ணினேன்: என்னுடைய நீதியெல்லாம் கந்தையாய் இருக்கிறதானால், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் ஒரு மனுஷனும் நீதிமானாக்கப்படுகிறதில்லையானால், எல்லாவற்றையும் செய்தபின்பும், நாம் அப்பிரயோஜனமான ஊழியக்காரரானால், அப்பொழுது நியாயப்பிரமாணத்தின் மூலமாய் நித்திய மோட்சத்தைப் பெற நினைக்கிறதும் பைத்தியம் அல்லவா என்று எண்ணினேன். பின்னும் நான் மனதில் நினைக்கிறேன்; ஒரு மனுஷன் ஒரு கடையில் வாடிக்கையாய்ச் சாக்குவாங்கி ஆயிரம் ரூபாய் தொகையாகிவிட்டது என்று வைத்துக்கொள்ளுவோம்; கடன் தொகை ஆயிரமானதற்கு அப்புறம், அவன் வாங்கும் சாமான்களுக்கு எல்லாம் ரொக்கமாய்ப் பணம் செலுத்திவந்தாலும், பழைய ஆயிரம் ரூபாய் கடைக்காரனுடைய கணக்குப் புஸ்தகத்தில் இருந்து நீக்கப்படாவிட்டால், அவன் இவன்மேல் பிரியாது செய்து அதைக் கொடுத்துத் தீர்க்குமளவும் காவலில் அடைக்கலாமே என்று நினைத்தேன்.

கிறி. இந்த உபமானத்தை நீர் உமக்கு எப்படிச் சாட்டிக்கொண்டீர்?

---

[a] ஏசா. 65. 6. [b] கலா. 2. 16. [c] லூக். 17. 10.



திடநம். சாட்டிக்கொண்டது இப்படித்தான்; நான் என் பாவத்தினால் தேவனுக்குப் பெரிய கடன்காரனாகிவிட்டேன். என் சீர்திருந்தின செய்கைகள், என் பாவங்களின் தொகையை ரத்துப்பண்ணமாட்டாது; ஆதலால் என் தற்கால சீர்திருத்தத்தோடு அவருக்கு இன்னும் கடன்காரனாகவே இருக்கிறேன். ஆனால் முந்தின என் மீறுதலினால் நான் என்மேல் வருவித்துக்கொண்ட ஆக்கினையில் இருந்து என்னமாய்த் தப்பிக்கொள்ளக்கூடும்? என்பதாக சிந்தித்தேன்.

கிறி. நல்ல உபமானந்தான்; அப்புறம் சொல்லும்.

திடநம். நீர் அடைந்த காலமுதல் என் மனதை வதைத்த வேறொரு எண்ணம் என்னவென்றால், நான் இப்பொழுது நடப்பிக்கும் முதல்தரமான செய்கையை அட்பமாய் ஆராய்ந்தால் அதிலும் பாவத்தைக் காண்கிறேன். புதிதான பாவம் என் நலமான நடக்கைகளுக்குள் இப்பொழுதும் கலந்துகொள்ளுகிறது.

காரியம் இப்படி இருப்பதால், என்னைக்குறித்தும் என் செய்கைகளைக்குறித்தும் முன் எனக்கு இருந்த வீண் பெருமையை அல்லாமல், என் முந்தின ஜீவியம் குற்றமற்றதாய் இருந்தபோதிலும், நரகத்தில் அமிழ்த்தும்படி போதுமான பாவத்தை ஒரே நாளுக்குள் செய்துவிடுகிறேன் என்று உணர்ந்தேன்.

கிறி. இந்த உணர்வு வந்தபோது நீர் என்னசெய்தீர்?

திடநம். செய்வது! நான் என் மனவியாகுலத்தை உண்மை என்பவருக்குச் சொல்லுமட்டும் என்னசெய்கிறது என்று தெரியாமல்போனேன்; ஏனெனில் எனக்கும் அவருக்கும் அதிக சிநேகம் உண்டு; அவர் என்னைப் பார்த்து, நீ பாவமே செய்யாத ஒரு மனுஷனுடைய நீதியைச் சம்பாதித்துக்கொள்ளாதபட்சத்தில் உன் சொந்த நீதியாவது, சர்வலோகத்தின் நீதியாவது உன்னை இரட்சிக்கமாட்டாது என்று சொன்னார்.

இரட்சிப்பின் சரியான வழி.

கிறி. அவர் சொன்னது சரிதான் என்று நினைத்தீரா?

திடநம். என் சொந்த மனதின்படியான நல்லொழுக்கங்களில் விருப்பங்கொண்டு மனத்திருப்தியோடு இருக்கிற காலத்தில் அவர் இப்படிச் சொல்லியிருந்தால், அவரைப் பார்த்து உம்மைப்போல மூடன் மூவுலகத்திலும் கிடையாது என்றுதான் சொல்லியிருப்பேன். ஆனால் இப்பொழுது என் சுய பலவீனத்தையும், என் முதல்தரமான கிரியைகளில் கலந்திருக்கிற பாவத்தையும் நானே காண்கிறபடியால், அவர் சொல்வது சரிதான் என்று ஒத்துக்கொள்ளவேண்டியதாய் இருக்கிறது.

கிறி. ஆனால் அவர் உம்மிடத்தில் அப்படிச் சொன்ன சமயத்தில், ஒருக்காலும் பாவமே செய்யாத ஒருவர் உண்டு என்று நினைத்தீரா?

திடநம். அந்த வார்த்தைகள் துவக்கத்தில் எனக்கு அதிசயமாய்த்தான் தோன்றினது என்பதை நான் மறையாமல் அறிக்கை இடவேண்டும்; ஆனால் அவரோடு இன்னும் அதிகமாய்ச் சம்பாஷித்து, சகவாசஞ்செய்தபின்பு அதைக்குறித்துப் பூரணமாய் அறிந்துகொண்டேன்.

கிறி. நீர் அவரிடத்தில், அந்த மனுஷன் யார்? எப்படி அவர் மூலமாய் நீதிமானாக்கப்படவேண்டியது என்று கேட்டீரா?

திடநம். கேட்டேன்; கேட்டதற்கு, உன்னதமானவருடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவரே அந்த மனுஷன் என்று சொல்லி,[a] பின்னும் சொல்லுகிறார்: அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில் தாமே நடப்பித்த கிரியைகளினாலும், சிலுவையில் தொங்குகையில் பட்ட பாடுகளினாலும் விசுவாசிப்பதினாலே[b] நீ அவரால் நீதிமானாக்கப்படவேண்டும் என்று சொன்னார். அப்பொழுது நான் அந்த மனிதனுடைய நீதி எப்படி மற்றொருவனை தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கத் தக்க சக்தியுள்ளதாய் இருக்கக்கூடும்? என்று கேட்டேன். அதற்கு அவர்: அந்த மனுஷன் வல்லமையுள்ள தேவனாய் இருந்தார்; அவர் செய்த செய்கைகளும், அவர் அடைந்த மரணமும், அவருக்காக அல்ல எனக்காகவே பட்டார்; அவர்மேல் விசுவாசம் வைக்கிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கு அவருடைய செய்கைகளும், அச்செய்கைகளின் புண்ணிய பலன்களும் எண்ணப்படுகிறது என்று சொன்னார்.

கிறி. அப்புறம் நீர் செய்தது என்ன?

திடநம். அவர் என்னை இரட்சிக்கும்படி பிரியப்படமாட்டார் என்று நினைத்துக்கொண்டு, அவரை விசுவாசிக்கக்கூடாது என்பதற்குப் பல ஆட்சேபனைகளைச் சொன்னேன்.

கிறி. அப்புறம் உம்மை என்ன சொன்னார்?

இரட்சிப்பு அடையும்படி இயேசுவை விசுவாசிக்க வேண்டும்.

திடநம். அவரிடத்தில் போய்ப் பாரென் என்று சொன்னார்; அப்படிப் போவது துணிகரம் என்று நான் சொன்னேன். அதற்கு அவர்: அது துணிகரம் அல்ல, ஏனெனில் நான் வரும்படி அழைக்கப்பட்டவனாய் இருக்

[a] எபி. 10. 12, 21.

[b] ரோ. 4. 5. கொலோ. 1. 14. 1 பேது. 1. 19.



கிறேன்[a] என்று சொன்னார். அப்புறம் அவர் இயேசுவினிடத்தில் நான் தாராளமாய்ப் போகும்படியாக என்னை உற்சாகப்படுத்தும்படி, அவரைக்குறித்து எழுதப்பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைக் கொடுத்து: வானத்தையும் பூமியையும் பார்க்கிலும் அந்தப் புஸ்தகத்திலுள்ள சிறு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் உறுதியானவைகளாய் இருக்கிறது என்றும் சொன்னார்.[b] அப்போது நான் அவரண்டை வந்தவுடனே, என்ன செய்யவேண்டும் என்று கேட்டேன். பிதாவானவர் அவரை உனக்கு வெளிப்படுத்தும்படியாக, நீ முழங்காலில் நின்று உன் முழு இருதயத்தோடும், உன் முழுமனதோடும் கெஞ்சி மன்றாடவேண்டும்[c] என்று சொன்னார். அப்புறம் நான்: அவரை எப்படி வேண்டிக்கொள்ளுகிறது என்று கேட்டேன். அதற்கு அவர்: ஒரு கிருபாசனத்தின்மேல் வீற்றிருக்க நீ அவரைக் காண்பாய். வருஷமுழுவதிலும் வந்து கேட்பவர்களுக்கு எல்லாம் பாவமன்னிப்பை அருளும்படி அவர் அங்கே வீற்றிருக்கிறார்; நீ போ என்று சொன்னார்.[d] அவருக்குச் சமீபமாய் வந்தவுடனே என்ன சொல்லவேண்டும் என்று எனக்குத் தெரியாதே என்று நான் சொன்னேன். அப்போது அவர்: நீ போனவுடனே இந்த மாதிரி சொல்லு என்று எனக்குச் சொல்லித்தந்தார். அதாவது: தேவனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரு, நான் இயேசுகிறிஸ்துவை அறிந்துகொள்ளவும், அவரை விசுவாசிக்கவும் கிருபைசெய்யும்; அவருடைய நீதி எனக்குக் கிடையாவிட்டால், அந்த நீதியின்மேல் நான் விசுவாசம் வைக்காவிட்டால் அடியோடே நாசமடைவேன் என்று அறிகிறேன்; ஆண்டவரே, நீர் இரக்கமுள்ள தேவன் என்றும், உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை லோகத்துக்கு இரட்சகராக ஏற்படுத்தி இருக்கிறீர் என்றும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்; நிர்ப்பந்த பாவியாகிய எனக்கும் உமது ஆசீர்வாதங்களை அருளும்படி சித்தமுடையவராய் இருக்கிறீர் என்றும் எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது; நான் ஒரு பஞ்சமாபாவியாய் இருக்கிறேன்; ஆகையால் ஆண்டவரே, இச்சமயத்தில் நீர் உம்முடைய கிருபையை வெளிப்படுத்தி, உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், என்னு

தான் செபம் செய்ய சொல்லப்பட்டது.

[a] மத். 11. 28. [b] மத். 24. 35.

[c] சங். 95. 6. தானி. 6. 10. எரே. 29. 12, 13.

[d] யாத். 25. 22. லேவி. 16. 2. எண். 7. 8, 9. எபி. 4. 16.

டைய ஆத்துமா இரட்சிப்பில் பங்கு பெறும்படியாக ஜெபம் செய்யும் ஆமென், என்று சொல்லித்தந்தார்.

கிறி. அவர் உமக்குச் சொன்ன பிரகாரம் செய்தீரா?

திடநம். ஆம், திரும்பத் திரும்பக் கெஞ்சிக் கேட்டேன்.

கிறி. பிதாவானவர் அப்போது தமது குமாரனை உமக்கு வெளிப்படுத்தினாரா?

திடநம். இல்லை, முதலாந்தரம் வெளிப்படுத்தவில்லை; இரண்டாந்தரமும் இல்லை; மூன்றாந்தரமும் இல்லை; நாலாந்தரமும் இல்லை; ஐந்தாந்தரமும் இல்லை; ஆறாந்தரமுங்கூட வெளிப்படுத்தவில்லை.

கிறி. அப்போது நீர் என்னசெய்தீர்?

திடநம். செய்வதா? என்ன செய்வதென்று சற்றுமாய்த் தெரியாமல் போயிற்று.

கிறி. ஜெபம்செய்கிறதை நிறுத்திப்போடவேண்டும் என்கிற எண்ணம் வரவில்லையா?

திடநம். வந்தது; ஒருதரமா, இரண்டுதரமா? நூறு, இருநூறு தரம் அந்த எண்ணம் வந்தது.

கிறி. அப்படியிருந்தும் நீர் ஜெபத்தை நிறுத்திவிடாத முகாந்திரம் என்ன?

திடநம். இவ்வுலகம் எல்லாம் கூடினாலும், கிறிஸ்துவின் நீதி இல்லாவிட்டால் என்னை இரட்சிக்கமாட்டாது, என்று நான் சொல்லப்பட்டதை உறுதியாய் நம்பினேன். ஆகையால் நான் ஜெபத்தை நிறுத்திவிட்டால் சாவேன்; சாவதெனத்தில் கிருபாசனத்தண்டை கிடந்து செத்தால் நலமாய் இருக்கிறது என்று என் மனதில் தோன்றிற்று. அதோடுகூட "அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு, அது நிச்சயமாய் வரும்; அது தாமதிப்பதில்லை" a என்கிற சத்திய வாசகமும் என் மனதில் வந்தது. ஆகவே பிதாவானவர் தமது குமாரனை எனக்கு வெளிப்படுத்தும்வரைக்கும், நான் ஜெபம்பண்ணிக்கொண்டே இருந்தேன்.

கிறி. அவர் உமக்கு எப்படி வெளிப்படுத்தப்பட்டார்?

திடநம். அவரை நான் என் மாம்சக் கண்களால் காணவில்லை, ஆனால் மனக்கண்களால் கண்டேன். b அதின் விபரம் சொல்லுகிறேன் கேளும்: ஒருநாள் நான் மிகுந்த துக்கசாகரத்தில் இருந்தேன்; என் ஜீவகாலத்தில் ஒருநாளும்

கிறிஸ்து மனதுக்கு வெளிப்படுகிறது.

a ஆப. 2. 3. b எபே. 1. 18, 19.



அவ்வளவு துக்கம் எனக்கு உண்டானதில்லை. இந்தத் துக்கசாகரத்துக்குக் காரணம் என் பாவங்களின் அகோரமும்; என் நிர்ப்பந்தத்தின் தன்மையும் முன்னிலும் அதிகத் தெளிவாய் எனக்குக் காணப்பட்டிருந்ததேதான். அச்சமயத்தில் நரகத்தின் வேதனைகளையும், என் ஆத்துமாவின் நித்திய ஆக்கினையின் பயங்கரங்களையுமேயன்றி வேறொன்றையும் நான் பார்க்கவில்லை; காரியம் இப்படி இருக்கையில் திடீரென்று ஆண்டவராகிய இயேசு பரலோகத்தில் இருந்து என்னைக் கண்ணோக்கிப் பார்த்துக்கொண்டு: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ இரட்சிக்கப்படுவாய்" a என்று சொல்லுகிறதாகவும் என் மனதில் நினைத்தேன்.

அப்பொழுது நான்: ஆண்டவரே, நான் பாவிகளிலும் பெரும்பாவியாய் இருக்கிறேனே என்றேன். அதற்கு அவர்: "என் கிருபை உனக்குப் போதும்" b என்று சொன்னார். அப்பொழுது நான்: ஆண்டவரே, விசுவாசிக்கிறதாவது என்ன? என்று கேட்டேன். அப்புறம், "என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" c என்று சொல்லப்பட்ட வாசகத்தினால், வருகிறதும் விசுவாசிக்கிறதும் இரண்டும் ஒன்றுதான் என்று கண்டுகொண்டேன். தன் முழு இருதயத்தோடும் விருப்பத்தோடும் கிறிஸ்துவினால் இரட்சிப்படையும்படி ஆசைகொண்டு வருகிறவனே விசுவாசிக்கிறவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றும் அறிந்துகொண்டேன். அப்பொழுது என் கண் நீராய்ப் பெருகிற்று. பின்னும் நான்: "ஆனால் என்னைப்போலொத்த பெரும்பாவியும் உம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இரட்சிக்கப்படுவானோ?" என்று கேட்டேன். அதற்கு அவர்: "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" d என்று சொல்லக்கேட்டேன். அப்புறம் நான்: "ஆண்டவரே, உம்மண்டை நான் வருகையில், உமதுமேல் என் விசுவாசத்தைச் சரியாய் நிலைநிறுத்தும்படி அடியேன் சிந்திக்கவேண்டியது எப்படி?" என்று கேட்டேன். அதற்கு அவர்: "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார்." e "விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படி கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார்." f

a அப். 16. 31. b 2 கொரி. 12. 9. c யோவா. 6. 35.
d யோவா. 6. 37. e 1 தீமோ. 1. 15. f ரோ. 10. 4; 4. அதி.

"அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்." [a] "அவர் நம்மில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்மைக் கழுவினார்." [b] "அவர் தேவனுக்கும் நமக்கும் மத்தியஸ்தராய் இருக்கிறார்." [c] "நமக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்போதும் உயிரோடு இருக்கிறார்" [d] என்று சொன்னார். இவைகள் எல்லாவற்றையுங்கொண்டும், அவருடைய மனுஷாவதாரத்தில் எனக்கு நீதியையும், அவருடைய இரத்தத்தில் என் பாவத்துக்குப் பரிகாரத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும்; அவர் தமது பிதாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அதின் ஆக்கினையை அநுபவித்தது தமக்காக அல்ல, தமது புண்ணியபலன்களை விசுவாசித்து, அவருக்கு நன்றிசெலுத்துகிறவன் எவனோ அவனுக்காகவே பட்டு உத்தரித்தார் என்றும் அறிந்துகொண்டேன். இப்பொழுது என் இருதயம் சந்தோஷத்தால் பூரித்தது, என் கண்கள் கண்ணீரால் நிறைந்தன, என்னுடைய உள்ளிந்திரியங்கள் அவருடைய திருநாமத்தின் கனமகிமைக்கும், அவருடைய ஜனங்களுக்கும், அவருடைய வழிகளுக்கும் சார்பாய் ஓடினது.

கிறி. மெய்யாகவே இது கிறிஸ்து உமது இருதயத்துக்கு அருளின காட்சியே அன்றி வேறல்ல; அதினால் உமது இருதயத்துக்கு வந்த பலன்கள் எவை என்று சொல்லமாட்டீரா?

நிடநம். இதனாலே சர்வலோகமும், அதின் எல்லா நீதிகளோடுங்கூட ஆக்கினைத்தீர்ப்புக்கேற்ற நிலைமையில் இருக்கிறது என்றும், பிதாவாகிய தேவன் எவ்வளவு நீதியுள்ளவராய் இருந்தபோதிலும், தமது நீதியின்படியே பாவியை நீதிமானாக்கக்கூடும் என்றும் என் மனதில் விளங்கிற்று. அதுவும் அல்லாமல் என் முந்தின இழிவான நடக்கைகளைப்பற்றி வெட்கமும், அறிவீனத்தை உணருகிறதால் உண்டாகிற கலக்கமும் என் மனதைச் சூழ்ந்துகொண்டன. ஏனெனில் இதற்குமுன் எப்பொழுதாவது இயேசுகிறிஸ்துவின் மகத்துவம் இவ்வளவு வல்லமையாய் என் மனதிற்குக் காட்சியாகவில்லை. அது பரிசுத்தமாய் ஜீவனம் செய்யும்படியான ஆவலையும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்குக் கனமும், மகிமையும் உண்டாக ஏதாவது ஒரு அற்பப் பிரயத்தனமாவது செய்யவும் என்னை ஏவிற்று. இவ்வளவுமாத்திரமோ? எனக்கு இப்போது

[a] ரோம. 4. 25. [b] வெளி. 1. 5.
[c] 1 தீமோ. 2. 5. [d] எபி. 7. 25.



பதினாயிரம்படி இரத்தம் இருந்தபோதிலும் அவைகள் எல்லாவற்றையும் இயேசுவின் நாமத்துக்காகச் சிந்தவும் ஆசை உண்டாயிருக்கிறது என்று சொன்னான்.

## அறிவீனனை மறுபடியும் சந்தித்தல்.

அறிவீனனை மறுபடியும் சந்தித்தல்.

அப்புறம் நான் என் சொப்பனத்திலே கண்டதாவது: நிடநம்பிக்கை தன் பேச்சோடு பேச்சாய் பின்னாலே திரும்பிப்பார்த்து, தாங்கள் முன்னே விட்டுப்பிரிந்த அறிவீனன் தூரத்தில் வருகிறதைக் கண்டு: அதோ வருகிறவனைப் பாரும், அவன் எவ்வளவு தூரத்தில் ஆடி ஆடி வருகிறான்? என்று கிறிஸ்தியானைக் கூப்பிட்டுச் சொன்னான்.

கிறி. ஆம், ஆம், நானும் பார்க்கிறேன்; நம்மோடு கூடிவருகிறதற்கு அவனுக்குப் பிரியம் இல்லைபோல் இருக்கிறது.

நிடநம். அவன் நம்மைக் கண்டதுமுதல் இதுவரையும் கூடிவந்திருந்தால், அவனுக்கு அதினாலே ஒரு நஷ்டமும் உண்டாகி இருக்கமாட்டாது என்று நினைக்கிறேன்.

கிறி. அது மெய். அவன் போக்கு வேறே, நம்முடைய போக்கு வேறே.

நிடநம். அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது; என்றாலும் அவன் கிட்டவரட்டும், நாம் சற்று நிற்போம் என்று சொல்லி நின்றார்கள்.

அவன் கிட்டவருமுன்னே கிறிஸ்தியான் அவனைப் பார்த்து: என் அப்படி பிந்திப்பிந்தி வருகிறாய், எட்டி நடந்துவா என்று சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

அறி. கூட்டமாய்ப் போகிறதைவிட ஒண்டியாய் நடந்து போவது என் மனதுக்குப் பிரியமாய் இருக்கிறது என்று அறிவீனன் சொன்னான்.

அப்போது கிறிஸ்தியான், தன் தோழனாகிய நிடநம்பிக்கையை நோக்கி: நம்மோடு கூடவர அவனுக்குப் பிரியம் இல்லை என்று நான் சொல்லவில்லையா? எப்படியும் அவன் வந்து சேரட்டும், இந்த வெளியில் பேசிப் பேசிப் போகலாம் என்று மெதுவாய்ச் சொல்லிவிட்டு, அறிவீனன் இதற்குள் சற்று கிட்ட வந்துவிட்டதால் அவனைப் பார்த்து: வா அப்பா! சுகமா? உன் ஆத்துமாவுக்கும் தேவனுக்கும் உள்ள ஐக்கியம் இப்பொழுது எப்படி இருக்கிறது?

அறி. எல்லாம் நன்றாய் இருக்கிறது என்று நம்புகிறேன். ஏனெனில், என் பிரயாணத்தில் எனக்கு ஆறுதலை அளிக்கும்படியாக

என்னுடைய மனதில் எப்போதும் கடந்துபோகிற நல்லவைகளுக்கு ஒரு கணக்கில்லை.

கிறி. அந்த நல்லவைகளைப்பற்றித் தயவுசெய்து கொஞ்சம் சொல்லுமேன்?

அறி. தேவனைக்குறித்தும் மோட்சத்தைக்குறித்தும் நான் அடிக்கடி நினைக்கிறேன்.

கிறி. பிசாசுகளும் சபிக்கப்பட்ட ஆத்துமாக்களும் உன்னைப்போலவே நினைக்கிறது உண்டு.

அறி. நான் அவைகளைக்குறித்து நினைக்கிறதுமாத்திரம் அல்ல, அவைகளின்பேரில் ஆசைகொண்டும் இருக்கிறேன்.

கிறி. அங்கே சேர அபாத்திரராய் இருக்கிற அநேகரும் உன்னைப்போலவே ஆசைகொள்ளுகிறதும் உண்டு. "சோம்பேறியின் ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறுது."[a]

அறி. ஆனால் அவைகளை நான் நினைத்து, அவைகளின் நிமித்தம் எல்லாவற்றையும் விட்டுவிடுகிறேனே.

கிறி. அதெப்படியோ, அதைப்பற்றி எனக்குச் சந்தேகம்தான். எல்லாவற்றையும் விட்டுவிடுவது லேசான காரியம் அல்ல, மெய்யாகவே அது அநேகர் நினைக்கிறதைப்பார்க்கிலும் மிகவும் வருத்தமான வேலை. ஆனால் நீ தேவனுக்காகவும், மோட்சத்துக்காகவும் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டேன் என்கிறாயே, அப்படிச் சொல்லுகிறதற்கு முகாந்தரம் என்ன? அப்படிச் சொல்லும்படி உன்னை ஏவுகிறது என்ன?

அறி. என் இருதயம் அப்படி எனக்குச் சொல்லுகிறது.

கிறி. அப்படியா செய்தி! "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்"[b] என்று ஞானி சொல்லியிருக்கிறாரே.

அறி. ஒரு கெட்ட இருதயத்தைக்குறித்து அப்படிச் சொல்லியிருக்கிறது, என் இருதயம் நல்லதாய் இருக்கிறதே.

கிறி. அதை எப்படி ருபிப்பாய்?

அறி. மோட்ச நம்பிக்கையால்; அது என் இருதயத்தை ஆறுதல்செய்கிறது.

கிறி. அது வஞ்சகத்தினாலே அப்படிச் செய்தாலும் செய்யும்; ஏனெனில் ஒருவன் தன் ஆத்துமாவுக்குக் கிடைக்கமாட்டாத பாக்கியம் கிடைக்கும் என்பதாக மனதில் ஆறுதலை அருளினதும் அருளும்!

அறி. ஆனால் என் இருதயமும் நடக்கையும் ஒத்திருக்கிறது;

[a] நீதி. 13. 4. [b] நீதி. 28. 26.



ஆதலால் என் நம்பிக்கைக்குத் தகுந்த ஆதாரம் உண்டு என்று உறுதியாகிறது.

கிறி. உன் இருதயமும் நடக்கையும் ஒத்திருக்கிறது என்று உனக்குச் சொன்னது யார்?

அறி. என் இருதயம் அப்படி எனக்குச் சொல்லுகிறது.

கிறி. உன் இருதயமா அப்படி உனக்குச் சொல்லுகிறது? நீ சொல்லுகிறதைப் பார்த்தால், "நான் கள்ளனுகில் என் தோழனைக் கேள்" என்றாற்போல் இருக்கிறதே. இந்த விஷயத்தில் தேவனுடைய வசனம் சாட்சிசொல்லாத பட்சத்தில், வேறு சாட்சிகளால் பிரயோசனம் இல்லை.

அறி. ஆனால் நல் நினைவுகளுள்ள இருதயம் நல்ல இருதயம் அல்லவா? தேவனுடைய பிரமாணங்களுக்கு ஒத்த நடக்கை நடக்கை அல்லவா?

கிறி. நல்நினைவுகளுள்ள இருதயம் நல் இருதயந்தான், தேவனுடைய பிரமாணங்களுக்கு ஒத்த நடக்கை நல்நடக்கைதான்; ஆனால், இவைகளை மெய்யாகவே உடையவனாய் இருக்கிறது வேறு, இவைகள் இருக்கிறது என்று நினைத்துக்கொள்ளுகிறது வேறே.

அறி. உம்முடைய கருத்தின்படி நல் இருதயம் எது? தேவனுடைய பிரமாணத்துக்கு ஏற்ற நல்நடக்கை எது? தயவுசெய்து சொல்லும், பார்ப்போம்.

கிறி. வெவ்வேறு விதமான நல்நடக்கைகள் உண்டு;— அவைகளில் சில நம்மைப்பற்றினதாய் இருக்கும்; வேறு சிலவைகள் தேவனைப்பற்றினதாய் இருக்கும்; பின்னும் சில கிறிஸ்துவைபற்றினதாய் இருக்கும்; மற்றும் சில வேறு விஷயங்களை அடுத்ததாய் இருக்கும்.

அறி. எப்படிப்பட்டவைகளை நம்மைப்பற்றிய நல்நினைவுகள் என்று சொல்லலாம்?

கிறி. தேவனுடைய வசனத்துக்கு ஒத்தபடியுள்ள நினைவுகள்தான்.

அறி. நம்மைப்பற்றிய நம்முடைய நினைவுகள் தேவவசனத்துக்கு இசைவாக இருக்கிறபொழுதுதானே?

கிறி. தேவவசனம் நம்மைப்பற்றி எப்படித் தீர்ப்புச்சொல்லுகிறதோ, அந்தத் தீர்ப்பை நாம் நமதுமேலுள்ள தீர்ப்பாகச் சொல்லும்போதுதான். இதைச் சற்று விஸ்தரிக்கிறேன் கேள்; மனுஷருடைய சுபாவ நிலைமையைக்குறித்து தேவவசனமானது: "நீதிமான் ஒருவனும் இல்லை, நன்மைசெய்கிறவனும்

இல்லை" என்றும், "மனுஷனுடைய இருதயத்தின் தோற்றம் எல்லாம் நித்தம் பொல்லாதது" என்றும், "மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயதுதொடங்கிப் பொல்லாததாய் இருக்கிறது" என்றும் [a] அறிவிக்கிறது. நாமும் நம்மைக்குறித்து இப்படியே நினைத்து, அதின் கருத்தை உணர்ந்துகொள்ளுகிறபொழுதுதான், நமது நினைவுகள் தேவனுடைய வசனத்துக்கு இசைவாக இருப்பதால் நல்ல நினைவுகளாய் இருக்கிறது.

அறி. என் இருதயம் அவ்வளவு கெட்டதாய் இருக்கிறது என்று நான் ஒருகாலத்திலும் நம்பமாட்டேன்.

கிறி. அப்படியானால் உன் ஜீவகாலத்தில் ஒருக்காலும் நீ உன்னைக்குறித்து நல்ல நினைவுடையவனாய் இருக்கவில்லை என்பது மெய். அது அப்படி இருக்கட்டும்; இன்னும் கேள், தேவவசனம் நமது நினைவுகளைக்குறித்துத் தீர்ப்புச்சொல்லுகிறதுபோலவே, நமது நடக்கைகளைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லுகிறது. நம்முடைய இருதயத்தின் நினைவு, ஜீவியத்தின் நடபடி ஆகிய இரண்டும் அதற்கு ஒத்திருக்கிறபோது அவை இரண்டும் நல்லதாய் இருக்கிறது.

அறி. உம்முடைய கருத்தை விளக்கிக்காட்டும்?

கிறி. இன்னும் விளக்கவேண்டுமா? மனுஷனுடைய வழிகள் கோணலான வழிகள் என்றும், செம்மையாய் இராமல் மாறுபாடானதாய் இருக்கிறது என்றும், அவர்கள் நல்வழியை அறியாமல் இருக்கிறதினாலே சுபாவத்தின்படி நல்வழியில் இருந்து வெகுதூரம் விலகி இருக்கிறார்கள் என்றும் தேவனுடைய வசனம் அறிவிக்கிறது. [b] ஒரு மனுஷன் தன் வழிகளைக்குறித்து இவ்விதமாய் நினைவுகூருவானானால், அதாவது இந்த வேதவசனங்களுக்கு ஏற்றபடி உணர்ந்த சிந்தையோடும், தாழ்ந்த மனதோடும் இவ்வெண்ணம் நினைப்பானானால், அப்போது அவன் தன் சொந்த வழிகளைப்பற்றி நல்நினைவுள்ளவனாய் இருக்கிறான் என்றுசொல்லவேண்டியது. ஏனெனில் அப்போதுதான் தேவவசனத்தில் சொல்லப்படுகிற தேவதீர்ப்புகளுக்கு அவன் நினைவு இசைவாய் இருக்கிறது.

அறி. தேவனைப்பற்றிய நல்லெண்ணங்கள் எவை?

கிறி. நம்மைப்பற்றிய எண்ணங்களைக்குறித்து நான் சொன்னது எப்படியோ, அப்படியேதான் இதுவும் இருக்கிறது; தேவ

[a] ரோ. 3. 10, 12. ஆதி. 6. 5; 8. 21.
[b] சங். 125. 5. நீதி. 2. 15. ரோ. 3. 12.



னைக் குறித்து அவருடைய வசனம் அறிவிக்கிற பிரகாரம் நாமும் எண்ணினால், அதுதான் தேவனைக் குறித்த நல்லெண்ணம் என்று சொல்லவேண்டியது. அதாவது: தேவன் உண்டு என்பதைப் பற்றியும், அவருடைய இலட்சணங்கள் இவை என்பதைக் குறித்தும் தேவவசனம் எப்படிச் சொல்லுகிறதோ, அப்படியே நாமும் அவரைக் குறித்து நினைப்போமானால் அதுதான் தேவனைப்பற்றிய நல்லெண்ணம். அதை விவரமாய்ச் சொல்ல இப்பொழுது சமயம் இல்லை; ஆனால் நம்முடைய விஷயத்தில் அவரைக் குறித்து நாம் எண்ணவேண்டியதைப் பற்றிச் சொல்லவேண்டுமானால்; நாம் நம்மை அறிந்திருக்கிறதைப் பார்க்கிலும், அவர் நம்மை அறிந்திருக்கிறார் என்று எப்போது எண்ணுவோமோ; நமக்குள் இருக்கும் பாவங்களை நாம் காணக்கூடாதிருக்கையிலும், அவைகள் தேவனுக்கு நம்மைவிட நன்றாகத் தெரியும் என்றும், நமது மனதின் நினைவுகளும், இருதயத்தின் இரகசியங்களும், உள்ளிந்திரியங்களின் ஆழங்களும் எல்லாம் அவருடைய கண்களுக்கு முன்பாக வெளியரங்கமாய் இருக்கிறது என்றும், நம்முடைய நீதிகள் எல்லாம் அவர் நாசியில் துர்க்கந்தமாய் வீசுகிறது என்றும், ஆதலால் நமது கிரியைகளின் தன்மை முழுவதுமாய் இருந்தபோதிலும், அந்த நம்பிக்கையால் நாம் அவருடைய சமுகத்தில் நிற்கும்படி துணிகிறதை அவர் சகிக்கமாட்டார் என்றும் எப்போது எண்ணுவோமோ, அப்போது தேவனைக் குறித்த விஷயங்களில் நம்முடைய எண்ணங்கள் நல்லெண்ணங்களாய் இருக்கின்றன என்று சொல்லவேண்டியது.

தேவனைப் பற்றிய நல் லெண்ணங்கள்.

அறிவீ. நான் பார்க்கிறதற்கு மிஞ்சி தேவன் பார்க்கிறதில்லை என்று சொல்ல; அல்லது, நற்கிரியைகளைக்கொண்டு தேவனுடைய சமுகத்தைத் தரிசிக்கலாம் என்று எண்ண நான் அவ்வளவு மூடனென்று நினைத்துக்கொள்ளுகிறீர்?

கிறி. இந்தக் காரியங்களைக் குறித்து நீதான் எப்படி நினைக்கிறாய்?

அறிவீ. சுருக்கிச்சொன்னால்; நான் நீதிமானாக்கப்படும்படியாக இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவேண்டும் என்று நினைக்கிறேன்.

கிறி. அது எப்படி என்றுதானே நானும் கேட்கிறேன்? அவரைப் பற்றிய தாபத்தைக்கூட நீ அறியாமல் இருக்கிறபொழுது, அவரை விசுவாசிக்கவேண்டும் என்று நீ எப்படி நினைப்பாய்?

உன் இருதயபாவத்தையாவது செய்யும் பாவங்களையாவது நீ அறியாதிருக்கிறாயே! உன்னைப்பற்றி நீ நினைக்கிற நினைவுகளையும், உன் கிரியைகளைப்பற்றி நீ எண்ணுகிற எண்ணத்தையும் பார்த்தால்; நீ தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படும்படி கிறிஸ்து அவசியம் என்பதை முற்றிலும் அறியாதவனைப் போல் இருக்கிறதே; அப்படியிருக்க, கிறிஸ்துநாதர்பேரில் விசுவாசமாய் இருக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுவாய்?

அறிவீ. அதைப்பற்றி எல்லாம் வெகு பூரணமான விசுவாசம் எனக்குண்டு.

கிறி. நீ எப்படி விசுவாசிக்கிறாய்?

அறிவீ. கிறிஸ்து பாவிகளுக்காக மரணமடைந்தார் என்றும், நான் அவருடைய கட்டளைகளுக்கு அடங்கி நடப்பதை அவர் கிருபையாய் அங்கிகரித்துக்கொள்ளுகிறதின் மூலமாய், தேவனுக்கு முன்பாக சாபத்துக்கு நீங்கலாகி நீதிமானாக்கப்படுவேன் என்றும் நான் விசுவாசிக்கிறேன். அல்லது வேறுவிதமாய்ச் சொல்லுகிறேன்; பிதாவாகிய தேவன் என் பக்திவிசயமான ஊழியங்களை அங்கிகரிக்கும்படியாக, கிறிஸ்துவானவர் தமது புண்ணியபலன்களினாலே அவைகளை அங்கீகாரமாக்குகிறார் என்று விசுவாசிக்கிறேன்.

கிறி. இந்த விசுவாச அறிக்கையைப்பற்றி நான் மறுமொழியாகச் சொல்லுவதைக் கேள்:

அறிவீனனுடைய விசுவாசம் இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அல்ல.

1. இது உன் சுயதோற்றமான விசுவாசமே அல்லாமல் வேறல்ல; ஏனெனில் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் குறித்து வேதத்தில் எங்கும் எழுதப்பட்டிருக்கக் காணோம்.

2. இது கள்ளவிசுவாசமே அல்லாமல் வேறல்ல; ஏனெனில் இது, கிறிஸ்துநாதர் சம்பாதித்த புண்ணியங்களில் இருந்து நீதிமானாக்கப்படுதலை அறுத்துவிட்டு, உன் சுயகிரியையில் நிலைநிறுத்துகிறதாய் இருக்கிறது.

3. இந்த விசுவாசம் கிறிஸ்து, உன்னையல்ல, உன் கிரியைகளை நீதியுள்ளதாக்குகிறார் என்றும், உன் கிரியைகளின் நிமித்தமே நீ, நீதிமானாக எண்ணப்படுகிறாய் என்றும் காட்டுகிறது. இது சுத்த அபத்தம்.

4. இது சர்வவல்லவருடைய கோபாக்கினைக்கு உன்னை உட்படுத்திவிடுகிறதற்கு ஏதுவான அவ்வளவு மோசமுள்ள விசுவாசமாய் இருக்கிறது. ஏனெனில், மெய்யாகவே நீதியை



உண்டாக்குகிற விசுவாசமானது நாம் இழந்துபோன நிலைமையை நியாயப்பிரமாணத்தைக்கொண்டு நமது ஆத்துமாவில் உணர்த்துவித்து, ஆத்துமாவானது கிறிஸ்துவின் நீதிக்குள் அடைக்கலம் புகுந்துகொள்ளும்படியாக அதை ஏவிவிடுகிறது. இந்த அவருடைய நீதியானது உன் கீழ்ப்படிதலுள்ள கிரியைகளை தேவனுக்கு அங்கீகாரமாக்கும் கிருபையின் கிரியையாய் இராமல், நாம் நமது சரீரத்தில் நிறைவேற்றவேண்டியவைகளை அவர்தாமே தமது சரீரத்தில் நமக்காக நிறைவேற்றும்படி நியாயப்பிரமாணத்துக்குக் கீழடங்கி, உத்தரித்து சம்பாதித்த நீதியாக இருக்கிறது. இந்த நீதியைத்தான் மெய்விசுவாசமுள்ள இருதயம் ஏற்றுக்கொள்ளுகிறது என்று நான் சொல்லுகிறேன். இந்த நீதியின் அங்கியால் ஆத்துமா மூடப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கு முன்பாகக் குற்றமற்றதாய் ஒப்புவிக்கப்படுகிறதினாலேதான் அது அங்கிகரிக்கப்பட்டு, ஆக்கினைத் தீர்ப்பில் இருந்து விடுதலையாகிறது.

அறிவீ. என்ன? நம்மை அல்லாதபடி கிறிஸ்து தமது சரீரத்தில் உத்தரித்துச் சம்பாதித்த புண்ணியத்தில் நம்பிக்கை வைக்கவா சொல்லுகிறீர்? இந்தக் கள்ள நினைவு நமது இச்சையின் கடிவாளத்தைத் தளர்த்தி, நமது மனதுகொண்டபடி எல்லாம் செய்யும்படி இடங்கொடுக்கப்பண்ணுகிறதாய் இருக்கிறதே. இயேசு கிறிஸ்து தமது சரீரத்திலே சம்பாதித்த நீதியினாலேதான், நீதிமான்களாக்கப்படுகிறோம் என்று விசுவாசித்தால் நாம் எப்படி நடந்தாலும் என்ன?

கிறி. உனக்கு அறிவீனன் என்று பேர் இருக்கிறது, உன் பேர் எப்படியோ அப்படியே நீயும் இருக்கிறாய். நான் உன்னைப்பற்றி முன் சொன்னது சரி என்று நீ இப்போது சொல்லிய வார்த்தைகளும் உறுதிப்படுத்துகின்றன. நீதிமானாக்கும் நீதி இன்னது என்று அறிவும் உனக்கு இல்லை; அதை விசுவாசிப்பதினால் தேவனுடைய உக்கிரகோபத்தினின்று உன் ஆத்துமாவைத் தப்புவித்துக்கொள்ளுகிற வகை இன்னது என்ற அறிவும் உனக்கு இல்லை. அதுமாத்திரமோ, கிறிஸ்துவின் நீதியின்மேல் வைக்கும் இரட்சணிய விசுவாசத்தின் பலன்களாகிய இருதயத்தைக் கீழ்ப்படுத்தல், அதைக் கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்திற்குத் திருப்புதல், அவருடைய நாமத்தையும், வசனத்தையும், அவருடைய மார்க்கத்தையும், பக்தரையும் நேசித்தல் ஆகிய இவைகளைப்பற்றியும் உனக்கு

கிறிஸ்தியான் அவனுக்குச் சொன்ன கண்டனை.

அறிவில்லை. இவை எல்லாம் உன் எண்ணத்தின்படி இருக்கிறது என்று கனவிலும் நினைக்கவேண்டாம்.

திடநம். எப்போதாவது கிறிஸ்து வானத்தில் இருந்து அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டாரா? என்று கேளும்; என்று திடநம்பிக்கை கிறிஸ்தியானிடத்தில் சொன்னான்.

அறி. ஓகோ! நீர் வெளிப்படுத்தலை நாடுகிறவர்களில் ஒருவரோ? நீங்கள் இருவரும் உங்களைப்போலொத்த இன்னும் அநேகரும், அந்தக் காரியத்தை விசேஷித்துப் பேசுவதெல்லாம் புத்திமயக்கத்தினாலே அல்லாமல், வேறு இல்லை என்று நான் நம்புகிறேன்.

திடநம். என்ன மனுஷனே, அப்படிப் பேசுகிறாய்! பிதாவாகிய தேவன் கிறிஸ்துவை ஒருவனுக்கு வெளிப்படுத்தினாலன்றி, மற்றப்படி அவன் அவரை இயேசாய்க் கண்டுகொள்ள ஏதுவில்லாதபடிக்கு, அவர் மனுஷருடைய மாம்சதன்மைக்குரிய சுபாவ எண்ணங்களின் பிடிக்கு எட்டாமல் தேவனுக்குள் அப்படி மறைக்கப்பட்டிருக்கிறார் அல்லவா?

அறிவீ. உம்முடைய விசுவாசம் அதுதான், என்னுடைய விசுவாசம் அப்படி அல்ல. நான் உங்களைப்போல என் மண்டையில் பல விபரீதமான கோரணிகளை உடையவனாய் இராவிட்டாலும், என் விசுவாசம் உங்கள் விசுவாசத்துக்குத் தாழ்ந்ததல்ல என்பது நிஜம்.

கிறி. நான் ஒரு பேச்சுப்பேச இடங்கொடு. இந்தக் காரியத்தைக் குறித்து நீ அவ்வளவு அற்பமாய்ப் பேசலாகாது. இவ் விஷயங்களைக் குறித்து நான் என் தோழனைப்போல் தைரியமாய்ச் சொல்லுகிறது என்னவென்றால்; பிதாவானவர் வெளிப்படுத்தினால் அன்றி ஒருவனும் இயேசுகிறிஸ்துவைக் காணக்கூடாது. கிறிஸ்துவைப் பற்றிப்பிடிக்கும் மெய்விசுவாசம்கூட, அவருடைய மட்டற்ற வல்லமையினாலே உண்டானதாகவே இருக்கும்.[ஈ] அந்த விசுவாசத்தின் கிரியையைப்பற்றி ஐயோ, அறிவீனனே, நீ அறியாதிருக்கிறாய் என்று எனக்குத் தோன்றுகிறது; ஆகையால் விழித்துக்கொண்டு உன் நிர்ப்பாக்கியத்தைக் கண்டறிந்து, கர்த்தராகிய இயேசுவண்டை ஓடு; அவரே தேவனாய் இருக்கிறபடியால், தேவநீதியாய் இருக்கிற அவருடைய நீதியினால் நீ ஆக்கினைத்தீர்ப்பில் இருந்து விடுதலையாவாய் என்றான்.

ஈ மத். 11. 27. 1 கொரி. 12. 3. எபே. 1. 17—19.



அறிவீனன் பின்தாங்கி நடக்கிறது.

அறிவீ. அப்போது அறிவீனன்; ஐயாமார்களே, நீங்கள் துரிதமாய் நடந்துபோகிறீர்கள்; உங்களோடு எட்டி நடந்துவர என்னால் கூடாது; நீங்கள் முந்திப்போங்கள், நான் பிந்தி வருகிறேன் என்று சொன்னான்.

அப்போது அவர்கள்:

(அம்மானை.)

அறிவீனனே உனக்கு அறிவீனமோ இன்னும்?
அறிவுள்ளோர் புத்திமதி பத்துவிசை சொன்னபின்பும்,
இன்னும் அதைத் தள்ளிவிட்டுன் இஷ்டப்படியே நடந்தால்,
உன்னுடைய நஷ்டம் எல்லாம் உள்ளபடி நீ காண்பாய்.
சொன்னபுத்தியை நினைத்து, அஞ்சாதடங்கி நட.
நன்னபுத்தி நீ படித்தாய் எல்லாம் அசட்டைசெய்ய,
இன்னும் அதை முன்போலே, தள்ளுவது மெய்யானால்
விண்ணிழந்தாய் சொன்னேன்; கேள், கேள் அறிவிலி!

என்று சொல்லிப்போட்டு, அவனை விட்டுப் பிரிந்தார்கள்.

அப்புறம் கிறிஸ்தியான் தன் தோழனைப்பார்த்து: என் தோழனாகிய திடநம்பிக்கையே, இனி நீயும் நானும்தான் போகவேண்டியதிருக்கிறது; வா, வா, எட்டி நட என்றான்.

அப்படியே அவர்கள் இருவரும் கூடி விரைவாய் நடந்துபோகிறதையும், அறிவீனன் மெதுவாய் பிந்தி நடந்துபோகிறதையும் நான் என் சொப்பனத்தில் கண்டேன். அப்போது கிறிஸ்தியான் தன் தோழனைப்பார்த்துச் சொல்லுகிறான்: நான் அந்த ஏழை மனுஷனைப்பற்றி மெத்தவும் பரிதாபப்படுகிறேன், இவன் முடிவு க்ஷேமமாய் இராது என்பதற்குச் சந்தேகம் இல்லை.

திடநம். ஐயோ, இவனுடைய நிலைமைக்கொத்த அனந்தம் பேர் என் பட்டணத்தில் இருக்கிறார்கள்; மோட்சபிரயாணிகள்கூட அநேகர் குடும்பம் குடும்பமாகவும், தெருமுழுமையாகவும் இவனைப்போலொத்த நிலைமையில் இருக்கிறார்கள். எங்கள் நாட்டிலேயே இப்படியானால், அவன் பிறந்து வளர்ந்த நாட்டில் எத்தனையோபேர் இருக்கமாட்டார்கள் என்று நீரே ஆலோசித்துக்கொள்ளும்.

கிறி. "அவர்கள் பார்க்கக்கூடாதபடிக்கு அவன் அவர்கள் கண்களைக் குருடாக்கினான்" என்று சத்தியவசனம் சொல்லுகிறது மெய்தான். அது நிற்க, இப்போது நாம் இருவருந்தானே

இருக்கிறோம்; இப்படிப்பட்ட மனுஷரைக்குறித்து நீ என்ன நினைக்கிறாய்? இதுசமயத்திலாவது அவர்களுக்குப் பாவ உணர்வு உண்டாகி, அதினால் தங்கள் நிலைமை அபாயத்தில் இருக்கிறது என்று பயந்திருக்க மாட்டார்களா?

நீ.நம். நீர் என்னைவிட வயதுக்கு மூத்தவர் ஆனதால், அதற்கு நீர்தானே உத்தரவு சொல்லும்.

கிறி. பின்னை நானே உத்தரவு சொல்லுகிறேன். சிலவேளைகளில் அவர்களுக்குப் பாவம் உண்டு என்கிற உணர்வும், அதற்காகத் தண்டனை வரும் என்ற பயமும் வரும் என்று நினைக்கிறேன். ஆனால் அவர்கள் சுபாவத்தின்படி அறிவீனராய் இருக்கிறதால், இப்படிப்பட்ட உணர்வுகளும் பயங்கரங்களும் தங்களுடைய நன்மைக்கென்றே உண்டாகிறது என்று அறியாதிருக்கலாம். அதினாலேதான் அவர்கள் தங்களுக்குள் எழும்பும் அவைகளை அடக்கிப்போட்டு, தங்கள் சுய இச்சையின்படியான எண்ணங்களைப் புகழ்ந்துகொண்டு துணிகரத்தில் நிலைத்திருக்கிறார்கள்.

நீ.நம். பயமானது மனுஷருக்கு அதிக நன்மையை உண்டாக்குகிறது என்றும், அவர்கள் மோட்சபிரயாணம் செய்யத் துவக்குகையில் அவர்களை நேரே நடத்துகிறது என்றும் நீர் சொல்லுகிறதை நான் நம்புகிறேன்.

கிறி. அது மெய்; அந்தப் பயம் உத்தம பயமாய் மாத்திரம் இருந்தால் மிகுந்த நன்மைசெய்யும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" உ என்று சத்தியவசனமும் அறிவிக்கிறது.

நீ.நம். உத்தம பயத்தின் இலட்சணம் இன்னது என்று சொல்லும், பார்ப்போம்.

கிறி. உத்தமபயம் அல்லது மெய்யான பயம் இன்னதென்று அறிய மூன்று அடையாளங்கள் உண்டு:

1. அதின் ஆரம்பத்தால் விளங்கும்; எனெனில், அது இரட்சிப்புக்கேற்ற பாவ உணர்த்தலில் ஆரம்பிக்கும்.

2. அதின் செயலால் விளங்கும்; அது இரட்சிப்பைப் பெறும்படியாகக் கிறிஸ்துவை உறுதியாய்ப் பிடிக்கும்படி ஆத்துமாவை ஏவிவிடும்.

உ யோபு. 28. 28. சங். 111. 10. நீதி. 1. 7; 9. 10.



3. அதின் கனபத்தியால் விளங்கும்; அது தேவனையும் அவருடைய வசனத்தையும், அவருடைய வழிகளையும் குறித்து கனமான எண்ணத்தை ஆத்துமாவில் உண்டாக்கி, அதை மெதுவாக்கி; தேவனைக் கனவீனப்படுத்துகிறதற்காகிலும், அவரோடிருக்கும் சமாதானத்தைக் குலைக்கிறதற்காகிலும், தேவாவியானவரைத் துக்கப்படுத்துகிறதற்காகிலும், சத்துருக்கள் தூஷிக்கிறதற்காகிலும் ஆத்துமாவானது வலது இடதுபுறம் விலகாதபடிக்கு அதை நடத்திக் காபந்துசெய்யும்.

நீ.நம். நீர் நன்றாகச் சொன்னீர்; நீர் சொன்னதெல்லாம் சத்தியம் என்று நம்புகிறேன். நாம் மயக்கபூமியைக் கொஞ்சங்குறையக் கடந்திருப்போமா?

கிறி. ஏது, இந்தச் சம்பாஷணை இளைப்பாய் இருக்கிறதோ?

நீ.நம். இல்லை, இல்லை, மயக்கபூமியில் இன்னும் எவ்வளவுதூரம் இருக்கிறது என்று அறியும்படியாகத்தான் அப்படிக் கேட்டேன்.

கிறி. மயக்கபூமியைக் கடக்க இன்னும் இரண்டுநாழிகை வழிகூட இல்லை; ஆனால் நாம் நமது சம்பாஷணைகளைத் துவக்குவோமாக.

அறிவீனர், பாவ உணர்வால் உண்டாகிற இப்படிப்பட்ட பயங்கரங்கள் தங்களுடைய நன்மைக்காக உண்டாகிறது என்று அறியாததினாலே அவைகளை அடக்கிவிடப் பார்க்கிறார்கள்.

நீ.நம். எப்படி அவர்கள் அதை அடக்கப்பார்க்கிறார்கள்?

கிறி. 1. அவைகள் தேவனாலே உண்டாகிறதாய் இருந்தாலும், அவர்கள் பிசாசினால் உண்டாகிறவைகள் என்று எண்ணுகிறார்கள்; அப்படி எண்ணிக்கொண்டு, அந்தப் பயங்கரங்கள் தங்களைக் கீழது மேலதாகப் புரட்டிவிடுகிறவைகளைப்போல உத்தேசித்து அதற்கு எதிர்த்துநிற்கிறார்கள்.

2. அவர்களுக்குள் விசுவாசம் இல்லாதிருந்தாலும், இந்த பயங்கரங்கள் அவர்கள் விசுவாசத்தைக் கெடுத்துப்போடுகிறது என்று அவர்கள் எண்ணிக்கொண்டு, தங்கள் இருதயத்தை அதற்கு விரோதமாய்க் கடினப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

3. தாங்கள் பயப்படக்கூடாது என்று அவர்கள் எண்ணிக்கொண்டு, உத்தமபயத்தை அசட்டைசெய்து கவலையற்ற விதமாய்த் துணிந்து நடக்கிறார்கள்.

4. அந்த பயங்கரங்கள் தங்களுடைய பழைய சுயசுத்தாங்க நிலைமையை எடுத்துப்போடுகிறது என்று எண்ணுகிறதினால், அதை தங்களால் ஆனமட்டும் தடுக்கப்பார்க்கிறார்கள்.

திடநம். இதைக்குறித்து நானும் கொஞ்சம் அறிந்திருக்கிறேன்; நான் என்னை அறிந்துகொள்ளுமுன் எனக்கும் அப்படியே இருந்தது.

கிறி. நல்லது, அறிவீனன் காரியத்தை இம்மட்டில் நிறுத்திவிட்டு, வேறொரு பிரயோஜனமான விஷயத்தைப்பற்றி சம்பாஷிப்போமாக.

திடநம். மெத்தச் சந்தோஷம்; ஆனால் நீர்தான் துவக்கவேண்டும்.

## சொற்பகாலம் என்பவர் சம்பவம்.

கிறி. நல்லது; அப்படியே ஆகட்டும். உங்கள் நாட்டில் சுமார் பத்துவருஷத்துக்குமுன்னே, மகா பக்திமானைப்போல் காணப்பட்ட சொற்பகாலம் என்பவரை[1] அறிவாயா?

சொற்பகாலத்தின் பூர்வோத்தரம்.

திடநம். அவனையா? அறிவேன்; அறிவேன். நாணயபுரத்திற்குச் சுமார் இரண்டுமைல் தூரத்துக்கு அப்பால் இருக்கிற கீர்கேடு ஊரில், பின்வாங்கி என்கிற ஒருவன் வீட்டுக்கு அடுத்த வீட்டில் குடியிருந்தான்.

கிறி. சரி, சரி. இவனும் அவனும் ஒரேவீட்டில்தான் குடியிருந்தார்கள்; அந்த மனிதன் ஒருகாலத்தில் தேவபக்திக்கேற்ற எழுப்புதலை அடைந்தான். அவன் தன் பாவங்களைப்பற்றிய அறிவும், அதற்கு வரவேண்டிய லாபம் இன்னது என்றும் அவனுக்குத் தெரியவந்தது என்று நம்புகிறேன்

திடநம். நீர் சொல்லுகிறதை நானும் நம்புகிறேன்; அவன் வீட்டுக்கும் என் வீட்டுக்கும் இரண்டுநாழிகை வழிமுதலாய் இல்லை. அவன் அடிக்கடி என் வீட்டிற்கும் வந்து, வந்தபோதெல்லாம் அழுதகண்ணும், விம்மியழுகைக்குமாகவே இருப்பான்; அவனுக்காக நான் மெத்தவும் பரிதாபப்பட்டது உண்டு. அவனைக் குறித்துக் கொஞ்சம் நம்பிக்கையும்

1 சொற்பகாலம் என்பவர் என்பது, கொஞ்சகாலத்துக்குமாத்திரம் தேவபக்தியைப் பிடித்திருந்து, அப்புறம் அதிலிருந்து விழுந்துபோகிறவர்களைக் குறிக்கிறது.



இருந்தது. ஆனால், "கர்த்தாவே, கர்த்தாவே" என்று சொல்லுகிறவர்கள் எல்லாரும் நல்லவர்களோ என்பதை இவன் விஷயத்தில் பார்க்கலாம்.

கிறி. அவன் ஒருதரம் என்னைக் கண்டு, நம்மைப்போலே அவனும் மோட்சபிரயாணம் செய்யும்படி தீர்மானித்திருக்கிறதாய்ச் சொன்னான். அப்படி இருக்கவே அவன் சுயரட்சை[1] என்ற ஒருவனோடு சிநேகம்பண்ணிக்கொண்டான்; அது முதல் என்னுடைய உறவும் அற்றுப்போயிற்று.

திடநம். நாம் இப்பொழுது அவனைக்குறித்துப் பேசுகிறதினாலே; அவனும், அவனைப்போல் ஒத்தவர்களும் திடீரென்று பின்வாங்கிப்போகிறதற்கு முகாந்தரங்கள் என்னவென்று சற்று விசாரிப்போம்.

கிறி. அது மிகவும் பிரயோஜனமாய் இருக்கும்; ஆதலால் நீ அதைப்பற்றிப் பேசத் துவக்கு.

திடநம். எனக்குத் தோன்றுகிறபடி, அப்படிப் பின்வாங்கிப்போவதற்கு நாலு முகாந்தரங்கள் உண்டு:—1. அவர்களுடைய மனச்சாட்சியில் விழிப்பு உண்டானாலும், அவர்கள் மனம் இன்னும் மாறுதலடையாமல் இருக்கிறது; ஆதலால் அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டதால் உண்டான பயத்தின் வல்லமை குறைந்து, தேவபக்தியாய் நடக்கும்படி தூண்டின எல்லாம் ஓய்ந்துபோகிறது. அதினாலே அவர்கள் தங்கள் பழைய வழிகளில் மறுபடியும் திரும்பிவிடுகிறார்கள். மட்டுமீறித் தின்ற நாயானது தன் வயிற்றுக்குள் இருக்கிறதை எல்லாம் வெளிப்படுத்திவிடுமட்டும் கக்குகிறது; தான் தின்றதைப் பத்திரப்படுத்திக்கொள்ளும்படியான மனதிருந்தாலும், அது தன் மனதின்படி செய்யாமல் குடலைப் புரட்டுகிறதினாலே அப்படிக் கக்குகிறது. அதின் அரோசிப்பு நீங்கி வயிறு தணிந்தபின்பு, தான் கக்கினதை எவ்வளவேனும் அருவருக்காமல், மறுபடியும் போய் அதை எல்லாம் நக்கித் தின்றுவிடுகிறது. "நாய் தான் கக்கினதைத் தின்னும்"[a] என்ற பழமொழி உள்ளதுதான். அது போல சிலருக்கு நரகத்தைப்பற்றிய எண்ணமும், அதின்

சொற்பகாலத்தின் இருதய நிலைமை. அவர்கள் பின்வாங்கிப்போகும் முகாந்தரங்கள்.

1 சுயரட்சை என்பது, இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இரட்சிப்படைகிறதற்குப் பதிலாக, தான் நற்கிரியைகள் என்று எண்ணிக்கொள்ளுகிற கருமங்களினாலே இரட்சிப்பு கிட்டும் என்று நம்புகிறவர்களைக் குறிக்கிறது.

a 2 பே. 2. 22.

வேதனைகளைப்பற்றிய பயமும் உண்டாகிறபோது, மோட்ச ஆசையின் அனல் எழும்புகிறது. நரகத்தைப்பற்றிய எண்ணமும், அதின் வேதனைகளைப்பற்றிய பயங்கரங்களும் குளிரக் குளிர; மோட்சத்தையும், இரட்சிப்பையும் பற்றி உண்டான ஆசையின் அனலும் குளிர்ந்துபோகிறது. அவர்களைக் குற்றஞ்சாட்டும் மனச்சாட்சியும், உணர்த்தும் பயமும் நீங்கிப்போகிறதால், மோட்சத்தையும், பரம பாக்கியங்களையும் பற்றிய ஆசை செத்து தங்கள் பழைய வழிகளில் மறுபடியும் போய்விடுகிறார்கள்.

2. அவர்கள் தங்களை அடிமைப்படுத்தி ஆளுகிற பயங்கரங்களால் அப்படிச் செய்கிறார்கள். மனிதரைப்பற்றி அவர்களுக்குள் இருக்கிற பயத்தைக்குறித்தே இப்பொழுது பேசுகிறேன். "மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும்."[a] நரக அக்கினிச் சுவாலையின் இரைச்சல் அவர்கள் காதுகளில் தொனிக்குமட்டும், மோட்சானந்தத்தின் மேலுள்ள ஆசை அனலாய் இருந்தாலும், அந்தப் பயம் சற்று நீங்கினபின் அவர்கள் வேறுநினைவாகி, நாம் உள்ளதையும் இழந்து நஷ்டப்படுகிறதைவிட, ஞானமாய் நடந்துகொள்ளுவது நலம் என்றாவது, நீங்கமாட்டாத தொல்லைகளையும், அவசியமில்லாத உபத்திரவங்களையும் நாம் என் வருவித்துக்கொள்ளவேண்டும் என்றாவது எண்ணுகிறார்கள். கடைசியாக அவர்கள் அப்படியே உலகத்தோடு மறுபடியும் சார்ந்துபோகிறார்கள்.

3. தேவபக்தியாய் இருப்பதினால் உண்டாகிற வெட்கமும், அவர்கள் வழிக்கு ஒரு இடறுங்கட்டைபோல் இருக்கிறது. அவர்கள் அகந்தையும், இறுமாப்பும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்; அவர்கள் பார்வைக்கு தேவபக்தியானது அற்பமும் ஈனமுமாய் இருக்கிறது. ஆதலால் நரகத்தைப்பற்றிய உணர்வும், வருங்கோபத்தைப்பற்றிய பயமும் நீங்கிப்போகிறபொழுது அவர்கள் மறுபடியும் பழைய வழியிலே போய்விடுகிறார்கள்.

4. பாவக்குற்றத்தையும் அதின் பயத்தையும் குறித்துத் தியானிப்பது அவர்கள் மனதுக்கு மகா சஞ்சலமாய் இருக்கிறது; தங்கள் நிர்ப்பாக்கியம் தங்களைப் பிடிக்குமட்டும் அதைக் கவனிக்க அவர்களுக்குப் பிரியம் இல்லை. பிடிக்குமுன் அவர்கள் அதைக் கண்டுகொள்ள விரும்பினால், அந்தக் காட்சி நீதிமான்கள் போய் ஒதுங்கும் இடத்துக்கு அவர்களைப் போகும்படி ஏவித் தப்பிக்கொள்ளச் செய்யும். ஆனால் அவர்கள், நான்

a நீதி. 29. 25.



முன் சொன்ன பிரகாரம் பாவக்குற்றத்தையும் அதைப்பற்றிய பயத்தையும் தங்கள் மனதிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். ஆதலால் தேவனுடைய பயங்கரங்களையும், கோபாக்கினையையும் குறித்து மனதில் உண்டாகும் ஏவுதல் நீங்கும்பொழுதே, அவர்கள் மனச்சந்தோஷத்தோடு தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துகிறதும் அல்லாமல், மேலும் மேலும் கடினப்படுத்துகிறதற்கான வழியைத் தெரிந்துகொள்ளுகிறார்கள்.

கிறி. நீர் சொல்லியதெல்லாம் அதின் தன்மையைக் கொஞ்சங்குறைய நன்றாய் விளக்குகிறது; அவர்கள் மனமும் உள்ளமும் மாறுதல் அடையாதிருக்கிறதே இவ்வளவுக்கும் காரணமாய் இருக்கிறது. அவர்கள் நியாயாதிபதிக்குமுன்பாக நிற்கிற ஒரு குற்றவாளிக்கு ஒப்பாய் இருக்கிறார்கள். அவன் பயந்து நடுநடுங்கி, தான் செய்த குற்றத்திற்காக முழுமனதோடு துக்கப்படுகிறவனைப்போல் காணப்படுகிறான்; அவன் நடுக்கத்துக்கு எல்லாம் காரணம் தூக்குமரத்தைப் பற்றிய பயமே அல்லாமல், தான் செய்த குற்றத்தை அருவருக்கிறதினாலே அல்ல; அப்படிப்பட்ட மனுஷனை விட்டுவிட்டால், அவன் பழையபடித் திருடனும் கொலைபாதகனுமாகவே இருப்பான். ஆனால் மனதில் மாறுதல் உண்டாயிருந்தால் அவன் காரியம் வேறுவிதமாய் இருக்கும்.

அவர்கள் பின்வாங்கும் மாதிரி.

நம். அவர்கள் பின்வாங்கிப் போவதின் காரணங்களைப் பற்றி நான் சொன்னேனே, நீர் அவர்கள் பின்வாங்கிப்போகும் மாதிரியைப் பற்றிக் கொஞ்சம் சொல்லமாட்டீரா?

கிறி. மெத்தச் சந்தோஷத்தோடு சொல்லுவேன்:

1. அவர்கள் தேவனையும், மரணத்தையும், நியாயத்தீர்ப்பையும் குறித்து தங்கள் மனதில் உண்டாகும் நினைவுகளை எல்லாம் விலக்கிப்போடுகிறார்கள்.

2. அப்புறம் அவர்கள் தனிஜெபம், இச்சையடக்கம், விழிப்பு, உத்தம மனஸ்தாபம் ஆகிய இவைபோன்ற அந்தரங்க கடமைகளைச் செய்யாதபடி வரவர நிறுத்திப்போடுகிறார்கள்.

3. அப்பால் அவர்கள்; உத்தம பக்தியும், ஞான அனலுமுள்ள கிறிஸ்தவர்களுடைய சகவாசத்தில் இருந்து தங்களைப் பிரித்துக்கொள்ளுகிறார்கள்.

4. அதின்பின்பு அவர்கள்; தேவவசனத்தைக் கேட்குதல், வாசித்தல், பக்திக்கடுத்த சம்பாஷணை ஆகிய இவைபோன்ற வெளியரங்க கடமைகளில் குளிர்ந்துபோகிறார்கள்.

5. அப்புறம் அவர்கள், தேவபக்தியைத் தங்கள் முதுகுக்குப் பின்னாலே எறிந்துவிடும்படியாகத் தங்களுக்கு ஒரு போக்கு வேண்டும் என்று, தேவபக்தி உள்ளவர்களிடத்தில் நாமும் பார்க்கிற சில குறைவுகளைக் கண்டுபிடித்துக்கொண்டு, பொய்த்தனமாய் அவைகளை அவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லி அவர்களைக் கறைப்படுத்துகிறார்கள்.

6. அப்பால் அவர்கள் மாம்ச சிந்தையும், உல்லாசமும், சிற்றின்பமும் உள்ளவர்களோடேகூடி சகவாசஞ்செய்கிறார்கள்.

7. அதின்பின்பு அவர்கள் மாம்ச சிந்தைக்கும், சிற்றின்பத்துக்கும் ஏதுவான சம்பாஷணைகளை அந்தரங்கத்தில் செய்கிறதோடேகூட, உத்தமரில் சிலர் இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யப் பார்க்கிறபொழுது ஆனந்தங்கொண்டு, தாங்கள் அவர்கள் மாதிரியைப்பார்த்து தைரியமாய்ச் செய்யும்படி ஏவுகிறார்கள்.

8. இதின்பின் சில அற்பமான பாவங்களை விளையாட்டுப் போல வெளியரங்கமாய்ச் செய்கிறார்கள்.

9. கடைசியாக அவர்கள், இருதயம் கடினப்பட்டுத் தாங்கள் இன்னார் என்று துலக்கமாய்க் காட்டுகிறார்கள். ஒரு கிருபையினால், அற்புதமாய் அவர்கள் தடுக்கப்படாவிட்டால், அப்படியே கேட்டின் சமுத்திரத்தில் விழுந்து, தாங்களே வரவழைத்துக்கொண்ட மோசத்தினால் என்றென்றைக்கும் அழிந்தேபோகிறார்கள் என்றான்.

## பிரயாணிகள் வாழ்க்கைநாடு சேர்தல்.

பிரயாணிகள் வாழ்க்கைநாடு சேர்தல்.

இப்பொழுது நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், அந்தப் பிரயாணிகள் இருவரும் இதற்குள்ளாக மயக்கபூமியைக் கடந்து வாழ்க்கைநாட்டில்[1] சேர்ந்தார்

[1] வாழ்க்கை நாடு என்பது, ஆவிக்குரிய விஷயங்களில் அநுபோகப்பட்ட மெய்விசுவாசிகள் தங்கள் ஜீவியத்தின் கடைசியில் அநுபவிக்கிற தெளிந்த சமாதானத்தையும் நம்பிக்கையையும் குறிக்கிறது. அவர்கள் பெரும்பாலும் சோதனைகளுக்கும் பயங்களுக்கும் விலகி இருக்கிறார்கள்; அவர்கள் தேவனோடு அந்நியோந்நியமாய் இருந்து இன்பத்தை அடைகிறார்கள்; அவர்கள் தங்களுக்காகச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிற நித்திய மகிமைகளை நினைவுகூரும்போது சொல்லக்கூடாத ஆனந்தத்தால் நிறைந்திருக்கிறார்கள். அவர்கள் இவ்வுலகத்தை விட்டுப் பிரியவும் கிறிஸ்துடனே போய் குடியிருக்கவும் ஆசையாய் இருக்கிறார்கள்.



கள்.[a] அதின் ஆகாயம் மகா இன்பமாயும், சுகத்துக்கு ஏற்றதாயும் இருந்தது; அவர்கள் செல்லும் பாதை அந்நாட்டுக்கு ஊடே போனது, அவர்கள் அவ்விடத்தில் சற்று இளைப்பாறிக்கொண்டார்கள். அவர்கள் இவ்விடத்தில் குருவிகளின் கூவுதலையும், காட்டுப்புறுக்களின் கனிந்த குரலையும் கேட்டார்கள். இவ்விடத்தில் புஷ்பங்கள் மலர்ந்து கம்மென்று வாசனையை வீசின; இந்நாட்டில் சூரியன் இரவும் பகலும் பிரகாசிக்கின்றது. ஆகையால் இது மரணபள்ளத்தாக்குக்கும் அகோரபயங்கர ராட்சதன் எல்லைக்கும் அப்பால் இருந்தது; இங்கிருந்து பார்த்தால், சந்தேகதுருக்கம் சற்றாகிலும் தெரியமாட்டாது. அவர்கள் நாடிப்போகும் நகரம் இவ்விடத்தில் அவர்கள் கண்ணுக்குத் தெரிந்தது; இந்த வாழ்க்கைநாடு மகிமைபொருந்திய மோட்சபட்டணத்தின் எல்லைக்குச் சமீபமாய் இருந்தபடியால், அங்குள்ள குடிகளாகிய ஒளியரூபிகளில் அநேகரை அவர்கள் இங்கே சந்தித்தார்கள். இந்நாட்டிலேதான் மணவாளனுக்கும் மணவாட்டிக்கும் உண்டாயிருந்த உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. "மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாய் இருப்பதுபோல, அவர்கள் தேவன் அவர்கள்மேல் மகிழ்ச்சியாய் இருப்பார்." இவ்விடத்தில் நவதானியங்களையிட்டாவது திராட்சரசத்தைக் குறித்தாவது அவர்கள் யாதொரு கவலைப்பட வேண்டியதில்லை. அவர்கள் பிரயாணம் முழுவதிலும் கிடையாததெல்லாம், இங்கே சம்பூரணமாய்க் கிடைக்கக் கூடியதாய் இருந்தது. மேலும் இவர்கள் இங்கே, "இதோ உன் இரட்சிப்பு வருகிறது; இதோ அவர் அருளும் பலன் அவரோடும் அவர் செய்யும் பிரதிபலன் அவர் முன்பாகவும் வருகிறது, என்று சீயோன் குமாரத்தியை நோக்கிச் சொல்லுங்கள்" என்கிற சத்தம் பட்டணத்துக்கு வெளியே பலத்த சத்தத்தோடு தொனிக்கிறதையும் கேட்டார்கள். வாழ்க்கைநாட்டு மனிதர் எல்லாரும் பிரயாணிகளைக் கண்டவுடனே, இவர்களைப் பரிசுத்தஜனம் என்றும் கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் என்றும் தேடிக்கொள்ளப்பட்டவர்கள் என்றும் அழைத்தார்கள்.

வாழ்க்கைநாட்டு மகத்துவங்கள்.

இந்நாட்டை அவர்கள் கடந்துபோகையில், மோட்சபட்டணத்துக்கு வெகுதூரத்தில் இருக்கும்போது அநுபவியாத ஆனந்தத்தை எல்லாம் அநுபவித்தார்கள். அவர்கள் போகப

[a] ஏசா. 42; 4—12. உன்னத. 2. 10—12.

போக உச்சிதபட்டணத்தின் அலங்கங்கள் எல்லாம் அதிகத் தெளிவாகத் தெரிந்தது. அது முத்துக்களாலும் விலைபெறப் பெற்ற கல்லுகளாலும் கட்டப்பட்டிருந்தது; அதின் தெருக்கள் தங்கத்தால் தளவரிசைப் படுத்தப்பட்டிருந்தது. அதின் இயல்பான ஜோதியோடு, அதினுள் பிரகாசித்த சூரியனுடைய ஜோதியும் கூடி ஜொலித்தது. கிறிஸ்தியான் அதின்மேல் உண்டான வாஞ்சையால் வியாதிப்பட்டு மயங்கி விழுந்தான்; திடநம்பிக்கையும் அதே வியாதியால் இரண்டு மூன்று தரம் சோர்ந்து விழுந்தான். இவ்விடத்தில் அவர்கள் இருவரும் சற்றுநேரம் மயங்கிக்கிடந்து தங்கள் நோயின் வேதனை பொறுக்கமாட்டாமல், "என் நேசனைக் கண்டீர்களானால், நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லுங்கள்" என்று அழுது புலம்பினார்கள்.

அவர்கள் சற்று தெளிவடைந்து தங்கள் வியாதியைத் தாங்கும்படி பலங்கொண்ட பிற்பாடு, மறுபடியும் நடந்து நகரத்துக்குச் சமீபமாய்ச் சேரவே, அங்கே கந்தவனங்களும் திராட்சப் பந்தல்களும் தோட்டங்களும் இருந்தன; அதின் வாசல் ராஜபாதைக்கு நேராகவே இருந்தது. அவர்கள் இந்த அலங்காரச் சோலைக்குள் வரவே, அதின் தோட்டக்காரன்[1] வழியில் நின்றான். அவனைக் கண்டவுடனே, அவர்கள் இந்தச் செழிப்பான முந்திரிகைச் செடிகளும் இன்பமான தோப்பும் யாருடையது?[2] என்று கேட்டார்கள். அதற்கு அவன், இவை மகாராஜாவின் சிங்காரத்தோப்பு; மகாராஜா தமக்கு மனமகிழ்ச்சியாகவும் பிரயாணிகளுக்கு முசிப்பாறுதலாய் இருக்கவும் இதை உண்டுபண்ணியிருக்கிறார் என்று சொல்லி, அவ்விருவரையும் தோட்டத்துக்குள் கூட்டிக்கொண்டு போய் அவ்விடத்தில் உள்ள மதுரமான கனிகளால் முசிப்பாறிக்கொள்ளும்படி[a] சொன்னான். அதுவுமன்றி அவன், மகாராஜா உலாவித் திரியும் தெருக்களையும் அவர் உட்கார்ந்து மனமகிழும் பூப்பந்தல்களையும் அவர்களுக்குக் காட்டினான். இங்கே அவர்கள் சற்றுநேரம் தங்கி தூங்கி இளைப்பாறினார்கள்.

[1] தோட்டக்காரன் என்பது, ஒரு உண்மையுள்ள சுவிசேஷ ஊழியக்காரனைக் குறிக்கிறது.

[2] செழிப்பான முந்திரிகைச் செடிகள் என்பது, மெய்மார்க்கத்துக்கு அடுத்த வெளியரங்கமான ஆராதனை முதலியவைகளைக் குறிக்கிறது.

[a] உபா. 23. 24.



அவர்கள் தங்கள் பிரயாணம் முழுவதிலும் பேசினதைப் பார்க்கிலும், [illegible] நித்திரையில் பேசினதை நான் என் சொப்பனத்தில் [illegible]ன். அது எனக்குச் சொல்ல முடியாத பிரமிப்பாய் இருந்தது. நான் பிரமிப்பதை அந்தத் தோட்டக்காரன் பார்த்து, இதற்காக நீ பிரமிக்க வேண்டியதென்ன? இந்தத் தோட்டத்துத் திராட்சப் பழங்களின் குணம் இப்படி[illegible]ான். "இது மெதுவாய் இறங்குகிறதும், உறங்குகிறவர்களின் உதடுகளைப் பேசப்பண்ணுகிறதுமான நல்ல திராட்சப் பழங்களாய் இருக்கின்றது"[a] என்று சொன்னான்.

அவர்கள் தூங்கி எழுந்திருந்தவுடனே பட்டணத்துக்குப்[1] போகும்படியாகப் பயணப்படுகிறதை நான் கண்டேன். ஆனால் நான் முன் சொல்லியபடி அந்த நகரம் சுத்தப் பொன்னாய் இருந்தபடியால்,[b] அதின்மேல் பிரகாசித்த சூரியவெளிச்சம், அதை அதிக ஜோதியாக விளங்கப்பண்ணிற்று.

உச்சித பட்டணத்து மகத்துவங்கள்.

ஆதலால், அதின் மகத்துவங்களை அவர்கள் நேரே பார்க்கக் கூடாமல், அதற்கென்று உண்டுபண்ணப்பட்டிருந்த ஒரு கண்ணாடியினாலேமாத்திரம் பார்த்துக்கொண்டார்கள்.[c] அவர்கள் தங்கள் வழியே நகரத்தை நோக்கிப்போகையில், இரண்டு மனிதர் இவர்களைச் சந்தித்தார்கள். அவர்கள் வஸ்திரம் பொன்மயமாயும், முகம் ஒளிமயமாயும் ஜொலித்தது.

அவர்கள் இந்தப் பிரயாணிகளைப் பார்த்து; நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்? என்று கேட்டார்கள். இவர்கள் அதற்கு உத்தரவு சொன்னார்கள். அப்புறம் இந்தப் பிரயாணிகள் வழியில் தங்கின இடங்கள், சகித்த பாடுகள், அநுபவித்த சந்தோஷங்கள் அல்லது ஆறுதல்கள் இவைகள் எல்லாவற்றையும் குறித்து அவர்கள் வினவினார்கள்; அதற்குச் சொல்லவேண்டிய மறுமொழிகளைப் பிரயாணிகள் சொன்னார்கள். அப்பால் அவர்கள் பிரயாணிகளைப் பார்த்து, உங்களுக்கு இன்னும் இரண்டு விக்கினங்கள் மாத்திரம் இருக்கிறது; அதைக் கடந்துவிட்டால் அப்புறம் மோட்சபட்டணம் சேருவீர்கள் என்று சொன்னார்கள்.

அப்பொழுது கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் அவர்களை நோக்கி, எங்களோடேகூட வழித்துணையாக வாருங்களேன்

[1] பட்டணம் என்பது மோட்சத்தைக் குறிக்கிறது.

[a] உன்னத. 7. 9. [b] வெளி 21. 18. [c] 2 கொரி. 3. 18.

என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் நல்லது, அப்படியே ஆகட்டும் என்று சம்மதித்து, நாங்கள் [illegible] ஆனால் நீங்கள்தான் உங்கள் சயவிசுவாசத்தினால் [illegible] பெறவேண்டிய பதைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்றார்கள். அப்புறம் அவர்கள் எல்லாருங்கூடி நடந்து மோட்சபட்டணத்தின் வாசல் தெரிகிறது மட்டும் சுகமாய்ப் போனதை நான் என் சொப்பனத்தில் கண்டேன்.

## பிரயாணிகள் நதியைக் கடந்தல்.

பின்னும் நான் கண்டது என்னவென்றால்; அந்த வாசலுக்கும் அவர்களுக்கும் மத்தியிலே ஒரு ஆறு ஓடினது;[1] அந்த ஆற்றைக் கடக்க ஒரு பாலமும் இருந்ததில்லை; அது மகா ஆழமான ஆறாயும் இருந்தது. அவ்வாற்றைக் கண்டவுடனே, இந்தப் பரதேசிகள் மனம் திகைத்தது; அவர்களோடு கூட வந்த ஒளிமயரூபிகளோ, நீங்கள் நேரே ஆற்றைக் கடக்கவேண்டும், அல்லாவிட்டால் வாசலண்டை சேரக்கூடாது என்றார்கள்.

பிரயாணிகள் நதியைக் காண்கிறார்கள்.

இந்தப் பிரயாணிகளோ வாசலண்டை சேரும்படி வேறு வழிகள் இல்லையோ என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், வேறுவழி உண்டு; ஆனால் ஏனோக்கு எலியா என்கிற இருவரைத் தவிர உலகம் தோன்றின காலமுதல் கடைசி எக்காளம் தொனிக்கும் மட்டும், வேறொருவனும் அதின் வழியாய்ப் போகும்படியாக உத்தரவாகவில்லை என்று சொன்னார்கள்; அப்பொழுது அவர்கள் இருவரும் கலங்கினார்கள். கிறிஸ்தியான் மற்றவனைப் பார்க்கிலும் மனஞ்சோர்ந்து இங்கும் அங்கும் திரும்பி, ஆற்றைக் கடந்துபோக வேறுவழி கிட்டமாட்டாதா என்று தேடியும் அகப்படவில்லை. அப்புறம் பிரயாணிகள் இவ்வாற்றில் ஜலம் ஏற்றத்தாழ்வாய் இருக்குமா, அல்லது எல்லா இடத்திலும் ஒரே ஆழமாய் இருக்குமா என்று ஒளிமயரூபிகளைக் கேட்டார்கள். அதற்கு அவர்கள், இல்லை; நீங்கள் உச்சிதபட்டணத்து அரசர்மேல் வைக்கும் விசுவாசத்துக்கு தக்கதாக ஆற்றின் ஜலம் ஏற்றத்தாழ்வாய் இருக்கும்; என்றாலும் அப்படிப்பட்ட சமயத்தில் உங்களுக்கு யாதொரு உதவியும் செய்யமாட்டோம் என்றார்கள்.

ஆற்றைக் கடக்க வேறுவழி இல்லை.

[1] ஆறு. இது இஸ்ரவேலர் யோர்தானைக் கடக்கவேண்டியதிருந்ததுபோல நாம் மோட்சம்சேருமுன் கடந்துபோகவேண்டிய மரணத்தைக் குறிக்கிறது.





அதன்பின் ஆற்றைக் கடக்கும்படி இருவரும் இறங்கினார்கள், இறங்கினவுடனே கிறிஸ்தியான் அமிழத்தொடங்கி, தன் உத்தம சிநேகிதனாகிய நிடநம்பிக்கையைக் கூப்பிட்டு, "நிலையாத ஜலத்தில் ஆழ்ந்திருக்கிறேன், வெள்ளங்கள் என்மேல் புரண்டுபோகிறது, நிற்க நிலையில்லை" என்று சொன்னான்.

கிறிஸ்தியான் அமிழத்தொடங்குகிறான்.

அதைக் கேட்ட நிடநம்பிக்கை, என் சகோதரனே! திடன் கொள்ளும், தரை என் காலுக்குத் தட்டுப்படுகிறது; அது அடி வைக்க நன்றாய் இருக்கிறது என்றான். அப்போது கிறிஸ்தியான், ஆ என் சிநேகிதனே! மரணதுக்கம் என்னைச் சூழ்ந்துகொண்டது, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தைக் நான் காணமாட்டேன் என்றான். இப்படிச் சொல்லவே, கார் இருளும்

நிடநம்பிக்கை அவனைத் தைரியப்படுத்துகிறான்.

தியிலும் அவனைப் பிடித்ததினாலே தனக்கு முன் ஒன்றையும் பார்க்கக் கூடாமல்போயிற்று. அதுவுமன்றி அவன் இவ்விடத்தில் தன் புத்தியையும் இழந்துபோனதால், நிதானமான வார்த்தைகளைப் பேசவாவது தான் பரதேச பிரயாணத்தில் அடைந்த ஆறுதலைப்பற்றி நினைக்கவாவது கூடாமல்போயிற்று. அவன் பேசின வார்த்தைகளால் தான் மோட்சவாசலில் கால்வைக்கக் கூடாமல் அந்த ஆற்றிலேயே மாண்டுபோவேன் என்கிற மனத்திகிலும் இருதய பயங்கரமும் கொண்டிருந்ததாகவே வெளிப்பட்டது. அதுவும் அன்றி அவன் பக்கத்தில் நின்றவர்கள், அவன் பரதேசபிரயாணம் செய்வதற்கு முன்னும் பின்னும் செய்த பாவங்களையிட்டு மிகுந்த கலக்கமுடையவனாய் இருந்ததைக் கவனித்தார்கள். அதுவும் அல்லாமல். அவன் பேசின வார்த்தைகளால் ஆவேசங்களும் அசுத்த ஆவிகளும் அவனுக்குத் தோன்றினதால் அவன் மிகவும் சஞ்சலப்பட்டான் என்றும் தெரியவந்தது.[1]

அசுத்த பயங்கரங்கள்.

ஆதலால் திடநம்பிக்கை, கிறிஸ்தியானுடைய தலையை தண்ணீருக்கு மேலாகத் தாங்கி நடத்த வெகு சங்கடப்பட வேண்டியதாய் இருந்தது. சிலதரம் அவன் தண்ணீருக்குள் தாழ அமிழ்ந்திப்போய், வெகுநேரத்துக்குப் பிற்பாடு குறை உயிரோடு தலையைக் காட்டுவான். திடநம்பிக்கை அந்தச் சமயத்தில் அவனை ஆறுதல் படுத்தும்படியாக, சகோதரனே! அதோ வாசலைப் பார்க்கிறேன், நம்மைக் கூட்டிக்கொண்டு போகும்படி அநேக ஆட்கள் வாசற்படியண்டை காத்துநிற்கிறார்கள் என்று சொல்லுவான். அதற்கு கிறிஸ்தியான், உனக்காக உனக்கென்றே அவர்கள் காத்திருக்கிறார்கள்; நான் உன்னை அறிந்த நாள்முதல் இதுவரையும் நீ திடநம்பிக்கை உள்ளவனாய் இருந்தாய் என்பான். நீரும் என்னைப்போலவே இருந்தீர் என்று திடநம்பிக்கை அவனைத் தேற்றுவான்; அப்போது கிறிஸ்தியான் சொல்லுவான்; ஆ சகோதரனே! நான் உத்தமனாய் இருந்தால் அவர் என்னைக் கைதூக்கும்படி இப்பொழுது எழுந்தருளியாகி வருவார்;

கிறிஸ்தியான் அவன் தோழனால் தைரியப்படுத்தப்படுகிறான்.

[1] மெய்விசுவாசிகள் முதலாய் வெகுதரம் மரணப்படுக்கையில் சஞ்சலமும் பயமும் உடையவர்களாய் இருக்கிறார்கள். சரீரமோ பலவீனமுள்ளதாகையால், சாத்தான் இந்தச் சமயத்தில் அவர்களைச் சோதிக்கும்படிப் பிரயாசப்படுகிறான்.



ஆனால் என் பாவங்களின் நிமித்தம் அவர் என்னை கண்ணிக்குள்ளே உட்படுத்தி இப்படிக் கைவிட்டுவிட்டார் என்றான். அதற்குத் திடநம்பிக்கை என் பிரியமுள்ள சகோதரனே! துன்மார்க்கரைக் குறித்து, "மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண் இல்லை, அவர்களுடைய பெலன் உறுதியாய் இருக்கிறது; நரர்படும் வருத்தத்தில் அகப்படார்கள், மனுஷர் அடையும் உபாதிகளை அடையார்கள்"[a] என்று சொல்லப்பட்டிருக்கிற தேவவசனத்தை மறந்துபோனீரோ; இந்த ஆற்றில் நீர் படும் அவஸ்தைகளும் சங்கடங்களும் தேவன் உம்மைக் கைவிட்டார் என்பதற்கு அடையாளமாய் இராமல், நீர் முன்காலங்களில் அவருடைய தயையினாலே அநுபவித்த சிலாக்கியங்களை நினைவுகூருகிறீரோ அல்லவோ என்று உம்மைச் சோதிக்கவும், உம்முடைய ஆபத்துகாலத்தில் அவர்மேலே நம்பிக்கை வைக்கிறீரோ அல்லவோ என்று அறியவும் இதை உமக்கு வரப்பண்ணியிருக்கிறார் என்று சொன்னான்.

அப்புறம் நான் என் சொப்பனத்தில், கிறிஸ்தியான் சிலநேரம் தியானசிந்தையாய் இருக்கிறதைக் கண்டேன். அதைக் கண்ட திடநம்பிக்கை பின்னும் சொல்லுகிறான், திடமனதாய் இரும், இயேசுகிறிஸ்து உம்மைச் சுகமாக்குகிறார்[1] என்றான். அதைக் கேட்டஉடனே கிறிஸ்தியான் உரத்தசத்தத்தோடு, ஆ! நான் அவரை மறுபடியும் காண்கிறேன். அவர் என்னை நோக்கி, "நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடிருப்பேன், நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை"[b] என்று திருவாய்மலர்ந்தருளுகிறார் என்றான். அப்பால் அவர்கள் இருவரும் திடமனதாய் இருந்தார்கள். அதுமுதல், முன்னே அவர்களைக் கலங்கப்பண்ணின சத்துருக்கள் எல்லாம் அவர்கள் ஆற்றைக் கடக்குமட்டும் கல்லைப்போல் அசையாதிருந்துவிட்டார்கள். உடனே கிறிஸ்தியானுடைய காலுக்குத் தரை தட்டுப்பட்டது; அதுமுதல் ஆறு மேடாய் இருந்தது: அவர்கள் இலேசாய் ஆற்றைக்கடந்து கரை சேர்ந்தார்கள்.

கடைசியாக கிறிஸ்தியான் தைரியம் அடைகிறான்.

இருவரும் ஆற்றைக் கடக்கிறார்கள்.

[1] மரணத்தறுவாயில் இருக்கிறவர்கள், தங்கள் சிநேகிதரும் போதகரும் நினைப்பூட்டும் விலையுயர்ந்த வேதாகம வாக்குத்தத்தங்களினால் அடிக்கடி ஆறுதலடைகிறார்கள்.

[a] சங். 73. 4, 5. [b] ஏசா. 43. 2.

ஆற்றுக்கு அக்கரையில் முன் தங்களுக்குக் காணப்பட்ட ஒளிமயரூபிகள்[1] இருவரும் அவர்களுக்காகக் காத்திருக்கிறதைக் கண்டார்கள். பிரயாணிகள் ஆற்றைக் கடந்தவுடனே, அவ்விருவரும் இவர்களுக்கு வந்தனம் செய்து, நாங்கள் இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களின் நிமித்தமாக ஊழியஞ்செய்யும்படி அனுப்பப்பட்டும் பணிவிடை ஆவிகளாய் இருக்கிறோம் என்று சொல்லிவிட்டு மோட்சவாசலுக்கு நேராக அவர்களோடு கூடிப்போனார்கள்.

ஒளிமயரூபிகளின் காட்சி.

## பிரயாணிகள் மோட்சம் ஏறுதல்.

மோட்சபட்டணமோ மகா உன்னதமான ஒரு மலையின் மேல் இருந்தது. அந்த ஒளிமயரூபிகள் கைலாகுகொடுத்ததால், கிறிஸ்தியானும் நம்பிக்கையும் வெகு லேசாய் மலை ஏறிவிட்டார்கள். அவர்கள் தங்கள் அழிவுக்குரிய அங்கியை ஆற்றிலே விட்டுவிட்டார்கள். ஏனெனில் அவர்கள் அந்த அங்கியோடு ஆற்றில் இறங்கினாலும், அங்கியில்லாமல் அக்கரை சேர்ந்தார்கள். அப்பட்டணத்தின் அஸ்திபாரம் மேகமண்டலத்துக்கு மேலாக இருந்தபோதிலும், அழிவுக்குரிய அங்கியை அவர்கள் களைந்துவிட்டதால் அவர்கள் வாயுவேகமாய் ஏறினார்கள். அவர்கள் ஆகாயமண்டலங்களைத் தாண்டிப்போகும்பொழுது, ஆபத்துகள் நீங்கி ஆற்றைக் கடந்ததையும் ஆறுதலை அளிக்க இப்படிப்பட்ட மகிமையுள்ள தோழர் கிடைத்ததையும் குறித்துப் பல காரியங்களையும் இன்பமாய்ப் பேசிக்கொண்டே போனார்கள்.

பிரயாணிகள் மோட்சம் ஏறுதல்.

அவர்கள் மேகமண்டல யாத்திரை செய்கையில், ஒளிமயரூபிகளோடு பேசின பேச்செல்லாம் ராஜ அரண்மனையின் மகத்துவங்களைக் குறித்ததாகவே இருந்தது. அங்கே சீயோன் மலையும், தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமும் ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களும் முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையும் பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளும் இருக்கின்றனவென்று அவர்கள் சொன்னார்கள்.[a] பின்னும் அவர்கள், நீங்கள் இப்பொழுது தேவனுடைய பரதீசுக்குப் போகிறீர்கள்; அங்கே ஒருக்காலும் வாடாத ஜீவவிருட்சத்தைக் கண்டு அதின் கனிகளைப் புசிப்பீர்கள். அங்கே போனவுடனே உங்களுக்கு வெள்ளை அங்கி கொடுக்கப்படும். நாள்தோறும் நித்தியகாலமாய் மகாராஜாவோடு கூட உலாவிப் பேசிக்கொண்டிருப்பீர்கள்.[b] நீங்கள் தாழ்ந்த பூலோகத்தில் இருந்தகாலத்தில் கண்டனுபவித்த துக்கம், வியாதி, துன்பம், சாவு முதலியவைகள் ஒன்றையும் இனி காணமாட்டீர்கள். ஏனெனில் முந்தினவைகள் கடந்துபோயின.[c] நீங்கள் இப்பொழுது ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களிடத்திற்கும், தீர்க்கதரிசிகள் அண்டைக்கும், இப்பொழுதிருக்கிற பொல்லாப்புக்கும் இனி வரப்போகிற பொல்லாப்புக்கும் நீங்கலாக தேவனால் எடுத்துக்கொள்ளப்பட்டு, சமாதானத்துக்குட் பிரவேசித்துத் தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறவர்களிடத்திற்கும் போகிறீர்கள் என்று சொன்னார்கள். அந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் நாங்கள் சேரும்போது செய்யவேண்டியது என்ன? என்று இந்தப் பிரயாணிகள் கேட்டார்கள். அதற்கு ஒளிமயரூபிகள் சொல்லுகிறார்கள், நீங்கள் உங்கள் வருத்தங்கள் எல்லாவற்றிற்கும் ஆறுதலையும் துக்கங்கள் எல்லாவற்றிற்கும் சந்தோஷத்தையும் அடையவேண்டியது. நீங்கள் விதைத்ததை அறுக்கவேண்டியதிருக்கும்; உங்கள் ஜெபங்கள் கண்ணீர்கள் மகாராஜாவின் நிமித்தமாக அநுபவித்த பாடுகள் முதலிய இவைகளுக்கும் உரிய பலனை அறுப்பீர்கள்.[d] அவ்விடத்தில் நீங்கள் பொற்கிரீடம் தரித்தோராய் பரிசுத்தருடைய சமுகத்தில் வரவேண்டியது. ஏனெனில் அவர் இருக்கிற வண்ணமாகவே, அவரைத் தரிசிப்பீர்கள்.[e] நீங்கள் பூமியில் இருக்கையில் அவருக்கு ஊழியஞ்செய்ய ஆசைப்பட்டும், உங்கள் மாம்சபலவீனத்தின் நிமித்தம் பல வருத்தங்களோடு ஊழியம்செய்ததற்குப் பதிலாக, அங்கு சந்தோஷத்தோடும் ஸ்தோத்திரத்தோடும் ஆர்ப்பரிப்போடும் என்

மோட்ச மகிமைகள்.

[1] இந்த ஒளிமயரூபிகள் என்பது, தேவதூதரைக் குறிக்கிறது. லாசரு மரித்தபோது தேவதூதர்களால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான். எல்லா விசுவாசிகளுக்கும் அவர்கள் இப்படியே ஊழியம் செய்கிறார்கள் என்று நாம் நம்ப ஏதுவிருக்கிறது.



மோட்ச வாழ்வுகள்.

மோட்ச ஊழியங்கள்.

[a] எபி. 12. 22—24. [b] வெளி. 2. 7; 3. 4, 5; 22. 5.
[c] ஏசா. 65. 16, 17. [d] கலா. 6. 7, 8.
[e] 1 யோவா. 3. 2.

றென்றைக்கும் ஊழியம் செய்வீர்கள். அங்கே உங்கள் கண்கள் சர்வவல்லவரைக் காண்பதால் களிக்கும்; உங்கள் காதுகள் அவருடைய இன்ப சத்தத்தைக் கேட்டுக் களிகூரும். உங்களுக்கு முன்னே அவ்விடத்திற்குப் போயிருக்கிற உங்கள் சிநேகிதரை மறுபடியும் அங்கே சந்தித்து மனமகிழுவீர்கள். உங்களுக்குப் பின்னே அவ்விடத்திற்கு இனி வருகிறவர்களையும் அங்கே நீங்கள் ஆனந்தத்தோடு ஏற்றுக்கொள்ளுவீர்கள்.

மோட்ச ஆனந்தங்கள்.

நீங்கள் மகிமையின் ராஜாவோடுகூட உலாவத்தக்கதாக அங்கே மகிமையினாலும் மகத்துவத்தினாலும் உடுத்தப்படுவீர்கள். அவர் மேகாசனபதியாய் எக்காள சத்தத்தோடு காற்றின் செட்டைகளின்மீதில் பறந்துவந்தாற்போல எழுந்தருளியாகி வரும்பொழுது நீங்களும் கூடவே வருவீர்கள். அவர் நியாயாதிபதியாக சிம்மாசனத்தில் வீற்றிருக்கையில் நீங்களும் அவர் அருகில் உட்காருவீர்கள். இதுமாத்திரமோ? அவர் அக்கிரமம் செய்தவர்கள் எல்லாருக்கும் விரோதமாய்த் தீர்ப்புச்சொல்லும்போது அந்த அக்கிரமக்காரர் அவருக்குச் சத்துருக்களாய் இருப்பதுபோல உங்களுக்கும் சத்துருக்கள் ஆகையால், அவர்கள் தூதரானாலும் சரி மனுஷரானாலும் சரி அந்தத் தீர்ப்பை நீங்களும் அவரோடுகூடியே கூறுவீர்கள். அதன்பின் அவர் தமது பட்டணத்துக்கு மறுபடியும் எழுந்தருளியாகும்போது நீங்களும் எழுந்தருளியாகி எக்காளத் தொனியோடு ஏகமாய் எப்போம் அவரோடு என்றென்றைக்கும் வாழுவீர்கள்[a] என்றார்கள்.

பிரயாணிகளை வாழ்த்தும்படி வந்த சம்மனசுகள்.

பிரயாணிகள் இருவரும் மோட்சவாசலண்டை கிட்டிச் சேர்ந்தவுடனே அவர்களை வாழ்த்தும்படி பரமசேனையின் ஒரு கூட்டம் எதிர்கொண்டு வந்தது. பிரயாணிகளுடன் கூடப்போன ஒளிமயரூபிகள் இருவரும் அவர்களை நோக்கி, இவர்கள் பூமியில் இருந்த காலத்தில் நமது ஆண்டவரை நேசித்து அவருடைய பரிசுத்த நாமத்துக்காக சகலத்தையும் வெறுத்தவர்களாய் இருக்கிறார்கள்; இவர்களை அழைத்துக்கொண்டு வரும்படியாக அவர் எங்களை அனுப்பினார். இவர்கள் தங்கள் மீட்பரைப்போய் முகமுகமாய்க் கண்டு களிகூரும்படி புறப்பட்ட பயணத்தில் இம்மட்டாக நாங்கள் இவர்களைக் கூட்டிக்கொ

[a] 1 தெச. 3. 13—17. யூதா. 14, 15. வச. தானி. 7. 9, 10. 1 கொரி. 6. 2, 3.



ண்டு வந்தோம் என்றார்கள். அப்போது அந்தப் பரமசேனை உரத்த சத்தத்தோடு "ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்"[a] என்று சொன்னார்கள். மேலும் அங்கே ராஜாவின் எக்காளக்காரரில் பலர் வெண்மையும் பிரகாசமும் உள்ள வஸ்திரம் தரித்தவர்களாய் வந்து, பரமண்டலம் முழுவதும் எதிரொலி கேட்கும்படியாக தங்கள் எக்காளங்களை ஊதி இன்பமான கவிகளைப் பாடினதோடு கிறிஸ்தியானையும் அவன் கூட்டாளியாகிய திடநம்பிக்கையையும் வாழ்த்தி, நீங்கள் பூலோகத்தை விட்டது பதினாயிரம் மடங்கு சந்தோஷமாக இருக்கிறது என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

பிரயாணிகளுக்குக் கிடைத்த வாழ்த்துதல்.

அப்புறம் அவர்களில் சிலர் முன்னும், சிலர் பின்னும், சிலர் வலது பக்கமும், சிலர் இடது பக்கமுமாய்ப் பிரிந்துநின்று, பிரயாணிகள் நடுவில் இருக்கும்படி அவர்களைச் சூழ்ந்துகொண்டு, வானவெளியின் காவலாளர்போல் நாலாபக்கத்திலும் சுற்றிக்கொண்டு, எக்காளத்தை உன்னத தொனியோடு ஓயாமல் இன்பமாய் முழக்கிக்கொண்டே போனார்கள். அதைக் கண்ட பிரயாணிகளுக்குப் பரமண்டலங்களும் அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும் தங்களைச் சந்திக்கும்படி தாழ்ந்து வருகிறாற்போலக் காணப்பட்டது. இவ்வண்ணம் இவர்கள் ஏகோபித்துப் போகையில் எக்காளக்காரர் மலர்ந்த முகத்தோடும் இசைந்த கீதத்தோடும் ஆடி, அசைந்து எக்காளம் ஊதின ஜாடையால், கிறிஸ்தியானும் அவனுடைய கூட்டாளியும் தங்கள் தோழரானதும் அவர்களைச் சந்திக்கும்படித் தாங்கள் வந்ததும் எவ்வளவோ சந்தோஷமும் ஆனந்தமுமாய் இருக்கிறது என்று காட்டினதுபோல் இருந்தது. அந்தப் பிரயாணிகள் இருவரும், பரமசேனையின் பவிசுகளையும் அவர்களுடைய இன்பதொனையுள்ள கீதங்களையும் பார்க்கவே பரலோகத்தில் இன்னும் சேராவிட்டாலும் அங்கே வாசம்பண்ணுகிறதுபோலவே பரவசங்கொண்டார்கள். மோட்சபட்டணமும் இங்கே அவர்களுக்குத் தெரிந்தது; அவர்களைச் சந்திக்கும்படியாக மோட்சலோகத்து மணிகள் எல்லாம் சந்தோஷத்தோடு தங்கள் நாதங்களை ஏகமாய் முழக்குகிறாற்போல் அவர்கள் நினைத்தார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, அவர்களுக்கு அகப்படப்போகிற நல்ல வாசஸ்தலங்களின் மகத்துவங்களும் இப்படிப்பட்ட சிநேகித

[a] வெளி. 19. 9.

ரின் கூட்டுறவும் அங்கே என்றென்றைக்கும் வீற்றிருப்போம் என்கிற எண்ணமும் அவர்கள் இருதயத்தை மட்டுமிஞ்சிப் பூரிக்கச்செய்தது. ஆ! அவர்களுடைய ஆனந்தத்தின் மகத்துவம் இன்னதென்று நாவால் சொல்லவாவது எழுத்தாணியால் எழுதவாவது முடியாது. இவ்வண்ணமாய் அவர்கள் வான வெளிகளைக் கடந்து வாசலண்டை சேர்ந்தார்கள்.

பிரயாணிகளின் ஆனந்தம்.

## பிரயாணிகள் மோட்சம் சேர்ந்தது.

வாசலண்டை சேரவே அதின்மேலே; "ஜீவவிருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்கள் ஆகிறதற்கும் வாசல்கள் வழியாய் நகரத்துக்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்" என்கிற வாசகம் பொன் எழுத்தில் எழுதப்பட்டிருக்கக் கண்டார்கள்.[a]

பின்பு நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால்; அந்த ஒளிமயரூபிகள் பிரயாணிகள் இருவரையும் நோக்கி, நீங்கள் வாசல் ஓரமாய் வந்து உள்ளே இருக்கிறவர்களைக் கூப்பிடுங்கள் என்றார்கள். அப்படியே அவர்கள் கூப்பிட்டார்கள். உடனே ஏனோக்கு, மோசே, எலியா முதலானவர்கள் மேலேயிருந்து எட்டிப்பார்த்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு; இந்தப் பிரயாணிகள், இந்த நகரத்தின் எஜமானின்மேலுள்ள அன்பால் ஏவப்பட்டு நாசபுரியில் இருந்து வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. அதோடு பிரயாணிகள் இருவரும் தங்கள் யாத்திரையின் ஆரம்பத்தில் அவரவர் பெற்றுக்கொண்ட நற்சாட்சிப்பத்திரங்களையும்[1] அவர்களுக்குக் கொடுத்தார்கள். அந்தப் பத்திரங்கள் ராஜ சமுகத்தில் கொண்டுபோகப்பட்டன. அரசன் அதை வாசித்துப்பார்த்து; அந்த மனிதர் எங்கே? என்று கேட்டார். அதோ வாசலுக்கு வெளியே நிற்கிறார்கள் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டது. உடனே அவர், "சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதி

பிரயாணிகள் மோட்சத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

[1] நற்சாட்சிப்பத்திரங்கள் என்பது, இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தையும் அதனால் பின்தொடருகிற பரிசுத்தமாக்கப்படுதலையும் குறிக்கிறது.

[a] வெளி. 22. 14.



யுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்"[a] என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அப்பொழுது நான் என் சொப்பனத்தில் அவர்கள் இருவரும் வாசலுக்குள் பிரவேசித்ததைக் கண்டேன். இதோ, அவர்கள் பிரவேசிக்கும்போதே மறுரூபமடைந்து, பொன்மயமான அங்கியால் உடுத்தப்பட்டார்கள். சுரமண்டலங்களைப் பிடித்தவர்களும் கிரீடம் தரித்தவர்களுமான எண்ணிறந்த பேர் அவர்களைச் சந்திக்க வந்து, அவர்கள் தங்களோடுகூடி ஸ்துதிக்கும்படி சுரமண்டலங்களைக் கொடுத்து, அவர்களைக் கனப்படுத்தும்படியாகக் கிரீடமும் சூட்டினார்கள். அந்நிமிஷமே பரமண்டலத்து மணிகள் எல்லாம் தங்கள் நாதங்களை மறுபடியும் கொட்டிமுழங்கவும்; "உங்கள் எஜமானுடைய சந்தோஷத்துக்குள் பிரவேசியுங்கள்"[b] என்கிற சத்தம் தொனிக்கவும் என் சொப்பனத்திலே கேட்டேன். மேலும் அந்தப் பிரயாணிகள் இருவரும், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருப்பவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக"[c] என்று சொல்லி உரத்த சத்தமாய்ப் பாடுகிறதையும் நான் கேட்டேன்.

அவர்கள் உட்பிரவேசிக்கும்படியாக வாசல்கள் திறக்கப்பட்ட சமயத்தில் நானும் அவர்களுக்குப் பின்னாலே எட்டிப்பார்த்தேன். இதோ அந்த நகரம் ஜோதிமயமாய் விளங்கிற்று; அதின் வீதிகள் முதலாய் பொற்றளம் போடப்பட்டதாய் இருந்தது; அதின் வழியாய் சிரசில் கிரீடம் அணிந்தவர்களாயும், சங்கீதம் பாடும்படியாகக் கையில் குருத்தோலைகளையும், சுரமண்டலங்களைப் பிடித்தவர்களாயும் அங்கும் இங்கும் பொன் உலாவித்திரிகிற ஆயிரமாயிரம் பேரையும் நான் கண்டேன்.

மோட்சகாட்சி.

சிறகுள்ள ஜீவன்கள் பலவையும் நான் அங்கே கண்டேன். அவர்கள் ஒருவருக்கொருவர் எதிர்முகமாய் நின்று ஓய்வில்லாமல், தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று சொல்லிப் பாடுகிறார்கள். இதின்பின் அந்த வாசல் அடைக்கப்பட்டது. அம்மகத்துவங்களைக் கண்டு, நானும் அங்கே போயிருந்தேன் இல்லையே என்று அதிக ஆவல்கொண்டேன்.

இதை எழுதினோரின் ஆவல்.

[a] ஏசா. 26. 2. [b] மத். 25. 23. [c] வெளி. 5. 13, 14.

## அறிவீனனுடைய முடிவு.

இவைகளை எல்லாம் நான் சிறிதுநேரம் நினைத்துத் தியானித்துக்கொண்டு திரும்பிப்பார்க்கவே அறிவீனன் என்பவன் ஆற்றோரம் வந்து சேர்ந்ததைக் கண்டேன்; அவன் வெகு லேசாய் ஆற்றைக் கடந்துவிட்டான். அந்த இரண்டு பிரயாணிகளும் பட்ட வருத்தத்தில் பாதிமுதலாய் இவனுக்கு நேரிடவில்லை. ஏனென்றால் வீண்நம்பிக்கை[1] என்கிற தோணிக்காரன் ஆற்றோரம் இருந்தான்; அவன் அறிவீனனைத் தன் தோணியின்மேல் ஏற்றிக்கொண்டு அக்கரைசேர்த்துவிட்டான். இந்த அறிவீனனும் முந்தின இருவரைப்போல் மோட்சவாசலண்டை சேரும்படி ஏறிப்போனான். அவன் ஒண்டியாகவே போனான்; வழியில் அவனைச் சந்திப்பாரும் இல்லை; சந்தோஷ வார்த்தைகளைச் சொல்வாரும் இல்லை. வாசற்படியில் அவன் வந்த உடனே அதின்மேல் எழுதப்பட்டிருக்கிற எழுத்துகளை வாசித்துப்பார்த்து, தனக்குத் தடையில்லாமல் வாசல் திறக்கப்படும் என்று நினைத்துக்கொண்டு தட்டினான். தட்டவே, வாசலுக்குமேல் சிலர் வந்து எட்டிப்பார்த்து, நீ எங்கேயிருந்து வந்தாய்? உனக்கு என்ன வேண்டியது? என்று கேட்டார்கள். அதற்கு அவன்; நான் அரசர் சமுகத்திலே போஜனபானம் பண்ணியிருக்கிறேன், அவர் எங்கள் வீதியில் உபதேசம் பண்ணியிருக்கிறார் என்று சொன்னான். உன்னுடைய நற்சாட்சிப்பத்திரத்தைக் கொடு, அரசரண்டை போய்க் காட்டுகிறோம் என்று கேட்டார்கள்; உடனே அவன் விதி மறந்தவன் போல் தன் மடியைத் தடவி ஒன்றும் இல்லை என்று கண்டான்; அப்போது அவர்கள் பத்திரம் இல்லையோ என்று கேட்டார்கள்; அவனோ அதற்கு ஒரு வார்த்தையும் மறுமொழியாகச் சொன்னதில்லை. இந்தச் சமாசாரங்களை எல்லாம் அவர்கள் அரசருக்குப் போய் அறிவித்தார்கள்; அரசர் அவனைப் பார்க்க மனமில்லாமல், கிறிஸ்தியானையும் திடநம்பிக்கையையும் வழி

*அறிவீனன் லேசாய் ஆற்றைக் கடக்கிறான்.*

*மோட்சவாசலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.*

1 வீண்நம்பிக்கை. கள்ள நம்பிக்கையைப் பிடித்துக்கொண்டு அறிவீனனும் மரணம் அடைந்தான். அவர்களுடைய எண்ணத்தின் பிசகை மறுலோகத்தில் கண்டுபிடிப்பது மகா பயங்கரமாய் இருக்கும்.



நடத்திக்கொண்டுவந்த ஒளிமயரூபிகள் இருவரையும் அழைத்து, நீங்கள் வெளியே போய் அறிவீனனுடைய கையையும் காலையும் கட்டி அப்பாலே தள்ளுங்கள் என்று கட்டளைகொடுத்தார். அந்நிமிஷமே அவர்கள் வெளியே வந்து அவனைப் பிடித்துக் கட்டி ஆகாயமார்க்கமாய்க் கொண்டுபோய் ஒரு மலைச்சார்பில் நான் முன்னே கண்டதாகச் சொன்ன கதவைத் திறந்து அதனுள் தள்ளிவிட்டார்கள். அப்பொழுது நான் நரகலோகத்துக்குப் போகும்படி நாசபுரியிலிருந்து மாத்திரம் அல்ல, மோட்சவாசலிலிருந்தும் ஒருவழி இருக்கிறது என்று கண்டு, திடுக்கென்று விழித்தேன். விழிக்கவே இதோ இவை எல்லாம் சொப்பனம் என்று அறிந்துகொண்டேன்.

*நரகத்தில் தள்ளப்படுகிறான்.*

முதலாம் பங்கு முற்றிற்று.

# இரண்டாம் பங்கு.

## ஆக்கியோன் அறிவிப்பு.

**என் உத்தம தோழரே!**

ஆக்கியோன் அறிக்கை.

சில காலத்துக்குமுன் கிறிஸ்தியான் என்ற பரதேசியையும் அவன் மோட்சத்தை நோக்கிச் சென்ற அபாயமுள்ள பயணத்தையும் பற்றி நான் கண்ட சொப்பனத்தை உங்களுக்குச் சொல்லுவது எனக்குச் சந்தோஷமாயும் உங்களுக்குப் பிரயோஜனமாயும் இருந்தது. அவனுடைய மனைவியையும் மக்களையும் குறித்து நான் கண்டவைகளையும் அவர்கள் அவனோடு பிரயாணஞ்செய்யும்படி எள்ளளவாகிலும் பிரியப்படவில்லை என்பதையும் தான் நாசபுரியிலே தாமதித்திருந்து அந்தப் பட்டணத்தின் அழிவோடே அழிந்துபோகத் துணியாததினாலே தனிமையாகவே பிரயாணம் செய்யும்படி நேரிட்டது என்பதையும் நான் அப்போது சொன்னேனே; அதின்படியே அவன் அவர்களை விட்டுப்போட்டுப் புறப்பட்டானே

நான் முன் அவன் போன இடம் எல்லாம் போய், நடந்த காரியங்களை எல்லாம் உங்களுக்கு அறிவித்ததுபோல், அவன் பின்னாலே விட்டுப்போனவர்களைக் குறித்த காரியங்களையும் உங்களுக்கு அறிவிக்க ஏதுவில்லாதபடி; எனக்கு உண்டான பல வேலைகளின் தொல்லையால் நான் இனியும் நாசதேசம் போகவாவது அவர்கள் காரியங்களை இன்னதென்று அறிந்து உங்களுக்குச் சொல்லவாவது கூடாமல்போயிற்று. ஆனால் இப்போது சில நாட்களாய் அந்தத் திசையில் எனக்குப் பல ஜோலிகள் நேரிட்டதால் நான் மறுபடியும் அவ்விடத்துக்குப் போனேன். போன சமயத்தில் அந்த ஊருக்குச் சமார் ஒரு நாழிகை வழிதூரத்தில் இருந்த ஒரு சோலைக்குள் தங்கியிருந்தேன். அவ்விடத்தில் படுத்து நித்திரைசெய்கையில் நான் மறுபடியும் சொப்பனம் கண்டேன்.

## கூரியபுத்தி பிரசன்னம்.

கூரியபுத்தி பிரசன்னம்.

நான் சொப்பனம் காண்கையில், இதோ விருத்தாப்பியமுள்ள ஒரு ஆள் நான் படுத்திருந்த இடத்துக்கு வந்தார். அவர், நான் வந்தத் திசையாய்ப் பயணம்போகிறேனே அத் திசையாகவே அவரும் கொஞ்சத்தூரம் வருகிறவரானதால், அவரோடு கூடப் போவது உத்தமம் அல்லவா என்று எண்ணி நானும் எழுந்து பயணப்பட்டாற்போல் இருந்தது. நாங்கள் இருவரும் வழிநடக்கையில் பிரயாணிகள் எப்பொழுதும் செய்கிற வழக்கப்படி நாங்களும் சம்பாஷணை பண்ணிக்கொண்டு போகிறதுபோலவே இருந்தது. எங்கள் பேச்சு கிறிஸ்தியானையும் அவன் பண்ணின பிரயாணத்தையும் பற்றினதாகவே இருந்தது. நான் சம்பாஷணையை ஆரம்பித்தது இப்படித்தான்:

ஐயா! அதோ நமது பாதையின் இடதுபாரிசமாய் அடியில் தெரிகிறதே, அது எந்த ஊர்? என்று நான் கேட்டேன்.

அதற்குக் கூரியபுத்தி என்று பேருடைய அவர், அதுதான் நாசபுரி என்ற பட்டணம்; அதில் அனேகம் ஜனங்கள் உண்டு. ஆனால் அவ்வளவு பேரும் பிரபல துஷ்டரும் சருவசோம்பேறிகளுமாய் இருக்கிறார்கள் என்று சொன்னார்.

உடனே நான், அது அந்தப் பட்டணந்தான் என்று நினைத்துக்கொண்டு, நான் ஒருதரம் அந்த ஊர் வழியாகப் போனேன்; அதைக் குறித்து நீர் சொல்லும் சாட்சி உண்மைதான் என்று சொன்னேன்.

**கூரியபுத்தி.** உள்ளதே உள்ளது. அங்கே வாசம்பண்ணுற குடிகளை மெய்யாகவே மெச்சிப் பேச ஏதுவிருக்குமானால் எனக்கு மெத்தச் சந்தோஷமாய் இருக்கும் என்றார்.

அப்பொழுது நான், அப்படியானால் நீர் காரியங்களை நிதானமாய் கவனித்துக்கொள்ளுகிற புத்திசாலி என்றும் நல்ல காரியங்களைக் குறித்துக் கேட்கவும் பேசவும் பிரியமுடையவர் என்றும் எனக்குத் தோன்றுகிறது. ஐயா! இந்த ஊரில் இருந்து கொஞ்சகாலத்துக்குமுன் மேலோகத்துக்குப் பயணம் போன கிறிஸ்தியான் என்ற பேருடைய ஒருவனைக் குறித்து ஏதாவது செய்தி கேள்விப்பட்டிருப்பீரா என்று கேட்டேன்.



கூரியபுத்தி கிறிஸ்தியானைப் பற்றிப் பேசுகிறார்.

**கூரியபுத்தி.** ஏதாவது செய்தியா! அவனுடைய பிரயாணத்தில் அவனுக்கு உண்டான இடையூறுகள், வருத்தங்கள், போர்கள், சிறையிருப்புகள், புலம்பல்கள், பெருமூச்சுகள், பயங்கரங்கள், அச்சங்கள் எல்லாவற்றையும் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன். அது மாத்திரமா? அவன் பேர் நமது தேசம் முழுவதிலும் தொனிக்கிறது. அவனையும் அவன் காரியங்களையும் அறியாதவர்களும் அவனுடைய பிரயாண விவரங்களின் ஞானாகம புஸ்தகம் இல்லாதவர்களுமான வீட்டுக்காரர் மெத்தக் கொஞ்சப்பேர்தான். அவனுடைய அபாயமான பிரயாணம் அநேகரை ஏவிவிட்டு அவனைப்போல் பயணம் புறப்படவும் செய்திருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவன் இங்கே இருக்கையில் எங்களுடைய பார்வைக்குப் பைத்தியகாரனாகக் காணப்பட்டபோதிலும், அவன் போன பின்பு இப்பொழுது எல்லாராலும் வெகு மேன்மையாய்ப் பேசிக்கொள்ளப்படுகிறான்;[1] அவன் இப்பொழுது இருக்கிற இடத்தில் ஜெயவீரன்போல் இருக்கிறான் என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவன் பட்ட அவதிகளில் எவன் தலையிடுவான் என்று சொல்லிக்கொண்ட பலர் அவன் அநுபவிக்கிற வாழ்வுகளை எண்ணி வாய் ஊறுகிறார்கள் என்றார்.

அப்பொழுது நான், அவர்கள் அவனைக் குறித்து நினைப்பதெல்லாம் நிஜமானதாய் இருந்தால் அவர்கள் நினைவு நல்லதுதான்; ஏனெனில், அவன் இப்போது ஜீவ ஊற்றினிடத்திலும் அதின் கரையோரத்திலும் வாசம்பண்ணி, அவ்விடத்தில் அவன் அநுபவிக்கிறதை எல்லாம் கஷ்டமில்லாமலும் துக்கமில்லாமலும் அநுபவித்துக்கொண்டிருக்கிறான். ஆகலால் அவன் இருக்கிற இடத்தில் பாக்கியவானாய் வாழுகிறான் என்று அவர்கள் நினைத்தார்களானால் அது யதார்த்தமான நினைவுதான்; ஏனெனில் அவ்விடத்துச் சந்தோஷங்கள் சஞ்சலம் கலந்தவைகள் அல்ல; ஆனால் ஜனங்கள் அவனைப்பற்றி என்னதான் பேசிக்கொள்ளுகிறார்கள் என்று தயவுசெய்து சொல்ல மாட்டீரா? என்று கேட்டேன்.

[1] யாதொரு ஒருவனுடைய, விசேஷமாய் ஒரு பக்திமானுடைய நற்குணங்கள் அவன் கூடவோடு இருக்கிறபோது அசட்டையாய்க் கவனிக்கப்படாவிட்டாலும், அவன் மரித்தபின் நன்றாய் மதிக்கப்படுகின்றன.

அவன் வாழ்வைப்பற்றி கூரியபுத்தி சொல்லுவது.

**கூரியபுத்தி.** அவர்கள் பேசிக்கொள்ளுகிறதா? ஜனங்கள் அவனைக்குறித்து வெகு வெகு விசித்திரங்களை எல்லாம் பேசிக்கொள்ளுகிறார்கள். அவன் இப்பொழுது வெண்ணுடை தரித்து வீதிகளில் உலாவுகிறான்[a] என்றும் கழுத்தில் தங்கசரப்பளி அணிந்திருக்கிறான் என்றும் தலையில் இரத்தினங்கள் பதிக்கப்பட்ட பொற்கிரீடம் தரித்திருக்கிறான் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர், அவனுடைய பிரயாணத்தில் வெளிப்பட்ட ஒளிமய ரூபிகளைப்போன்ற கூட்டத்தார் அவனுக்குத் தோழராய் இருக்கிறார்கள் என்றும் இவ்விடத்தில் அயல்வீட்டுக்காரர் ஒருவருக்கொருவர் எப்படி உறவாடிக்கொள்வார்களோ அப்படி அவர்கள் இவனோடு உறவாடுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். இதுவும் அல்லாமல் அவன் இப்பொழுது வாசஞ்செய்கிற தேசத்தின் அரசர் தமது விலையுயர்ந்த கொலுமண்டபத்தில் வாசம்பண்ணும்படி ஒரு அலங்கார மாளிகையை அவனுக்குக் கொடுத்திருக்கிறார் என்றும் அவன் ஒவ்வொரு நாளும் அரசனோடு புசித்துக் குடித்து உலாவி சம்பாஷித்துக்கொண்டிருக்கிறான் என்றும் அவ்விடத்திலுள்ள யாவருக்கும் நியாயாதிபதியாய் இருக்கிறவருடைய மலர்ந்த முகமும் தயாளமான பேச்சும் அவனுக்குக் கிடைக்கிறது என்றும்[b] உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். இது மாத்திரமோ? அவன் போயிருக்கும் தேசத்தின் ஆண்டவராகிய ராஜப்பிரபு இந்தத் திசைகளுக்கு சீக்கிரம் வந்து அந்தக் கிறிஸ்தியான் மோட்சபிரயாணம் செய்ய ஆரம்பித்ததை அவர்கள் கண்டபோது அவனுடைய அயலார் முதலியவர்கள் அவனை அவ்வளவு அற்பமாய் எண்ணி பரியாசமும் நிந்தையும் செய்யத் தலைப்பட்டதற்குக் காரணம் ஏதாவது உண்டா என்று விசாரித்து அறியப்போகிறார் என்றும் சிலர் எண்ணி எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.[c] ஏனெனில் அவன் இப்பொழுது தன் அதிபதிக்கு அதிகப் பிரியமானவனாய் இருக்கிறான் என்றும் கிறிஸ்தியானுக்கு நேரிட்ட கனவீனங்கள் எல்லாவற்றையுங்குறித்து அவர் கரிசனைகொண்டு, அவை அனைத்தும் தமக்கே செய்யப்பட்ட அவமானங்களாக[1] மனதில் எண்ணிக்கொண்டிருக்கிறார் என்றும்[a] அவர் அப்படி அவன்மேல் பிரியங்கொள்ளுகிறது அதிசயம் அல்ல, ஏனென்றால் அவர்பேரில் அவன் கொண்ட தாபம் அப்படி இருந்தது என்றும் அவர்களே சொல்லிக்கொள்ளுகிறார்கள் என்றார்.

[1] தேவன் தமது ஜனங்களை தம்முடைய அவயவங்கள்போல் நினைத்து, தமக்குப் பதில் ஆட்களாக அவர்கள் இந்தப் பூமியில் இருக்கிறபடியால், அவர்களுக்குச் செய்யப்படுகிற நன்மை தீமைகளைத் தமக்கே செய்ததுபோல் பாவிக்கிறார். மத். 25. 35-45. பார்க்க.

a வெளி. 3. 4. b சகரி. 3. 7. லூக். 11. 14, 15. c யூதா. 14, 15. வச



அதற்கு நான், உம்முடைய வார்த்தைகளைக் கேட்கிறதால் என் மனதில் உண்டாகிற சந்தோஷம் இவ்வளவென்றில்லை; அந்த ஏழை மனுஷனையிட்டுத்தான் எனக்கு அதிக சந்தோஷம் உண்டாகிறது. இப்பொழுது அவன் தன் வேலையில் இருந்து ஓய்ந்திருக்கிறதும் கண்ணீரின் பலனைக் களிப்போடு அறுப்பதும் எனக்குச் சந்தோஷத்தை உண்டாக்குகிறது. அவன் தன் சத்துருக்களின் அம்புகள் செல்லும் தூரத்துக்கு அப்பால் போய்விட்டதும் அவனைப் பகைக்கிறவர்களுடைய எல்லையைத் தாண்டிவிட்டதும் சந்தோஷந்தான்.[b] அவனைப்பற்றிய சமாசாரம் இந்த நாடெங்கும் பரம்பிவிட்டதும் என்னைச் சந்தோஷப்படுத்துகிறது. அது இன்னும் புறப்படாத அநேகரைப் புறப்பட ஏவி, நன்மையை உண்டாக்கமாட்டாதென்று யார் சொல்லக்கூடும்? ஐயா! அவனைப்பற்றிய செய்தி எல்லாம் என் மனதில் இன்று நடந்தாற்போல் இருக்கிறது. ஆனால் அவனுடைய மனைவியையும் மக்களையும் குறித்து ஏதாவது கேள்விப்பட்டிருப்பீரா? ஐயோ! ஏழை ஆத்துமாக்கள் என்னதான் செய்தார்களோ!

கூரியபுத்தி கிறிஸ்தீனாளைப் பற்றிச் சொல்லுவது.

**கூரியபுத்தி.** யாரைக்குறித்துக் கேட்கிறாய்? கிறிஸ்தீனாளையும் அவள் மக்களையும் குறித்தா? கிறிஸ்தியான் எப்படியோ அப்படியே அவர்களும் செய்தார்கள் என்று கேள்வி; அவர்கள் எல்லாரும் துவக்கத்தில் அவனைப் பைத்தியகாரனாக்கி, கிறிஸ்தியான் அழுதாலும் அங்கலாய்த்தாலும் கெஞ்சினாலும் அதை எல்லாம் அசட்டைபண்ணினபோதிலும், அப்புறம் அவர்கள் எண்ணம் மாறினதால் அவர்களும் மூட்டைகட்டிக்கொண்டு பயணப்பட்டார்கள்.

நல்ல காரியம், மெத்தச் சந்தோஷம்! ஆனால் பெண்ஜாதியும் பிள்ளைகளும் எல்லாருமா?

**கூரியபுத்தி.** ஆம், எல்லாருந்தான். அதின் விவரம் எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும்; அவர்கள் எல்லாரும் புறப்பட்ட சமயத்தில் நான் அவர்கள் வீட்டண்டைதான் நின்றேன்; அந்தச் சமாசாரம் எல்லாம் எனக்குத் திட்டமாய்த் தெரியும்.

a லூக். 10. 16. b வெளி. 14. 13. சங். 126. 5, 6.

அப்போது அந்தச் செய்தியை நிஜமாகவே நடந்ததென்று ஒருவன் சொல்லலாம்போலத் தோன்றுகிறதே என்று சொன்னேன்.

கூரியபுத்தி. அதை நிஜம் என்று சொல்ல நீ பயப்படவேண்டியதில்லை. அவர்கள் எல்லாரும் மோட்ச பிரயாணத்தில் புறப்பட்டுவிட்டார்கள். அந்த நல்ல ஸ்திரீயும் அவளுடைய நாலு மக்களும் போனது நிஜம். நாம் இருவரும் ஒரேவழியாக இன்னும் வெகுதூரம் போவோம்; ஆகையால் அதின் விவரங்களை எல்லாம் உனக்குச் சொல்லுகிறேன், கேள்.

## பிரயாண எவுதல்கள்.

கிறிஸ்தியானுடைய மனைவிக்கு அவள் மோட்ச பிரயாணம் செய்யத் துவக்கினதுமுதல் கிறிஸ்தீனாள் என்று பேர் வழங்கப்பட்டது. அவளுடைய புருஷன் * ஆற்றைக் கடந்த நாள்முதல் அவனைப்பற்றிய செய்தி ஒன்றும் அவளுக்கு வந்து எட்டவில்லை; இந்தச் செய்தி அவள் மனதை வருத்திக் கொண்டிருந்தது. நம்முடைய அருமை நாயகனும் போனார்; நமது இல்லற சம்பந்தமும் அறுபட்டுப் போயிற்று என்ற எண்ணம் அவள் மனதில் வந்தது. ஏனென்றால், நீ அறிந்திருக்கிற பிரகாரம் ஜீவனுள்ளோர் மரித்தோருடைய சாவினால் உண்டான நஷ்டங்களை அன்பினால் நினைவுகூர்ந்து, அது தாபப்படுகிறது இயல்புதானே! அதைத் தடுக்க யாரால் ஆகும்?

கிறிஸ்தீனாவின் மனோ வாதைகள்.

அவள் தன் புருஷனைப்பற்றி நினைத்த இப்படிப்பட்ட செய்திகள் அவளை அடிக்கடி கண்ணீர் சொரியப் பண்ணிற்று. இது மாத்திரம் அல்ல, அவள் தனக்குள்ளே, என் கணவனை அப்புறம் ஒருக்காலும் காணாது, நான் அவருக்குக் காட்டின கீழ்ப்படியாமையின் குணத்தினாலேதானே! அதினாலேதான் இவ்வண்ணம் நிசர் என்று நம்மைவிட்டுப் பிரிந்துபோனாரோ என்று அடிக்கடி ஆலோசிப்பாள். இப்படி ஆலோசிக்க ஆலோசிக்க அவள் தன் புருஷனை நேசியாதது அவன் பேச்சை அவமதித்தது அவபக்தியைக் காட்டினது முதலான இவை* எல்லாம் ஈக்கள் மொய்த்தாற்போல் அவள் மனதில் கூடி, மனச்சாட்சியைக் குத்தி, அவளைக் குற்றவாளியாகத் தீர்த்தது. அதோடேகூட தன் புருஷன் இரவும் பகலும் இளைப்பாறாமல் இட்ட பெருமூச்சுகளும் அவன் சொரிந்த கண்ணீரும் அவன் பேசின வியாகுல வார்த்தைகளும் அவளையும் அவள் பிள்ளைகளையும் அவன் தன்னுடன் கூடப் புறப்படும்படியாகக் கெஞ்சிக் கூப்



பிட்டும் அவள் கடின இருதயமாய் இருந்ததும் மொத்தமாய்ச் சொன்னால் கிறிஸ்தியான் சுமையோடு திரிந்து அலைந்த காலத்தில் அவனிடத்தில் என்ன பேசினாளோ அவன் முன்பாக என்ன செய்தாளோ அவை ஒவ்வொன்றும் அவள் மனதில் மின்னல்போல் பாய்ந்து அவள் நெஞ்சின் நடுவைக் கிழித்து விட்டது. விசேஷமாய், "நான் இரட்சிக்கப்படும்படி என்ன செய்வேன்" என்று அவள் புருஷன் மனங்கசந்து அழுத சத்தம் அவள் காதில் துயரமாய் தொனித்தது.

அப்பொழுது அவள் தன் மக்களைக் கூப்பிட்டு, ஐயோ என் கண்மணிகளே, நாம் கெட்டோம் கெட்டோம்; நான் உங்கள் தகப்பனுக்கு விரோதமாய்த் துரோகஞ்செய்தேன், அவரும் சமுத்து காலத்தைத் தள்ளிக் கடந்துபோய்விட்டார். அவர் நம்மோடு எல்லாரையும் புறப்பட விரும்பினார்; ஆனால் நான் போகப் பிரியப்படவும் இல்லை, உங்களுடைய ஜீவனில் இருந்து உங்களையும் தடைசெய்துவிட்டேன் என்று சொன்னாள். அதைக் கேட்ட மக்கள் எல்லாரும் தங்கள் தகப்பனுக்குப் பின்னாலே புறப்பட்டுப் போகவேண்டும் என்று ஓவென்று அலறி அழுதார்கள். அதற்குக் கிறிஸ்தீனாள் சொல்லுவாள்: ஆ! நாம் அவரோடு கூடப்போகும் பாக்கியத்தைப் பெற்றிருந்தால் எவ்வளவோ நன்றாய் இருந்திருக்கும்; இனி தனித்துப் பயணம் பண்ணுவதிலும் அப்படிச் செய்திருந்தால் அதிகச் சந்தோஷமாய் முடிந்திருக்கும். ஏனெனில் நான் முன் உங்கள் தகப்பனுடைய எண்ணமும் பேச்சும் எல்லாம் புத்திமாறாட்டத்தால் உண்டானது என்றும் அல்லது அவர் தமது மனோராச்சியத்தால் உண்டான வீண் எண்ணங்களின்படி புலம்புகிறார் என்றும் புத்தியீனமாய் நினைத்தபோதிலும், இப்போது அவை எல்லாம் வேறொரு முகாந்தரத்தால் உண்டானது என்றும் ஜீவ ஒளி அவருக்குள் வீசினதால் அதின் உதவியைக்கொண்டு அவர் மரணக்கண்ணிகளுக்கு விலகிக்கொண்டார் என்றும் எனக்குத் தெரியவருகிறது என்றாள். அதைக் கேட்டபொழுது அவர்கள் எல்லாரும் மறுபடியும் அழுது, ஆ, அந்த நாளில் புறப்பட்டோம் இல்லையே, ஐயோ! என்று புலம்பினார்கள்.

அடுத்த இரவில் கிறிஸ்தீனாள் ஒரு சொப்பனம் கண்டாள்.

கிறிஸ்தீனாள் கண்ட சொப்பனம்.

அவள் தன் சொப்பனத்தில், இதோ ஒரு அகலமான தோல்சுருள் அவளுக்கு முன்பாக விரிக்கப்பட்டிருக்கவும்

* லூக். 1. 23-25. யோவா. 8. 15.

அதில் அவனுடைய குற்றமுள்ள நினைவுகள் பேச்சுகள் செய்கைகளாகிய சகல நடபடிகளும் எழுதப்பட்டுக் கரேலென்று விளங்கவும் கண்டாள். கண்டபோது

தோல்சதன் கனா.

அந்த நித்திரையிலேயே அவள் சத்தமிட்டு, "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாய் இரும்"[2] என்று கதறினாள். அவள் அலறிச் சொன்ன சத்தத்தை மக்கள் கேட்டார்கள்.

அப்புறம் அவள் தன் கட்டிலின் ஓரமாய் இரண்டு இருள்மயரூபிகள் நின்றுகொண்டு, இவள் நடக்கும்போதும் தூங்கும்போதும் இரக்கம் இரக்கம் என்று ஏங்கிக்கொண்டிருக்கிறாளே; இந்த மனுஷியை நாம் என்னசெய்யலாம்? இப்படியே செய்துகொண்டு வரும்படி நாம் இடங்கொடுத்துவிட்டால் இவள் புருஷனை நாம் இழந்துபோனதுபோல இவளையும் இழந்துபோகவேண்டியதிருக்குமே;

இருண்மயரூபிகள் கனா.

ஆகையால் ஒரு வழியால் ஆகாவிட்டால் வேறுவழியாலாவது இந்தக் கவலையை அவளைவிட்டுப் பிரித்துப்போடவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால் உலகம் முழுவதுங்கூடிப் பிரயாசப்பட்டாலும் அவள் தன் மோட்ச பிரயாணத்தை நிறுத்த மாட்டாள் என்று பேசிக்கொண்டதையும் கேட்டு திடுக்கிட்டு விழித்தாள். விழிக்கவே அவள் தேகம் எல்லாம் வேர்வையாய் இருந்தது; கைகால் அவயவங்கள் எல்லாம் ஆட்டங்கொடுத்தது.

சற்றுநேரத்துக்குப் பின்பு அவள் மறுபடியும் நித்திரைபோனாள்; அப்போது, தன் புருஷன் சிரஞ்சீவிகளான ஒரு பெருங் கூட்டத்தோடு பாக்கியமான ஒரு இடத்தில் நின்றுகொண்டு,

அவள் தன் புருஷனைக் கண்ட கனா.

தமது சிரசுக்குமேல் வானவில்லுடையவராய் சிம்மாசனபதியாய்ச் சிறந்து வீற்றிருக்கும் ஒருவருக்கு முன்பாகச் சுரமண்டலம் ஏந்தி கீதவாத்தியங்களை வாசிக்கிறதுபோலவும் கண்டாள். அதுவுமன்றி தன் கணவன் அவருடைய பாதப்படி மட்டும் குனிந்து வணங்கி, "என் ஆண்டவராகிய ராஜாவே! அடியேனை இந்த இடத்துக்குள் கொண்டுவந்து சேர்த்ததற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று சொல்லுகிறதாகவும் அச்சமயத்தில் அந்த மன்னருக்குமுன்பாக நின்ற ஒரு கூட்டம் தங்கள் தங்கள் சுரமண்டலங்களை வாசித்து முழக்கமாகப் பாடுகிறதையும் கண்டாள். ஆனால் அவர்கள் பாடினது இன்ன

---

[2] லூக். 18. 13.



தென்று கிறிஸ்தியானுக்கும் அவன் தோழருக்கும் தெரியுமே அன்றி ஜீவனுள்ளோரின் தேசத்திலுள்ள வேறொருவருக்கும் தெரியமாட்டாது.

## அந்தரங்கன் சந்திப்பு.

அந்தரங்கன் வந்த சொன்ன செய்தி.

மறுநாள் உதயகாலத்தில் அவள் விழித்தெழும்பி ஜெபத்தியானங்களைச் செய்தபின்பு தன் மக்களோடன் கொஞ்சநேரம் கொஞ்சிப் பேசிக்கொண்டிருந்தாள். அச்சமயத்தில் யாரோ வந்து கதவைப் பலமாய்த் தட்டினார். தட்டின சத்தம் கேட்டவுடனே அவள், "நீர் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவரானால் உள்ளே வாரும்" என்று சொன்னாள். அதற்கு அவர் "ஆமென்" என்று சொல்லிக்கொண்டு கதவைத் திறந்து உள்ளே சென்று, "இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று சொல்லி வாழ்த்தினார். இந்த வாழ்த்துதல் முடிந்த பின்பு அவர், கிறிஸ்தினாளே! நான் வந்த விசேஷம் இன்னதென்று அறிவாயா? என்று கேட்டார். அதைக் கேட்டவுடன் அவள் முகம் சிவந்து குலை கலங்கிப்போயிற்று. இவர் எங்கிருந்து வந்தாரோ? எது காரியமாய் வந்தாரோ? என்று அறியும்படி அவளுக்கு இருந்த ஆசையால் உள்ளம் கொதித்தது. அவர் சொல்லுகிறார்: எனக்கு அந்தரங்கன்[1] என்று பேர். அந்தரவாசிகளோடே நான் வாசஞ்செய்கிறேன். நீயும் அங்கே வர ஆசைப்படுகிறாய் என்கிற செய்தி அந்த அந்தரங்க லோகத்தில் பேசிக்கொள்ளப்படுகிறது. முன்னே நீ உன் கணவனுடைய வார்த்தைகளுக்கு உன் இருதயத்தைக் கடினப்படுத்தி, இந்தப் பாலகரை அவர்கள் அறிவீனத்தோடே வளர்த்துவிட்டு, இப்படியாக உன் கணவனுக்குச் செய்த அநியாயங்களை எல்லாம் இப்போது உணர்ந்துகொள்ளுகிறாய் என்றும் எங்கள் தேசத்தில் பேச்சு நடக்கிறது. ஆ, கிறிஸ்தினாளே! கிருபைபொருந்தினவர் என்னை அனுப்பி, தாம் மன்னிப்பை அருளும் தேவனாய் இருக்கிறார் என்றும் பாவமன்னிப்பின் தொகையைப் பெருக்கும்படி அவர் பிரியப்படுகிறார் என்றும் உனக்கு அறிவிக்

---

[1] அந்தரங்கன். இது பரிசுத்த ஆவியானவர் இருதயத்துக்குள் ரகசியமாய் நடப்பிக்கிற வேலையை விளக்குகிறது. இந்த ரகசியமான கிரியையினாலே இருதயமானது தன் கேடுகளைக் கண்டு அதிகம் அதிகமாய் அழுந்தப்படுகிறது; வேதவாக்கியங்களும் அதற்குத் தெளிவாகிறது.

கும்படி சொன்னார். நீ அவருடைய திருமுக தரிசனம் பெறவும் அவரோடு விருந்துண்ணவும் உன்னை அழைக்கிறார் என்பதை நீ அறிந்துகொள்ளவேண்டியதாம். அவர் தமது வீட்டின் ஆசீர்வாதங்களாலும் உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரங்களாலும் உன்னைப் போஷிப்பாராம்.

“உன் கணவனாய் இருந்த கிறிஸ்தியான் எண்ணிறந்த தன் தோழரோடு அங்கே இருக்கிறான்; பார்ப்போர் எல்லாருக்கும் ஜீவனை அளிக்கும் திருமுகத்தை அவர்கள் ஓயாமல் நோக்கிக்கொண்டு மனமகிழுகிறார்கள். உன்னுடைய பிதாவின் தங்க அரண்மனையின் தளவரிசையில் உன் காலடிகளின் சத்தம் கேட்கிறபொழுது அவர்கள் எல்லாரும் ஆநந்தங்கொள்ளுவார்கள்” என்று சொன்னார்.

அவளுக்கு வந்த கடிதம்.

இவைகளைக் கேட்டவுடனே கிறிஸ்தீனாள் மனங்கலங்கி, தரைமட்டும் தலைகுனிந்தாள். பின்பு அவர், கிறிஸ்தீனாளே! உன் புருஷனுடைய அரசரிடத்தில் இருந்து உனக்கு ஒரு கடிதமும்[1] இதோ இருக்கிறது என்று சொல்லி நீட்டினார். அவள் அதை வாங்கித் திறக்கவே அதனுள் இருந்து பரிமள தைலத்தின் வாசனை வீசிற்று.[௨] அதின் அட்சரங்கள் பொன்னால் எழுதப்பட்டிருந்தன. அக்கடிதத்தின் பொருள் என்னவென்றால், கிறிஸ்தியான் எப்படி நடந்துகொண்டானோ அப்படியே கிறிஸ்தீனாளும் நடந்துகொள்ளவேண்டும் என்பதே அரசருடைய விருப்பம்; ராஜநகரத்துக்குள் சேர்ந்து ராஜ தரிசனைபெற்று நித்தியாநந்தம் அடைய அவ்வழி அல்லாமல் வேறுவழி இல்லை என்பதுபோல கண்டிருந்தது. காகிதத்தைப் படித்துப்பார்க்கவே கிறிஸ்தீனாள் பரவசப்பட்டாள். அவள் உடனே அலறி, ஓய் புண்ணியபுருஷா! உங்கள் அரசரின் அடிபணிந்து வணங்கும்படி இந்த ஏழையையும் என் பிள்ளைகளையும் உம்மோடுகூடத் தூக்கிக்கொண்டுபோய் விடமாட்டீரா? என்று சொல்லி அழுதாள்.

அதற்கு அந்தரங்கன்: கிறிஸ்தீனாளே கேள்; தித்திப்புக்கு முன் கசப்பு இருக்கிறது. உனக்கு முந்தினவன் செய்தது

---

[1] கடிதம். ஆத்துமாக்களைக் கூப்பிடும்படி வேதத்தில் எழுதப்பட்டிருக்கிற பரம அழைப்பு. மனிதரை அழைத்து ஊழியப்படுத்துகிற கடிதமாக தேவன் வேதத்தைக் கொடுத்திருக்கிறார். நாம் அதைக் கவனிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் நம்மை ஏவி எழுப்புகிறார்.

௨ உன்னத. I. 3.





போலவே நீயும் அநேக உபத்திரவங்களின் வழியாகவே அந்த உன்னத லோகத்தில் சேரவேண்டியவளாய் இருக்கிறது. ஆகலால் உன் புருஷனாகிய கிறிஸ்தியான் செய்தபடியே நீயும் செய்யும்படி உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்: வனாத்துக்கு அப்பால் இருக்கிற இடுக்கவாசலுக்குப் போ; அதுவே நீ பிரயாணம்பண்ணும் பாதையின் துவக்கமாய் இருக்கிறது. உன் பிரயாணம் எல்லாம் க்ஷேமமாய் நிறைவேறும்படியாகவே நான் விரும்புகிறேன். இந்தக் கடிதத்தை நீ மடியில் வைத்துக்கொண்டு அடிக்கடி நீயும் வாசித்து, உன் பிள்ளைகளுக்கும் படித்துக்கொடு. நீங்கள் இதை மனப்பாடமாய்க் கற்றுக்கொள்ளுமட்டும் இது மடியில் இருப்பது நலம். ஏனெனில் இது

நீ பரதேசியாய்த் தங்கும் வீட்டிலே பாடவேண்டிய கீதங்களில் ஒன்றாய் இருக்கிறது.[a] இதை நீ அப்பால் இருக்கிற வாசலில் காட்டவேண்டியதுமாம் என்று சொன்னார்.

## பிரயாண ஆயத்தம்.

கிறிஸ்தினாளின் பிரயாண ஆயத்தம்.

கூரியப்புத்தி என்னும் விருத்தர் இக்கதையை எனக்குச் சொல்லும்போதே பரிதாபங்கொண்டதாக நான் என் சொப்பனத்திலே கண்டேன். அவர் பின்னும் சொல்லுகிறார்; அந்தரங்கன் இவ்வளவு சொன்னபின்பு, கிறிஸ்தினாள் தன் மக்களை வரவழைத்து, அவர்களை நோக்கி, ஆ! என் கருவேலங்கன்றுகளே! நான் இப்பொழுது சில நாட்களாய் உங்கள் தகப்பனுடைய மரணத்தைவிட்டு மாறாத கவலைகொண்டு வாதைப்படுகிறதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்; அவர் பாக்கியத்தை அநுபவிக்கிறாரோ அல்லவோ என்ற சந்தேகத்தினால் மனவேதனைப்படுகிறேன் என்று நீங்கள் நினைத்தும் அஞ்சவேண்டாம். அவர் பெருமைவாழ்வை அநுபவிக்கிறார் என்று எனக்கு இப்பொழுது பூரணமாய்த் தெரிந்திருக்கிறது. என் விசனம் எல்லாம் என்னுடைய நிலைமையையும் உங்களுடைய நிலைமையையும் குறித்ததுதான்; சுபாவத்தின்படி நாம் மகா நிர்ப்பந்த நிலைமையில் இருக்கிறோம் என்ற செய்தி என் உள்ளத்தைக் கிள்ளி வதைக்கிறது. உங்கள் அருமைத் தகப்பனார் ஆத்தும கவலையால் அவதிப்பட்ட காலங்களில் அவருக்கு நான் செய்த நிஷ்டூரங்கள் என் மனச்சாட்சியைப் பாரகமைபோல் இருத்துகிறது. ஏனெனில் நான் என் இருதயத்தையும் உங்களுடைய இருதயத்தையும் அவருக்கு விரோதமாய்க் கடினப்படுத்தி; அவருடன் கூடி மோட்ச பிரயாணம் போகாமல் இருந்துவிட்டேன்.

ஆனால் எனக்கு நற்காலம் இருந்தது என்று சொல்லவேண்டியது; நேற்று இரவு எனக்கு ஒரு சொப்பனம் கண்டதும் இன்று காலையில் இந்தப் புண்ணியவான் வந்து சொன்னதுமான விஷயங்களினால் நான் இம்மட்டும் உயிரோடிருக்கிறேன்; மற்றப்படி இந்த எண்ணங்களினால் நான் செத்தே போவேன். ஆ! என் மக்களே! வாருங்கள்; நாம் நமது தட்டுமுட்டுகளை

[a] சங். 119, 54.



மூட்டை கட்டிக்கொண்டு, உச்சிதபட்டணத்துக்குப் போகும் பாதையின் துவக்கமாய் இருக்கிற திட்டிவாசலுக்கு நடப்போம் வாருங்கள். நாம் அங்கே சேர்ந்து, உங்கள் தகப்பனைச் சந்தித்து அவரோடும் அவருடைய தோழரோடுங்கூடி, அத்தேசத்துச் சட்டங்களுக்கேற்றபடி சமாதானமாய் வாழலாம் வாருங்கள் என்று சொன்னாள்.

தங்கள் தாயின் மனம் இவ்வளவாய்த் திரும்பிவிட்டதை மக்கள் கண்டு ஆநந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். அதின்பின்பு அந்தரங்கன் என்பவர் அவர்களை வாழ்த்தி விடைபெற்றுப் போனார்; உடனே அவர்கள் பயணப்படும்படி ஆயத்தப்பட்டார்கள்.

கோழையும் தயாளியும் அவளைச் சந்திக்க வந்தது.

அவர்கள் புறப்படும்படி மூட்டையும் கையுமாய் நிற்கையில், கிறிஸ்தினாள் வீட்டுக்குப் பக்கத்தில் குடியிருந்த இரண்டு பெண்கள் வந்து கதவைத் தட்டினார்கள். அவள் முன்போலவே, "நீங்கள் கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர்களானால் உள்ளே வாருங்கள்" என்று சொல்லிக் கதவைத் திறந்தாள். அதைக் கேட்டவுடனே அவர்கள் அசந்துபோனார்கள்; ஏனெனில், இப்படிப்பட்ட பாஷையை அவர்கள் தங்கள் ஜெநநநாள்முதல் கேள்விப்பட்டிருந்ததும் இல்லை; கிறிஸ்தினாள் வாயிலிருந்து வந்ததை அவர்கள் கேட்டதும் இல்லை. என்றாலும் அவர்கள் உள்ளே போனார்கள்; போனவுடனே கிறிஸ்தினாளும் அவள் மக்களும் வீடு விடும்படி பயணப்பட்டு மூட்டையும் கையுமாய் நிற்கக்கண்டார்கள்.

அப்போது அவர்கள், இப்படிப் பயணம் புறப்பட்டு நிற்கிறீர்களே, ஏது விசேஷம்? என்று கேட்டார்கள்.

அப்போது கிறிஸ்தினாள் அவர்கள் இருவரில் மூத்தவளாகிய கோழையைப் பார்த்து, நான் பயணம் போகத் தயார்பண்ணுகிறேன் அம்மா என்றாள். இந்தக் கோழை[1] என்பவள், கஷ்ட-

[1] கோழை. சிலர் அற்பமான இடையூறுகளுக்கு பயந்து மற்றவர்களையும் பயங்காட்டுகிறார்கள். தைரியமுள்ளவன் தான் செய்வது நியாயம் என்று கண்டால் அதை பயப்படாமல் செய்வான். கோழைத்தனமுள்ளவன் கொஞ்சம் வருத்தம் இருக்கிறதென்று அறிந்தால் அது நியாயமான காரியமாய் இருந்தாலும் பின்வாங்கிவிடுவான். நாமோ, ஜீவனின் பாதையில் ஒன்றுக்கும் அஞ்சாமலும் அநீதியான வழியில் எல்லாவற்றுக்கும் பயந்தும் நடக்கவேண்டும்.

கிரியின்மேல் சிங்கத்துக்குப் பயந்து தலைதெறிக்க ஓடி, கிறிஸ்தியானைச் சந்தித்து அவனும் பின்வாங்கிப் போகும்படி பிரயாசப்பட்ட பயங்காளியின் உத்தம புத்திரியாய் இருந்தாள்.

கோழை. எவ்விடத்துக்குப் பயணம்?

கோழையின் தடைகள்.

கிறிஸ். என் புருஷன் போன பயணமாய்த்தான் என்று சொல்லி அப்படியே அழுதுவிட்டாள்.

கோழை. அம்மணி, அம்மணி அப்படிமாத்திரம் சொல்லாதே; இந்தப் பிள்ளைகளுடைய முகத்தையாவது பார்த்து அந்தப் பயணத்தை நிறுத்திவிடு; ஆண்பிள்ளைகளைப்போல திடும்பிரவேசமாய் ஒன்றையும் செய்யாதே, அம்மணி!

கிறிஸ். அல்ல, அல்ல. நானும் என் பிள்ளைகளும் நிச்சயமாய்த்தான் புறப்படுகிறோம்; அவர்களில் ஒருவருக்கும் இவ்விடத்தில் இருக்கப் பிரியம் இல்லை.

கோழை. இந்தப் புத்தி உனக்கு எப்படித்தான் வந்ததோ! யார்தான் சொன்னார்களோ! எனக்கு மெத்த அதிசயமாய் இருக்கிறதே.

கிறிஸ். என் பிரியமுள்ள சிநேகிதியே! என் மனதில் இருக்கிற நியாயம் உனக்கு இருக்குமானால், அரைநிமிஷம் இங்கே தாமதியாமல் நீயும் என்னோடுகூட வந்துவிடுவாய்.

கோழை. அம்மணி! இப்படி இனபந்துக்களை மறக்கவும் நாட்டையும் நகரத்தையும் விடவும் ஒருவரும் அறியாத தேசத்துக்குப் போகவும் புறப்பட்டு நிற்கிறாயே; நீ கேள்விப்பட்ட நூதன விசேஷம் ஏதாவது உண்டோ?

கிறிஸ். அப்புறம் கிறிஸ்தீனாள் சொல்லுகிறாள்: அம்மா! என் கணவன் என்னை விட்டுப் பிரிந்த காலமுதல் எனக்கு உண்டான மனச்சஞ்சலம் அதிகம்; அவர் ஆற்றைக் கடந்த பின்பு, அது முன்னிலும் அதிகப்பட்டது. ஆனால் எல்லாவற்றிலும் என் மனதைப் புண்ணாக்குவது எதுவென்றால்; அவர் ஆத்துமவிசாரம் கொண்டிருந்த காலத்தில் நான் அவருக்குச் செய்த நிஷ்டூரங்கள்தான். அதுவுமன்றி, என் கணவர் எப்படி ஆத்துமவிசாரம் பிடித்திருந்தாரோ அப்படியே நானும் இப்போது இருக்கிறேன். மோட்ச பிரயாணம் செய்வதே அன்றி வேறொன்றும் என்னை ஆறுதல்படுத்தமாட்டாது. நேற்று இரவில் என் கணவனைப் பார்த்ததுபோல் ஒரு சொப்பனம் கண்



டேன். அச்சமயத்தில் எனக்கு இருந்த ஆனந்தத்தை என்ன சொல்வேன்! ஆ! என் ஆத்துமா அவரோடிருந்து வாழும் பாக்கியத்தைத்தான் பெற்றிருந்ததா? என் புருஷனுக்குக் கிடைத்திருக்கிற பாக்கியங்களை நான் என்னசொல்ல! அத்தேசத்து அரசர் சமுகத்தில் அவர் வாசஞ்செய்கிறார், அவருடன்கூட உட்காருகிறார், பந்தியிருந்து புசிக்கிறார், சிரஞ்சீவிகள் சேனையுடன் இவரும் கூடிக்கொண்டு உலாவித்திரிகிறார். இப்பொழுது அவருக்கு ஒரு சிங்கார பங்களா கொடுக்கப்பட்டிருக்கிறது, அதின் அழகை விவரிக்க எனக்கு நாவு எழும்புகிறதில்லை; இவ்வுலக அரசருடைய அரண்மனைகளும் மன்னரின் கொலுமண்டபங்களும் அதினுடன் ஒப்பிடப்பட்டால் இவைகளைக் குப்பைமேடு என்றுதான் சொல்லவேண்டும்.[a] அந்நாட்டு ராஜபிரபு எனக்குச் செய்தி அனுப்பி, "நீயும் வந்தால் உன்னையும் ஏற்றுக்கொண்டு, உன் புருஷனுக்குக் கிடைத்திருக்கிற பாக்கியங்களைப்போல் உனக்கும் தருவோம்" என்று வாக்களித்திருக்கிறார். அவருடைய தூதுபதி சற்றுமுன் இங்கேதான் இருந்தார்; என்னை அழைக்கும் கடிதத்தை அவர்தான் கொண்டுவந்து தந்தார் என்று சொல்லிக்கொண்டே மடியில் இருந்த அக்கடிதத்தைச் சட்டென்று எடுத்து, அவளுக்கு வாசித்துக் காட்டி இனி இதற்கு என்ன தடை சொல்ல உங்களால் ஆகும்? என்று கேட்டாள்.

கோழை. ஐயோ! உன்னையும், உன் புருஷனையும் இப்படியா பைத்தியம் பிடிக்கவேண்டும்! சம்பவிக்கிற மோசங்களையும் இருக்கிற அபாயங்களையும் துன்பங்களையும் சற்றாகிலும் யோசியாமல் சாடுகிறாயே. இதென்ன புத்தி! உன் புருஷனோடு கூடப்போன பிடிவாதனும் இணங்குநெஞ்சனும் சொன்ன சமாசாரங்களை எல்லாம் மறந்து போனாயா? உன் புருஷன் கால் எடுத்து வைக்குமுன் பட்ட பாடுகள் மெத்த உண்டாமே. நீ திரும்ப அவர்களிடத்தில் போய்க் கேட்டுப்பாரேன்! அப்பேர்ப்பட்ட ஞானிகள் புத்தியோடு திரும்பிவிட்டார்களே; அப்புறம் உன் புருஷன் போகப் போக பட்ட அவஸ்தை அதற்கு ஒரு கணக்கில்லையாமே. சிங்கங்கள் எதிர்ப்பட்டு கர்ச்சித்ததாம்; அப்பொல்லியோன் அட்டகாசம் பண்ணி அர்த்தநாசம் செய்யப் பார்த்தானாம்; மரணநிழலின் பள்ளத்தாக்கு வழியில் வந்த அவதிகள் அநந்தமாம்; இன்னும் என்னென்னவோ எல்லாம் சொல்லுகிறார்கள். உன் புருஷனைக் குறித்த

a 2 கொரி. 5. 1-4.

எல்லாச் செய்திகளையும் மறந்துபோனாலும் மாயாபுரிச் சந்தை வீதியில் பட்ட பாடாவது உன் மனதில் இராதா? இரட்சகபுருஷனுகிய அவனே அந்தப் பாடு பட்டால், அறியாப் பெண்ணுகிய நீ என்ன பாடு படமாட்டாய்? எல்லாப் புத்தியையும் எடுத்து எறிந்துபோட்டாலும் இதோ சுருவேலங்கன்றுபோல் நிற்கிற உன் நாலு பிள்ளைகளுடைய முகத்தையாவது பார்த்து ஒன்றைச் செய்யல் ஆகாதா? இவர்கள் உன் எலும்பில் எலும்பும் உன் மாம்சத்தில் மாம்சமும் அல்லவா? என்னதான் செய்யவேண்டும் என்று துணிகரமாய்த் தீர்மானித்தபோதிலும், உன் கர்ப்பக்கனிகளின் நிமித்தம் பயணத்தை நிறுத்தி, வீட்டோடு இருந்து காலங்கழிக்கிறது நல்லது, அம்மணி, என்றாள்.

அதற்குக் கிறிஸ்தினாள்; ஆ, என் அயலாளே! நீ எனக்குச் சோதனையாக இருக்கவேண்டாம்; மேலான பாக்கியத்தை நான் ஆதாயமாக்கிக்கொள்ளத் தக்கதான சமயம் இப்போ வாய்த்து இருக்கிறது. இச்சமயத்தை நான் விட்டு விட்டால் என்னைப்போலொத்த மூட்டாள் இவ்வுலகம் எங்கும் இராள் என்றே சொல்லவேண்டும். என் பயணத்தில் நேரிடுவதாக நீ சொல்லுகிற துன்பங்கள் இடையூறுகள் எல்லாம் என் மனதை அதைரியப்படுத்தாமல் நான் நேர்வழியில் இருக்கிறேன் என்பதை எனக்கு உணர்த்தி, என்னை உற்சாகப்படுத்தும் ஏதுக்களாய் இருக்கின்றன என்றே எண்ணிக்கொள்ளுகிறேன். தித்திப்புக்கு முன் கசப்பு[1] வரவேண்டும்; கசப்பு முந்தி வருவதே தித்திப்பை அதிகத் தித்திப்பாக்கும்; நீ பேசுகிற வார்த்தைகளால் கர்த்தருடைய நாமத்தினாலே நீ வீட்டுக்குள் வந்து நுழைந்தவள் அல்லவென்று விளங்குகிறது. ஆதலால் கோழையே! எழுந்திருந்து போய்விடு, உன் சங்காத்தமும் சம்பாஷணையும் இனி எனக்கு வேண்டியதில்லை என்று சொன்னாள்.

இவ்வளவும் கேட்கவே கோழைக்குக் கோபம் வந்துவிட்டது; அவள் கோணிக்கோணிப் பார்த்துக்கொண்டு கிறிஸ்

[1] ஆண்டவர் கிறிஸ்தினாளுடைய மனதில் இந்த சத்தியத்தை உணர்த்தினவுடன் அவள் அதை தாமதமில்லாமல் அங்கீகரித்துக்கொண்டாள் என்று தோன்றுகிறது. வலதுகையை வெட்டிப்போடுவதும் வலதுகண்ணைப் பிடுங்கிப்போடுவதும் கசப்பான காரியந்தான்; என்றாலும் அப்படிச் செய்யாவிட்டால் மோட்சம் கிடையாது. மாற். 9. 43-47. 2 கொரி. 4. 17, 18.



தினாளைப் பலவாறாகத் திட்டி, தன்னுடன் கூடவந்த தயாளி என்னும் தோழிப்பெண்ணைப் பார்த்து; அம்மணி! தயாளி, அவள் எப்படியேனும் நாசமாய்ப் போகட்டும்; நாமும் ஆகாதாம், நமது ஆலோசனையும் ஆகாதாம், எழும்பு, நட, போகலாம் வா என்று சொன்னாள். ஆனால் தயாளி அதற்கு இணங்காமல் சற்றுநேரம் மௌனமாய் நின்றுகொண்டு இருந்தாள். அப்படி அவள் நின்றதற்கு இரண்டு முகாந்தரங்கள் இருந்தன. 1—வது. கிறிஸ்தினாள்மேல் அவள் உள்ளம் உருகிவிட்டது; ஆதலால் கூடவந்த கோழை எழுந்துபோய்விட்டால், நாம் கிறிஸ்தினாளோடுகூடக் கொஞ்சதூரமாவது போய் வழிவிட்டனுப்பித் திரும்பி வரலாமே என்று தனக்குள்ளே நினைத்தாள். 2—வது. தன் ஆத்தும நிலைமையை நினைத்தும் அவள் உள்ளம் அவளுக்குள் உருகிவிட்டது. கிறிஸ்தினாள் சொன்னதில் சில வார்த்தைகள்[1] அவள் மனதில் பலமாய்ப் பட்டது. ஆதலால் அவள்; இந்தக் கோழைஅம்மாள் தொலைந்துபோய்விட்டால், கிறிஸ்தினாளிடத்தில் இன்னும் பல காரியங்களைக் கேட்டு அறியலாமே; அவள் சொல்லுவதில் சத்தியமும் ஜீவனும் உண்டென்பது மெய்யானால், நாமும் அவளோடுகூட புறப்பட்டுப் போய்விடலாமே என்றும் தன் மனதுக்குள் நினைத்துக்கொண்டு, கோழையைப் பார்த்துப் பின்வருகிறபடி சொல்லுகிறாள்;

*தயாளி கிறிஸ்தினாளுடன் போகத் தீர்மானித்தது.*

தயாளி. அக்கா, கோழையே! கிறிஸ்தினாளைப் பார்க்கும்படியாக நான் இன்று காலையில் உன்னுடன்கூட வந்தது உள்ளதுதான்; ஆனால் நாம் பார்க்கிறபடி அவள் ஊரையும் உறவினரையும் நாட்டையும் நகரத்தையும் விட்டுப் பயணம் புறப்படும்படி ஆயத்தப்பட்டு நிற்கிறாளே; இந்த இளவெயில் நேரத்தில் நானும் அவளோடு கொஞ்சத் தூரம் பேசிப் பேசிப் போய் வழி அனுப்பலாம் என்று நினைத்திருக்கிறேன் என்று சொன்னாள். ஆனால் அவள் தன் மனதில் இருந்த இரண்டாவது எண்ணத்தை வெளியிடவே இல்லை.

[1] ஏற்ற தருணம் பார்த்துப் பேசும் இதமான வார்த்தைகளால் நாம் மற்றவர்களுக்கு எம்மாத்திரம் நன்மைசெய்யக்கூடும் என்று நமக்குத் தெரியாது. நாம் பார்க்கிறபடி கிறிஸ்தினாள் சொன்ன அருமையான வார்த்தைகள் தயாளி தன் கேடான நிலைமையை உணரவும் மோட்சபிரயாணத்தைத் துவக்கவும் பண்ணினதே. ஆதலால் ஏழைப் பேதைகளாலும் இம்மாதிரியாய் நன்மைசெய்யலாம்.

கோழை. சரி, உனக்கும் பைத்தியம் பிடிக்கவேண்டுமோக்கும்; காலம் அறிந்து ஞானமாய் நடந்துகொள். ஆபத்துக்கு அப்பால் இருந்தால் ஆபத்தே இல்லை; ஆபத்துக்குள் இருந்தாலோ ஆபத்தே லபிக்கும் என்று சொல்லிவிட்டு, கோழை காலெடுத்துவைத்துக் கைவீசிக்கொண்டு போய்விட்டாள்.

கோழை போய்விட்டது; நான்கு தோழிமார்.

கோழை தன் வீட்டுக்குப் போனவுடனே தன் உத்தம சிநேகிதிகளில் சிலராகிய இருட்கண்ணி, நீர்ச்சிந்தனை, களிமயக்கி, மூடமங்கை ஆகிய நாலுபேரையும் அழைத்தனுப்பினாள். உடனே அவர்களும் வந்து கூடினார்கள். அவர்களுக்குக் கிறிஸ்தினாளுடைய கதையையும் அவள் தன் புருஷன் போனவழியே போகும்படி பிரயாணப்பட்டு நிற்கிறதையும் குறித்துப் பின்வருகிற பிரகாரம் சொல்லுகிறாள்:

ஆ! என் அயலகத்து அம்மனைகளே கேளுங்கள்! இன்று காலையில் அதிகச் சோலி எனக்கு இல்லாதிருந்தால் கிறிஸ்தினாளைப் பார்த்துவிட்டு வரலாம் என்று எண்ணி அவள் வீட்டுக்குப் போயிருந்தேன். வாசற்படியில் போனவுடன் நம்முடைய வழக்கத்தின்படி கதவைத் தட்டினேன்; தட்டவே நீ கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவளானால் உள்ளே வா என்று அவள் சொன்னாள். நான் எல்லாம் வழக்கப்படி இருக்கும் என்று எண்ணிக்கொண்டு உள்ளே போனேன்; போகவே அவள் ஊரை விட்டுப் பயணம்போக ஆயத்தப்படுகிறதைக் கண்டேன். அவளும் அவள் பிள்ளை குட்டிகளும் போகிறார்களாம்; ஏது அம்மா இந்த யோசனை பண்ணுகிறாய் என்று கேட்டேன், அப்போது அவள் நான் என் புருஷன் செய்ததுபோல, மோட்ச பிரயாணம் செய்யப்போகிறேன் என்று சுருக்கிச் சொல்லிவிட்டாள். தான் என்னவோ ஒரு சொப்பனம் கண்டேன் என்று அந்தச் சொப்பனத்தையும் சொல்லி, அவள் புருஷன் வசிக்கும் தேசத்து ராஜா தன்னையும் அவ்விடம் வரும்படி எழுதி அனுப்பினதாக ஒரு கடிதத்தையும் எனக்குக் காட்டினாள் என்று சொன்னாள்.

மூடமங்கை.

அது கேட்டு மூடமங்கை என்பவள்; என்ன, என்ன? அவள் போவாள் என்று நீ நினைக்கிறாயா? என்றாள்.

கோழை. என்னதான் சம்பவித்தாலும் அவள் போகிறது போவாள். எப்படியென்றால், அவள் பயணம் போவது மெய்யானால் வழியில் உண்டாகும் கஷ்டநஷ்டங்கள்



பல உண்டென்று விபரமாய்ச் சொல்லி, அதின்மூலமாயாவது அவள் மனதை மாற்றலாம் என்றால் ஆனமட்டும் பார்த்தேன்; அவள் அதற்கு அந்தக் கஷ்டநஷ்டங்களே நான் என் பயணத்தை உற்சாகமாய்ச் செய்யவேண்டும் என்பதற்குப் பலத்த முகாந்தரங்களாய் இருக்கிறது என்கிறாள். மேலும் அவள் தித்திப்புக்குமுன் கசப்பு என்ற சுலோகத்தைப் பலவிதமாய்த் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டி, கசப்பு எவ்வளவு மிஞ்சிக் காணுமோ அவ்வளவுக்குத் தித்திப்பு அதிகத் தித்திப்பாக ருசிக்கும் என்கிறாள். ஆகையால் எனக்குத் தோன்றுகிறபடி அவள் இனிமேல் தாமதிக்கப் போகிறதில்லை என்று கோழை சொன்னாள்.

இருட்கண்ணி.

இருட்கண்ணி. ஐயோ அந்தக் கிறிஸ்தினாள் கண்ணுங்கெட்டு மதியுங்கெட்டுப் போனாளே, முன்னே அவள் புருஷன் பட்ட பாடு தெரியாதா? அதை நினைத்தாவது அவள் எச்சரிப்படையக் கூடாதா? என் மனதின் தீர்மானத்தைச் சொல்லவேண்டுமானால், அவள் புருஷன் மறுபடியுமாத்திரம் இவ்விடம் வருவானானால் முன்போல யாதொரு லாபத்தையுந் தராமட்டாத சங்கடங்களில் தலையிட்டுக்கொள்ளத் துணியாமல், தன் தேகம் வடுப்படாதபடி பார்த்துக்கொண்டு அக்கடா என்று கிடந்துவிடுவான் என்று இருட்கண்ணிஅம்மாள் சொன்னாள்.

நீர்ச்சிந்தனை.

அப்பால் நீர்ச்சிந்தனை பேசத்தொடங்கிச் சொல்லுகிறாள்: இப்படிப் பித்தம் பிடித்த பிடிவாதமுள்ளவர்கள் தொலைந்துபோகட்டும்! அவள் தொலைந்து போகவேண்டும் என்பதே என் தீர்ப்பு. அவள் இந்த ஊரில் குடியிருந்துகொண்டு இவ்வித மனமுடையவளாய் இருந்தால், அவளண்டை யார் தான் சுகமாய்க் குடியிருந்து காலங்கழிப்பார்கள்? அவள் பேசா மடந்தையாய் அல்லது மந்தம்பிடித்தவளாய் இருப்பாள்; அல்லது, புத்தியும் சுரணையுமுள்ள ஆட்களுக்குப் பிடியாத பைத்தியங்களை எல்லாம் பிதற்றி, அவர்கள் அண்டையில் வாசம் பண்ணாமல் ஓட்டம் பிடிக்கச் செய்வாள். ஆகையால் அவள் பயணம் புறப்படுகிறதால் எனக்கு என்னளவு துக்கமும் இல்லை. அவள் போகட்டும், அவளைவிட யோக்கியமுள்ளவள் வந்து குடியிருக்கட்டும். இந்த வெறிபிடித்த ஜனங்கள் இருக்கிற வரைக்கும் இவ்வுலகம் சிறப்பாய் இருக்கப்போகிறதில்லை என்று சொன்னாள்.

களிமயங்கி.

அப்பால் களிமயங்கி எழும்பிச் சொல்லுகிறாள்; அதுகெட்டுது,[1] அந்தப் பேச்சை விடுங்கள், நேற்று நடந்த விசேஷத்தைக் கேளுங்கள்; நேற்று நான் காமாதுரி வீட்டுக்குப் போனேன். அங்கே இருந்த நாங்கள் எல்லாரும் மங்கையரைப்போல மனங் களித்தோம். அங்கே யாரெல்லாம் வந்து கூடினார்கள் என்று எண்ணுகிறீர்கள்? நான்தான் ஒன்று, மோகினி ஒன்று, மாம்ச இச்சை ஒன்று, பின்னும் நாலைந்து தோழிப்பெண்கள், காமாதுரன், அசுத்தம் முதலிய பலரும் கூடினோம். அங்கே ஆட்டங்களும் பாட்டுகளும் ஆநந்தத்துக்கேற்ற மற்றக் கேளிக்கைகளும் இருந்தன. எங்களை அழைத்த காமாதுரி இருக்கிறாளே, அவள் மகா உயர்குலத்தைச் சேர்ந்தவள்; காமாதுரன் என்னப்படுகிற அவள் கணவனோ சகல கலைவல்லோனும் சபை அலங்காரனுமாய் இருக்கிறார் என்று சொன்னாள்.

## கிறிஸ்தீனாளின் மோட்ச பயணம்.

இதற்குள்ளாகக் கிறிஸ்தீனாள் தன் பிள்ளை குட்டிகளோடு பயணம் புறப்பட்டுவிட்டாள். தயாளியும் அவளோடுகூடப் போனாள். அவர்கள் போகப் போக பல காரியங்களையும் குறித்துப் பேசிக்கொண்டே நடந்தார்கள்.

கிறிஸ்தீனாள் பயணப்பட்டது.

கிறிஸ்தீனாள் தயாளியை நோக்கி; அம்மணி, நீ உன் வீட்டையும் வாசலையும் விட்டுப்போட்டு என்னை வழியனுப்பக் கொஞ்சதூரம் வருகிறது எனக்குப் பெரிய சகாயமாய் இருக்கிறது என்றாள்.

அதற்கு தயாளி என்னும் கன்னிப்பெண் சொல்லுகிறாள்; அம்மா உன்னோடு கூட வருகிறதில் பிரயோஜனம் உண்டெ-

1 இந்தச் சம்பாஷணையினால் சிலர் பரிசுத்த ஜீவியம் செய்ய ஆசிக்கும் மற்றவர்களைத் தூஷித்து குற்றப்படுத்துவார்கள் என்றும் வேறு சிலரோ அப்பேர்க்கொத்த நற்காரியங்களைப் பேசக் கேட்கத்தானும் சம்மதப்படமாட்டார்கள் என்றும் விளங்குகிறது. களிமயங்கி என்பவளுக்கு இப்படிப்பட்டவைகளைப் பேசுதல் நேரப்போக்குப் பண்ணுவதாகவும் லௌகிக விஷயங்கள் நல்லவைகளாகவும் காணப்பட்டது. களிமயங்கியைப் போன்றவர்களுக்கு ஆவிக்குரிய காரியங்களைக் கேட்க வெறுப்பாய் இருக்கும். அவைகளைப் புகழவோ இகழவோ மனமும் இராது.



ன்று கண்டால், நான் ஊர்முகமாய் இனிமேல் காலெடுத்து வைக்கவே மாட்டேன் என்று சொன்னாள்.

கிறி. ஆ! என் அழகுமணியமே! என்னோடு கூடவே வர மனமானால் அப்படியே தீர்மானஞ்செய்துகொள். நம்முடைய பயணத்தின் முடிவில் கிடைக்கும் பாக்கியம் இன்னதென்று நான் அறிவேன். என் கணவர் தங்கசுரங்கத்தின் பொன் எல்லாம் கொடுத்து இருக்கச்சொன்னாலும் இருக்கமாட்டாத ஒரு இடத்தில் குடியேறி இருக்கிறார். என்னுடைய அழைப்பினாலே[1] நீ வந்தபோதிலும் அங்கே நீ தள்ளிவிடப்படமாட்டாய். என்னையும் என் மக்களையும் வரவழைத்திருக்கிற ராஜாவானவர் இரக்கத்தில் பிரியப்படுகிறவராய் இருக்கிறார். அதுவும் அன்றி உனக்குப் பிரியமானால், நான் உனக்கு ஒரு சம்பளம் ஏற்படுத்தி எனக்கு வேலைக்காரியாக வைத்துக்கொள்ளுவேன். என் பொருள் எல்லாம் நம் இருவருக்கும் பொதுவாகவே இருக்கும்; நீ என்னோடுகூட வந்தால்மாத்திரம் போதும் என்றாள்.

தயாளியின் சந்தேகம்.

தயாளி. என்னையும் உள்ளே ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதற்கு எனக்கு என்ன நம்பிக்கை இருக்கிறது? அப்படிப்பட்ட நம்பிக்கையை யாராவது சொன்னால், நான் மனத்தளர்ச்சிக்கு இடங்கொடாமல் துணைபுரிவோருடைய உதவியினால் என்ன அபாயம் நேரிடுகிறதாய் இருந்தாலும் பின்னிடையாமல் நடந்துவரக்கூடுமே என்று தயாளி சொன்னாள்.

கிறி. அதற்கு கிறிஸ்தீனாள்; என் கண்ணே, தயாளியே! நான் சொல்வதைக்கேள்; திட்டிவாசல்மட்டும் நீ என்னுடன் கூடவா, அவ்விடத்தில் உன் காரியத்தைப் பற்றி விபரமாய் விசாரித்து அறிந்துகொள்ளலாம். அவ்விடத்தில் உன்னைச் சேர்ப்பார் இல்லை என்று கண்டால் நீ உன் மனம்போல ஊருக்குத் திரும்பிவிடலாம்; உன்னால் எனக்கு உண்டான உதவிகளுக்கும் என் பிள்ளைகளுக்கு நீ செய்துவருகிற சகா-

1 மனுஷர்கள் மோட்ச பிரயாணம் செய்ய பவுல் அப்போஸ்தலனைப் போல் விசேஷித்த தேவ எத்தனமாய் அழைக்கப்பட்டாலும் அல்லது தேவ பணிவிடையாட்களின் பிரயாசையால் ஏவப்பட்டாலும் அல்லது வேறு எது காரணத்தினாலாகிலும் சரி, அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். கிறிஸ்துவண்டை வருகிறவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் அப்படி வரும்படி ஏவின முகாந்தரங்கள் எவைகளானாலும் அவர்களை அங்கீகரித்து ஆசீர்வதிக்கிறார்.

யத்துக்கும் தக்க தொகையை அங்கே தந்து உன்னை அனுப்பி விடுகிறேன் என்றாள்.

**தயாளி.** அப்படியானால் நான் அதுமட்டும் வந்து திரும்புகிறேன். அதற்கு அப்பால் என்ன சம்பவிக்குமோ அதைப் பின்னாலே பார்த்துக்கொள்ளலாம், கர்த்தர் ஒரு நல்ல பங்கை எனக்குக் கொடுப்பாராக: வானத்து அரசர் தமது கிருபையுள்ள மனதை என்மேல் வைப்பாராக என்று தயாளி சொன்னாள்.

அதைக் கேட்ட கிறிஸ்தினாள் அகமகிழ்ந்தாள். தனக்கு ஒரு துணையாள் அகப்பட்டதென்பதினாலே அல்ல, அந்த ஏழைப்பெண் தன்னைப்போல இரட்சண்ணியத்தின்மேல் நாட்டங்கொள்ளும்படி செய்த பிரயத்தனம் வாய்த்ததினாலேயே அவள் ஆனந்தங்கொண்டாள். அவர்கள் இருவரும் ஏகமனமாய் வழிநடந்துபோனார்கள். போகப் போக தயாளி கண்ணீர் விட்டு அழுதாள். அதைக் கண்ட கிறிஸ்தினாள், என் உத்தம தோழிப்பெண்ணே! நீ அழுவானேன், உன் கண்ணீர் சொரிவானேன் என்று கேட்டாள்.

அதற்கு தயாளி சொல்லுகிறாள்: ஐயோ பாவம் நிறைந்த நாசபுரியில் வசிக்கும் என் இனபந்துக்களின் நிர்ப்பந்த நிலைமையை உள்ளபடி உணர்ந்த ஒருவன் அழாமல் இருப்பானோ? அவர்களைப் போதிக்க ஒருவரும் இல்லை என்றும் வருந்தீங்கை உணர்த்தும் உபாத்தி ஒருவனும் இல்லை என்றும் நான் நினைக்கையில், அவர்களைக் குறித்து உண்டாகும் என் வியாகுலம் அதிகம் ஆகிறது என்றாள்.

**கிறி.** அதற்குக் கிறிஸ்தினாள்; எவர்களுடைய இரட்சிப்புக்காக மனம் பொங்கி ஏங்குவோமோ அவர்கள் மோட்ச பிரயாணிகள் ஆவார்கள். என் கணவர் பயணப்பட்ட சமயத்தில் அவர் எனக்காகக் கவலைப்பட்டதுபோலவே, நீயும் உன் சிநேகிதருக்காகக் கவலைப்படுகிறாய். என் கணவர் அழுதாலும் நான் அதை சட்டைபண்ணினதில்லை; ஆனால் அவருடைய ஆண்டவரும் நம்முடைய ஆண்டவருமானவர் அந்தக் கண்ணீரை எல்லாம் தமது துருத்தியில் அடைத்து வைத்திருந்தார். அதின் பலனை நானும் நீயும் என் பிள்ளைகளும் இதோ அறுக்கிறோம்; இப்போதும் என் அன்புள்ள தயாளியே! உன் கண்ணீர்த் துளிகள் கவைக்குதவாமல் காய்ந்துபோகமாட்டாதென்று நான் நம்புகிறேன். ஏனெனில், "கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" என்றும் "அள்ளித்தூவும் விதையைச் சுமக்கிறவன் அழுதுகொண்டு போகிறான்; ஆனாலும் தான் அறுத்த அரிகளைச் சுமந்துகொண்டு கெம்பீரத்தோடே திரும்பிவருவான்"[a] என்றும் சத்திய சாஸ்திரத்தில் எழுதப்பட்டு இருக்கிறதென்று கிறிஸ்தினாள் சொன்னாள்.



அதைக் கேட்ட தயாளி மனங்கனிந்து

(அம்மானை.)

பிறர் ஆத்தும ரட்சிப்பை நாடிய பிரலாபம்.

முத்திபுர வாசல்மட்டும் புத்தியுடன் நான்சேர,
பத்திபரி சுத்தருடன் எக்காலும் நான்வாழ,
சுத்தர்பரிசுத்தர்மனை ஏறுவர் சித்தமானால்
அத்தனே அருள் அருளும், கர்த்தனே வழிகாட்டும்.
என்னைத்தான் என்மனதை மாற்றவகை செய்தாலும்,
ஐயன் கிருபைவிட்டு அகன்றுநான் போகாமல்
மன்னர் பரிசுத்தவழி விட்டலைந்து போகாமல்
உன்னருளே வந்தென்னை வழிநடத்த வாராக.
நாசபுரி நாடெங்கும் நான்விட்டு வந்தவர்கள்,
மோசம் அறிந்து தங்கள் முழுமனதால் உள்ளத்தால்
கனிந்துருகி உன்பாதம் தேடிக் கதியடைய,
குனிந்து கருணையினால் கூட்டும் ஐயா கும்பிட்டேன்

என்று விண்ணப்பம் பாடினாள்.

## பிரயாணிகள் நம்பிக்கையிழவு உளைசேர்ந்தது.

பிரயாணிகள் நம்பிக்கையிழவு சேர்ந்தது.

பின்னும் அந்த விருத்தாப்பிய கூரியப்புத்தி சொல்லுவார்: கிறிஸ்தினாள் நம்பிக்கையிழவுண்டை வந்தவுடனே, ஆகா! இவ்விடத்தில் என் கணவர் தட்டுக்கெட்டுத் தடுமாறி விழுந்து, சேற்றுக்குள் அகப்பட்டு, திக்குமுக்கடைந்து, சங்கடப்பட்டாரே என்று சொல்லிக்கொண்டு கொஞ்சநேரம் அங்கே நின்றாள். அதுவும் அன்றி பிரயாணிகளுக்குச் சகாயமாக இந்தப் பாதையைச் செப்பனிடும்படி அரசர் ஆக்கியாபித்தபோதிலும், அது முன்னிலும்[1] அதிகக் கேவலமாகவே இருக்கிறதென்றும் உணர்ந்துகொண்டாள்.

---

[1] முன்னிலும் அதிக கேவலம். பன்னியன் என்பவர் இந்தப் புத்தகத்தின் முதற்பங்கை எழுதினபின் கேவலத்தை முன்னிலும் குறைந்துபோனதாகக் கண்டார் என்று தோன்றுகிறது. ராஜாவாகிய தேவன் பிரயாணிகளுக்கு ஒத்தாசைபண்ண முன்போலவே ஆவலுள்ளவராய் இருந்தபோதிலும், ஒரு சீர்திருத்தமும் உண்டாகக் காணவில்லை என்கிறார். சுவிசேஷ பிரசங்கிகளாகிய வேலையாட்கள் தங்கள் காரியத்தைச் செம்மையாய்ச் செய்யவில்லை; அவர்கள் சுத்த சுவிசேஷத்தை அல்ல மனுஷஞானம் முதலானவைகளையே போதித்தார்கள் என்று காணப்படுகிறது.

[a] சங். 126, 5, 6.

உளையைப் பற்றிய சமாசாரம்.

இச்சமயத்தில் நான் கூரியப்புத்தியை நோக்கி; ஐயாவே! இந்த உளையைப்பற்றிச் சொல்லப்படுகிற சமாசாரம் நிஜந்தானோ என்று கேட்டேன். அதற்கு அவர், அது நிஜமே நிஜம்; இந்த உளையைச் செப்பனிடும்படியாக ஏற்படுத்தப்பட்டு, ராஜாவின் காரியக்காரராய் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு திரிகிற பல ஊழியர்கள் கற்களைக் கொண்டுவந்து கொட்டுகிறதற்குப் பதிலாக அழுக்குகளையும் குப்பைகளையும் கொண்டுவந்து கொட்டி, செப்பனிடுகிறதற்குப் பதிலாக கெடுத்துவிட்டுப் போகிறார்கள் என்று சொன்னார். இதனாலேதான் கிறிஸ்தினாளும் அவள் பிள்ளைகளும் இந்த உளையண்டை வந்தவுடன் நின்றுகொண்டார்கள். ஆனால் தயாளி; நடந்து கடந்துபோவோம் வாருங்கள், வீரத்துவத்தை விடாதிருப்போமாக என்று சொன்னாள். உடனே அவர்கள் எல்லாரும் துணிந்து படிகளைக் கூர்மையாய்க் கவனித்து கால் வைத்து நடந்துபோக ஆரம்பித்தார்கள்.

பிரயாணிகள் உளைதாண்டினது.

எவ்வளவு கவனத்தோடு அவர்கள் காலெடுத்து வைத்துப் போனபோதிலும், கிறிஸ்தினாள் சேற்றில் அமுங்கிப்போகப்பார்த்தாள். இப்படி இரண்டொருதரம் மாத்திரம் அல்ல அநேகந்தரம் சம்பவித்தது. அவர்கள் எல்லாரும் உளையைக் கடந்தவுடனே, "விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்"[a] என்ற வாசகம் அவர்கள் காதுகளில் தொனிக்கிறதுபோல் அவர்கள் எண்ணிக்கொண்டார்கள்.

அப்பால் அவர்கள் எல்லாரும் ஏகமாய்க் கூடி நடந்து திட்டிவாசலை நோக்கிப்போனார்கள். அப்போது தயாளி கிறிஸ்தினாளைப்பார்த்து, அம்மா! திட்டிவாசலுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதைப்பற்றி உனக்கு இருக்கிற நம்பிக்கை அவ்வளவு எனக்கு இருக்குமானால், நம்பிக்கையீனின் உளையிலும் அலங்கோலமான சேறும் என் மனதை அதைரியப்படுத்தமாட்டாது என்றாள்.

அதற்குக் கிறிஸ்தினாள்; அம்மணி உன் நோவை நீ அறிவாய், என் நோவை நான் அறிவேன். ஆனால் என் உத்தம

[a] லூக். 1. 45.



சிநேகிதியே! நாம் நமது பயணத்தின் முடிவைக் காணுமுன், போதும் போதும் என்று சொல்லிடத் தக்கதான பலத்த ஆபத்துகள் எல்லாம் நமக்குச் சம்பவிக்கும். அதுவும் அன்றி நம்மைப்போல இந்த மேலான பாக்கியங்களை நாடிப்போகும் பிரயாணிகளின்மேல் பொறாமைப்படுகிற எதிரிகள் நம்மைப் பகைக்கிறதோடு வழிப்பாதைகளில் பயங்கரங்களையும் கண்ணிகளையும் துன்பங்களையும் உபத்திரவங்களையும் வைத்து, நம்மை மோசப்படுத்தமாட்டார்கள் என்று யார்தான் சொல்லுவார்கள் என்று சொன்னாள்.

கூரியபுத்தி விடைபெற்றது.

இதன்பின்பு கூரியப்புத்தியானவர், அந்தக் கிறிஸ்தினாளுடைய மற்றச் சமாசாரங்களைக்குறித்து நீயே சொப்பனம் கண்டுகொள் என்று சொல்லிப்போட்டுப் போய்விட்டார்.

## திட்டிவாசல் சேருதல்.

பின்பு நான் என் சொப்பனத்தில் கிறிஸ்தினாளும் தயாளியும் பிள்ளைகளும் திட்டிவாசல்மட்டும் வந்ததைக் கண்டதாக நினைவுகொண்டேன். அவர்கள் வாசலண்டை வந்தவுடனே; எப்படித் தட்டலாம், யாரைக் கூப்பிடலாம், என்ன மறுமொழி சொல்லலாம் என்பதைப்பற்றித் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு, கடைசியாக, கிறிஸ்தினாள் எல்லாரிலும் மூத்தவள் ஆனதால் அவளே கதவைத் தட்டவும் எல்லாரையும் உள்ளே ஏற்றுக்கொள்ளும்படி ஜெபம் செய்யவும் தீர்மானித்துக்கொண்டார்கள். அப்படியே கிறிஸ்தினாள் கதவைத் தட்டினாள். அவள் [*]இரண்டொரு தடவை அல்ல, தன் அன்புள்ள புருஷன் செய்ததுபோல அனந்தம்முறை தட்டினாள். தட்டத் தட்ட, திறக்கும் ஆள் வருகிறதுபோல் காணப்படாமல் ஒரு நாய் சள் சள் என்று குலைத்துக்கொண்டு தங்கள்மேல் பாயும்படி வருகிறதுபோல் அவர்களுக்குக் காணப்பட்டது. அந்த நாயும் சின்னஞ்சிறியதாய் இராமல் பயங்கரமுள்ள பிரமாண்டமான நாயாய் இருந்தது. இதனாலே அந்தப் பெண்டுகளும் பிள்ளைகளும் பயந்துபோனார்கள். அந்த நாய் தங்கள்மேல் பாய்ந்து பீறிப்போடும் என்றே அச்சத்தால் அவர்கள் கொஞ்சநேரம் தட்டாமல் சும்மா இருந்

பிரயாணிகள் திட்டிவாசலைத் தட்டினது.

துவிட்டார்கள்.[1] அவர்கள் தங்கள் மனதில் மட்டற்ற கலக்கம் கொண்டபடியால் என்னசெய்யவேண்டும் என்று தெரியாமல் திகைத்துப்போனார்கள். நாயைப்பற்றிய பயத்தால் வாசலைத் தட்ட துணிவு வரவில்லை; அதோடு ஓயாமல் தட்டினால் வாசல்சேவகன் நம்மேல் மனஸ்தாபப்படுவார் என்ற அச்சத்தால் பின்வாங்கிப் போகவும் மனம் துணியவில்லை. கடைசியாக, என்ன வந்தாலும் வரட்டும், தட்டுவதே சரி என்று தீர்மானித்துக்கொண்டு முன்னிலும் அதிக பலமாக ஓயாது தட்டினார்கள். வாசலின் நிலைகள் அசைகிறதுபோலக் கதவைத் தட்டின சத்தம் கேட்டவுடனே, வாசற்காப்போன் வாய் திறந்து யார் அங்கே? என்று கேட்டார். உடனே நாயின் குலைப்பும் ஓய்ந்தது, கதவும் திறக்கப்பட்டது.

அப்பொழுது கிறிஸ்தீனாள் தலைகுனிந்து வணங்கிக்கொண்டு, எங்கள் ஆண்டவன் தமது அரண்மனையின் அலங்கார வாசலைத் தட்டின அடிமைப் பெண்களின்பேரில் கோபம் கொள்ளாதிருப்பாராக என்று சொன்னாள். அதின்பின் வாசற்காப்போன் அவர்களை நோக்கி, நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்? உங்களுக்குத் தேவையாய் இருக்கிறது என்ன என்று கேட்டார்.

கிறிஸ்தியான் வந்த இடத்திலிருந்தே அடியாளும் புறப்பட்டு வருகிறோம்; என் ஆண்டவர் சித்தங்கொண்டு உச்சிதபட்டணத்துக்குச் செல்லும் பாதையில் நாங்கள் சேர, எங்களைக் கிருபையாய் உள்ளே ஏற்றுக்கொள்ளுகிறதுண்டானால், அவர் போன பயணமே நாங்களும் போகலாம் [illegible] இன்னும் என் ஆண்டவனுக்குக் கோபம் வராதிருப்பதாக; அடியாள் இப்பொழுது உன்னத லோகத்தில் [illegible] கிறிஸ்தியானுக்கு ஒருகாலத்தில் மனைவியாய் இருந்தேன், என்பேர் கிறிஸ்தீனாள் என்றாள்.

---

[1] நாம் நமது ஜீவபாதையைச் சேர்ப்பிக்க [illegible] பாடுமுயற்சிபண்ணுகிறோமோ, அப்போதெல்லாம் அநேக தடைகளும் ஆயாசங்களும் நமக்கு உண்டாகும். நம்மை வெகுவாய் பயங்காட்ட சாத்தான் தன்னால் ஆகும் மட்டும் பிரயத்தனிப்பதால் நாம் சிலவேளை ஜெபஞ் செய்யாமல் சும்மா இருந்துவிடுவோம். வாச[illegible]துள்ளதான் நாய் [illegible] என்று கிறிஸ்தீனாள் எண்ணினபடியும், அந்த பயங்கரங்கள் எல்லாம் தேவனிடத்தில் இருந்தே உண்டாவதுபோல் நமக்குத் தோன்றும். ஆனாலோ யதார்த்தத்தில் அவைகள் இட்டிய வாசலுக்குள் பிரவேசிக்க விரும்பும் யாவருக்கும் சத்துராதியாகிய பிசாசினிடத்திலிருந்து வருகின்றன.



அதை கேட்டவுடனே, வாசற்காப்போன் அதிசயப்பட்டு; சில நாட்களுக்குமுன் மோட்ச பயணத்தை முழுப்பகையாய்ப் பகைத்த நீயும், இப்பொழுது பிரயாணி ஆகிவிட்டாயா? என்றார். அப்பொழுது அவள் தலைகுனிந்து, பிரயாணி ஆகிவிட்டேன் ஐயா! இதோ நிற்கும் என் கர்ப்பக்கனிகளும் அப்படியே பிரயாணிகள் ஆகிவிட்டார்கள் என்றாள்.

கிறிஸ்தீனாளும் அவள் பிள்ளைகளும் உள்ளே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அப்புறம் அவர் அவள் கையைப்பிடித்து உள்ளே சேர்த்துக்கொண்டு, சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள் என்று சொல்லிக்கொண்டே அந்தப் பிள்ளைகளையும் உள்ளே வரச்சொல்லித் திட்டிவாசலை அடைத்துக்கொண்டார். அப்புறம் அவர் திட்டிவாசலின் கொத்தளத்தின்மேல் நின்ற எக்காளக்காரனைக் கூப்பிட்டு, இதுவே நீ கிறிஸ்தீனாளின் வருகையை எக்காளத்தொனியோடும் ஆனந்த சத்தத்தோடும் பிரசித்தப்படுத்து என்று கட்டளைகொடுத்தார். அப்படியே அவன் தன் எக்காளத்தை உயர்த்தி, உன்னத லோகம் எங்கும் இங்கிதநாதம் முழங்க ஊதினான்.[1]

தயாளி இன்னும் உட்பிரவேசிக்கவில்லை.

இவை எல்லாம் நடக்கும்போது ஏழைத் தயாளி வெளியேதான் நின்றாள். நாம் தள்ளப்பட்டுப் போனோமோ என்ற கலக்கத்தாலும் பயத்தாலும் அவள் அழுதுகொண்டே நின்றாள். கிறிஸ்தீனாள் தன் மக்களுடன் உள்ளே சேர்த்துக் கொள்ளப்பட்டபின்பு, வெளியே நின்ற தயாளியையும் சேர்த்துக்கொள்ளும்படியாக மன்றாடத் துவக்கினாள்.

கிறிஸ்தீனாளின் மன்றாட்டு.

கிறி. அவள் வாசற்காப்போனைப் பார்த்து; என் ஆண்டவனே, என்னைப்போலவே மோட்ச பயணத்துக்கு ஆயத்தப்பட்டுக் கூடவந்த என் தோழிப்பெண் ஒருத்தி இன்னும் வெளியேதான் நிற்கிறாள்; நான் என்னுடைய அரசனின் விருப்பத்தின்படி புறப்பட்டு வருகிறேன்; அவளோ நாம் அழைக்கப்படாத விருந்தாளிபோல் இருக்கிறோமே என்று தனக்குள் நினைத்துக்கொண்டு மனம் நொந்தவளாய் நிற்கிறாள் என்றாள்.

---

[1] "மனந்திரும்புகிற ஒரே பாவியின்நிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷம் உண்டாய் இருக்கிறது" என்று சத்திய வேதம் சாட்சியிடுகிறது.

தயாளியின் ஆத்திரம்.

இப்பொழுது வெளியே நின்ற தயாளியின் ஆத்திரத்தை இவ்வளவென்று சொல்லக்கூடாது; தாமதம் ஆகும் ஒவ்வொரு நிமிஷமும் அவளுக்கு ஒரு மணிநேரம்போல் காணப்பட்டது. ஆதலால், உள்ளே இருந்த கிறிஸ்தீனாள் அவளுக்காகப் பரிந்து பேசவேண்டியதை எல்லாம் பேசி முடிக்கும்படி போதுமான சமயங்கொடாமல் தானே ஓயாமல் தட்டிக்கொண்டிருக்கத் துவக்கினாள். அவள் தட்டின தட்டு கிறிஸ்தீனாளைத் திகைப்பிரமிக்கப் பண்ணும்படி அவ்வளவு பலமாய்த் தட்டினாள். அப்பொழுது வாசற்காப்போன் யார் அங்கே? என்று கேட்டார். அதுதான் என் தோழிப்பெண் என்று கிறிஸ்தீனாள் சொன்னாள்.

அவர் கதவைத் திறந்து பார்த்தார்; பார்க்கவே, தயாளி களைத்துப்போய் முகம் குப்புற விழுந்து கிடக்கிறதைக் கண்டார். வெகு நேரம் தட்டியும் ஏன் என்று கேட்பாரும் இல்லை, ஏற்றுக்கொள்வாரும் இல்லையே, நமக்கு இங்கே இடங்கிடையாதுபோல் இருக்கிறது! என்று அவள் நினைத்து சோர்ந்து விழுந்து சுரணையற்றுக் கிடந்தாள்.

அப்பொழுது அவர் அவளைக் கையைப் பிடித்துத் தூக்கி, சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

அதற்கு அவள்: ஐயரே! அடியாள் சோர்ந்துபோனேன்; என் உயிர் அற்றுப்போயிற்று என்று சொன்னாள். அப்போது அவர், பெண்ணே கலங்காதே! "என் ஆத்துமா என்னில் தொய்ந்துபோகையில் கர்த்தரை நினைத்தேன்; அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்தஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது"[a] என்று ஒரு பக்தன் ஒருதரம் சொன்னான். ஆகலால் மாதே மயங்காதே! எழுந்து காலூன்றி நின்று நீ வந்த விசேஷம் இன்னதென்று விளம்பு என்று கேட்டார்.

தயாளி. அதற்கு அவள், ஐயனே! அழையாத மணவீட்டில் நுழையும் விருந்தாளிபோல் அடியாள் கிறிஸ்தீனாள் அம்மாளோடு வந்தேன். அவள் அரசரின் கடிதம் பார்த்துப் புறப்பட்டாள்; நானோ அவள் பேச்சைக் கேட்டுப் புறப்பட்டேன்.

a யோனா, 2. 7.



அச்சமும் பயமும் என்னை ஆண்டுகொண்டிருக்கிறதால் உள்ளே பிரவேசிக்க பயப்படுகிறேன் என்றாள்.

வாச—காப். இவ்விடத்துக்கு வரும்படி அவள் உன்னை விரும்பினாளா?



தயாளி. ஆம் ஐயா! விரும்பினாள்; அதனாலேதான் என் ஆண்டவன் பார்க்கிறபடி அடியாள் இவ்விடமட்டும் வந்து நிற்கிறேன். எனக்கு அருளும்படியான கிருபைகளும் பாவமன்னிப்பும் உண்டானால் அதை அநுபவிக்கும்படிக்கு இந்த ஏழை அடிமைப்பெண் ஆவலோடு கெஞ்சுகிறேன் என்றாள்.

அப்புறம் அவர் மறுபடியும் அவள் கையைப் பிடித்துத் தூக்கி மெதுவாய் உள்ளே நடத்தி, யாருடைய வருதலினாலே நம்மிடத்தில் வந்தாலும் சரி, நமதுமேல் விசுவாசிக்கிறவர்கள் எல்லாருக்காகவும் நாம் வேண்டிக்கொள்ளுகிறோம் என்றார். அப்புறம் அவர் கிட்டநின்றவர்களைக் கூப்பிட்டு, தயாளியின் களை நீங்கும்படியான சுந்தவர்க்கம்[1] ஏதாவது கொண்டுவாருங்கள் என்றார். அப்படியே அவர்கள் ஒரு கொத்து மருக்கொழுந்தைக் கொண்டுவந்து கொடுத்தார்கள்; அவள் அதை முகர்ந்துபார்த்து சோர்புதெளிந்து உட்கார்ந்தாள்.

தயாளி உட்பிரவேசித்தது.

இப்படியாகக் கிறிஸ்தினாளும் அவள் பிள்ளைகளும் தயாளியும் மோட்சபாதையின் துவக்கமாகிய திட்டிவாசலின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவருடைய தயாளமுள்ள சம்பாஷணையில் பங்குபெற்றார்கள். அவர்கள் பின்னும் அவரைநோக்கி, நாங்கள் எங்கள் அக்கிரமங்களை நினைத்து அகோர துக்கப்படுகிறோம்; ஆண்டவா! அடியாருக்கு மன்னிப்பை அருளி, அடியார் இனி செய்யவேண்டியது இன்னதென்று கட்டளையிடப் பிரார்த்திக்கிறோம் என்றார்கள்.

அதற்கு அவர்; நாம் உங்களுக்கு வார்த்தையாலும் செய்கையாலும்[2] மன்னிப்பைத் தந்தோம்; பாவமன்னிப்பைப் பற்றிய நம்முடைய வாக்குத்தத்தங்களைக்கொண்டு வார்த்தையாலும் அந்த மன்னிப்பை நாம் சம்பாதித்த வகையைக்கொண்டு செய்கையாலும் உங்களுக்கு மன்

பிரயாணிகள் வார்த்தையாலும் செய்கையாலும் மன்னிப்புப் பெற்றது.

[1] சுந்தவர்க்கம். இது தேவனுக்குச் சுகந்தவாசனையாய் இருக்கிற (எபே. 5. 7.) இயேசுகிறிஸ்துவின் கிருபையான பலியைக் குறிக்கிறது. தன் சொந்தநீதியாற்றிரத்தையும் பாவத்தன்மையையும் உணருகிற ஒவ்வொரு பாவியும் இயேசுகிறிஸ்துவினால் உண்டாய் இருக்கும் இரட்சிப்பைக் குறித்துக் கவனிக்கும்போது ஆறுதலும் பெலனும் கொள்வான். நமது கேடான பாவத்தன்மையை நாம் நன்றாய் உணருகையில் அது நம்மை மயக்கப்பண்ணும். ஆனால் கிறிஸ்துவின் சுகந்தம் நம்மை திரும்ப உயிர்ப்பிக்கும்.

[2] வார்த்தையாலும் செய்கையாலும். வார்த்தையால் உண்டான மன்னிப்பு என்பது இரட்சிப்பின் விசேஷத்தையும் வாக்குத்தத்தத்தையும், செய்கையால் உண்டான மன்னிப்பு என்பது நமக்கு மன்னிப்பைச் சம்பாதிக்க கிறிஸ்து நடப்பித்த கிரியைகளையும் அதோடு மனித இருதயத்தில் நடப்பிக்கப்படும் கிறிஸ்துவினுடைய கிரியைகளின் நிறைவேறுதலையும் காண்பிக்கிறவைகளாய் இருக்கின்றன.



னிப்பைத் தந்தோம். இவைகளில் முந்தினதை நமது திரு உதடுகளின் முத்தத்தால் ஏற்றுக்கொள்ளுங்கள்; மற்றது உங்களுக்கு வெளிப்படுத்தப்படுகிற பிரகாரம் அறிந்துகொள்ளுங்கள் என்று திருவுளம்பற்றினார்.[a]

இதுவும் அல்லாமல் திட்டிவாசலின் தலைவர் அவர்களோடு அனந்தம் காரியங்களைப் பேசி அவர்களை அகமகிழச் செய்தார் என்று நான் என் சொப்பனத்தில் கண்டேன். அப்பால் அவர் அவர்களை வாசலின்மேல் இருந்த கொத்தளத்தில் ஏறிவரச்சொல்லி, அவர்கள் இரட்சிக்கப்பட்ட முறையை அவர்களுக்குக் காண்பித்து, அவர்கள் தங்கள் பிரயாணத்தில் போகப்போக இக்காட்சி காணப்பட்டு அவர்களுக்கு ஆறுதலை அளிக்கும் என்றார்.

அப்பால் அவர் அவர்களை தாழ இருந்த ஒரு மண்டபத்துக்குக் கூட்டிக்கொண்டு போய்ச் சிலகாலம் தங்கி இருங்கள் என்று சொல்லி, விடைபெற்றுப் போனார். அந்த மண்டபத்தில் சேர்ந்தபின்பு, கிறிஸ்தினாளும் தயாளியும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு பின்வருகிறபடி சம்பாஷணை செய்தார்கள்.

பிரயாணிகளின் சம்பாஷணை.

கிறி. நாம் இங்கே இருக்கிறதைவிட்டு என் மனதில் உண்டாகிற ஆனந்தத்துக்கு ஓர் அளவில்லை.

தயாளி. நீ அப்படிச்சொன்னாலும், சொல்லலாம்; ஆனால் நான் உங்கள் எல்லாரைப்பார்க்கிலும் ஆனந்தக் கூத்தாட அநேக முகாந்தரங்கள் இருக்கின்றன.

கிறி. நான் திட்டிவாசலைத் தட்டியும், திறப்பார் ஒருவரும் எதிர்ப்படாததாலும் அந்தப் பொல்லாத நாயின் சத்தத்தையாலும் ஐயோ, நமது பிரயாசமெல்லாம் பிரயோஜனமற்றுப் போயிற்றே என்று ஒருதரம் நினைத்தேன்.

தயாளி. எனக்கு அதிகக் கலக்கம் உண்டானது எப்போதென்றால், நீங்கள் எல்லாரும் அவருடைய தயவின் பக்குவத்துக்குள்ளே போய், நான் வெளியே தனிமையாக விடப்பட்டிருந்தபோது தான். "இரண்டு ஸ்திரீகள் எந்திரம் அரைத்துக்கொண்டு இருப்பார்கள், ஒருத்தி ஏற்றுக்கொள்ளப்படுவாள், ஒருத்தி கைவிடப்படுவாள்"[b] என்ற வாசகம் என்னில் நிறைவேறுகிறதென்று அப்போது நினைத்துக்கொண்

[a] உன்னத. 1. 2. யோவா 20. 20. [b] மத் 24. 41.

டேன். நான் மனந்தளராமல், ஐயோ அதம் ஆனேன்! என்று அலறவும் ஆத்திரப்பட்டேன்; கதவைத் தட்டவும் பயம் இருந்தது; ஆனால் வாசல்நிலையின்மேல் எழுதப்பட்டிருந்த வாசகத்தைக் காணவே,[1] சற்று தைரியம் உண்டாயிற்று; ஆதலால் கடைசியாக மறுபடியும் தட்டவேண்டும், இல்லாவிட்டால் சாகவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு, வந்ததெல்லாம் வரட்டும் என்று தட்டினேன். ஜீவன் அல்லது சாவு என்ற தீர்மானம் என் மனதில் பலமாய்க் கிரியை செய்துகொண்டிருந்ததால், அந்நேரத்தில் நான் எப்படித்தான் தட்டினேனோ அது எனக்கே தெரியவில்லை என்றாள்.

கிறி. நீ எப்படித் தட்டினாய் என்று சொல்லமாட்டாயா?- உன் தட்டு அவ்வளவு உருக்கமாயும் மனதைக் கவர்ந்துகொள்ளத்தக்கதாயும் இருந்ததால் நானே அசந்துபோய்விட்டேன். அப்படித் தட்டினதை நான் என் ஜீவகாலத்தில் கேட்டிருப்பதே இல்லை என்று நினைத்துக்கொண்டேன். நீ பலவந்தத்தோடு பரலோகராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, [a] பலாத்காரமாய்க் கதவை உடைக்கிறாயாக்கும் என்று நான் நினைக்கும்படி அவ்வளவு பலமாய்த் தட்டினாய்.

தயாளி. ஐயோ! என்னைப்போலொத்த ஸ்திதியில் இருந்தவன் அப்படிச் செய்யாமல் வேறென்னதான் செய்வான்? உனக்குத் தெரிந்திருக்கிறபடி நான் வெளியே இருக்க கதவும் பூட்டப்பட்டதே; ஒரு துஷ்டநாயும் சுற்றிச்சுற்றிக் குலைத்ததே; பின்னை நான் என்னசெய்வேன்? என்னைப்போலத் தொய்ந்துபோன எந்த மனுஷன் அப்படித் தன் பலத்தோடுங்கூடித் தட்டாதிருப்பான்? நீயே சொல்லேன்! ஆனால் அம்மா! நான் துணிந்து தட்டினதற்கு ஆண்டவர் ஏதாவது சொன்னாரோ? அவர் என்மேல் கோபப்படவில்லையா?

கிறி. நீ கதவை மட்டமட்டென்று விடாமல் தட்டினபோது, ஆண்டவர் அதைக் குற்றமாய் எண்ணாமல் புன்னகைகொண்டார்; நீ செய்தது அவருக்கு மெத்தப் பிரீதியாய் இருந்ததுபோலத் தோன்றுகிறது. யாதொரு கோபக்குறி அவர் முகத்தில் காணப்படவில்லை. ஆனால், நமது எஜமான் அப்படிப்பட்ட நாயை ஏன்தான் வைத்திருக்கிறாரோ! அது எனக்கே அதிசயமாய்

[1] தேவன் தமது புத்தகத்தில் சொல்லுகிற வாக்குத்தத்தங்களும் அழைப்புகளும் எப்பேர்ப்பட்ட பேதைகளையும் பயங்காளிகளையும் ஆற்றிப் பெலப்படுத்தத் தகுந்த பெலன் உள்ளவைகளாய் இருக்கின்றன.

[a] மத். 11. 12.



இருக்கிறது. இந்த நாயைப்பற்றிய சமாசாரம் எனக்கு முந்தியே தெரிந்திருக்குமானால், நான் இப்படித் துணிந்து புறப்பட்டிருக்கவே மாட்டேன்.[1] எப்படி இருந்தபோதிலும் நாம் உள்ளே வந்துவிட்டோம், உள்ளேயே இருக்கிறோம்; என் உள்ளம் சந்தோஷத்தால் இப்போது பூரிக்கிறது.

கடுநாயைப்பற்றிய ஆலோசனை.

தயாளி. உனக்குப் பிரியமானால், எஜமான் திரும்ப நம்மிடத்தில் வரும்போது இப்படிப்பட்ட கடுநாயை அவர் தமது முற்றத்தில் வைத்திருப்பதற்குக் காரணம் என்னவென்று கேட்கலாம்; அவர் அதை ஒரு குற்றமாய் எண்ணுவார் என்று நான் நினைக்கிறதில்லை என்றாள்.

பிள்ளைகள் எல்லாரும் அதைக் கேட்டவுடனே, ஆம், ஆம் அப்படியே கேள்! அந்த நாயைக் கொன்றுபோடும்படி நாம் பிரயத்தனம் செய்யவேண்டும். இந்த மடத்தைவிட்டு வெளியேபோனால் அது கடித்துப்போடும் என்று நாங்கள் பயப்படுகிறோம் என்று சொன்னார்கள்.

கடைசியாக எஜமான் அவர்களைப் பார்க்கும்படி மறுபடியும் இறங்கி மடத்துக்கு வந்தார். அப்போது தயாளி அவர் பாதங்களருகே முகம் குப்புறவிழுந்து வணங்கி, "இப்பொழுதும் என் ஆண்டவன் தமது அடியாளுடைய உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரப் பலியினை அங்கீகரிப்பாராக" என்று சொன்னாள்.

அப்போது அவர், உனக்குச் சமாதானம் உண்டாவதாக, எழுந்து நில் என்றார். அவளோ முகம் குப்புறக் கிடந்துகொண்டு, "கர்த்தாவே, உம்மோடே நான் வழக்காடப்போனால், தேவரீர் நீதியுள்ளவராமே; ஆகிலும் உம்முடைய நியாயங்களைக்குறித்து உம்மோடே நான் பேசும்படி வேண்டுகிறேன்;[a] தேவரீர் உமது அரண்மனை முற்றத்தில் இப்படிப்பட்ட நாயை வைத்திருப்பானேன்? அதைக் கண்ணோக்கின மாத்திரத்தில் அடியாளைப் போலொத்த பெண்களும் பிள்ளைகளும் வாசலண்டை வராமல் பயந்தோடிப் போகவேண்டியதாய் இருக்கிறதே என்றாள்.

[1] நமக்குச் சம்பவிப்பவைகளை நாம் முன்னறியாமல் இருக்கிறது எவ்வளவோ பாக்கியமான காரியம். போர்ச்சேவகன் தான் காயப்பட்டு கஷ்டப்படுவதை முன்னறிந்தால் யுத்தஞ்செய்ய பயப்படுவானே; அப்படிப்போலவே நமக்கும் நாளுக்குநாள் படிப்படியாக நினையாத வண்ணம் துன்பங்கள் உண்டாகின்றன. அவைகள் உண்டாகும்போதே அவைகளைச் சகிக்க நாம் பெலப்படுத்தப்படுகிறோம்.

[a] எரே. 12. 1.

அதற்கு அவர், அந்த நாயின் சொந்தக்காரன் வேறொருவன் இருக்கிறான். அவன் அதை அயல் மற்றொருவனுடைய பூமியின் எல்லையோரத்தில் கட்டிவைக்கிறான். என் பிரயாணிகள் மாத்திரம் அதின் சத்தத்தைக் கேட்கிறார்கள்; அந்த நாய், அதோ தூரத்தில் நீ பார்க்கிற அரணைச் சேர்ந்தது. நம்முடைய திட்டிவாசல் மதில் மட்டும் அது வருகிறதுண்டு. அது அநேக உத்தம பிரயாணிகளைப் பயப்படுத்தியிருக்கிறது; அதின் பயங்கர சத்தத்தைக் கேட்ட உத்தமர் அதியுத்தமராய் இருக்கிறார்கள். அதின் சொந்தக்காரன் என்மேலும் என் பக்தர்மேலும் உள்ள அன்பினாலே அந்த நாயை வளர்க்காமல், பிரயாணிகள் என்னண்டை வராமலும் திட்டிவாசலை வந்து தட்டாமலும் பயங்காட்டித் துரத்தும்படியான நோக்கமாகவே வளர்க்கிறான். சிலதரம் அது தன் சங்கிலிகளை முறித்துப்போட்டு என் பக்தரில் சிலர் இளைத்துப்போகுமட்டும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுத்ததும் உண்டு; ஆனால் அதின் கிலேசங்களை எல்லாம் நான் பொறுமையாய் இப்பொழுது சகித்துக்கொள்ளுகிறேன்; ஆகிலும் என் பக்தரை அது மோசப்படுத்தாதபடிக்கு நான் சமயம் அறிந்து, உதவிபுரிய எழுந்தருளி, அவர்களைப் பாதுகாத்துக்கொள்ளுகிறேன். என்றாலும் என்னால் இரட்சிக்கப்பட்ட மாதே! இவ்வளவாவது தெரியும் என்று நீ முன்னே அறியவில்லையா? நீ ஒரு நாய்க்கு அஞ்சலாமா? வீடுவீடாய்ப் போய் பிச்சைகேட்கும் ஆண்டிகள் ஒரு வீட்டில் நாய் குலைத்தால் அல்லது உறுமினால் அல்லது கடிக்கவந்தால் இந்த வீட்டுப் பிச்சை போனதுபோகட்டும் என்று பயந்து ஓடிப்போவார்கள். ஆனால் ஒரு நாய், அதுவும் வேறொருவன் முற்றத்தில் இருக்கிற ஒரு நாய், அதின் குலைப்பை [illegible] என் பிரயாணிகளுக்கு அநுகூலமாக நான் மாற்றிப்போடுகிற ஒரு நாய், என்னிடத்தில் ஆட்களை வரவிடாதபடி விலக்கிப்போடக் கூடுமோ?[1] நான் என் தாசரை

கருணையின் வசனம்.

[1] இரட்சிப்பின் பொருட்டு [illegible] தடைகளினாலும் அலைக்கப்படமாட்டார்கள். அவர்களுடைய ஜெபத்தின் அவசரம் தேவன் இரக்கமாய்க் கேட்கிறார். [illegible] இரட்சிக்கப்படுவார்கள். அப்பொழுது [illegible] தேவனின் [illegible] இரட்சிப்பை அடைவார்கள்.



சிங்கத்தின் வாயில் இருந்து இரட்சித்து நாய்களின் துஷ்டத்தனத்துக்குத் தப்புவிக்கிறேனே என்று சொன்னார்.

தயாளி. உடனே தயாளி; ஆண்டவனே அடியாளின் அறியாமையை அறிக்கையிடுகிறேன். அடியாள் அந்தரங்கம் அறியாமல் அலப்பிவிட்டேன்; என் ஆண்டவன் செய்கிறதெல்லாம் நன்மையாய் இருக்கிறது என்று அறிக்கையிடுகிறேன் என்றாள்.

கிறி. அதன்பின் கிறிஸ்தீனாள்; தங்கள் பயணத்துக்கு அடுத்த பலகாரியங்களையும் வழிப்பார்வையின் விபரங்களையுங்குறித்து அவரிடம் பேசிக்கொண்டிருந்தாள். அவர் அவர்களைப் போஷித்து அவர்களுடைய பாதங்களைக் கழுவி முன் பிரயாணப்பட்ட அவள் புருஷனுக்குச் செய்ததுபோலத் தமது அடிச்சுவடுகளிலே அவர்களை நிறுத்தினார். அப்பால் அவர்கள் தங்கள் வழியே நடந்துபோனதாக நான் என் சொப்பனத்தில் கண்டேன். அப்போது அடித்த காற்று அவர்கள் பிரயாணத்துக்கு ஏற்றதாகவே இருந்தது.

அப்பொழுது கிறிஸ்தீனாள் அகமகிழ்ந்து;

வாழ்க, வாழ்க மோட்சலோகம்
போகப் புறப்பட்ட நாளும்
தூண்டிவிட்ட ஆளும் வாழ்க
அல்லேலூயா!

மோட்சம் போக வெகுநாளாய்
ஆசைப்பட்டேன், ஆனால் இப்போ
ஓடுகிறேன்; அங்கே வாழ்வேன்
அல்லேலூயா!

பிந்தி ஓடும் ஓட்டம் முந்தும்
ஓடாமலிலும் உத்தமம்
அங்கே போவேன், என்றும் வாழ்வேன்
அல்லேலூயா!

கண்ணீர் களிப்பாயும், அச்சம்
நம்பிக்கையாயும் மாறிற்று;
பின்பலன் முன்விளக்குதே
அல்லேலூயா!

என்று பாடினாள்.

## இடுக்கமான வழிப் பயணம்.

இடுக்கு வழிப் பயணம்.

கிறிஸ்தியானும் அவனுடைய கூட்டாளிகளும் போன பாதையின் இருபுற மதிலுக்கு அப்பாலே முன்னே சொன்னோமே, அந்தத் துஷ்ட நாயின் சொந்தக்காரனுடைய தோட்டம் இருந்தது. அத்தோட்டத்தின் பழமரங்களின் கிளைகள் மதிலின் ஓரமாய்ச் சரிந்து வளர்ந்து பழக்குலைகளால் மடிந்து கிடக்கிறதுண்டு. அப்பழங்கள் கனிந்து பழுத்தவைகளாய்த் தொங்கிக் கண்ணைப் பகட்டினபடியால் பிரயாணிகள் தங்களுக்குக் கேடுண்டாகும்படி அப்பழங்களில் சிலவற்றைப் பிடுங்கித் தின்றுவிடுவதும் உண்டு.

பெலெவ்செபூலின் பழங்கள்.

கிறிஸ்தீனாளுடைய பிள்ளைகள் சிறுபிள்ளைகள் செய்கிற வழக்கம்போல அப்பழங்களில் சிலவற்றைப் பிடுங்கித் தின்ன ஆரம்பித்தார்கள்; அதை தாய் கண்டு தடுத்தபோதிலும் அவர்கள் பறித்துத் தின்றுகொண்டே போனார்கள்.[1]

அப்போது தாய் தன் மக்களை நோக்கி; அப்பா! அது நம்முடைய பழங்கள் அல்லவே, அதைப் பிடுங்கித் தின்பது நியாயம் அல்லவே என்று சொன்னாலும் அவை பகைஞனின் பொருள் என்று அவள் அறியாதிருந்தாள்; அறிந்திருந்தால் அச்சத்தால் அங்கே மாண்டுபோய் இருப்பாள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லக்கூடும். அந்தப் பழமரங்களை அவர்கள் தாண்டின பின்பு தங்கள் வழியே போனார்கள். திட்டிவாசலில் இருந்து இரண்டு அம்பு எய்யும் தூரத்துக்கு அப்பால் அவர்கள் போனவுடனே தங்களுக்கு எதிரே அலங்கோல ரூபிகளான இருவர் வருகிறதைக் கண்டார்கள். அவர்களைக் கண்டவுடனே கிறிஸ்தீனாளும் தயாளியும் முகமூக்காடு போட்டுக்கொண்டு பிள்ளைகள் முந்தியும் அவர்கள் பிந்தியுமாய் நடந்துபோனார்கள்.

இருவலரூபிகள் பிரயாணிகளை மடக்குதல்.

அவர்கள் கிட்டவரவே, இவர்கள் இருவரையும் கட்டி அணைக்கிறவர்கள்போல நெருக்கினார்கள். அப்போது கிறிஸ்தீனாள் அப்பாலே நில்லுங்கள், அல்லது உங்கள் வழியே அமைத

[1] தகாத சந்தோஷங்கள் பிசாசானவனுடைய தோட்டத்தில் பழுத்துத் தொங்கும் பழங்களுக்கு ஒப்பானவைகள். அவைகள் நாவுக்கு இன்பமும், பார்வைக்கு அழகுமாய் இருக்கும்; ஆனால் முடிவிலோ மோசமாய் முடியும்.



லாய்ப் போங்கள் என்று சொன்னாள். அவர்களோ செவிடரைப்போல அவ்வெச்சரிப்பைக் கவனியாமல் பிரயாணிகள்மேல் கைபோடத் துவக்கினார்கள். உடனே கிறிஸ்தீனாளுக்குக் கோபம் வந்துவிட்டது; அவள் தன் காலால் அவர்களை உதைத்தாள். தயாளியும் தன்னால் ஆனமட்டும் அவர்களை விலகிப் போகச் செய்யவேண்டியதை எல்லாம் செய்தாள். அப்பால் கிறிஸ்தீனாள் அவர்களை நோக்கி: அப்பாலே நில்லுங்கள்; இனி நெருங்காதேயுங்கள்; எங்களிடத்தில் காசும் இல்லை பணமும் இல்லை, நாங்கள் பரதேசிகள், பிச்சைவாங்கிப் பயணம்பண்ணுகிறோம் என்றாள்.

அப்போது அந்த அலங்கோலரூபிகளில் ஒருவன் கிறிஸ்தீனாளைப் பார்த்து; எங்கள் பணம் காசு கிடைக்கும் என்று உங்களை மடக்கவில்லை, நாங்கள் கேட்க விரும்புகிற ஒருகாரியத்துக்கு நீங்கள் இணங்கினால் ஒன்றும் செய்யாமல் உங்களைச் சமாதானத்தோடு அனுப்பிவிடுவோம் என்றான்.

அவர்களுடைய நோக்கம் இன்னது என்று ஜாடையாய் அறிந்துகொண்ட கிறிஸ்தீனாள் பிரதியுத்தரமாக; நீங்கள் சொல்லப்போகிறதற்கு நாங்கள் காதுகொடுக்கிறதும் இல்லை, அதை சட்டைபண்ணுகிறதும் இல்லை, அதற்கு இணங்கவும் மாட்டோம். நாங்கள் துரிதபயணத்தில் இருப்பதால் தாமதிக்கவும் கூடாது; முந்தினால் ஜீவன் பிந்தினால் சாவு என்றே ஓடுகிறோம் என்று சொல்லித் தங்கள் வழியே நடக்க முயன்றார்கள். ஆனால் அந்த அலங்கோலரூபிகள் அவர்களைப் போக விடாதபடி முன் எட்டி மறித்தார்கள்.

அவர்கள் பின்னும் இந்த ஸ்திரீகளை நோக்கி; நாங்கள் உங்களை உயிர்ச்சேதம் செய்யப்போகிறோம் என்று நீங்கள் அஞ்ச வேண்டாம், எங்கள் நோக்கம் வேறே இருக்கிறது என்றார்கள்.

அதற்குக் கிறிஸ்தீனாள்; மெய்யாகவே நீங்கள் எங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் விழுங்கிப்போட வந்திருக்கிறீர்கள் என்று நான் நன்றாய் அறிவேன். நாங்கள் இனிமேல் அநுபவிக்கப்போகிற பாக்கியத்தை இழந்துபோகும்படியான கண்ணியில் விழுகிறதைவிட இந்த இடத்திலேயே எங்கள் ஜீவனை இழந்துபோவோம் என்று சொல்லிக்கொண்டு, கூஉ கொலை-கள்ளன் என்று ஓலமிட்டு ஸ்திரீகளின் பந்தோபஸ்துக்கென்று ஏற்படுத்தப்பட்டிருக்கிற சட்டங்களால் தங்களைப் பாதுகாத்துக்கொண்டார்கள்.[2] அவர்கள் என்னமாய்த் தங்களைப்

[2] உபா. 22. 23–27.

பாதுகாத்துக்கொண்டபோதிலும் அந்தப் பாதகர் அவர்களை அணுகி மேற்கொள்ளும்படியாகப் பிரயத்தனம் செய்தார்கள். ஆதலால் அவர்கள் மறுபடியும், அபயம் அபயம் ஐயா! என்று ஓலமிட்டார்கள்.

நான் முன் சொன்னபடி அவர்கள் இன்னும் திட்டிவாசலை விட்டு அதிக தூரம் போகாததால் அந்த அபயக்குரல் அரண்மனைக்கு எட்டினது. ஆதலால் அங்கு இருந்த சிலர் வெளியே வந்து அது கிறிஸ்தீனாளின் அபயக்குரல் என்று அறிந்து உதவிபுரியும்படி ஓடிவந்தார்கள். உதவிசெய்ய ஓடின ஆட்கள் கிட்டப் போகுமுன்னே பிரயாணிகளை அவர்கள் கைபோட்டு இருபட்சத்தாரும் இழுப்பும் பறிப்புமாய் இருந்தார்கள்; பாலியரும் பயந்து அலறினார்கள். துணைபுரியவந்தவர்கள் தூரத்திலேயே இந்த நிஷ்டூரங்களைக் கண்டு அந்தப் பாதகரை நோக்கி அடா துரோகிகாள்! துரோகிகாள்! நீங்கள் செய்கிற அக்கிரமம் என்ன? எங்கள் ஆண்டவரின் ஜனங்களை மீறிநடக்க ஏதுபண்ணுவானேன்? என்று சொல்லிக் கதறி அவர்களைப் பிடிக்கும்படி பார்த்தார்கள். அதற்குள்ளாக அந்தப் பழிபாவிகள் சுவர் ஏறி கடிதாய் அதிபதியின் தோட்டத்துக்குள் போய்விழுந்தார்கள்; உடனே அவர்களுக்கு உதவி செய்யும்படியாக அந்த நாயும் குரைத்துக் கும்மாளம்போட்டு வந்தது. துணைபுரியும்படி வந்தவர்களில் ஒருவர் அந்த ஸ்திரீகளை நோக்கி நடந்த விசேஷம் என்ன என்று விசாரித்தார். அதற்கு அவர்கள்; உங்கள் அதிபதிக்கு நாங்கள் மெத்தவும் நன்றி செலுத்துகிறோம்; எங்களைச் சற்று பயப்படுத்திப்போட்டார்களே அல்லாமல் வேறொன்றும் இல்லை. எங்களுக்குச் சகாயமாக நீங்கள் வந்ததற்காக உங்களுக்கும் வந்தனம் செய்கிறோம்; நீங்கள் வராவிட்டால் பகைஞர் எங்களை மேற்கொள்ளுவார்கள் என்றார்கள்.

அவர்களுக்கு உதவிபுரிய ஆள் வந்தது.

அவர் சில காரியங்களை அவர்களுடனே பேசினபின்பு சொல்லுகிறார்; நீங்கள் திட்டிவாசலுக்குள் சேர்க்கப்பட்ட போதே நான் உங்களைப்பற்றி அதிசயப்பட்டேன். நீங்கள் பலவீனமுள்ள பெண்டுகள் என்று உங்களுக்கே தெரிந்திருக்கிறதால் உங்களை வழிநடத்தும்படியாக ஒரு துணையாள் வேண்டும் என்று ஆண்டவரைக் கேட்கவேண்டியதாய் இருந்தது. அப்படி ஒரு ஆள் வைத்திருந்தீர்களானால் இவ்வளவு ஆபத்தும் அங்கலாய்ப்பும் உங்களுக்கு நேரிட்டிருக்கமாட்டாது. நீங்

துணையாள் இல்லாமற் புறப்பட்டது குற்றம்.



கள் மாத்திரம் கேட்டிருந்தால் ஆண்டவர் அவசியம் ஒரு துணையாளை உங்களுடன் அனுப்பியிருப்பார் என்றார்.

கிறி. அதற்கு கிறிஸ்தீனாள்; ஐயோ, நாங்கள் தற்கால வாழ்வினை அனுபவிக்கிற சந்தோஷத்தினால் இனி வரும் மோசங்களைப் பற்றிய எண்ணத்தை மறந்துபோனோம். மேலும் ராஜ அரண்மனை இவ்வளவு சமீபத்தில் இருக்கையில் இப்படிப்பட்ட சண்டாளர் தென்படுவார்கள் என்று யார்தான் எண்ணுவார்கள்? மெய்யாகவே, நமது ஆண்டவரிடத்தில் ஒரு ஆள் உதவிவேண்டும் என்று கேட்டிருந்தால் மெத்த நலமாய் இருந்திருக்கும், என்றாலும் அப்படிப்பட்ட ஒரு ஆள் எங்களுக்கு உதவியாய் இருக்கும் என்று ஆண்டவருக்குத் தெரிந்திருக்க அவரே அந்த ஆளை எங்களோடு அனுப்பிவிடாதது எனக்கு மெத்த அதிசயமாய்த் தோன்றுகிறது என்றாள்.

அதற்குத் துணைபுரியவந்தோர் சொல்லுகிறார்; கேட்கப்படாத சகாயத்தைச் செய்வது எப்போதும் அவசியம் அல்ல, அதை லேசாய் அவமதிக்கப்படுகிறதுண்டு. அதுவுமன்றி ஒன்றின் அவசியத்தை ஒருவன் உணர்ந்து அது வேண்டும் என்று கோருகையில் அது அருளப்பட்டால் அதைத் தக்கபடி மதித்து அதினால் உண்டாகும் லாபத்தையும் அனுபவிப்பான். என் ஆண்டவன் மாத்திரம் முந்தியே ஒரு ஆளை உங்களுக்குத் துணையாக அனுப்பி இருந்தாரானால், ஒரு ஆளை அனுப்பக் கேட்[illegible]ம் இல்லையே என்று உங்கள் குறையைப்பற்றி இப்போது மனங்கசந்து புலம்புவதுபோல் புலம்பமாட்டீர்கள். நீங்கள் தேறின போர்வீரர் ஆகும்படியாக நடப்பனவைகளெல்லாம் நன்மைக்கென்றே நடக்கும் என்று சொன்னார்.[1]

கேளாமல் செய்யும் சகாயம் அவமதிக்கப்படும்.

கிறி. அப்போது கிறிஸ்தீனாள்; ஐயா! நாங்கள் மறுபடியும் திரும்பி நமது ஆண்டவரண்டை போய் எங்கள் புத்தியீனத்தை

[1] ஆசைப்பட்டு கேட்டால் ஒழிய அவசரமான நன்மைகளை தேவன் எப்போதும் கொடுக்கிறதில்லை. அவர் உபகாரம் செய்வார் என்று நாம் நம்புவது சரிதான்; ஆகிலும், இன்ன சமயத்தில் நமக்கு உதவி அவசரமாய் இருக்கும் என்று நாம் முன்னதாக அறிந்திருந்தால் முன்னதாகத்தானே நாம் அதற்காக கேட்கவேண்டியது. நாம் எதிர்பார்த்திராதபடி, மோசங்கள் நேரிட்டால் அப்போதுங்கூட நாம் கேட்காவிட்டாலும் அவர் நமக்கு ஒத்தாசையனுப்புவார். என்றபோதிலும் நாம் எப்போதும் விழிப்பாய் இருக்க நமக்கு வேண்டிய போதெல்லாம் ஒத்தாசை கேட்கவேண்டும்.

அறிக்கையிட்டு ஒரு துணையாளுக்காக மன்றாடுவது தகுதி அல்லவா? என்றாள்.

அதற்கு அவர்; அப்படி அவசரம் இல்லை, உங்கள் மதியீனத்தின் பாவஅறிக்கையை நான் அவர் சமுகத்தில் ஒப்புவிக்கிறேன்; நீங்கள் திரும்பிப் போகவேண்டாம், நீங்கள் தங்கும் ஸ்தானங்கள் எங்கும் ஒரு குறைச்சலும் உங்களுக்கு உண்டாகமாட்டாது; எங்கள் ஆண்டவன் மோட்ச பிரயாணிகளுக்கு என்று ஸ்தாபித்திருக்கிற பல சத்திரங்கள்தோறும் உங்களுக்கு வேண்டிய சவரட்சணைகள் எல்லாம் ஆயத்தம்செய்து வைத்திருக்கிறார்; ஆனால் நான் முன் சொல்லியவண்ணம் சகாயம் வேண்டியவர்கள் சகாயத்துக்காகக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்பதே அவர் விருப்பம்.[a] கேட்டுவாங்க அவசரம் இல்லாத பொருள் மதிப்பற்ற பொருளாகத்தானே இருக்கும் என்றார். இவ்வளவு பேசினபின்பு அவர் திரும்பத் தமது வீட்டுக்குத் திரும்பினார்; பிரயாணிகளோ தங்கள் வழியே போனார்கள்.

**தயாளி.** அப்போது தயாளி; அம்மா! என்ன ஆபத்து வந்தது பார்த்தாயா? துன்பம் எல்லாம் ஓய்ந்தது, துக்கம் எல்லாம் தொலைந்தது என்றல்லோ நான் நினைத்திருந்தேன் என்றாள்.

**கிறி.** அதற்குக் கிறிஸ்தினாள்; ஏதும் அறியாதிருந்த நீ அப்படி நினைத்தது குற்றம் இல்லை; ஆனால் என் காரியமோ அப்படி அல்ல, நான் என் வீட்டைவிட்டுப் புறப்படுமுன்னமே இப்படிப்பட்ட காரியம் சம்பவிக்கும் என்று அறிந்திருந்தேன். அப்படி இருந்தும் நமக்கு வேண்டிய சகாயத்தைத் தேடிக்கொள்ளாமல் புறப்பட்டது என்பேரில் பெரிய குற்றந்தான் என்றாள்.

**தயாளி.** அப்போது தயாளி; அம்மா இப்படி நடக்கும் என்று முன்னமே உனக்கு எப்படித் தெரியும்? அந்த இரகசியத்தை வெளியிடு என்றாள்.

பிரயாணிகளின் சம்பாஷணை.

**கிறி.** அந்த இரகசியம் சொல்லுகிறேன் கேள் மாதே! நான் வீட்டை விட்டுக் காலெடுத்துவைக்கிறதற்கு முந்தின இராவில் படுத்திருந்தபோது இதைப்பற்றி ஒரு சொப்பனம் கண்டேன். எப்படி என்றால், இப்போது நாம் சந்தித்தோமே; அப்படி உலகமெங்கும் போய்த் தேடினாலும் கிடைக்கமாட்டாத அவலட்சணரூபிகள் இருவர் என் கால்மாட்டில்

[a] எசே. 36. 37.



வந்து நின்றதாகவும் என் இரட்சண்ணிய எண்ணங்களை எப்படித் தாறுமாறாக்கிவிடலாம் என்று பேசிக்கொண்டிருக்கிறதாகவும் நான் கண்டேன். அவர்கள் பேசின வார்த்தைகளையே சொல்லுகிறேன் கேள்! அவர்கள் சொல்லுகிறார்கள், நாம் இந்த மனுஷியை என்ன செய்யலாம்? இவளுக்குத் தூக்கம் என்றும் இல்லை நடை என்றும் இல்லை, இரவும் பகலும் பாவமன்னிப்பு பாவமன்னிப்பு என்றே புலம்பிக்கொண்டிருக்கிறாள். இப்படியே செய்துகொண்டு வரும்படி நாம் அவளை விட்டுவிட்டால் இவள் புருஷனை நாம் இழந்துபோனது போல இவளையும் இழந்துபோகவேண்டியதிருக்குமே என்றார்கள். இந்தச் செய்தியை நான் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு சகாயம் கிடைக்கக்கூடிய இடத்தில் அதைப் பெற்றுக்கொண்டு வழிப்பயணம்செய்யவேண்டியதாய் இருந்தது என்று சொன்னாள்.

**தயாளி.** அதற்கு தயாளி; இந்த அஜாக்கிரதையானது நாம் நமது குறைவுகளை உணருகிறதற்கு ஏதுவான முகாந்திரமாய்த் திரும்பிவிட்டது. நமது ஆண்டவரும் தமது கிருபையின் ஐசுவரியத்தை நம்மேல் வெளிப்படுத்த சமயம் பார்த்தார்; என்னெனில் நாம் அறிந்துகொண்டபிரகாரம் கேளாதிருந்தும் கிருபைசெய்யப் பின்தொடர்ந்து தமது காருண்ணியத்தால் நம்மிலும் பலவான்கள் கையிலிருந்து நம்மைத் தற்காத்து மீட்டார் என்றாள்.

## பிரயாணிகள் வியாக்கியானி வீடு சேர்தல்.

இந்தப்படி அவர்கள் பேசிக்கொண்டு போகவே, வழிப்பாதையில் பிரயாணிகளுக்கு என்று கட்டப்பட்ட ஒரு வீட்டில் சேர்ந்தார்கள். இந்த வீட்டைப் பற்றி முதலாம் பங்கில் விபரமாய்ச் சொல்லப்பட்டவைகள் உன் ஞாபகத்தில் இருக்கலாம். (வியாக்கியானி வீட்டைப்பற்றித்தான் இப்பொழுது பேசுகிறேன்.) அவர்கள் அந்த வீட்டின் வாசற்படியண்டை வந்த உடனே உள்ளே இருந்தவர்கள் உரத்துப் பேசிக்கொண்டிருந்த சத்தம் கேட்கப்பட்டது. அவர்கள் சற்று நின்று அதென்ன சம்பாஷணை என்று கவனிக்கையில் கிறிஸ்தினாளை என்ற பேர் வந்தாற்போல் இருந்தது. என்னெனில் கிறிஸ்தினாளும் அவள் பிள்ளைகளும் பயணப்பட்ட செய்தி முன்னமே அந்த இடங்களில் பிரபலப்பட்டிருந்தது என்று நீ அறிந்துகொள்ளவேண்டியது. முன் மோட்ச பிரயாணத்தை முழுப்பகையாய்ப்

பனைந்த கிறிஸ்தியானுடைய மனைவியாகிய கிறிஸ்திருளே இப்பொழுது பிரயாணி ஆகிவிட்டாள் என்ற செய்தி அத்திசையில் உள்ளவர்களுக்கு அதிகச் சந்தோஷமாய் இருந்தது.

பிரயாணிகள் வியாக்கியானி வீடு சேர்தல்.

கிறிஸ்திருள் வாசலண்டை வந்து நிற்பதை அறியாத அவர்கள் உள்ளே இருந்து அவளைப் புகழ்ந்துபேசுவதை எல்லாம் கேட்டுக்கொண்டாள். கடைசியாக கிறிஸ்திருள் கிட்டிவாசலைத் தட்டினதுபோல வியாக்கியானி வீட்டின் கதவையும் தட்டினாள்; அவள் தட்டினவுடனே ஒரு கன்னிமாப்பெண் ஓடிவந்து கதவைத் திறந்து இரண்டு ஸ்திரீகள் வாசற்படியண்டை வந்து நிற்கக்கண்டாள்.

கன்னி. கன்னிமாப்பெண் அவர்களை நோக்கி; இவ்விடத்தில் உள்ள யாரைக் கண்டுபேச விரும்புகிறீர்கள்? என்று கேட்டாள்.

கிறி. அதற்கு கிறிஸ்திருள்; எங்களைப்போலொத்த பிரயாணிகளுடைய ஆதரவுக்கென்று இந்த வீடு கட்டப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டோம். ஆதலால் பிரயாணிகளாகிய எங்களுக்கு இவ்விடத்தில் கிடைக்கவேண்டிய பங்கை வாங்கிக்கொள்ளும்படியாக வந்தோம்; பெண்ணே, நீ அறிந்திருக்கிறபடி பொழுதும் போயிற்று, இருட்டில் பயணம் செய்யவும் எங்களால் ஆகாது என்றாள்.

கன்னி. என் ஆண்டவருக்குப் போய் நான் சொல்லும்படி உன் பேர் இன்னதென்று சொல்லமாட்டாயா? என்று அந்தக் கன்னிமாப்பெண் கேட்டாள்.

கிறி. என் பேர் கிறிஸ்திருள்; நான் சில வருஷங்களுக்கு முன் இவ்வழியாய் மோட்ச பிரயாணம் போன கிறிஸ்தியானுடைய மனைவி; இவர்கள்தான் அவருடைய நாலு பிள்ளைகள்; இந்த மாது என்னுடன் மோட்ச பயணம் செய்கிற ஒரு தோழி என்று கிறிஸ்திருள் சொன்னாள்.

உடனே மாசில்லாள் என்று பேர் வழங்கப்பட்ட அந்தக் கன்னிமாப்பெண் உள்ளே ஓடி வாசலண்டைவந்து நிற்கிறது யார் என்று தெரியுமா? அங்கே கிறிஸ்திருளும் அவள் மக்களும் அவள் தோழியும் உள்ளே வரவேண்டும் என்று காத்து நிற்கிறார்கள் என்றாள். அது கேட்டவுடனே அவர்கள் எல்லாரும் ஆனந்தக் கூத்தாடிக்கொண்டு அச்செய்தியை

மாசில்லாள்.



தங்கள் ஆண்டவனிடத்தில் போய் அறிவித்தார்கள். அவர் உடனே வாசலண்டை வந்து, அவளைப் பார்த்து, அந்த நல்ல கிறிஸ்தியான் மோட்ச பிரயாணம் செய்யத் துவக்கினபோது பின் விட்டுப்போன அவன் மனைவியாகிய கிறிஸ்திருள் நீதானோ? என்று கேட்டார்.

வியாக்கியானி.

கிறி. அதற்கு அவள், நான்தான் ஐயா! என் கணவனுடைய ஆத்துமவியாகுலங்களை அசட்டைசெய்தவளும் அவர் ஒண்டியாய்ப் புறப்படும்படி விட்டுவிட்டவளும் நான்தான் ஐயா; இவர்கள்தான் அவருடைய நாலு பிள்ளைகள்; அவர் போன வழியைவிட உத்தமமான வழி வேறொன்று இல்லை என்று கண்டதால் நானும் அந்த வழிநடக்கத் தீர்மானித்துப் புறப்பட்டேன் ஐயா என்றாள்.

வியா. அப்படியானால் ஒரு மனுஷன் தன் மக்களில் ஒருவனைப் பார்த்து, "[a]மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய் என்றான், அதற்கு அவன் மாட்டேன் என்றான், ஆகிலும் அவன் பின்பு மனஸ்தாபப்பட்டுப்போனான்" என்று எழுதப்பட்டிருக்கிற வாசகம் உன்னில் நிறைவேறுகிறதுபோல் இருக்கிறதே என்றார்.

கிறி. அதற்கு அவள் அப்படியே நிறைவேறுவதாக—ஆமென். என் தேவன் அந்த வாசகத்தை என்னில் மெய்ப்பித்து கடைசியிலே நான் மாசற்றவளும் குற்றமற்றவளுமாய் அவருடைய சந்தோஷத்திற்கு உட்படும்படி அருள்புரிவாராக என்றாள்.

வியா. நீ இப்படி வெளியே நிற்பானேன்? ஆபிரகாமின் மகளே உள்ளே வா; உன்னைப்பற்றி இப்போதான் பேசிக்கொண்டிருந்தோம்; நீ பிரயாணம் செய்ய ஆரம்பித்த செய்தியைப் பற்றி நாங்கள் முன்னமே கேள்விப்பட்டோம்; வாருங்கள், மக்களே வாருங்கள், வா மாதே, வா உள்ளே என்று எல்லாரையும் வீட்டிக்குள் வரவழைத்துக்கொண்டார்.

அவர்கள் உள்ளே போனபின்பு சற்றுநேரம் உட்கார்ந்து இளைப்பாறினார்கள்; இதற்குள்ளாகப் பிரயாணிகளுக்கு சவரட்சணை செய்யும்படியாக நியமிக்கப்பட்டிருக்கிற ஆட்களும் வந்து கூடினார்கள். பிரயாணிகளைப் பார்த்து ஒருவர் சிரிக்க, அப்புறம் அடுத்தவர் சிரிக்க, கடைசியாக எல்லாரும் சிரித்து, கிறிஸ்திருளும் பிரயாணி ஆகிவிட்டாளே என்று ஆயாசித்

[a] மத். 21. 28, 29.

தார்கள். அவர்கள் பாலியரின் தலையைத் தடவி அன்புடன் கன்னத்தையும் தட்டி ஆனந்தம்கொண்டார்கள். தயாளியை யும் அவர்கள் கனிவோடு அனைத்து விருந்தாளிகளுக்குச் செய்கிற மரியாதை எல்லாம் செய்தார்கள்.

அவர்கள் ராசாப்பாட்டிக்கு முன் கண்ட காட்சிகள்.

இராச்சாப்பாடு இன்னும் தயாராகாதிருந்தபடியால் வியாக் கியானி அவர்களைத் தமது ஒப்பனை மடங்களுக்கு அழைத்துக்கொண்டு போய், சிலகாலத்துக்குமுன் கிறிஸ்தியா னுக்குக் காட்டின காட்சிகளை எல்லாம் அவர்களுக்குக் காட் டினார். இங்கே அவர்கள் இரும்புக்கூட்டுக்குள் இருந்த கைதியையும் பயங்கர சொப்பனங்கண்டு பதறிவிழித்தவனையும் அநேகரைக் கொன்று அரமனைக்குள்சென்ற அதிவீரபராக்கிரம னையும் பராக்கிரமரில் சிரேஷ்டரானவரின் படத்தையும் இன் னும் கிறிஸ்தியானுக்குப் பிரயோஜனமாகக் காண்பிக்கப்பட்ட மற்றெல்லா உபமானச் சித்திரங்களையும் காட்டினார்.

அவை அனைத்தையும் காட்டி அவைகளின் பொருளைக் கிறி ஸ்தீனளும் மற்றவர்களும் கிரகித்து அறிந்துகொண்டபிற்பாடு வியாக்கியானி அவர்களை மறுபடியும் வேறொரு அறைக்கு அழைத்துக்கொண்டுபோனார். அங்கே ஒரு மனுஷன் மண் ணைத் தவிர மற்றெங்கும் நோக்காமல் துடைப்பமும் கையுமாய் நின்றான். அவனுக்கு மேலே ஒருவர் வாடாமுடி ஒன்றை

குப்பைவாரியின் காட்சி.

ஏந்திக்கொண்டு, அப்பா, துடைப்பத்தை எறிந்துபோட்டு இந்தக் கிரீடத்தைத் தரித் துக்கொள் என்று சொல்லிக் கேட்டினார். ஆனால் அவன் அந்தச் சத்தத்தை மதிக்கவும் இல்லை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை, பழையபடி வைக்கோலையும் குப்பையை யும் செத்தைகளையும் வாரிக்கொண்டே இருந்தான்.

அதைக் கண்ட கிறிஸ்தீனள்; இதின் தாற்பரியம் கொஞ்சம் எனக்குத் தெரிகிறாப்போல் இருக்கிறது. ஐயா, இது மாயஉல கத்தின் வாழ்வில் மனதை வைத்திருக்கிற ஒருவனைக் குறிக்கிற தல்லவா என்றாள்.

வியா. அதற்கு வியாக்கியானி; கிறிஸ்தீனளே நீ சரியாய்ச் சொன்னாய்; அந்தத் துடைப்பம் அவனுடைய மாம்சசிந்தை யைக் காட்டுகிறது. உன்னதத்தில் இருந்து அருளப்படுவதாய் விளம்பும் வாடாமுடியின் பாக்கியத்தையும் வாழ்வையும் அவன் மதியாமல் வைக்கோலையும் குப்பைகளையும் செத்தைகளையுமே நோக்குகிறானே; அது மோட்சம் உண்டென்பது கட்டுக்



கதை என்றும் இவ்வுலகத்தில் உள்ளவைகளே அழியாப் பொ ருட்கள் என்றும் சிலருடைய எண்ணத்தில் இருப்பதைக் காட் டுகிறது. அவன் தரையையே தவிர வேறெங்கும் பார்க்கப் பிரிய மற்றிருப்பதைப் பார்த்தாயே, அது இவ்வுலகப்பொருட்கள் மனுஷனுடைய இருதயத்தைப் பலமாய்க் கவர்ந்துகொள்ளுகிற பொழுது அவைகள் தேவனை விட்டு அவன் இருதயத்தை வெகுதூரம் விலக்கிப்போடுகிறது என்பதைக் குறிப்பிக்கிறது என்று சொன்னார்.



கிறி. உடனே கிறிஸ்தீனள்; இந்தத் துடைப்பவேலையில் இருந்து என்னை விடுதலையாக்கி அருளும் என்று சொன்னாள்.

வியா. அதற்கு வியாக்கியானி; இந்த விண்ணப்பம் துருப் பிடித்துப்போகும்படியாகத் தூரவைக்கப்பட்டிருக்கிறது. அநே கம்பேரிலும் ஒருவன் முதலாய், எனக்கு ஐசுவரியத்தைத் தராதே

நீதி. 30. 8.

யும் என்று விண்ணப்பத்தைச் செய்யக் காண்பது அபூர்வமாய் இருக்கிறது; வைக்கோலையும் குப்பையையும் செத்தைகளையும் தான் இப்பொழுதுள்ள அநேகர் நாடித் திரிகிறார்கள் என்றார்.

இந்த வார்த்தைகளைக் கிறிஸ்தீனாளும் தயாளியும் கேட்டு அழுதுகொண்டு, அது மெய்தான் ஐயா! காரியம் அப்படித்தான் இருக்கிறது என்று புலம்பினார்கள்.

சிலந்திப்பூச்சியின் காட்சி.

இந்தக் காட்சி ஆனபின்பு வியாக்கியானி அவர்களை வேறொரு அறைக்குக் கூட்டிப் போனார். அவர் வீட்டின் அறைவீடுகளில் அதுதான் சிறப்பும் சிங்காரமும் விசாலமுமாய் இருந்தது. இந்த அறையில் உங்கள் போதனைக்கு ஏற்ற காட்சி ஏதாவது உண்டோ பாருங்கள் என்று வியாக்கியானி சொன்னார். அவர்கள் அந்த அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தும் ஒரு சிலந்திப்பூச்சியைத் தவிர வேறொன்றையும் காணவில்லை. அந்தப் பூச்சியையும் அவர்கள் கவனிக்கவும் இல்லை.[1]

தயாளி. சற்றுநேரத்துக்குப் பின்பு தயாளி; இங்கே ஒன்றையும் காணேனே ஐயா என்றாள். ஆனால் கிறிஸ்தீனாள் யாதொரு [illegible] சொல்லாமல் சும்மா இருந்தாள்.

வியா. மறுபடியும் பாருங்கள், நன்றாய்ப் பாருங்கள் என்று வியாக்கியானி சொன்னார். அப்புறம் அவள் திரும்பவும் சுற்றுமுற்றும் பார்த்து, இங்கே அவலட்சணமான ஒரு சிலந்திப் பூச்சியைத் தவிர வேறொன்றையும் காணேன்; அது தன் கால்களால் தொத்திக்கொண்டு சுவர் ஏறப் பார்க்கிறது என்று தயாளி சொன்னாள். அதற்கு வியாக்கியானி இந்த விஸ்தாரமான அறையில் ஒரே ஒரு சிலந்திப்பூச்சிதானோ இருக்கிறது! என்று கேட்டார். உடனே கிறிஸ்தீனாளின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று; ஏனெனில் அவள் தீவிரபோதனைக்காரியாய் இருந்தாள். அவள் உடனே என் ஆண்டவனே! இங்கே ஒன்றல்ல அநேக சிலந்திப் பூச்சிகள் இருக்கின்றன; அவைகளின் விஷம் இதினுடைய விஷத்திலும் பதின்மடங்கு மோசம் உள்ளது என்று சொன்னாள். அப்பொழுது வியாக்கியானி அவளை அன்போடு கண்ணோக்கி நீ உள்ளபடி உரைத்தாய் என்றார். இதின் அர்த்தத்தை எல்லாரும் அறிந்துகொண்டபடியால் தயாளி வெட்கமடை

1 சாதாரணமானவைகளை எல்லாம் அசட்டையாய் விட்டுவிட்டு விசேஷமானவைகளைமாத்திரம் கவனிப்பது நமது வழக்கம். நம்மைச் சூழ்ந்திருக்கும் அற்பமான காரியங்களிலிருந்து மிகுந்த ஞானத்தைக் கற்றுக்கொள்ளலாம்.



ந்தாள்; அந்தப் பிள்ளைகளும் தங்கள் முகத்தை மூடிக்கொண்டார்கள்.

விசுவாசத்தை உணர்த்தும் பூச்சி.

பின்னும் வியாக்கியானி சொல்லுகிறார்; நீங்கள் பார்க்கிற இந்தச் சிலந்திப் பூச்சி, "தன் கைகளினால் வலையைப் பின்னி அரசர் அரமனைகளில் வசிக்கிறது."[2] என்றும் எழுதப்பட்டிருப்பானேன்? நீங்கள் எவ்வளவு பாவவிஷம் நிறைந்தவர்களாய் இருந்தபோதிலும் விசுவாசகரத்தால் பற்றிப்பிடித்து உன்னத லோகத்தில் இருக்கும் பரம ராஜாவின் அரமனையைச் சேர்ந்து என்றென்றைக்கும் அங்கே வாழலாம் என்பதை உங்களுக்கு உணர்த்தும்படியாகவே எழுதப்பட்டிருக்கிறது என்றார்.

கிறி. அப்பொழுது கிறிஸ்தீனாள்; ஆண்டவரே, நானும் இதைப் பற்றிக் கொஞ்சம் கருத்துக் கொண்டேன், ஆனால் அதைப் பூரணமாய்க் கிரகித்துக்கொள்ள சக்தி இருக்கவில்லை. நாம் எவ்வளவு அலங்கார மாடங்களில் வசித்தபோதிலும் அவலட்சணமுள்ள இந்தச் சிலந்திப்பூச்சியைப்போலவே தாழ்வானவர்களாய் இருக்கிறோம் என்று நான் நினைத்தேன். ஆனால் இந்த விஷப்பூச்சியைக்கொண்டு விசுவாசத்தை முயற்சிப்பதைப் பற்றிய சிறந்த கருத்து என் மனதில் எழும்பவில்லை. அதின் விஷம் உள்ளே இருந்தாலும் அது அரசர் அரண்மனையில் வசிக்கும்படியாகத் தன் கைகளால் பிரயாசப்படுகிறதை நான் பார்க்கிறேன். தேவன் ஒன்றையும் வீணாய் உண்டாக்கவில்லை என்றாள்.

அப்பொழுது அவர்கள் எல்லாரும் மனச்சந்தோஷமாய் இருந்தார்கள், ஆனால் அவர்கள் கண்களிலோ கண்ணீர் பொங்கிற்று; அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு நின்று, பின்பு வியாக்கியானியைப் பணிந்து வணங்கினார்கள்.

கோழியும் அதின் குஞ்சுகளும்.

அப்புறம் வியாக்கியானி; கோழியும் குஞ்சுகளும் இருந்த ஒரு அறையில் அவர்களை அழைத்துக்கொண்டு போய் இந்தக் காட்சியைப் பாருங்கள் என்றார். அக்குஞ்சுகளில் ஒன்று பக்கத்தில் இருந்த சட்டியில் போய்த் தண்ணீர் குடித்தது. அது தண்ணீர் குடித்த ஒவ்வொரு தடவையும் வானத்துக்கு நேராகத் தன் தலையையும் கண்ணையும் ஏறெடுத்தது; அப்பொழுது வியாக்கியானி, இந்த அற்பக் குஞ்சு செய்கிறதைக் கவனித்துப் பாருங்கள்; நீங்கள் பெற்றுக்கொள்ளுகிற ஒவ்வொரு கிருபை

2 நீதி. 30. 28.

களும் உன்னதத்தில் இருந்து வருகிறது என்று உணர்ந்துகொண்டு உங்கள் இருதயத்தை உயர்த்தி ஸ்தோத்திரத்தோடு அவைகளை அநுபவியுங்கள் என்றார். பின்னும் அவர் அவர்களை நோக்கி, இன்னும் பாருங்கள், கவனியுங்கள் என்றார். அவர்கள் ஒவ்வொருவரும் கூர்மையாய்க் கவனித்தபோது அந்தத் தாய்க் கோழி நாலுவிதமான குரலோடு தன் குஞ்சுகளண்டை போகிறதும் வருகிறதுமாய் இருக்கக் கண்டார்கள். 1—வது. அதற்கு ஒரு பொதுக்குரல் இருந்தது, பகல் முழுவதும் அந்தச் சத்தத்தைக் கேட்கலாம். 2—வது. ஒரு விசேஷகுரல் இருந்தது, அது ஒரு வேளாவேளைமாத்திரம் கேட்கப்பட்டது. 3—வது. அணைக்கும் குரல் ஒன்றிருந்தது.[a] 4—வது. அலறுங்குரல் ஒன்றிருந்தது.

வியா. அவர்களை நோக்கி; இந்தத் தாய்க் கோழியை உங்கள்

கோழியின் நாலுவித குரலின் பேதனை.

அரசருக்கும் இதின் குஞ்சுகளை அவருடைய கீழ்ப்படிதலுள்ள பிள்ளைகளுக்கும் ஒப்பிட்டுக் கவனியுங்கள். இந்த பெட்டைக் கோழி தன் குஞ்சுகளோடு நடந்துகொள்ளுகிறபிரகாரம் அவரும் தமது பிள்ளைகளுடன் நடமாடுகிறார் என்று சொல்லலாம்; அவரிடத்தில் பொதுவான ஒரு குரல் உண்டு, அதின் மூலமாய் அவர் ஒன்றையும் அருளுகிறதில்லை. அவருக்கு விசேஷ அழைப்பின் குரல் ஒன்று உண்டு; அதின் மூலமாய் அவர் எப்போதும் ஏதாவது ஒரு சகாயத்தைச் செய்து வருகிறார். தமது செட்டைகளின் கீழ் இருப்பவர்களை அணைக்கும் குரலும் அவருக்கு உண்டு. சத்துரு வருகிறதைத் தமது தாசருக்கு உணர்த்தி எச்சரிக்கும்படியான அலறுங்குரலும் அவருக்கு உண்டு. நீங்கள் பெண்பிள்ளைகள் ஆனபடியால் இலேசாய் விளங்கத்தக்க காட்சிகளுள்ள இந்த அறைக்கு உங்களைக் கூட்டிவந்து காட்டினேன் என்றார்.[1]

கிறி. ஐயா முனிவரே! இன்னும் சில காட்சிகளைக் காட்டும்படி மன்றாடுகிறோம் என்று கிறிஸ்தினாள் கேட்டாள்; அப்படியே அவர்,

ஆட்டை அறுப்போன் காட்சி.

ஆடுகளை அறுக்கிற ஒரு ஜாகைக்குக் கூட்டிப்போனார். அங்கே ஒருவன் ஒரு ஆட்டை அறுத்தான்;

---

1 கிறிஸ்தினாள் தன் புருஷனிடத்தில் வித்தியாசமான காட்சிகளைக் கண்டாள். இதினால் தேவன் பற்பல ஜனங்களையும் பலபல வழிகளில் நடத்துகிறார் என்று காணப்படுகிறது. ஒவ்வொருவருடைய அநுபோகமும் அவரவர் குணத்துக்குத் தகுந்தபடி பேதப்படும்.

a மத். 23. 37.



அவன் அறுக்கையில் அந்த ஆடு ஒன்றும் செய்யாமல் வெகு பொறுமையாய் இருந்தது. அப்பொழுது வியாக்கியானி இந்த ஆட்டை நீங்கள் பார்க்கிறீர்களே! பாடுகளையும் பொல்லாப்புகளையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் சகித்துக்கொள்ளவேண்டும் என்று இதினால் கற்றுக்கொள்ளுங்கள். இதோ! அது எவ்வளவு அமைதலாய்த் தன் கழுத்தைக் கத்திக்கு நீட்டி, தன் தோலைத் தலைகீழாய் உரித்துக்கொள்ளச் சம்மதித்து நிற்கிறது. உங்கள் அரசரும் உங்களைத் தமது மந்தையின் ஆடுகள்[1] என்று அழைத்திருக்கிறார் அல்லவா என்றார்.

அதின்பின் அவர் அவர்களைத் தமது நந்தவனத்துக்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கே விதம்

பூந்தோட்டக் காட்சி.

விதமான புஷ்பஜாதிகள் எல்லாம், தங்கள் அழகிய மொக்குகளை விரித்து மலர்ந்திருந்தன. அப்போது வியாக்கியானி: இந்தப் புஷ்பங்களை எல்லாம் கண்டீர்களா? என்றார். ஆம், ஆம் காண்கிறோம் ஐயா என்று கிறிஸ்தினாள் சொன்னாள். அப்புறம் அவர்: இதோ அவைகள் அளவிலும், அழகிலும், நிறத்திலும், மணத்திலும், அதின் பிரயோஜனத்திலும் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்டிருக்கின்றன; சிலவை மற்றவையிலும் சிறப்பாய்த் தோன்றுகின்றன. அவை ஒன்றோடு ஒன்று தகராறுபண்ணாமல் தங்கள் தோட்டக்காரன் எந்த இடத்தில் நட்டானோ அந்த இடத்தை விட்டு நிலைபெயராமல் நிற்கின்றன[2] என்றார்.

அப்பால் அவர் கோதுமை முதலிய தவசதானியங்களை விதைத்திருந்த தமது வயல் நிலங்களுக்கு

பயிர்நிலக் காட்சி.

அவர்களை அழைத்துக்கொண்டு போனார். அந்தப் பயிரின் கதிர்கள் அறுக்கப்பட்டு தாளடிகள்மாத்திரம் மீதியாக விடப்பட்டிருந்தன. அப்போது அவர்: இந்த நிலத்துக்கு எருவிட்டோம், விதைத்தோம்; ஆனால் அதின் விளைச்சலை என்ன செய்யலாம் என்று கொஞ்

---

1 கிறிஸ்துவானவர் அநீதியையும் மரணத்தையும் யாதொரு முறுமுறுப்பில்லாமல் சகித்ததுபோலவே அவருடைய தாசர்களும் நடந்துகொள்ளவேண்டும்.

2 நமது நற்குணங்களைக் குறித்து நாமே பெருமைபாராட்டவோ, மற்றவர்களைவிட நாம் யோக்கியர் என்று நாமே புகழ்ந்துகொள்ளவோ தகாது. நாம் வைக்கப்பட்டிருக்கிற நிலைமையிலேயே நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்து, நமது சக்திக்குத் தக்கபடி வாசனை அளிக்கவேண்டும்.

லுங்கள் என்று கேட்டார். அதற்குக் கிறிஸ்தீனாள்: சிலவற்றை சுட்டெரித்து மற்றதை எருவுக்குப் போடுகிறது உத்தமம் என்றாள். அப்போது வியாக்கியானி: நீங்கள் பலனைத்தவிர மற்றொன்றையும் விரும்பமாட்டீர்கள்; பலன் இல்லாததினால் அல்லவா சிலவற்றைச் சுட்டெரித்து மற்றதை எருவுக்குப் போடும்படி சொல்லுகிறீர்கள்; இந்த உபமானத்தைக்கொண்டு நீங்களே உங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்புச் செய்துகொள்ளாதபடி எச்சரிக்கையாய் இருங்கள்[1] என்றார்.

சிட்டு விட்டிலைக்கொண்டுபோன காட்சி.

அவர்கள் வயல்வெளியிலிருந்து வருகிற வழியில் ஒரு சிட்டுக்குருவியானது விட்டில் ஒன்றைக் கொத்திக்கொண்டு பறந்துபோகிறதை வியாக்கியானி கண்டு அவர்களைக் கூப்பிட்டு, அதோ பறந்துபோகிற அந்தக் குருவியைப் பாருங்கள் என்றார். அப்படியே பார்த்தார்கள்; அதைப் பார்க்கவே தயாளி அதிசயப்பட்டாள். கிறிஸ்தீனாளோ, ஐயோ கெட்ட நெஞ்சம் கொண்டதாக் கிறதுமுள்ள இந்தச் சிட்டு மற்றச் சிறு குருவிகளிலும் மென்மையானதாகவே; மனுஷசஞ்சாரம் இதின் ஜாதிக்கு அதிகப் பிரியம் அல்லவோ? இந்த ஜாதிப் பட்சிகள் ரொட்டித்துண்டுகளையும் தானியமணிகளையும் தின்று காலங்கழிக்கிறதென்றல்லோ நான் எண்ணியிருந்தேன். இது இவ்வளவு கொலைமுள்ள ஜாதி என்று முன் அறியாதிருந்தேன்; இன்றுமுதல் இதைப்பற்றி எனக்கு இருந்த மதிப்பை எல்லாம் மறந்துபோவேன் என்றாள்.

அதற்கு வியாக்கியானி சொல்லுகிறார்: இந்தச் சிட்டு பேர்க் கிறிஸ்தவர்களை வெட்கப்படுத்தும்படியான தகுந்த அடையாளமாய் இருக்கிறது. வெளித்தோற்றத்தின்படி அவர்கள் இந்தச் சிட்டைப்போல சொல்லழகும், முன்னழகும், நடையழகும் முன்னவர்களைப்போல் இருக்கிறார்கள். மெய்க்கிறிஸ்தவர்களைப் பற்றி அவர்களுக்கு மட்டற்ற மதிப்பு உண்டு. பக்தர் புசிக்கும் போஜனத்தைத்தவிர வேறே போஜனம் அவர்களுக்குப் பிடியாததுபோல் மற்றவர்கள் அறியட்டும் என்று அவர்கள் பாராட்டுகிறார்கள். மற்றவர்களைவிட அவர்களோடு சகவாசம்

1 மெய்க்கிறிஸ்தவர்கள் தானியத்திற்கும் பதருக்கும் ஒப்பான உபதேசங்களையும் அறிவையும் மாத்திரம் காண்பித்தால் போதாது. தானிய மணிகளுக்கு ஒப்பாகிய பரிசுத்த நடக்கையும் பிரயோஜனமும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும். தானியம் விளையாத தாளடி பிரயோஜனம் அற்றது. கனி இல்லாத இலைகளும் கொடிகளும் அப்படியே.



செய்யவும் காலங்கழிக்கவும் விருப்பம் உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். தாங்கள் உத்தமர் என்று காண்பிக்கவேண்டும் என்றே அப்படிப்பட்டவர்கள் விசுவாசிகளின் வீட்டுக்கு அடிக்கடி போய்வந்து தேவநியமங்களைக் கிரமமாய் அநுசரித்து வருகிறார்கள். அவர்கள் தனித்திருந்தாலோ அப்போது தெரியும் அவர்கள் வண்டேலம்! அவர்களும் இந்தச் சிட்டுக்குருவியைப்போலப் புழுக்களையும் விட்டிலையும் பிடித்து விழுங்கிப்போடுவார்கள்; அவர்கள் தங்கள் உணவை மாற்றிக்கொண்டு ஆகாமியத்தைப் பால்போலவும் பாவத்தை ஜலம்போலவும் பானம்பண்ணுவார்கள்[1] என்றார்.

அவர்கள் திரும்பவும் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது இராச்சாப்பாடு இன்னும் ஆயத்தமாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டபடியால் கிறிஸ்தீனாள் வியாக்கியானியை நோக்கி, ஐயா வியாக்கியானியே! வேறே பிரயோஜனமுள்ள காட்சிகள் உண்டானால் காட்டும், அல்லது போதனை உண்டானால் சொல்லும் என்று மன்றாடினாள்.

வியாக்கியானியின் ஞான சுலோகங்கள்.

அதன் பின்பு வியாக்கியானி பின்வரும் ஞானபோதனைகளைச் சொல்லுகிறார்; பன்றியானது எவ்வளவுக்குக் கொழுப்பாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அது சேற்றை நாடுகிறது; எருது எவ்வளவுக்குக் கொழுத்திருக்கிறதோ அவ்வளவுக்கு அது கும்மாளம் போட்டுக்கொண்டு கொலைக்களம் போகிறது. சிற்றின்பப் பிரியன் எவ்வளவுக்கு சுகஜீவியாய் இருக்கிறானோ அவ்வளவுக்கு அவன் தீமையின்மேல் நாட்டங்கொள்ளுகிறான். பட்டுக் கட்டிப் பகட்டாய்த் திரியவேண்டும் என்று பெண்கள் பெரும்பாலும் ஆசைப்படுகிறார்கள்; தேவனுடைய பார்வைக்கு மதிப்பைக் கொடுக்கும் இலட்சண அலங்காரமே பெண்ணலங்காரம். ஒரு வருஷமுழுவதிலும் ஓய்வில்லாமல் விழித்திருப்பதிலும் ஒரு இரவு விழித்திருப்

1 வெளித்தோற்றத்தினால் ஏமாந்து போகப்படாது என்பது இதின் படிப்பினை. குருவியானது விட்டில் பிடிக்கிற தன் இயற்கையின்படியே பிடித்தது: இதில் அது யாதொரு தப்பிதமும் நடப்பிக்கவில்லை, விட்டிலானது அதின் சாதாரண இரை. ஆனால் அது இப்படி செய்யும் என்று நினைக்காதபடியால் கிறிஸ்தீனாள் துக்கப்பட்டாள். பறவையின் நிறத்தையும் அழகையும் பார்த்துத் தீர்மானித்துக்கொண்டாளே அல்லாமல் அதின் உள்ளான சுபாவ லட்சணம் என்னவென்று அறியவே இல்லை.

பது லேசு; அப்படியே முத்திபெறும்படி முடிவுபரியந்தம் பக்தியை விடாதிருப்பதிலும் அவசரத்தில் சிலகாலம் பக்தியாய் இருப்பது லேசு; எந்த மாலுமியும் புசல் அடிக்கையில் அற்பப்பிரயோஜனமுள்ள வஸ்துக்களை மனதாரக் கடலில் எறிகிறது உண்டு; ஆனால் முதல்தரமான வஸ்துக்களை முதலாவது எவன்தான் எறிவான்? தேவனுக்குப் பயப்படாதவனே அல்லாமல் வேறெவனும் அப்படிச் செய்யான். ஒரு பொத்தல் பெருங்கப்பலையும் ஆழ்த்திப்போடும்; ஒரு பாவம் அந்தப் பாவியை நிர்மூலமாக்கிவிடும்.[1] சிநேகிதனை மறக்கிறவன் நன்றிகெட்டவன், ஆனால் தன் இரட்சகரை மறக்கிறவனோ தன்னை நாசமாக்குகிறான். பாவத்திலே ஜீவித்து மறுலோகபாக்கியம் வரும் என்று எதிர்நோக்குகிறவன் முட்பூண்டுகளை விதைத்து நவதானியங்களைக் களத்தில் சேர்ப்பேன் என்று நினைக்கிறவனுக்கு ஒப்பாய் இருக்கிறான். ஒருவன் நல்வாழ்வு வாழவேண்டுமானால் அவன் தன் மரணநாளை எப்போதும் தன் மனதின் முன்னே வைத்து அதை ஒரு தடிக்கொம்பைப்போலப் பிரயோகிப்பானாக. காது ஒட்டிப்பேசும் பேச்சும் கருத்துகளின் மாறுதலும் பாவம் உலகத்தில் இருக்கிறது என்பதை ருசுப்படுத்துகிறது.[2] தேவனால் ஒளிமாறி இருளாகும் உலகமே மனுஷருக்குச் சதமாகத் தோன்றினால், அவரால் மேன்மைப்படுத்தப்பட்டிருக்கிற பரமண்டலம் என்னமாய் இராது! நோய்நொடிகளோடு கழிக்கும் இச்சீவனை விட்டுவிட மனம் அற்று பற்றிப் பிடிப்போமேயானால் இனிவரும் ஜீவன் எப்படிப்பட்டதாய் இராது! மனுஷரின் தயாளங்களை எல்லாரும் மதித்துப் போற்றுகிறார்களே, ஆனால் தேவனுடைய தயாளங்களைத் தக்கபடி மதித்துப் போற்றுவார் எவராவது உண்டா? நாம் சாப்பிடும்போது, நமக்கு முன் வைக்கப்பட்ட போஜனம் முழுவதையும் சாப்பிட்டுக்கொள்வது அபூர்வம்: எப்படியும் எதாவது மிஞ்சி இருக்கும். அதுபோல, இயேசுகிறிஸ்துவின் புண்ணியமும் நீதியும் உலகம் முழுவதுக்கும் போதுமானபடி மாத்திரம் அல்ல, மிஞ்சினதாய்த்தான் இருக்கிறது.

---

[1] ஒரு பாவம். அதாவது, மனஸ்தாபப்படாமலும் மன்னிப்படையாமலும் நித்தம் நித்தம் பழக்கமாய்ச் செய்துகொண்டுவரும் பாவம். மனஸ்தாபமும் விசுவாசமும் உண்டாயிருந்தால் சகல பாவங்களும் நிவிர்த்தியாகிப்போகும்.

[2] ஏன் என்றால், பாவம் உலகத்தில் இல்லையானால் ஒருவனும் தன் அயலானிடத்தில் செவிக்குள்ளே பேசவோ ரகசியங்கள் சொல்லிக்கொள்ளவோ அவசியம் இராது.



மக்கிப்போன மரத்தின் காட்சி.

மேலே சொல்லிய ஞானசார போதனைகளை வியாக்கியானி சொன்னபின்பு அவர்களை மறுபடியும் தமது தோட்டத்துக்குக் கூட்டிப்போனார். அங்கே, பட்டைதவிர மற்றது எல்லாம் மக்கிப்போயிருந்த ஒரு விருக்ஷம் இருந்தது; அதில் பசுமையான சில கிளைகளும் இலைகளும் இருந்தன. அதைக் கண்ட தயாளி இதின் தாத்பரியம் என்ன என்று கேட்டாள். அதற்கு அவர்: வெளிக்குப் பசுமையாயும் உள்ளுக்கு உளுத்துப்போயும் இருக்கிற இந்த மரத்துக்கு கிறிஸ்து சபையிலுள்ள பலரை ஒப்பிடலாம். இவர்கள் தெய்வீக விஷயங்களுக்கு அடுத்த பல காரியங்களை எல்லாம் செய்வதுபோலத் தங்கள் வாயால் பேசுவார்கள்; ஆனால் உள்ளபடி ஒன்றும் செய்யமாட்டார்கள். அவர்களில் இலை அழகே அன்றி, உள் அழகு இராது; அவர்கள் சாத்தானின் சக்கிமுக்கிக் கல்லுக்கு ஏற்ற சுரும்பஞ்சாகவே அல்லாமல் வேறொன்றுக்கும் உதவமாட்டார்கள் என்றார்.

இராச்சாப்பாடு.

இதற்குள்ளாக இராச்சாப்பாடு ஆயத்தம் ஆயிற்று; அவர்கள் எல்லாரும் பந்தியில் உட்கார்ந்து போஜன ஸ்தோத்திரமானபின் புசித்துத் திருப்தி அடைந்தார்கள். விருந்தாளிகள் வந்திருந்தால் வியாக்கியானி கீதவாத்தியத்தொனியோடு பந்தியை நடத்துவது வழக்கமாய் இருந்தது, அப்படியே பாடகர் வீணை வாசித்தார்கள்; ஆனால் அவர்களில் ஒருவன்மாத்திரம் பாடினான், அவன் குரல் குயிலின் குரல்போல் அவ்வளவு இன்பமாய் இருந்தது. அவன் பாடின பாட்டாவது;

கர்த்தர் என் மேய்ப்பராய்ப்
போஷிக்கிறார்.
நான் தாழ்ச்சியை
அடையேனே

பந்திமேல் சம்பாஷணை.

என்பதே. கீதமும் கீதவாத்தியத்தின் தொனியும் ஓய்ந்தபின்பு வியாக்கியானி கிறிஸ்தினாளை நோக்கி: நீ மோட்சபிரயாணி ஆகும்படி உன்னை ஏவின முதல் முகாந்தரங்கள் என்ன என்று கேட்டார். அதற்கு அவள் ஐயா! முதலாவது, எமது புருஷனை இழந்தோமே என்ற ஆழ்ந்த கவலை அடியாள் மனதில் உண்டானது; ஆனால் அது எல்லாம் லோகமுறையான துயரமாகவே இருந்தது. அப்புறம் என் கணவரின் பிரயாண

வருத்தங்களும் அவர் பட்ட சங்கடங்களும் அறிந்திருந்தும் நான் அவருக்குச் செய்த தொந்தரவுகளும் என் மனதை அடிக்கடி வதைத்தது. ஆகவே, என் பாதகம் என்மேல் சுமத்தப்பட்டு என்னை ஒரு குளத்தில் அமிழ்த்திவிடுவதுபோல் ஆயிற்று. இப்படி இருக்கிற சமயத்தில் என் கணவரின் நல்வாழ்வை விளம்புகிறவைகளைப்பற்றி எனக்கு ஒரு சொப்பனம் உண்டானதோடு அவ்வரசர் என்னையும் தமது தேசத்துக்கு வந்துவிடும்படியாக எழுதி அனுப்பிய ஒரு கடிதமும் எனக்குக் கிடைத்தது. கண்ட சொப்பனமும் வந்த காகிதமும் என் மனதில் அவ்வளவு பலமாய்க் கிரியைசெய்ததால் அடியாள் இப்படிப் பயணம்செய்யத் துணிந்தேன் என்றாள்.

கிறிஸ்தீனாள் பயணப்பட்ட சரித்திரம்.

வியா. நீ உன் வாசலை விட்டு வெளியேறுமுன் உன்னைத் தடுப்போர் ஒருவரும் இருந்ததில்லையோ?

கிறி. அப்படியும் நேரிட்டது ஐயா! என் அயல்வீட்டுக்காரிகளில் ஒருத்தியாகிய கோழை அம்மாள் என்னைத் தடுத்தாள். அவள் என் புருஷனை சிங்கங்கள் இருக்கிறது என்று பயங்காட்டி பயணத்தைத் தடுத்துவிடும்படி முயன்ற பயங்காளியினுடைய பந்துதான். நான் ஆரம்பித்த பயணத்தைப் பைத்தியம் என்று சொல்லி என்னையும் பைத்தியக்காரி ஆக்கினாள். அவள் என் கணவருடைய பிரயாணத்தில் சம்பவித்த பல சங்கடங்களையும் இடறல்களையும் எடுத்துக் காட்டி என் மனவுறுதியை மாற்றிவிடப்பார்த்தாள்; ஆனால் அதை எல்லாம் தட்டிப்போட்டேன். அப்புறம் விசுவாசத்தைக் குலைத்துப்போடும்படியாக வந்த இரண்டு அவலட்சண ரூபிகளைப் பற்றிய சொப்பனம் எனக்கு வெகு மனத்தாங்கலைக் கொடுத்தது. அந்தப் பயம் இன்றும் என் மனதில் இருப்பதால் எவனைக் கண்டாலும் நமக்கு அபாயம் செய்யும்படி ஆலோசனைபண்ணின அவலட்சண ரூபிகள் இவர்களோ என்று அஞ்சவேண்டியதாய் இருக்கிறது. எல்லாருக்கும் நான் சொல்லக் கூச்சப்பட்டு மறைத்தாலும் என் ஆண்டவனுக்கு மறையாமல் சொல்லவேண்டிய ஒரு சங்கதி இருக்கிறது. திட்டிவாசலுக்கும் இதற்கும் மத்தியில் நாங்கள் வரும்போது நான் கனவில் கண்ட அவலட்சண ரூபிகளைப்போலொத்த இருவர் எங்களுக்கு எதிர்ப்பட்டு எங்களை மடக்கினார்கள்; நாங்கள் பயந்து கள்ளரோ கள்ளர் என்று அபயமிட்டோம் என்றாள்.



வியா. அப்பொழுது வியாக்கியானி, அம்மா! உன் அவசரம் நன்றாய் இருக்கிறது, உன்னுடைய கடைசி முடிவும் அப்படியே மென்மேலும் வாழ்வுள்ளதாக இருக்கும் என்று அவளை வாழ்த்தினார். அப்புறம் அவர் தயாளியை நோக்கி: பெண்ணே! நீ பயணம் புறப்பட உன்னை ஏவின முகாந்திரம் என்ன என்று கேட்டார்.

வியாக்கியானியின் வாழ்த்துதல்.

தயாளி. உடனே தயாளி பயந்து கூச்சப்பட்டு வெகுநேரம் ஒன்றும் பேசாமல் தலையைக் கீழேபோட்டுக்கொண்டு நின்றாள்.

வியா. அப்போது அவர்; பெண்ணே, நீ மலையாதே! விசுவாசமாய் இருந்து உன் மனதை வெளியிடு என்றார்.

தயாளி. அப்புறம் அவள் தைரியம் அடைந்து சொல்லுகிறாள்; இதோ இருக்கிற நமது சிநேகிதி வீட்டைவிட்டுப் புறப்படும்படி தன் தட்டுமுட்டுகளை எல்லாம் ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்த வேளையில் தற்செயலாய் நானும் இன்னொருத்தியும் அவளைப் பார்க்கும்படி போய், கதவைத் தட்டி உள்ளே சேர்ந்தோம்; நாங்கள் போன சமயத்தில் இவள் செய்துகொண்டிருந்த ஆயத்தங்களை எல்லாம் பார்த்து, என்ன விசேஷம் என்று விசாரித்தோம்; விசாரிக்கவே, தன் புருஷன் இருக்கிற இடத்துக்கு தானும் வரும்படி ஒரு செய்தி வந்திருக்கிறது, அங்கே தான் புறப்பட ஆயத்தப்படுகிறேன் என்று சொல்லி, அதோடு இவள் தன் புருஷனைச் சொப்பனத்தில் கண்டதாகவும் அவர் ஒரு சித்திர மாளிகையில் நிரஞ்சீவிகளோடு வாசஞ்செய்கிறார் என்றும் கிரீடம் அணிந்து சிதவாத்தியமும் கையுமாய் இருக்கிறார் என்றும் ராஜபந்தியில் உட்கார்ந்து ராஜபோஜனம் உண்டு ராஜனைப் போற்றித் துதிக்கிறார் என்றும் இன்னும் இப்படிப் பலவாறாக தான் சொப்பனத்தில் கண்டதாகவும் சொன்னாள். இச்செய்திகளைக் கேட்கக் கேட்க, என் மனதில் அக்கினி பற்றி எரிந்தாற்போல் இருந்தது. அப்போது நான்; இவை எல்லாம் நிஜமானால், நாம் நமது தகப்பனையும் தாயையும் நமது ஊரையும் விட்டு இந்த ஸ்திரீயோடே போகலாம் அல்லவா என்று என் மனதுக்குள் சொல்லிக்கொண்டேன். ஆதலால் நான் இந்த விஷயங்களைப்பற்றிப் பின்னும் விபரமாய்க் கேட்டுக்கொண்டு எங்கள் ஊரில் வாசஞ்செய்தால் அழிவும் நாசமுமே அல்

தயாளி பயணப்பட்ட சரித்திரம்.

லாமல் வேறே வாழ்வு ஒன்றும் இல்லை என்று அறிந்து, நானும் உன்னோடு வரலாமா என்று கேட்டேன். நான் புறப்பட்ட போது என் மனதில் உண்டான வியாகுலத்துக்கு ஒரு அளவில்லை; ஐயோ! நமது நாட்டைவிட்டுப் போகிறோமே என்கிற விசனம் அல்ல நமது இனபந்துக்கள் எல்லாரும் பின்னாலே இருக்கிறார்களே என்ற கவலையினாலேதான் வியாகுலப்பட்டேனே அன்றி வேறல்ல. நான் என் முழுமனதோடும் புறப்பட்டேன்; இன்னும் எனக்கு அருள் அளிக்கப்பட்டால் கிறிஸ்தினாளோடேகூடவே போய் அவள் புருஷனையும் அவருடைய அரசனையும் கண்டு தரிசிக்கலாம் என்றிருக்கிறேன் என்றாள்.

வியாக்கியானியின் வாழ்த்துதல்.

வியா. உன் புறப்படுதல் நலமாகவே இருக்கிறது; ஏனெனில், சத்தியத்தை நீ ஏற்றுக்கொண்டிருக்கிறாய்; பழைய ரூத் என்பவள் நகோமியின்மேல் இருந்த பட்சத்தினாலும் அவளுடைய ஆண்டவராகிய தேவன்மேல் உண்டான பக்தி வைராக்கியத்தினாலும் தன் தகப்பன் வீட்டையும் தாயின் மடியையும் ஜநநதேசத்தையும் விட்டு, தான் முகம் அறியாத தேசத்துக்கும் ஜனத்துக்கும் மத்தியில் வாசம்செய்யத் தீர்மானித்தாள். நீயும் அவளைப்போல் ஒத்த ஒரு ரூத்துதான். உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக[a] என்றார்.

இராச்சாப்பாடு முடிந்தபின்பு அவரவர் படுத்துத் தூங்கும்படியான ஒழுங்குகள் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்தின்படியே ஸ்திரீகள் தனித்தனியாகவும் பிள்ளைகள் ஒருபக்கத்திலும் படுத்திருந்தார்கள். தயாளி தன் கட்டிலில் படுத்திருந்தாலும் அவள் கண்கள் அயரவில்லை; தன்னைப்பற்றி தானே கொண்டிருந்த சந்தேகங்கள் எல்லாம் ஒருவாறு நீங்கிப்போனபடியால் அவள் தனக்குள்ளே ஆகமகிழ்ந்து கண் அயரா திருந்தாள். ஆதலால் தனக்கு இவ்வளவு பெரிய தயவுகளை அநுக்கிரகித்த கடவுளைப் பலவாறாய் ஸ்தோத்தரித்து அன்றிரவைக் கழித்தாள்.

[a] ரூத். 2. 11, 12.



பரிசுத்தமாக்கும் ஸ்நானம்.

மறுநாள் சூரியோதய காலத்தில் அவர்கள் தங்கள் படுக்கையில் இருந்து எழுந்து, தங்கள் வழியே பயணம் போக எத்தனித்தார்கள். ஆனால் வியாக்கியானி அவர்களைத் தடுத்து, இவ்வீட்டில் உங்களுக்கு நடப்பிக்கப்படவேண்டிய உபசாரனைகள் எல்லாம் ஒழுங்காய் நிறைவேறியபின்புதான் நீங்கள் புறப்படவேண்டியது என்று சொல்லி, அவர்களுக்கு முதலாவது கதவைத் திறந்த கன்னிமாப்பெண்ணைக் கூப்பிட்டு: பெண்ணே! இவர்கள் எல்லாரையும் அழைத்துக்கொண்டு நமது கொல்லையில் இருக்கும் பொய்கையில் நீராடச்செய்து வழிநடையில் படிந்த தூசியையும் ஒட்டிய சேற்றையும் கழுவி சுத்தமாக்கச்சொல் என்றார். உடனே அந்தக் கன்னிப்பெண் அவர்களை வியாக்கியானியின் பொய்கைக்கு[1] அழைத்துப்போய் இவ்விடத்திலே நீங்கள் நீராடி உங்களைக் கழுவிக்கொள்ளவேண்டியது. ஏனெனில், எங்கள் எஜமான் பரலோக பிரயாணமாய்ப் புறப்பட்டு வருவோர் எல்லாரையும் இப்படியே தமது தடாகத்தில் நீராடச்செய்வது வழக்கமாய் இருக்கிறது என்றாள். அப்படியே ஸ்திரீகளும் பிள்ளைகளுமாகிய எல்லாரும் அந்தப் பொய்கையில் இறங்கி நீராடினார்கள்.

முழுக்கு ஸ்நானம்.

நீராடி வெளியேறினவுடனே அவர்கள் அழகிய ரூபமும் சுத்த தேகிகளும் ஆனதும் அன்றி, பூரணசுகமும் சரீரமுனிகளில் பலமும் உடையவர்களாய் விளங்கினார்கள். ஆதலால் அவர்கள் நீராடித் திரும்பிவருகையில் முன்னிலும் யௌவனரூபிகளாய்க் காணப்பட்டார்கள்.

[1] பொய்கை. இது யோவான், 13. 10-ம் வாக்கியத்தை விளக்குகிறது. சுத்தியாகவேண்டுமானால் உடம்பு முழுவதும் கழுவப்படவேண்டும். இது ஆவியின் மூலமாய் கிறிஸ்துவின் இரத்தத்தைக் கொண்டு சுத்திகரிக்கப்படுவதற்கு அறிகுறியாய் இருக்கிறது. இதினால் கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் புதுச்சிருஷ்டிகள் ஆக்கப்படுகிறோம். தீத். 3. 5. "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்தஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்." தூசிபடிந்த பாதையில் நடப்பதினால் பாதம் அழுக்காவதுபோல் நாள்தோறும் செய்யும் பாவங்களால் நமது இருதயமும் அசுசிப்படுகிறபடியால் ஒவ்வொருநாளின பாவங்களையும் கழுவிப்போட நித்தமும் ஸ்நானம் செய்வது அவசியம். ஒவ்வொரு நாளின் பிரயாணத்தையும் துவக்கும் முன் இயேசுகிறிஸ்துவினிடத்திலிருந்து மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் தேடிக்கொள்ளவேண்டியது.

அவர்கள் முத்திரையிடப்படுதல்.

அவர்கள் ஸ்நானஞ் செய்து திரும்பிவந்தபின்பு வியாக்கியானி அவர்களை அழைத்துக்கொண்டுபோய் அவர்களை நோக்கி, சந்திரவிம்பம்போல் சுந்தரரூபிகளாய் இலங்குகிறீர்கள் என்று அகமகிழ்ந்தார். அப்பால் வியாக்கியானியுடைய தடாகத்தில் ஸ்நானம் ஆடினோரை அடையாளமிடும் முத்திரைக்கோலைக் கொண்டுவரச்சொன்னார். முத்திரைக்கோல் கொண்டுவரப்பட்டவுடனே மோட்சபயண பாதையில் இருப்போர் இவர்களை இனமறிந்துகொள்ளும்படியாக முத்திரை போட்டார். இவர்களுக்குப் போடப்பட்ட முத்திரையானது இஸ்ரவேலர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டபோது ஆசரித்ததும் புசித்ததுமான பஸ்காவின் பொருள் அடக்கமும் சாரமுமாகவே இருந்தது.[a] அவ்வடையாளம் அவர்கள் இரண்டு கண்களுக்கும் மத்தியில் போடப்பட்டது. இந்த முத்திரை அடையாளமானது அவர்களுடைய முக ஆபரணங்களில் ஒன்றுபோல இருந்ததால் அது அவர்கள் அழகோடு அழகைக் கூட்டியது. அவர்களுக்கு இது மிகுந்த கனத்தையும் உண்டாக்கினதால் அவர்களின் சாயல் சம்மனசுகளின் சாயலுக்கு ஒத்திருந்தது.

அவர்கள் வஸ்திர அலங்காரம் பெறுதல்.

அப்பால் வியாக்கியானி, மாசில்லாள் மாதைக் கூப்பிட்டு, நீ எனது வஸ்திராபரணமாடம்போய், இவர்கள் எல்லோருக்கும் வேண்டிய மாற்று வஸ்திரங்களை எடுத்துவா என்றார். அங்ஙனமே அவள் ஓடி பல வெள்வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு வந்து அவருடைய பாதத்திலே வைத்தாள். இவ்வஸ்திரங்களைத் தரித்துக்கொள்ளுங்கள் என்று வியாக்கியானி அவர்களுக்குச் சொன்னார்; அவ்வஸ்திரங்கள் மெல்லிய நூலால் நெய்யப்பட்டு வெண்மையும் சுத்தமுமாய் இருந்தது. அந்த ஸ்திரீகள் வஸ்திராலங்காரிகள் ஆனபின் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தே பயந்துகொண்டார்கள். ஏனெனில் ஒருவருக்கு இருந்த மகிமையை மற்றவள் பார்த்து பிரமிக்கக்கூடியதாய் இருந்ததே அன்றி, அவரவர் தங்கள் தங்களுக்கு இருந்த மகிமையை அறிந்துகொள்ள ஏதுவிருந்ததில்லை. ஆதலால் அவர்கள் ஒருவரை ஒருவர் அதிகமாய் மதிக்க ஏவப்பட்டார்கள். நீ என்னிலும் அழகாய் இருக்கிறாய் என்று ஒருத்தி சொல்லுவாள்; அல்ல, அல்ல நீ என்னிலும் ரூபவதி என்று வேறொருத்தி சொ-

[a] யாத். 13, 8-10.



ல்லுவாள்.[1] அந்தப் பிள்ளைகளும் தங்களுடைய அலங்காரத்தைப் பார்த்துப் பார்த்து பிரமித்துக்கொண்டார்கள்.

அச்சிறந்த பயணப்படத அவர்கட்குத் துணை ஆள்.

கடைசியாக வியாக்கியானி தமது சேவகரில் ஒருவனாகிய தைரியநெஞ்சனை[2] அழைத்து: இங்ஙனமே நீ போராயுதக்கோலம் பூண்டு பட்டயத்தைக் கட்டி சீராவை அணிந்து கேடகம் பிடித்துக்கொண்டு இந்த எனது குமாரத்திகளுக்கு முன் நடந்துபோய் அவர்கள் இனித் தங்கவேண்டிய அலங்காரமாளிகைமட்டும் வழித்துணையாய்ப் போய்வா என்று கட்டளையிட்டார். அப்படியே ஆகட்டும் ஐயா என்று தைரியநெஞ்சன் சொல்லி, போராயுதம் தரித்தவனாய்ப் புறப்பட்டு அவர்களுக்கு முன்னே நடந்தான். கடவுள் உங்களை ஆசிர்வதித்து உங்கள் பயணத்தை வாய்க்கச்செய்வாராக என்று வியாக்கியானி வாழ்த்தினார். அவர் வீட்டில் இருந்த மற்றெல்லாரும் அவர்களுக்கு வந்தனங்கள் செய்து மங்களங்கள் கூறினார்கள். ஆகவே அவர்கள் எல்லாரும் சங்கீதத்தோடு கால்விடுத்துவைத்து,

குப்பைவாரும் காட்சிகண்டேன்;
குஞ்சுக்கோழியின் காட்சிகண்டேன்;

சிலந்திப்பூச்சியின் காட்சியிலே
விசுவாசிக்கவும் காட்சிகண்டேன்.

சிட்டுக்குருவியின் காட்சியிலே
வீட்டில் பூச்சியும் இருக்கக்கண்டேன்.

ஆடறுப்போனின் காட்சிகண்டேன்
சிறந்த வயலின் காட்சிகண்டேன்.

இந்தக் காட்சிகள் எல்லாமே
என்னை உணர்த்தினதை மறவேன்.

[1] இந்த வெண்மையான வஸ்திரம் தரித்த ஸ்திரீகளிடத்தில் விளங்கின தன்மையைக் கவனிக்கும்போது இந்த வஸ்திரம் 1 பேது. 3. 4ல் சொல்லப்பட்டிருக்கிற வஸ்திரம் என்று தோன்றுகிறது. அப்படியே 1 பேது. 5. 5ல் "மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்" என்று வாசிக்கிறோம். இந்த வஸ்திரங்களைத் தரித்துக்கொள்ளுவதான பலாபலன்களை பிலி. 2. 3ல் சொல்லியிருக்கிறது. அதாவது "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்."

[2] மோட்சபாதையில் மற்றவர்களை வழிநடத்தி ஒத்தாசை பண்ணுகிறவன் மிகுந்த பலசாலியும் தைரியசாலியுமாய் இருக்கவேண்டும்.

இரண்டாம் திங்களின் காட்சி எல்லாம்,
மங்காதெனது மனதைவிட்டு;
உகந்த மரத்தின் காட்சியையும்
ஒருநாளும் நான் மறவேனே;



எல்லாக் காட்சியும் மேலாக
என்னை உணர்த்தின நன்றாக,
அடியேன் இவைகளை மறவேனே,
அத்தினம் நிலைமையைச் சமைப்பேனே;
அசைவேன், விழிப்பேன், ஜெபிப்பேனே,
பணிவேன் பாவ பயத்தோடே

என்று பாடிக்கொண்டே வழிநடந்தார்கள்.



## அலங்காரமாளிகைப் பயணம்.

பிரயாணிகள் அலங்காரமாளிகைக்குப் புறப்பட்டது.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் தைரியநெஞ்சன் முன்னாகவும் இவர்கள் பின்னாகவும் நடந்துபோகிறதைக் கண்டேன். அவர்கள் தங்கள் வழியே வருகையில் கிறிஸ்தியானுடைய முதுகின் பாரம் தானாய் அறுந்து விழுந்து பக்கத்தில் இருந்த ஒரு கல்லறைக்குள் உருண்டு காணாமற்போன இடத்துக்கு வந்தார்கள். இவ்விடத்திலும் அவர்கள் சற்றுநேரம் தாமதித்து நின்று தேவனை ஸ்தோத்தரித்தார்கள்.

சிலுவை கல்லறை ஸ்தானம்.

இப்பொழுது கிறிஸ்தீனாள் சொல்லுகிறாள்: ஆகா! இட்டிவாசலண்டை கேட்ட போதனை இப்போது என் மனதில் வருகிறது; அதாவது வார்த்தையாலும் செய்கையாலும் நமக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கவேண்டியது என்றும் பாவமன்னிப்பைப்பற்றிய வாக்குத்தத்தங்களைக்கொண்டு வார்த்தையாலும் அந்த மன்னிப்பைச் சம்பாதித்த வகையைக்கொண்டு செய்கையாலும் அருளப்படுகிறதென்றும் சொன்ன செய்தியை நான் நினைவுகூருகிறேன். அந்த வாக்குத்தத்தங்களில் சிலவை இன்னதென்று எனக்கு சுமாராய்த் தெரியும்; ஆனால் செய்கையால் உண்டான பாவமன்னிப்பைப்பற்றி, அல்லது அந்த மன்னிப்பு சம்பாதிக்கப்பட்ட வகையைக்குறித்து, ஐயா! தைரியநெஞ்சனே, நீர் நன்றாய் அறிவீர் என்று நினைக்கிறேன்; ஆதலால் அதின் விபரங்களை எங்களுக்குச் சொல்லும்படி மன்றாடுகிறோம் என்றாள்.

செய்கையால் சுய பாவ மன்னிப்பு.

தைரி. அதற்குத் தைரியநெஞ்சன் சொல்லுகிறான்: செய்கையால் உண்டான பாவமன்னிப்பு என்றால், அந்த மன்னிப்பு வேண்டிய ஒருவனுக்காக அது வேண்டாத வேறொருவனால் சம்பாதிக்கப்படுவதையே குறிக்கும். இன்னும் இதைச் சற்று விளக்கிச் சொல்லவேண்டுமானால் நீயும் தயாளியும் இந்தப் பிள்ளைகளும் பெற்றீர்களே, அந்த மன்னிப்பு வேறொருவரால் சம்பாதிக்கப்பட்டது. உங்களை இட்டிவாசலண்டை ஏற்றுக்கொண்டாரே, அவரே அதைச் சம்பாதித்தவர். அவர் இரண்டுவழியாய் உங்களுக்குப் பாவமன்னிப்பை உண்டுபண்ணியிருக்கிறார்; உங்களை மூடும்படியாக அவர்

நீதியை நடப்பித்து உங்களைக் கழுவும்படியாகத் தமது இரத்தத்தையும் சிந்தியிருக்கிறார்.

கிறி. அவர் தமது நீதியை எங்களுக்குத் தந்துவிட்டால் தமக்கு என்ன செய்வார்?

தைரி. உங்களுக்கு வேண்டியதைப்பார்க்கிலும் அல்லது அவர் தமக்கே வேண்டியதைப்பார்க்கிலும் அதிகமான நீதி அவரிலும் உண்டு.

கிறி. அதெப்படி உண்டு? அதைத் தயவுசெய்து விளக்கிச் சொல்லமாட்டீரா?

தைரி. என் முழுமனதோடும் அதை விளக்கிச்சொல்ல ஆசையாய் இருக்கிறேன். ஆனால், எதற்கு முன்னேவே உங்களுக்குச் சொல்லவேண்டிய ஒரு குறிப்பு உண்டு; அதாவது, நாம் இப்பொழுது யாரைக்குறித்துப் பேசப்போகிறோமோ அவருக்கு சமமான ஆள் வேறொருவரும் இல்லை என்று நீங்கள் அறிந்துகொள்ளவேண்டியது. ஒரே ஆளுக்குள் அமைந்திருக்கும் இரு தன்மைகள் அவருக்கு உண்டு. அத்தன்மைகள் இரண்டும் அறியக்கூடியபடி தெளிவாயும் பிரிக்கக்கூடாதபடி ஒன்றாயும் இருக்கின்றன. இத்தன்மைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நீதி உண்டு. அந்த ஒவ்வொரு நீதியும் அந்தந்தத் தன்மைக்கு இன்றியமையாத அவசியமானது. ஆகவே அந் நீதிகளில் ஒன்று தன்னைப் பிரத்தியேகப் படுத்திக்கொள்ளுகிறதால் அந்த ஆளின் தன்மையை அழித்துவிடக்கூடுமானதாகும். இந்த நீதிகளில் நாம் பங்காளிகள் ஆகிறதும் இல்லை, இவைகள் ஒன்றினாலும் நாம் நீதிமான்களாக்கப்பட்டு பிழைக்கும்படி அவைகள் நமக்குச் சாட்டப்படுகிறதும் இல்லை. அந்த இரண்டு தன்மைகளும் அவரில் ஒன்றாகப் பொருந்தியிருப்பதினால் இந்த நீதிகளை அல்லாமல் வேறொரு நீதியும் அவரிடத்தில் இருக்கிறது. இது மனுஷீகதன்மையைவிட்டு முற்றிலும் பிரிந்திருக்கிற தேவதன்மையின் நீதியாய் இராமலும் தெய்வீக தன்மையை விட்டு முற்றிலும் பிரிந்திருக்கிற மனுஷீக தன்மையின் நீதியாய் இராமலும் இருதன்மைகளும் பொருந்தினதில் இருக்கிற நீதியாய் இருக்கிறது. இந்த நீதியானது அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மத்தியஸ்த ஊழியத்துக்குத் தகுந்ததும் தேவனால் அங்கீகரிக்கப்படத் தக்கதுமான ஒரு நீதியாய் இருக்கிறதென்றே சொல்லவேண்டியது. அவர் முதலாம் நீதியை விட்டு தம்மைப் பிரித்துக்கொள்ளுவது தமது தெய்வத்துவத்தை விட்டுப் பிரிதல் ஆகும்; இரண்டாம் நீதியை

நம்மை நீதிமான்களாக்கும் நீதி இன்னது.



விட்டு தம்மைப் பிரித்துக்கொள்ளுவது தமது பூரண மனுஷத்துவத்தை விட்டுப் பிரிதல் ஆகும். மூன்றாம் நீதியில் இருந்து தம்மைப் பிரித்துக்கொண்டால், தமது மத்தியஸ்த ஊழியத்தின் தகுதியை விட்டுப் பிரிதல் ஆகும். ஆதலால் வெளிப்படுத்தப்பட்ட தேவசித்தத்துக்கு அடங்கினதான வேறொரு நீதி அவரிடத்தில் இருக்கிறது; இதையே அவர் பாவிகளுக்குச் சாட்டுகிறார்; இந்த நீதியினால்தான் அவர்களுடைய பாவங்கள் மூடப்படுகின்றன. ஆனதினால்தான், "ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்"[a] என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது என்றார்.

கிறி. அப்படியானால் மற்ற நீதிகள் நமக்குப் பிரயோஜனமுள்ளவைகள் அல்லவோ?

தைரி. பிரயோஜனமுள்ளவைகள்தான். அவைகள் அவருடைய தன்மைகளுக்கும் ஊழியங்களுக்கும் மாத்திரம் தனிப்பட்ட அவசியமாய் இருந்து பிறருக்குச் சாட்டப்படக்கூடாததானபோதிலும் அவற்றின் வல்லமையானது நீதிமானாக்கும் நீதியினால் உண்டாகும் புண்ணியபலன்களைப் பலிக்கப்பண்ணுகிறவைகளாய் இருக்கின்றன. அவருக்கு இருக்கும் தெய்வீக நீதியானது அவருடைய கீழ்ப்படிதலை சித்திபெறச்செய்கிறது. மனுஷீக நீதியானது நீதிமானாக்கும்படியாக அவருடைய கீழ்ப்படிதலுக்குத் தகுதியைக் கொடுக்கிறது. இந்த இரண்டு தன்மைப் பொருத்தினதில் உண்டாகிற அவருடைய மத்தியஸ்த ஊழியத்தின் நீதியானது தாம் அபிஷேகம் பெற்ற வேலையை நிறைவேற்றும்படியான அதிகாரத்தை உண்டாக்குகிறது.

ஆகவே, தேவனாக கிறிஸ்துவுக்குத் தேவையில்லாத ஒரு நீதி இருக்கிறது; ஏனெனில் அது இல்லாமலே அவர் தேவனாய் இருக்கிறார். அதோடு மனுஷனாக கிறிஸ்துவை நீதியுள்ளவராக்கும்படியாக அவசியம் இல்லாத வேறொரு நீதியும் இருக்கிறது. ஏனெனில் அது இல்லாமலே அவர் பூரணமனுஷனாய் இருக்கிறார்; அதுவும் அன்றி தேவமனுஷனாக கிறிஸ்துவுக்குத் தேவையில்லாத இன்னொரு நீதியும் இருக்கிறது. ஏனெனில் அந்த நீதி இல்லாமலே அவர் தேவமனுஷனாய் இருக்கிறார். இவ்விடத்தில் தேவனாகவும் தேவமனுஷனாகவும் கிறிஸ்துவுக்கு

[a] ரோ. 5. 19.

கடனாவாய் வேண்டியதல்லாத ஒரு நீதி இருக்கிறது; ஆதலால் அவர் அதை மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடும். நீதிமானாக்கும் நீதியாய் இருக்கிற அது தமக்குத் தேவையில்லாதபடியால் அதை அவர் மற்றவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார். அதினாலே தான் அதை நீதியாகிய ஈவின் பரிபூரணம் என்று அழைத்திருக்கிறது.[a] இந்த நீதியை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் கீழ் உண்டுபண்ணினதால் அது மற்றவர்களுக்குக் கொடுத்துவிடப்படவேண்டிய நீதிதான். ஏனெனில் அந்த நியாயப்பிரமாணமானது தன்கீழ் இருக்கும் அவர் நீதியாய் நடக்கும்படி மாத்திரம் அல்ல, மற்றவர்களுக்கு நேசம் பாராட்டும்படிக்கும் அது அவருக்கு இடங்கொடுக்கிறது. ஆதலால் நியாயப்பிரமாணத்தின்படி அவருக்கு இரண்டு அங்கிகள் இருக்குமானால் அங்கியில்லாதவனுக்கு அவர் ஒன்றைக் கொடுக்கவேண்டியதுதான்; அப்படிக் கொடுக்க அவர் கடமைப்பட்டிருக்கிறார். மெய்யாகவே இப்பொழுது நமது ஆண்டவருக்கு இரண்டு அங்கிகள் இருக்கின்றன என்று வெளியாகிறது. அதில் ஒன்று அவருக்காக; இன்னொன்று மற்றவர்களுக்குக் கொடுக்கும்படியாக; ஆதலால் அவர் அங்கியே இல்லாதவர்களுக்கு ஒன்றை இலவசமாய்க் கொடுக்கிறார். இவ்வண்ணமாக கிறிஸ்தினாளும் தயாளியும் மற்றும் இவ்விடத்தில் இருக்கிற யாவரும் செய்கையால்தான் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அதாவது, வேறொருவருடைய செய்கையினாலே நீதியைச் சம்பாதிக்கிறீர்கள். உங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவே அந்த நீதியை நிறைவேற்றினவர்; அவர் தாம் நிறைவேற்றின நீதியை தம்மை அடுத்துவரும் ஏழை எவனோ அவனுக்குக் கொடுத்துவிடுகிறார்.

பின்னும் செய்கையால் மன்னிப்பைச் சம்பாதிக்கும்படியாக தேவனுக்குக் கிரயம்போல ஒரு தொகை செலுத்தப்படவும் நமக்கு மூடிபோன்ற ஒரு உடுப்பு செய்யப்படவும் வேண்டியது. பாவமானது நம்மை நேர்மையுள்ள பிரமாணத்தின்படியான நீதியுள்ள சாபத்துக்கு உட்படுத்திவிட்டது. இரட்சிப்பின் வழியாக மாத்திரம் நாம் இந்த சாபத்தில் இருந்து விடுதலையாக்கப்படக்கூடும்; நாம் செய்த பொல்லாப்புகளுக்குத் தகுமான அபராதம் செலுத்தப்படவேண்டும். உங்களுக்குப் பதிலாக வந்து உங்கள் ஸ்தானத்தில் நின்று உங்கள் பாவங்

[a] ரோ. 5. 17.



களுக்காக நீங்கள் அடையவேண்டிய மரணத்தையும் அடைந்த உங்கள் ஆண்டவருடைய இரத்தமே அபராதமாகச் செலுத்தப்பட்ட தொகையாய் இருக்கிறது. இவ்வண்ணம் அவர் உங்கள் அக்கிரமங்களில் இருந்து உங்களைத் தமது உதிரத்தால் மீட்டுக்கொண்டு அழுக்கும் அங்கவீனமுமான உங்கள் ஆத்துமாக்களை நீதியினால் மூடியிருக்கிறார்.[b] தேவன் உலகத்தை நியாயந்தீர்க்க வரும்போது, அந்த நீதியின் நிமித்தமே அவர் உங்களுக்கு ஒன்றும் செய்யாதபடி சும்மா கடந்துபோய்விடுகிறார்.

விசுவாசத்தினால் நீதிமானாகும் வழி கிறிஸ்தினாளுக்கு விளங்கினது.

கிறி. இது சிறந்த வித்துவம்தான்! நாம் வாக்கினாலும் செய்கையினாலும் மன்னிப்பைப் பெறுகிறோம் என்பது இப்போது எனக்கு விளங்குகிறது. பிரியமுள்ள தயாளி! இதை மறவாதிருப்போமாக. என் மக்களே! நீங்களும் இதை ஞாபகம்பண்ணிக்கொள்ளுவீர்களாக. ஐயாவே! என் கணவர் களிகூரவும் அவர் பாரம் இறங்கினதால் அவர் மும்முறை களிப்போடு குதிக்கவும் செய்ததும் இதுதான் அல்லவா?

தைரி. ஆம்; வேறொன்றினாலும் வெட்டப்படமாட்டாத அந்தக் கயிறுகளை இதைப்பற்றிய விசுவாசமே வெட்டிப்போட்டது. இந்த இரட்சிப்பின் வல்லமையை அவனுக்குத் திருஷ்டாந்தப்படுத்தும்படிக்கே அவனுடைய பாவபாரத்தைச் சுமந்துகொண்டு சிலுவைமட்டும் போகும்படி தேவன் சித்தங்கொண்டார்.

கிறி. நானும் அப்படியே நினைத்தேன். என் இருதயம் முன் அநுபவித்த சந்தோஷத்திலும் பதின்மடங்கு சந்தோஷத்தை இப்போது அனுபவிக்கிறதாக நான் அறிகிறேன். நான் இன்னும் அதைச் சரியாய் உணர்ந்துகொள்ளாவிட்டாலும் இம்மட்டும் உணர்ந்திருக்கிற வரைக்கும் சொல்லவேண்டுமானால் இவ்வுலகத்திலுள்ள எல்லாரிலும் பெரும்பாரம் சுமந்தோன் ஒருவன் என்னைப்போல் உணர்ந்து விசுவாசிப்பானேயானால், அது அவன் மனதுக்கு ஆனந்தக்களிப்பை உண்டாக்கும் என்று நன்றாய் அறிவேன்.

தைரி. இப்படிப்பட்ட காரியங்களைப் பார்ப்பதினாலும் இதைப்பற்றிப் பேசிக்கொள்ளுவதினாலும் ஆறுதலும் சமை

[b] ரோ. 8. 34. கலா. 3. 13.

யின் இலேசும் நமக்குத் தோன்றுகிறதும் அல்லாமல், ஒருவித அந்நியோந்நியமுள்ள குணமும் நமது மனதில் உண்டாகிறது. எப்படியெனில் பாவமன்னிப்பானது வார்த்தையால்மாத்திரம் அல்ல, செய்கையாலும் நமக்கு அருளப்படுகிறது என்பதைக் கேள்விப்படுகிற ஒருவன் அந்த இரட்சண்ணிய செய்கையின் விபரங்கள் இப்படி என்று கேள்விப்படும்போது செய்கையால் மன்னிப்பைச் சம்பாதித்த ஆளின்பேரில் அன்புகூராமல் இருப்பானோ?[1]

கிறிஸ்துவின் அன்பு ஆத்துமாவுக்கு விளங்கும் வகை.

கிறி. அது மெய்; அவர் எனக்காக இரத்தம்விட்டார் என்ற செய்தி என் இரத்தத்தைப் பிழிந்து எடுத்தாற்போல் இருக்கிறது. ஆ அன்புள்ள நேசரே! துதிகளுக்குப் பாத்திரரே! நீர் என்னை ஆட்கொள்ளவேண்டியவர்தான், நீர் என்னை வாங்கினீர், என்னைச் சமூலமாய் ஆட்கொள்ள உமக்கு நியாயம் இருக்கிறது. நான் பெறும் விலையிலும் பதினாயிரம் பங்கு அதிகமான விலையை எனக்காகச் செலுத்தி இருக்கிறீர்! இந்தச் செய்தி என் கணவர் கண்ணை அழச்செய்ததும், காலைத் தள்ளாடி நடக்கச்செய்ததும் அதிசயம் அல்ல. அவர் என்னை தம்மோடு பயணப்படும்படி பிரயத்தனம் செய்தாலும் படுமோசகியாகிய நான் அவரைத் தனியே பயணஞ் செய்ய விட்டுவிட்டேன். ஆ, தயாளியே! உன் தந்தையும் தாயும் இங்கேதான் வந்திருந்தார்களாக! கோழையும் வந்திருந்தால் நன்றாய் இருந்திருக்குமே, மோகினியும் வந்திருந்தாலும் மெத்தவோ நலமாய் இருக்கும். மெய்யாகவே மெய்யாகவே நான் சொல்லுகிறது என்னவென்றால், அவர்கள் வந்தது மெய்யானால், அவர்களுடைய மனதிலே நல்லுணர்வு உண்டாகும் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அவர்களில் ஒருத்தியுடைய கோழைத்தன்மாவது மற்றவளின் சிற்றின்ப ஆசையாவது அவர்கள் மனதை மாற்றி, ஊருக்குத் திரும்பிப்போகப் பண்ணமாட்டாது என்றே நான் உணருகிறேன்.

---

[1] கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தமது அன்பை தெளிவாய்க் காண்பித்திருக்கிறார். நாம் இந்த அன்பைக் கவனித்து, அது நமது இருதயங்களில் நடப்பித்திருக்கிற கிரியைகளை நாம் உணரும்போது அவருக்கு நன்றியறிதல் செலுத்தவும், நாம் மாறி அவரில் அன்புகூரவும் ஏவப்படுகிறோம். 1 யோவா. 4. 19. "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்."



ஆத்துமாவின் பரவசத்துக்கு முகாந்தரம்.

ஞாதி. நீ உன் அன்பின் அனலினால் இப்படி எல்லாம் சொல்லுகிறாய். இப்படியே எப்போதும் உனக்கு உணர்ச்சி இருக்கும் என்று நினைக்கிறாயா? இந்தப் பாக்கியத்தை எல்லாரும் அநுபவித்தவர்கள் அல்ல; அல்லது உங்கள் இயேசுவை இரத்தச் சோரியாகக் கண்ணோக்கும் ஒவ்வொருவனுக்கும் இந்தப் பாக்கியம் கிட்டுகிறதும் இல்லை. அவர் சிலுவையில் தொங்கின சமயத்தில் எத்தனையோ பேர் சமீபத்தில் நின்றார்கள். அவர் விலாவில் குருதி ஓடினவராய்த் தலைசாய்ந்தபோது எத்தனையோ பேர் அதைக் கண்ணால் பார்த்தார்கள். அப்படி இருந்தும், இப்படி நீ அன்பின் அனலால் பொங்குவதுபோல அவர்கள் உள்ளம் பொங்கினதில்லை. அவர்கள் புலம்புவதற்குப் பதிலாக நகைத்து, அவருடைய தாசராகிறதற்குப் பதிலாகத் தங்கள் இருதயங்களை அவருக்கு விரோதமாய்க் கடினப்படுத்தினார்கள். ஆதலால் என் மக்களே! இப்பொழுது உங்களுக்கு உண்டாகிற ஆவியின் அனலும் உணர்ச்சியும் எல்லாம் நான் சொன்ன விஷயங்களை நீங்கள் தெய்வீக அருளால் தியானிப்பதினாலே தான் உண்டாகிறது. ஒரு தாய்க்கோழி தன் பொதுக்குரலால் தன் குஞ்சுகளுக்கு யாதொரு இரையையும் கொடுக்கிறதில்லை என்று நீங்கள் கேள்விப்பட்டதை மறந்துபோகவேண்டாம். ஆகையால் இந்த உணர்ச்சி ஒரு விசேஷித்த கிருபையால் கிடைத்திருக்கிறது என்றார்.

மூவர் தொங்கும் காட்சி.

அப்புறம் அவர்கள் எல்லாரும் ஏகமாய் வழிநடந்து, கிறிஸ்தியான் பயணம் செய்தபோது பேதை, சோம்பன், துணிகரன் ஆகிய மூவரும் படுத்துத் தூங்கினதாக அவன் சந்தித்த இடத்துக்கு வந்துசேர நான் என் சொப்பனத்தில் கண்டேன். வழிக்கு அப்பாலே அம்மூவரும் இரும்பு சங்கிலிகளில் தொங்குகிறவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

தயா. அதைக் கண்டவுடனே தயாளி தங்களுக்கு வழித்துணையாய் வந்தவரை நோக்கி: ஐயா! இம்மூவரும் யார்? இப்படி இவர்கள் இங்கே தொங்க வைக்கப்பட்டிருப்பதின் அந்தரங்கம் என்ன? என்று கேட்டாள்.

ஞாதி. அதற்கு அவர்: இந்த மூவரும் தங்கள் துன்மார்க்கத்தில் பேர் போனவர்கள்; மோட்ச பிரயாணிகளாக அவர்களுக்கு மனமும் இல்லை, மோட்ச பிரயாணிகளானவர்களைக் கெடுக்கக்கூடுமானால் அதற்கு வேண்டிய பிரயத்தனங்களை

மனந்தளராது செய்ய இவர்கள் பின்வாங்குகிறதும் இல்லை. பேதைமையும், சோம்பலும், துணிகரமுமே இவர்களை ஆண்டு கொண்டிருக்கிறது. சுறுசுறுப்பும் விடாமுயற்சியும் உள்ள பிரயாணிகளை இவர்கள் தங்களுடைய துர்க்குணங்களினால் மேற்கொண்டு கெடுத்துவிட மகா சமர்த்தர். மோட்ச பிரயாணிகளும் தங்களைப்போலொத்த குணங்கள் உடையவர்களாய் இருந்தாலும் கடைசியில் அவர்களுக்கும் மோட்சம் கிட்டும் என்று ஏமாற்றி மோசம்பண்ண வல்லவர்கள். கிறிஸ்தியான் இவ்வழியே முன்போகையில் இவர்கள் எல்லாரும் பாதையின் பக்கத்தில் படுத்திருந்து தூங்கினார்கள். இப்பொழுதோ நீங்கள் இவர்களைத் தொங்குகிறவர்களாகக் காண்கிறீர்கள் என்றார்.

தயா. இவர்கள் மற்றவர்களுடைய பயணத்தைத் தடுத்துப் போட அவ்வளவு சமர்த்தரா?

தொங்கும் மூவரால் கெட்டோர் பலர்.

தைரி. ஆம், ஆம். இவர்கள் அநேகரை வழியைவிட்டுத் திருப்பிவிட்டார்கள். மந்தநடையனை இவர்கள் தங்கள் வசப்படுத்திக்கொண்டார்கள். அதுவும் அன்றி **மூச்சிளைத்தான், நிருற்சாகன், விரகதாபன், தூக்கத்தலையன்** ஆகிய இவர்களும், **மந்தமகள்** என்று பேருடைய ஒரு பெண்ணும் இவர்கள் வலையில் சிக்கப்பட்டுப்போனார்கள். மேலும் இவர்கள் உங்கள் ஆண்டவனைக்குறித்து பொய்யான சமாசாரங்களைப் பிரசித்தப்படுத்தி அவர் மகா கடினமுள்ள எஜமான் என்று சொல்லி அநேகருடைய மனதை மாற்றிப்போட்டார்கள். நீங்கள் போகும் நல்ல நாட்டைக்குறித்தும் இவர்கள் பல அபாண்டங்களைப் பரப்பி, அந்நாடு சிலர் எண்ணுகிற வாழ்விலும் அரைவாசியுள்ளதல்ல என்று சொல்லி பலருடைய இருதயங்களைக் கலக்கிப்போட்டார்கள். இவர்கள் உங்கள் ஆண்டவரின் தாசரைப்பற்றி அவதூறுகளைப் பேசி, அவர்களில் முதல்தரமானவர்கள் வம்பரும், தும்பரும், வண்டரும், துஷ்டருமானவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரிந்தார்கள். இதுவும் அன்றி இவர்கள் தேவனுடைய அப்பத்தைத் தவிடுகள் என்றும் அவர் தமது பிள்ளைகளுக்கு அருளும் ஆறுதல்களை மனப்பாலே அன்றி மற்றொன்றும் இல்லை என்றும் மோட்ச பிரயாணிகளின் யாத்திரையினாலும் அவர்கள் படும் கஷ்டநஷ்டங்களினாலும் யாதொரு லாபமும் வராது என்றும் சொல்லுகிறவர்களாய் இருந்தார்கள் என்றார்.

கிறி. அதைக் கேட்ட கிறிஸ்தினாள்; இவர்கள் இப்படிப் பட்ட பாதகரானால் இவர்களுக்காக என் மனம் இரங்கவே



மாட்டாது; இவர்களுக்கு வரவேண்டியதே வந்து பலித்திருக்கிறது. பிரயாணிகள் பார்த்து எச்சரிப்படைந்துகொள்ளும்படி வழியின் ஓரத்தில் அவர்கள் தொங்கவைக்கப்பட்டிருப்பது நல்லதுதான்;[1] இப்படித் தொங்கப்பட்டிருப்பதோடுகூட இவர்களுடைய நடபடிகளை எல்லாம் இரும்புத்தகட்டிலாவது பித்தளைத்தகட்டிலாவது தீட்டி, வரும் பிரயாணிகள் எச்சரிப்படையும்படி இவ்விடத்தில் பதித்தால் நலமாய் இருக்கும் அல்லவா? என்றாள்.

தைரி. நீங்கள் சற்று எட்டி நடந்துபோய்ப் பார்த்தால் அப்படியே தகட்டில் தீட்டிப் பதிக்கப்பட்டிருப்பதைக் காணலாம் என்று தைரியநெஞ்சன் சொன்னான்.

தயாளி. அப்போது தயாளி: ஆம், ஆம்; அவர்கள் தொங்கட்டும். அவர்கள் பேர் நாற்றமும் அவர்கள் கிரியை அவர்களுக்கு விரோதமான சாட்சியுமாய் இருக்கட்டும். நாம் வருமுன் அவர்கள் தூக்கிப்போடப்பட்டது நமக்குக் கிடைத்த பாக்கியம் என்றே சொல்லவேண்டியது. மற்றப்படி நம்மைப்போல ஏமாந்த பெண்டுகளுக்கு இவர்கள் என்னதான் செய்வார்களோ, யாருக்குத் தெரியும்? என்று சொல்லிவிட்டு ஆனந்தம் கொண்டு,

## கும்மி.

சத்தியபாதைக்கு முற்றும் விரோதமாய்
சர்ப்பனைசெய்வோர் எல்லாம் உணர
ஆசிகள் மூவரும், ஏல ஏலப்போட்
டார்கள், அடையாளமாக.

பாலியரும் கிறிஸ்தினாளும்
தயாளியளும் கும்மியடிக்கிறார்,
துணிகரமேவுமொடு சோம்பன் அன்னவும்
பேதையும் அங்குதான் தொங்குகிறார்.

ஆத்துமமே, பரி சுத்தாங்கத்துக்கு
ஆர் கேடுசெய்யப் பார்ப்பாரோ,
அத்தனைபேருக்கும் எச்சரிப்பாயிரு,
அப்போ கிட்டக்கெளிப்பாயே

என்று பாடினான். அப்புறம் அவர்கள் வழிநடந்து கஷ்ட

[1] சில மோசக்கிறிஸ்தவர்களின் பயங்கரமான வீழ்ச்சியும் சஞ்சலமான முடிவும் லோத்தின் மனைவியாகிய உப்புத்தூணைப்போல் மற்றவர்களுக்கு எச்சரிப்பாக நடக்கின்றன. அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாய் இருந்த அந்தப் பாவங்களுக்கு நாம் மிகவும் விழிப்பாய் இருக்கவேண்டும்.

கிரியின் அடிவாரம் வந்து சேர்ந்ததை நான் என் சொப்பனத்திலே கண்டேன்.

## பிரயாணிகள் கஷ்டகிரி வந்து சேர்ந்தது.

பிரயாணிகள் கஷ்டகிரி சேர்.

பிரயாணிகள் கஷ்டகிரி அடிவாரம் சேர்ந்த உடனே இம்மலையில் கிறிஸ்தியான் பட்ட அவஸ்தைகளை எல்லாம் தைரியநெஞ்சன் அவர்களுக்கு விபரமாய்ச் சொன்னான். அவர்களுக்கு வழித்துணையாக வந்த அவர் முதலாவது ஒரு நீரூற்றண்டை அவர்களை அழைத்துக்கொண்டுபோய், கிறிஸ்தியான் மலை ஏறுமுன் தண்ணீர் குடித்த சுனை இதோ இருக்கிறது, அக்காலத்தில் இந்த ஜலம் பளிங்குபோல் நிர்மலமாய் இருந்தது. ஆனால் நல்ல தண்ணீர் கிடையாதபடி மோட்ச பிரயாணிகள் தாகத்தால் சாகட்டும் என்று யாரோ இந்த ஜலத்தைக் காலால் கலக்கியிருக்கிறார்கள்[a] என்றார். அப்போது தயாளி; அவ்வளவு பொறாமை என் அவர்களுக்கு இருக்கிறது? என்று கேட்டாள். அதற்கு வழிகாட்டி: இந்தத் தண்ணீரை மொண்டு தித்திப்பும் சுத்தமுமான ஒரு பாத்திரத்தில் ஊற்றிவைத்தால் இதின் அழுக்குகள் எல்லாம் அடியில் உறைந்துபோய் ஜலம் தெளிவாய் இருக்கும், அப்போது குடிக்கலாம் என்றார். ஆதலால் கிறிஸ்டீனாளும் தயாளியும் தங்கள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ளும்படியாக வழிகாட்டியாய் வந்தவர் சொன்ன யோசனையின்படியே செய்யவேண்டியதாயிற்று. அவர்கள் தண்ணீரை மொண்டு ஒரு பாத்திரத்தில் ஊற்றி அதின் வண்டல் எல்லாம் அடியில் உறையும்படி வைத்திருந்து அப்புறம் தெளிந்த ஜலத்தைப் பானம்பண்ணினார்கள்.[1]

---

[1] இந்தத் தண்ணீரானது சுவிசேஷ போதனையைக் குறிக்கிறது. பன்னியன் என்பவர் இந்தப் புஸ்தகத்தின் முதல்பாகத்தை எழுதின போது இங்கிலாந்து தேசத்தில் சுவிசேஷ போதனை சுத்தமுள்ளதாய் இருந்தது; இப்போது அப்படி அல்ல என்கிறார். என்றாலும் கேட்கிறவர்கள் தாங்கள் கேட்பதைக்குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாய் இருந்தால் சத்தியத்திலிருந்து தப்பறைகளையும் அசுத்தங்களையும் பிரித்துவிட்டு சுத்தஜலமாகிய தேவனுடைய சுத்த சுவிசேஷத்தை மாத்திரம் உட்கொள்ளுவார்கள். நமக்குக் கொடுக்கப்படும் எல்லாவகைத் தண்ணீரையும் நாம் சாப்பிடவும் எவ்விதப் போதனையையும் அங்கீகரித்துக்கொள்ளவும் படாது. அசுத்தத்தை நீக்கிச் சுத்தமானதை உபயோகிக்கவேண்டும்.

[a] எசே. 34. 18, 19.



கஷ்டகிரி இருவழி.

அப்புறம் அவர்: அடிவாரத்தில் மாயக்காரனும் வேஷக்காரனும் போய் மாண்டுபோன பக்கவழிகள் இரண்டையும் அவர்களுக்குக் காட்டி, இவ்வழிகளைப்போல மோசமும் நாசமுமான பாதைகள் வேறொன்றும் இல்லை என்று சொன்னார். பின்னும் அவர்; கிறிஸ்தியான் இவ்விடத்தில் வந்தபோது இரண்டு பேர் இவ்வழிபோய் நாசமானார்கள்; இப்பொழுது இந்த வழிகள் நீங்கள் பார்க்கிறபடி சங்கிலிகள் கட்டி தடைக்கட்டை போட்டு பள்ளம்வெட்டி ஒருவரும் இவ்வழி நடவாதபடி அடைக்கப்பட்டிருந்தாலும், அநேக பிரயாணிகள் மலையேற மலைவாகி இவ்வழி நடக்கத் தாண்டி விழுகிறார்கள் என்றார்.

கிறி. அப்போது கிறிஸ்டீனாள்: "துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது."[a] இப்படி வேலி தாண்டுகிறவர்கள் பிடரி முறியாமல் எப்படித்தான் தப்பிக்கொள்ளுகிறார்களோ தெரியவில்லை என்றாள்.

பிரயாணிகள் பக்கவழியை நாடும் காரணம்.

வழி. அதற்கு அவர்: அவர்கள் துணிந்துதான் தாண்டுகிறார்கள். அச்சமயத்தில் அரசருடைய ஆட்கள் யாராவது வந்து அவர்களைக் கூப்பிட்டு அது சரியான வழி அல்ல, ஆபத்து வருமுன் ஆய்ந்தோய்ந்து பாருங்கள் என்று சொன்னால், அவர்களைக் கண்டபடி பேசி, "நீங்கள் கர்த்தருடைய நாமத்தில் எங்களுக்குச் சொன்ன வார்த்தையின்படியே நாங்கள் உங்களுக்குச் செவிகொடாமல், எங்கள் வாயிலிருந்து புறப்பட்ட எல்லா வார்த்தையின்படியும் செய்வோம்"[b] என்று மறுமொழி கொடுக்கிறார்கள். நீ இன்னும் சற்றே எட்டிப் போனால், இந்த வழிகள் சங்கிலிகளாலும் கட்டைகளாலும் பள்ளத்தாலும் மாத்திரம் அல்ல முள்வேலியாலும் அடைக்கப்பட்டிருப்பதைக் காண்பாய்; அப்படி இருந்தும் அவர்கள் அவ்வழியைத்தான் நாடி சாகிறார்கள் என்றார்.

கிறி. அதற்கு கிறிஸ்டீனாள்: அவர்கள் பலசோம்பேறிகள், கஷ்டப்பட அவர்கள் முயலுகிறதே இல்லை. ஆகையால் "சோம்பேறியின் வழி முள்வேலிக்குச் சமானம்"[c] என்று சொல்லப்பட்டிருக்கிற நீதிவாசகத்தின்படியே அவர்கள் காரியமும் இருக்கிறது. இந்த மலையேறி அப்பால் உள்ள பட்டணத்

---

[a] நீதி. 13. 15. [b] எரே. 44. 16, 17. [c] நீதி. 15. 19.

தாக்குச் செருவதைவிட அவர்கள் கண்ணிகளாய் கிறந்த பாதையாய்ப் போக விரும்புவார்கள்போல் தோணுது என்றான்.

கஷ்டகிரியின் அடியில்.

அப்புறம் அவர்கள் காலெடுத்துவைத்து மலைமேல் ஏறி ஏறிப்போனார்கள். அவர்கள் மலையின் உச்சிக்குப் போகிறதற்குள்ளாக கிறிஸ்தினாள் களையாகி அப்பப்பா இந்த ஏற்றம் எப்பேர்ப்பட்டவனையும் மூச்சிளைக்கச் செய்துவிடும். தங்கள் ஆத்துமாவைப்பற்றியும் சரீர க்ஷேமத்தை விரும்புகிறவர்கள் லேசான வழியைத் தெரிந்துகொண்டு அதின் வழி நடக்கிறது அதிசயம் இல்லை அப்பா என்றாள். தயாளியோ! ஐயோ, என்னாலே எடுத்தடி வைக்க இயலாது; நான் சற்று உட்கார்ந்து தான் எழுந்திருக்கவேண்டும் என்றாள். சிறுபாலியரும் அழுதுவக்கினார்கள். அப்போது தைரியநெஞ்சன் அவர்களை உற்சாகப்படுத்தி, நடவுங்கள் நடவுங்கள், இங்கே உட்காரவேண்டாம்; அரசரின் நந்தவனம் அதோ தெரிகிறது; அங்கே போய் சற்று இளைப்பாறலாம் என்று சொல்லி, சிறுவனைக் கையைப் பிடித்துக்கொண்டு மெதுவாய் நந்தவனம் போய்ச்சேர்ந்தார்.

கஷ்டகிரி நந்தவனம்.

நந்தவனம் சேர்ந்தவுடன் எல்லாரும் சற்று உட்கார்ந்து இளைப்பாறும்படி ஆவலாய் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தேகம் எல்லாம் வேர்வையாய் வடிந்தது. அப்போது தயாளி: வருத்தப்பட்டவர்களுக்கு இளைப்பாறுதல் எவ்வளவு இன்பமாய் இருக்கிறது.[a] பிரயாணிகளின் அதிபதி இவ்வளவு சுகத்தை இடைவழியில் வைத்திருக்கிறது எவ்வளவு தயாளம்! இந்த நந்தவனத்தைக்குறித்து நான் முன் அடிக்கடி கேள்விப்பட்டேன், ஆனால் இப்போதுதான் முதலாவது கண்டேன். என்றாலும் இவ்விடத்தில் நாம் தூங்காதபடி எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது; இவ்விடம் கிறிஸ்தியான் என்பவர் தூங்கினதால் பட்டபாடு மெத்தவென்று நான் கேள்விப்பட்டு இருக்கிறேன் என்றாள்.

நந்தவன சம்பாஷணை.

அப்புறம் தைரியநெஞ்சன் என்பவன் பிள்ளைகளைப் பார்த்து: பாலியரே! வாருங்கள் வாருங்கள், இப்போது எப்படி இருக்கிறது? மோட்ச பிரயாணம் உங்களுக்கு எப்படிக் காணுது? என்று கேட்டார். அதற்கு அவர்கள் எல்லாரிலும் சிறுவன்

[a] மத். 11. 28.



சொல்லுகிறான்; ஐயா! எனக்குப் போதும் போதும் என்று போயிற்று; நீர் எனக்கு கைத்தாங்கல் கொடுத்து நடத்தினதற்காக உமக்கு அனந்த வந்தனம் செய்கிறேன். இப்போது என் அருமைத் தாயார் ஒருதரம் சொன்ன சங்கதி என் ஞாபகத்தில் வருகிறது; அதாவது, மோட்சபாதை ஏணி ஏற்றம்போலவும் நரகபாதை மலை இறக்கத்தைப்போலவும் இருக்குமாம். நான் மலையிறக்கம்போன்ற மரணபாதையில் நடப்பதைவிட ஏணி யேற்றம்போன்ற ஜீவபாதையில் நடக்கவே தெரிந்துகொள்ளுகிறேன் என்று சொன்னான்.

அப்பொழுது தயாளி: "மலையிறங்குதல் மகா லேசு" என்ற ஒரு பழமொழி இருக்கிறது என்றாள். அதற்கு யாக்கோபு என்று பேருடைய அந்தச் சிறுவன், மலையிறக்கமே மா வருத்தம் என்று பிரலாபிக்கும் காலமும் சீக்கிரம் வரும் என்று என் மனதில் தோன்றுகிறது என்றான். அது சரி, நீ கெட்டிக் காரன், அவனுக்குத் தகுந்த மறுமொழி கொடுத்தாய் என்று வழிகாட்டி சொல்லி பையனைத் தட்டிக்கொடுத்தார். அதைக் கேட்டவுடனே தயாளி புன்னகைகொண்டாள்; அந்தப் பையனோ கூச்சப்பட்டான்.

நந்தவன போஜனம்.

கிறி. அப்போது கிறிஸ்தினாள்: கால் ஆற உட்கார்ந்து இளைப்பாறும்போதே களையாறக் கொஞ்சம் பலகாரம்பண்ணுகிறீர்களா? நான் வியாக்கியானி வீட்டை விட்டுக் காலெடுத்து வைத்த சமயத்தில் அவர் எனக்குத் தந்த மாதளம்பழம் கொஞ்சம் இருக்கிறது; அதோடு அவர் கொஞ்சம் தேன் தட்டும் திராட்சரசமும் தந்தார் என்றாள்.[1] ஓகோ! அவர் உன்னைத் தனித்துக் கூப்பிட்டாரே அப்போது ஏதாவது கொடுத்திருப்பார் என்றுதான் நானும் உத்தேசித்தேன் என்று தயாளி சொன்னாள். ஆம் ஆம், நானும் அப்படியே நினைத்தேன் என்று வேறொருவனும் சொன்னான். அப்போது கிறிஸ்தினாள்: மாதே நான் உனக்குச் சொன்னது எப்படியோ அப்படியே செய்வேன்; நீ என்னோடேகூடப் பயணப்பட்டதினால் எனக்கு என்ன என்ன பாக்கியங்கள் அகப்படுமோ அதில் எல்லாம் உனக்கும் ஒரு பங்கு உண்டென்று நான் சொன்னேன் அல்லவா? அந்தப்பிரகாரம் பயணம்முடியுமட்டும் நடக்கும் என்று சொல்லி, தன் பண்டங்களைப் பங்கிட்டு தயாளிக்கும் மற்றப்

[1] தேவனுடைய ஜனங்களுக்கு உபத்திரவமும் பெலவீனமும் உண்டாகிறபோது அவர் அவர்களை ஆற்றிப் பெலப்படுத்துகிறார்.

பிள்ளைகளுக்கும் கொடுத்தான்; அவர்கள் சாப்பிட்டார்கள். அவன் தைரியநெஞ்சனைப் பார்த்து: நீரும் கொஞ்சம் பசியாறுகிறீரா? என்று கேட்டான். அதற்கு அவர்: நீங்கள் பயணமாய்ப் போகிறீர்கள், நானோ இன்னும் கொஞ்சநேரத்தில் திரும்பிவிடுவேன்; அவைகளை நீங்களே புசித்தால் அதிக நன்மை உங்களுக்கு உண்டாகும்; நான் நாடோறும் இந்தப் பலகாரங்களை தொண்டைமட்டும் தின்கிறேன், நீங்களே இன்று திருப்தி அடையுங்கள் என்றார்.

கிறிஸ்தினாள் நந்தவனத்தில் திராட்சரசப்புட்டியை மறந்து வைத்துவிட்டது.

அவர்கள் எல்லாரும் புசித்துக் குடித்து பண்டைக்கதைகள் பலதைப் பேசியானபின்பு வழிகாட்டி அவர்களைப் பார்த்து; பொழுதாகிறது, இப்போது எழுந்து புறப்பட்டால் நல்லது, எழுந்து நடவுங்களேன் என்றார். அப்படியே ஆகட்டும் என்று அவர்கள் எழுந்து நடந்தார்கள். பாலியர் முன்னும் மற்றவர்கள் பின்னுமாகப் போனார்கள்; ஆனால் கிறிஸ்தினாள் தன் திராட்சரசக்குப்பியை மறந்து வைத்துவிட்டு, தன் மக்களில் ஒருவனை மறுபடியும் அனுப்பினாள். அப்போது தயாளி: இது எப்போதும் களவுபோகிற இடந்தான்போல் இருக்கிறது; கிறிஸ்தியானும் இவ்விடத்தில் தான் தமது சுருளை மறந்துவிட்டுப் போனார். இப்போது கிறிஸ்தினாளும் திராட்சரசக்குப்பியை வைத்துவிட்டாள். ஐயா இதின் காரணம் என்ன? என்றுகேட்டாள். அதற்கு வழிகாட்டி; அதின் காரணம் தூக்கம் அல்லது மறதிதான்; சிலர் தாங்கள் விழித்து இருக்கவேண்டிய சமயத்தில்தான் தூங்குகிறார்கள். வேறு சிலர் தாங்கள் ஞாபகசக்தியில் இருக்கவேண்டிய போதுதான் மறந்துபோகிறார்கள். இந்த முகாந்திரங்களினாலேதான் சில பிரயாணிகள் இவ்விடத்தில் சில பொருட்களை சிலதரம் இழந்துபோய் இருக்கிறார்கள். பிரயாணிகள் தங்கள் மனமகிழ்ச்சியின் காலங்களில் தங்களுக்கு இருக்கிற பொருட்களைப்பற்றி எப்போதும் விழிப்பாய் இருக்கவேண்டியது. அது இல்லாததினாலேதான் அடிக்கடி அவர்கள் களிப்பு கண்ணீராயும் அவர்கள் பிரகாசம் மந்தாரமாயும் மாறிவிடுகிறது. இவ்விடத்தில் கிறிஸ்தியானுடைய காரியம் எப்படி இருந்தது என்று நீங்களே தியானித்துப்பாருங்கள் என்று சொன்னார்.

பிரயாணிகள் ஞாபகப்படிக் கட்டு.

அப்புறம் அவர்கள் வழிநடந்து; சந்தேகியும் அச்சனும் கிறிஸ்தியானைச் சந்தித்து சிங்கங்களைப் பற்றி பயங்காட்டின இடத்திற்கு வந்தபோது; அங்கே வழியோரத்தில் ஒரு



ஞாபகப் படிக்கட்டு கட்டப்பட்டிருப்பதையும் அதின்மேல் வாசகம் தீட்டப்பட்டிருக்கிற ஒரு செப்புத்தகடு பதிக்கப்பட்டிருப்பதையும் அந்தக்கட்டின் அடியில் அப்படிக் கட்டுக் கட்டப்பட்டதற்கு முகாந்திரம் இன்னதென்றும் வரையப்பட்டிருப்பதையும் கண்டார்கள். அந்த வாசகமாவது:

இப்படிக் கட்டைப் பார்ப்போனே!
உன் நெஞ்சும் நாவும் காத்துக்கொள்;
காக்காவிட்டால் நாசமாவாய்,
நாசமானார் பலர் இங்கே

என்பதே.

இந்தக் கவியின்கீழ் வரையப்பட்டிருந்த வாசகமாவது:

"இந்தப் படிக்கட்டு
பயத்தினால் அல்லது சந்தேகத்தினால்
பிரயாணம் செய்ய அஞ்சுவோரைத்
தண்டிப்பதற்காகக் கட்டப்பட்டது.
மேலும்,
இந்தப் படிக்கட்டின்மேலே,
அச்சனும் சந்தேகியும்
கிறிஸ்தியானுடைய யாத்திரையைத்
தடுக்கும்படி முயன்றதினால்
பழுக்கக்காய்ச்சின இரும்புக்கழுவில்
நாவிலே குத்தப்பட்டார்கள்"[1]

என்பதே.

இந்த வாசகத்தைப் படித்தவுடனே தயாளி வழிகாட்டியைப் பார்த்து: ஐயா! இந்த வாசகமும், "கபட நாவே, உனக்கு என்ன கிடைக்கும்? உனக்கு என்ன செய்யப்படும்? பலவானுடைய கூர்மையான அம்புகளும், சூரைச்செடிகளை எரிக்கும் தழலுமே கிடைக்கும்"[2] என்று ஒரு உத்தமன் சொல்லிய வாசகமும் ஒன்றுபோலவே இருக்கிறது என்றாள்.

அப்புறம் அவர்கள் எல்லாரும் வழிநடந்து சிங்கங்கள் இருந்த இடமட்டும் வந்துசேர்ந்ததை நான் என் சொப்பனத்

---

1 மோட்ச பிரயாணம் பண்ணுகிற தமது பிள்ளைகளை வார்த்தையாலோ செய்கையாலோ தடங்கல் பண்ணுகிறவர்களை தேவன் எவ்வளவு கடினமாய்த் தண்டிக்கிறார் என்றும் அருவருக்கிறார் என்றும் இதில் நாம் கண்டுகொள்ளலாம்.

2 சங், 120. 3, 4.

தில் கண்டேன். தைரியநெஞ்சன் மகா பராக்கிரமன் ஆன தால் அச்சிங்கங்களைத்தொட்டு அணுவளவாகிலும் அஞ்சவில்லை. சிங்கங்களைக் கண்டவுடனே முன் ஓடி நடந்த பிள்ளைகள் பயந்து மெதுவாய் நகண்டு பின்னுக்குப் போனார்கள்; அதைக் கண்ட வழிகாட்டி புன்னகைகொண்டு; அந்தப் பிள்ளைகளைப் பார்த்து; என்ன அப்பா! ஆபத்து ஒன்றும் இல்லாத பொழுது நீங்கள் எல்லாரும் முந்தி ஓடிப்போனீர்கள்; சிங்கங்களைக் கண்டவுடனே மெதுவாய் நகண்டு பின்னுக்குப் போய் விட்டீர்களே, அதெப்படி? என்று கேட்டார்.

சிங்கங்கள், இரத்தப்பிரிய ராட்சதன்.

அவர்கள் சிங்கங்களுக்குச் சமீபமாகவே தைரியநெஞ்சன் தம்து கட்கத்தை உறையில் இருந்து உருவி அவைகளுக்கு நேரே பிரயாணிகளை நடத்திக்கொண்டுபோக ஆரம்பித்தார். அச்சமயத்தில் ஒருவன் அங்கே வந்தான்; அவன் சிங்கங்களை உசுப்பிவிட்டு பிரயாணிகளைத் துரத்திவிடும்படியான நோக்கத்தோடுதான் அங்கே வந்தான்போல் இருக்கிறது; இவன் மோட்ச பிரயாணிகளைக் கொல்லுகிறவன் ஆனபடியாலும் இராட்சதகுலத்தைச் சேர்ந்தவன் ஆனபடியாலும் இவனுக்கு **இரத்தப்பிரியன்**[1] என்ற பேர் வழங்கப்பட்டது. அவன் தைரியநெஞ்சனை நோக்கி: இங்கே வந்த காரணம் என்ன? என்று கேட்டான்.

**தைரி.** அவர் இராட்சதனைப் பார்த்து; இந்த ஸ்திரீகளும் பிள்ளைகளும் மோட்ச யாத்திரை போகிறார்கள்; அவர்கள் போக வேண்டிய பாதை இதுதான்; நீ தடுத்தாலும் சரி உன் சிங்கங்கள் கெர்ச்சித்தாலும் சரி, இவ்வழியே அவர்கள் போவார்கள் என்றார்.

**இரா.** இது அவர்கள் பாதையும் இல்லை, இந்தப் பாதையாய் அவர்கள் போகவும் கூடாது. அவர்களைத் தடுக்கும்படியாகவே நான் வந்தேன்; இந்தச் சிங்கங்களை உசுப்பி அவர்கள் இவ்வழி கடவாதபடி தடுக்கவே தடுப்பேன் என்று இரத்தப்பிரியன் சொன்னான்.

---

[1] பரிசுத்தமாய் நடக்கும்படியான தீர்மானம்செய்துகொண்டவர்களின் இரத்தத்தைச் சிந்தின கிஷ்டோர்க்கே பன்னியர் என்பவர் இந்த ராட்சதனுக்கு ஒப்பிடப் பெற்றார் என்று எண்ணலாம். பூர்வத்தில் இங்கிலாந்திலும் விசுவாசிகளுக்குமுன் மகாகஷ்டரம் இப்பேர்ப்பட்ட குரூரங்கள் நடந்தன. துர்க்கமான ராச்சியங்களில் தற்காலத்திலுங்கூட அது நடப்பதாய் இருக்கிறது.



உள்ளபடி சொல்லவேண்டுமானால்; இந்தச் சிங்கங்களின் கெர்ச்சிப்பையிட்டும் இவைகளை உசுப்பி ஏவிக்கொண்டு இருக்கிற இரத்தப்பிரியனுடைய மூர்க்கத்தையிட்டும் இவ்வழி நெடுநாளாய் பிரயாணிகளால் கைவிடப்பட்டு புல்லும் புதரும் வளர்ந்து காடுபோலவே இருந்தது.



கிறி. இரத்தப்பிரியன் ஆட்சேபித்துத் தடுப்பதைக் கிறிஸ்தினாள் கவனித்து, ராஜபாதை இதுவரைக்கும் கையாட்சி செய்யப்படாமல்போனாலும் இதுவரையும் அவர்கள் பக்கவழியாய் நடந்துபோய் இருந்தபோதிலும் இப்போது நாங்களும் அப்படித்தான் போகவேண்டும் என்பது கூடாது. கிறிஸ்தியாகிய நான் இப்போது இவ்வழி போக எழும்பினேன்.

இன்றுவேலியிலே நான் தாயாக இப்போது எழும்பி இவ்வழியைத் திறக்கிறேன் என்றான். a

இர. உடனே இரத்தப்பிரியன் தன் சிங்கங்களின்மேல் ஆணையிட்டுக்கொண்டு; இவைகள் உங்களைப் பீறிப்போடுவது நிச்சயம். ஆதலால் நீங்கள் பக்கவழியாய்ப் போய்விட்டால் உத்தமம்; இந்த வழியாய் உங்களை விடமாட்டேன் என்றான்.

இரத்தப்பிரியனும் தைரிய நெஞ்சனும் போர்புரிதல்.

உடனே தைரியநெஞ்சன் தீவிரித்து முன்னெட்டிநடந்து இரத்தப்பிரியனை நெருங்கித் தன் ஈட்டியால் பலமாய்த் தாக்கினார்; அவன் பின்னுக்கு விலகினான்.

இர. என் பூமியில் இருந்துகொண்டு என்னைக் கொல்லப் பார்க்கிறாயா என்று இரத்தப்பிரியன் கேட்டான்.

தைரி. நாங்கள் ராஜபாதையில் இருக்கிறோம்; அரசருடைய பாதையில் நீ இந்தச் சிங்கங்களைக் கொண்டுவந்து வைத்திருக்கிறாய்; நீ என்னதான் செய்தபோதிலும் இந்தப் பெண்டுகளும் பிள்ளைகளும் இவ்வழி போவது தீர்மானம். உன் சிங்கங்களுக்கு இவர்கள் அஞ்சுவார்கள் என்று நீ சிந்தித்தும் எண்ணாதே! என்று சொல்லிக்கொண்டே இரத்தப்பிரியன் தொப்பென்று விழும்படி ஒரு பலத்த வெட்டுப்போட்டார்; அவன் அப்படா என்று அலறி விழுந்தான். இந்த வெட்டோடு அவன் தலைச்சீராவும் சின்னாபின்னமாகிவிட்டது. அடுத்த வெட்டில் அவன் புயம் ஒன்று துண்டாய் விழுந்துவிட்டது. அப்போது இரத்தப்பிரியன் பேரிடிமுழக்கம்போல் முழங்கினான். அது அந்த ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் நடுநடுங்கப் பண்ணிற்று; என்றாலும் அவன் குற்றுயிராய்க் கீழே புரளுவதைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். அந்தச் சிங்கங்கள் சங்கிலி மாட்டப்பட்டு இருந்ததால் ஒன்றும் செய்ய ஏதுவில்லாதிருந்தன. அவைகளை உசுப்பிவிட்ட இரத்தப்பிரியன் மாண்டுபோனவுடனே தைரியநெஞ்சன் மற்றவர்களை நோக்கி: இப்போ வாருங்கள், என் பின்னாலே நடவுங்கள், சிங்கங்களால் இனி ஒரு சேதமும் சம்பவிக்கமாட்டாது என்றார். அவர் பேச்சின்படியே அவர்கள் நடந்துபோனார்கள். ஆனால் அந்த ஸ்திரீகளுக்கு உள்ளுக்குள் பயம் பயம்தான்; அந்தப் பாவியர் எங்கே செத்துப்போகிறோமோ என்று எட்டி எட்டிப்பார்த்து நடந்துபோனார்கள். ஆனால் யாதொரு தொந்

போர், இரத்தப்பிரியன் அபஜெயமானது.

a நியா. 5. 6, 7.



தரவும் சேதமும் இன்றி எல்லாரும் சுகமே நடந்துபோய்விட்டதை நான் என் சொப்பனத்தில் கண்டேன்.

## அலங்காரமாளிகை சேருதல்.

பிரயாணிகள் அலங்காரமாளிகை சேர்ந்தது.

அப்புறம் அவர்கள்: தங்களுக்கு எதிரே தெரிந்த வாசல் சேவகனுடைய வீட்டுக்குப் போனார்கள்; அந்த வழி இராக்காலத்தில் நடப்பதற்கு சங்கடமானதால், அவர்கள் அதி தீவிரமாய் நடந்து இருட்டிப்போகுமுன் அவனுடைய வீட்டில் சேர்ந்தார்கள். அவர்கள் வெளிவாசலண்டை வந்தவுடனே தைரியநெஞ்சன் கதவைத் தட்டினார். ஆர் அங்கே என்று சேவகன் கேட்டான். நான்தான் என்று அவர் சொன்னவுடனே, சேவகன் கதவைத் திறக்கவந்தான்; ஏனெனில், இவர் அடிக்கடி பிரயாணிகளை வழிநடத்திக்கொண்டு இவ்விடத்துக்கு வருகிறவர் ஆனதால் இவருடைய சத்தத்தை அறிந்துகொண்டான். அவன் வந்து கதவைத் திறந்தவுடனே, ஓ தைரியநெஞ்சன் என்பவரோ! இவ்வளவு இருட்டில் வந்த காரியம் ஏது என்று கேட்டான்; வழிகாட்டிக்குப் பின்னாலே நின்றுகொண்டிருந்த பிரயாணிகளை அவன் காணவில்லை. அதற்கு அவர்: இந்த அரண்மனையில் கொண்டுவந்து சேர்க்கும்படியாக நான் சில பிரயாணிகளைக் கூட்டிக்கொண்டு நமது ஆண்டவருடைய கட்டளைப்படி புறப்பட்டு வந்தேன். வழியில் சிங்கங்களை உசுப்பிப் பிரயாணிகளைத் தூரத்துகிற அந்த இரத்தப்பிரியன் இன்று வந்து குறுக்கிடாவிட்டால் வெகு நேரத்துக்குமுன்னே வந்திருப்போம். இன்று அவனை அதோகதியாக்கிவிட்டேன்; வெகுநேரம் அவனோடு வீரியமாய்ப் போராடி அவனை சங்கரித்துப்போட்டு பிரயாணிகளைச் சுகத்தோடு கூட்டிவந்தேன் என்றான்.

வாச-சேவ. பின்னை உள்ளே வாருமேன்; பொழுது உதிக்குமட்டும் இருந்துபோமேன்?

தைரியநெஞ்சன் தமது இருப்பிடம் திரும்பினது.

தைரி. இல்லை. நான் இந்த ராத்திரியே என் ஆண்டவன் வீட்டுக்குத் திரும்பிப் போய்விடுகிறேன் என்றார்.

கிறி. அப்போது கிறிஸ்தினாள்; ஐயா, ஐயா! இப்படி பத்திரமாயும் அன்பாயும் இவ்வளவு தூரம் எங்களை நடத்திக்கொண்டுவந்து விட்டு இப்போது இடைவழியில் விட்டுப்போ

ட்டு திரும்பிவிடவேண்டும் என்கிறீரே! இதைக் கேட்க எங்கள் மனம் சகிக்குமா? எங்களுக்காக எவ்வளவு வீரத்துவமாய்ப் போராடினீர்! எவ்வளவு அன்போடு ஆலோசனை சொன்னீர்! நீர் எங்களுக்குச் செய்த சகாயங்களை ஒருக்காலும் மறக்கமாட்டோம் என்றாள்.

தயாளி. ஐயா! எங்கள் பயணத்தின் முடிவுமட்டும் நீர் வந்து சகாயம் செய்யலாகாதா? எங்களைப்போலொத்த பேதைமையுள்ள பெண்கள் ஒரு சிநேகிதனும் சகாயனும் இல்லாமல் தனிமையாய் மோசம் நிறைந்த இந்த வழிகளில் என்னமாய்ப் பிரயாணம் செய்யக்கூடும் ஐயா! என்று தயாளி சொன்னாள்.

யாக். பிள்ளைகள் எல்லாரிலும் சிறியவனாகிய யாக்கோபும்; ஐயா! உமக்கு மெத்தவும் சரணம் செய்கிறேன்! எங்களோடு வந்து எங்களுக்கு ஆகவேண்டிய உதவிகளைச் செய்யும்படி உமது மனதைத் திருப்பும் ஐயா! நாங்களோ சக்தியற்றவர்களாயும் எங்கள் வழியோ சங்கடம் நிறைந்ததாயும் இருக்கிறதே என்றான்.

கோராத உதவி கிடையாது.

தைரி. அப்போது தைரியநெஞ்சன் சொல்லுகிறார்; நான் என் ஆண்டவனின் கட்டளைக்கு அமைந்து நடக்கிறேன். உங்கள் வழிநெடுக வந்து வழிகாட்டவேண்டும் என்று அவர் கட்டளையிட்டிருந்தால் அதின்படியே செய்ய ஆயத்தமாய் இருப்பேன். ஆனால் அது தப்பிப்போயிற்று; அவர் என்னை உங்களுடன் இம்மட்டும் வரும்படி திட்டம் பண்ணினபோதே, அப்போதேமாத்திரம் நீங்கள் அவரிடத்தில் என்னைப் பிரயாண முடிவுமட்டும் அனுப்பவேண்டும் ஐயா என்று கேட்டிருப்பீர்களானால்,[1] அப்படியே ஆகட்டும் என்று எனக்கும் உத்திரவு கொடுத்திருப்பார். எப்படியும் இப்போது நான் போகவேண்டியதுதான்; ஆகையால் கிறிஸ்தீனாளே! தயாளியே! வீராய பாலரே! சுகமே பயணம் செய்யுங்கள், நான் போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டுத் திரும்பிப்போனார்.

[1] இன்னின்ன ஆசீர்வாதங்கள் நமக்குத் தேவை என்று முன்னதாய் அறிந்திருக்கும் அவைகளுக்காக வேண்டிக்கொள்ளாவிட்டால் தேவன் அவைகளைக் கொடுக்கமாட்டார் என்று பிரயாணிகளுக்கு மறுபடியும் ஞாபகப்படுத்துகிறார்.



பிரயாணிகள்; அவர்களை விசாரிக்கை.

அப்பால் வாசல்காப்போன்; கிறிஸ்தீனாளுடைய தேசமெதுவென்றும் இன ஜனங்கள் ஆர் என்றும் கேட்டார். அதற்கு அவள்: நான் நாசபுரியில் இருந்து வருகிறேன். நான் ஒரு கைம்பெண், என் புருஷன் இறந்துபோனார்; அவருக்குக் கிறிஸ்தியான் பரதேசி என்று பேர் என்றாள். அப்படியா சமாசாரம்? அவன் உன் புருஷனோ? என்று சேவகன் கேட்டான். ஆம், ஆம் அவர்தான் என் கணவர், இவர்கள் தான் அவருடைய பிள்ளைகள்; இதோ நிற்கிற இந்தப் பெண் எங்கள் ஊரில் உள்ளவள்தான் என்றாள். உடனே அவன் தன் வழக்கப்பிரகாரம் மணியை அடித்தான். மணிநாதம் கேட்டவுடனே, அரண்மனைக் கன்னிமாப்பெண்களில் ஒருத்தியாகிய மனத்தாழ்மை வந்தாள். சேவகன் அவளை நோக்கி: நீ இக்கணமே உள்ளேபோய் கிறிஸ்தியானுடைய மனைவியாகிய கிறிஸ்தீனாளும் அவள் பிள்ளைகளும் மோட்ச பிரயாணிகளாய் இவ்விடம் வந்திருக்கிறார்கள் என்று அறிவி என்றான். அவள் அப்படியே போய்த் தெரியப்படுத்தினாள். ஆ! செய்தி அவள் வாயில் இருந்து பிறக்கவே அங்குள்ளவர்கள் காட்டிய அகமகிழ்ச்சிக்கும் ஆனந்த சத்தத்துக்கும் ஒரு அளவு உண்டா?

மனத்தாழ்மை.

பிரயாணிகளைப் பற்றிய சந்தோஷப் பாடல்.

கிறிஸ்தீனாளும் மற்றவர்களும் இன்னும் வெளியேதான் இருந்ததால் அவர்கள் உடனே வந்தார்கள். அவர்களுக்குள் மூத்தவர்களாய்க் காணப்பட்ட சிலர் அவளை நோக்கி:

உள்ளே வா கிறிஸ்தீனாளே உள்ளே வா!
உள்ளே வா பக்தன்பாரியாளே உள்ளே வா!
உள்ளே வா பாக்கியவதியே உள்ளே வா!
உள்ளே வா உன் பயணத்தோழி உள்ளே வா!

என்று மெத்த அன்போடு அவர்கள் அவளையும் அரமனைக்குள் அழைத்துக்கொண்டு போனார்கள்.[1] அப்புறம், அவர்கள் எல்லாரும் அழகும் அலங்காரமும் விஸ்தாரமுமான ஒரு சாலையறையில் உட்கார வைக்கப்பட்டார்கள். விருந்தாடிகள் வந்திருக்கிற செய்தி அரமனையாதிபருக்கு அறிவிக்கப்பட்டது. அவரும் வந்து அவர்களை முத்தமிட்டு மிகவும் தேவனுடைய

[1] பிரயாணம் பண்ணத் துவக்கினவர்களுக்கு மற்றவர்கள் சொன்ன உபசாரவார்த்தைகள் மிகுந்த தைரியத்தையும் பிரயோசனத்தையும் கொடுக்கத்தக்கவை.

கிருபாபாத்திரங்களே நீங்கள் வாழ்க! உங்களைக் காண்பது உங்கள் சிநேகிதராகிய எங்களுக்கும் வாழ்வைத் தருகிறது என்று வாழ்த்தினார்.

அலங்காரமாளிகை இராப்போஜனம்.

இதற்குள்ளாக பொழுது அஸ்தமித்து அதிக நேரம் ஆகிவிட்டதானாலும் விருந்தாடிகள் பிரயாணத்தினால் இளைப்படைந்து இருந்தாலும் வழியில் நடந்த போரும் சிங்கக்காட்சியும் அவர்கள் மனதில் களையை உண்டாக்கினதாலும் கூடிய சீக்கிரத்தில் படுத்துக்கொண்டு இளைப்பாறும்படி அவர்கள் ஆசைப்பட்டார்கள். அச்சத்திரத்தில் இருந்தவர்களோ; நீங்கள் இளைப்பாறப் போகுமுன் இராப்போஜனம் பண்ணிக்கொள்ளவேண்டியது என்று சொன்னார்கள்.[1] ஏனெனில், பிரயாணிகள் அன்று சத்திரத்தில் தங்குவதைப்பற்றி வாசல்சேவகன் முந்தியே கேள்விப்பட்டு அவர்களுக்குத் தெரியப்படுத்தினபடியால் அவர்கள் இவர்களுக்காக ஒரு ஆட்டுக்குட்டியைப் பொரித்து அதற்கேற்ற ஆணத்தையும் சமைத்து வைத்து இருந்தார்கள்.[a] அவர்கள் இராப்போஜனம் உண்டு ஒரு ஸ்தோத்திரப்பாட்டோடே தங்கள் பிரார்த்தனையை முடித்தபின்பு இனி அடியார் இளைப்பாற உத்தரவுகொடுங்கள் என்றார்கள். அப்போது கிறிஸ்தீனாள் கேட்கிறாள்: மகாநயரே! என் கணவர் இங்கே வந்திருந்தபோது அவருக்கு நீங்கள் கொடுத்த அறையிலே அடியாரும் படுத்து இளைப்பாறும்படி தந்தால் எங்களுக்கு மெத்த சந்தோஷமாய் இருக்கும் என்று கேட்டாள். அவள் விருப்பம்போல் செய்யப்பட்டது; அவர்கள் எல்லாரும் அந்த அறையில் படுத்துக்கொண்டார்கள்.[2] படுக்கையில் இருந்துகொண்டே கிறிஸ்தீனாளும் தயாளியும் பிரயோஜனமான சில விஷயங்களைக் குறித்து சம்பாஷிக்கத் தொடங்கினார்கள்.

கிறிஸ்தியான் படுத்திருந்த அறையே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

[1] இராப்போஜனம். இந்த விருந்தை அனுசரிப்பது திருச்சபையில் காண்பிக்கும் நன்றியறிதலுக்கு அறிகுறியாக மாத்திரம் அல்ல, நாம் சந்தோஷமும் பெலனும் அடைய ஏதுகரமாயும், மேலும் மற்றப் பிரயாணிகளுடன் தோழமைபண்ண அது ஒரு கருவியாயும் இருக்கிறது.

[2] இயேசுகிறிஸ்துவின் மார்பு எல்லாருக்கும் பொதுவான இளைப்பாறுதலான இடம்.

[a] யாத். 12. 21. யோவா. 1. 29.



கிறி. என் கணவர் மோட்சபயணமாகப் புறப்பட்ட சமயத்தில் நானும் இப்படி ஒருகாலத்தில் பிரயாணி ஆவேன் என்று கனவிலும் நினைத்ததில்லை.

தயாளி. அது மெய். இப்படி இந்த இடத்துக்கு வந்து அவர் படுத்திருந்த பஞ்சமெத்தையில் படுத்து அவர் தூங்கின அறையில் தூங்குவேன் என்று நீ நினைத்திருக்கமாட்டாய்.

பிரயாணிகளின் பள்ளியறைப் பேச்சு.

கிறி. அதுமாத்திரமா? அவருடைய முகத்தை மறுபடியும் சந்தோஷத்தோடு காண்பேன் என்றாவது ஆண்டவராகிய ராஜாவை அவரோடு நின்று பணிவேன் என்றாவது நான் சிந்தித்தும் நினைக்கவில்லை; ஆனால் அந்தப் பாக்கியங்களில் பங்கடைவேன் என்று இப்போது நம்புகிறேன்.

தயாளி. பொறு, பொறு! ஏதோ ஒரு இன்பதொனி கேட்கிறது அல்லவா?

கிறி. ஆம், ஆம். அது கீதவாத்தியத்தொனிபோல கேட்கிறது. நாம் இங்கே வந்துசேர்ந்த சந்தோஷத்திற்காகக் கீதவாத்தியம் கொட்டுகிறார்கள் என்றே நினைக்கிறேன்.

தயாளி. என்ன அதிசயம்! நாம் இங்கே வந்து சேர்ந்ததற்காக வீட்டிலும் கீதம், மனதிலும் கீதம், பரலோகத்திலும் கீதம்! என்று இப்படி சிலநேரம் பேசிக்கொண்டு இருந்து அப்படியே அயர்ந்து நித்திரைசெய்தார்கள்.

தயாளியின் சிரிப்பு.

மறுநாள் காலையில் அவர்கள் இருவரும் விழித்தவுடனே கிறிஸ்தீனாள் தன் தோழியைப் பார்த்து: மாதே, கடந்த இரவில் நீ நித்திரைசெய்கையில் கொல்லென்று நகைத்த காரணம் ஏது? ஏதாவது சொப்பனம் கண்டாயோ என்று கேட்டாள்.

தயாளி. ஆம், அம்மா! நல்ல ஒரு சொப்பனந்தான் கண்டேன் அம்மா; ஆனால் நான் நகைத்தது நிஜந்தானோ?

கிறி. நீதான் குலுங்கக் குலுங்க நகைத்தாயே; அந்தச் சொப்பனத்தைச் சொல், பார்ப்போம்.

தயாளி கண்ட சொப்பனம்.

தயாளி. யாரும் இல்லா வனம்போன்ற ஓர் இடத்தில் நான் தனிமையாய் உட்கார்ந்துகொண்டு, என் இருதயக் கடினத்தைக் குறித்து மனவியாகுலப்படுகிறதுபோல் இருந்தது; அங்கே உட்கார்ந்த கொஞ்சநேரத்துக்குள்ளாக என்னைப் பார்க்கவும்

என் வியாகுலம் என்ன என்று விசாரிக்கவும் அனந்தம்பேர் வந்து கூடினதுபோலவும் இருந்தது; அவர்கள் கேட்கக் கேட்க நான் என் வியாகுலத்தை விபரமாய்ச் சொல்லிக்கொண்டே இருந்தேன்; அதைக் கேட்ட சிலர் சிரித்தார்கள், சிலர் பித்தங் கொண்டவள் என்று இட்டினார்கள்; வேறு சிலர் என்னைக் கண்டபடி இழுத்துத் தள்ளி குரங்காட்டம்பண்ணினார்கள். அப்போது நான் வானத்துக்கு நேராக என் கண்களை ஏறெடுத்தாற்போல் இருந்தது; அங்கிருந்து ஒருவர் சிறகுதட்டிப் பறந்து வருகிறதைக் கண்டேன்; அவர் நேராய் என்னண்டை இறங்கி வந்து என்னைப் பார்த்து: தயாளியே! உன் கனத்ததுக்கம் என்ன? என்று கேட்டார். நான் என் மனோவியாகுலங்கள் ஒன்றையும் மறைத்துவைக்காமல் எல்லாவற்றையும் அவர் மடியில் கொட்டினேன்; அவரோ, அம்மணி! உனக்கு சமாதானம் உண்டாவதாக என்று சொல்லி, தமது கைக்குட்டையினால் என் கண்ணீரைத் துடைத்து, வெள்ளி உடையாலும் பொன் உடுப்பாலும் என்னை உடுத்தினார்.[3] அவர் என் கழுத்திலே சரப்பளியையும் காதுகளிலே நகைகளையும் போட்டு என் சிரசிலே சிங்காரக் கிரீடம் ஒன்றையும் சூட்டினார். அப்புறம் அவர் என் கையைப் பிடித்து நடந்துகொண்டு: தயாளியே, என் பிறகே கடியாய் நட மாதே! என்று சொல்லிக்கொண்டு வானவழி பறந்துபோனார். நானும் அவர் பின்னாலே போனேன். கடைசியாக நாங்கள் இருவரும் ஒரு பொன் வாசலண்டை சேர்ந்தோம்; அவர் கதவைத் தட்டினார், உடனே உள்ளிருந்தவர்கள் திறந்தார்கள். அவர் உள்ளே போனார், நானும் அவர் பிறகாலே நடந்து ஒரு சிறந்த சிம்மாசனமட்டும் போனேன். அதின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். சிம்மாசனபதியாய் சிறந்து வீற்றிருந்த மகானுபாவர் என்னைக் கண்டு: மகளே, நீ வாழ்க என்றார். அந்த லோகம் சூரியசந்திர நட்சத்திராதிகளைப்போல ஜோதிமயமாயும் கண்ணைப் பகட்டும் காந்தி உள்ளதாயும் காணப்பட்டது. அந்த இடத்திலே நான் உன் துணைவனையும் கண்டாற்போல் இருந்தது, அப்புறம் திடுக்கென்று விழித்துக்கொண்டேன்; ஆனால் நான் நகைத்தேனோ?

கிறி. நகைத்தது நிச்சயம்தான். இவ்வளவு ஆனந்தக் கனவு கண்டவள் நகைக்கமாட்டாளா என்று நீயே அறிந்துகொள். என் மனதில் தோன்றுகிறபடி நீ கண்டது மகா நல்ல கனவு.

---

[3] எசே. 16. 8–11.



உன் சொப்பனத்தின் முன்பங்கு நிஜம்[1] என்று அறிந்துகொள்ளுகிற நீ அதின் பின்பங்கின்படியும் நிறைவேறும் என்பதைக் கடைசியில் அறிந்துகொள்வாய். "தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத் திருத்துகிறவர் அல்லவே. நித்திரை மனுஷர்மேல் இறங்கி, அவர்கள் படுக்கையின்மேல் அயர்ந்து இருக்கையில், அவர் இராக்காலத்துத் தரிசனையான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்துகிறார்."[2] நாம் இரவில் தேவனோடு சம்பாஷிக்கவேண்டும் என்று விழித்திருக்கவேண்டியதில்லை. அவர் நமது நித்திரையில் நம்மைச் சந்தித்து தமது சத்தத்தை நாம் கேட்கும்படி செய்யலாம். நமது தூக்கத்தில் முதலாய் அடிக்கடி நமது இருதயம் விழித்துக்கொள்ளுகிறது. ஒருவன் விழித்திருக்கையில் பேசுவது போல், இப்போதும் தேவன் அநேகம் வார்த்தைகளால் ஆவது பழமொழிகளால் ஆவது அடையாளங்களால் ஆவது ஒப்பனைகளால் ஆவது பேசக்கூடும்.

தயாளி. நான் கண்ட சொப்பனத்துக்காகச் சந்தோஷப்படுகிறேன். மறுபடியும் நான் சிரித்து மகிழும்படியாக அச் சொப்பனம்போல் சீக்கிரம் நிறைவேறவேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்.

கிறி. விடிந்தும் வெகுநேரம் ஆயிற்றே; நாம் எழுந்துபோய் இன்று நாம் இங்கே செய்யவேண்டிய காரியங்கள் எவை என்று விசாரித்து அறிந்துகொண்டால் நலமாய் இருக்கும் அல்லவா?

தயாளி. அம்மா! இச்சத்திரத்தார் நம்மை இவ்விடத்தில் சிலகாலம் இருக்கும்படி கேட்டால் நல்லது என்று சம்மதித்துக்கொள்ளுகிறது நலம். இந்தக் கன்னிமாப்பெண்களோடே பழகிக்கொள்ளும்படி இன்னும் சிலகாலம் இங்கே தங்கி இருக்க எனக்கு மட்டற்ற ஆசை இருக்கிறது. விவேகி, பயபக்தி, நேசமணி ஆகிய கன்னிமாப்பெண்கள் சௌந்தரரூபிக

---

[1] தயாளி தன் இருதயகடினத்தைக் குறித்து புலம்பினதே சொப்பனத்தின் முதல்பாகம். இக்காரியம் சத்தியந்தான். அப்படியே மற்றவும் சத்தியமாய்த் தீரும். தமது சொந்தப் பாவத்தின் தன்மையை உணர்வதே மோட்சபாக்கியத்தை அடையும் வழி.

[2] யோபு, 33. 14–16.

ளும், சற்குணசாலிகளுமாய் இருக்கிறதாக என் மனதில் பட்டிருக்கிறது.

கிறி. அவர்கள் என்ன சொல்லுகிறார்களோ பார்ப்போம் என்று சொல்லிக்கொண்டு, கீழ்த்தட்டுக்கு இறங்கிவந்து அங்கே இருந்தவர்களுடன் கடந்த இரவைப் பின்னிட்ட வகையைக் குறித்து கலந்து பேசிக்கொண்டார்கள்.

தயாளி. அப்போது தயாளி: நல்ல தூக்கம், இன்று இரவில் நான் அநுபவித்த சந்தோஷம்போல் என் ஆயுசில் ஒருநாளும் நான் அநுபவித்ததில்லை என்றாள்.

இவ்விடத்தில் இன்னும் சிலகாலம் உங்களுக்கு இருக்கப் பிரியம் இருந்தால் இந்த வீட்டின் பாக்கியங்கள் எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும் என்று விவேகியும் பயபக்தியும் சொன்னார்கள்.

பிரயாணிகள் அங்கே சிலகாலம் தங்கியிருந்தது.

நேச. ஆம் ஆம்; அந்த வாழ்வுகள் எல்லாம் மனப்பூர்வமாய் உங்களுக்கு அருளப்படும் என்று நேசமணியும் சொன்னாள். அப்படியே அவர்கள் ஒருமாசத்துக்கு அதிகமாய் அங்கே தங்கியிருந்து ஒருவருக்கொருவர் அதிகப் பிரயோஜனம் உள்ளவர்கள் ஆனார்கள்.

விவேகி கிறிஸ்தினாளுடைய பிள்ளைகளைச் சோதிக்க ஆசைப்பட்டது.

கிறிஸ்தினாள் தன் பிள்ளைகளை எவ்விதமாய் வளர்த்து இருக்கிறாள் என்று அறியும்படி விவேகி ஆசைப்பட்டதால், நான் உன் பிள்ளைகளுக்கு சில கேள்விகளைக் கேட்கலாமா[1] என்று தாயைக் கேட்டாள். அப்படியே ஆகட்டும், அதுவே எனக்குச் சந்தோஷம் என்று கிறிஸ்தினாள் சம்மதித்ததின்பேரில், விவேகி அவர்கள் எல்லாரிலும் இளையவனாகிய யாக்கோபை முதலாவது கூப்பிட்டு பின்வருகிறபடி கேள்வி கேட்டாள்.

விவேகி. யாக்கோபு, கிட்டவா அப்பா! உன்னை உண்டாக்கினது யார் என்று உனக்குத் தெரியுமா?

யாக்கோபின் பரீட்சை.

யாக். தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்தஆவி என்னை உண்டாக்கினார்.

[1] குழந்தைகளுக்குக் கேள்விகேட்கிறது நன்மையும் அவசரமுமானது; அப்படியேதான் வளர்ந்தவர்களுக்கு பிரயோசனமாய் இருக்கும்.



விவேகி. கெட்டிக்காரன்; உன்னை இரட்சிக்கிறவர் யார் என்று சொல்லுவாயா?

யாக். தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்தஆவி என்னை இரட்சிக்கிறவர்.

விவேகி. மெத்த நல்ல பிள்ளை! நல்லது; தேவனாகிய பிதா உன்னை எப்படி இரட்சிக்கிறார்?

யாக். தம்முடைய கிருபையினால் இரட்சிக்கிறார்.

விவேகி. தேவனாகிய குமாரன் உன்னை எப்படி இரட்சிக்கிறார்?

யாக். தம்முடைய நீதியினாலும் மரணத்தினாலும் உதிரத்தினாலும் ஜீவனினாலும் இரட்சிக்கிறார்.

விவேகி. தேவனாகிய பரிசுத்தஆவி உன்னை எப்படி இரட்சிக்கிறார்?

யாக். தம்முடைய பிரகாசிப்பித்தலாலும் புதுப்பித்தலாலும் பரிபாலித்தலாலும் இரட்சிக்கிறார்.

இந்த உத்தரவுகளை யாக்கோபு சொல்லக் கேட்ட விவேகி சந்தோஷப்பட்டு கிறிஸ்தினாளை நோக்கி: இவ்விதமாய் உன் பிள்ளைகளை வளர்த்ததற்காக உன்னைப் புகழவேண்டியதாய் இருக்கிறது என்று சொல்லிப்போட்டு, எல்லாரிலும் இளையவனே இவ்வளவு நன்றாய் உத்தரவு சொல்லுகிறபடியினாலே இந்தக் கேள்விகளையே மற்றப் பிள்ளைகளிடத்திலும் கேட்க அவசரம் இல்லை என்று நினைக்கிறேன். இவனுக்கு நேரே மூத்தவனைக் கேள்வி கேட்போம் என்றாள்.

விவேகி. அப்படியே விவேகி: முந்தினவனுக்கு மூத்தவனாகிய யோசேப்பைக் கூப்பிட்டு உன்னிடத்தில் நான் சில கேள்விகளைக் கேட்கட்டுமா? என்றாள்.

யோசேப்பை விசாரித்தது.

யோசே. நீங்கள் கேள்வி கேட்பது எனக்கு மெத்தச் சந்தோஷந்தான் அம்மா!

விவேகி. மனுஷன் எப்படிப்பட்டவன்?

யோசே. என் தம்பி சொன்னதுபோல் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு புத்தியுள்ள சிருஷ்டி.

விவேகி. "இரட்சிக்கப்பட்ட" என்ற வார்த்தையின் பொருள் என்ன?

யோசே. மனிதன் பாவத்தினாலே சிறை அல்லது நிர்ப்பந்த ஸ்திதிக்குத் தன்னை உட்படுத்திக்கொண்டு இருக்கிறான் என்று காட்டுகிறது.

விவேகி. திரித்துவ தேவனால் இரட்சிக்கப்படுகிறான் என்பதின் கருத்து என்ன?

யோசே. பாவமானது வல்லமையும் பராக்கிரமமும் உள்ள ஒரு கொடுங்கோல் மன்னனைப்போல் இருக்கிறது என்றும், தேவன் ஒருவரே அன்றி வேறெவரும் அதின் ஆக்கிரமக்காரத்திக்குள் இருந்து நம்மை விடுதலைசெய்யக்கூடாது என்றும், இந்த நிர்ப்பந்த நிலைமையில் இருந்து நம்மைப் பிடித்து இழுத்து இரட்சிக்க தேவன் அன்பும் தயாளமும் உடையவராய் இருக்கிறார் என்றும் காட்டுகிறது.

விவேகி. ஏழை மனுஷனை இரட்சிப்பதில் தேவனுடைய நோக்கம் என்ன?

யோசே. அவருடைய நாமத்துக்கும் அவருடைய கிருபைக்கும் அவருடைய நீதிக்கும் மகிமை உண்டாகவும் அவருடைய சிருஷ்டிக்கு நித்திய பாக்கியங்கள் உண்டாகவுமே.

விவேகி. இரட்சிக்கப்படவேண்டியவர்கள் யார்?

யோசே. அவருடைய இரட்சிப்பை அங்கீகரிக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் எல்லாருமே.[1]

விவேகி. யோசேப்பு! நீ நல்ல பையன்; உன் தாயார் உனக்கு நன்றாய்ப் படிப்பித்திருக்கிறாள். அவள் சொன்ன போதனைகளுக்கு நீ நன்றாய் செவிகொடுத்திருக்கிறாய்; நீ போ என்று சொல்லி அனுப்பினாள்.

அப்புறம் அவள் அவனுக்கு நேரே மூத்தவனாகிய சாமுவேலைக் கூப்பிட்டாள். அவன் வந்தான். அப்பா! உன்னை நான் கேள்வி கேட்கட்டுமா என்று கேட்டாள்.

சாமு. நல்லது அம்மா! கேளுங்கள்.

விவேகி. மோட்சமாவது என்ன?

சாமுவேலை விசாரிக்கிறது.

சாமு. மட்டற்ற பாக்கியங்கள் உள்ள ஒரு இடமும் நிலைமையுமே மோட்சம். ஏனெனில் தேவன் அங்கே வாசமாய் இருக்கிறார்.

[1] இரட்சிக்கப்படுகிறவர்கள் அநேகம்பேர்களோ அல்லது கொஞ்சமோ என்பது இனங்கள்பேரில் விழுந்த காரியம். ஏனென்றால் இரட்சிப்பு எல்லாருக்கும் தகுதியானதும் போதுமானதுமாய் இருக்கிறது. ஆனால் அதை அங்கீகரித்துக்கொள்ளுகிறவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள்.



விவேகி. நரகமாவது என்ன?

சாமு. மட்டற்ற புலம்பலுள்ள ஒரு இடமும் நிலைமையுமே நரகம். ஏனெனில் அங்கே பாவமும் பிசாசும் மரணமும் வாசமாய் இருக்கிறது.

விவேகி. நீ ஏன் மோட்சம் போகவேண்டும் என்கிறாய்?

சாமு. தேவனைத் தரிசிக்கவும் இளைப்பின்றி அவரைச் சேவிக்கவும் கிறிஸ்துவைக் காணவும் நீடூழிகாலமாய் அவரை நேசிக்கவும், எந்தப் பிரயத்தனத்தினாலும் இவ்வுலகத்தில் கிடைக்கக்கூடாத ஆவியின் பரிபூரணத்தை உடையவனாய் இருக்கவுமே நான் மோட்சம் போக விரும்புகிறேன்.

விவேகி. நீ மெத்த நல்ல பையன்; நன்றாய்ப் படித்தும் இருக்கிறாய் என்றாள். அப்பால் அவள் எல்லாருக்கும் மூத்த பையனாகிய மத்தேயுவைக் கூப்பிட்டு, உனக்கும் சில கேள்விகள் போடட்டுமா அப்பா? என்று கேட்டாள்.

மத். நீங்கள் கேள்வி போடுவது எனக்கு மெத்தப் பிரியம் தான்.

மத்தேயுவை விசாரிக்கிறது.

விவேகி. நல்லது, அப்பா கேட்கிறேன்; தேவனுக்கும் முந்தினதான ஒரு வஸ்து ஒருவேளை இருந்ததோ?

மத். அது எப்படி இருக்கக்கூடும்? ஏனெனில் தேவன் அநாதி ஆயிற்றே; அதுவும் அன்றி முதலாம் நாள் ஆரம்பம் மட்டும் அவரைத் தவிர வேறெந்த வஸ்துவும் இருந்தது இல்லையே. ஏனெனில் கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளில் உள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார் அல்லவா?

விவேகி. வேதாகமத்தைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

மத். அது தேவனுடைய பரிசுத்த வார்த்தையாய் இருக்கிறது.

விவேகி. உன் புத்திக்கு விளங்குகிறவைகள் அல்லாமல் வேறொன்றும் அதில் எழுதப்பட்டு இருக்கவில்லையா?

மத். புத்திக்கு விளங்காத அநேக சங்கதிகளும் அதில் எழுதப்பட்டு இருக்கின்றன.

விவேகி. புத்திக்கு விளங்காத விஷயங்களை நீ காணும்போது என்ன செய்கிறாய்?

மத். தேவன் என்னைப்பார்க்கிலும் அதிக ஞானமுடையவர் என்றே நான் நினைத்துக்கொள்ளுகிறேன். அதோடு என்னுடைய நன்மைக்கு ஏதுவான விஷயங்கள் எவைகள் அதில்

உண்டோ, அவைகளை அவரே எனக்கு விளக்குவிக்கவேண்டும் என்று ஜெபம்செய்கிறேன்.[1]

விவேகி. மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்து உன்னுடைய விசுவாசம் என்ன?

மதி. அவர்கள் எப்படிப் புதைக்கப்பட்டார்களோ அப்படியே எழுந்திருப்பார்கள் என்று விசுவாசிக்கிறேன்; அதே மேனி இருக்கும். ஆனால் அது அழிவுள்ளதாய்மாத்திரம் இராது; இப்படியே நான் விசுவாசிக்கிறதற்கு இரண்டு முகாந்திரங்கள் உண்டு. முதலாவது தேவன் அப்படியே வாக்குக்கொடுத்து இருக்கிறார். இரண்டாவது அவர் தமது வாக்கின்படியே செய்ய வல்லவராயும் இருக்கிறார்.

பாலியரின் பாடசோதனை முடிவு, விவேகி போதனை.

விவேகி. நல்லது பிள்ளைகளே! நீங்கள் இன்னும் உங்கள் தாயின் போதனைகளுக்குச் செவிகொடுக்கவேண்டும்; அவள் இன்னும் அநேக விஷயங்களை உங்களுக்குப் போதிக்கட்டும். அதோடு நீங்கள் மற்றவர்களிடத்திலிருந்து புறப்படுகிற நல்வார்த்தைகளுக்கும் உங்கள் செவிகளைச் சாய்க்கவேண்டும். அதுவும் அன்றி வானமும் பூமியும் உங்களுக்குப் போதிப்பதை எல்லாம் வெகு நுட்பமாய் நீங்கள் கவனித்து அறிந்துகொள்ள வேண்டியது. எல்லாவற்றிலும் விசேஷமாய் உங்கள் தகப்பனார் பரதேச பிரயாணம் செய்யும்படியாக அவனை ஏவின அந்தப் புஸ்தகத்தை அதிகமாய் தியானித்து வரவேண்டும். என் பிள்ளைகளே! நீங்கள் இவ்விடம் இருக்குமட்டும் நானும் என்னால் கூடியவரையும் உங்களுக்குப் படிப்பிக்கும்படி ஜாக்கிரதையாய் இருப்பேன். உங்களைத் தேவபக்திக்கு ஏதுவாய் ஊன்றக் கட்டும்படியான கேள்விகள் ஏதாவது நீங்கள் என்னிடத்தில் கேட்கப் பிரியப்பட்டால் எனக்கு மட்டற்ற சந்தோஷம் உண்டாகும் என்றாள்.

பிரயாணிகள் இவ்விடத்தில் தாமதித்த ஒரு வாரத்துக்குள்ளாக தயாளியின்மேல் காதல்கொண்டவனைப்போல் காணப்பட்ட ஒரு சிநேகிதன் அவளைச் சந்திக்கும்படி வந்தான்.

[1] தேவன் அறிவிப்பதை எல்லாம் நாம் அறிவது கூடாதகாரியம். நாம் அறியக்கூடாத அநேக காரியங்களை தேவன் சொல்லுகிறார். நாம் ஒவ்வொருநாளும் அதிகம் அதிகமாய் கற்றுக்கொள்ளலாம். ஆதலால் நம்மை நாள்தோறும் கற்பிக்கும்படி நாம் அவரிடத்தில் கேட்டுக்கொள்ளவேண்டும்.



அவனுக்கு கறுக்கன் என்று பேர் வழங்கப்பட்டது. அவன் உயர்குலத்தில் பிறந்து பக்திவேஷம் பூண்டு லோகத்தோடு ஒத்து வாழ்கிற குணம் உடையவனாய் இருந்தான்.

தயாளிமேல் காதல்கொண்ட கறுக்கன்.

இவன் ஒருதரம் அல்லது இரண்டுதரம் அல்ல, அநேக தடவை தயாளியினிடத்தில் வந்து தான் அவள்மேல் நேசவெறி கொண்டிருக்கிறதாக வெளியிட்டான். தயாளி மகாரூபவதியாய் இருந்தபடியால் அவள்மேல் காதல்கொள்ளும்படி அவன் மனம் அதிகமாய் ஏவப்பட்டது.[1]

அவள் மனமும் கரமும் எப்போதும் ஏதாவது ஒன்றைச் செய்யவேண்டும் என்றே கருத்துக்கொண்டிருந்தது. தன் விஷயத்தில் யாதொரு வேலையும் இல்லையானால் மற்றவர்களுக்கு ஏற்ற கால்சட்டை மேற்சட்டை முதலிய உடுப்புகளைத் தைத்துக்கொண்டு ஏழை பரதேசிகளுக்கு இலவசமாக ஈவாள். அவள்மேல் காதல்கொண்டிருந்த கறுக்கன் இந்த மங்கை நாளெல்லாம் வேலைசெய்து பொழுதெல்லாம் தைக்கிற உடுப்புகளை யாருக்கு விற்கிறாள் அல்லது என்ன செய்கிறாள் என்று அறியாமல் இருந்ததினாலே மெத்தவும் ஆச்சரியப்பட்டு, ஆகா இந்தப் பெண் குடித்தனத்துக்கு ஏற்ற குலமகள் என்பதற்குச் சந்தேகம் இல்லை என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

தயாளி கறுக்கனைக் குறித்து விசாரித்தது.

ஒருநாள் தயாளி தன்மேல் காதல்பூண்டு வந்துபோயிருக்கும் கறுக்கனின் அந்தரங்கத்தை அவ்விடத்தில் வசித்த மற்றவர்களுடன் அறிவித்து அவனை அவர்கள் நன்றாய் அறிந்தவர்களானதால் அவனுடைய சரியா காரியங்கள் என்னவென்று ஜாடையாய் விசாரித்தாள். அதற்கு அவர்கள்: அந்த வாலிபன் ஜாக்கிரதையுள்ளவனும் மார்க்கவேஷம் பூண்டவனுமாய் இருக்கிறான்; ஆனால் நற்கிரியைகளின் பலனை அவன் அறியாதவன் என்று சொன்னார்கள்.

அப்போது அவள்: அப்படியா செய்தி, அவனை நான் இனி அவ்வளவாய் கவனிக்கமாட்டேன்; ஏனெனில் என் ஆத்துமா

[1] கலியாண விஷயத்தைக் குறித்து ரொம்பவும் கரிசனையாய் இருக்கவேண்டும். அநேகர் ஒரு பக்தியுள்ள பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொள்ள தாங்களும் பக்திமான்கள்போல் பாசாங்குபண்ணிக்கொள்ளுகிறார்கள்; ஆனால் பிற்பாடு அவர்களுடைய யதார்த்த குணம் வெளியாகிவிடுகிறது.

வில் ஒரு தடைக்கட்டை மாட்டிக்கொள்வது எனக்குப் பிரியமே இல்லை என்றாள்.[1]

அப்போது விவேகி சொல்வாள்; அவன் உன்னிடம் வந்துபோய் இருப்பதை நிறுத்திவிடும்படியாக நீ யாதொரு விசேஷித்த பிரயத்தனம் செய்யவேண்டும் என்று கவலைப்படவேண்டியதில்லை. நீ இம்மட்டும் செய்துவருகிற பிரகாரம் ஏழைகளுக்கு அடுத்த வேலையை ஜாக்கிரதையாய் செய்யச் செய்ய அவன் ஆசையும் கொஞ்சங் கொஞ்சமாய்க் குளிர்ந்துபோய்விடும் என்றாள்.

சுறுக்கனுக்கும் தயாளிக்கும் நடந்த சம்பாஷணை.

சுறுக்கன் அடுத்த தடவை வந்தபோது அவள் பழையபடி ஏழைகளுக்கு உடுப்பு தைக்கிற வேலையும் கையுமாய் இருந்தாள். அப்போது அவன்: என்ன பெண்ணே! எந்த வேளையும் இதுதானா? என்றான். ஆம், பின்ன என்ன? ஒன்று எனக்குத் தைப்பேன் அல்லாவிட்டால் மற்றவர்களுக்காகத் தைப்பேன் என்றாள். அது சரிதான்; ஒரு நாளைக்கு எவ்வளவு சம்பாதிப்பாய்? என்று கேட்டான். நற்கிரியைகளில் ஐசுவரியவாட்டியாகவும் நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்துக்காக எனக்கு நல்ல ஆதாயத்தை பொக்கிஷமாக வைக்கவுமே இப்படிச் செய்கிறேன் என்றாள்.[a] ஆ என் நேசமே! நீ தைக்கிற உடுப்புகளை என்ன செய்கிறாய்? என்று கேட்டான். அம்மணமாய் இருக்கிறவர்களை உடுத்துவிக்கிறேன் என்றாள். அதோடு அவன் முகம் வெளுத்துப்போயிற்று; அது முதல் சுறுக்கன் அசந்துபோய் தன் வாத்துப்போக்கை நிறுத்தினான். அவன் முன் வந்துபோய் இருந்ததைக் கண்டிருந்தவர்கள் ஏதப்பா இப்போ வருகிறதில்லை? என்று கேட்டபோது: அந்தப் பெண் நல்ல பெண்தான்; ஆனால் அவ்வளவு சிக்கனக்காரி அல்ல, கண்டவர்களுக்கெல்லாம் பை திறந்து கொடுக்கிற குணமுடையவள் என்று சொல்லிவிட்டான்.

அவன் நின்றுபோனதும் அதின் முகாந்தரமும்.

சுறுக்கன் தமது போக்குவரத்தை நிறுத்திப்போட்டதைக் கண்ட விவேகி தயாளியைப் பார்த்து மாதே நீ கண்டாயா? அவன் வெகு சீக்கிரமாய் நழுவிவிடுவான் என்று நான்

[1] ஆகாத புருஷனுடன் வாழ்வதைவிட புருஷனே இல்லாதிருப்பது நலம். இந்தச் சங்கதியை இத்தேசத்தார் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது. ஒரு பெண்ணுக்கு நல்ல புருஷன் கிடைக்காவிட்டால் அவள் தன் ஜீவகாலம் முழுதும் வாழ்க்கைப்படாமல் இருந்துவிடுவதே உத்தமம்.

[a] 1 தீமோ. 6. 17—19.



சொன்னது சரி ஆயிற்றா? இனி அவன் உன்னைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லிக்கொண்டு திரிவான் என்பது நிஜம். பக்திவேஷம் பூண்டவனாகிய அவன் உன்மேல் காதல்கொண்டபோதிலும், மாதே! உன் குணமும் அவன் குணமும் வித்தியாசப்பட்டிருக்கிறது; அக்குணங்கள் ஒன்றுபடுவது அசாத்தியம் என்றாள்.

தயாளி. நான் வெகுகாலத்துக்குமுன்னே கலியாணக்காரி ஆகியிருப்பேன்; அநேக மாப்பிள்ளைகள் வந்து என்னைக் கேட்டார்கள், அதை நான் இதுவரையும் ஒருவருக்கும் சொல்லவில்லை; அவர்களில் ஒருவரும் என் அழகைப் பழிக்காவிட்டாலும் என் போக்கு அவர்களுக்கு ஒத்துவராது என்று கண்டுகொண்டார்கள்; ஆகவே நானும் அவர்களும் பிரிந்துவிட்டோம்.

விவேகி. இக்காலத்தில் தயாளம் நலம் தயாளம் நலம் என்று சொல்லிக்கொள்ளுகிறதே அல்லாமல் அத்தயாளத்தைக் காட்டுகிற வழக்கமே இல்லை; உன்னைப்போல எப்போதும் தயாள குணத்தில் நிலைத்திருக்கிறவர்கள் வெகு கொஞ்சப்பேர் என்றே சொல்லவேண்டியது.

தயாளியின் தீர்மானம்.

தயாளி. என்னோடு ஒத்த சிந்தையுள்ளவர்கள் இல்லையானால் நான் கன்னியாய் இருந்தே கல்லறை காண்பேன்; அல்லது என் குணமே என் கணவர் என்று நான் எண்ணிக்கொள்வேன். ஏனெனில் நான் என் சுபாவத்தை மாற்றக்கூடாது. என் குணத்துக்கு குறுக்கே வருகிறப்போலொத்த ஒருவனை நான் என் ஆயுசுபரியந்தம் நாடவேமாட்டேன்; எனக்கு உதாரி என்று பேருடைய ஒரு சகோதரி இருந்தாள். அவள் இப்படிப்பட்ட பிசினி ஒருவனுக்குத் தான் வாழ்க்கைப்பட்டாள்; அவனுக்கும் இவளுக்கும் ஒருநாளும் பொருந்தாது.

தயாளியின் சகோதரி.

என் சகோதரி அவனைக் கட்டுமுன் செய்துவந்ததுபோல், கட்டின பின்பும் ஏழைகளுக்கு தயை தாக்ஷிண்யம் பாராட்டி வந்தாள்; அது அவன் மனதுக்குப் பிடியாததினாலே அடிக்கடி வாக்குவாதங்களும் சண்டைகளும் உண்டாகும்; கடைசியாக, உன் சங்காத்தம் எனக்கு வேண்டவே வேண்டாம் என்று அவளை வீட்டைவிட்டுத் துரத்திப்போட்டான்.

விவேகி. இவ்வளவெல்லாம் செய்த அவன் பேருக்குக் கிறிஸ்தவனாய் இருந்தான் அல்லவா?

தயாளி. ஆம், அவன் மகா உத்தமனென்றால் இருந்தான்; அவனைப்போலொத்த பேர்க்கிறிஸ்தவர்களால்தான் இப்போது உலகம் நிறைந்துபோய் இருக்கிறது. ஆனால் நான் அப்படிப்பட்டவர்கள் ஒருவனையும் சட்டைபண்ணவேமாட்டேன் என்றாள்.

மத்தேயு வியாதிப்பட்டது.

இக்காலத்தில் கிறிஸ்தீனாளுடைய மூத்தமகனாகிய மத்தேயு வியாதிப்பட்டான்.[1] அவனுடைய வியாதி ஒருவித உள்நோவை உண்டாக்கினதால் அந்த ஏழைப் பையன் மிகவும் வருத்தப்பட்டான். அவர்கள் வாசஞ்செய்த வீட்டுக்குச் சமீபமாக எல்லாராலும் பிரபலமாய்ப் பேசிக்கொள்ளப்பட்ட ஒரு தேறின வைத்தியன் இருந்தார். அவருக்கு சாமர்த்தியன் என்று பேர் வழங்கப்பட்டது. அவரைக் கொண்டு தன் பிள்ளைக்கு வைத்தியம் செய்யவேண்டும் என்று கிறிஸ்தீனாள் விரும்பினதினால் அவருக்கு செய்தி அனுப்பினார்கள்; அவரும் வந்து சேர்ந்தார். அவர் வியாதியாய் இருந்த பையனண்டை வந்து, கை பிடித்துப்பார்த்து அவனைக் கவனித்தவுடனே, பையன் வயிற்றுநோவினால் வருத்தப்படுகிறான் என்று அறிந்துகொண்டு அவனுடைய தாயை நோக்கி: நேற்றும் மூன்றாம் நாளும் இவனுக்கு என்ன ஆகாரம் கொடுத்தீர்கள் என்று கேட்டார். கொடுத்தது! எல்லாம் சுகத்துக்கு ஏற்ற உணவுதான் கொடுத்தோம் ஐயா! என்றாள். அதற்கு அந்த வைத்தியன்; ஜீரணமாகாதபடி ஏதோ கசடு வயிற்றுக்குள் கிடந்து பையனை வேதனைப்படுத்துகிறது; அதற்கு ஏதாவது ஒரு பக்குவம் செய்யாவிடில் அது வெளியாகமாட்டாது; இவனுக்கு பேதிக்குக் கொடுத்தால் ஆச்சது, இல்லாவிட்டால் செத்துப்போவான் என்றார்.

சாமர்த்தியனும் அவர் வைத்தியமும்.

[illegible]

சாமு. அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவன் சகோதரனாகிய சாமுவேல் தன் தாயைத் தட்டிக் கூப்பிட்டு: அம்மா! நாம் எல்லாரும் ராஜபாதையின் துவக்கத்தில் இருக்கிறதே, அந்த அரமனையைவிட்டுச் சற்று தூரம் வரும்போது அண்ணன்

சாமுவேல் வியாதியின் மூலகாரணத்தை வெளியிட்டது.

[1] விலக்கப்பட்டவைகளில் பற்றுதலாய் இருப்பது எப்போதும் ஆத்துமாவுக்கு அசௌக்கியத்தைப் பிறப்பிக்கும். நியாயவிரோதமான செய்கைகள் வியாதியையும் கஷ்டத்தையும் வருத்தாதிராது. நீதிநேர்மையாய் நடக்கும்மட்டும் பாக்கியமும் உண்டாய் இருக்கும்.



ஒடிஒடிப் பறித்துத் தின்றானே அதென்ன அம்மா? நாம் வந்த வழிக்கு இடதுபக்கத்தில் ஒரு தோப்பு இருந்ததும் அதின் கிளைகள் சில நமது பாதைமட்டும் வளைந்து சாய்ந்து கிடந்ததும் உங்களுக்கு ஞாபகம் இருக்குமே; அந்தக் கிளைகளில் தொங்கின பழங்களில் சிலவற்றை அண்ணன் பறித்துத் தின்றதுண்டு என்றான்.

கிறி. அப்போது கிறிஸ்தீனாள்: அப்பா மகனே! நீ சொல்வது சரிதான். அவன் அந்தப் பழங்களைப் பறித்துத் தின்றது மெய்தான்; நான் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லச் சொல்ல அவன் தின்றானே! என்றாள்.

சாம. அதைக் கேட்ட பண்டிதர்: ஆகாத போஜனம் ஏதோ இவன் வயிற்றுக்குள் போய் இருக்கிறதென்று எனக்குத் திட்டமாய்த் தெரிந்தது: அவன் தின்ற பழங்களைப்போல் சுகவீனத்துக்கேற்ற உணவு வேறொன்று இல்லை. அவை பெயெல்செபூலுடைய தோப்பின் பழங்கள்; அதைப்பற்றி ஒருவரும் உங்களை எச்சரிக்காததையிட்டு நான் அதிசயப்படுகிறேன்; அதைத் தின்று மாண்டோர் அனேகம் என்றார்.

கிறி. அதைக் கேட்ட உடனே தாய் அழுதுகொண்டு, ஐயோ: துஷ்டப்பிள்ளாய், ஐயோ, நானும் கவலையற்ற தாயாய் இருந்துவிட்டேனே! என் மகனுக்கு என்ன செய்வேன் அப்பா! என்று புலம்பினாள்.

சாம. அம்மணி! மெத்த விசனங்கொள்ளாதே! பையன் தேறிக்கொள்ளுவான்; ஆனால் எப்படியும் அவனுக்கு பேதியும் ஆகவேண்டும், அவன் வாந்தியும் பண்ணவேண்டும்.

கிறி. தருமத்துரையே! உம்முடைய குணபரிகார சாமர்த்தியத்தைக்கொண்டு பையனுக்குச் செய்யவேண்டிய பிரயத்தனத்தை எல்லாம் செய்யும்படி உம்மைக் கும்பிடுகிறேன். என்ன செலவானாலும் ஆகட்டும்.

சாம. மாதே! மலையாதே; நான் செய்யும் பிரயோகத்தைச் சீராகச் செய்வேன் என்று பண்டிதர் சொல்லி பையனுக்குப் பேதிக்குக் கொடுத்தார். ஆனால் அந்த மருந்தால் போதுமானபடி பேதி ஆகவில்லை. அம்மருந்து வெள்ளாட்டுக்கடாயின் இரத்தமும் கிடாரியின் சாம்பலும் கலந்த குளிகையாய் இருந்தது என்றும், அதை ஈசோப்புத் தண்டின் சாறு என்னும் அனுப்பானத்தில் கலக்கிக் கொடுத்தார் என்றும் நான் கேள்விப்

வைத்தியன் கொடுத்த மருந்து.

பட்டேன்.a பையனுக்கு இன்னும் சகடை பேதி ஆகவில்லை என்று கண்ட சாமர்த்தியப் பண்டிதர் மறுபடியும் பலமான ஒரு மருந்தைத்[1] கொடுத்தார். அது கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமும் கலந்த ஒரு குளிகையாய் இருந்தது. அதற்கு கிறிஸ்துநாதரின் குளிகை[b] என்று பேர் வழங்கப்பட்டது. (வைத்தியன்மார் நோயாளிகளுக்கு விநோதமான மருந்துகள் சொல்லுகிறதை நாம் அடிக்கடி கேட்கிறதுண்டே.) மேலே சொல்லிய இரண்டு சாக்குகளும் அவற்றோடு இரண்டொரு வாக்குத்தத்தங்களும் அதற்குத் தகுமான இடையளவு கொஞ்சம் உப்பும் ஒன்றாக மத்தித்தப்பட்டு மாத்திரைகளாய் உருட்டப்பட்டிருந்தது.c ஒவ்வொரு தடவையிலும் இந்த மாத்திரைகளில் மூன்றை உபவாசமாயிருந்து வீசம்படி மனஸ்திரும்புதலின் கண்ணீரோடு கலந்து பையன் குடிக்கவேண்டியதாய் இருந்தது.d

கிறிஸ்துநாதர் குளிகை.

குளிகையின் சேர்மானமும் அருமையும்.

இந்த அவிழ்தத்தைப் பண்டிதர் கூட்டி பையனுடைய வாயிலே குடிக்கும்படி நீட்டினபோது அவன் மாட்டேன் என்றான். அவன் தன் வயிற்று நோவினால் உருண்டு புரண்டு உடலை முறித்துக்கொள்ளுகிறவனைப்போல அவஸ்தைப்பட்டாலும் இந்த அவிழ்தத்தை அருந்த ஆசை இருக்கவில்லை. வாயைத் திற திற, இதை நீ குடிக்கத்தான்வேண்டும் என்று பண்டிதர் சொன்னார். அது என் குடலைப் புரட்டும் ஐயா, வேண்டாம் வேண்டாம் என்று பையன் கெஞ்சினான். நீ குடிக்கத்தான்வேண்டும் என்றும் தாயும் சொன்னாள். அது வாந்தி பண்ணிவிடும் தாயே, வேண்டாம் என்று பையன் சொன்னான். இது எப்படிப்பட்ட மருந்து ஐயா! ஒருவேளை குமட்டுமோ? என்று கிறிஸ்தீனாள் பண்டிதரைக் கேட்டாள். அப்படி அரோசிப்பான வாசனை அதற்கு இல்லை என்று பண்டிதர் சொன்னார். அப்போது கிறிஸ்தீனாள்: தன் விரலை விட்டுத் தொட்டு அம்

மருந்தின் குமட்டல்.

1 ஆத்துமாவைப் பாவத்தினின்று சுத்திகரிப்பதற்கு நியாயப்பிரமாணப் பலிகள் போதுமானவைகள் அல்ல என்பதை பனியன் வெகு சமர்த்தாய் விவரிக்கிறார். அதற்கு இதைவிட சேர்த்தியான ஒரு ஔஷதம் தேவை; இது கிறிஸ்துவின் இரத்தந்தான்.

a எபி. 9. 13-19; 10. 1-4. b யோவா. 6. 54—57. எபி. 9. 14.
c மாற். 9. 49. d சக. 12. 10.



மருந்தில் ஒரு துளிபோல் நாவில் வைத்துப் பார்த்து, அப்பா மகனே! இது தெளிதேனிலும் மதுரமாய் இருக்கிறது; நீ உன் தாயை நேசித்தால் உன் சகோதரரை நேசித்தால் தயாளியை நேசித்தால் உன் ஜீவனையும் நீ நேசித்தால் இதைக் குடித்துவிடு மகனே! குடித்துவிடு என்று சொன்னாள். அவன் அநேக நேரம் மாட்டேன் என்று மல்லுக்கு நின்று கடைசியாக கடவுள் அந்த அவிழ்தத்தை ஆசீர்வதிக்கும்படி மன்றாடி அருந்தினான். அது அவனுக்குக் குமட்டலைக் கொடாமல் இறங்கிவிட்டது. அது அவன் நோயையும் நன்றாய்க் கேட்டதும் அன்றி அமைதலாய்த் தூங்கவும் செய்தது. அது அவன் தேகத்துக்கு நல்ல அனலையும் தெளிந்த சுவாசத்தையும் கொடுத்தது. அவனுடைய வயிற்றுநோவை அடியோடே எடுத்துப்போட்டது; ஆகவே சில மணிநேரத்துக்குப்பின் அவன் சுகத்தோடு எழுந்து தடி பிடித்துக்கொண்டு, விவேகி பயபக்தி நேசமணி என்ற கன்னிமாப்பெண்களின் அறைகளுக்குப் போய், தான் வியாதியில் பட்ட அவஸ்தைகளையும் சுகம் அடைந்த விபரங்களையும்குறித்துப் பேசிக்கொண்டிருந்தான்.

தாய் மருந்தை ருசிபார்த்தல்.

பையன் நோய் நீங்கிச் சுகமானபின்பு கிறிஸ்தீனாள் பண்டிதரைப் பார்த்து: நீர் எனக்கும் என் மகனுக்கும் செய்த சகாயத்திற்காக நான் கொடுக்கவேண்டிய தொகை என்ன ஐயா! என்று கேட்டாள். அதற்கு அவர்: இப்படிப்பட்ட வைத்திய பிரயோகத்துக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்று வைத்தியாதிபச் சங்கத்தார் தீர்மானித்து இருக்கிறார்களோ அந்தத் தொகையை வைத்தியாதிபருக்கு நீ செலுத்திப்போடவேண்டியது என்றார்.a

கிறி. அப்படியே செய்கிறேன் ஐயா! இந்த மாத்திரைகள் வேறு எந்த நோய்களுக்கு எல்லாம் உதவும்?

சாம. இது சருவலோக சஞ்சீவி. மோட்ச பிரயாணிகளுக்கு உண்டாகும் சகல ரோகங்களுக்கும் இது உதவும். இதைச் சரியான முறைப்படி மாத்திரம் செய்து சாப்பிட்டால் வெகு காலத்துக்கு அவன் மனதில் நோய் அணுகாது.

இந்தக் குளிகை சருவலோக சஞ்சீவி.

கிறி. ஐயா! தயவுசெய்து பன்னிரண்டு சிமிழ் நிறைய இந்த மாத்திரைகள் தாரும். இந்த மாத்திரைகள் அகப்படுமா

a எபி. 13. 11—15.

ளுல் வேறே மருந்தைப்பற்றி நான் கவலைப்படவேண்டிய தில்லை.

சாம. இந்த மருந்து வந்த வியாதியைத் தீர்த்துவிடுகிறதும் அன்றி வரும் வியாதியைத் தடுக்கவும் வல்லமை உள்ளது. இந்தக் குளிகையை ஒருவன் சாஸ்திர முறைப்படிமாத்திரம் பிடிக்கு எடுத்துக்கொள்வானுனல் அது வரும் நோயைத் தடுத்து வந்த நோயை நீக்கி அவன் என்றென்றைக்கும் உயிரோடு இருக்கும்படி செய்யும் என்பது நிஜமே நிஜம்.[a] ஆனால், கிறிஸ்தியானே! ஒரு சமாசாரம் கேள். நான் சொன்ன முறையை அல்லாமல் வேறு முறையாய் நீ இந்த மருந்தைப் பிரயோகம் செய்யவே கூடாது.[1] ஏனெனில் முறை தப்பி இதைப் பிரயோகித்தால் இந்த மருந்தினுல் ஒரு பலனும் உண்டாக மாட்டாது என்று சொல்லி, கிறிஸ்தீனுளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் தயாளிக்கும் அந்த மாத்திரைகளில் பெறிக் குக் கொடுத்தார். அதுவும் அன்றி அவர் மத்தேயுவையும் கூப்பிட்டு, இனி நீ அப்படி அஜீரணத்தை உண்டாக்கும் காய் கனிகளைத் தொடாதபடி எச்சரிக்கையாய் இரு என்று சொல்லி, அவர்கள் எல்லாருக்கும் முத்தமிட்டு தமது ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தார்.

நாம் முன்னே; ஒருநாள் விவேகி பையன்களிடத்தில் நீங்கள் தேவதா பத்தியின் வளர்ச்சிக்கு ஏதுவான கேள்விகள் எதாவது கேட்கவேண்டுமானால் கேட்கலாம், நான் அதற்குச் சந்தோஷமாய் மறுமொழி கொடுப்பேன் என்பதாய்ச் சம்மதித்து இருந்தாள் என்று சொன்னோமே, அதின்படி ஒருநாள் வியாதிப்பட்டு இருந்த மத்தேயு பின்வரும் கேள்விகளைக் கேட்டான்.

பேதிமருந்தைப்பற்றி.

மத். பேதிமருந்தெல்லாம் பெரும்பாலும், நமது அண்ணாக்குக்கு அரோசிகமாய் இருக்கிறதே அதேன் அம்மா?

---

[1] கிறிஸ்துவின் பாவமன்னிப்பு தப்பிதமாய் எண்ணப்படலாம். ஒருவன் மெய்மனஸ்தாபமும் இருதயமாறுதலும் இல்லாமல் கிறிஸ்துவின் இரத்தம் தன்னை இரட்சிக்கும் என்று எண்ணுனல் அது தப்பிதம். ஔஷதத்தை செம்மையாய்ச் சாப்பிடவேண்டும். அப்படியே கிறிஸ்துவின் இரத்தம் மனஸ்தாபப்பட்டு, பாவத்தை அறிக்கை செய்து, விசுவாசிக்கிறவர்களைமாத்திரம் இரட்சிக்கும்.

[a] யோ. 6. 58.



விவேகி. மாமிசத்துக்கேற்ற மனதுக்கு தேவனுடைய வசனமும் அதின் கிரியைகளும் எவ்வளவும் பொருந்தாததாய் இருக்கும் என்பதைக் காட்டும்படிக்கே.

மத். இந்த மருந்து நமக்கு நன்மை செய்யவேண்டுமானுல், பேதி காணவும் வாந்தி பண்ணவும் செய்கிறதே அது ஏன்?

பேதிமருந்தின் பிரயோசனம்.

விவேகி. தேவனுடைய வசனமானது வல்லமையாய்க் கிரியை செய்கிறபொழுது இருதயத்தையும் மனதையும் சுத்தமாக்குகிறது என்று உணர்த்தும்படிக்கே. இவ்விரண்டில் ஒன்று சரீர சுத்தியையும் மற்றொன்று ஆத்தும சுத்தியையும் தருகிற தென்று நீ கவனிக்கவேண்டியது.

மத். தீபச்சுடர் மேல்நோக்கியும் சூரியகதிர் கீழ்நோக்கியும் பிரகாசிக்கிறதினுலே நாம் எதைப் படித்துக்கொள்ளலாம்?

தீபச்சுடர், சூரியகதிர்.

விவேகி. மேல்நோக்கிப் பிரகாசிக்கும் தீபச்சுடராலே நாம் நமது ஆசைகளை மேல் உலகத்துக்கு அனல்மூட்டி எழுப்பிவிடவேண்டும் என்று உணர்த்தப்படுகிறோம். கீழ்நோக்கிப் பிரகாசிக்கும் சூரிய விம்பத்தினுல் லோகரட்சகர் உன்னதத்தில் இருந்தாலும் ஏழைகள் இருக்கும் நம்மிடமட்டும் தமது கிருபையினுலும் அன்பினுலும் இறங்குகிறார் என்று உணர்த்துகிறது.

மேகங்களைப்பற்றி.

மத். மேகங்களுக்கு எங்கே இருந்து ஜலம் கிடைக்கிறது?

விவேகி. சமுத்திரத்தில் இருந்து.

மத். இதனுல் நாம் எதைக் கற்றுக்கொள்ளுகிறோம்?

விவேகி. தேவ ஊழியர்கள் தங்கள் உபதேசங்களைத் தேவனிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்று படித்துக்கொள்ளுகிறோம்.

மத். மேகங்கள் தங்கள் ஜலத்தை எல்லாம் சராமாரியாய்ப் பூமியில் பிழிந்துவிடுகிறதே அதேன்?

விவேகி. தேவ ஊழியக்காரர் தாங்கள் தேவனைக்குறித்து அறிந்தவைகளை எல்லாம் உலகத்துக்குக் கொடுக்கவேண்டும் என்றே.

மத். சூரியகிரணங்களால் வானவில் உண்டாகிறது ஏன்.

வானவில்லைக் குறித்து.

விவேகி. தேவனுடைய கிருபையின் உடன்படிக்கையானது நமக்கு மேகங்களின்றுவில் உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று உணர்த்தும்படிக்கே.

நீரூற்றைக் குறித்து.

மத். நீரூற்றுகள் எல்லாம் கடலில் இருந்து தரையின் வழியாய் ஊறி வருவானேன்?

விவேகி. தேவகிருபையானது கிறிஸ்துவின் திருச் சரீரத்தின் மூலமாய் நமக்கு வருகிறது என்று உணர்த்தவே.

மத். உச்சிமலையிலேயும் சில நீரூற்றுகள் சுரக்கப் பார்க்கிறோமே அதேன்?

விவேகி. கிருபையின் ஆவியானது எளிய பாத்திரங்களுக்குள் இருந்து ஊறுகிறதுபோலவே, பெரியோர்களுக்குள்ளும் மேன்மையும் பொருந்தினவர்களுக்குள்ளும் இருந்து சுரக்கும் என்று காட்டவே.

நீரும், நெருப்பும்.

மத். நீரானது திரியோடு சேர்ந்து எரிவதேன்?

விவேகி. கிருபையானது இருதயத்தில் கொளுத்தப்படாத பட்சத்தில் மெய்யான ஜீவஒளி நமக்குள் இராது என்று உணர்த்தவே.

மத். விளக்கின் ஒளியைப் பெறும்படி எண்ணெயும் திரியும் எரிந்து அழிவதேன்?

விவேகி. நமக்குள் இருக்கும் தேவகிருபையானது சேதம் இல்லாமல் செழித்தோங்கும்படி நமது சரீரத்தையும் அதின் அவயவங்களையும் ஆத்துமாவையும் அதின் அந்தக்கரணங்களையும் சகலமாய் அதின் நடத்துதலுக்கு ஒப்புவித்துவிடவேண்டும் என்பதைப் போதிக்கவே.

காளையும் அதின் ரத்தம்.

மத். காளைப்பட்சி தனது நெஞ்சைத் தன் அலகால் கிழித்துக்கொள்ளுகிறதே, அதேன்?

விவேகி. தன் இரத்தத்தால் குஞ்சுகளைப் போஷிக்கவே தானா அப்படிச் செய்கிறது; இதினாலே ஆசீர்வதிக்கப் பாத்திரரான கிறிஸ்தேசுநாதர் தமது இரத்தத்தினாலே தமது ஜனங்களை மரணத்தில் இருந்து இரட்சித்து இவ்வளவாய்த் தமது பிள்ளைகளை நேசிக்கிறார் என்று சத்தியம் காட்டப்படுகிறது.

சேவலைப்பற்றி.

மத். சேவல் கூவுகிறதினால் ஒருவன் எதைப் பிடித்துக்கொள்ளலாம்?



விவேகி. பேதுருவின் பாவத்தையும் அவனுடைய மனந்திரும்புதலையும் அறிந்துகொள்ளலாம். அதுவும் அன்றி சேவலின் குரல் பகல் இதோ வருகிறது என்று சொல்லுகிறதுபோல் இருக்கிறது; ஆதலால் சேவலின் சத்தம் பெரிதும் பயங்கரமுமான கடைசி நியாயத்தீர்ப்புநாளை உனக்கு உணர்த்துவதாக என்று சொன்னாள்.

இதற்குள்ளாக பிரயாணிகள் அலங்காரமாளிகை வந்து சேர்ந்து சுமார் ஒருமாசம் ஆகிவிட்டது. ஆதலால் அவர்கள் அவ்விடம் விட்டு தங்கள் வழியே போக மனதுடையவர்கள் போல் அவ்வீட்டார் இடத்தில் தெரிவித்தார்கள். இச்சமயத்தில் யோசேப்பு என்ற சிறுவன் தன் தாயண்டை போய்: அம்மா! நாம் வியாக்கியானிக்கு கடிதம் அனுப்பி அவர் முன் போல் நமக்குத் துணையாக வீரகுணமுள்ள தைரியநெஞ்சனை நமது பயணம் முடியுமட்டும் தயவாய் அனுப்பும்படி மன்றாட மறந்துவிடலாகாது என்று சொன்னான். உடனே கிறிஸ்தினாள் சந்தோஷப்பட்டு, நீ நல்ல பிள்ளை! அதைப்பற்றி நான் மறந்தேபோனேன் என்று சொல்லி, உடனே உட்கார்ந்து ஒரு காகிதம் எழுதி, விழிப்பாளி என்னப்பட்ட சேவகனிடத்தில் கொடுத்து இதை உண்மையுள்ள ஒரு ஆள்மூலமாய் வியாக்கியானிக்கு அனுப்பும்படியாகக் கேட்டாள். அப்படியே அதை ஒரு கூலிக்காரன் கொண்டுபோய்க் கொடுத்தான். வியாக்கியானி கடிதத்தின் செய்தியை வாசித்துக்கொண்டு: நல்லது! அப்படியே அனுப்புவோம் என்று போய்ச்சொல்லு என்று பதில் அனுப்பினார்.

கிறிஸ்தினாள் பயணம் புறப்படப்போகிறாள் என்ற செய்தியை அவ்வீட்டார் அறிந்தபோது இப்படிப்பட்ட பக்தர்களை அரசர் தங்கள் நடுவில் கொண்டுவந்து சேர்த்ததற்காக அவருக்கு அத்தியந்த தோத்திரம் செலுத்தவேண்டும் என்று சகுதி அவ்வீட்டில் இருந்த அனைவரையும் ஒன்றுகூட வரவழைத்தார்கள். அது முடிந்தபிற்பாடு அவர்கள் கிறிஸ்தினாளை நோக்கி: இவ்விடம் வந்துபோகும் பிரயாணிகள் எல்லாருக்கும் நாங்கள் செய்கிற வழக்கப்படி, நீங்கள் உங்கள் பயணத்தில் தியானிப்பதற்கு அநுகூலமான சில நூதனகாட்சிகளைக் காட்டவேண்டாமா? என்று சொல்லி அவர்கள் எல்லாரையும் கொல்லைப்புறத்துக்குக் கூட்டிப்போய்

ஏவாள் தின்ற ஆப்பிள் பழக் காட்சி.

ஆதி ஏவாள் தானும் தின்று தன் புருஷனுக்கும் கொடுத்ததினால் ஏதேனை விட்டுத் துரத்தப்பட்டானே, அந்தப் பழங்களில் சிலவற்றைக்

காண்பித்து: இது என்ன பழம் தெரியுமா? என்று கிறிஸ்தினாளைக் கேட்டார்கள்.[1] அதற்கு அவள்: இதைத் தின்கலாமோ நஞ்சோ யாருக்குத் தெரியும்? என்று சொல்லிவிட்டாள். அப்புறம் அவர்கள் பழத்தின் பூர்வோத்திரத்தைச் சொன்னவுடனே அவள் அப்படியா! என்று அதிசயப்பட்டாள்.[a]

யாக்கோபு கண்ட ஏணிக் காட்சி.

அப்புறம் அவர்கள் பிரயாணிகளை வேறொரு இடத்துக்குக் கூட்டிப்போய் யாக்கோபின் ஏணியைக்[2] காண்பித்தார்கள்.[b] அச்சமயத்தில் சில தேவதூதர் அதின்வழியாய் ஏறிப்போனார்கள். கிறிஸ்தினாளும் மற்றவர்களும் தூதர் ஏறிப்போகுங் காட்சியைப் பார்த்துப் பார்த்துப் பூரித்தார்கள். அப்புறம் வேறொரு இடத்தில் ஒரு காட்சி இருக்கிறது அதைக் காட்டுகிறோம் வாருங்கள் என்று போனார்கள்; அப்போது யாக்கோபு என்ற பிள்ளையாண்டான், அம்மா! இன்னும் கொஞ்சம் பார்க்கலாம், இது மெத்த விநோதக்காட்சி, அவர்களைச் சற்று நிற்கச்சொல் என்று கெஞ்சினான். அப்படியே அவர்கள் மறுபடியும் திரும்பிவந்து கண்குளிரப் பார்த்துக் களிகூர்ந்தார்கள்.

தங்கநங்கூரம் கிடைத்தது.

அதின் பின்பு அவர்கள் தங்க நங்கூரம் தொங்கவைக்கப்பட்டிருந்த ஒரு இடத்திற்குப் பிரயாணிகளைக் கூட்டிப்போய், கிறிஸ்தினாளே! இந்த நங்கூரத்தை அவிழ்த்து நீயே உன் மடிக்குள் வைத்துக்கொள், ஏனெனில் திரைக்குள்ளாகப்போகிறதான இந்த நங்கூரத்தை நீ பற்றிப் பிடித்துக்கொண்டு,[c] உனக்கு விரோதமாய் எழும்பும் புயலுக்கும் கொந்தளிக்குப் பொங்கும் அலைகளுக்கும் அசையாமல் உறுதியாய் நிற்கும்படி இது இன்றியமையாத அவசியம் என்றார்கள்.[a]

[1] ஏவாளுக்கு நேர்ந்ததுபோலுள்ள எண்ணங்களும் சோதனைகளும் சாத்தானிடத்திலிருந்து இப்போதும் நம்மெல்லாருக்கும் வந்துகொண்டே இருக்கின்றன. ஆதலால் அவளைப்போல் நாமும் விழுந்துபோகாதபடி எப்போதும் எல்லாரும் அவளுக்கு வந்த தண்டனையையும் கருத்தில் வைத்து நடக்கவேண்டும்.

[2] வானத்துக்கும் பூமிக்கும் தேவனுக்கும் மனிதருக்கும் நடுவே கிறிஸ்துதான் மெய்யான ஏணியாயிருக்கிறார். வானத்திலிருந்து பூமிக்கு வரும் ஆசீர்வாதங்கள் அவராலேதான் வருகிறது. பூமியிலிருந்து வானத்துக்குப் போகும் துதிகளும் தோத்திரங்களும் அவராலேயே போகிறது.

a ஆதி. 3. 6. ரோ. 7. 24.
b ஆதி. 28. 12. யோ. 1. 51.
c எபி. 6. 19.



ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிட்டது.

அப்பால் அவர்கள்: நமது பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கைத் தகனபலியிடும்படி போன மோரியாமலைக்குப் பிரயாணிகளை அழைத்துக்கொண்டுபோய், அவர் கட்டின பலிபீடத்தையும் சுமந்துபோன விறகுகளையும் தாங்கிப்போன நெருப்பையும் ஓங்கின கத்தியையும் அவர்களுக்குக் காட்டினார்கள். ஏனெனில் அவைகள் எவர்களும் காணும்படி இந்நாள்மட்டும் இருக்கின்றன.[b] அதைக் கண்டவுடனே அவர்கள் தங்கள் கைகளை வானத்துக்கு நேராக உயர்த்தி, ஆ! எங்கள் பிதாவாகிய ஆபிரகாம் தன் ஆண்டவரை நேசித்ததற்கும் தன்னை முற்றிலும் வெறுத்ததற்கும் ஒரு அளவுண்டோ! என்று சொல்லி, தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்டார்கள்.

விவேகியின் கீதவாத்திய சங்கீதம்.

அவ்வீட்டுப் பெண்கள் இவைகள் எல்லாவற்றையும் பிரயாணிகளுக்குக் காண்பித்தானபின்பு விவேகி அவர்கள் எல்லாரையும் பந்தி போஜன சாலை அறைக்குள் கூட்டிக்கொண்டுபோனாள். அங்கே கன்னிமாப்பெண்கள் வாசிக்கும் இரண்டு கீதவாத்தியங்கள் இருந்தன. விவேகி அதின்முன் உட்கார்ந்துகொண்டு இம்மட்டும் தாங்கள் பிரயாணிகளுக்குக் காண்பித்த காட்சிகளை எல்லாம் ஒரு கீர்த்தனையாக்கி இங்கிதமாகத் தொடுத்து இனிய குரலோடு பாடினாள். அந்தப் பாட்டைக் கேள்.

ஏவாளின் கனி காட்டினோம்
தின்றவர், தின்பவர் எச்சரித்தோம்
யாக்கோபு ஏணி மேல்தூதரும்
பாங்கோடேறவுங் கண்டனர்.

தங்கத்தால் ஒரு நங்கூரம்
தந்தோமே இவை போதாதே
ஆபிரகாம் இட்ட யாகம்போல்
அரும்பலியைச் செலுத்துங்கோ.

a யோவே. 3. 16. b ஆதி. 22. 9.

தேவாத்தியர்தொனியும் ஓய்ந்தது, கதவையும் யாரோ வந்து தட்டினார்கள். சேவகன் கதவைத் திறந்து பார்க்கவே, இதோ வீரதீர தைரியநெஞ்சன் என்பவர் கட்கமும் கையுமாய் வந்து நின்றார். அவர் உட்பிரவேசித்தவுடனே பிரயாணிகளுக்கு உண்டான சந்தோஷத்தை என்ன சொல்ல! அவரைக் கண்டவுடனே இரத்தப்பிரியனோடு பண்ணின சண்டையின் ஞாபகமும் அவர் அவன் தலையை வீசிப்போட்டு சிங்கத்தின் சேதம் இன்றி வழிநடத்திவந்த ஞாபகமும் அவர்கள் மனதில் மறுபடியும் வந்தது.

எதிர்த்துணைக்காக தைரிய நெஞ்சன் வந்து சேர்ந்தது.

அவர் கிறிஸ்தீனாளையும் தயாளியையும் நோக்கி: உங்களுக்கு வழிக்கு ஆகாரமாக என் ஆண்டவர் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குப்பி திராட்சப்பழரசமும் கொஞ்சம் வறுத்த தானியமும் இரண்டு மாதளம்பழங்களும் அனுப்பினார்; பிள்ளைகளுக்கென்று கொஞ்சம் அத்திப்பழங்களும் வற்றலாக்கப்பட்ட திராட்சப்பழங்களும் கொடுத்திருக்கிறார் என்று சொன்னார்.

அவர் கொண்டுவந்த சமாச்சாரம்.

## அலங்கார மாளிகையை விட்டுப் புறப்படுதல்.

அப்பால் அவர்கள் பயணம் புறப்பட்டார்கள்; அவர்களோடு விவேகி பயபக்தி ஆகிய இரண்டு கன்னிமைப்பெண்களும் சற்றுதூரம் வழி விட்டனுப்பும்படி போனார்கள். அவர்கள் வாசலண்டை வந்தபோது கிறிஸ்தீனாள் சேவகனைப் பார்த்து: யாராவது இவ்வழியாய் சற்று முந்திப் போனார்களா என்று கேட்டாள். அதற்கு அவன்: அப்படிப் போனவர் ஒருவரையும் காணேன்; ஒரே ஒருவன்மாத்திரம் வெகு நாளைக்குமுன் இவ்வழி போனான். அவன் நீங்கள் போகவேண்டிய ராஜபாதையில் சிலகாலத்துக்குமுன் ஒரு பெருங்கொள்ளை நடந்தது என்றும், அந்தத் திருடர் பிடிக்கப்பட்டு மரணதண்டனை பாரிக்கப்பட்டு சில தினங்களுக்குள் அந்த விசாரணை நடக்கப்போகிறது என்றும் சொன்னதாக ஊருக்குள் ஒரு சத்தம் இருக்கிறதாம் என்றான். அதைக் கேட்கவே கிறிஸ்தீனாளுக்கும் தயாளிக்கும் கை கால் ஆட்டங்கொடுத்தது. அதைக் கண்ட மத்தேயு என்ற பிள்ளையாண்டான்

பிரயாணிகள் அலங்கார மாளிகையை விட்டுப் புறப்பட்டது.



தாயை நோக்கி: அம்மா! வீரதீர பராக்கிரமராகிய தைரியநெஞ்சன் என்பவர் நம்மோடேகூட வந்து வழிகாட்டுவதால் நாம் ஏன் அஞ்சவேண்டும் என்றான்.

அப்புறம் கிறிஸ்தீனாள் வாசல் சேவகனைப் பார்த்து: ஐயா! நான் இவ்விடம் வந்ததுமுதல் இதுவரையும் நீர் எனக்குச் செய்த உதவிகளுக்காகவும் என் மக்களுக்குப் பாராட்டின பட்சத்துக்காகவும் உமக்கு மிகுந்த நன்றியறிதலுள்ளவளாய் இருக்கிறேன். நீர் செய்த உபகாரங்களுக்குத் தகுந்த பிரதியுபகாரம் என்ன செய்யலாம் என்று எனக்குத் தெரியவில்லை; உம்மைப்பற்றி எங்களுக்குள்ள மதிப்புக்கு அத்தாட்சியாக இந்த சின்னக்காசை வாங்கிக்கொள்ளும்படி மன்றாடுகிறேன் என்று சொல்லி; ஒரு பொன்காசை அவர் கையில் வைத்தாள். அவர் அதை ஆசாரத்தோடு தலைகுனிந்து வாங்கிக்கொண்டு "உன் வஸ்திரங்கள் எப்பொழுதும் வெள்ளையாயும் உன் தலைக்கு எண்ணெய் குறையாததாயும் இருப்பதாக"[a] என்று வாழ்த்தினார். அப்புறம் அவர்: தயாளி சாவாமல் பிழைப்பாளாக, அவள் கிரியைகள் கொஞ்சமாய் இராதிருப்பதாக என்றார்.[b] அவர் பிள்ளைகளைப் பார்த்து: நீங்கள் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, முதியோரும் ஞானிகளுமானவர்களுடன் கூடி மெய்த்தேவபக்தியைப் பின்தொடருங்கள்.[c] அப்படிச் செய்வீர்களானால் நீங்கள் உங்கள் மாதாவின் மனதுக்கு மகிழ்ச்சியாயிருந்து தெளிந்த புத்தியுள்ளவர்களால் புகழ்ச்சியைப் பெறுவீர்கள் என்றார். அப்புறம் அவர்கள் வாசல் சேவகனுக்கு வந்தனம் செய்து வழிநடக்கத் துவக்கினார்கள்.

பிரயாணிகள் வாசல்சேவகனை வழியனுப்பினது.

சேவகனின் ஆசீர்வாதம்.

அப்படியே அவர்கள் எல்லாரும் வழிநடந்து ஒரு மலைச் சரிவுமட்டும் வந்ததை நான் என் சொப்பனத்திலே கண்டேன். அவ்விடத்தில் பயபக்தி திடீரென்று நின்றுகொண்டு, ஐயோ! கிறிஸ்தீனாளுக்கும் அவளுடன் கூடப்போகும் பிரயாணிகளுக்கும் கொடுக்கவேண்டும் என்று நினைத்திருந்த பொருளைக் கொடாமல் மறந்தே போய்விட்டேன். திரும்பிப்போய் அதை எடுத்து வருகிறேன் என்று சொல்லிக்கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடினாள். அவள் அதை எடுக்கப்போய் இருந்த சமயத்தில் பாதையின் வலது பக்கமாய் சற்று அப்பால் இருந்த ஒரு தோப்

---

a பிர. 9. 8. b உபா. 33. 9. c 2 திமொ. 2. 22.

புக்குள் ஒரு சங்கீத சத்தம் கேட்கிறதுபோல் கிறிஸ்தீனாள் செவியில் விழுந்தது. அச்சங்கீத வார்த்தைகள் பின்வருகிற விதம்போல் இருந்தது.

6,6,4. 6.6 6,4.

கர்த்தாதி கர்த்தரே!
உமது வீட்டிலே
என்றென்றைக்கும்;
நான் வாசஞ்செய்யவே
உமது அன்பையே
அடியேனுமே
அளித்தீரே!

அவள் சற்றுநேரம் அந்தப் பாட்டுக்குச் செவிசாய்த்துக் கொண்டிருக்கையில் முந்தின பாட்டுக்கு மறுமொழி சொல்லுகிறதுபோல் ஒரு கீர்த்தனையும் கேட்டது. அதாவது:

பிலகரி—ஏகதாளம்.

எங்களின் தேவன் நல்லவர்,
இரக்கத்தில் பெருக்கமுள்ளவர்,
உண்மையில் பிசகில்லாதவர்
சதாகாலமாய் தேவன் நல்லவர்
தேவன் நல்லவர் என்றறிந்துகொள்

என்பதே.

அலங்காரமானவை சோலை பட்சிகள்.

அவ்விருபாட்டையும் கேட்ட கிறிஸ்தீனாள்: இதென்ன விநோதவிதமாய் இருக்கிறதே! என்று கேட்டாள்? [a] அதற்கு விவேகி சொல்லுகிறாள்: இவைதான் எங்கள் நாட்டுப் பட்சிகள். இவ்வித கீதங்களை அடிக்கடி கேளாவிட்டாலும் வசந்தகாலம்[1] உண்டாகி வெயில்காய்ந்து புஷ்பாதிகள் மலரும் போது நாளெல்லாம் இப்படிக் கீதம் கேட்கலாம். இந்தப் பட்சிகளின் மங்கள கீதங்களைக் கேட்கும்படி நான் அடிக்கடி அத்தோப்புகளுக்குள்ளும் போகிறதுண்டு. இவைகளில் சிலவற்றை நாங்கள் பிடித்து வளர்த்துப் பழக்கியும் இருக்கிறோம்.

---

[1] இருதயம் உறுதியான நம்பிக்கையால் நிறைந்திருக்கையில்தான் சந்தோஷமான கீர்த்தனங்கள் அதில் இருந்து எழும்பும். பயங்கரமான சோதனைகாலத்தில் சில பறவைகள்மாத்திரம் பாடுவதுபோல், சந்தேகத்துடன் மயங்கி இருக்கும் ஆத்துமாவும் பாட வல்லமையிருக்கும்.

a உன்ன. 2. 11, 12.



துக்கசாகரத்தில் இருக்கையில் அதின் இங்கித கீதம் ஆறுதலைத் தருகிறது. மேலும் அது காட்டையும் வனத்தையும் தோப்பையும் சோலையையும் விட்டு நாம் தேடிப்போகப்பண்ணிவிடுகின்றன என்றாள்.

பயபக்தி கொடுத்த இனாம்.

"இதற்குள்ளாக பயபக்தி தான் மறந்து வைத்துவிட்டு வந்த சாமானை எடுத்து வந்து சேர்ந்தாள். அவள் கிறிஸ்தீனாளைப் பார்த்து: இதோ பார், நீங்கள் எங்கள் வீட்டில் கண்ட காட்சிகளெல்லாம் இதில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது; அக்காட்சிகள் ஏதாவது ஞாபகத்தில் வரவில்லையானால் இதைப் பார்த்தவுடனே தெரிந்துபோம். இதினால் உனக்கு ஆறுதலும் தேறுதலும் உண்டாகும் என்று சொல்லி அதைக் கொடுத்தாள்.

## தாழ்மையின் பள்ளத்தாக்கு.

பிரயாணிகள்—பள்ளத்தாக்கு.

இப்பொழுது அவர்கள் தாழ்மை என்னும் பள்ளத்தாக்குக்குப் போகும்படியாக மலையில் இருந்து இறங்குகிறார்கள். அம்மலையின் இறக்கம் செங்குத்தும் சறுக்கலுமாய் இருந்தது; அவர்கள் மகா பயபக்தியோடு மெதுவாய் இறங்கிவிட்டார்கள். அவர்கள் பள்ளத்தாக்கைச் சேர்ந்தவுடனே பயபக்தி கிறிஸ்தீனாளைப் பார்த்து: உன் புருஷனாகிய கிறிஸ்தியான் அப்பொல்லியோன் என்னும் அழிம்பனைச் சந்தித்ததும் இருவரும் கொடிய போர்புரிந்ததும் இந்த இடந்தான். அதைப் பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய் என்று நினைக்கிறேன்; ஆனால் திடமனதாய் மாத்திரம் இரு. தைரியநெஞ்சன் உங்களுக்கு வழித்துணையாய் வருகிறமட்டும் அபாயம் ஒன்றும் நேரிடாது என்று சொல்லி அவர்களை தைரியநெஞ்சனின் காபந்துக்குள் ஒப்புவித்துப்போட்டு அவ்விரண்டு கன்னிமாப்பெண்களும் தங்கள் இடத்துக்குத் திரும்பினார்கள். பிரயாணிகளோ தங்கள் வழிகாட்டியின் பின்னாலே நடந்துபோனார்கள்.

தாழ்மைப் பள்ளத்தாக்கின் வரலாறு.

தைரி. அப்பொழுது தைரியநெஞ்சன் பிரயாணிகளைப் பார்த்து: நாம் இந்தப் பள்ளத்தாக்கைப் பற்றி பயப்படவேண்டியதில்லை, ஏனெனில் நாமே நமக்குச் சேதத்தை உண்டுபண்ணிக்கொண்டால் அன்றி மற்றப்படி நம்மைச் சேதப்படுத்துவது ஒன்றும் இங்கே இல்லை; இவ்விடத்தில் கிறிஸ்தியான்

அப்பொல்லியோனைச் சந்தித்து அவனுடன் கடும்போர் புரிந்தது மெய்தான்; அவன் இந்த மலை இறங்கிவருகையில் இரண்டொருதரம் சறுக்கி விழுந்ததினாலேதான்[1] அந்த ஆபத்தும் நேரிட்டது. மேட்டில் சறுக்கினால் பள்ளத்தில் சண்டை செய்யவேண்டியது உண்டு. அதினாலே இந்தப் பள்ளத்தாக்கை எல்லாரும் பழித்துப் பேசுகிறார்கள். இன்னாருக்கு இன்ன இடத்தில் இப்படிப்பட்ட பயங்கரமான ஆபத்து நேரிட்டதாம் என்று சாதாரண ஜனங்கள் கேள்விப்பட்டால் அந்த இடத்தில் ஏதோ ஒரு துஷ்டப்பேய் வட்டம்போட்டுத் திரிகிறது என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் ஐயோ, அவரவர் செய்கையின் பலன் அங்கே பலிக்கிறதினாலே அப்படிப்பட்ட ஆபத்துகளுக்கு உட்படுகிறார்களே அன்றி வேறல்ல. பட்சிகள் பறந்து உலாவும் மற்ற மைதானங்கள் போலவே இந்தத் தாழ்மையின் பள்ளத்தாக்கும் செழிப்புள்ள பூமியாய்த்தான் இருக்கிறது; நாம்மாத்திரம் பக்கத்தில் சுற்று கவனமாய்க் கண்டுபிடிப்போனால் இவ்விடத்தில் கிறிஸ்தியான் அவ்வளவாய் அவதிப்பட்டதின் அந்தரங்கம் இன்னது என்பதை விளக்கும் அறிகுறியைக் கண்டாலும் காண்போம் என்றார்.

அப்பொழுது யாக்கோபு என்ற பிள்ளையாண்டான் தன் தாயைக் கூப்பிட்டு: அம்மா! அதோ பார் ஒரு ஸ்தம்பம்! அதில் ஏதோ எழுத்துகள் வரையப்பட்டிருக்கிறதுபோலத் தோன்றுகிறது, அதென்ன வாசகம் என்று போய்ப்பார்ப்போம் என்றான். நல்லதப்பா போவோம் என்று போனார்கள். அவர்கள் போய் பின்வரும் வாசகம் அதில் எழுதப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள்.

கிறிஸ்தியானுடைய சறுக்கலின் ஞாபக ஸ்தம்பம்.

"இவ்விடம் வந்து சேருமுன்
கிறிஸ்தியான் அடைந்த சறுக்கலும்
இவ்விடம் வந்து சேர்ந்தபின்
அவன் புரிந்த கடும்போரும்
இனி வருவோருக்கு
எச்சரிப்பாய் இருப்பதாக"

[1] கிறிஸ்தவனுக்கு நேரிடும் கொடிய போர்கள் அவன் சொந்த நடத்தைகளால்தான் உண்டாகின்றன. பாவம் எப்போதும் கலகம் எழுப்புகிறது. நன்மையான பாதையில் நேராய் நடக்காதவர்களை பிசாசு எதிர்க்கிறான். நாம் குற்றம் செய்தபின் பெலமாய் யுத்தம் செய்தல்லாமல் மறுபடியும் செம்மைக்கு வரக்கூடாது. நாம் செய்யும் ஒவ்வொரு பாவமும் நாம் முன்னிருந்த நேர்வழிக்கு வருமுன் ஒவ்வொரு சண்டையையும் பிறப்பிக்கும்.



என்று எழுதப்பட்டிருந்தது. உடனே அவர்கள் வழிகாட்டி: பார்த்தீர்களா? கிறிஸ்தியான் இவ்விடத்தில் பட்ட பாடுகளுக்கு முகாந்திரம் இன்னதென்று காட்டும் அறிகுறிஸ்தம்பம் ஏதாவது இங்கே இருக்கும் என்று நான் சொன்னது சரி ஆயிற்று? என்று சொல்லி, கிறிஸ்டீனாளைப் பார்த்து: அநேகர் அநுபவித்த கஷ்ட நஷ்டங்களின் பங்கே அன்றி அதிகமானது ஒன்றும் கிறிஸ்தியானுக்கு உண்டாகவில்லை. இந்த மலை இறங்குவதிலும் ஏறுவதே லகுவு; இப்படிச் சொல்லத்தக்க மலைகள் இவ்வுலகத்தில் அதிகம் இல்லை. நாம் அவனைப்பற்றி இப்போ அநுதாபப்பட அவசரம் இல்லை; அவன் தன் சத்துருவை ஜெயங்கொண்டு இளைப்பாறுகிறான். நாமும் சோதிக்கப்படுகிற சமயத்தில் அவனிலும் தாழ்வானவர்களாய் விளங்காதபடிக்கு வானாதிநாயகர் வரம் அருளுவாராக என்றார்.

பள்ளத்தாக்கின் வர்ணனை (தொடர்ச்சி).

மறுபடியும் அவர்: நாம் இனி இந்தத் தாழ்மையின் பள்ளத்தாக்கின் மத்திக்கு வருவோமாக. இத்திசையிலுள்ள பூமியில் எல்லாம் இதைப்போல நலமும் பலன்தரும் பூமியும் இல்லவே இல்லை. இது மகா செழிப்பான பூமி; நீங்களே பாருங்கள், இந்த மைதானம் எவ்வளவு பச்சென்று இருக்கிறது; இந்தப் பள்ளத்தாக்கைப் பற்றி ஒன்றும் கேள்விப்படாத ஒரு பிரயாணி நம்மைப்போல் இப்படிப்பட்ட வசந்த காலத்தில் இங்கே வருகிறதாய் இருந்தால் அவன் அங்குமிங்கும் சுற்றிப்பார்த்து தன் மனதுக்கேற்ற கண்காட்சிகளைக் கண்டு களிகூராமற்போவானோ? ஆ! இந்தப் பள்ளத்தாக்கு பசுமையாய் இருக்கிறதே! அழகான லிலி[1] புஷ்பங்களால் அடர்ந்திருக்குதே![a] நான் அறிந்தமட்டும் அநேக கஷ்டாளிகளுக்கு இந்தத் தாழ்மையின் மைதானத்தில் சொத்திருக்கிறது. ஏனெனில், தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்துநிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபை அளிக்கிறார்.[b] மெய்யாகவே இது செழிப்புள்ள பலனைக்கொடுக்கிற பூமி! கைநிறைய வாரி, களம்நிறையக் குவிக்கத்தக்க பலன் இங்கே விளைகிறது. தங்கள் பிதாவின் வீடு சேரவிரும்பும் பிரயாணிகள் சிலர் இனி போகவேண்டிய பாதை முழுவதும் ஏறும் மலைகளாயாவது இறங்கும் சரிவுகளாயாவது இராமல் இப்படி மைதா

[1] லிலிபுஷ்பம். இந்த புஷ்பமானது பரிசுத்தத்துக்கும் பொறுமைக்கும் குறிப்பாய் இருப்பதால், சாந்தமான சீஷர்களுக்கு இது ஒரு தகுந்த ஞாபகமாய் இருக்கிறது.

[a] உன்ன. 2. 1. [b] யாக். 4. 6. 1 பே. 5, 5.

ணமாகவே இருந்துவிட்டால் நல்லதே என்று ஆசைப்படுகிறார்கள்; ஆனால் அவர் விதித்த வழியே வழி; அதை மாற்ற யாரால் ஆகும்? அதற்கு அப்பால் முடிவு உண்டு என்றார்.[1]



பிரயாணிகள் இடைப்பையனைச் சந்தித்தது.

இவ்வண்ணம் அவர்கள் பலவாறாய்ப் பேசிக்கொண்டு வழி நடந்து போகையில் சற்று அப்பால் தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஒரு பையனை அவர்கள் கண்டார்கள். அவன் கிழிந்த வஸ்திரம் தரித்து பிச்சைக்காரனைப்

[1] சகலமும் சமாதானமும் அமைதலுமாய் இருக்கிறது விரும்பப்படத்தக்க காரியம். எப்போதும் அப்படியே இருக்கத்தான் நமக்கும் ஆசை; ஆனால் அது கூடிக்கொள்ளாது. இலகுவான பாதைகளில் போலவே கரடுமுரடான பாதைகளிலும் வருத்தமான பாதைகளிலும் நடந்துசெல்ல நாம் ஆயத்தப்பட்டிருக்கவேண்டும்.



போல் இருந்தாலும் மலர்ந்த முகமும் மகிழ்ந்த பார்வையும் உடையவனாய் இருந்தான். அவன் ஒரு கல்லின்மேல் இருந்துகொண்டே களிகூர்ந்து பாடினான். கேள், கேள்! அதோ அந்த இடைப்பையன் பாடுகிறதைக் கேள்! என்று தைரியநெஞ்சன் சொன்னார். உடனே எல்லாரும் நின்று கேட்டார்கள். அந்தப் பையன்:

தரையில் இருப்பவன் தவறிவிழான்,
தாழ்மையுள்ளோன் பெருமைகொள்ளான்;
தாழ்ந்தோருக்கு தயவருளும்படி
தற்பரன் வருவார் எப்பொழுதும்;
கட்டே குறைவே இருந்தாலும்,
உள்ளதெனவோ அதே போதும்;
போதும் என்ப தென்றையமாம்,
புண்ணியநாதனே! நமஸ்காரம்.

போதும் என்போர்க்கே அருளாம்;
போதாதென்போர்க் கருளேது!
நிறைதகவாழ்வேன்? அழுதினமே
நித்தப்பயணக்காரருக்கே,
பருதானே ஏங்க பருதானே,
பாக்கியம் இங்கே போதுங்கொஞ்சம்
அங்கே தருவீர் வாழ்வை எல்லாம்
ஐயாவே! நித்யதையாவே!

என்று பாடினான். அப்போது அவர்கள் வழிகாட்டி: கேட்டீர்களா பாட்டை? இந்தப் பிள்ளையாண்டான் மனச்சந்தோஷத்தோடு தன் காலத்தைக் கழித்து வருகிறான் என்று நான் திட்டமாய்ச் சொல்லக்கூடும். பீதாம்பரம் கட்டிப் பிரபலமாய்த் திரிவோருடைய மடிக்குள் இல்லாத மனத்திருப்தி என்னும் திவ்விய மூலிகை இவன் மடிக்குள் இருந்து மணக்கிறது. அவன் காரியத்தை நிறுத்திப்போட்டு நம்முடைய பேச்சைப் பேசுவோமாக. இந்தப் பள்ளத்தாக்கில்தான் நமது ஆண்டவருடைய நாட்டுப்புறத்து மாளிகை[1] கட்டப்பட்

இடைப்பையனின் மனோ பாக்கியம்.

[1] பூமியானது இயேசுகிறிஸ்துவினுடைய நாட்டுப்புறத்து மாளிகைபோல் இருக்கிறது. அவர் பூலோகத்தில் இருந்தபோது வேடிக்கை, டம்பம், உல்லாசம் இவற்றை நாடாமல் சாந்தமும் மனத்தாழ்மையும் உள்ளவராய் மனிதரை விட்டுப் பிரிந்திருந்தார். இப்பேர்க்கொத்த ஜீவியம் வேறெதினும் நல்லதென்று தெரிந்துகொண்டார்.

டிருந்தது; இங்கே வசிக்கவே அவர் மெத்தப் பிரியங்கொண்டி ருந்தார். இந்த மைதானத்தில் உலாவித் திரிய அவருக்கு அவ்வளவு ஆசை இருந் தது. இதின் தேசசுவாத்தியம் தேகசௌ க்கியத்திற்கு மிகவும் ஏற்றதென்று அவர் அறிந்திருந்தார்.

பள்ளத்தாக்கில் இயேசு வின் நாட்டுப்புற வீடு இருந் தது.

மேலும் ஒரு மனுஷன் தன் ஜீவகால சச்சரவு களுக்கும் சந்தடிகளுக்கும் விலகி, இவ்விடத்தில் அக்கடா வென்று அமைதலாய் இருக்கலாம். இதை அல்லாத மற்ற நிலை மைகள் எல்லாம் சாபாராவும் காலாகோலமுமாய் இருக்கும்; இந்தத் தாழ்மையின் பள்ளத்தாக்கு ஒன்றில்மாத்திரம் அப்படிப் பட்டது ஒன்றும் இல்லாமல், இது தனிமையான வனமாய் இருக்கி றது. மற்ற இடங்களில் உண்டாகிற மனமுறிவும் தடைகளும் போல் இவ்விடத்தில் ஒருவனுடைய தியானசிந்தைக்கு நேரி டமாட்டாது. மோட்ச பிரயாணிகளை அன்றி வேறொருவரும் இவ்வனவழி நடக்கிறதில்லை. கிறிஸ்தியான் இவ்விடத்தில் அப்பொல்லியோனைச் சந்திக்கவும் அவனுடன் கைகலந்து போராடியவும் நேரிட்டபோதிலும் முற்காலங்களில் இவ்வி டத்தில் பல ஜனங்கள் சம்மனசுகளைச் சந்தித்ததும் உண்டு;[a] இங்கே முத்துகள் கண்டு எடுத்ததும் உண்டு;[b] ஜீவவார்த்தை களைக் கண்டுபிடித்ததும் உண்டு.[c]

நமது ஆண்டவர் முன்காலத்தில் தமது நாட்டுப்புற வீட் டை இவ்விடத்தில் கட்டியிருந்தார் என்றும் இவ்வனத்தில் உலாவித்திரிய அவ்வளவு பிரியப்பட்டார் என்றும் சொன் னேனே! இன்னும் கேளுங்கள்; இவ்வனத்தை நாடி இப்பூமி யின் போக்கையும் தாரதம்மியத்தையும் உற்று ஆராய்ந்து பரிசோதிக்கப் பிரியப்படுகிறவர்களுக்காக அவர் வருஷமா னியப் பொக்கிஷம் ஒன்றையும் ஏற்படுத்தி, குறிக்கப்பட்ட காலங்களில் அந்தப் பொக்கிஷத்தில் இருந்து எடுத்து பிரயா ணிகளின் வழிச்செலவுக்காகவும் அவர்களை மோட்சபய ணத்தில் உற்சாகப்படுத்தும்படியாகவும் உண்மையோடு பகிர் ந்துகொடுக்கும்படி திட்டம்பண்ணி இருக்கிறார் என்றார்.

சாமு. இவ்வண்ணம் அவர்கள் பேசிப்பேசிப் போகையில் சாமுவேல் என்ற பிள்ளையாண்டான் தைரியநெஞ்சனைப் பார்த்து: ஐயா! இந்தப் பள்ளத்தாக்கில் என் தகப்பனுக்கும் அப்பொல்லியோனுக்கும் யுத்தம் நடந்ததே; விஸ்தாரமான

a ஓசி. 12. 4, 5. b மத். 13. 46. c நீதி. 8. 35.



இந்த வனத்தில் அந்த யுத்தம் நடந்த இடம் எது? என்று கேட் டான்.

தைரி. அதற்கு தைரியநெஞ்சன் நமக்கு இன்னும் சற்று முன்னே அது இருக்கிறது; மறதிவனம்[1] என்னும் பசும்புல் மைதானத்துக்கப்பால் ஒரு இடுக்குவழி உண்டு; அதில்தான்

மறதிவனம்.

உன் பிதாவுக்கும் பாதகன் அப்பொல்லியோனுக்கும் போர் நடந்தது. இவ்வனவழியில் அவ்விடமே மகா ஆபத்துள்ளது. மோட்ச பிரயாணிகளுக்கு இந்த வனத்தில் எப்போதாவது ஆபத்து நேரிடுகிறதானால் அவர்கள் எவ்வளவோ அபாத்திர ராய் இருந்தும் தேவனால் பெற்றுக்கொண்ட சகாயங்களை ஞாபகம்பண்ணாமல் எப்போ மறக்கிறார்களோ, அப்போது தான் அந்த ஆபத்துகள் வந்து வயிக்கும். இந்த இடத்தில்தான் வேறு அநேகருக்கும் இப்படிப்பட்ட சங்கடங்கள் சம்பவித் தன. நாம் அந்த இடம்மட்டும் போனபின் அவ்விடத்தில் நடந்த பெரும் போர்களை உணர்த்தும் பல குறிப்புகளை எப் படியும் காண்போம் என்று நான் உறுதியாய் நம்புகிறேன் என்று சொன்னான்.

தயாளி. அப்பொழுது தயாளி: நான் இதுமட்டும் பயணம் பண்ணின பாதைகளில் அநுபவித்த சுகம் எவ்வளவோ, அவ்வளவு சுகம் எனக்கு இந்த வனவழியிலும் இருக்கி

மனத்தைச்சமாதானப்படுத்த நிலைமை.

றது என்று நான் என்மட்டில் சொல்லக்கூடும். இது என் ஆவிக்கு ஒத்திருக்கிறது. ரதங்களின் இரைச்சலும் சக்கரங் களின் சந்தடியும் இல்லாத இப்பேர்ப்பட்ட இடத்தில் இருப் பதுதான் எனக்குப் பிரீதி. இவ்விடத்தில் இருந்துகொண்டு ஒரு மனுஷன் தான் யார் என்றும் எங்கிருந்து வந்தவன் என் றும் தான் செய்தது என்னவென்றும் அரசன் தன்னை அழை த்த காரணம் எதென்றும் யாதொரு தடைமாற்றம் இன்றி தியானித் துக்கொள்ளலாம் என்று என் மனதுக்குத் தோன்றுகிறது. இவ்

[1] மறதிவனம். யுத்தம் நடந்தது இந்த வனத்துக்கு அப்பால்தான் நமது அயோக்கியதையையும் கடவுளின் தயாளகுணத்தையும் நாம் மறந்துவிடும்போது சாத்தானுடைய கைக்குள் அகப்பட்டுக்கொள் ளுகிறோம்; அப்போது அவன் நம்மை நாசம்செய்யப் பார்க் கிறான்.

விடத்தில் ஒருவன் அமர்ந்து யோசித்து தன் இருதயத்தை நொறுக்கி ஆவியை உருக்கி தன் கண்கள் எஸ்போனின் மீன் குளத்தைப் போல கலங்கிப் போகுமட்டும் தியான சிந்தையில் இருக்கலாம்.[a] அருமையின் பள்ளத்தாக்காகிய இந்த வனத்தின் வழியாய் சிலர் நடந்துபோகிறவர்கள் இதைத் தங்களுக்கு நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள். இவ்விடத்தில் உள்ளவர்கள்போல் தேவன் வானத்திலிருந்து வருஷிக்கும் மழையானது அக்கிணறுகளை நிரப்பும்.[b] இவ்விடத்திலிருந்தே அரசர் தமது தாசருக்கு அவர்களுடைய திராட்சத்தோட்டங்களைத் தத்தம் செய்வார். அத்தோட்டங்களின் வழியாய் நடந்துபோகிறவர்கள் அப்பொல்லியோனால் அவஸ்தைப்பட்டும் கிறிஸ்தியானைப்போல் பாடிக்கொண்டே போவார்கள்[c] என்றான்.

தாழ்மையின் வாழ்வு.

தைரி. அப்போது அவர்கள் வழிகாட்டி: இந்தப் பள்ளத்தாக்கின் வழியாய் நான் பலதடவை போய்வந்துண்டு; இதைப்போல எனக்கு நலமான பாதை எங்கும் இல்லை. அனேகம் பிரயாணிகளை நான் வழிகாட்டும்படி வந்திருக்கிறேன், அவர்களும் இப்படியே இவ்விடத்தில் அதிகமாயிட்டு இருக்கிறார்கள். நமது அரசரும் "சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவர்களையே நோக்கிப் பார்ப்பேன்"[d] என்று சொல்லுகிறார் என்றார்.

முன்சொன்ன போர்நடந்த இடத்துக்கு அவர்கள் வந்தவுடனே தைரியநெஞ்சன் கிறிஸ்தீனாளையும் அவள் பிள்ளைகளையும் தயாளியையும் பார்த்து; அந்தப் போர்க்களம் இதுதான்.[1] போர் நடந்தபோது கிறிஸ்தியான் நின்ற இடமும் இதுதான்; அதோ அந்த இடத்தில் இருந்துதான் அப்பொல்லியோன் அவன்மேல் பாய்ந்தான். யுத்தத்தின் அடையாளம் எதாவது காணலாம் என்று நான் சொல்லவில்லையா? கிறிஸ்தீனாளே

கிறிஸ்தியான் அப்பொல்லியோனை எதிர்த்த இடம்.

[1] மற்றவர்களுடைய சரித்திரத்தையும் அனுபவங்களையும் நாம் நன்றாய் அறிந்து ஞாபகம்பண்ணி வரவேண்டும். நாம் அபாயங்களுக்கு எப்படி விலகலாம், சோதனைகளை எப்படி ஜெயிக்கலாம் என்று மற்றவர்களுடைய அனுபவத்திலிருந்து நன்றாய் அறிந்துகொள்ளலாம்.

[a] உன்ன. 7. 4. [b] சங். 84. 5–7.
[c] ஓசி. 2. 15. [d] ஏசா. 66. 2.



இதோ பார், உன் புருஷனுடைய இரத்தம் இந்தக் கல்லுகளின்மேல் இந்நாள்மட்டும் இருக்கிறது; முறிந்துபோன அப்பொல்லியோனின் அக்கினியாஸ்திரங்களின் துண்டுகள் அதோ கண்ட இடமெல்லாம் கிடக்கின்றன. இதோ, இதோ தரையைப் பார்; ஒருவரை ஒருவர் மடக்கும்படி அவர்கள் கால் வைத்து மிதித்துநின்ற இடங்களில் மண்பதிந்து அப்படியே காய்ந்துபோய் இருக்கிறது; அவர்கள் ஒருவரையொருவர் தள்ளிவிழத் தட்டி மல்லுக்கட்டிக்கொண்டு கிடந்ததில் கல்லுகள் எப்படி நொறுங்கிப்போய் இருக்கிறது பார்! மெய்யாகவே கிறிஸ்தியான் நல்ல போர் போட்டான். யுத்த நாட்களிலிருந்த எர்குலே மன்னன் இச்சமயத்தில் எவ்வளவு வீரத்துவம் காட்டியிருப்பானோ அவ்வளவும் அதற்கு மிஞ்சியும் கிறிஸ்தியான் தன் வீரிய பராக்கிரமத்தோடு போர்புரிந்து அப்பொல்லியோனை அதோகதியாக்கிப்போட்டான். அப்பொல்லியோன் தோற்றுப்போனவுடனே மரணநிழலின் பள்ளத்தாக்கென்னப்படுகிற பக்கத்து அந்த பள்ளத்தாக்குக்குள் ஓடிப் பதுங்கிக்கொண்டான். இன்னும் கொஞ்சதூரத்துக்கு அந்தப் பள்ளத்தாக்கையும் கடக்கவேண்டியதிருக்கும். அதோ தெரிகிறதே, அந்த ஸ்தம்பத்தின்மேல் தலைமுறை தலைமுறைக்கும் கீர்த்தியாய் இருக்கும்படி இந்த யுத்தத்தின் செய்தியையும் அதில் கிறிஸ்தியான் அடைந்த ஜெயத்தையும் தீட்டியிருக்கிறது என்றார்.

அந்த ஞாபகஸ்தம்பம் தங்களுக்கு சற்று முன்னே வழித்தாயாய் இருந்ததினால், அவர்கள் உடனே நடந்துபோய் அந்த வாசகத்தை வாசித்துப் பார்த்தார்கள். அதிலே:

அப்பொல்லியோனின் அபஜெய ஸ்தம்பம்.

பல்லவி.

இந்த, இந்த, இந்த இடத்தில் ஓர்
விந்தை, விந்தை, சண்டை ஆனது;
இந்த, இந்த ஸ்தம்பமே,
ஜெயத்தைக் கூறுமே.

பக்தன் கிறிஸ்தியானுடனே—படு
பாதகன் அப்பொல்லியோன் எதிர்த்தான்
நான் விடேன், நான் விடேன் என்றவருக்கும்
கடுங்கப் போர் புரிந்தார்— இந்த, இந்த

பக்தன் அவனை வீரியமாய்—வெட்டி
குத்தித்தள்ளி ஓட்டிவிட்டான்.
பிழைத்தோம், பிழைத்தோம் என்றவனே
பிடித்தானே ஓட்டம்— இந்த, இந்த

என்று எழுதப்பட்டிருந்தது.

## மரணநிழலின் பள்ளத்தாக்கு.

பிரயாணிகள் மரணநிழலின் பள்ளத்தாக்கு.

அவர்கள் இதைக் கடந்து தீர்ந்து மரணநிழல் பள்ளத்தாக்கின் கரை சேர்ந்தார்கள். முந்தின பள்ளத்தாக்கைப்பார்க்கிலும் இது மகா விஸ்தாரமாய் இருந்தது; அநேகருடைய அத்தாட்சியின்படி அது தீமையால் அடர்ந்திருந்தது. இந்த ஸ்திரீகளும் பிள்ளைகளும் பட்டப்பகலில் அதின் வழியாய்ப் பிரயாணம் செய்ததாலும் தைரியநெஞ்சன் அவர்களை வழிநடத்தினதினாலும்[1] கடைமட்டிலும் சுகமாய் அதைக் கடந்துவிட்டார்கள் என்று சொல்லவேண்டும்.

[illegible]

அவர்கள் அந்தப் பள்ளத்தாக்கின் வழியே போகையில் சாவோர் சங்கடப்பட்டு அலறுவதுபோலொத்த சத்தத்தைக் கேட்டதாக அறிந்துகொண்டார்கள். அநேகர வஸ்திப்படுவோர் அழுது புலம்பும் சத்தமும் அங்கே கேட்கப்பட்டது. இவை எல்லாம் பையன்களைப் பயப்படுத்திவிட்டது; அந்தப் பெண்களுடைய முகமும் வெளுத்து குருவிப்போயிற்று. ஆனால் அவர்கள் வழிகாட்டியோ அவர்களைப் பார்த்து, கலங்காதேயுங்கள் என்று தைரியப்படுத்தினார்.

பள்ளத்தாக்கின் அவதிகள்.

அவர்கள் பின்னும் கொஞ்சத்தூரம் போகவே அடியில் பள்ளம் இருக்கிறதுபோல் தரை குலுங்குகிறதைக் கண்டார்கள். சர்ப்பங்கள் இரைகிறதுபோல் இரைச்சலும் கேட்கப்பட்டது; ஆனால் இம்மட்டும் அவர்கள் ஒன்றையும் கண்ணாரக் காணவில்லை. அதைக் கண்ட பையன்கள் இந்த அவதிகள் நிறைந்த பள்ளம் இன்னும் தொலையவில்லையா? என்று அங்கலாய்த்தார்கள். அவர்கள் வழிகாட்டியோ, பிள்ளைகளே, திடமனதாய் இருங்கள், கால் பார்த்து வையுங்கள், மற்றப்படி கண்ணிகளில் கால் மாட்டிக்கொள்ளுவீர்கள் என்று எச்சரித்தார்.

---

[1] மற்றவர்களுடைய ஆலோசனையும் தோழமையும் உதவியும் பெலவீனரும் பயங்காளிகளுமானவர்களை முதலாய் பெரிதும் கொடுமையான சோதனைகளினூடே பத்திரமாய் கடந்துபோகப் பெலப்படுத்தும், தைரியசாலிகள் தானும் ஒண்டியாய் விடப்பட்டால் கொடிய இக்கட்டுகளுக்குள்ளாகி வருத்தப்படுகிறார்கள்.



யாக்கோபு வியாதிப்பட்டுச் சுகமானது.

இச்சமயத்தில் யாக்கோபு வியாதிப்பட்டான். அது பயங்கரமே அன்றி வேறு நோய் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. உடனே அவன் தாய்; வியாக்கியானி அனுப்பியிருந்த திராட்சரசத்தில் கொஞ்சமும் சாமர்த்தியன் கொடுத்திருந்த பிசின்களாகிய குளிகைகளில் மூன்றும் கொடுத்தாள்; அதனால் அவன் குணமானான். அப்படியே அவர்கள்



வழிநடந்து கொஞ்சம் குறைய மரணப் பள்ளத்தாக்கின் மத்தியில் வந்து சேர்ந்தார்கள். அப்போது கிறிஸ்தீனாள்; அதோ முன்னே ஏதோ ஒரு ஆவேசம் ராஜபாதையில் எதிர்ப்பட்டு வருகிறதுபோல் இருக்கிறது; அப்படிப்பட்ட ரூபத்தை

ஆவேச வடிவு.

ஒரு காலாகாலத்திலும் நான் கண்டதில்லை என்றான். அம்மா! அதென்ன? அதென்ன? என்று யோசேப்பு கேட்டான்; அந்தக் கெட்ட ரூபம் அந்தக்கெட்ட ரூபம் அப்பா என்றான். அது என்னமாதிரியாய் இருக்கிறது என்று கேட்டான்; என்ன மாதிரி என்று சொல்ல எனக்கே தெரியவில்லை அப்பா, இப்போது அது கொஞ்சதூரத்தில்தான் இருக்கிறது என்றான்; சற்றுநேரம் பொறுத்து, இதோ கிட்டவந்துவிட்டது என்றான்.

உடனே அவர்கள் வழிகாட்டி; உங்களில் பயங்காளிகள் யாரோ அவர்கள் எல்லாரும் என் கிட்ட நெருங்கிக்கொள்ளுங்கள் என்றார். அந்தத் துஷ்டசேஷ்டை நெருங்கி வந்தது, தைரியநெஞ்சன் என்பவர் துணிந்து எதிர்போனார்; அது அவருக்குக் கிட்டவந்து அப்படியே காணாமலே மறைந்து போயிற்று. அப்பொழுது அவர்கள் எல்லாரும், "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" என்று வெகுகாலத்துக்குமுன் சொல்லப்பட்ட திவ்விய வாசகத்தை நினைவுகூர்ந்தார்கள்.[a]

சிங்கசாயலொத்த வஸ்துவின் காட்சி.

அப்புறம் அவர்கள் மனந்தெளிந்து தங்கள் வழியே போனார்கள். முந்தின காட்சியைக் கண்ட இடத்தில் இருந்து கொஞ்சதூரம் போகவே தயாளி பின்னிட்டுப்பார்த்து, கொஞ்சங் குறைய சிங்கம்போலொத்த சாயலொன்றைக் கண்டாள்;[1] அது நாற்கால் பாய்ச்சலோடு பின்தொடர்ந்துவந்தது. அது ஒவ்வொருதரம் கர்ச்சித்து முழக்குகையில் அப்பள்ளத்தின் நான்கு திசையில் இருந்தும் எதிரொலி எழும்பிற்று; அவர்களுடைய வழிகாட்டியின் மனந்தவிர மற்றவர்கள் மனமெல்லாம் கலங்கித் தடுமாறிற்று. உடனே தைரியநெஞ்சன் பிரயாணிகள் அனைவரையும் முன்னேவிட்டுத் தான் பின்னே நின்றுகொண்டார். அச்சிங்கம் கர்ச்சித்துப் பாய்ந்து வந்தது; தைரியநெஞ்சன் அதைப் பார்த்து, சண்டைக்கு அழைக்கவே[b] துஷ்ட எதிர்ப்பாளிடத்தில் நமக்கேது இடம் என்று எண்ணி அது பின்வாங்கிப் போயிற்று, அப்புறம் அது திரும்ப வரவே இல்லை.

---

[1] சிங்கம். தேவனுடைய ஜனங்களுக்குப் பயங்காட்ட சாத்தான் எப்போதும் ஆயத்தமாய் இருக்கிறான். அவர்கள் ஜெபத்தையும் தேவபக்தியையும் கைசோரவிடும்போது அவன் அவர்களை மேற்கொள்ளுவான்; ஆனால் கிறிஸ்துவின் பேரிலுள்ள நம்பிக்கையை உறுதியாய்ப் பிடித்திருக்கும்போது அவன் அவர்களை விட்டு ஓடிப்போவான்.

a யாக். 4. 7.    b 1 பே. 5. 8, 9.



கரும்புகையும் கார்மேகமும்.

அப்பால் தைரியநெஞ்சன் முன்னும் இவர்கள் பின்னுமாய் வழிநடந்து ராஜபாதையின் குறுக்கே வெட்டப்பட்டு இருந்த அகன்ற பாதாளமட்டும் வந்து சேர்ந்தார்கள். அதைக் கடந்து போகும்படி தங்களைத் தயார் செய்துகொள்ளுகிறதற்குள்ளாக, கரும்புகையும் கார்மேகமும் அவர்கள் அனைவரையும் கவிந்துகொண்டதால் கண் இருண்டுபோயிற்று. அப்பொழுது பிரயாணிகள் எல்லாரும் ஐயோ நாங்கள் என்ன செய்வோம் என்று அலறினார்கள். ஆனால் அவர்கள் வழிகாட்டி: பயப்படாதேயுங்கள், தரித்துநின்று இந்தக் காரிருள் என்னமாய் முடிகிறது என்று பாருங்கள் என்றார். அவர்களுடைய வழியில் தடங்கல் இருந்தபடியால் அங்கேயே நின்றுகொண்டு இருந்தார்கள். அதோடு சத்துருவின் சேனாகணங்கள் நெருங்கி வருகிறதுபோன்ற அமளியும் கேட்டது. அக்குழியில் இருந்த அக்கினியும் புகைக்காடும் குபுகுபு என்று எழும்புகிறதையும் கண்டார்கள்.

கிறிஸ்தியனுடைய அநுபவத்தை நினைவுகூருதல்.

அச்சமயத்தில் கிறிஸ்தினாள் தன் தோழியைப் பார்த்து, என் கணவர் பட்ட பாடெல்லாம் இப்போ விளங்குகிறது, இந்த இடத்தைக் குறித்து நான் அநேகமாய்க் கேள்விப்பட்டு இருக்கிறேன்; இப்போதுதான் இந்த இடத்தையும் பார்த்தேன்; இதற்குமுன் நான் இங்கே வந்திருப்பது இல்லை. அர்த்தராத்திரியில் என் துணைவன் ஒண்டியாய் இதின் வழி நடந்துபோனாரே! கொஞ்சங் குறைய இந்தப் பள்ளத்தாக்கு முழுவதையும் இராவிலே நடந்து கழித்தார்; இவ்விதத் துஷ்டப் பேய்கள் வந்து அவரைத் துண்டுதுண்டாய்க் கிழித்துப்போடுகிறவர்களைப்போல் கடும்பாடு படுத்தின. அநேகம்பேர் இதைப் பற்றிப் பேசி இருக்கிறார்கள்; ஆனால் இதின் வழியாய் நடந்தவர்களுக்கே அன்றி வேறொருவருக்கும் இதின் காரியபாகங்கள் அப்படியாய்த் தெரியமாட்டாது.[1] இருதயத்தின் கசப்பு இருதயத்திற்கே தெரியும்; அதின் மகிழ்ச்சிக்கு அந்நியர் உடந்தையாகிறதும் இல்லை;[a] இங்கே இருப்பது மா பயங்கரம் தான் என்றாள்.

---

[1] நம்முடைய சொந்த அநுபோகத்தினாலேதான் நமக்கு அநேக காரியங்கள் தெளிவாகும். மற்றவர்களுடைய போதனைகளினால் ஒருபோதும் நாம் அறிந்துகொள்ளக்கூடாத அநேக சங்கதிகள் உண்டு.

a நீதி. 14. 10.

தைரி. அதற்கு தைரியநெஞ்சன்; இது திரளான தண்ணீர்களில் தொழில் செய்கிறதுபோல், அல்லது ஆழங்களில் இறங்கிப் போகிறதுபோல் இருக்கிறது. இது சமுத்திரஜலத்தின் மையத்தில் குடியிருப்பதுபோலும் பர்வதங்களின் அஸ்திபாரங்களுக்குள் போகிறதுபோலும் இருக்கிறது. இப்பொழுது நம்மை பூமியின் தாழ்ப்பாள்கள் என்றைக்கும் அடைக்கிறது போல் இருக்கிறது; ஆனாலும் இருளுள்ள ஸ்தலங்களில் ஒளியற்று நடக்கிறவர்கள் கர்த்தருடைய நாமத்தை நம்பி தங்கள் தேவனைச் சார்ந்துகொள்ளக் கடவர்கள்.[a] என்மட்டும் சொன்னால் நான் முன்சொல்லிய வண்ணம் இந்தப் பள்ளத்தாக்கின் வழியாய்ப் பலமுறை போய்வந்து இருக்கிறேன்; இப்பொழுது உண்டான சங்கடங்களிலும் அதிகமான சங்கடங்களுக்கு நான் அகப்பட்டும் இருக்கிறேன்; அப்படி இருந்தும் நான் இன்னும் உயிரோடு இருக்கிறதைக் காண்கிறீர்களே. நான் என்னைப் புகழ்ந்துகொள்ள மாட்டேன், ஏனெனில் என்னை நானே இரட்சித்துக்கொள்ளவில்லை. என்றாலும் நமக்கு ஒரு சகாயம் வரும் என்று நம்பி இருக்கிறேன். நாம் நமது இருதயத்தைப் பிரகாசிக்க வல்லமை உள்ளவரை நோக்கி பிரகாசத்துக்காகப் பிரார்த்திப்போம் வாருங்கள்; அப்பிரகாசமானது இவ்விருளை அதம்பி அதனுடனேகூட பாதாள பூதகணங்களையும் அதம்பி அகற்றிவிடும் என்றார்.

*பிரார்த்தனையின் ஜெயம்.*

அப்படியே அவர்கள் அழுது பிரார்த்தித்தார்கள்; அக்கணமே தேவன் வெளிச்சத்தையும் விடுதலையையும் அனுப்பினார்; ஏனெனில் அவர்கள் இம்மட்டும் முன் கடந்துபோகாதபடி பாதை அடைக்கப்பட்டு இருந்தது. கார்மேகத்திரள் அகன்றுபோனபோதிலும் தங்களுக்கு எதிரே வெட்டப்பட்டு இருந்த பள்ளம் அப்புறம் அவர்களுக்குத் தடையாய் இருந்தது. அவர்கள் அந்தப் பள்ளத்தையும் கடந்துபோனார்கள்; அங்கிருந்து சகிக்கக்கூடாத துர்க்கந்தமும் நாற்றமும் அவர்கள் மூக்கில் ஏறி மிகுந்த அருவருப்பைக் கொடுத்தது. அப்பொழுது தயாளி; இந்த இடம் திட்டிவாசல் அரண்மனையைப்போலும் வியாக்கியானியுடைய வீட்டைப்போலும் அலங்காரமாளிகையைப்போலும் விரும்பப்படத்தக்க ஒரு இடம் அல்ல என்று சொன்னாள்.

---

a ஏசா. 50. 10.



*ஒரு பையனுடைய உணர்ச்சி.*

அதைக் கேட்ட பையன்களில் ஒருவன்; எப்பொழுதும் இவ்விடத்தில் தங்கி இருப்பதிலும் இதைக் கடந்துபோவது அவ்வளவு கெடுதி இல்லையே; நமக்கென்று ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற வாசஸ்தலத்துக்கு இப்படிப்பட்ட பாதையாக நம்மை வழிநடத்துவது நியாயந்தான் என்பதற்கு என் மனதில் ஒரு முகாந்திரம் படுகிறது. நமது நித்தியவீடு நமக்கு மட்டற்ற இன்பமுள்ளதாகும்படிக்கு இப்படிப்பட்ட பாதை வழியாய் நாம் போகவேண்டியதுதான் என்றான்.[1]

அதைக் கேட்ட வழிகாட்டி; சாமுவேலே! நீ நன்றாய்ச் சொன்னாய்; முதிர்ந்த மனுஷனைப்போல் பேசிவிட்டாய் என்று சொன்னார். அதற்குப் பையன்; நான்மாத்திரம் இந்த அவதிகளைக் கடந்துவிட்டேனானால் அப்புறம் ஒளியையும் நற்பாதையையும் பற்றி இம்மட்டும் என் ஜீவகாலத்தில் இல்லாத அவ்வளவு மதிப்பு எனக்கு இருக்குமே என்றான். அதற்கு அவர்; இன்னும் கொஞ்சக்காலத்துக்குள் நாம் இதைக் கடந்துவிடுவோம் என்றார்.

இப்படியே பேசிப் பேசி வழிநடந்து போனார்கள்; அப்பொழுது யோசேப்பு: இந்தப் பள்ளத்தாக்கின் முடிவை எப்போதான் பார்ப்போம் என்றான். அப்பொழுது வழிகாட்டி; அப்பா! அடிபார்த்து நட, ஏனெனில் கண்ணிகளுக்கு நடுவே நடக்கப்போகிறோம் என்றார்.[2] அதுமுதல் எல்லாரும் கவனமாய்ப் பார்த்துக் காலெடுத்து வைத்தார்கள்; எவ்வளவு கவனமாய் நடந்தபோதிலும் கண்ணிகளால் கடும்பாடு பட்டார்கள். அவர்கள் கண்ணிகள் நிறைந்த ஓர் இடத்தில் வந்தபோது பாதையின் இடதுபக்கத்தில் ஒருவன் கண்ணி மாட்டி விழுந்து தேகமெல்லாம் பழுதுபட்டுக் கிடக்கிறதைக் கண்டார்கள்.

---

1 பிரயாணத்தில் நேரிடும் கஷ்டங்களால் அதின் முடிவில் உண்டாகும் இளைப்பாறுதல் அதிக அருமையுள்ளதாகிறது. சோதனைகளிலும் அவதிகளிலும் நம்முடைய ஆவியானது அடைந்துகொள்ளும் தேர்ச்சி பின்னால் உண்டாகும் பாக்கியத்தை அநுபவிக்க நம்மைப் பக்குவப்படுத்துகிறது.

2 வெகுதூரத்திற்கு முன்னாலே பார்ப்பதினால் நாம் நமது பாதத்தருகில் இருக்கும் தீமைகளைப் பார்க்காமல் விட்டுவிடுகிறோம். ஆதலால் நாம் ஒவ்வொரு அடியையும் கரிசனையாய் எடுத்து வைத்துப்போகவேண்டும். எதிர்காலத்தை அல்ல, நிகழ்காலத்தைக் குறித்தே எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

பெரும்பாரகனைக் கண்டதும் கவனிப்பு பிசகுதல்.

அப்போது அவர்கள் வழிகாட்டி; அதோ கிடக்கிறதே அவன் பேர் பெரும்பாரகன். இவன் வெகு காலமாய் அங்கேதான் இருக்கிறான்; இவனோடு பிடிபட்ட கவனிப்பு எப்படியோ தப்பி ஓடிவிட்டான்; இவனையோ அவர்கள் கொன்று போட்டார்கள். இந்தத் திசைகளில் மாண்ட மனுஷரின் தொகை இவ்வளவென்று கணக்கு எண்ண உங்களால் ஆகாது. அப்படி இருந்தும் பிரயாணிகள் புத்தியீனமாகவும் கவனம் இல்லாமலும் வழிகாட்டி இல்லாமலும் கவலையீனமாய்ப் பயணம்பண்ணிவிடுகிறார்கள். இந்த இடத்தில் ஐயோ ஏழைக் கிறிஸ்தியான் தப்பினதைப்போலொத்த அதிசயம் வேறில்லை. ஆனால் அவன் தன் தேவனால் நேசிக்கப்பட்டவனும் தன்னில் நல்மனம் உடையவனுமாய் இருந்தான்; மற்றப்படி இந்த மரண பள்ளத்தைத் தாண்ட அவனால் முடியாது என்றார்.

## சங்கார ராட்சதனைச் சந்தித்தல்.

சங்கார ராட்சதன் குகை.

இவர்கள் அந்தப் பள்ளத்தாக்கின் அந்தத்தில் போகையில் கிறிஸ்தியான் தன் பிரயாணத்தில் கடந்துபோன குகையின் வழியாகவே போனார்கள். போகையில் அக்குகைக்குள் இருந்து சங்காரன்[1] என்று பேர் வழங்கிய ஒரு அரக்கன் எழுந்தருளியாகி வந்தான். இந்த ராட்சதன் பெரும்பாலும் பாலியப் பிரயாணிகளை சொற்சாதுரிய நியாயங்களினாலே விழத் தட்டிக் கெடுக்கிறது வழக்கமாய் இருந்தது. மோட்ச பிரயாணமாய்ச் செல்லும் கூட்டத்தை அவன் கண்டவுடனே அவர்களுக்கு வழி காட்டிக்கொண்டு போனவரைப் பார்த்து: அடா தைரியா? இந்தத் தொழில் வேண்டாம் என்று உன்னை நான் பலமுறை எச்சரித்ததில்லையா? என்றான். அது எந்தத் தொழில் என்று கேட்டார். அதற்கு ராட்சதன்;

---

1 சங்கார ராட்சதன். முதல் பங்கில் காண்பித்த பாப்பு வாசம் செய்த அதே கெபியிலிருந்துதான் இவன் வெளிப்பட்டான். இங்கிலாந்து தேசத்திலுள்ள ரோமைக் குருக்களுக்குப் பின் வந்த அனைத்து அவநம்பிக்கையுள்ள வெளிவேஷக்கார குருக்களுக்கு இவன் உவமானமாய் இருக்கிறான். மனந்திரும்புதலுக்கும் பாவ மன்னிப்புக்கும் எந்த உபதேசமில்லாமல் போதிக்கப்படும் தத்துவ நூல்களும் சன்மார்க்க போதகங்களும் ரோமான் மார்க்கத்தைப் போலவே மோசகரமானதாய் இருக்கிறது.



அது எந்தத் தொழில் என்று நீ என்னைத்தானா கேட்கிறாய்! அது எந்தத் தொழில் என்று உனக்கே தெரியும்; அதற்கு எல்லாம் முடிவுபண்ணிப்போடுகிறேன் பார் என்று சொல்லிச் சண்டைபோட வந்தான்.

அவனுக்கும் வழிகாட்டிக்கும் நடந்த சம்பாஷணை.

அப்போது தைரியநெஞ்சன்: சண்டைசெய்யுமுன் என் தான் சண்டைபோடுகிறோம் என்று தெரிந்துகொள்ள வேண்டாமா? என்றார். இச்சமயத்தில் அந்தப் பெண்களும் பிள்ளைகளும் என்னசெய்வது என்று தெரியாமல் நடுநடுங்கினார்கள். அப்போது சங்கார ராட்சதன் சொல்லுகிறான்; நீ காட்டைக் கொள்ளையடிக்கிறாய்; உன் பிழைப்பைப்போல காணக் கெட்ட பிழைப்பு வேறொன்று இல்லை என்று சொன்னான். அதற்கு தைரியநெஞ்சன்; அப்படிப் பொதுவாய்ப் பேசினால் ஆகுமா? அதைச் சற்று விபரமாய்ச் சொல்லு மனுஷனே! என்றார்.

அப்புறம் ராட்சதன்: நீ காரிய திருட்டுத்தொழிலைச் செய்கிறாய்! என் எஜமானுடைய ராஜ்யபாரத்தைப் பலவீனப்படுத்தும் பொருட்டு நீ பெண்களையும் பிள்ளைகளையும் அந்நிய தேசத்துக்கு சேர்த்துக்கொண்டு போகிறாய் என்றான். அதற்குத் தைரியநெஞ்சன்: நானோ உன்னதமான தேவனுடைய ஊழியக்காரன்; பாவிகளை மனந்திரும்பும்படி வருவிக்கிறதே என் தொழில். ஆண்களையும் பெண்களையும் பிள்ளைகளையும் இருளிலிருந்து ஒளியினிடத்துக்கும் சாத்தானின் வல்லமையிலிருந்து தேவனிடத்துக்கும் திருப்பும்படி என்னால் ஆன பிரயத்தனம் எல்லாம் செய்யவேண்டும் என்று கட்டளை இடப்பட்டிருக்கிறது. இந்த முகாந்திரத்தையிட்டு நீ சண்டைக்கு வருகிறதானால் வந்து ஒரு கை பார்க்கலாம் என்றான்.

இருவரும் போர்புரிதல்.

அப்பொழுதே ராட்சதன் சண்டைக்கு வந்தான். தைரியநெஞ்சன் தன் வாளை உருவி அவனுக்கு எதிரே போனார்; அந்த ராட்சதன் கையில் ஒரு பெரிய தடி இருந்தது; வேறொன்றும் பேசாமலே சண்டையை ஆரம்பித்தார்கள். சங்கார ராட்சதன் தடியால் தைரியநெஞ்சனை முழங்காலில் ஒரு பலத்த அடி போட்டான்; அதைக் கண்டு அந்தப் பெண்களும் பிள்ளைகளும் கூவென்று அழுதுவிட்டார்கள். தைரியநெஞ்சன் சற்றே இடம் அடைந்துகொண்டு அவனை சுற்றிச்சுற்றி வீரியமாய் எதிர்த்து சமயம் பார்த்து அவன்

புயத்தில் பலகாயம் உண்டாக வெட்டினார். அவர்கள் இருவரும் சமார் ஒருமணிநேரமாவும் தாங்கள் படித்த வித்தை எல்லாம் பாராட்டி, சங்கார ராட்சதனுடைய மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் கொதிக்கிற கொப்பரையிலிருந்து நீராவி கொப்பளித்து எழும்புவதுபோல் சுவாசம் எழும்பத்தக்கதாகக் கொடிய போர் புரிந்தார்கள்.

அப்பால் அவர்கள் இருவரும் இளைப்பாறிக்கொள்ளும்படி சற்றுநேரம் உட்கார்ந்துகொண்டார்கள்; அந்த வேளையில் தைரியநெஞ்சன் ஜெபத்தியானம் செய்துகொண்டார். அந்த ஸ்திரீகளும் பிள்ளைகளும் சண்டை முடியும்பரியந்தம் புலம்புகிறதும் பெருமூச்சுவிடுகிறதும் அழுகிறதும் அங்கலாய்க்கிறதுமாய் இருந்தார்களே அன்றி வேறொன்றும் செய்யவில்லை.

அவர்கள் இளைப்பாறி மூச்செடுத்துக்கொண்டபின்பு மறுபடியும் சண்டைக்கு எழுந்தார்கள். தைரியநெஞ்சன் ஒரே குத்தோடு அவனைக் கீழே தள்ளிவிட்டார். அவ்வரக்கன் உடனே, பொறு பொறு, நான் எழுந்து நின்றுகொள்ளட்டும் என்றான். நல்லது அவன் எழுந்திருக்கட்டும் என்று சற்றுநேரம் சும்மா நின்றார்; அவன் எழுந்தபின் மறுபடியும் சண்டை ஆரம்பித்தார்கள். இந்தச் சண்டையில் ஒருதரம் அரக்கன் ஓங்கின தடிக்கு தைரியநெஞ்சன் அவ்வளவு சாமர்த்தியமாய் விலகிக்கொள்ளாத பட்சத்தில் அவர் மண்டை தெறித்துப்போய் இருக்கும்.

சங்கார ராட்சதன் அழிந்து போனது.

அதை தைரியநெஞ்சன் அறிந்துகொண்டு ஆவியோடே மட்டுமீறின ஆவல் கொண்டு சங்கார ராட்சதனுடைய கால் குலை உருவ ஒரே குத்தாய்க் குத்தினார். சங்கார ராட்சதன் உடனே அலறி சாய்ந்து விழுந்தான். அப்புறம் அவன் தன் தடியை எடுக்க சக்தி இருக்கவில்லை. தைரியநெஞ்சன் மறுபடியும் ஒரு பலத்த குத்துப் போட்டு அவனை முற்றிலும் கீழ்ப்படுத்தி அவன் சிரசையும் வாங்கிப்போட்டார். தைரியநெஞ்சன் ஜெயம் அடைந்து சிரசும் கையுமாய் வருகிறதைக் கண்ட ஸ்திரீகளும் பிள்ளைகளும் சந்தோஷப்பட்டார்கள். ஜெயம் அடைந்த தைரியநெஞ்சன் இவ்வளவு பெரிய இரட்சிப்பைத் தன் கையால் நிறைவேறச் செய்த திருஅருளை நினைத்து தேவனுக்கு ஆனந்த உருக்கத்தோடு ஸ்தோத்திரம் செலுத்தினார்.





அதன்பின் அவர்கள் எல்லாரும் கூடி அவ்விடத்தில் ஒரு தூணை நிறுத்தி அதின்மேல் அவ்வரக்கனுடைய தலையைக் கழுவில் ஏற்றிவைத்து அதின் அடியில்

தைரியநெஞ்சனுடைய
கான் எழும்பும் மட்டும்
வழி காட்டுவோனுடைய
கான் எதிர்க்குமட்டும்
இத்தலையை உடையோன்
பிரயாணிகளை
வழிமடக்கிக் கொல்லுவான்
அழித்தேன் அவனை

என்ற வாசகத்தை எழுதிவைத்தார்கள்.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டது என்னவென்றால், அவர்கள் மரணப் பள்ளத்தைக் கடந்து பிரயாணிகள் முன்னே நடந்துபோனவரை எட்டிப்பார்த்துக்கொள்ளும்படியாகச் செய்யப்பட்டிருந்த மண்மேட்டில் ஏறினார்கள். இந்த மேட்டில் இருந்துதான் கிறிஸ்தியான் தன் தோழனாகிய உண்மையைத் தனக்குமுன் விரைந்து நடந்து போகக் கண்டான். இவர்கள் அங்கே சற்றுநேரம் உட்கார்ந்து இளைப்பாறி தங்களுடைய பெரிய சத்துருவாகிய சங்காரராட்சதன் கீழ்விழுந்தான் என்ற சந்தோஷத்தால் அவ்விடத்தில் புசித்துக் குடித்து மகிழ்கொண்டாடினார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடு புசித்துக் குடித்துக்கொண்டிருக்கையில் கிறிஸ்தினாள் தைரியநெஞ்சனைப் பார்த்து: ஐயா! உமக்கு சண்டையில் ஏதாவது காயம் உண்டானதோ என்று கேட்டாள்; அதற்கு அவர்: சதையில் சற்று காயம் உண்டானதே அன்றி வேறு விசேஷம் இல்லை; அதினால் எனக்கு யாதொரு நஷ்டமும் இல்லை. நான் என் எஜமானிடமும் உங்களிடமும் கொண்டிருந்த அன்புக்கு அக்காயம் இவ்வுலகத்தில் அத்தாட்சியாயும் என் எஜமானுடைய கிருபையினால் மறு உலகத்தில் என் பலனைக் கூட்ட ஏதுவாயும் இருக்கும் என்றார்.

கிறி. ஐயா! அவன் தடியைத் தூக்கிக்கொண்டு வந்தானே, அப்போது நீர் பயப்படவில்லையா?

தைரி. என் பலத்தில் நான் நம்பிக்கை வைக்காதிருப்பதும் சர்வவல்லவர்மேல் என் நம்பிக்கையை வைப்பதும் என் கடமையாய் இருக்கிறதே! அப்படி இருக்கப் பயம் ஏன்?

கிறி. முதல் அடியிலேயே உமது முழங்காலை மடக்கினானே, அப்போது நீர் என்ன எண்ணினீர்?

தைரி. என்னவென்றால், நமது எஜமானும் இந்தப் பாடுகளைப் பட்டார்; அப்படி இருந்தும் அவர்தாமே ஜெயங்கொண்டார் என்றுதான் எண்ணிக்கொண்டேன்.[க]

மத். நீங்கள் எல்லாரும் அவரவர் மனதின்படி பலவகையாய் நினைக்கிறபொழுது நானும் என் நினைவைச் சொல்லுகிறேன். மரணப் பள்ளத்தாக்கைக் கடந்ததிலும் ராட்சதன்

க 2 கொ. 4. 10, 11. ரோ. 8. 37.



கையிலிருந்து இரட்சித்ததிலும் தேவன் நமக்கு செய்த கிருபைகளுக்கு ஒரு கணக்கில்லை என்றே நான் எண்ணுகிறேன். இந்தச் சமயத்திலும் இந்த இடத்திலும் தேவன் தமதுபெரிதான தயவு நேசத்தை இப்படி வெளிப்படுத்தி இருக்க, இனிமேல் அவரைப்பற்றி அவநம்பிக்கை கொள்ளுவதற்கு யாதொரு காரணமும் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது என்று மத்தேயு சொன்னான். அப்புறம் அவர்கள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள் வழியே போனார்கள்.

## யதார்த்தனுடன் கூடுதல்.

பிரயாணிகள் யதார்த்தனைக் கண்டுபிடித்தது.

போகிற வழியில் ஒரு கருவாலிமரம் இருந்தது. அம்மரத்தண்டை போகவே, அதின்கீழ் பழைய பிரயாணி ஒருவன் படுத்திருந்து அயர்ந்து நித்திரைசெய்யக் கண்டார்கள்.[1] அவனுடைய உடுப்பினாலும் தடியினாலும் கச்சையினாலும் இவன் மோட்ச பிரயாணிதான் என்று அவர்கள் திட்டமாய் அறிந்துகொண்டார்கள்.

வழிகாட்டியாகிய தைரியநெஞ்சன் அந்த ஆளைத் தட்டி எழுப்பினார். உடனே அந்தக் கிழட்டுப் பிரயாணி திடுக்கென்று எழுந்து கண்களை எறிந்துப் பார்த்து, என்ன செய்தி அப்பா? நீ யார்? என்ன காரியமாய் வந்தாய்? என்று சத்தமிட்டான்.[2]

தைரி. வா மனுஷனே வா! ஏன் அவ்வளவு கோபம்? இங்கே உனக்கு சத்துருக்கள் ஒருவரும் இல்லை, எல்லாரும் சிநேகிதர்தான் என்றார். அப்போது கிழவன் மெதுவாய் எழுந்து சண்டை போடப்போகிறவனைப்போல் காவல் வைத்து முழுக்கிப் பார்த்துக்கொண்டு, நீங்கள் யார்? என்று கேட்டான். அதற்கு வழிகாட்டி: என் பேர் தைரியநெஞ்சன்; உச்சித பட்டணத்துக்குப் போகும் இந்தப் பிரயாணிகளை நான் வழிநடத்திக்கொண்டு போகிறேன் என்றார்.

[1] இந்த விஷயத்தில் நித்திரைபண்ணினது தப்பிதம் அல்ல: பிரயாணியானவன் விசுவாசப்பிரகாரமே இருந்து இளைப்பாறினான்.

[2] நாம் தோழமைபிடிக்கும் எல்லாரும் மெய்யாய் நம்பிக்கொள்ளப்படத்தக்கவர்கள் என்று நாம் எண்ணலாகாது. நாம் படைப்புடன் சிநேகிதரைச் சம்பாதிக்கும்படி ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியது. மார்க்கசம்பந்தமாய் இது முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

**யதா.** அதற்கு யதார்த்தன் என்னும் அக்கிழவன்; என் குற்றம் பொறுக்க மன்றாடுகிறேன். சிலகாலத்துக்குமுன், அற்ப விசுவாசியின் பணங்களைப் பறிமுதல் செய்த கொள்ளைக்காரருடைய கூட்டத்தை நீங்கள் சேர்ந்தவர்களாக்கும் என்று நான் பயந்தேன்; இப்போது காரியம் வேறே என்று கண்டு கொள்ளுகிறேன். நீங்கள் எல்லாரும் மகா யோக்கியர்போல் காணப்படுகிறது.

**தைரி.** நாங்கள் அந்தக் கொள்ளைக்காரராகவே இருந்தால் நீ என்னதான் செய்வாய்? உன்னால் என்ன ஆகும்?

**யதா.** ஆகிறதா! என் மூச்சுப்போகும் அந்தக் கடை இக்கட்டுமட்டும் ஒரு கை பார்த்துத்தான் இருப்பேன்; அப்படியே நடந்து இருக்குமானால் நான் தோற்றுப்போவேன் என்று மாத்திரம் கனவிலும் எண்ணவேண்டாம். ஏனெனில் ஒரு கிறிஸ்தவன் தானே இடங்கொடுத்தால் அன்றி மற்றப்படி அபஜெயம் அடையவே மாட்டான்.

**தைரி.** பெரியவரே! நன்றாய்ச் சொன்னீர். நீர் இவ்வளவு யதார்த்தத்தோடு பேசினதினால் உம்மை சேவலிலும் ஜாதிச் சேவல் என்று சொல்லுவேன்.

**யதா.** இதினாலே நீரும் மெய்யான மோட்ச பிரயாணம் இன்னதென்று அறிந்த ஆசாமி என்று நான் கண்டுகொண்டேன். ஏனெனில் நம்மைப்பற்றி இவர்கள் மெத்த லேசாய் ஆராலும் கீழ்ப்படுத்தப்படலாம் என்று பலர் எண்ணிக்கொள்ளுகிறார்கள்.

**தைரி.** நாம் இங்கே ஒருவரையொருவர் சந்தித்துக்கொண்டது சந்தோஷந்தான்; ஆனால் தயவுசெய்து தங்கள் நாமதேயம் என்னவென்றும் தங்களுடைய பிறந்தகம் இன்னது என்றும் நான் அறிந்துகொள்ளலாமா?

**யதா.** என் பேரை நான் சொல்லமாட்டேன்; ஆனால் மூடத்தனம் என்னும் ஊரில் இருந்து வந்தேன். அது நாசபுரிக்கு நாலு பாகைக்கு அப்பால் இருக்கிறது.

**தைரி.** ஓகோ! நீர் அந்த ஊரானோ? அப்படியானால் உம்மை அரைவாசி அறிவேன்போல் இருக்கிறது. உம்முடைய பேர் யதார்த்தன் அல்லவா?

**யதா.** அப்படிச் சொன்னவுடனே பெரியவர் முகம் சுண்டிப்போயிற்று. அவர் சொல்வார், நான் என் பேரின் பதார்த்தப்படியுள்ள யதார்த்தன் அல்ல; வெறும் பேருடைய



யதார்த்தன்.[1] என் பேரின் பிரகாரம் என் குணமும் இருக்க வேண்டும் என்பது என் ஆசைதான்; ஆனால் ஐயா! நான் என்னுடைய ஊரின் பேரைச் சொன்னவுடனே நீர் ஆளின் பேரை உத்தேசித்துச் சொல்லிவிட்டீரே, அது எவ்விதம்?

**தைரி.** என் எஜமான் உம்மைக்குறித்து முன்னமே சொல்லி இருக்கிறார்; ஏனெனில் அவருக்கு இப்பூலோகத்தில் நடக்கிறதை எல்லாம் நன்றாய்த் தெரியும். ஆனால் உங்கள் ஊர் நாசபுரியைவிட நாசங்கெட்டதாச்சுதே! அதில் இருந்து யாராகிலும் மோட்ச பிரயாணிகள் ஆவார்களோ என்று நான் அடிக்கடி ஆச்சரியப்பட்டது உண்டு.

**யதா.** எங்கள் ஊர் சூரியரேகைக்கு வெகுதூரத்தில் இருக்கிறதால்[2] சூரியகாந்தி இல்லாமல் நாங்கள் குளிர்பிடித்து மடமையாகி இருக்கிறோம்; என்றாலும் ஒரு மனுஷன் பனிக்கட்டி உறைந்திருக்கும் மலையில் வசித்தாலும் நீதியின் சூரியன் அவன்மேல் தன் கதிர்களை வீசினால் உறைந்துபோன அவன் இருதயம் உருகிவிடும் அல்லவா? என் விஷயமும் அப்படியே இருக்கிறது.

**தைரி.** அந்த வார்த்தையை நம்புகிறேன், பெரியவரே! நான் நம்புகிறேன்; அது வாஸ்தவம் என்று எனக்குத் தெரிந்து இருக்கிறது என்றார்.

யதார்த்தன் பிரயாணிகளை முத்தித்தல்.

இதின்பின் அந்தப் பெரியவர் பிரயாணிகள் எல்லாரையும் அன்பின் பரிசுத்த முத்தத்தால் முத்தம் இட்டு அவரவர் பேர் என்னவென்றும், அவர்கள் பயணம் புறப்பட்டதுமுதல் பட்ட பாடுகள் என்னவென்றும் விசாரித்தார்.

---

1 இத்தேசத்தில் அநேக கிறிஸ்தவர்கள் நல்ல அர்த்தமுள்ள பேர்களைத் தரித்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் ஜீவியமும் அவர்கள் பேர்களுக்கு ஒத்திருக்கப் பிரயாசப்படவேண்டியது.

2 விசுவாசிகள் தங்களைச் சூழ்ந்திருக்கும் பல காரியங்களின் ஏதுவால், மற்றவர்களுக்கு ஒப்பம் நன்மை அடையாமல் தடைப்பட்டு இருக்கிறதுபோல் தோன்றுகிறது. பக்தியுள்ளவர்கள் மத்தியில் இருக்கும் ஒரு பொல்லாதவன் வெளிச்சத்துக்கும் அனலுக்கும் சமீபத்தில் இருக்கிறான். ஆனால் அவன் தன்னைப்போல் ஒத்தவர்களின் கூட்டத்தில் இருந்தால் இருளும் குளிர்ச்சியும் அவனை வளைந்துகொள்ளுகிறது. என்றாலும் தேவன் அப்பேர்ப்பட்டவர்களுக்கும் கிருபை உள்ளவராய் இருக்கிறார்.

கிறி. அப்பொழுது கிறிஸ்தினாள்; என் பேரை நீர் கேள்விப்பட்டு இருக்கலாம் என்று நம்புகிறேன். மகாத்துமாவாகிய கிறிஸ்தியானே என்னுடைய கணவன்; இந்த நாலும் அவருடைய பிள்ளைகள்தான் என்றாள். அவள் தன்னை இன்னாள் என்று இனம் சொன்னவுடனே அந்தப் பெரியவர் எவ்வளவு அதிசயப்பட்டார் தெரியுமா? அவர் குதித்தார், நகைத்தார், அவர் பின்னும் சொல்லுகிறார்.

யதா. அவனைப்பற்றி மெத்தமெத்தக் கேள்விப்பட்டது உண்டு; அவன் தன் ஜீவகாலத்தில் பண்ணின பிரயாணமும் அப்பிரயாணத்தில் அவன் செய்த யுத்தங்கள் முதலியவைகளைப்பற்றியும் வெகுவாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன்; உன் மனதின் ஆறுதலுக்காகச் சொல்லுகிறேன், அவனுடைய பேர் இந்த இடங்களில் எல்லாம் தொனிக்கிறது, அவனுடைய விசுவாசம், அவனுடைய துணிவு, அவனுடைய சகிப்பு, சகல காலங்களிலும் அவன் காட்டிய உண்மை இவை முதலானதெல்லாம் அவன் பேரைப் பிரபலப்படுத்தி விட்டது என்று சொல்லி அந்தப் பையன்களுடைய பேரைக் கேட்டார். அவனவன் தன் தன் பேரைச் சொன்னான். அவர் மத்தேயுவைப் பார்த்து, நீ ஆயக்காரனாகிய மத்தேயுவைப்போல் கெட்டின்பத்தில் அல்ல, பேரின்பத்தில் நாட்டமாய் இரு என்றார்.[a] அவர் சாமுவேலைப் பார்த்து, சாமுவேலே! நீ தீர்க்கதரிசியாகிய சாமுவேலைப்போல் விசுவாசியாகவும் ஜெபத்தியானம் செய்கிறவனாகவும் இரு என்றார்.[b] யோசேப்பைப் பார்த்து, நீ போத்திப்பார் வீட்டில் இருந்த யோசேப்பைப்போல் கற்புள்ளவனும் தீமைக்கு விலகி ஓடுகிறவனுமாய் இரு என்றார்.[c] அவர் யாக்கோபைப் பார்த்து, நீ நீதியுள்ள யாக்கோபையும் கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபையும் போல இரு என்றார்.[d] அப்பால் அவர்கள் தயாளியின் காரியங்களை அவருக்குச் சொல்லி, அவள் எவ்விதமாய் தன் ஊரையும் உறவினரையும் வெறுத்து கிறிஸ்தினாளோடும் அவள் பிள்ளைகளோடும் புறப்பட்டாள் என்று விபரித்துக் காட்டினார்கள். உடனே அந்தப் பெரியவர்; மாதே! உன் பேரே தயாளிதானே. தயையே உன்னை ஆதரித்து, தயையின் ஊற்றைக் கண்ணாரக் கண்டு களிகூரும்

[a] மத். 10. 3. [b] சங். 99. 6.
[c] ஆதி. 39. [d] உபாக. 1. 13, 14.



மட்டும், உன் வழியில் நேரிடும் சகல துன்பங்களிலும் இருந்து அத்தயை உன்னை வழிநடத்துவதாக என்று வாழ்த்தினார். இந்த விருத்தாப்பிய மகானுபாவர் அவளை வாழ்த்தும் வார்த்தைகளை எல்லாம் தைரியநெஞ்சன் கேட்டு, ஆகமகிழ்ந்து புன்னகைகொண்டார்.

## அச்சநெஞ்சனைக் குறித்த சம்பாஷணை.

அப்புறம் அவர்கள் பேசிக்கொண்டே போகும்போது வழிகாட்டியானவர் அந்த விருத்தாப்பியனை நோக்கி: உங்கள் நாட்டில் இருந்து மோட்ச பிரயாணமாய் வந்த அச்சநெஞ்சனை[1] அறிவீரா என்று கேட்டார்.

அச்சநெஞ்சனுடைய காரியம்.

யதா. அறிவேன்; அவனை நான் நன்றாய் அறிவேன். மோட்ச அலாவு அவன் மனதில் வேர் ஊன்றி இருந்தது; ஆனால் என் ஜீவகாலத்தில் அவனைப்போல் தொல்லை கொடுக்கிற பிரயாணியை நான் கண்டதே இல்லை.

தைரி. அவன் குணத்தைத் திட்டமாய்ச் சொல்லிப்போனீர், அவனை நன்றாய் அறிவீர்போல் இருக்கிறது.

யதா. அறிவீர்போலவா! நான் அவனுடைய உத்தம சிநேகிதன் ஆச்சுதே. அவனுடைய துவக்கமுதல் முடிவுமட்டும் நான் அவனை அறிவேன்; இனிமேல் நமக்குச் சம்பவிக்கும் விஷயங்கள் என்னவென்று அவன் தியானிக்கத்தொடங்கி இருந்தகாலத்தில் நான் அவனோடேதான் இருந்தேன்.

தைரி. என் எஜமான் வீடுமுதல் உச்சிதப்பட்டணத்தின் அலங்கார வாசல்மட்டும் நான் வழிகாட்டியாக அவனோடே போனேன்.

[1] அச்சநெஞ்சன். இவன் பாவசுமைக்கும் பயந்து மோட்சத்தை இழந்துவிடுவேன் என்று அஞ்சி இவை பாவத்துக்கும் விலகிக்கொள்ளப் பிரயாசப்பட்டான். அவன் நிந்தையுளவுகளுக்கும் துன்பங்களுக்கும் மிகவும் பயந்து தத்தளிக்கபோதிலும் மோட்சம் பெறவேண்டும் என்கிற தீர்மானம் அவைகளை எல்லாம் சகித்துக்கொள்ள அவனை ஏவிற்று. அவன் பயங்காளியாய் இருந்தாலும் அவனுடைய விசுவாசமும் பக்தியும் உறுதியுள்ளதாய் இருந்தது. அவன் சகலத்திலும் தன்னைக்குறித்த தனக்குத்தானே சமுசயம் உள்ளவனாய் இருந்தான். என்றாலும் தன் பிரயாணத்தை விட்டுவிடவே இல்லை.

யதா. அவன் பண்ணுகிற தொல்லைகளை எல்லாம் பார்த்து ருப்பீரோ?

தைரி. நன்றாகப் பார்த்துக்கொண்டேன்; ஆனால் அப்படிப் ட்டவைகளை எல்லாம் நான் சகித்துக்கொள்ளக்கூடும். னெனில், எங்களைப்போலொத்த வேலைக்காரருக்கு இப் ரப்போலொத்தவர்களை வழிநடத்தும் வேலை அடிக்கடி கொ க்கப்படுகிறது.

யதா. அப்படியானால், அவன் உமது நடத்துதலுக்கு உட் ட்டு இருந்தகாலத்தில் அவனுடைய நடபடி என்னவென்று பவுசெய்து சொல்லும்படி மன்றாடுகிறேன்.

தைரி. நாம் நாடிப்போகும் சீயோனுக்கு நாம் வந்து சேரு ம்போது என்று அடிக்கடி அஞ்சுவான். யாராவது சம்பாஷித் க்கொண்டு இருக்கும்போது ஒரு சங்கதியை உறுதிப் டுத்தும்படி அவர்கள் சற்றே உரத்துப் பேசுகிறதைக் கேட் ால் இவன் பயப்படுவான். இவன் ஊரைவிட்டுப் புறப் ட்டு நம்பிக்கையீனக்குளம் வந்து படுத்து படுத் துக்கொண்டு ஒரு மாதம்மட்டும் கிடந்து கூக்குரல் போட் ான் என்று நான் கேள்விப்பட்டேன். அவனுக்குப்பின் த்தனையோ பேர் அந்த உளையைக் கடந்துபோனதை இவன் ண்டானும். அநேகர் அவன் கையைப் பிடித்து இழுத்து

அச்சநெஞ்சனுடைய அச்சம்.

என்னோடேகூட வா, நாங்கள் உன்னை பத்திரமாய் அக்கரை சேர்க்கிறோம் என்று சொன்னார்களாம்; அப்படி இருந்தும் வன் கடந்துவரத் துணியவில்லையாம். பின்னிட்டுத் திரு பி வீட்டுக்காவது போவானோ? அதுவும் செய்யமாட்டானாம். மாட்ச பட்டணமே மோட்ச பட்டணமே என்பானாம். அதைச் சேராவிட்டால் நான் இருந்து என்ன உபயோகம், என் யிர் இருந்து என்ன பிரயோஜனம் என்பானாம். இப்படிச் சொன்னாலும் அற்ப ஆபத்தைக்கண்டு அப்பாடாவென்று கத்தி வோ முறையம் என்று ஓலம் இடுவானாம். அவன் போகிற ழியில் யாராவது ஒரு துரும்பைப் போட்டால் அது தட் டியும் இடறி விழுவானாம். இப்படி

நம்பிக்கையீனகுளத்தை அவன் பட்ட பாடு.

அவன் அந்த உளையருகே வெகுநாள் கிடந்து வெட்கம் கெட்டபின்பு வெ ல் அடித்த ஒருநாள் காலையில் எப்படியோ உளையைக் டந்து வந்துவிட்டானாம். என்னவிதமாய்க் கடந்தான் ன்று எனக்கே தெரியவில்லை. அவன் உளையைத் தாண்டி



விட்டதைத் தானும் நம்பவில்லையாம். அவன் மனதில் ஒரு நம்பிக்கையீன இருந்ததுபோல் இருக்கிறது; இந்த உளையை அவன் போன போன இடம் எல்லாம் தூக்கிச் சுமந்து கொண்டுதான் திரிந்தான் என்று சொல்லவேண்டும்; மற்றப் படி இப்படி இருக்கமாட்டான். அப்புறம் அவன் யாத்திரையின் ஆரம்பத்தில் இருக்கிற இடுக்குவாசல் இருக்கிறதே, அதின் கிட்ட வந்தானாம்; அங்கேயும் அவன் கதவைத் தட்டத் துணியுமுன் வெகுநேரம் நின்றானாம். கதவு திறக்கப்பட்டால்

அவன் இடுக்குவாசலண்டை பட்ட பாடு.

அவன் மற்றவர்களுக்கு இடங்கொடுக் கும்படி விலகி, பின்னாலே போய் நின்று கொண்டு; நான் உள்ளே வர பாத்திரன் அல்ல, நீங்கள் போங்கள், நீங்கள் போங்கள் என்று சொல் லுவானாம். அந்தக் கதவண்டை அவன் எல்லாருக்கும் முந்தி வந்து நின்றாலும் பிந்தி வந்தவர்கள் எல்லாரும் உள்ளே சேர் ந்துவிட்டார்களாம்; இவனோ வெளியே கிடந்தானாம். அவன் சேதமும் பன்னாம் ஆடி ஆடி அங்கே நிற்பானாம்; அவனைக் கண்டவுடனே கல்நெஞ்சும் கரைந்து தண்ணீராய்ப் போய் விடுமாம். இப்பாடு படுகிற அவன் திரும்பிப் போவானோ? அவ னோ? போகவே போகமாட்டானாம். கடைசியாக அவன் ஒரு நாள் வாசற்படியில் தொங்கவைக்கப்பட்டு இருந்த சுத்தியலை எடுத்து கதவை இரண்டொருதரம் மெதுவாய்த் தட்டினானாம்; உடனே ஒருவன் வந்து திறந்தானாம். திறந்தமாத்திரத்தில் அவன் பின்னே போய் நின்றுகொண்டானாம்; கதவைத் திறந்த ஆள் அவனுக்குப் பின்னாலே நடந்துபோய் நடுக்கம் பிடித்த நடுக்கமே உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டானாம். இவ்வளவும் கேட்கவே, அவன் அசந்து தரையிலே விழுந்து விட்டானாம்; அப்போது வாசலைத் திறந்தவர் இப்படியும் சோர்ந்து விழுவார் உண்டா என்று அதிசயப்பட்டு, அப்பா! உனக்குச் சமாதானம் உண்டாவதாக; எழுந்திரு, உனக்காக வே நான் கதவைத் திறந்தேன்; உள்ளே வா, நீ ஆசீர்வதிக்கப் பட்டவன் என்று தேற்றினாராம். அப்புறம் அவன் மெதுவாய் எழுந்து நடுக்கத்தோடே நடந்து உள்ளே போனானாம்; அவன் உள்ளே போனபிற்பாடு தன் முகத்தைக் காட்டமுதலாய் வெட்கப்பட்டானாம். அவன் அவ்விடத்தில் சிலகாலம் இருந் தபின்பு வழக்கப்படி அவனுக்கு வழியும் சொல்லி, புறப் படும்படி அவனுக்கு உத்தரவுகொடுத்தார்களாம். அப்புறம் அவன் வழியே நடந்து எங்களுடைய அரண்மனை வந்து சேர்ந்தான். இடுக்குவாசலைத் தட்ட பயந்து எப்படி நின்ற

ளே அப்படியே எங்கள் அரமனையாகிய வியாக்கியானியின் வீட்டையும் தட்டும்படி அவன் அஞ்சி நின்றான். அவன் யாரையாகிலும் கூப்பிடும்படி மனம் துணியுமுன், வெளியே பனியிலும் குளிரிலும் கிடந்தான்; திரும்பிப்போகவும் அவன் துணியவில்லை. அக்காலத்தில் நீண்ட இராவும் குளிரும் இருந்ததால் அந்த ஏழை மனுஷன் மிகவும் சங்கடப்பட்டு இருக்கவேண்டியது. அவன் மடியில் எங்கள் எஜமானுக்கு அவசரமான ஒரு கடிதமும் இருந்தது.

வியாக்கியானியின் வீட்டில் அவன் நடந்துகொண்ட விதம்.

அந்தக் கடிதத்தில்; இவனை உடனே ஏற்றுக்கொள்ளவும் தமது வீட்டின் ஆசீர்வாதங்களால் அவனைத் திருப்தியாக்கவும் அவன் கோழிநெஞ்சனென்ட பயங்கொள்ளியானபடியால் வீரதீர பராக்கிரம சேவகரில் ஒருவனை இவனுக்கு வழித்துணையாக அனுப்பவும் வேண்டும் என்று கண்டிருந்தது. இப்படி எல்லாம் இருந்தும் அவன் வியாக்கியானியினுடைய வீட்டைத் தட்ட [illegible] அச்சப்பட்டான். கடைசியாக நானோ ஜன்னல் வழியாகவோ எப்படியோ ஒரு மனுஷன் வாசற்படியண்டை வருகிறதும் போகிறதுமாய் இருக்கிறதைக் கண்டு, கீழே இறங்கி அவனண்டைபோய்; நீ யார் அப்பா என்று கேட்டேன். கேட்கவே, ஏழை மனுஷன் மாலை மாலையாய்க் கண்ணீர் சொரிந்தான்; நானும் அவனுக்கு வேண்டியது இன்னதென்று அறிந்துகொண்டேன். அப்புறம் வீட்டுக்குப் போய் அங்கிருந்தவர்களுக்கு இந்த சமாசாரத்தைத் தெரிவித்து, அப்பால் எங்கள் ஆண்டவருக்கும் தெரியப்படுத்தினேம். அவர், நீ போய் அவனை வருந்தி அழைத்துக்கொண்டு வா என்று உத்தரவு கொடுத்தார். நான் போய்க் கூப்பிட்டாலும் அவன் வருவானா? அவனோடு கடும்பாடு படவேண்டியதாய் இருந்தது. கடைசியாக நடுங்கிப் பதுங்கி நாணிக் கோணி உள்ளே வந்து சேர்ந்தான். எங்கள் எஜமான் அவனை மட்டுமிஞ்சி சிநேகித்தார் என்றே சொல்லுவேன்; அவர் தமது பந்திமேசையில் இருந்து சில ருசிகர பதார்த்தங்களை எடுத்து அவனுடைய கலத்திலே வைத்துச் சாப்பிடச் சொன்னார். அப்பால் அவன் தான் கொண்டு வந்த கடிதத்தைக் கொடுத்தான். எங்கள் எஜமான் அதைப் பார்வையிட்டு உனக்கு ஆகவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்போம் என்று வாக்கருளினார். அங்கே இருந்த கொஞ்சக்காலத்துக்குள் அவன் சற்று மனத்தெளிவும் ஆறுதலும் உடையவனாய் இருந்தான். என் எஜமானுக்கு அச்சப்



படுகிறவர்கள் என்றால் அவர்கள்மேல் அவர் மனம் உருகிவிடும்; ஆதலால், அவனுக்கு தைரியத்தைக் கொடுக்கவேண்டும் என்றே இவ்வளவு பட்சமாய் நடத்தினார். அவன் எங்களிடத்தில் பார்க்கவேண்டிய காட்சிகளை எல்லாம் கண்டு புறப்படும்படி தயாரான சமயத்தில் கிறிஸ்தியானுக்குக் கொடுத்ததுபோல் இவனுக்கும் என் ஆண்டவன் ஒரு துருத்தி திராட்சரசமும் பின்னும் சில பலகாரங்களும் கொடுத்து, என்னையே வழித்துணையாக அனுப்பினார். ஆகவே நாங்கள் புறப்பட்டோம்; நான் முன்னும் அவன் பின்னுமாய் நடந்தோம்; அவன் வாய் பேசமாட்டானே? பெருமூச்சுவிட அவனைப்போல் ஆள் அகப்படமாட்டாது.

வழியில் மூன்று பேர் தொங்கவைக்கப்பட்டிருக்கிறார்களே, அந்த இடத்துக்கு வந்த உடனே [illegible] முடிவும் இப்படித்தான் இருக்கும் என்று தனக்குத் தோன்றுகிறதாகச் சொன்னான். சிலுவையையும் அந்தக் கல்லறையையும் கண்ட உடனேமாத்திரம் அவன் முகம் சற்று சந்தோஷமாய்க் காணப்பட்டது. அவ்விடத்தில்மாத்திரம் கொஞ்சநேரம் நின்று பார்க்கும்படியாக அவன் ஆசைப்பட்டது மெய். இந்தக் காட்சி கண்டபின் கொஞ்சநேரம் அவன் முகமலர்ச்சியாய் இருந்தான். கஷ்டகிரியில் ஏறும்போது தடுமாறவில்லை [illegible] படி இலேசாய் ஏறிவிட்டான். சிங்கங்களுக்கு முதலாய் அவ்வளவு அச்சம் அவன் மனதில் உண்டாகவில்லை; [illegible] ஏனெனில், இப்படிப்பட்டவைகளைப்பற்றி எல்லாம் அவன் மனதில் யாதொரு பயம் இருக்கவில்லை; தான் கடைசியாக ஏற்றுக்கொள்ளப்படுவோமோ, என்கிறதைப்பற்றிய ஐயமே தவிர, வேறு ஐயம் அவன் மனதில் இருக்கவில்லை.

அவனை வழிநடத்தி அலங்காரமனைக்கு கொண்டுபோய்ச் சேர்த்தேன். அந்த அரமனைக்குள் அவனைக் கொண்டுபோக பட்ட வருத்தம் கொஞ்சம் அல்ல.

அலங்காரமனையில் அவன் நடந்துகொண்டது.

அவ்விடத்துக் கன்னிமாப்பெண்களுக்கு இவனைப்பற்றிச் சொல்லி உறவு உண்டாக்கினேன். ஆனால் ஆட்களோடு பேசி பழகியிருக்க அவன் கூச்சப்பட்டான். தனிமையாய் இருப்பதே அவனுக்குப் பிரியம்; என்றாலும் நல்ல சம்பாஷணைகள்மேல் அவனுக்கு மெத்தப் பிரீதி. அப்படிப்பட்ட பேச்சுகள் நடக்கும்போது இவன் ஒரு தடுக்குக்கு அப்பால் தலைமறைவாய் இருந்துகொண்டு கவனிப்போடு கேட்பான். பூர்வவிஷயங்களைப் பார்க்கும்படி அவனுக்கு மெத்த ஆவல் இருந்தது; பண்டைக்காலத்தைகளைப் பற்

திரமாய் மனதில் வைத்துக்கொள்ளுவான். ஒருநாள் அவன் என்னிடத்தில் வந்து, நான் முன் தங்கியிருந்தேனே அந்தத் திட்டிவாசல் அரமனையும் வியாக்கியானியினுடைய வீடும் தான் எனக்கு ஒன்றாய் இருந்தது என்று சொல்லிக்கொண்டான். தனக்கு ஏதாவது வேண்டுமானாலும் வாய் திறந்து கேட்பானோ? அதேது? கேட்கவேமாட்டான்.

அங்கிருந்து தாழ்மையின் பள்ளத்தாக்குக்கு மலை இறங்கிப் போனோமே, அங்கே அவன் அவ்வளவு சேர்த்தியாய் நடந்தான்.[1] அந்தமாதிரி சுறுக்காயும் நடந்தவர்களை நான் கண்டதே இல்லை. தான் எவ்வளவுக்குத் தாழ்மைப்பட்டாலும் சரி, கடைசியில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று மாத்திரம் கவலைப்பட்டான். அவனுக்கும் அந்தப் பள்ளத்தாக்குக்கும் ஏதோ ஒரு பொருத்தம் இருந்தது என்றே சொல்லவேண்டியது. அவன் அந்தப் பள்ளத்தாக்கில் அநுபவித்த சுகம் அவ்வளவு, பிரயாணத்தில் எங்கும் அவனுக்கு உண்டாய் இருந்ததில்லை.

அவன் தாழ்மைப் பள்ளத்தாக்கைக் கடந்தது.

இவ்விடத்தில் அவன் படுத்துக்கொள்ளுவான்; மண்ணை அணைத்துக்கொள்ளுவான்; அந்தப் பள்ளத்தாக்கில் பூத்திருந்த புஷ்பங்களை முகர்ந்துகொள்ளுவான். ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுந்திருந்து அந்த மைதானத்தைப் பார்த்துக்கொண்டு அங்கும் இங்கும் உலாவித்திரிபவனாய் இருப்பான்.

ஆனால், மரணஇருளின் பள்ளத்தாக்குக்கு வரட்டும், அப்போ தெரியும் இவர் வண்டவாளம்; அங்கே தொலைந்தே போவான் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். திரும்பிப் போய்விடவேண்டும் என்று சொல்லுவான் என்று என் எண்ணத்திலும் அல்ல, அந்த வேலையை அவன் அடியோடு அருவருத்தான். ஆகையால் மலையிலும் மாண்டே போவான் என்று நினைத்தேன். ஐயோ பேய்பிசாசுகள் என்னைப் பிடித்துப்போடுமே! ஐயோ காளிகளும் கூளிகளும் என்னைக் கடித்துக் கொல்லுமே என்று அவன் கத்துவான். நாளும் என்றால் ஆனா

[1] தாழ்ந்த சிந்தையானது இவ்வகையானவர்களின் குணத்துக்கு இசைந்ததாய் இருக்கிறது. அவர்களுக்குப் பெருமை இல்லை. இம்மையில் சமாதானமும் மறுமையில் சுகபத்திரமுமாய் இருக்கவேண்டும் என்பதே அவர்களுடைய ஆசை.

புலம். 3. 27—29.



பிரயத்தனம் எல்லாம் பண்ணி அந்த அச்சத்தை எடுத்துவிடப் பார்த்தும் முடியவில்லை. இவ்விடத்தில் அவன் போட்ட சத்தத்திற்கும் அழுத அழுகைக்கும் ஒரு அளவில்லை. இவன் சத்தம்மாத்திரம் பேய் பிசாசுகளுக்கும் காளி கூளிகளுக்கும் கேட்டிருக்குமேயானால், அவைகள் எல்லாம் தைரியங்கொண்டு ஏமாந்த ஆட்கள் வந்தாரோ அப்பா, ஏகமாய்ப் போய் உலவோமே அப்பா என்று எழும்பிவந்து எங்கள் மேல் விழுந்துவிடுவார்கள்.

ஆனால் இங்கேயும் ஒன்றை நான் கூர்மையாய்க் கவனித்தேன்; நாங்கள் இருவரும் போன சமயத்தில் ஒருகாலமும் இல்லாத அதிசயமாய் அந்தப் பள்ளத்தாக்கு அவ்வளவு அமைதலாய் இருந்தது. ஒருவேளை அச்சநெஞ்சன் கடந்துபோகுமட்டும், நீங்கள் உங்கள் அழிம்புத்தனங்களைக் காட்டக்கூடாதென்று நமது ஆண்டவர் ஆக்கியாபித்திருந்தார்போல் இருக்கிறது.[1]

அச்சநெஞ்சனுடைய காரியங்களை எல்லாம் ஒவ்வொன்றாய்ச் சொல்லவேண்டுமேயானால், அதே பெரிய பிரபந்தம் போல் ஆகிவிடும். ஆனால் இரண்டு மூன்று குறிப்புகளைமாத்திரம் சொல்லுகிறேன் கேளும். அவன் மாயாபுரியைச் சேர்ந்தவுடனே எல்லாரோடும் பகைத்து சண்டைபோடுவான் என்று நான் நினைத்தேன். அந்த ஊரைப்பற்றி அவன் அவ்வளவு வெறுப்பாய்ப் பேசிக்கொண்டுவந்தபடியால் எப்படியும் இரண்டுபேருடைய மண்டையும் அங்கே உருண்டுபோய்விடும் என்றே எண்ணினேன். மயக்கபூமியில் போகையில் அவன் வெகு விழிப்பாய் இருந்தான். ஆனால் பாலமில்லாத அந்த ஆற்றங்கரை வந்தவுடனே கவலைக்கு ஆட்டம் கொடுத்துவிட்டது. அவன் மனம் வியாகுலத்தால் மயங்கிற்று. இப்போதான் என் முடிவு வந்தது, இங்கேதான் எனக்கு முடிவாகிப்போயிற்று; இவ்வளவு காலம் கஷ்டப்பட்டு நடந்து பார்க்கவேண்டும் என்று வந்த முகத்தைப் பாராதபடிக்கு இதிலேயே அமிழ்ந்தி மாண்டு போவேன் என்று அலறினான்.

[1] தேவன் ஒவ்வொருவரைப்பற்றி விசேஷித்த கரிசனையுள்ளவராய் இருந்து அவரவர் அவசரத்துக்குத் தக்கதாக ஒத்தாசை அளிக்கிறார். அச்சநெஞ்சன் மரணஇருளின் பள்ளத்தாக்கில் நடக்கும்போதும், ஆற்றைக் கடக்கும்போதும் விசேஷித்தபிரகாரம் கிருபைபெற்றான்.

இந்த ஆற்றிலும் ஒரு பெரிய அதிசயத்தைக் கவனித்தேன்; நான் என் ஜீவகாலத்தில் கண்டதிலும் அவன் போகும் போது அவ்வாற்றின் ஜலம் வற்றி இருந்தது. அது அவன் கணுக்காலுக்குமேலே இருந்ததில்லை. ஆற்றைக் கடந்து அவன் அலங்காரவாசலின் படிகளில் ஏறும்போது அவனை வழி அனுப்பிக்கொண்டு, நீ சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளப்படும்படி நான் விரும்புகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவன்; அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுவேன், ஏற்றுக்கொள்ளப்படு வேன் என்று சொன்னான்; அதோடு நான் திரும்பிவிட்டேன், அப்புறம் நான் அவனைக் கண்டதில்லை.

யதா. சங்கதிகளைப் பார்க்கிறபோது அவன். காரியம் க்ஷேமமாய் முடிந்ததுபோல் இருக்கிறதே.

தைரி. ஆம், ஆம் அதைப்பற்றி எனக்குச் சந்தேகம் இல்லை. எவரும் விரும்பும்படியான ஒரு விசேஷித்த ஆவி அவனில் இருந்தது. அவன் எப்போதும் தாழ்வான நிலைமையில் வைக்கப்பட்டிருந்தபடியால் அவனுடைய காலட்க்ஷேமம் தனக்கே பாரமாயும் மற்றவர்களுக்குத் தொல்லையாயும் இருக்கிறது.[a] பாவத்தின்பேரில் வேறு அநேகரைப்போல அவ்வளவு நாட்டம் அவனுக்கு இருந்ததில்லை. தனக்கு வரவேண்டிய லாபத்தை முதலாய் மற்றவர்களுக்கு நஷ்டம் ஆகுமோவென்று அஞ்சி அதை வெறுத்துவிடுவான்.[b]

யதா. இவ்வளவு பக்தன் தன் காலம் எல்லாம் இப்படிப்பட்ட பயங்கர இருளில் இருந்ததற்கு முகாந்தரம் என்ன?

தைரி. அதற்கு இரண்டுவிதமான முகாந்தரங்களைச் சொல்லலாம். அதில் ஒன்று; ஞானமுள்ள தேவன் அவனை அந்த நிலைமையிலே வைக்க சித்தங்கொண்டிருக்கலாம். அல்லவென்று சிலர் குழலூதிப் பாடவேண்டியது, சிலர் அழுது புலம்பவேண்டியதாக்கும்.[c] அச்சநெஞ்சன் இருக்கிறானே, அவன் அழுவார் சனைக்கில் சேர்ந்தவன். அவனுக்கும் அவன் கூட்டாளிகளுக்கும் அழுகொம்பு ஊதி ஒப்பாரி இடத்தான் தெரியும். ஒரு வாத்தியத்தில் தாழ்ந்த சப்தமுள்ளதாகிய தக்கு நரம்புதான் கீதத்தின் ஆரம்பமாய் இருக்கிறதென்று பலர் சொல்

அவனுடைய அச்சத்துக்கு முகாந்தரங்கள்.

[a] சங். 88. [b] ரோ. 14. 21. 1 கொ. 8. 13. [c] மத். 11. 16.



லுகிறார்கள். நான் என்மட்டில் தாழ்ந்த இருதயத்திலிருந்து தோன்றாத பக்தியை மெய் பக்தியாக எண்ணிக்கொள்ளுகிறதில்லை. ஒரு கவிராயன் தன் வீணையை சுதியேற்றத் துவக்கினால், அவன் முதலாவது தக்குநாத நரம்பைத் தட்டி எச்சநாத நரம்பையும் மத்திபநாத நரம்பையும் ஒழுங்குப்படுத்துவான். தேவனும் ஒரு ஆத்துமாவைத் தமக்கு ஏற்றதாகப் பக்குவசப்படுத்தும்படி. தாழ்மை என்னும் தக்குநரம்பைக்கொண்டே ஆரம்பிக்கிறார். அச்சநெஞ்சனிடத்தில் ஒரே ஒரு குறை மாத்திரம் இருந்தது; அதாவது, ஆதிமுதல் அந்தம்மட்டுக்கும் தக்குநாத தானத்தில் அவன் பாடுவானே அன்றி அதற்கு மிஞ்சின நாதத்தில் பாடமாட்டான்.[1]

வாலிபருடைய புத்தியை விர்த்திபண்ணவேண்டும் என்றும் வெளிப்படுத்தின விசேஷம் என்னும் ஆகமத்தில் மீட்கப்பட்டவர்களை சிங்காசனத்தின்முன் நின்று சுரமண்டலங்களையும் சின்னாங்களையும் பிடித்துக் கீதங்களைப் பாடும் கீதவாத்தியக் கூட்டத்துக்கு ஒப்பிட்டுப் பேசியிருப்பதினாலும் நானும் இவ்வண்ணம் உபமானப்போக்காய் எழுதும்படி துணிந்தேன்.[a]

யதா. நீர் சொல்லுகிறதைப் பார்த்தால் அவன் மகா வைராக்கியனைத் தோன்றுகிறதே; சங்கடங்கள். சிங்கங்கள் மாயாச்சந்தை ஆகிய இவை எல்லாம் அவனுக்கு ஒரு பொருட்டில்லைப்போல் இருக்கிறதே. அந்த மன்னிக்கப்பட்டதின் மேல் அவனுக்கு இருந்த தாபத்தினாலே பாவமும் மரணமும் நரகமுமேதானே அவனுடைய பயங்கரங்களாய் இருந்திருக்கின்றன.

தைரி. நீர் சொன்னது சரியான பேச்சு; அவைகள்தான் அவன் மனதை பயப்படுத்தின. அவைகளைப்பற்றிய தன்னு

[1] எல்லாவகையான வாத்தியங்களுக்கும் சேர்ந்த உபயோகிக்கப்படுவதுதான் முதல்தரமான கீதவாத்தியம். ஆதலால் பன்னியன் என்பவர் பரலோகத்தின் சங்கீத அலங்காரத்தைக் குறித்து அதில் பரலோகத்திலுள்ள சகலவகையான அழுகைகளும் மன்னவர்களின் பாடல்கள் எல்லாம் சேர்ந்ததாய் இருக்கும் என்கிறார். ஒவ்வொருவனும் தன்தன் பாடலைப் பாடுவான்; அவைகள் எல்லாம் ஒன்றாய்ச் சேரும்போது பரலோகத்தில் இனிமையான சங்கீதமாய்த் தொனிக்கும்.

[a] வெளி. 5. 8; 14. 2, 3.

னுடைய மனதின் பலவீனத்தினாலே அப்படி அச்சங்கொண்டிருந்தானே அல்லாமல், உத்தமபிரயாணிக்கு உள்ளபடி இருக்கக்கூடாத அறிவின் பலவீனத்தினாலே அப்படி அச்சங்கொண்டானில்லை. அவன் தனக்கு எதிர்ப்படும் நெருப்பிலும் சாடிவிடுவான் என்று அவனைக்குறித்துச் சொல்லலாம். ஆகிலும், அவனை வியாகுலப்படுத்தின வழக்கினை விலக்கிப்போட ஒருவராலும் லேசில் முடியாது.

கிறி. அப்போது கிறிஸ்தியாள் சொல்வாள்; அச்சமென்கிறவரைப்பற்றிய சமாசாரங்கள் எனக்கு மிகுந்த நன்மையை உண்டாக்கின. என்னைப்போல் ஒருத்தர்களும் இல்லை என்று நான் எண்ணி இருந்தேன். ஆகிலும் எனக்கும் இந்த நல்ல மகாத்துமாவுக்கும் சில விஷயங்களில் சம்பந்தம் இருக்கிறதென்று காண்கிறேன். இரண்டே காரியத்தில் மாத்திரம் நாங்கள் இருவரும் பேதப்படுகிறோம். மட்டிலிருந்தினால் அவருடைய சஞ்சலம் வெளியே வெடித்துவிட்டது; என்னுடையது உள்ளே அடங்கிப்போயிற்று. அதுவும் அன்றி அவருடைய சஞ்சலம் அவரைப் பலமாய் இழுத்தினதால் சேர்ப்பார் வீட்டையும் சேர்க்கமாட்டார் வீட்டைப்போல் தட்டாதபடி தடுத்துப்போட்டது; ஆகிலும் என் சஞ்சலமோ எப்பொழுதும் பலமாய்த் தட்டும்படி என்னைத் தூண்டுகிறதாக இருக்கிறது என்றாள்.

தயாளியின் உணர்ச்சி.

தயாளி. அப்போது தயாளி, என் இருதய நிலைமையைச் சொல்லவேண்டுமானால் அவருடைய குணங்களில் சில எனக்குள்ளும் குடிகொண்டிருந்தது என்று சொல்லுவேன். மற்றக் காரியங்களை இழந்துபோவோம் என்கிற பயத்தைப் பார்க்கிலும் பரம வஸ்து தப்பிப்போகுமோ பாதாளக்கடலில் அங்கே விழுவேனோ என்ற பயமே அதிகம் இருந்தது. ஆ! எனக்கு உன்னத லோகத்தில் ஒரு வாசஸ்தலம் கிடைப்பதாக. அது கிட்டும்படி நான் இவ்வுலகத்தை எல்லாம் இழந்தாலும் சேதமும் இல்லை என்பேற எண்ணினேன் என்றாள்.

மத்தேயுவின் உணர்ச்சி.

மத். மத்தேயு என்ற பிள்ளையாண்டான்: இரட்சிப்போடு சம்பந்தப்பட்டவை எல்லாவற்றிற்கும் நான் தூரமானவன் என்று நினைத்துக் கொள்ளும்படி பயமே என்னைத் தூண்டி விட்டது. அந்த நல்ல மனுஷனை பயம் தொடர்ந்தும் முடி



வில் அவன் நலத்தை அனுபவித்தது மெய்யானால் எனக்கும் அப்படியே நன்மையாக முடியாதா? என்றான்.

யாக்கோபுவின் உணர்ச்சி.

யாக். அப்புறம் யாக்கோபு என்பவன்; அச்சம் இல்லையானால் அருளும் இல்லை. நரக பயங்கரமுள்ள இருதயத்தில் தேவகிருபை எப்பொழுதும் இராதென்றபோதிலும் நரகத்துக்குப் பயப்படும் பயமற்ற இருதயத்திற்கு கிருபை இல்லவே இல்லை என்றான்.

தைரி. யாக்கோபே, நீ நன்றாய்ச் சொன்னாய்; குறி தப்பாமல் எய்துவிட்டாய். ஏனெனில் கர்த்தருக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம். இந்த ஆரம்பம் யாரிடத்தில் இல்லையோ அவர்கள் மெய்ஞ்ஞானத்தின் மத்தியையாவது முடிவையாவது கண்டடையமாட்டார்கள் என்று சொல்லி, கடைசியாக அச்சமென்றவருக்கு ஒரு வாழ்த்துதலைப் பாடி அவர் பேச்சையும் அதோடு நிறுத்துவோமாக என்று பின்வரும் கீதத்தைப் பாடினார்.

அச்சமென்ற அன்பனே!
ஆண்டவருக் கஞ்சினீர்;
லோகத்துயர்த்திலே
பக்தன் என்று காட்ட நீர்
மெத்த மெத்த அஞ்சினீர்;
தீ நரகத்துழியின்
பேதைக்கேட்டிற் கஞ்சினீர்;
அஞ்சுகிறார் பலர் சட்டமாய்.
உம்மைப்போல ஞானிகள்
பாழ் நரக அச்சத்தை
எண்ணி, நீக்கிக்கொண்டுவர்
லோக சந்தோஷங்களில்.

## தன்னிஷ்டத்தைப்பற்றிய சம்பாஷணை.

தன்னிஷ்டனுடைய வரலாறு.

அப்புறம் நான் என் சொப்பனத்தில் கண்டதென்னவென்றால்; தைரியநெஞ்சன் அச்சமென்றவரைப்பற்றிய சம்பாஷணையை முடித்தபோது யதார்த்தன் என்ற அந்த விருத்தாப்பியர் தன்னிஷ்டனைப்பற்றிய சம்பாஷணையைத் தொ

வைத் தழைக்கிறார்; அவனுக்கு தன்னிஷ்டன் என்று பேர்.[1] அவன் மோட்ச பிரயாணியைப்போல் தன்னைப் பாராட்டினபோதிலும், ராஜபாதையின் ஆரம்பத்தில் இருந்த இடுக்கமான வாசலுக்குள் பிரவேசித்ததே இல்லை என்று யதார்த்தன் சொன்னார்.

நைதீ. அவனைக்குறித்து நீர் அப்பொழுதாவது அவனோடு பேசினது உண்டா?

யதா. இரண்டொருதரம் பேசினது உண்டு. ஆனால் அவன் எப்பொழுதும் தன் பேச்சின்படியே தன் இஷ்டப்படி நடக்க மனம் உடையவனாகவே காணப்பட்டான். ஆகையால் கவனியான், ஆட்சேபனையையும் மதியான், திருஷ்டாந்தத்தையும் உணரான், அவன் மனம் எப்படிச் செல்லுமோ அதே சரி என்று செய்வான். அதற்கு விரோதமான ஒன்றைச் செய்யும்படி அவனை உணர்த்த எவராலும் முடியாது.

நைதீ. அவன் கொண்டிருந்த கோட்பாடுதான் என்ன? சற்று சொல்லும்.

*அவனுடைய கோட்பாடு.*

யதா. ஒரு மனுஷன் மோட்ச பிரயாணிகளின் சன்மார்க்க நெறியைப் பின்பற்றுகிறதுபோலவே, துன்மார்க்க நெறியையும் பின்பற்றி நடக்கலாம்; இவ்விரண்டின்படி நடந்தாலும் அவனுக்கு இரட்சிப்பு உண்டு என்பதே அவனுடைய கோட்பாடு.

நைதீ. அதெப்படி? ஒரு பக்தன் குறைவாய் மோட்ச பிரயாணிகளின் சன்மார்க்க நடக்கையோடு துன்மார்க்கன் என்றும் குற்றம் சாட்டப்படலாம் என்று அவன் சொல்லியிருந்தால் அவனை அவ்வளவாய்ப் பழுதுகூறக்கூடாது; ஏனெனில் நாம் ஆகாமியத்திலிருந்து அடியோடு நீக்கப்படவில்லை; விழிப்போடும் முயற்சியோடும் சன்மார்க்கத்தைப் பின்பற்றவேண்டிய நிலையில் இருக்கிறோம். அவன் சொல்லுவது இந்தக் கருத்தில் லேபோல் இருக்கிறதே; நீர் சொல்லுகிறதைப் பார்த்தால் மோட்ச பிரயாணி துன்மார்க்கத்தையும் தாராளமாய்ச் செய்யலாம் என்று அவன் சொல்லுகிறதுபோல் அல்லவா என் மனதில் படுகிறது.

[1] தன்னிஷ்டம். நாம் ஏதாவது செய்த இஷ்டம்போல் " நடக்க வேண்டும் என்று எண்ணங்கொண்டால் அதற்கேற்ப திருஷ்டாந்தங்கள் வேதபுஸ்தகத்திலே மற்றும் இடங்களிலும் உண்டு கொள்ளலாம். ஆனால் தேவனுடைய மனது கட்டளைகள் என்னும் பாவமனிதனின் கட்டளைகளுக்கு ஒத்ததாக அல்ல, தம்முடைய பிரமாணத்துக்கும் இயேசுகிறிஸ்துவின் முன்மாதிரிக்கும் இசைந்ததாக இருக்கவேண்டும் என்று நமக்குக் கற்பித்திருக்கிறார். மனது இஷ்டம் அல்ல, தேவனுடைய சித்தமே செய்யப்படவேண்டும்.



யதா. ஆம், ஆம் நான் சொன்ன கருத்தும் அதுதான். அந்தத் தன்னிஷ்டம் இப்படியே சொல்லியும் செய்தும் வந்தான்.

நைதீ. எந்த முகாந்தரத்தைவிட்டு அவன் இப்படிச் சொல்லுகிறான்?

யதா. வேதமே தன் கோட்பாட்டிற்கு ஆதாரம் என்கிறான்.

நைதீ. அப்படியா செய்தி? அந்த வேத ஆதாரங்களில் சிலவற்றைச் சொல்லமாட்டீரா?

*அவன் கோட்பாட்டிற்கு ஆதாரம்.*

யதா. சொல்லுகிறேன், கேளும்; தேவனுடைய இருதயத்திற்கேற்ற தாவீது அரசன் அந்நியனுடைய மனைவியை எடுத்துக்கொண்ட முகாந்தரத்தைவிட்டு தானும் அப்படியே செய்வேன் என்கிறான். சாலொமோன் என்பவர் பல மனைவிகளைப் படைத்துக்கொண்ட முகாந்தரத்தைவிட்டுத் தானும் அப்படியே படைப்பேன் என்கிறான். சாராளும் பக்தியுள்ள எகிப்திய மருத்துவச்சிகளும் ராகாபும் பொய்பேசினதுபோல் தானும் பொய் பேசலாம் என்கிறான். கிறிஸ்துவின் சீஷர் அவருடைய உத்தரவுப்படியே அந்நியனுடைய கழுதையை அவிழ்த்து வந்ததுபோல தானும் பிறர்பொருளை அபகரித்துக்கொள்வேன் என்கிறான். யாக்கோபு தன் தகப்பனுடைய ஆசீர்வாதத்தைத் தந்திரமாய்ப் பெற்றுக்கொண்டதுபோல் தானும் செய்வேன் என்கிறான்.

நைதீ. இதற்கு மிஞ்சின இழிவான கோட்பாடுகள் உண்டா? இந்த அபிப்பிராயமே அவன் மனதில் இருந்தது உண்மையா?

யதா. இந்த அபிப்பிராயங்களையே சொல்லி வழக்காடவும் வேத நியாயங்களைக்கொண்டு ருசிப்பிக்கவும் ஆமோதிக்கவும் நான் பலமுறை என் காதால் கேட்டிருக்கிறேன்.

நைதீ. இவை எல்லாம் உலகத்தார்க்கு எவ்வளவேனும் ஒவ்வாத கோட்பாடுகளாய் அல்லவோ இருக்கின்றன.

யதா. என் கருத்து உமக்கு நன்றாய் விளங்குகிறது என்று நினைக்கிறேன்; எந்த சன்மார்க்கனும் இப்படிப்பட்டவைகளைச் செய்தாலும் செய்வான் என்று அவன் சொல்லாமல் இப்படிப்பட்ட துன்மார்க்கங்களைச் செய்தவர்களிடத்தில்

இருந்த சன்மார்க்கம் ஒருவனுக்கு உண்டென்பது மெய்யானால் அவன் இந்தத் துன்மார்க்கங்களையும் சும்மா செய்யலாம் என்றே அவன் சொன்னான்.

ஞாநி. இதைவிட அபத்தமான நியாயம் ஒன்று உண்டா? இப்படிச் சொல்லுகிறது எப்படி இருக்கிறது என்றால்; இரவலையும் பக்தர் களின் பலவீனத்தால் பாவஞ் செய்து இருக்கிறார்கள் ஆகையால்தான் பாவங்களைத் தெரிந்து செய்யலாம் என்று சொன்னதுபோலவே இருக்கிறது. வேதவிரோதமாய்ச் சொன்னால் ஒரு பிள்ளை காற்று அடித்து அல்லது கால் தட்டவிழுந்து அதின் உடம்பெல்லாம் சேறுபட்டுப் போய்விட்டதானால் தானும் ஒரு பன்றியைப் போல் சேற்றில் புரண்டு உருண்டு அவ்விதம் அழுக்காகிவிடலாம் என்று சொன்னதுபோலவே இருக்கிறதே. இவ்வண்ணம் ஒருவன் மனித இச்சையின் வல்லமையால் குருடனாய்ப் போவான் என்று யார்தான் எண்ணுவார்கள்? ஆனால் இப்படிப்பட்டவர்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிற வாசகம் யதார்த்தமாய் இருக்கவேண்டியது. "அவர்கள் திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாய் இருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்"[a] அதுவும் அன்றி இப்பேர்ப்பட்ட துன்மார்க்கரிடத்தில் சன்மார்க்கருடைய குணங்களும் இருக்கும் என்று அவன் எண்ணுவதும் அந்த அபத்தமான கோட்பாடாகவே இருக்கிறது. சாபமானது நாயைப்போல நக்கித் தின்று போல தேவனுடைய ஜனங்களின் பாவங்களைத் தின்று[b] அவர்களுடைய சன்மார்க்கத்தில் பங்கு பெற்று இருக்கிறவனுடைய அடையாளம் அல்லவே. இப்படிப்பட்ட அபிப்பிராயம் உள்ளவனிடத்தில் அற்ப விசுவாசமாவது அன்பாவது உண்டென்று நான் எவ்வளவேனும் நம்பமாட்டேன். ஆனால் இதெல்லாம் நீர் பலவீன மனசாட்சிகளைச் சொல்லி அட்சேபித்து இருப்பீர் என்றே நினைக்கிறேன். இதைத் தவிர வேறு என்னவாவது அவன் சொல்லுகிறானா?

பக்தரின் பலவீனம் பாவி களுக்கு அனுகூலமாக ஆகாது.

யதா. இப்படிப்பட்ட கோட்பாட்டை மனதில் நிர்ணயம் பண்ணிக்கொண்டு இவ்வித துன்மார்க்கங்களைச் செய்கிறவன் இக்கோட்பாட்டிற்கு விரோதமான நிர்ணயம் உடை

[a] 1 பே 2. 8. [b] ஓசே. 4. 8.



யவனாய் இருந்தும் அந்தத் துன்மார்க்கங்களைச் செய்கிறவனிலும் யோக்கியன் என்று தோன்றுகிறது என்றான்.

ஞாநி. இது எவ்வளவு அக்கிரமமான உத்தரவு. ஏனெனில், மாமிச இச்சையின்படி செய்யக்கூடாதென்ற நிர்மானம் உடையவர்களாய் இருந்தும் அவ்விச்சையின் கடிவாளத்தைத் தளரவிடுவதே கெட்டது; ஆனால் பாவத்தைச் செய்துபோட்டு அப்படிச் செய்வதற்கு நியாயம் உண்டென்று சாதிப்பதோ மகா கெட்டது. இதில் ஒன்று அப்பாவங்களைப் பார்ப்போர் தற்செயலாய் இடறிவிழவும் மற்றொன்று அவர்களை நேராய் வலையில் மாட்ட வழிகாட்டவும் செய்கிறது போல் இருக்கிறது.

யதா. இவனைப்போலொத்த வாய் உடையவர்கள் அநேகர் இல்லாவிட்டாலும் இவனைப்போலொத்த மனது உடையவர்களோ அனேகம்பேர் இருக்கிறார்கள்; அதினாலேதான் மோட்ச பிரயாணம் செய்தல் அவ்வளவு மதிப்பாய் எண்ணப்படுகிறதில்லை.

ஞாநி. நீர் சொல்லுகிறது வாஸ்தவம்தான்; அதற்காக நாம் துக்கப்படவேண்டியதுதான். ஆனால் பரலோக ஆளும் அரசனுக்குப் பயப்படுகிறவனை அவனவன் எல்லாவற்றுக்கும் விலகிக்கொள்ளவேண்டும்.

யதா. விபரீத அபிப்பிராயங்கள் எல்லாம் இவ்வுலகத்தில் இருக்கின்றன. நாம் மனந்திரும்புவதை யாசகமாய் மரணநேரத்தில் போடுகிற சமயம் இருக்கிறது; இப்போது என் அதற்காகத் தீர்ப்பை உடைத்துக்கொள்ளவேண்டும் என்று ஒருவன் என்னிடத்தில் சொன்னது உண்டு.

ஞாநி. அவன் சரியான புத்திசாலி அல்ல; அப்படிப்பட்டவன் பயித்தியக்காரனாய் இருக்கவேண்டியது. அவன் ஒரு வாரத்தில் தன் பிரயாண ஓட்டத்தில் இருபது மைல் போகவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தால் வாரம் எல்லாம் சும்மா இருந்துவிட்டு அந்த வாரத்தின் கடைசிநாழிகையில் தன் ஓட்டத்தை நிறைவேற்ற ஆரம்பிப்பான்போல் இருக்கிறது.

யதா. நீர் சொல்லுவது சரி, ஆனால் தங்களை மோட்ச பிரயாணிகள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறவர்கள் பெரும்பாலும் இப்படியே செய்கிறார்கள். நீர் பார்க்கிறபடி என் நிலையாய் நடந்து தடைபடுகிற பிரயாணம் ஆகிவிட்டேன்; வெகு வருஷங்களாய் இந்தப் பயணத்திலும் இருக்கிறேன்; இப்

படைப்பட்ட அநேக காரியங்களைப் பிரயாணிகளிடத்தில் கவனித்தும் இருக்கிறேன்.

அப்பிரயாணிகளில் சிலர் தாங்கள் புறப்படும்போதே உலகம் முழுவதையும் திரட்டி தங்களுக்கு முன்னே விட்டு தூரத்தப்போகிறவர்களைப்போல் காணப்பட்டு சிலநாட்களுக்குள்ளாக வனாந்தரத்தில் மாண்டுபோனதுபோல் வான் நகரத்தின் தேசத்தைக் காணாமலே போனார்கள். வேறு சிலர் தங்கள் பிரயாண ஆரம்பத்தில் முடிவுபரியந்தம் போகிறவர்களைப்போல காணப்படாவிட்டாலும் அன்றைக்கே செத்துப் போவார்கள் என்று சொல்லத்தக்கதுபோல் இருந்தாலும் முதல்தரமான பிரயாணிகள் ஆகிவிட்டதையும் கண்டு இருக்கிறேன்.—இன்னும் சிலர் கால்கால் பாய்ச்சலில் முன்னுக்கு விசையாய் ஓடினதையும் சிலநாளுக்குள்ளாகத் திரும்பி அதே மாதிரி பின்னுக்குப் பாய்ந்து ஓடினதையும் கண்டு இருக்கிறேன். மற்றும் சிலர் மோட்ச பிரயாணத்தைப்பற்றி துவக்கத்தில் வெகு மேன்மையாய்ப் பேசி பின்னும் சில நாட்களுக்குள் வெறுப்பாய்ப் பேசவும் கண்டு இருக்கிறேன்.—இன்னும் சிலர் தங்கள் பயண ஆரம்பத்தில் பரிசுத்த என்னும் இடம் நிச்சயமாகவே உண்டென்று சொல்லி அதற்கு கொஞ்சங்குறைய சமீபத்தில் வந்தபிற்பாடு திரும்பிவந்து, முத்தி என்ற மோட்சம் ஏது, ஒன்றும் இல்லை என்று சொல்லுகிறதையும் நான் கேட்டு இருக்கிறேன்.—எங்கள் வழியில் ஆபத்துகள் நடைகள் ஏதாவது உண்டாகுமானால் இப்படி அப்படி எதிர்ப்போம் என்று சொன்னவர்கள் சிலர் மாயாபயத்தினைக் கண்டவுடனே விசுவாசத்தையும் இழந்து பாதையைவிட்டு ஓட்டமாய்க் கெட்டுப்போனதையும் அறிந்து இருக்கிறேன் என்றார்.

இப்படி அவர்கள் எல்லாரும் சம்பாஷித்துக்கொண்டு போகும்போது அவர்களுக்கு எதிரே ஒருவன் தலைதெறிகோலமாய் ஓடிவந்து, ஐயாமாரே! அம்மா பெண்களே! உங்கள் உயிர் தப்பவேண்டுமானால் திரும்பி ஓடுங்கள்; அதோ திருடர் உங்களுக்கு எதிரே வருகிறார்கள் என்றான்."

தைரி. அதைக் கேட்ட தைரியநெஞ்சன்; திருடர் வந்தால் அந்தத் திருடர் முன் அற்பவிசுவாசியைக் கொள்ளையிட்டவர்களாய்த்தான் இருக்கவேண்டும்; வந்தால் வரட்டும், நாங்கள் ஆயத்தமாகத்தான் இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு தங்கள் வழியே போனார்கள். போகப்போக நாலா பக்கமும் இவர்கள் பார்த்துக்கொண்டே நடந்தார்கள். ஆனால்



அந்தத் திருடர் தைரியநெஞ்சனுடைய சத்தங்கேட்டுத்தான் மறைந்துகொண்டார்களோ அல்லது வேறொரு கொள்ளை தான் இடையில் அகப்பட்டதோ—பிரயாணிகள் அவர்களைக் கண்டுபிடிக்கவே இல்லை.

கிறிஸ்தீனாள் தங்கும் சத்திரத்தை நாடுதல்.

அப்புறம் கிறிஸ்தீனாள்; இவ்விடத்தில் ஏதாவது ஒரு சத்திரம் இருந்தால் நல்லதாக்குமே, சற்று தாமதித்து இளைப்பாறிக்கொள்ளலாமே[1] என்றாள். ஏனெனில் அவளும் பிள்ளைகளும் பிரயாணத்தால் மிகவும் இளைப்படைந்து இருந்தார்கள். அப்போது தைரியநெஞ்சன் இன்னும் சற்றுமுன்னே பரோபகார காயு என்று பேர் வழங்கும் ஒரு மகாத்துமாவின் மடம் இருக்கிறது; ௨ அங்கே போய்த் தங்கலாம் என்றார். அப்படியே செய்வோம் என்று எல்லாரும் தீர்மானித்தார்கள். அவரைக்குறித்து யதார்த்தன் என்ற பெரியவரும் அதிகமாய்ப் புகழ்ந்து பேசினதால் அச்சத்திரத்தில் தங்குவதே உத்தமம் என்று போனார்கள்.

## பரோபகார காயுவின் சத்திரம் சேருதல்.

பிரயாணிகள் பரோபகார காயுவின் சத்திரம் சேர்தல்.

அவர்கள் சத்திரத்தண்டை வந்தவுடனே கதவைத் தட்டாமலே, உள்ளே சென்றார்கள். ஏனெனில் பிரயாணிகள் சத்திரத்தின் வாசலைத் தட்டுகிறது வழக்கம் இல்லை. அவர்கள் போனவுடனே சத்திரத் தலைவனைக் கூப்பிட்டார்கள். அவரும் வந்தார்; இன்று ராத்திரி இவ்விடத்தில் தங்கலாமா என்று கேட்டார்கள்.

பரோ. அதற்கு அவர்: ஆனாகோ! நீங்கள் நிஜவந்தானால் என் மடத்தில் தங்கி இருக்கலாம்; ஏனெனில் இது பிரயாணிகளுக்கு என்றே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றார். அதைக் கேட்ட கிறிஸ்தீனாளும் அவள் கூட்டத்தாரும் இச் சத்திராதிபர் பிரயாணிகள்மேல் பிரியங்கொண்டு இருக்கிறதை அறிந்து மனச்சந்தோஷம் அடைந்தார்கள். அப்புறம் தாங்கள் ஆனாதலாய் இருக்கும்படி இரண்டொரு அறைகளைக்

[1] சத்திரம். இது விசுவாசிகள் ஒருவருக்கொருவர் காண்பிக்க வேண்டிய அன்னியோன்னிய ஒற்றுமையையும் சகோதர சிநேகத்தையும் விளக்குகிறது. அன்னியரை உபசரிப்பதினாலும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் மாறிமாறிப்போய் சந்தித்துவருவதினாலும் இந்த தர்மத்தை நிறைவேற்றலாம்.

௨ ரோ. 16. 23.

காட்டினால் பெரிய சகாயமாய் இருக்கும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியே அவர் கிறிஸ்தினாளும் அவள் பிள்ளைகளும் தயாளியும் தங்கியிருக்க ஒரு அறையையும் தைரியநெஞ்சனும் அந்தப் பெரியவரும் தங்கியிருக்க வேறொரு அறையையும் காட்டினார்.

தைரி. தைரியநெஞ்சன் சத்திரக்காரனைப் பார்த்து: பரோபகார காயுவே! இன்றிரவு பிரயாணிகளுக்கு என்ன போஜனம் தரப்போகிறீர்? இவர்கள் நெடும்பயணம் பண்ணி வெகு இளைப்படைந்து இருக்கிறார்கள் என்றார்.

பரோ. இப்போது இருட்டிப்போனதால் கடைக்குப் போகவும் புறம்ப பண்டபதார்த்தங்களைக் கொள்ளவும் சமயம் இல்லை; இராமட்டுக்கு சத்திரத்தில் இருப்பதைக்கொண்டு பசி ஆற்றிக்கொள்ளும்படி மனமானால் மெத்த நலம் என்றார்.

தைரி. உமது வீட்டில் உள்ளதைக் கொண்டே காரியத்தை நடத்தினால் போதும்; பிரயாணிகளுக்கு அவசியமான பதார்த்தங்கள் உம்மிடத்தில் இல்லாமல் போகாது என்று நான் அடிக்கடி அறிந்துகொண்டிருக்கிறேன் என்றார்.

இராப்போஜனம் ஆயத்தமானது.

உடனே பரோபகார காயு அச்சத்திரத்துத் தலைமைப்பிள்ளையாகிய அருசுவைப்பட்டனைக் கூப்பிட்டு, இத்தனைபேருக்கு சமையல் ஆகட்டும் என்று உத்தரவு பண்ணினார். அப்புறம் அவர் மறுபடியும் வந்து: வாருங்கோ, உட்காருங்கள், என் உத்தம சிநேகிதரே! வாருங்கள்; உங்களுக்கு என் வீட்டில் இடம் கொடுக்க நேரிட்ட பாக்கியத்தை என்ன சொல்வேன்! சமையல் ஆகுமட்டும் நாம் ஒருவரொருவர் பேசிக் களித்துக்கொள்ளுவது நலம் அல்லவா என்றார். அப்படியே ஆகட்டும் ஐயா என்று எல்லாரும் சம்மதித்துக்கொண்டார்கள்.

பரோ. இந்தப் பெரிய அம்மாள் யாருடைய மனைவி? இந்தக் கன்னிப்பெண் யாருடைய மகள்?

வழியாட்டு கிறிஸ்தினாவை அறிமுகப்படுத்துதல்.

தைரி. இந்த அம்மாள் முன் ஒரு காலத்தில் மோட்ச பிரயாணம் செய்த கிறிஸ்தியான் என்பவருடைய மனைவி; இந்த நாலும் அவருடைய பிள்ளைகள்தான். இந்த மாது இவர்களுக்கு அறிமுகமானவள்தான். கிறிஸ்தினாளுடைய வசனத்தின்படி இவளும் கூடவே பயணம்பண்ணிக்கொண்டு வருகிறாள். இந்தப் பிள்ளைகள் தங்கள் தகப்பனைப் பின்தொடர்ந்து



அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க ஆசைகொண்டு இருக்கிறார்கள். தங்கள் பிதா தமது பிரயாணத்தில் படுத்திருந்த இடத்தை அல்லது அவர் பாதம் பதிந்திருந்த காலடிகளைக் கண்டவுடனே இவர்கள் இருதயம் பூரிக்கிறது. அந்த இடத்திலே படுக்கவும் அந்தக் காலடியிலே தங்கள் பாதங்களை வைத்து நடக்கவும் இவர்கள் ஆசிக்கிறார்கள்.

கிறிஸ்தியானுடைய பூர்வோத்திரம்.

பரோ. இது கிறிஸ்தியானுடைய மனைவியா? இவர்கள் அவனுடைய மக்களா? நான் உன் புருஷனுடைய பிதாவையும் அவனுடைய தகப்பனுடைய தகப்பனையும் அறிவேன். இந்தக் குடும்பத்தில் உள்ள பலர் மெத்த உத்தமராய் இருந்தார்கள். இவர்களுடைய பிதா பிதாக்கள் எல்லாரும் முதலாவது அந்தியோகியாபட்டணத்திலே வசித்து இருந்தார்கள்.[a] கிறிஸ்தியானுடைய சந்ததியார் எல்லாரும் பேர்போன மகாத்துமாக்கள்தான்.[1] அதைப்பற்றி உன் புருஷன் சொல்லியும் இருக்கலாம். அவர்கள் எல்லாரும் பரதேசிகளின் ஆண்டவர்மேலும் அவருடைய வழிகள்மேலும் அவரை நேசிக்கிறவர்கள்மேலும் நான் அறிந்த பலரை விடப் பூரணநாட்டமுள்ள சற்குணராய் இருந்தார்கள் என்று சொல்லுவேன். உன் புருஷனுடைய பந்துக்கள் பலர் சத்தியத்தின் நிமித்தம் எந்தத் துன்பங்களுக்கும் அஞ்சாநெஞ்சைக் காண்பித்தார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உன் கணவனுடைய குடும்பத்தின் முன்னோர்களில் முதல்வராகிய ஸ்தேவான் என்பவர் தலையில் கல்லெறியுண்டு இறந்தார்.[b] அச்சந்ததியைச் சேர்ந்த யாக்கோபு என்னொருவர் பட்டயத்தால் வெட்டப்பட்டார்.[c] உன் கணவனின் அதிபூர்வபிதாக்களாகிய பவுலையும் பேதுருவையுங்குறித்து ஒன்றும் விபரித்து நிரவிட்டாலும் சிங்கங்களுக்கு இரையான இக்னேஷியஸ் என்பவரும் வயிற்றிலிருந்து வார் வாராய் சதை அறுத்து எடுக்கப்பட்ட ரோமானுசம் அக்கினியில் மரணம் பெற்ற போலிக்

அவனுடைய சந்ததியார்கள்.

[1] மனிதர்கள் தெய்வ விசுவாசமான குடும்பங்களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார்கள். கிறிஸ்தவனின் விசுவாசத்தின் அடைக்கலமானவனுடைய குடும்பம் மற்றெல்லாருடைய குடும்பத்தையும்விட விசேஷமும் மேன்மையும் முக்கியப்பட்டதுமாய் இருக்கிறது. நம்முடைய முன்னோர் போக்கியமாய் நடந்துகொண்டதுபோலவே அவர்களுடைய சந்ததியாராகிய நாமும் நடந்துகொள்ளவேண்டும்.

[a] அப். 11. 26. [b] அப். 7. 59, 60. [c] அப். 12. 2.

தாப்பும் அவன் சத்துருவாய் இருந்தார்கள். கக்கனுக்கு இரையாக ஒரு கூடையில் வைக்கப்பட்டு அந்தரத்தில் தொங்கவைக்கப்பட்டு இருந்தவரும் ஒரு சாக்கிலே பொதியப்பட்டு சமுத்திர ஆழத்திற்கென்று எறிந்துவிடப்பட்டவரும் அவன் சத்துருதான். மோட்ச பிரயாணிகள் அவனாலே உண்டான துன்பங்களையும் உபத்திரவங்களையும் இப்படியே அநுபவித்த அவன் வமிசத்தார் எத்தனை பேர் என்று எண்ண முடியாது. மேலும் உன் கணவன் தன்னைப்போல் பிரயாணம் போகும் இந்த நாலு பிள்ளைகளையும் பின்வைத்துப் போனதை நான் பார்க்கும்போது என் மனம் பூரிக்கிறது. இவர்கள் தங்கள் தகப்பனின் போனை வணங்கி தங்கள் பிதாவின் அடிச்சுவடுகளில் நடந்து, அவன் அடைந்த பேரானந்த பதவியை அடையவேண்டும் என்பதே என் கோரிக்கை.

காயு. நிச்சயமாகவே அவர்கள் அப்படிப்பட்ட வாலிபராக இருக்கிறார்கள். தங்கள் பிதாவின் பாதையில் மிதித்து நடக்கவே அபேட்சை உடையவர்கள்போலக் காணப்படுகிறது.

பரோ. நான் சொல்லுகிறதும் அதுதான்; கிறிஸ்தியானுடைய குடும்பம் அக்கம்பக்கம் பிரபலமாகவும் இப்பூதலத்தில் விருத்தியாகவுமாக இவன் தன் மக்களுக்குத் தகுந்த பெண்களைத் தெரிந்தெடுத்து நிச்சயதாம்பூலம் மாற்றி விவாகத்துக்கு ஏற்ற பிரயத்தனங்களைச் செய்வது உத்தமம். அப்போது இவர்கள் தகப்பனுடைய பேரும் பிதா பிதாக்களின் பிரபலமும் பூதலத்தில் மங்காதிருக்கும்.

கிறிஸ்தியானுடைய குடும்பவிருத்திக்கு காயு சொன்ன ஆலோசனை.

யதா. இந்த உத்தமனுடைய குடும்பம் அழிவோடே அற்றுப்போனால் எவ்வளவு விசனமான காரியமாய் இருக்கும்.

பரோ. அந்தப் பொருமி அப்படி ஆகவே ஆகாது. ஆனால் கிறிஸ்தியானே என் ஆலோசனையின்படி செய்யட்டும்; அவன் குடும்பம் அற்றுப்போகாதிருப்பதற்கு அதுவே நல்வழி என்று சொல்லி, கிறிஸ்தியானைப் பார்த்து; கிறிஸ்தியானே! உனக்கும் உன் தோழி ஒருத்திக்கும் நல்ல மனம் இருக்கிறதென்று காண்கிறேன். ஆகையால், இந்தக் கன்னிகையை உன் குடும்பத்தின் அங்கமாய் இணைத்துக்கொள்ளுகிறது உத்தமமாக என் மனதில் படுகிறது. இவளை உன் மூத்தமகன் மத்தேயுவுக்கு விவாகஞ்செய்யத் தீர்மானித்தால்,



கிறிஸ்தியானுடைய சம்மதி இங்கே வேண்டியதாகும் என்றார். அவர் சொன்ன யோசனையின்படியே அந்தக் காரியம் தீர்மானிக்கப்பட்டு விவாகமும் நடந்தது; அதைக்குறித்துப் பின்னாலே விபரமாய்ச் சொல்லுவோம்.

பின்னும் அந்தச் சத்திரத் தலைவர் சொல்லுவார்; என் நேசரே! ஸ்திரீகளைப்பற்றிய அவதூறு ஒழிந்துபோகும்படி நான் அவர்கள் பட்சம் பேசுகிறதைக் கேளுங்கள். சாவும் சாபமும் ஸ்திரீயின் வழியாய் வந்ததுபோல, ஜீவனும் சுகமும் ஸ்திரீயின் வழியாகவே வந்திருக்கிறது. தேவன் தமது குமாரனை ஸ்திரீயினிடத்தில் பிறக்கும்படி செய்தார்.[b] ஸ்திரீகள் தங்கள் ஆதித்தாயின் செய்கையை வெறுத்தவராய் அநேகமாய் வெறுத்து வந்தார்கள் என்பது பழைய ஏற்பாட்டு ஸ்திரீகள் தங்கள் கர்ப்பங்களைக் குறித்துக் கொண்டிருந்த அபேட்சையினால் நன்றாய்த் தெரியவரும். இந்த ஸ்திரியாவது அந்த மனுஷியாவது லோகரட்சகரின் தாயாகிவிடமாட்டாளா என்று அவர்கள் எல்லாரும் ஆசையோடு எதிர்பார்த்துவந்தார்கள். பின்னும் கேளுங்கள்; இரட்சகருக்குத் திருவயதாய் இருந்தபோது ஆண்களும் அறிஞர்களும் அவரைக்குறித்துச் சந்தோஷங்கொண்டாடுமுன் பெண்களே சந்தோஷங்கொண்டாடினார்கள்.[c] மேலும் நான் வாசித்தமட்டும் ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துவந்தார்கள் என்று அறிகிறேனே அல்லாமல், ஆண்பிள்ளைகள் ஒரு காசாவது கொடுத்து உதவினதாக நான் கண்டதில்லை.[d] இரட்சகரின் திருப்பாதத்தைத் தன் கண்ணீரால் கழுவினது ஒரு ஸ்திரீதான்.[e] அவரை அடக்கம்பண்ணுவதற்கு ஏற்ற அபிஷேகத்தைச் செய்ததும் ஒரு ஸ்திரீதான்.[f] அவர் சிலுவை சுமந்து போகும்பொழுது அவருக்காக அழுதவர்களும் ஸ்திரீகள்தானே.[g] அவர் அடக்கம்பண்ணப்பட்டபோது கல்லறைக்கு எதிரே உட்கார்ந்து இருந்தவர்களும் ஸ்திரீகள்தான்.[h] அவர் உயிரோடெழுந்த அருணோதயத்தில் அவரை முதலாவது சந்தித்ததும் ஸ்திரீகள்தான்.[i] அவர் உயிர்த்தெழுந்தார் என்ற செய்தியை சீஷர்களுக்குச் சொல்லும்படி வந்தவர்களும் ஸ்திரீகள்தான்.[k] இவை எல்லாம் ஸ்திரீகள் மேலான கிருபையைப் பெற்று இருந்தார்கள் என்பதைத் தெளிவாய்க் காட்டு கிற

ஸ்திரீகளின் மேன்மை.

[a] ஆதி. 3. [b] கலா. 4. 4. [c] லூக். 1. 42—46. [d] லூக். 8. 2, 3. [e] லூக். 7. 37—50. [f] யோவா. 11. 2; 12. 3. [g] மத். 27. 55, 56. லூக். 23. 55. [h] மத். 27. 61. [i] லூக். 24. 1. [k] லூக். 24. 22, 23.

திய ஜீவனுகிய திருவைபக்கு அவர்களும் பங்காளிகள் என்பதை நன்றாய் உணர்த்துகிறதாய் இருக்கின்றன என்றார்.

பந்திமேசையை ஆயத்தம் பண்ணுகிறது.

இச்சமயத்திலே தகைப்பின்னையாகிய அறுக்கைப்பட்டார் சமையல்வேலை வறந்துறைய முடிகிறதென்று காட்டும்படி ஒருவனை அனுப்பி பந்திமேசையின்மேல் துப்பட்டி விரிக்கவும் போஜனத்தட்டுகளைப் பரப்பி உப்பும் அப்புறம் ஒழுங்குபண்ணிவைக்கவும் திட்டம் பண்ணினான். அதைக் கண்ட மத்தேயு: இன் வந்ததும், துப்பட்டி விரித்ததும், தட்டுகள் பரப்பினதும் எல்லாம் இல்லாத பசியை இருக்கவிட்டதுபோல் இருக்கிறது என்றான்.

பயோ. அப்போது காயு உன் ஆத்துமாவுக்குப் பரிமாறப்படும் இவ உபதேசங்கள் எல்லாம் இவ்வுலகத்தில் உனக்கு இவ்வண்ணமே பசியை எழுப்பி மகா ராஜாவுடைய ராஜ்யத்தின் இராப்போஜனப்பந்தியில் உன்னை உட்காரச்செய்வதாக; ஏனெனில், இங்குள்ள பிரசங்கங்களும் பிரபந்தங்களும் நியமனங்களும் எல்லாம் நாம் நமது ஆண்டவருடைய ராஜ்யத்தில் சேரும்போது அநுபவிக்கும் மகா விருந்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தட்டுகளைப் பரப்பி உப்பை வைத்திருப்பதுபோலவே இருக்கிறது என்றார்.

இராவிருந்த போஜன மார்க்கண்டமும் முன்னந்தொடையும்.

இதற்குள்ளாக போஜனபதார்த்தங்கள் கொண்டுவரப்பட்டது.[1] அவர்கள் தங்கள் போஜனத்தை தேவனை நோக்கி ஏறெடுக்கும் ஜெபத்தோடும் ஸ்தோத்திரத்தோடும் புசிக்க ஆரம்பிக்க வேண்டும் என்பதைக் குறிப்பிக்கும்படி ஏறெடுத்த முன்னந்தொடையும் அசைவாட்டப்பட்ட மார்க்கண்டமும் முதலாவது மேசையின்மேல் வைக்கப்பட்டது.

---

[1] ஏறெடுத்த முன்னந்தொடையும் அசைவாட்டப்பட்ட மார்க்கண்டமும். இவைகள் திருவுள்ள ஜெபத்துக்கும் நன்றியறிதலுள்ள ஸ்தோத்திரத்துக்கும் அடையாளம். ரசம்; இது இதிலுள்ள தத்துவத்தினால் உண்டாகும் ஆசீர்வாதத்துக்கு முன்னடையாளம். பலி; இது செவியால் அங்கீகரிக்கப்பட்ட வேத உபதேசத்தைக் குறிக்கிறது. வெண்ணெயும் தேனும்; இவைகள் தேவனுடைய வார்த்தையின் மெய்யான பற்றுதலினால் உண்டாகும் உணர்ச்சியையும் மனதின் மகிமைக்குரிய நம்பிக்கைகளையும் குறிக்கிறது. வாதுமைக் கொட்டை; இது கஷ்டப்பட்ட பழக்கத்தின் மூலமாய் அறிந்துகொள்ளக்கூடிய வருத்தமும் கடினமுமான காரியங்களைக் காண்பிக்கிறது.



தாவீது தேவனுகிய கர்த்தருக்கு முன்பாகத் தன் இருதயத்தை உயர்த்தி ஏறெடுத்த முன்னந்தொடையும் அவன் இன்னாம் வாசித்தபோதெல்லாம் சாய்ந்துகொண்டிருந்த அசைவாட்டப்பட்ட தன் ஆத்துமாவின் நம்பிக்கையாகிய மார்க்கண்டமுமே கொண்டுவந்து வைக்கப்பட்டது.[a] இந்த இரண்டு தட்டுகளும் ருசிகரமாய்ச் சமைக்கப்பட்டு சுடச்சுட இருந்தது. அவர்கள் எல்லாரும் ஆசை தீரப் புசித்தார்கள்.

திராட்சரசம்.

அப்புறம் இரத்தம்போன்ற திராட்சரசம் கொண்டுவந்து வைக்கப்பட்டது.[b] உடனே மடாதிபதி அவர்களை நோக்கி: இது தேவனுடைய இருதயத்தையும் மனிதருடைய இருதயத்தையும் மகிழ்ச்சியாக்குகிற சுயம்பான திராட்சரசம்; இதில் மனம்கொண்டமட்டும் குடியுங்கள் என்றார்.

பாலேடையும்.

அப்புறம் ஆடை உறைந்த பால் கொண்டுவந்து வைக்கப்பட்டது. அப்போது மடாதிபதி பிள்ளைகள் நன்றாய் வளரும்படி அவர்கள் அதைக் குடிக்கட்டும் என்றார்.[c]

வெண்ணெயும் தேனும் வைத்த தட்டு.

அப்பால் வெண்ணெயும் தேனும் வைத்த ஒரு தட்டு கொண்டுவரப்பட்டது. உடனே காயு; இதில் தாராளமாய்ச் சாப்பிடுங்கள், நீங்கள் அறிவையும் வளையுருக்கும் உணர்வையும் அடையும்படி இது உங்களுக்கு உற்சாகத்தையும் பலத்தையும் தரும் போஜனம் ஆக்கும்; நமது ஆண்டவரின் பாலியவயதின் போஜனம் இதுவே. "தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்துகொள்ள அறியும் வயதுமட்டும் அவர் வெண்ணெயையும் தேனையும் சாப்பிடுவார்"[d] என்று எழுதப்பட்டிருக்கிறது என்றார்.

பழங்கள்.

அதின் பின்பு ஒரு பாத்திரத்தில் பழங்கள் கொண்டுவரப்பட்டது. அவைகள் மகா ருசிகரமாய் இருந்தன. அதைக் கண்ட மத்தேயு என்பவன் நமது ஆதித்தாயைப் பாவியாக்கினது இதுவும் அல்லவா? அப்படி இருக்க நாம் இதைத் தின்னலாமா? என்றான்.

---

[a] லேவி. 7. 32-34; 10. 14, 15. சங். 25. 1. எபி. 13. 15.
[b] உபா. 32. 14. நியா. 9. 13. யோவா. 15. 5.
[c] 1 பேது. 2. 1, 2. [d] ஏசா. 7. 15.

அதற்கு அந்த மட்டாதிபதி;

அம்மானை.

பழுத்தாலேதான் அப்பா, பசிகெடுக்கத் தாருல்,
பழம் அல்லை; கேடெல்லாம் வந்ததே பாரத்திருல்;
பிஞ்சுக்கனியைத் தின்றால் உதிரம்கெடும்,
தின்றாய்க்கனியைத் தின்றால் உயிர் கெடும்;
அன்னப்பருவே! அரிய திருச்சபையே!
அன்பால்மாய்ந்திடும், அன்னமே மெய்ச்சபையே;
பல் அப்பா பானம் பருகு; தருத்திரம்
உன் அப்பா உன்னுக்கு உயிர்தருமே இந்தப்பழம்

என்று சொன்னார்.



அதற்கு மத்ரேயு: ஐயா! சிலகாலத்துக்குமுன் சில பழங்க



ளைத் தின்றுபோட்டு மெத்தவும் வியாதிப்பட்டேன்; அதினாலே தான் இப்படிச் சொன்னேன் என்றான்.

அதற்கு அவர்: விலக்கப்பட்ட கனியால் வியாதி வருவது மெய்; ஆனால் அவர் கட்டளையிட்ட கனிகளைத் தின்றால் நோய் அணுகாது என்றார்.

இறைச்சி கொட்டைகள்.

இப்படி அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு தட்டில் வாதுமைக்கொட்டைகள் கொண்டுவந்து வைக்கப்பட்டன.[a] அப்போது விருந்தாளிகளில் சிலர்: இவைபோன்ற வல்லியகொட்டைகள் மெல்லிய பல்லுடையவர்களுக்கும் விசேஷமாய்ப் பிள்ளைகள் பல்லுக்கும் ஆகாது; பல் உடைந்துபோம் என்றார்கள். அதைக் கேட்ட பரோபகார காயு

அமைபுள் விடுகதை.

அரும்பதமே கொட்டையாம்
அதை மூடிய விலியாம்
அதின் உள்ளேயே பருப்பாம்
ஓட்டை உடைத்தட்டி எடுக்கலாம்
ஓய்வில்லாமல் புசிக்கலாம்

என்றார்.

அப்புறம் அவர்கள் பூரண மனமகிழ்ச்சியோடே பல காரியங்களைக்குறித்து பந்திமேசையில் இருந்தே பேசிக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் யதார்த்தன் என்னும் பெரியவர் மட்டாதிபதியைப் பார்த்து: ஐயா! உம்முடைய கொட்டைகளை உடைத்து தின்றுகொண்டிருக்கும்போதே நான் போடுகிற விடுகதையை விடுவியும் பார்ப்போம் என்று சொல்லிக்கொண்டு இந்த விடுகதையைப் போட்டார்.

யதார்த்தன் போட்ட விடுகதை.

இருந்தான் ஒருவன்
என்கிறார் பித்தனாய்
கொடுத்தான் வாரி
எடுத்தான் மேலதி.

இந்த விடுகதையைப்போட்டவுடனே காயு இதற்கு என்ன மறுமொழி கொடுக்கிறார் பார்ப்போம் என்று எல்லாரும் அவருடைய வாயைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் சற்றுநேரம் மௌனமாய் இருந்து ஆலோசித்து விடுகதைக்கு மறுமொழியாக;

---

[a] உன்ன, 6. 11.

முந்தின விடுகதையின் விளக்கம்.

ஏழைகளுக்கு இறைக்கிறவன்—(தான்)
இறைத்த தொகையோடே
பத்தாய்ப்பங்கு பெறுவான்—(வேறு).
விடுவித்தேனே, ஐயனே!

என்று சொன்னார்.

காயு கதையை விடுவித்தவுடனே. யோசேப்பு என்றவன் அதிசயப்பட்டு, ஐயா! இக்கதையை இவ்வளவு சீக்கிரத்திலே கண்டுபிடித்துக்கொள்ளுவீர் என்று நான் எண்ணவில்லை என்றான்.

அதற்கு பரோபகார காயு: ஓ! இம்மாதிரிக் கதைகளில் நான் நன்றாய்ப் பழகி இருக்கிறேன். நான் பரோபகாரம் உடையவனாக என் ஆண்டவரால் படித்துக்கொண்டேன். அதில் எனக்கு அதிக லாபம் உண்டென்று அநுபோகத்தால் அறிந்தும் இருக்கிறேன். வாரி இறைத்தும் விருத்தி அடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமை அடைவாரும் உண்டு; ஐசுவரியமாய் இருந்தும் தன்னை அரசனைப் பாராட்டுகிறவனும் உண்டு; அரசனாய் இருந்தும் தன்னை ஐசுவரியமாய்ப் பாராட்டுகிறவனும் உண்டு[*] என்றார்.

அப்பொழுது சாமுவேல் என்பவன் தன் தாயாகிய கிறிஸ்தீனாளுடைய காதண்டை போய்: அம்மா!

சாமுவேலின் ஆசை.

இந்த வீட்டுக்கு எஜமான் மெத்த நல்லவர் போல் காணுது, நமக்கு இங்கே கொஞ்சக் காலம் இருந்தால் நலம் அன்றியே மத்தேயுவுக்கு நாம் இவ்விடத்தைவிட்டுப் புறப்படுமுன்னே தனிச்சிலைக் கலியாணம்பண்ணிப்போடுவது நல்லது என்று சொன்னான். அதை எப்படியோ ஜாடையாய்க் கேட்டுக்கொண்ட பரோபகார காயு அப்படியே ஆகட்டும், மகனே! உங்கள் மனம்போல் இருந்து மெதுவாய்ப் போங்கள் என்றார். அப்படியே அவர்கள் எல்லாரும் சுமார் ஒருமாதம் அந்த மடத்திலே இருந்தார்கள்.

மத்தேயுவுக்கும் தயாளிக்கும் விவாகம் நடந்தது.

இதற்குள்ளாகத் தயாளிக்கும் மத்தேயுவுக்கும் கலியாணம் நிறைவேறிற்று. இவ்விடத்தில் இருக்கும்போதும் அவள் தன் வழக்கம்போல் ஏழைகளுக்கென்று பல உடுப்புகளை வைத்தாள். அதினாலே மோட்ச பிரயாணிகளுக்குள் இவளைப்பற்றி நற்சாட்சி உண்டாயிற்று.

---

[*] நீதி. 11. 24; 13. 7.



இது நிற்க, நாம் நமது கதையைத் தொடருவோமாக. இராப்போஜனம் ஆனபின் பாலியர் மெத்தவும் இளைப்பாய் இருந்ததால் அவர்கள் படுக்கைக்குப் போகும்படி பிரயத்தனப்பட்டார்கள். உடனே அந்த மடத்துக்கு எஜமான் எழுந்திருங்கள், நான் உங்கள் படுக்கைகளைக் காட்டுகிறேன் என்றார். அதற்குள்ளாக தயாளி: நான் அவர்களைப் படுக்கவைக்கிறேன், நீர் வருத்தப்படவேண்டாம் என்று சொல்லி அவர்களைப் படுக்கவைத்தாள். அவர்கள் நன்றாய்த் தூங்கிவிட்டார்கள்.

இராப்போசனமுடிந்த பின் படுக்கப்போனது.

மற்றவர்களோ இராமுழுதும் விழித்துக்கொண்டிருந்தார்கள்; ஏனெனில் மடாதிபதியாகிய பரோபகார காயு அவ்வளவு நல்லவராய் அவர்கள் மனதுக்கு ஒத்துப்போனதால் அவரை விட்டு ஒரு நிமிஷமாவது பிரிய அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் வெகு நேரமாய்த் தங்கள் ஆண்டவரைப்பற்றியும் பயணத்தைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கவே, முன் விடுகதை போட்ட யதார்த்தன் என்ற பெரியவர் மெதுவாய்த் தலை ஆட்டத் தொடங்கினார். உடனே தைரியநெஞ்சன்: என்ன பெரியவரே! தூக்கம் உன்னை மருட்டுகிறதோ, கண்ணைத் துடையும், உமக்கு ஒரு கதை போடுகிறேன் என்றார். அவர் மெதுவாய்க் கண்ணைக் கசக்கிக்கொண்டு அந்தக் கதையைச் சொல்லும் பார்ப்போம் என்றார்! அப்பொழுது தைரியநெஞ்சன்:

தைரியநெஞ்சனின் விடுகதை.

கொல்ல வல்லோன் (முன்) தோற்கவேண்டும்.
வென்று வெல்வோன் (தான்) சாகவேண்டும்

என்று சொல்லி ஒரு விடுகதை போட்டார். ஆகா! இது கொடூரமான விடுகதை; இதை விஸ்தரிப்பதும் வருத்தம், அப்பியாசிப்பதும் வருத்தம். ஐயா, மடாதிபதியே! என் வேலையை உமக்கு ஒப்புவிக்கிறேன்; நீரே இதை விடுவியும், நான் அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்று அந்தப் பெரியவர் சொன்னார்.

அதற்கு பரோபகார காயு: அப்படி வேண்டாம் ஐயா! உமக்குப் போட்ட விடுகதையை நீரே விடுவிக்கவேண்டியது என்றார். அப்புறம் அந்தப் பெரியவர், நல்லது நானே விடுவிக்கிறேன்;

யதார்த்தன் அதை விடுவித்தல்.

இருதயசுத்தியைக் கெட்டுக்கொண்டோன் (பாவ)
இச்சையைப் புறம்பாக்கொண்டிருக்கிறான்.
ஆவியின் ஜீவனை உணர்ந்தவன் (பாவ)
மரணத்துக்கு மாண்டிருப்பான்

என்று மறுமொழி சொன்னார்.

அது கேட்ட பரோபகாரி சாயு: அது யதார்த்தமான வார்த்தை. சத்திய உபதேசமும் அநுபோகமும் இதை நமக்கு உணர்த்துகிறது. எனெனில், முதலாவது கிருபையானது தனது மகிமையோடு ஆத்துமாவில் பிரசன்னமாகி அதை நீங்கப்படுத்துமட்டும் ஆத்துமா பாவத்தை முழுப்பகையாய் எதிர்க்க சக்தியற்றிருக்கிறது. மேலும் பாவமானது நமது ஆத்துமாவைக் கட்டி உருட்டும் சாத்தானின் கயிறுகளானால், அக்கட்டுகள் அவிழ்க்கப்படுமுன் ஆத்துமா என்னதான் செய்யக்கூடும்? இரண்டாவது, தன் மாம்ச இச்சைக்கு அடிமையாய் இருக்கிற ஒருவன் தேவ கிருபையைப் பிறருக்கு உணர்த்தும் ஸ்தம்பம்போல் இருப்பான் என்று எந்தப் புத்திமானாவது அந்தக் கிருபையைப் பெற்றிருக்கிறவனாவது நம்பவே மாட்டான். இதற்கு இசைவான ஒரு கதை என் ஞாபகத்தில் வருகிறது; அதைக் கேட்டால் மெத்த இன்பமாய் இருக்கும். இரண்டு பேர் மோட்ச பயணம் போனார்கள். அவர்களில் ஒருவன் தன் இளம் பிராயத்திலும் மற்றவன் தன் விருத்தாப்பியத்திலும் பயணம் பண்ண ஆரம்பித்தார்கள். அந்த வாலிபன் அறுத்து எடுத்துத் தள்ளிவிட்டுப்போகவேண்டிய அநேக மாம்ச சிக்குகள் இருந்தன. விருத்தாப்பியனோ கைகால் தள்ளாடி, காலம் கடந்துவிட்ட வயோதிபனாய் இருந்தான். இந்த வாலிபன் விருத்தாப்பியனைப்போலவே தன் பாதையில் வேகமாய் நடந்து அவனைப்போலவே தொந்தரையில்லாமல் பயணம்செய்தான் என்று வைத்துக்கொள்ளுவோம்; இவர்கள் இருவருடைய கிருபையும் ஒன்றுபோலவே இருந்தாலும் இவர்களில் யாருடைய கிருபையானது பளிச்சென்று பிரகாசிக்கிறது?

இருபிரயாணிகளின் ஒத்தமை.

யதா. அந்த வாலிபனுடையதே பிரகாசிக்கிறது என்பதற்குச் சந்தேகம் இல்லை. சிக்கறுத்து தடை எதிர்த்துச் செல்லுவது எதுவோ அதே வல்லமை உள்ளதென்று தெளிவாகிறது. விசேஷமாய் விருத்தாப்பிய காலப் பயணத்தில், யாதொரு தொந்தரவு அற்றுச் செய்யும் பயணத்தில், எவ்வண்ணம் கால் எடுத்து நடக்கிறானோ, அவ்வண்ணமே சிக்குமிக்குள்ள பாலிய காலத்தில் இவன் பயணத்தைக் கடக்கிறபடியால் அவ்வாலிபனுக்குள் இருக்கும் கிருபையே அதிகப் பிரகாசமாய் இருக்கிறதென்று சொல்லவேண்டியது.[1]



இந்த விஷயத்தில் விருத்தாப்பியர் தங்களை தப்பிதமாய்ப் பெருமைப்படுத்திக்கொள்ளுகிறதை நான் கவனித்திருக்கிறேன். சரீரத்தின் சத்துவங்கள் எல்லாம் அடங்கிப்போன காலத்தில் மோட்ச பிரயாணிகளாகிக்கொண்டு கிருபையினாலே மாம்ச இச்சைகளை ஜெயித்துவிட்டோம் என்று சொல்லித் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்ளுகிறார்கள். தேவ கிருபைகளைப் பெற்ற விருத்தாப்பியர் தங்கள் உள்ளத்தில் எவ்வளவு கிருபையிருந்த நிலைமையை அநுபோகத்தால் அறிந்திருக்கிறதால் அக்கிருபையின் கிரியைகளைப்பற்றி வாலிபருக்கு உணர்த்திக் காட்டத் தகுதியுடையவர்களாய் இருக்கிறார்கள் என்பது மெய்தான். என்றாலும் ஒரு வாலிபனும் விருத்தனும் ஏககாலத்தில் பயணப்பட்டார்களானால் அந்த விருத்தனின் மாம்ச சத்துருக்கள் பலவீனப்பட்டிருப்பதால் அவன் கிருபையின் கிரியைகளைக் கண்டறிவது மோசமாகும். இந்த வாலிபனும் அவன் அவ்வளவு அந்தக் கிருபையைத் தனக்குள் அறிந்துகொள்ள ஏதுவுள்ளவனாய் இருக்கிறான் என்றார். இப்படி இவர்கள் அன்று விடியுமட்டும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

கிழ பக்தரின் தப்பான எண்ணம்.

அதிகாலையில் பிள்ளைகள் எல்லாரும் எழுந்தபின்பு கிறிஸ்தீனாள் தன் மகன் யாக்கோபைக் கூப்பிட்டு: வேதத்தில் ஒரு அதிகாரம் வாசியப்பா என்றாள். அவன் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் ஐம்பத்துமூன்றாம் அதிகாரத்தை வாசித்தான். வாசித்த பின்பு யதார்த்தன் என்னப்பட்ட பெரியவர் நமது இரட்சகர் வறண்ட நிலத்தில் இருந்து துளிர்க்கிற வேரைப்போல் எழும்புவார் என்றும் அவருக்கு அழகும் சௌந்தரியமும் இல்லை என்றும் சொல்லப்படுவானேன்? என்று கேட்டார்.

வேதவாசிப்பு.

தைரி. அதற்கு தைரியநெஞ்சன் சொல்லுகிறார்: கிறிஸ்து தோன்றின யூதசபையானது அக்காலத்தில் மெய்மார்க்கத்தின் உயிரும் சாரமுமற்று இருந்ததினால் அவர் வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேர்போல் இருப்பார் என்று சொல்

[1] மனிதன் வளரவளர பாவமும் அதிகம் அதிகமாய்ப் பெலன் கொள்ளுகிறது. என்றாலும் தேகம் பெலவீனப்படும்போது அநேக பாவங்களைச் செய்யவேண்டும் என்கிற ஆசையும் குறைந்துபோகிறது. வாலிபத்தில் ஆசாபாசங்களும் விருப்பங்களும் பெலத்ததாய் இருக்கும்போது அவைகளை அடக்கிக்கொள்வது தேவனுடைய கிருபைதான் என்று வெளிப்படையாய்க் காணப்படுகிறது.

லப்பட்டது. அவனைப்பற்றிய இரண்டாம் குறிப்பு அவிசுவாசிகளுடைய எண்ணத்தைக் குறிப்பிக்கிறதென்று சொல்லுவேன். இரத்தினப் பரீட்சை அறியாதவர்கள் முதல்தரமான சில கற்கள் வெளிக்கு உதவாத சாலிக்கல்லுகள்போல் காணப்படுகிறதைமாத்திரம் பார்த்து தூர எறிந்துவிடுவார்களே. அதுபோல இந்த அவிசுவாசிகள் நமது இரட்சண்யப் பிரபுவின் உள் காரியங்களை உற்று ஆராயத்தக்க கண் அற்றவர்கள் ஆனதால் அவருடைய வெளிக்காரியங்களைமாத்திரம் கவனித்து அசட்டைபண்ணிப்போகிறார்கள் என்றார்.

நலங்கொல்லி இராட்சதன்.

அதன்பின்பு அந்த மடாதிபதி: நீங்கள் எல்லாரும் இவ்விடத்தில் வந்திருக்கிறீர்களே, அது அன்றி தைரியநெஞ்சன் என்பவர் வில் வீரபராக்கிரமர் என்று நானும் அறிவேனே; ஆகையால் நாம் சாப்பிட்டானபின் வயல்வெளிகளில் போய் சற்று உலாவி ஏதாவது நன்மை செய்யலாமா என்று பார்ப்போம்.[1] சுமார் ஒரு மைலுக்கு அப்பாலே நலங்கொல்லி என்று பேர்வழங்கிய ஒரு அரக்கன் வசிக்கிறான். அவனால் ராஜபாதையின் வழி போகும் பிரயாணிகளுக்கு உண்டாகிற தொல்லை கொஞ்சம் அல்ல. அவனுடைய போக்குவரத்துப் பாதையை எல்லாம் நான் அறிவேன். திருடர் கூட்டம் ஒன்றுக்கு இவனே தலைவன்; இந்தத் திசைகளிலிருந்து அவனை அடியோடு அகற்றிவிட்டால் அதைப்போலொத்த சகாயம் வேறொன்று இல்லை என்றார். அச்செய்தி கேட்டவுடனே அவர்கள் எல்லாரும் எழுந்து புறப்பட்டார்கள். தைரியநெஞ்சன் பட்டயம் தலைச்சீரா கேடயம் இவைகளோடு புறப்பட்டார். மற்றவர்களோ ஈட்டிகளோடும் தடிகளோடும் எழுந்துபோனார்கள்.

நலங்கொல்லியும் ஏழைத்தனமும்.

அவனுடைய குகைக்குமுன் போகவே, தன் கையினிடம் இருந்த சேவகரால் வழியில் கொள்ளையாடிப் பிடிக்கப்பட்ட ஏழைத்தனம் என்பவனை அவன் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கக் கண்டார்கள். அந்த நலங்கொல்லி அவனை மாம்

1 நமது பிரயாணத்தில் நமக்குக் கிடைக்கும் ஞானியம் இளைப்பாறுதலும் நாம் நன்மைசெய்து பிரயோசனம் உள்ளவர்களாய் இருக்கத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகலால் நமக்கு ஒத்தாசையும் ஆறுதலும் கிடைக்கும் ஒவ்வொரு சமயத்திலும் பரோபகார நாயு சொன்னதுபோல் "நான் ஏதாவது நன்மைசெய்யலாமா" என்று சொல்லி வெளிப்புறப்பட்டுப் பார்க்கவேண்டும்.



சத்தைத் தின்னவேண்டும் என்று கருதி அவன் உடலை முறித்து சதையை உரிக்கும்படி ஆயத்தப்பட்டுக்கொண்டிருந்தான். ஏனெனில் அவன் நரமாம்ச பக்ஷணம் செய்வது வழக்கமாய் இருந்தது.[1]

தைரியநெஞ்சனும் அவர் பட்சத்தாரும் ஆயுதபாணிகளாய்த் தன் கெபியின் வாயில் வந்து நிற்கிறதை அவன் கண்டு; நீங்கள் இங்கே வந்தகாரியம் என்ன? என்று உதம்பிக் கேட்டான்.

தைரி. நீதான் எங்களுக்கு வேண்டியதாய் இருக்கிறது. ராஜபாதைவழி போன பல பிரயாணிகளின் பொருளை நீ கொள்ளை அடித்து அவர்கள் உயிரை நாசமாக்கினதைவிட்டு உன்னைப் பழிவாங்கும்படி நாங்கள் வந்திருக்கிறோம்; ஆதலால் கெபியிலிருந்து எழுந்துவா என்றார். நல்லது ஆகட்டும் என்று அரக்கன் தன் ஆயுதங்களோடு கெபியிலிருந்து வெளியேறி அட்டகாசம்பண்ணி இருவரும் சுமார் ஒரு மணிநேரம் அளவும் கடும்போர் புரிந்து அப்புறம் இளைப்பாறிக்கொள்ளும்படி சற்று நேரம் சும்மா நின்றார்கள்.

நலங். அப்புறம் அரக்கன் சொல்லுகிறான்: நம்முடைய பூமியில் நீ அச்சம் இன்றி நிற்கிற காரணம் ஏது?

தைரியநெஞ்சனும் அரக்கனும் போர்புரிதல்.

தைரி. நான் முன்னே சொன்னபடி பரதேசபிரயாணிகளின் இரத்தத்துக்காகப் பழிவாங்கவே இங்கு வந்தேன் என்று சொல்லிக்கொண்டே மறுபடியும் அந்த அரக்கனை எதிர்த்துச் சண்டைசெய்தார். உடனே அரக்கன் உதைத்த உதையால் தைரியநெஞ்சன் அப்பால் எட்டிவிழுந்தார். மறுபடியும் அவர் எழுந்திருந்து அட்டகாசம்பண்ணிப் பாய்ந்து அரக்கனுடைய தலையிலும் ஏறத்திலும் விலாவிலும் படுகாயப்பட வெட்டினார். அதினால் அவன் அப்புறம் தன் ஆயுதங்களைப் பிரயோகிக்க கை விளங்காமல் அபஜெயப்பட்டு விழுந்தான்.

நலங்கொல்லி அபஜெயமானது.

தைரியநெஞ்சன் மறுபடியும் அவனை வாள் வீசி வெட்டிக் கொன்று அவன் தலையையும் வெட்டித் தமது கையிலே தூக்கிக்கொண்டு எல்லாரும் ஏகமாய்க் களிகூர்ந்து, ஜெயம், ஜெ

1 நலங்கொல்லி என்பதில் பன்னியன் என்பவருடைய கருத்து என்ன என்று தெளிவாய்த் தோன்றவில்லை. ஆத்துமாவுக்கு சேதம் செய்கையான மோசத்தையும் காண்பிக்கிறதென்று சொல்லலாம்.

யம் என்று சொல்லிக்கொண்டுவந்தார்கள். அதுவும் அன்றி ஏழைத்தனம் என்ற சிறையையும் விடுவித்தனவனை தங்களோடு கூட்டிக்கொண்டு சத்திரம் வந்து சேர்ந்தார்கள். அப்பால் அவர்கள் அரக்கனுடைய தலையை அவ்விடத்தார் எல்லாருக்கும் காட்டி மோட்ச பிரயாணிகளை மோசம்பண்ணுகிறவர்களுக்கு எச்சரிப்பாகும்படி மற்றச் சத்துருக்கள் தலையைப் போல் இவன் தலையையும் ஒரு கழுவில் ஏற்றிவைத்தார்கள்.

அதன்பின் அவர்கள் ஏழைத்தனத்தை நோக்கி: நீ இவ்வரக்கன் கையில் அகப்பட்ட விதம் என்ன என்று விவரமாய்ச் சொல்லு என்று கேட்டார்கள்.

ஏழைத்தனம் தன் சரித்திரமச் சொல்லுதல்.

ஏழை. அதற்கு அந்த ஏழை மனுஷன் சொல்லுகிறான்; ஐயாமாரே! நீங்கள் பார்க்கிறபிரகாரம் நான் ஒரு நோயாளி. மரணமானது என் மனதின் வாசலை அடிக்கடி வந்து தட்டினதால் நான் இந்த வீட்டில் சுகமாய்க் காலம் கழிப்பது அசாத்தியம் என்று கண்டு, மோட்ச பிரயாணம் செய்யும்படி தீர்மானித்து, என் பிறந்தகமும் என் பிதாவின் பூர்வ காணியாட்சியுமாகிய நிச்சயபுரியில் இருந்து புறப்பட்டேன். நான் சரீரபலமும் மனோபலமுமற்ற ஒரு நிர்ப்பந்தனாய் இருந்தாலும் கூடுமானால் ஊர்ந்தாவது உக்கிரபட்டண பயணத்தில் என் ஜீவியத்தைப் போக்க ஆசைப்பட்டேன். நான் ராஜபாதையின் ஆரம்பத்தில் இருக்கிற திட்டவாசலில் சேர்ந்தபோது அவ்வாசன் மனையின் அதிபதி என்னைத் தடை இன்றிச் சேர்த்துக்கொண்டார்; என் சரீர பலவீனத்தைப் பார்த்தாவது என் மனோபலத்தைப் பார்த்தாவது அவர் என்னை அசட்டைசெய்து தள்ளிப்போடவில்லை. அவர் என் பயணத்துக்கு அநுகூலமானவைகளை எல்லாம் வலியத் தந்து நீ முடிவுபரியந்தம் போய்ச் சேர விரும்புகிறேன் என்று வாழ்த்தியும் அனுப்பினார். நான் வியாக்கியானியினுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது அங்கே எனக்கு நடந்த உபசாரங்கள் மெத்த உண்டு. கஷ்டகிரி மலை ஏற என்னால் மாளாது என்று அவர் கண்டு தமது வழியக்காரன் ஒருவனை அனுப்பி என்னைத் தூக்கிச் சுமக்கத் திட்டஞ்செய்தார். வழியில் குறுக்கிட்ட மோட்ச பிரயாணிகளால் எனக்கு மிகுந்த சகாயம் நடந்தாலும் அவர்களில் எவர்களாவது என் பலவீனத்துக்கு ஏற்றபடி அடி தணையாய் என்னைக் கூட்டிக்கொண்டுபோக சந்தர்ப்பப்படவில்லை. என்றாலும் என்னை வழியில் பார்க்கும் பிரயாணிகள் எல்லாரும் திடமனதாய் இரு அப்பா! திடனற்றவர்களைத் தேற்றுவது தேவனுடைய



சித்தமாய் இருக்கிறது* என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நான் போர்க்களத்தில் வருகிற சமயத்தில் இந்த அரக்கன் என்னைக் கண்டு, என்னோடு சண்டைபோட வா என்று கூப்பிட்டான்; ஆனால் ஐயோ என்னைப்போல பலவீனனால் என்ன ஆகும்? பிசைக்குப் பண்ணுவதிலும் இணங்கிப் போவதே என்னால் ஆகக்கூடியதாய் இருந்ததால் அவ்வரக்கனுடைய சிறை ஆனேன். அவன் நம்மைக் கொல்லமாட்டான் என்று நான் எண்ணி இருந்தேன். மேலும் நானே அல்ல, அவனே என்னைத் தன் குகைக்குள் கூட்டிக்கொண்டுபோனதால் உயிரோடு திரும்பி வந்துவிடுவேன் என்றே நினைத்திருந்தேன். ஏனெனில் எந்தப் பரதேசி ஒரு அரக்கனால் சிறையாக்கப்படுவானோ அப்பரதேசி அரசனுக்கு அடங்கி ராஜாபிமானம் உள்ளவனாய் விளங்கினால் அவன் கிட்டைக்கு உட்படமாட்டானென்ற தெய்வீக நியாயப்பிரமாணத்தை நான் கேள்விப்பட்டிருந்தேன். கைமுதலைப் பறிகொடுத்தவன்போலும் முதலைப் பறிகொடுத்தவனும் நான் காணப்பட்டாலும் இப்பொழுது நீங்கள் பார்க்கிறபிரகாரம் தப்பிக் கரையேறி இதோ உங்கள்முன் நிற்கிறேன். இந்த இரட்சிப்புக்கு ஆதிகாரணராகிய என் ராஜாவையும் துணைக்காரணமாய் இருந்த உங்களையும் ஸ்தோத்திரிக்கிறேன். இன்னும் பல நெருக்கங்கள் என்னைப் பின்தொடரும் என்று எதிர்பார்க்கிறேன்; ஆனாலும் இப்பொழுது நான் பெரிய விசேஷமான ஒரு தீர்மானம் பண்ணி இருக்கிறேன். அதாவது, என் பிரயாணத்தில் ஓடக்கூடியபோதெல்லாம் ஓடவும், ஓடக்கூடாதபோதெல்லாம் நடக்கவும், நடக்கக்கூடாதபோதெல்லாம் தவழவுமே தீர்மானம் செய்திருக்கிறேன். எல்லாவற்றுக்கும் மேலாக என் ஆத்துமநேசரை அத்தியந்த [illegible]ன் துதித்தியம் செய்கிறேன். என் தீர்மானம் தீர்மானமே. நீங்கள் எல்லாரும் பார்க்கிறபிரகாரம் நான் தள்ளாடின மனம் உடையவனாய் இருந்தாலும் என் வழி என் முகத்துக்கு முன்பாகவும் என் மனம் பாலமில்லா ஆற்றுக்கு அப்பாலுமே இருக்கிறது என்றான்.

அச்சநெஞ்சனைப்பற்றிய சம்பாஷணை.

யதா. சிலகாலத்துக்குமுன் மோட்ச பிரயாணத்தில் இருந்த அச்சநெஞ்சனோடே உனக்கு அறிமுகம் இல்லையா?

ஏழை. அறிமுகம் உண்டே; ஆம் ஆம் அவர் நாசபுரிக்கு நாலு காதத்துக்கு வடக்கே இருக்கிற மூடத்தனம் என்னும்

* 1 தெச. 5. 14.

ஊரில் உள்ளவர்தான். எங்கள் ஊருக்கும் அதற்கும் அவ்வள வே தூரம். அவர் என்னுடைய சிறிய தகப்பனார்தான். என் தகப்பனாருடைய சகோதரன்தான். எங்கள் இருவருடைய குணச்சாயல் ஒன்றுபோலவே இருக்கும்; அவர் என்னைவிட சற்று குள்ளமாய் இருப்பார், ஆனால் முகச்சாயலில் ஒன்று போலவே இருப்போம்.

மதா. நீர் அவரை அறிவீர்போலவே இருக்கிறது. அவர் உம்முடைய பந்துவாகத்தான் இருக்கவேண்டியது. ஏனெனில் உம்முடைய வெளிறின முகஜாடையும் கண்ஜாடையும் சத் தச்சுரமும் அவரைப் பார்த்தாற்போலவே இருக்கிறது.

ஏழை. எங்களைக் கண்டவர்கள் எல்லாரும் அப்படியே சொல்லுகிறார்கள். நான் அவரிடத்தில் கண்ட குணங் கள் எவைகளோ அவைகள் எல்லாம் என்னிடத்திலும் இருக் கிறதென்று கண்டுகொண்டேன்.

பரோ. வாரும் ஐயா வாரும், திடமனதாய் இரும், என் வீட்டுக்குள் நீர் வரத் தடை இல்லை; உமக்கு என்ன தேவையோ அதை மனங் கூசாமல் கேட்கலாம்; என் வேலைக்காரரைக்கொ ண்டு உமக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டியதிருந்தால் அவர் களைத் தடை இன்றிக் கூப்பிட்டு வேலைகொள்ளலாம் என்றும் பரோபகார காயு சொன்னார்.

ஏழை. அதற்கு ஏழைத்தனம்: இது நான் எதிர்பாராத சகா யம்; இந்த வார்த்தைகள் கார்மேகத்துக்குள் இருந்து சூரிய கதிர்கள் பாய்ந்தாற்போல் இருக்கிறது. நலங்கொல்லி என் னைத் தன் குகைக்குள்ளே கொண்டுபோனபோது இவ் வளவு சௌக்கியம் எனக்குத் தரும்படி நினைத்திருந்தானோ? அவன் என் மடியில் கைபோட்டபோது நான் பரோபகாரர் வீட் டுக்கு விருந்தாடிப் போகவேண்டும் என்று அவன் எண் ணி இருந்தானோ? இப்படி எல்லாம் அவன் நினையாதிருந்தாலும் இந்தச் சகாயம் எனக்குக் கிடைத்தது என்றான்.

சரியில்லானுடைய முடிவு.

இவ்வண்ணம் ஏழைத்தனமும் பரோபகார காயுவும் ஒரு வருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கிற போது ஒரு மனுஷன் ஓடிவந்து; யார் இங்கே? யார் இங்கே என்று கதறி, ஐயா சுமார் ஒரு நாழிகைவழி தூரத்தில் சரியில்லான் இடி விழுந்து செத்துக்கிடக்கிறான் என்றான்.

ஏழை. அதைக் கேட்ட ஏழைத்தனம்; ஐயோ! அவன் செத் தா போனான்? அவன் எனக்கு முந்தி முந்தி ஓடி இதுவரையும் வந்தானே! இருவரும் கூடி நடந்துபோகலாம் என்று அல்லோ



நான் எண்ணி இருந்தேன். நலங்கொல்லி என்னை வந்து பிடிக் கையில் அவனும் என்னுடன் கூடவே இருந்தான்; ஆனால் அவனைக் கண்டவுடனே இவன் ஓரே ஓட்டமாய் ஓடித்தப்பிக் கொண்டான்; அவன் சாகத்தான் ஓடினான் ஆக்கும்! நான் பிழை க்கத்தான் பிடிபட்டேன் ஆக்கும்! என்று மெத்த அதிசயப் பட்டு;

ஒப்பாரி.

என் உயிரைக் கொன்றுவிடும் மோசம் இதுதான் அப்பா,
என்று கலங்கினவைக்கும் மோசமே மீட்கும் அப்பா!
நாசமுகங்காட்டிவரும் நாதன் திருச்செயலே
நாசம் விளைவிக்க ஏக ஜீவன் அளித்திடுமே.

பிடித்தான் அரக்கன் என்னை (சப்பி) பிழைத்தான் அவன்தானும்
பிழைத்தான் நான்தானும், செத்தான் சரியில்லானும்
நாதன் திருக்கரங்கள் ஏவலசெய்ய மாறியின்று
ஏழை என்னைத் தப்புவித்து என்றனையாய் பட்சித்தது

என்று புலம்பிக்கொண்டான்.

யாக்கோபுக்கும் பேபேயா ளுக்கும் விவாகம் நடந்தது.

இக்காலத்தில் மத்தேயுவுக்கும் தயாளிக்கும் விவாகம் நிறை வேறிற்று. பரோபகார காயு தமது சே ஷ்ட புத்திரியாகிய பேபேயாளை மத் தேயுவின் சகோதரனாகிய யாக்கோபுக் குக் கலியாணம் செய்துகொடுத்தார். பின்னும் அவர்கள் எல் லாரும் பத்துநாளுக்கு அதிகமாய் அந்த காயு வீட்டிலேயே தங்கியிருந்து தங்கள் காலத்தைப் பிரயாணிகளைப்போலக் கழி த்துவந்தார்கள்.

அவர்கள் அவ்விடத்தைவிட்டுப் புறப்படுகிற நாளில் பரோ பகாரர் ஒரு பெரிய விருந்து வைத்து அவர்கள் எல்லாரும் மனத் [illegible] புசித்துக் குடிக்கும்படி செய்தார். அவர்கள் பய[illegible]படுகிற நேரத்தில் நெரியவெரிஞ்சன், ஐயா! சத்தி [illegible] ங்களுக்குச் செய்த செலவின் கணக்கைச் சொ [illegible] தொகையைச் சட்டிவிட ஆயத்தமாய் இருக்கி [illegible] என்றார். அது கேட்ட மடாதிபதி; இச்சத்திரத்தில் தங்கும் பிரயாணிகளிடத்தில் நான் செய்த செலவை வாங் குகிற வழக்கம் இல்லை. வரும் பிரயாணிகளுக்கெல்லாம் வரு ஷம்முழுவதும் செய்த செலவு எவ்வளவோ அவ்வளவையும் வருஷத்துக்கு ஒருமுறை ஒரு நல்ல சமாரியன் திரும்ப வரும் போது கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்; அவரிடத்தில் நான் வாங்கிக்கொள்ளுவேன் என்றார்.[a]

a லூக். 10. 34, 35.

தைரி. அதற்கு தைரியநெஞ்சன், காயுவே! நீர் சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறீர்; அவர்கள் உம்முடைய அன்பைக்குறித்து சபைக்கு முன்பாகச் சாட்சி சொன்னார்கள். தேவனுக்கு முன்பாகப் பாத்திரமானபடி நீர் அவர்களை வழிவிட்டனுப்பினால் நலமாய் இருக்கும்[அ] என்றார். அப்புறம் காயு அவர்கள் எல்லாரிடமும் வழி அனுப்பிக்கொண்டு விசேஷமாய் ஊழைத்தனத்துக்கு மெத்தவும் பிரியமாய் அவருடைய பலவீனம் நீக்கும்படியான ஒரு பானமும் கொடுத்தார்.

## பிரயாணிகள் பரோபகார காயு மடம் விட்டது.

பிரயாணிகள் பரோபகார காயு மடத்தில் இருந்து புறப்பட்டது.

இவர்கள் புறப்படுகிற சமயத்தில் ஊழைத்தனம் என்பவர் நடப்போமோ, நிற்போமோ என்று மனத்தாக்கல் உடையவராய் இருக்கிறதாகத் தோன்றிற்று. அதை தைரியநெஞ்சன் கூர்ந்து அறிந்துகொண்டு, என்ன ஊழைத்தனம் வாரும், நடவும், எங்கள் கூடவே வரும்படி உம்மை வேண்டுகிறோம். நான் உம்மை மற்றவர்களோடு கைத்தாங்கலாய் நடத்திக்கொண்டு போவேன் என்று வருந்தினார்.

ஊழைத்தனம் பின்தாக்குதல்.

ஊழை. ஐயோ, எனக்கு இசைந்த ஒரு பிரயாணி அகப்பட்டால் நலமாய் இருக்கும். நீங்கள் எல்லாரும் திடத்த[illegible]ராய் இருக்கிறீர்கள்; நானோ நீங்கள் காண்கிறபடி தளர்ந்தவனாய் இருக்கிறேன், ஆகையால் நான் பின்னாலேயே வருகிறேன், உங்களோடேகூட நான் வந்தால் அது எனக்கும் வருத்தந்தான்; உங்களுக்கு வச்சைதான். "நான் ஒரு விழுதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்: நான் பலவீனமும் தளர்ந்த மனமும் உடையவன், உங்களோடேகூடப் பிறர் வருத்தப்படியாக விட்டு நடக்கும் அதிக பலவீனப்பட்டவனாய் இருக்கிறேன். உங்களுக்கும் எனக்கும் மனத்தாபம் சேர்ந்திடும். எனக்கு கலகப்பு ஆகாது; நல் உடை ஆகாது; பவனிப்பான பேச்சு ஆகாது. மற்றவர்கள் தங்கள் மனதின்படி ஆரவாரிக்கக்கூடிய

அ 3 யோ. 6. வச.



சந்தோஷம் ஒன்றும் எனக்குப் பிடியாது.[1] எனக்கோ சத்தியத்தின் சருவ அறிவும் இல்லை. நானோ ஒரு அறிவற்ற கிறிஸ்தவன். கர்த்தருக்குள் சந்தோஷப்படுதலில் காணும் ஒருபங்கு எடுத்துக்கொள்ளத் திராணி அற்றவனாய் இருக்கிறதால் அந்தச் சந்தோஷங்கொண்டாடுகிறவர்கள் என் மனதுக்கு சஞ்சலத்தைக் கொடுக்கிறது. வீரதீர பராக்கிரமனோடு விசக்கிட்ட வல்லமையற்ற ஒரு பெலவீனன் இருந்தால் எப்படியோ, அல்லது பூரணசுகம் உடையவர்களோடு பாயும் படுக்கையுமான ஒரு நோயாளி இருந்தால் எப்படியோ, அல்லது சுடர்விட்டு எரியும் தீவர்த்திகளோடு மங்கி எரிகிற திரி இருந்தால் எப்படியோ, அப்படியே என் காரியமும் இருக்கிறது. ஆதலால் என்ன செய்வோம் என்று எனக்கே தெரியவில்லை. "ஆபத்துக்குள்ளானவன் சுகமாய் இருக்கிறவனுடைய நினைவில் இகழ்ச்சி அடைகிறான்" என்றான்.[2]

தைரியநெஞ்சன் அவரை அழைத்தல்.

தைரி. அதற்கு தைரியநெஞ்சன்; சகோதரனே! உமது பலவீனத்தைவிட்டு நீர் கலங்கப்படவேண்டாம். மனத்திடன் அற்றவர்களைத் தேற்றவும் பலவீனரைத் தாங்கவும் நான் கட்டளைபெற்றிருக்கிறேன். நீர் எங்களோடேகூட வரவே வேண்டியது. உமக்கு நாங்கள் காத்திருந்து செய்யவேண்டிய உதவியை எல்லாம் செய்து, உமக்கு இடையூறாய் இருக்கிற [illegible] உமக்காகத் தவிர்த்து, எங்கள் அபிப்பிராயங்களையும் அநேக நினைவுகளையும் தவிர்த்துவிடுவோம். உமக்கு முன்பாக சந்தேக சங்கதிகளைப்பற்றிச் சம்பாஷிக்கவும் மாட்டோம். உம்மை நாங்கள் பின்னாலே விட்டுப் போவதைப் பார்க்கிலும் நாங்கள் எல்லாவற்றிலும் உம்மைப்போல் ஆகிவிடுவோம்; எங்கள் கூடவேயாக நீரும் வாரும் என்று வருந்தினார்.[3]

1 பெலவீனர் [illegible] மற்றவர்களைவிட அதிகமாய் தங்கள் நடக்கைகளைக் குறித்து அதிக எச்சரிக்கை உள்ளவர்களாய் இருக்கிறார்கள். மற்றவர்கள் அநேகம் செய்துவிட்டால் அதைப் பார்த்து அவர்கள் கலங்குகிறார்கள். மற்றவர்கள் நடப்பிக்கும் தப்பிதமற்ற அநேக காரியங்கள் இவர்கள் பார்வையில் தப்பிதம் போலக் காணப்படும். அவர்கள் பெலவீனராய் இருந்தாலும் மிகவும் எச்சரிக்கையும் கரிசனையும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

2 யோபு, 12. 5.

3 1 தெச 5. 14. ரோ. 14. 1. 1 கொரி. 8. 9–13; 9. 22.

இவ்வளவு சம்பாஷணையும் அந்த மடத்தின் படிக்கட்டு அண்டையே நடந்தது. இப்படி இவர்கள் ஒருவருக்கொருவர் தர்க்கம்பண்ணிக் கொண்டிருக்கிற சமயத்தில் நொண்டி என்னும் ஒரு மனுஷன் தடியும் கையுமாய் வந்துசேர்ந்தான், இவனும் மோட்ச பிரயாணம் போகிறவன்தான்.

நொண்டி வந்து சேர்ந்தது.

அவனைக் கண்டவுடனே ஏழைத்தனம் சொல்லுகிறான்; நீர் இங்கே எப்படி வந்துவிட்டீர்? எனக்கு ஏற்ற துணை இல்லை என்றல்லவோ நான் இப்போது முறையிட்டுக்கொண்டிருக்கிறேன்; என் பயணத்துக்கு ஏற்ற துணையாய் நீர் வந்து சேர்ந்தீரா? வாரும், வாரும்! நொண்டியே வாரும், நாம் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாய் இருக்கலாம்.

நொண்டி. உம்மோடு கூடப்போவது எனக்கு மெத்தச் சந்தோஷந்தான். நாம் இருவரும் தோழரையாய்ச் சந்தித்ததே பெரிய காரியம்; நாம் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் ஒன்றாய்ப் போவோம்; என் தடியில் ஒன்றையும் உமக்குத் தருகிறேன்.

ஏழை. நீர் தடி தந்து உதவுவேன் என்று சொன்னதற்காக உமக்கு வந்தனம். என் கால் ஒழுங்கு, நான் முடவனாய்ப் போகுமட்டுமிருக்க எனக்குப் பிரியம் இல்லை; ஆனாலும் உமது தடி அகப்பட்டால் நல்லதுதான்; வழியில் நாய்வந்தாலாவது துரத்த ஆகுமே.

ஏழைத்தனமும் நொண்டியும்.

நொண்டி. என்னாலாவது என் தடியாலாவது உமக்கு யாதொரு சகாயம் வேண்டியதிருக்குமானால் அதற்கு யாதொரு தடையும் இராது. அன்புள்ள ஏழைத்தனமே! உமது மனம்போல் ஆகட்டும் என்றார்.

அப்படியே அவர்கள் எல்லாரும் புறப்பட்டுப் போனார்கள். ஸ்தைரியநெஞ்சனும், யதார்த்தனும் முன்பாய், கிறிஸ்தீனாளும் அவள் கூட்டமும் நடுவிலும், ஏழைத்தனமும், நொண்டியும் பிற்புறமாக நடந்துபோனார்கள்.

யதா. இப்போது யதார்த்தன் சொல்லுகிறார்; ஐயா ஸ்தைரியநெஞ்சனே! நாம் வழிநடக்கும்போதே முன் பிரயாணம் போன எந்தப் பிரயாணியைப்பற்றிய சங்கதியாவது சொல்லும்.



## பூர்வபிரயாணிகளைப்பற்றிய சம்பாஷணை.

ஸ்தைரி. மெத்தச் சந்தோஷத்தோடு சொல்லுவேன்; கிறிஸ்தியான் என்ற ஒரு பிரயாணி தாழ்மையின் பள்ளத்தாக்கில் அப்பொல்லியோன் என்னும் ஒரு அழிம்பனோடு போர்புரிந்ததும் மரணநிழலின் பள்ளத்தாக்கில் அவன் அவஸ்தைகளைப் பட்டதும் எல்லாம் கேள்விப்பட்டு இருப்பீர் என்று நினைக்கிறேன். அதோடு மோகினி, பழைய ஆதாம், நிராசையம், வெட்கம் என்ற நாலு போக்கிரிகள் கையில் உண்மை அகப்பட்டு, பட்டபாடுகள் இவை என்று கேள்விப்படாமல் இருக்கமாட்டீர்.

பூர்வபிரயாணிகளைப்பற்றிய சம்பாஷணை.

யதா. அது எல்லாம் கேள்விப்பட்டேன் ஐயா! ஆனால் வெட்கம் என்பவனிடத்தில் உண்மை மெத்த கஷ்டப்பட்டிருக்கிறார். அப்படி மனம் தளராமல் எதிர்க்க அவர்தான் வேண்டும்.

உண்மை.

ஸ்தைரி. ஆம் ஆம், அது மெய். அந்தப் பிரயாணி சொன்னது போல் அவன் ஒருவன்மாத்திரம் தனக்குத் தகாத பேரை வைத்துக்கொண்டிருக்கிறான்.

யதா. ஐயா! கிறிஸ்தியானும் உண்மையும் வாயாடியைச் சந்தித்தார்களே, அது எந்த இடத்தில்? அவனும் மெத்தப் பேரெடுத்த பக்காளி தானே.

ஸ்தைரி. அவன் தேறின மூடன்தான்; என்றாலும் அவன் புத்தியின் படிபோகிற பலர் இருக்கிறார்கள்.

யதா. அவன் உண்மையை மோசம்போக்கப் பார்த்தான் அல்லவா?

ஸ்தைரி. ஆம், ஆனால் கிறிஸ்தியான் அவனை விட்டானே? அவன் வாயை ஒரு நிமிஷத்துக்குள் அடைத்து அவனை இன்னான் என்று வெளிப்படுத்திவிட்டான் அல்லவா? என்று இப்படிப் பல பேச்சையும் பேசிக்கொண்டு, சுவிசேஷகன் கிறிஸ்தியானையும் உண்மையையும் கண்டு சந்தித்து, மாயாபுரிச் சந்தையில் உண்டாகும் உபத்திரவங்களைக் குறித்து முன் அறிவித்த இடமட்டும் வந்து சேர்ந்தார்கள். அந்த இடத்துக்கு வந்தவுடனே அவர்கள் வழிகாட்டி: இந்த இடத்

தில்தான் கிறிஸ்தியானையும் உண்மையையும் சுவிசேஷகர் சந்தித்து மாயாபுரியில் உண்டாகும் மாறுபாடுகள் இவை என்று தீர்க்கதரிசனம் உரைத்து புத்தி சொன்னார் என்றார்.

யதா. அது கேட்ட யதார்த்தன்: அப்படியா? இந்த இடத்தில்தானோ? அவர் சொன்ன தீர்க்கதரிசனங்கள் அவர்கள் மனதுக்கு வெகு சஞ்சலத்தை உண்டாக்கி இருக்குமே![1]

தைரி. சஞ்சலமாய்த்தான் இருந்தது; ஆனால் அவர் இவைகள் எல்லாவற்றோடும் தைரியமும் கொடுத்தார். அவர்களைப் பற்றி எங்கள் பேச்சு என்ன, தெரியுமா? அவர்கள் சிங்க ராஜ மனுஷர்; உலகிற்கு அஞ்சாமல் எதிர்த்து நிற்கும் இத்திடக் கல்லுகள் என்றே சொல்லுகிறோம். நன்மை வெறுப்போன் என்னும் மாயாபுரி நியாயாதிபதிமுன் அவர்கள் இருவரும் எவ்வளவு அஞ்சாநெஞ்சு உடையவர்களாய் இருந்தார்கள் என்று நீர் அறியமாட்டீரோ?

யதா. ஆம் ஆம், எல்லாம் அறிவேன்; உண்மை எவ்வளவு தைரியமாய்த்தான் பாடுகளை அநுபவித்தார்!

நம்பிக்கை.

தைரி. மெய், வெகு தைரியம் காட்டினார். அவர் காட்டிய தைரியம் பெரும்பலனை வருவித்தது. எப்படி எனில், அவரைப்பற்றிய சரித்திரத்தின்படி நம்பிக்கையும் இன்னும் பலரும் அவருடைய மரணத்தால் மனந்திரும்பினார்கள்.

யதா. ஐயா! உமக்குப் பிரயாணிகளின் சங்கதிகள் நன்கு விபரமாய்த் தெரிந்திருப்போல் தோன்றுகிறது; ஆதலால் தயவு செய்து இன்னும் ஏதாவது செய்திகளைச் சொல்லும்.

உபாயி.

தைரி. கிறிஸ்தியான் மாயாபுரியைவிட்டுப் புறப்பட்ட பின்பு அவனுக்கு எதிர்ப்பட்ட சத்துருக்கள் எல்லாரிலும் உபாயி என்னும் ஒருவனே விசேஷித்த சத்துரு என்று சொல்லலாம்.

யதா. உபாயி; அவன் யார் ஐயா?

[1] நன்மையும் மோசமும் முன்னறிந்து தெரிந்திருந்தால் எப்போதும் மனதுக்குச் சஞ்சலம் உண்டாகும். இயேசுகிறிஸ்து முதலானோர் தாம் இறுதியில் அடையப்போகும் பாடுகளை நினைத்தபோது அழுதுவிட்டார். ஆனால் இந்த மாதிரியாகச் சோதிக்கப்பட்டவர்களுக்கும் எல்லாரையும் தேவன் தாங்கிப் பெலப்படுத்துகிறார்.



தைரி. அவன் ஒரு பரம சண்டாளத் துரோகி; அவனைப் போலொத்த மாயக்காரன் ஒருவனும் இல்லை; லோகவழக்கம் எப்படிப் போகுமோ அப்படி எல்லாம் அவன் தன் பாதையைத் திருப்பிக்கொள்ளுவான். ஆனால் தன் பக்தியின் நிமித்தம் ஒரு துப்பிடி குறையவாவது ஒரு சங்கடம் வரவாவது இடம் இராதபடி வெகு உபாய தந்திரமாய் நடந்துகொள்வான். அவன் மார்க்கவிஷயத்தில் காலத்துக்கேற்ற கோலம் போட்டுக்கொள்ளுவான்; அவன் பெண்சாதியும் அவனைப்போலொத்தவள்தான். அவன் வேளைக்குவேளை தன் கருத்துக்களில் பேதப்பட்டு அதற்கு நியாயம் உண்டென்று வழக்குச் சொல்லவும் அஞ்சமாட்டான். ஆனால் நான் அறிந்தபிரகாரம் அவன் தன் காரியங்களுக்கே இருந்து மகா நிர்ப்பந்தமான முடிவை அடைந்தான். தேவனுக்குப் பயப்பட்ட கூட்டத்தார் அவன் மக்களில் ஒருவரையாவது மதிக்கவே இல்லை என்றும் கேள்விப்பட்டேன் என்றார்.

## பிரயாணிகள் மாயாபுரி மிநேசோன் வீடு சேர்ந்தது.

பிரயாணிகள் மாயாபுரி சேர்ந்தது.

இதற்குள்ளாக அவர்கள் மாயச்சரக்குகள் விற்பனையாகி வந்த மாயாபுரியண்டை வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இன்னும் ஊருக்குள் போவதற்குமுன்னே எவ்விதமாய் அந்நகர் வீதியைக் கடந்துபோகலாம் என்று தங்களுக்குள்ளே ஆலோசித்துக்கொண்டார்கள். அப்போது இப்படித்தான் செய்யவேண்டும் என்று சிலரும் அப்படித்தான் செய்யவேண்டும் என்று சிலரும் சொன்னார்கள். கடைசியாக தைரியசெந்நன் சொன்னார்: நீங்கள் அறிந்தமட்டும் நான் மோட்ச பிரயாணிகளைப் பலதரம் இப்பட்டணத்தின் தெருவழியாய் அழைத்துக்கொண்டு போய் இருக்கிறேன். இந்த ஊரில் எனக்கு அறிமுகமான ஒருவர் இருக்கிறார். அவருக்கு மிநேசோன் என்று பேர். அவர் சயிப்புரு தீவு. அவர் பழைய சீஷன்.[a] அவர் வீட்டில் போய் நாம் தங்கி இருக்கலாம். உங்கள் எல்லாருக்கும் பிரியப்பட்டால் அவர் வீட்டுக்குப் போகிறதே நலமாகத் தோன்றுகிறது என்றார்.

எனக்கு சம்மதந்தான் என்று யதார்த்தன் சொன்னார். எனக்கும் அதே பிரியம் என்று கிறிஸ்தினாள் சொன்னாள்.

[a] அப். 21. 16.

எனக்கும் அது இஷ்டம்தான் என்று யதார்த்தனும் சொன்னார்; இப்படி எல்லாரும் சம்மதித்துக்கொண்டார்கள். அவர்கள் அந்தப் பட்டணத்துக்குச் சமீபமானபோது இருட்டுகிற சமயமாய் இருந்தது. ஆனால் அந்த விருத்தாப்பியனுடைய வீட்டுக்குப் போக, தைரியநெஞ்சனுக்கு நன்றாய் வழி தெரியும் ஆகையால் நேரே அவர் வீட்டுக்குப் போய் எல்லாரும் சேர்ந்தார்கள். அவர்கள் வீட்டண்டைபோய்க் கதவைத் தட்டினார்கள். தைரியநெஞ்சன் குரல் அந்த வீட்டுக்காரனுக்கு நன்றாய்த் தெரிந்து இருந்தபடியால் உடனே கதவைத் திறந்து எல்லாரையும் உள்ளே சேர்த்துக்கொண்டார்.

அவர்கள் மிருசோன் வீடு சேர்ந்தது.

இன்று எவ்விடமிருந்து பயணம்பண்ணி வருகிறீர்கள் என்று கேட்டார்; அதற்கு அவர்கள்: நாங்கள் இன்று அதி உத்தம சிநேகிதராகிய பரோபகார காயுவுடைய சத்திரத்தில் இருந்து புறப்பட்டு வருகிறோம் என்றார்கள். அப்படியா? இவ்வளவுதூரம் நடந்திருக்கிறீர்களே, மெத்த இளைப்பாய் இருக்குமே, உட்காருங்கள் என்றார். அப்படியே அவர்கள் எல்லாரும் உட்கார்ந்தார்கள்.

தைரி. நீங்கள் எல்லாரும் என் சிநேகிதருடைய வீட்டைச் சேர்ந்தது மெத்தச் சந்தோஷம் அல்லவா? அவரும் நீங்கள் வந்ததற்காக ஆனந்தம் கொள்ளுவார் என்று நம்புகிறேன் என்று தைரியநெஞ்சன் சொன்னார்.

மிரு. எனக்கு மெத்தச் சந்தோஷம்; நீங்கள் வந்தது பெரிய பாக்கியம். உங்களுக்கு வேண்டியது ஏதுவோ, அதை மனம் கூசாமல் கேளுங்கள், அதைச் செய்கிறதற்கு நான் ஆயத்தமாய் இருக்கிறேன் என்று மிருசோனும் சொன்னார்.

யதா. கொஞ்சநேரத்துக்கு முன்னே எங்களுக்கு இரண்டு காரியங்கள் தேவையாய் இருந்தது; அதாவது தங்க ஒரு இடமும் சம்பாஷிக்க ஒரு சிநேகிதனுந்தான். இப்போது எங்களுக்கு அந்த இரண்டும் இலவசத்தில் கிடைத்து இருக்கிறது என்று யதார்த்தன் சொன்னார்.

மிரு. தங்கும் இடம்தான் இது ஆச்சுதே; இனி சம்பாஷிக்கும் உத்தம தோழனைப் பரீட்சையிலே கண்டுகொள்ள வேண்டியது என்று மிருசோன் சொன்னார்.

தைரி. ஐயா வீட்டுக்காரரே! இந்தப் பிரயாணிகள் படுத்து இளைப்பாறும்படியான அறைகளிலே எவை என்று காட்டுவீரோ என்று தைரியநெஞ்சன் கேட்டார்.



மிரு. அப்படியே காட்டுகிறேன் என்று மிருசோன் அவர் அவர் தங்கும் அறைகளைக் காட்டி, அதோடு ஒரு விஸ்தாரமான மண்டபத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், இதுதான் பொதுவான விருந்துமண்டபம் என்று சொன்னார்.

யதா. அவர்கள் எல்லாரும் சற்று உட்கார்ந்து இளைப்பாறிக்கொண்டபின்பு யதார்த்தன் அந்த வீட்டுக்காரனை நோக்கி: ஐயா இந்த ஊரில் உத்தமர் உண்டோ என்று விசாரித்தார்.

யதார்த்தன் ஊர் விசேஷம் விசாரிக்கிறார்.

மிரு. உத்தமர் கொஞ்சப்பேர்தான் உண்டு.[1] இந் நகரத்திலுள்ள ஆன்மாக்களோடு ஒத்துப்பார்த்தால் அவர்கள் ஒன்றுமே இல்லை என்றே சொல்லவேண்டியது.

யதா. அவர்களில் சிலரைக் கண்டு பேசுகிறது எப்படி? மோட்ச பிரயாணம் போகும் உத்தமரைக் கண்டு பேசிக்கொள்ளுகிறது அனேகருடைய பயணத்திலேயும் யாத்திரை செய்கிறவர்களுக்கு சந்திர நட்சத்திரங்கள் கண்டால்போல் களிப்பாய் இருக்குமே என்று யதார்த்தன் சொன்னார்.

மிரு. உடனே மிருசோன் தன் காலால் தடதடவென்று தட்டினார். அதுவுமே, அவருடைய குமாரத்தியாகிய கிருபை வந்து சேர்ந்தாள். அப்பொழுதவர் அம்மா கிருபை வழியே நீ துரிதமாய் நடந்து நொறுங்கியநெஞ்சன், பரிசுத்தன், சத்தியநேசன், பொய்சொல்லத்துணியாதவன், மனஸ்தாபன் ஆகிய இவர்கள் வீடுகளுக்கும் போய் நம்முடைய வீட்டில் சில விருந்தாடிகள் வந்திருக்கிறார்கள் என்றும் அவர்கள் உங்களைக் கண்டு பேசும்படி ஆசைப்படுகிறார்கள் என்றும் சொல்லிவரும்படி சொல் என்று சொன்னார். அப்படியே அந்தப் பெண் ஓடி அவர்களுக்குச் செய்தி சொன்னவுடனே, அவர்கள் எல்லாரும் வந்து விருந்து மண்டபத்திலே கூடி, ஒருவரை ஒருவர் வினவிக்கொண்டு உட்கார்ந்தார்கள்.

மிருசோனுடைய சிநேகிதர்.

அப்பொழுது மிருசோன் அவர்களை நோக்கி: சிநேகிதரே! நீங்கள் பார்க்கிற இந்த அந்நியர் என் வீட்டுக்கு இன்று வந்தார்கள். இவர்கள் எல்லாரும் மோட்ச பிரயாணிகள். இவர்கள் வெகுதூரமான தேசத்திலிருந்து புறப்பட்டு சீயோன்

பிரயாணிகளை மிருசோன் அறிமுகப்படுத்துதல்.

[1] சோதோமில் லோத்து இருந்தவண்ணம் மிகவும் கெட்ட இடங்களிலுங்கூட நல்லவர்கள் இரண்டொருவர் இருப்பார்கள்.

மலையை நோக்கிப் பயணம் போகிறார்கள் என்று சொல்லி கிறிஸ்தினாளைச் சுட்டிக்காட்டி, ஆனால், இதோ இந்த அம்மாளை யார் என்று நினைக்கிறீர்கள்? பேர்போன மோட்ச பிரயாணியும் உண்மையோடே இந்த நகரத்தில் படாத பாடெல்லாம் பட்ட கிறிஸ்தியானுடைய உத்தம பத்தினியாகும் என்றார். அதைக்கேட்ட சிநேகிதர் அசந்துபோய், அப்படியா! உம்முடைய மகள் வந்து கூப்பிட்டபோது, கிறிஸ்தினாளைக் காணவேபோம் என்று நாங்கள் கனவிலும் நினைத்ததில்லை; ஆகையால் எங்களுக்கு உண்டாகும் பிரமிப்பு அதுபோல அவர்க்கும் பிரமிப்பாய் இருக்கிறது என்று சொல்லிவிட்டு, கிறிஸ்தினாளண்டை போய் அவளுடைய சுகசேமங்களை விசாரித்து, இந்த வாலிபர் அந்த மகாத்துமாவின் பிள்ளைகளா என்று கேட்டார்கள். அவர்கள் அவளுடைய பிள்ளைகள்தான் ஐயா என்று சொன்னபின்பு அவர்கள் அந்த வாலிபரை நோக்கி: நீங்கள் அன்புகூர்ந்து அடிபணிந்து போற்றும் அரசர் உங்கள் தகப்பனைப்போலவே உங்களையும் உத்தமராக்கி, அவர் இருக்கிற இடத்தில் நீங்களும் சமாதானத்தோடு தங்கும்படி தயைபுரிவாராக என்று வாழ்த்தினார்கள்.

மநா. அப்புறம் அவர்கள் எல்லாரும் உட்கார்ந்தபின்பு மநாசோன் அவர்களைப் பார்த்து: ஐயாமாரே! இப்போது உங்கள் நகரத்தின் சீர் எப்படி இருக்கிறது என்று கேட்டார்.

நொறு. அதற்கு நொறுங்கியநெஞ்சன்: உற்சவ காலங்களில் எங்கள் ஊரில் பெரும் அமளிகள் எல்லாம் நடக்கும். கவலை மிகுந்த அந்தக் காலத்தில் எங்கள் ஆத்துமாவையும் மனதையும் ஒரு நிதானத்தில் வைத்துக்கொள்ளுவது வெகு வருத்தத்தில் இருக்கிறது. இதைப்போலொத்த இடத்தில் வசிக்கிறவனும் இந்த ஊரின் அமளி குமளிகளுக்கு அகப்படாதிருக்கிறவனும் நிமிஷந்தோறும் எச்சரிக்கையாய் இருக்கும்படியான ஒரு தண்டுகோல் மிகவும் அவசியமாய் இருக்கிறது என்றார்.

நொறுங்கியநெஞ்சன்.

மநா. இப்போது உங்கள் ஊரில் பழையபடி அமளி குமளிகள் உண்டா? அமைதல் உண்டா?

நொறு. முன்னிலும் இப்போது சற்று அமைதலாய்த்தான் இருக்கிறார்கள். கிறிஸ்தியானுக்கும் உண்மைக்கும் முன்னே நடந்த விஷயங்கள் எல்லாம் தெரியுமே; இப்போதுதான் கொஞ்சக்காலமாய் அப்படிப்பட்ட சலாபனைகள் ஒன்றையும்



காணோம்.[1] எனக்குத் தோன்றுகிறபடி உண்மையின் இரத்தப்பழி அவர்கள்மேல் இருந்து இறங்கினதுபோல் இருக்கிறது. ஏனெனில் அவனைச் சுட்டெரித்ததுமுதல் மற்றெவர்களையும் அப்படிச்செய்ய அஞ்சுகிறார்கள். அந்தக் காலங்களில் நாங்கள் தலைமறைவாய்த்தான் நடமாடவேண்டியதாய் இருந்தது; இப்பொழுதோ அப்படி அல்ல, தாராளமாய்த் தலைகாட்டித் திரிகிறோம். அக்காலங்களில் கிறிஸ்தவன் என்ற பேர் அவமான இழிவாய் எண்ணப்பட்டது. இப்போதோ இந்த விஸ்தாரமான பட்டணத்தின் சில மூலைமுடுக்குகளில் அவர்களைப்பற்றி அதிக மதிப்பு இருக்கிறது என்று சொல்லிவிட்டு, ஐயா உங்கள் பிரயாண சம்பவங்கள் எப்படி இருக்கிறது? நாட்டாருக்கும் உங்களுக்கும் எப்படி இருக்கிறது? என்று கேட்டார்.

மநா. அதற்கு அவர்: பிரயாணிகளுக்கு ஒத்த பாக்கியம் எங்களுக்கும் கிடைத்திருக்கிறது. சிலவேளை நல்ல பாதை சிலதரம் பாதை கேவலம்; சில இடங்களில் மலை ஏற்றம் சில இடங்களில் இறக்கம்; இப்படி ஒரு நிலை இல்லாமல் இருக்கிறது. எப்போதும் காற்று முதுகுப்பக்கம் அடிக்கிறதும் இல்லை; எங்கள் வழியில் எதிர்ப்பட்டு வருவோர் எல்லாரும் சிநேகிதரும் இல்லை. இதற்குள்ளாகப் பல துன்பங்கள் சம்பவித்திருக்கிறது, இன்னும் என்னென்ன நேரிடப்போகிறதோ அதை யார் அறிவார்? ஆனால் நல்ல மனுஷர் தொல்லைகளை அநுபவிக்கவேண்டும் என்று அநேக ஆண்டுகளுக்கு முன்னே சொல்லப்பட்ட வாசகம் மெய் என்று உணர்ந்துகொள்ளுகிறோம்.

நொறு. ஏதோ துன்பங்கள் சம்பவித்ததுபோல சொன்னீரே! அத்துன்பங்கள் எவை?

மநா. அத்துன்பங்களின் விவரம் எல்லாம் எங்கள் வழிகாட்டியாகிய தைரியநெஞ்சனைக் கேட்டால் தெரியவரும்.

தைநெ. அதைக் கேட்ட தைரியநெஞ்சன் சொல்லுகிறார்; இதற்குள்ளாக மூன்று நாலு தரம் பெரும் ஆபத்துகள் சம்பவித்திருக்கிறது; எப்படி எனில் கிறிஸ்தினாளும் அவள் பிள்ளைகளும் முதலாவது அவலட்சணரூபிகள் இருவரால்

இவர்கள்பட்ட பாடான துன்பங்களின் விவரம்.

---

[1] இந்தப் புஸ்தகத்தின் முதல் பங்கை பன்னியன் எழுதின சமயத்தைவிட இப்போது பாப்புமார்க்கத்தாரால் அதிகமான துன்பங்கள் இங்கிலாந்துதேசத்தில் இருந்ததாக இதினால் காண்பிக்கிறார்.

குறிப்பிட்டு ஜீவனாசம் செய்வோம் என்று பயந்தார்கள். அதுவுமன்றி இரத்தப்பிரிய ராட்சதன் சங்கார ராட்சதன் நலக்கொல்லி ராட்சதன் ஆகிய இம்மூன்று அரக்கர் கையிலும் அகப்பட்டோம். இதில் நலக்கொல்லி ராட்சதன் எங்களை மடக்கும்படி வராமல் நாங்களே அவனுடைய குகைக்குப் போய் அவனை மடக்கினோம். அதின் விவரம் என்னவென்றால், எனக்கும் சபை அனைத்துக்கும் விருந்துசெய்த பரோபகார காயுவுடைய சத்திரத்தில் சிலகாலம் தங்கின பின்பு ஒரு நாள் நாங்கள் வெளிப்புறப்பட்டு பிரயாணிகளின் பகைஞர் யாராவது இந்தப் பக்கங்களில் அகப்படுவார்களா என்று பரிசோதிக்கப் போனோம். ஏனெனில் அந்தத் திசைகளில் ஒரு பிரசித்தப் பகைஞன் இருக்கிறான் என்று கேள்விப்பட்டோம். பரோபகார காயு அந்தப் பக்கங்களில் வசித்து வந்ததால் அந்தச் சத்துருவின் நடமாட்டத்தை என்னைவிட நன்றாய் அறிந்திருந்தார். நாங்கள் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து தேடிக் கடைசியாக அவன் இருந்த குகையைக் கண்டுபிடித்தோம்; அப்பொழுது எங்கள் சந்தோஷமும் பெருகி எங்கள் ஆவி பலங்கொண்டது. அவனுடைய குகையின் வாசலில் போய் எட்டிப்பார்க்கவே, இதோ அவன் ஏழைத்தனத்தைப் பலாத்காரமாய்த் தன் வலைக்குட்படுத்திப் பிடித்துக்கொண்டுபோய், அவன் மாமிசத்தைப் பட்சிக்கும்படி ஆரம்பிக்கிறதைக் கண்டோம். எங்களை அவன் குகையின் வாசலில் கண்டவுடனே தனக்கு வேறே வேட்டையும் வருகிறதென்று எண்ணினதோ என்னவோ அவன் ஏழைத்தனத்தை அப்படியே குகைக்குள் விட்டுவிட்டு எங்களண்டை வந்தான். உடனே நாங்கள் அவனோடு சண்டைபண்ணினோம்; கடைசியாக அவனை மடக்கிக் கீழ்ப்படுத்தி அவன் தலையையும் வெட்டி, இவனைப்போல இனிமேல் யாராவது அவபக்தியாய் நடப்பவர்களை அவர்களுக்கு எச்சரிப்பு உண்டாகும்படி வழியோரத்தில் கழுவில் மாட்டிவைத்தோம். இவ்வளவு நடந்தது மெய்தான். ஏழைத்தனம் என்பவர் சிங்கத்தின் வாயிலிருந்து தப்புவிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியைப்போல் இதோ அத்தாட்சியாய் இருக்கிறார்.

ஏழை. இது எல்லாம் உண்மைதான். நலக்கொல்லி ராட்சதனுடைய பல்லுக்கு நான் இரையாகாமல் தப்பி இருக்கிறேன். அவன் என் எலும்பை முறித்து என் மாமிசத்தைப் பட்சிப்பதாய் ஒவ்வொரு நிமிஷமும் என்னைப் பயப்படுத்தினான். எனக்கு ஆறுதலாகவும் என் ஆத்துமா பிழைக்கும்



படிக்கும் தைரியநெஞ்சனும் அவருடைய சிநேகிதரும் தங்கள் அம்புகளோடும், ஆயுதங்களோடும் வந்து என்னை விடுதலை செய்தார்கள்' என்று ஏழைத்தனம் சொன்னார்.

பரிசுத்தன்.

பரி. அதைக் கேட்ட பரிசுத்தன் சொல்லுவார்; மோட்ச பிரயாணிகளுக்கு அவசியம் தேவையாய் இருக்கிற இரண்டு காரியங்கள் உண்டு. அதாவது அவர்களுக்குத் தைரியமும் சுத்தாங்கமும் வேண்டியது. தைரியம் இல்லையானால் தங்கள் பிரயாணத்தில் முடிவுபரியந்தம் நிலைநிற்கமாட்டார்கள்; சுத்தாங்க நடக்கை இல்லையானால் மோட்ச பிரயாணிகள் என்ற பேர்முதலாய் நாற்றமாய்ப்போகும்.

சத்தியசேகன்.

சத்தி. சத்தியசேகன் சொல்வார்; நான் சொல்லும் எச்சரிப்பு உங்களுக்கு அவசியம் இல்லாமல் இருந்தாலும் இருக்கலாம்; ஆனால் இந்தப் பிரயாணத்தில் போகும் சிலர் தாங்கள் இவ்வுலகத்தில் அந்நியரும் பரதேசிகளுமாய் இருக்கிறோம் என்று வெளிப்படுத்துகிறதைப் பார்க்கிலும் மோட்ச பிரயாணத்துக்குத் தாங்கள் அந்நியரும் பரதேசிகளுமாய் இருக்கிறோம் என்று வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கிறார்கள்.

பொய்சொல்லத்துணியான.

பொய். பொய்சொல்லத்துணியான் சொல்லுவார்; அது மெய், அவர்களுக்குப் பிரயாணிகளுக்கேற்ற குணங்களாவது நடமாட்டமாவது இல்லை. அவர்கள் தங்கள் கால்களை நேரே வைத்து நடவாமல் சரிந்து சரிந்து நடக்கிறார்கள். அவர்களுடைய ஒருகால் பாதரட்சை உள்ளுக்கும் மறுகால் பாதரட்சை வெளிக்கும் போகிறது. தங்கள் ஆண்டவரை வெட்கப்படுத்தும்படி அவர்களுடைய கால்சட்டை கிழிந்துபோய் இங்கே ஒரு கந்தை தொங்கும், அங்கே ஒரு பொத்தல் தெரியும்.

மனஸ்தாபன்.

மன. மனஸ்தாபன் சொல்வார்; இப்படிப்பட்ட மாசுள்ள நடக்கையை அவர்கள் நினைத்து மனவருத்தம் அடையவேண்டியதுதான். இவ்வழுக்குகளும் தவறுதல்களும் இல்லாமல் அவர்கள் வழி அலங்காரமாய் இருக்குமட்டும் பிரயாணிகளுக்கு அருளப்படும் கிருபையில் பங்குபெறவாவது தாங்கள் விரும்பியவண்ணம் பிரயாணம்செய்யவாவது கூடவே கூடாது என்றார். இவ்விதமாய் அவர்கள் பல காரியங்களைக் குறித்துப் பலநேரம் பேசிக்கொண்டிருந்து அப்புறம் இராப்

போசனம் சாப்பிட்டு அவரவர் அறைக்குள் இளைப்பாறப் போனார்கள்.

சாமுவேலுக்கும் கிருபைக்கும், யோசேப்புக்கும் மார்த்தாளுக்கும் விவாகம்.

அப்புறம் அவர்கள் பின்னும் வெகுகாலம் மாயாபுரியிலே தங்கி மினாசோன் வீட்டில் குடியிருந்தார்கள். மினாசோன் தன் மூத்தகுமாரத்தியாகிய கிருபையை கிறிஸ்தீனாளுடைய குமாரனாகிய சாமுவேலுக்கும் இளைய குமாரத்தியாகிய மார்த்தாளை யோசேப்புக்கும் விவாகம் செய்துகொடுத்தார்.

மாயாபுரியின் அமைதலான நிலைமை.

மாயாபுரி முன்போல் அமளி குமளியற்று அமைதலான பட்டணமாய் இருந்ததால் அவர்கள் அநேக வருஷமாய் அங்கே வாசம்பண்ணினார்கள். அவர்கள் அவ்வூரிலுள்ள பல நல்ல மனுஷருடன் பழகி அவர்களுக்குத் தங்களால் ஆன சகாயங்களைச் செய்துவந்தார்கள். தயாளி தன் வழக்கம்போல் ஏழைகளுக்கடுத்த பல தையல்வேலைகளைச் செய்துவந்தாள். பசி தீர்ந்த ஏழைகளின் குடலும் குளிர்தீர்ந்த அவர்கள் முதுகும் அவளை வாழ்த்திப் புகழ்ந்தன. அவள் தன் தொழிலால் அவ்வூரில் கீர்த்திபெற்றாள். அதோடு கிருபையும் பெபேயாளும் மார்த்தாளும் தங்கள் சுபாவத்தின்படியே தங்களால் ஆன நன்மைகளைச் செய்துவந்தார்கள். அவர்கள் வேலையினால் அநேக பலன்களும் உண்டாயிற்று. ஆதலால் முன்னே சொன்னதுபோல கிறிஸ்தியானுடைய பேர் உலகத்தில் மங்கிப்போக ஏதுவில்லாதிருந்ததுபோல் காணப்பட்டது.

## வல்லசர்ப்பத்தொல்லை.

வல்லசர்ப்பத்தொல்லை.

இவர்கள் மாயாபுரியில் இருந்த காலத்தில் பக்கத்தில் இருந்த காட்டிலிருந்து ஒரு துஷ்டமிருகம்[1] எழும்பிவந்து அவ்வூராரில் அநேகரைச் சங்காரஞ்செய்தது. அது சிலதரம் சிறுபிள்ளைகளை கௌவிக்கொண்டுபோய் தன் குட்டிகள் சப்பும்

[1] இதினால் 1638-ம் வருஷத்துக்கு முன் இங்கிலாந்துதேசத்தில் உண்டாயிருந்த பாப்புமார்க்க பிரபலியமும் அதின் அதிகாரமும் விளக்குகிறது. புரொட்டெஸ்டாந்தாயிருந்த பலர் பாப்புமார்க்கத்தை அநுசரித்துக்கொண்டார்கள். அதிகாரத்தார் அநேகர் அந்த மார்க்கத்தைச் சேர்ந்திருந்தபடியால் ஒருவரும் அதை எதிர்க்கத் துணியவில்லை. பாப்புமார்க்கத்தை இங்கிலீஷ தேசத்தில் பிரபலப்படுத்த இரும்பவும் [illegible]த்தபொழுது, தைரியநெஞ்சனைப் போன்றவர்களின் வீரியத்தால் அது தடுக்கப்பட்டது.



பாலையே சப்பிக் குடிக்கும்படி பழக்குவித்தது. இந்த மிருகத்தை எதிர்த்து விரோதிக்கும்படி அவ்வூராரில் ஒருவனும் கூடாமல்போயிற்று. அது முக்காரம்போட்டுக்கொண்டு வருகிறதைக் கேட்டவுடனே எல்லாரும் ஓட்டம் பிடிப்பார்கள்.

இதற்கு இணையான மிருகம் இவ்வையகத்தில் இல்லை. அதற்கு வல்லசர்ப்பத்தின் உடலும் ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன. அது, பிள்ளைகுட்டிகளை நாசமாக்கினதும் ஒரு ஸ்திரீயின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது.[a] இந்த மிருகம் மனுஷர் நடக்கவேண்டிய கட்டளைகளையும் விதித்துவந்தது. ஆத்துமாக்களைப் பார்க்கிலும் தங்கள் சரீரங்களை யார்யார் விசேஷித்து வைத்தார்களோ அவர்கள் அதின் விதிகளைக் கைக்கொண்டார்கள். அப்படிக் கைக்கொண்டவர்கள் அதின் ஆளுகைக்கு உட்பட்டார்கள்.

இந்த வல்லசர்ப்பத்தின் வாயில் இருந்தும் இதின் நகங்களில் இருந்தும் மாயாபுரி ஜனத்தை விடுதலைசெய்யும்படியாக என்ன பிரயத்தனம் செய்யலாம் என்று தைரியநெஞ்சனும் அவனைச் சேர்ந்தவர்களும் பிரயாணிகளைச் சந்திக்கும்படி வந்த மற்ற உத்தமரும் மினாசோனுடைய வீட்டில் இருந்து ஆலோசித்து உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

வல்லசர்ப்பம் விரட்டப்பட்டது.

அந்த உடன்படிக்கையின் பிரகாரம்:—தைரியநெஞ்சன், நொறுங்கியநெஞ்சன், பரிசுத்தன், சுத்தநேசன், பொய்சொல்லத்துணியான், மனஸ்தாபன் ஆகிய இவர்கள் தங்கள் அம்பிராத்தாணிகளோடு புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் போனவுடன் அந்த மிருகம் உக்கிரகோபத்தால் உப்பிக்கொண்டு அவர்களை வெகு அலட்சியமாய்ப் பார்த்தது. ஆனால் அவர்கள் தங்கள் அம்பிராத்தாணிகளைத் திறந்து அம்புகளை அதின்மேல் ஓயாமல் எய்யவே அது படுகாயப்பட்டு, தன் குகைக்குள் போய்ப் பதுங்கிக்கொண்டது. அப்பொழுது அவர்கள் எல்லாரும் திரும்பி மினாசோனுடைய வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

இந்த வல்லசர்ப்பம் வெளிப்பட்டு பிள்ளைகளைத் தூக்கிக் கொண்டுபோகிற பல காலம் உண்டு. அந்தக் காலம் அறிந்து அவ்வூர் பராக்கிரமர் விழிப்பாய் இருந்து அதின் பலத்தைக் குறைக்கும்படி பல பிரயத்தனங்களையும் செய்வார்கள்.

[a] வெளி. 17. 3.

இப்படி அநேக வருஷங்களாய் அதின் பலம் வரவரக் குறைக்கப்பட்டதால் அது பலவீனப்பட்டுப்போய் முடமாயும் போயிற்று. அது முடமானதுமுதல் முன்போல மாயாபுரிப் பாலரைத் தூக்கிக்கொண்டுபோகவும் கூடாதிருந்தது; அதற்கு உண்டான பயங்களால் அது சீக்கிரத்தில் செத்துப்போம் என்று அந்த ஊருக்குள் ஒரு பேச்சும் நடந்தது.

பிரயாணிகளுக்கும் தைரிய நெஞ்சனுக்கும் உண்டான கீர்த்தி.

இதினாலே தைரியநெஞ்சனுக்கும் அவருடைய சிநேகிதர்களுக்கும் வெகு கீர்த்தி உண்டாயிற்று. அவ்வூரானில் பலர் தங்கள் மனப்போக்கையே மாற்றாமற்படி பிரியப்படாவிட்டாலும் இவர்களை மெச்சித்து கனம்பண்ணி வந்தார்கள்.[1] இந்த முகாந்தரத்தையிட்டுப் பிரயாணிகளுக்கு இவ்விடத்தில் அவ்வளவாய்த் துன்பங்கள் உண்டாகவில்லை. அவர்களில் இழிகுலத்தோரான சிலர் கண்ணற்ற கட்டைமண்போலவும் அறிவற்ற மிருகம்போலவுமே இருந்தார்கள். இப்படிப்பட்டவர்கள் மோட்ச பிரயாணிகளை எவ்வளவேனும் மதிக்கவே இல்லை, அந்தப் பிரயாணிகளால் உண்டான பாக்கியத்தை அவர்கள் உணரவும் இல்லை, வல்லமையைக்குறித்து வியந்துகொள்ளவும் இல்லை.

மினாசோன் வீட்டில் நெடுங்காலம் தங்கியிருந்த மோட்ச பிரயாணிகள் புறப்படும் காலம் கிட்டினபோது தங்கள் தட்டுமுட்டுகளை ஒழுங்குசெய்துகொண்டு, சிநேகிதர் எல்லாருக்கும் செய்தி அனுப்பி, அவர்களோடு சம்பாஷித்துக்கொண்டு, தங்கள் அரசரின் பாதுகாப்புக்குள் தங்களை ஒப்புக்கொடுக்கும்படி ஜெபத்தியானம் செய்தார்கள். அநேகர் பலவீனருக்கும் பலவான்களுக்கும் ஸ்திரீகளுக்கும் புருஷருக்கும் பயண அவசரத்துக்கேற்ற பல பதார்த்தங்களும் கொண்டுவந்து கொடுத்தார்கள்.[ஈ]

## பிரயாணிகள் மாயாபுரியை விட்டது.

அவர்கள் மாயாபுரியில் இருந்து புறப்பட்டார்கள். அவர்களுடைய சிநேகிதர் அவர்களை வழியனுப்பும்படி கொஞ்சத்

[1] தம் வருத்தமும் சோகஜாலமும் உள்ள கிறிஸ்தவரைப்போல் அந்நியரானவர்களும் தன்மார்க்கரும் இவ்விதமாக நடக்கவிட்டாலும், அவன் அவர்களால் எப்போதும் கனம்பண்ணப்படுவான்.

ஈ அப். 28. 10.



தூரம்போய் பிரயாணிகள் ஒவ்வொருவரையும் தங்கள் அரசரின் அன்புள்ள சம்ரக்ஷணைக்குள் ஒப்புவித்து தங்கள் ஊருக்குத் திரும்பினார்கள்.

பிரயாணிகள் மாயாபுரியை விட்டுப் புறப்பட்டது.

பிரயாணிகள் எல்லாரும் ஏகமாய்ப் புறப்பட்டு வழிநடந்தார்கள்; அவர்களுக்கு முன்னே தைரியநெஞ்சன் போனார். அந்த ஸ்திரீகளும் பிள்ளைகளும் பலவீனராய் இருந்ததால் அவர்கள் அநுசரித்துப்போகத்தக்கபடி எவ்வளவுதூரம் போகக்கூடுமோ அவ்வளவுதூரந்தான் நடந்துபோனார்கள். அன்னநடைக்குமேல் அதிக நடை நடக்க அவர்களால் இயலாததைக் கண்ட நொண்டியும் ஏழைத்தனமும் அவர்கள்மேல் அநுதாபம் கொண்டார்கள்.

அவர்கள் ஊரைக் கடந்து வழிவிட வந்த சிநேகிதனையும் விட்டுத் தனிப்பட்டவுடனே தீவிரமாய் நடந்து உண்மை இரத்தசாட்சியாய் மாண்ட இடத்தண்டை வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அந்த இடத்தில் சற்றுநேரம் தாமதித்து நின்று, அவர் தம்முடைய சிலுவையைப் பொறுமையோடு சுமந்து சாகும்படி தமை அருளின தயாபரனைத் துதித்தார்கள். ஏனெனில் அவர் விசுவாசத்தில் வல்லவராக விளங்கி அந்த இடத்தில் மாண்டதால் அநேக நன்மைகள் மாயாபுரியில் உண்டானது என்ற உணர்வு அவர்கள் மனதை எழுப்பிற்று.

அப்புறம் அவர்கள் கிறிஸ்தியானையும் உண்மையையும் பற்றிப் பே[illegible] கிறிஸ்தியானோடு நம்பிக்கை கூடிக்கொண்ட விதங்களைக் குறித்துச் சம்பாஷித்து வெகுதூரம் நடந்துபோனார்கள்.

பிரயாணிகள் திரவியகிரி அண்டை வந்தது.

அதின்பின்பு அவர்கள்: தேமாஸ் பயணத்தைத் தடுத்துவிட்டதும், உபாயி விழுந்து மாண்டதாகச் சிலர் அநுமானிக்கிறதுமான வெள்ளிக்கேணியுள்ள திரவியகிரியண்டை வந்து சேர்ந்து, அதின் தன்மையைக் குறித்து மனத்தியானம் செய்துகொண்டு நின்றார்கள். பின்னும் அவர்கள் சற்று எட்டி நடந்து, திரவியகிரிக்கு எதிரே வழியோரமாய்ச் சோதோமின் எல்லைக்குள்ளும் ஜலக்கடலின் பள்ளத்தாக்குக்குள்ளும் இருந்த பழைய உப்புத்தூணண்டை வந்தவுடனே, அவர்கள் எல்லாரும் கிறிஸ்தியானைப்போல அதிசயப்பட்டு, தேமாவையும் உபாயியையும் போலொத்த அவ்வளவு அறிவா

ளிகளும் விவேகிகளும் இவ்வண்ணமாய் மதிகெட்டு மாண்டு போனார்களே என்று உணர்ந்துகொண்டார்கள்.[1] ஆதலினாலே, இக்காட்சியால் உண்டாகும் போதனையை ஒருவன் தன் முடமார்க்கதாரமான கண்ணுல் நோக்கும்போது அவனுடைய மாமிச சுபாவம் மற்றவர்களுக்கு உண்டான ஆபத்தை உணர்ந்துகொள்ளுகிறதில்லை என்றும் ஆலோசித்துக்கொண்டார்கள்.

சரீரப்படி பார்ப்பது.

## பிரயாணிகள் தேவநதியண்டை வந்தது.

அவர்கள் தேவநதியண்டை வந்தது.

அப்புறம் நான் என் சொப்பனத்தில், பிரயாணிகள் எல்லாரும் ஆனந்தமலைக்கு இப்புறத்தில் இருந்த ஆற்றங்கரையைச் சேர்ந்ததாகக் கண்டேன்.

இருகரையிலும் இலையுதிரா மரங்களும், பசும்புல் மைதானங்களால் சூழப்பட்டதும், கம் என்று மனோரம்மிய புஷ்பங்களால் இலங்கினதும், சாங்கோபாங்கமாய்ப் படித்து உருண்டு சந்தோஷப்பட்ட நல்ல இடமுமான அந்த இன்பநதியண்டைதான் அவர்கள் வந்து சேர்ந்தார்கள்.[a]

ஆங்கிருந்த பட்டிகளும் ஆட்டுத்தொழுவங்களும்.

இவ்வாற்றோரம் இருந்த பசும்புல் மைதானத்தில் ஆடுகள் தங்குவதற்கு ஏற்ற இடைகளும் தொழுவங்களும் மோட்ச பாட்டைக்குப் போகும் ஸ்திரீகள் பெற்ற பாலகரான ஆட்டுக்குட்டிகளை பேணிப் போஷித்து வளர்ப்பதற்கு ஏற்ற குடில்களும் பட்டிகளும் கட்டப்பட்டு இருந்தன. அக்குட்டிகள் மேல் மனதுருகி அக்குட்டிகளைத் தமது புயத்திலேந்தி சேர்த்து தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துகிறவருமான ஒருவருடைய விசாரணைக்குள் அவைகள் ஒப்புவிக்கப்பட்டு இருந்தன.[b] இவருடைய விசாரணைக்குள் அவரவர் தங்கள் பிள்ளைகளை ஒப்புவிக்கவும் இந்த ஆற்றோ-

[1] எவ்வளவு அறிவும் சாமர்த்தியமும் ஒருவனுக்கு இருந்தாலும், அதன் நிமித்தம் அவன் நிலைபெறுவானென்று இருந்துவிடக்கூடாது. அறிவும் சாமர்த்தியமும் மனுஷனை மாத்திரம் இருக்கிறதால் நிலைத்து நிற்கவேண்டுமானால் இருதயந்தான் செம்மையாய் இருக்கவேண்டும்.

[a] சங் 23. 2. [b] எபி. 5. 2: ஏசா 40. 11.



ரத்தில் அவர்கள் தங்கித் தாபரித்து பின்காலத்தில் அவர்களுக்கு ஒரு குறைச்சலும் நேரிடாதபடி இவ்விடத்தில் உண்டு வளர்ந்து படித்துத்தேறி பூரண புருஷர் ஆகும்படி அவருடைய சகாயங்களுக்குள் இருக்கவும் இஸ்திரீகள் தன் மருமக்கள்மார் நாளுக்கும் இட்டம்பண்ணினுள்.[1] அந்த மேய்ப்பன் இவர்களில் யாராவது வழிதப்பிப்போய்விட்டால் அல்லது காணாமற்போனால் அவர்களைத் திரும்பக் கொண்டுவந்து சேர்த்து அவர்கள் முறிவுகளைக் கட்டி நோய்கொண்டவைகளைப் பலப்படுத்தி வருவார்.[a] அன்னம் தண்ணீரை இட்டாவது வஸ்திரபாரணங்களை இட்டாவது அவர்கள் இவ்விடத்தில் கவலைப்படவேண்டியதாய் இருந்ததில்லை. திருடரை இட்டாவது கொள்ளைக்காரரை இட்டாவது இவ்விடத்தில் ஒரு பயமும் இல்லை; ஏனெனில் இவர்களை மேல்விசாரிக்கிறவர் தமது குட்டிகளில் ஒன்றை இழந்துபோவதிலும் தாமே தமது உயிரை ஒப்புக்கொடுத்துவிடுவார். மேலும் இவர்கள் கர்த்தருக்கு ஏற்ற பயபக்தியிலும் கண்டிப்பிலும் வளர்க்கப்பட்டு நேர்மையும் செவ்வையுமான பாதையில் நடக்கப் பழக்குவிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட வளர்ப்பு சிறுவில் இடைக்கமாட்டாது என்று நீ அறிவாயே. மேலும் இவ்விடத்தில் தெளிந்த ஜலமும் மகிழும் மைதானமும் மணக்கும் புஷ்பங்களும் பலமாதிரி கனிகளைத் தரும் பல ஜாதி விருக்ஷங்களும் இருக்கின்றன. இங்கு உள்ள பழங்கள் எப்பேர்ப்பட்டது? பெயல்செபூலின் தோட்டத்தில் இருந்து சுவருக்கப்பால் தொங்கி, மத்தேயு பிடுங்கித் தின்று அவஸ்தைப்பட்டானே, அப்படிப்பட்ட பழங்களோ? அல்ல, அல்ல; சுகம் அற்றோருக்குச் சுகமும் சுகம் உள்ளோருக்கு இருக்கிற பலத்தோடு அதிக பலமும் கொடுக்கத்தக்கதான பழங்களே இங்கே பழுத்தன. ஆதலால் அவர்கள் தங்கள் பிள்ளைகளை அந்த இடத்தில் ஒப்புவிக்க தீர்மானித்தார்கள்.

[1] நாம் குழந்தைகளை இயேசுகிறிஸ்துவின் ஆதரவுக்கும் ஆளுகைக்கும் ஒப்புக்கொடுப்பதின் அவசியத்தை இதில் கற்றுக்கொள்ளுகிறோம். அவர்கள் இளமையாய் இருக்கையிலேதானே அவர்கள் இருதயத்துக்குள் பாவவெறுப்பும் தீமைக்கு விலகும் தன்மையும் உண்டாகும்படி செய்யவேண்டும். வாலிபத்தில் செய்யும் பழக்கம் எதுவோ, நன்மையானாலும் தீமையானாலும் அதுவே நீடித்து ஆளும் நிலைகொண்டிருக்கும்.

[a] எரே. 23. 4: எசே. 34. 11–16.

அவர்களுக்குச் செல்லும் செலவு என்ன உண்டோ அவ்வளவும் ராஜமானியப் பொக்கிஷத்தில் இருந்து இலவசமாய்க் கொடுக்கப்பட்டு வந்தாலும் ஆதரவற்ற பரதேசிகளின் பாலியருக்கு அது ஒரு கல்விச்சாலைபோலும் வைத்தியசாலைபோலும் இருந்தாலும் அவர்கள் பூரண மனோற்சாகத்தோடு தங்கள் பாலியரை அவ்விடத்தில் இருந்த மேல்விசாரணைக்காரரிடம் ஒப்புவிக்கும்படி அதிகமாய் ஏவப்பட்டார்கள்.

அப்புறம் அவர்கள் தங்கள் வழியே நடந்துபோனார்கள். அவர்கள் கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் தப்பிப்போய் சந்தேக அரமனைக்குள் அடைக்கப்படும் கைதிகளாக வழிதப்பி அகோரபயங்கர ராட்சதனால் பிடிபட்ட பேதவழி மைதானத்திற்குப் போகும் படிக்கட்டுப் பாதையண்டை வந்து சேர்ந்ததாக நான் என் சொப்பனத்தில் கண்டேன்.

## அகோரபயங்கர ராட்சதனைச் சங்காரம் செய்தல்.

அவ்விடத்தில் வந்தவுடனே அவர்கள் உட்கார்ந்து, தாங்கள் அநேகராய் இருப்பதினாலும் வீரபராக்கிரமராகிய தைரியநெஞ்சன் தங்களுக்கு வழிகாட்டியாய் இருப்பதினாலும் தாங்கள் அனைவரும் ஏகமாய்க் கூடி அந்த ராட்சதன் மேல் விழுந்து அவன் அரணையும் ஆகமாக்கி, அவ்வரண்மனைக்குள் சிறைப்பட்டிருக்கும் பிரயாணிகள் யாராவது உண்டானால் தாங்கள் இவ்விடம் விட்டுப் புறப்படுமுன் விடுதலை செய்யக்கூடாதா என்றும் ஆலோசித்துக்கொண்டார்கள். இந்த ஆலோசனைக்கு ஒருவர் ஒருவிதமாயும் வேறொருவர் வேறுவிதமாயும் பேசினார்கள். அவர்களில் ஒரு ஆள் பரிசுத்தமாக்கப்படாத பூமியில் கால் மிதிக்கலாமா என்று ஆட்சேபித்தான். இன்னொருவன் நமது நோக்கம் நல்முடிவை நோக்கினால் மிதிக்கலாம் என்றான். அதைக் கேட்ட தைரியநெஞ்சன், பிந்தின சித்தாந்தம் சிறந்தது என்பதை சர்வலோக சத்தியம் என்று ஒப்புக்கொள்ளக் கூடாதாயினும், பாவத்தை எதிர்க்கவும் பொல்லாப்பை ஜெயிக்கவும் விசுவாசத்தில் நல்ல போராட்டம் பண்ணவும் நான் கட்டளைபெற்று இருக்கிறேன். இந்த நல்ல போராட்டத்தை நான் அகோரபயங்கர ராட்சதனோடு செய்யாவிட்டால் வேறு யாரோடுதான் நான் செய்

பிரயாணிகள் அகோரபயங்கர ராட்சதனைச் சங்காரஞ் செய்யத் தீர்மானித்தல்.



யவேண்டியது? நீங்களே சொல்லும்படி வேண்டுகிறேன். நான் அவன் உயிரை வாங்கி அவன் அரண்மனையையும் அர்த்தநாசம் பண்ணிவிடும்படி தீர்மானிக்கிறேன். என்னோடு யுத்தசன்னத்தராய் வரும்புகிறவர்கள் யார்? என்று கேட்டார். உடனே யதார்த்தன் என்ற பெரியவர் அதற்கு நானுங்கூட என்றார். நாங்களும் இதோ வருகிறோம் என்று கிறிஸ்தீனாளின் நாலு குமாரராகிய மத்தேயுவும் சாமுவேலும் யோசேப்பும் யாக்கோபும் எழுந்திருந்தார்கள். ஏனெனில் அவர்கள் வாலிபரும் வலுமையும் உடையவர்களாய் இருந்தார்கள்.a தாங்கள் திரும்ப வருமட்டும் நொண்டியையும் எழுத்தனத்தையும் ஸ்திரீகளுக்குப் பக்கபலமாக ராஜபாதையில் அவரவர் தடியோடு அவர்கள் விடுகிறார்கள். அகோர பயங்கர ராட்சதனுடைய அரண் வெகு சமீபத்தில் இருந்தாலும் ராஜபாதையில் இருப்பவர்களை ஒரு சிறுபையன் காபந்து செய்து நடத்திக்கொள்ளலாம்.b

ராட்சதனுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப்போன சேனை.

கடைசியாக தைரியநெஞ்சனும் யதார்த்தனும் அந்த நாலு வாலிபரும் அகோரபயங்கர ராட்சதனுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப் போனார்கள். அவர்கள் கோட்டைவாசலண்டை வந்தவுடனே ஒருக்காலும் இல்லாத வண்ணமாய்க் கதவைத் தட்டினார்கள். அச்சத்தம் கேட்டவுடனே கிழ ராட்சதன் வந்தான், அவன் மனைவியாகிய கூச்சம் அவனைப் பின்தொடர்ந்தாள். ராட்சதன் வந்து, யார் அது? இவ்வளவு பலமாய்த் தட்டுகிற நீ ஆர்? அகோர பயங்கர ராட்சதர் திடுக்கிடும்படி தட்ட அவ்வளவு அச்சம் இல்லையா? என்று கேட்டான். அதற்கு தைரியநெஞ்சன், மோட்ச பிரயாணிகளை மேலோகத்துக்கு வழிகாட்டும் உன்னத ராஜாவின் தாசபதிகளில் ஒருவனாகிய தைரியநெஞ்சன் தான் தட்டுகிறேன். நான் உட்பிரவேசிக்கும்படி நீ தாழ்ப்பாள்களைத் திறக்கவேண்டும் என்று உனக்குக் கட்டளையிடுகிறேன். அதோடு என்னோடே யுத்தஞ்செய்யவும் நீ ஆயத்தம் பண்ணிக்கொள்; ஏனெனில் உன் தலையை வாங்கிப்போடவும் சந்தேக அரண்மனைக் கோட்டையையும் குட்டிச்சுவராய் ஆக்கிவிடவும் நான் இதோ வந்து இருக்கிறேன் என்றார்.

a 1 யோ. 2, 13, 14.    b ஏசா. 11, 6.

காமே ராட்சதன் ஆக்கதே, என்னை வெல்ல இங்கே ஆரால் ஆகும்? என்று அகோரபயங்கர ராட்சதன் எண்ணிக்கொண்டிருந்தான். பின்னும் அவன் சொல்வான்; தேவதூதனையும் ஜெயித்துப்போட்ட என்னை இந்த தைரியநெஞ்சன் பயப்படுத்திப் போடுவானோ? எல்லாது ஒரு கை பார்ப்போம் என்று சொல்லிக்கொண்டு போர் ஆயுதங்களைத் தரித்துப் புறப்பட்டு வந்தான். அவன் உருக்கினால் செய்யப்பட்ட தலைச்சீரா அணிந்து அக்கினி மார்பு கவசம் கட்டி இருப்புப் பாதரட்சை தரித்து கையில் ஓர் பெரிய தடியும் பிடித்து வந்தான். அவன் வெளிப்பட்டவுடனே அவர்கள் ஆறுபேரும் அவனை முன்னும் பின்னும் வலமும் இடமுமாய்ச் சூழ்ந்துகொண்டார்கள். அவனுக்குத் துணைபுரியும்படியாகக் கூச்சமும் வந்தாள். ஆனால் யதார்த்தன் தமது வாளால் அவள் சிரசை ஒரே வீச்சில் வீசிப்போட்டார். அப்புறம் அவர்கள் எல்லாரும் உயிர் இன்றுதான் நீத்துப்போனாலும் போகுது என்று வீரத்துவம்பாராட்டிக்கொண்டு ராட்சதனோடே போர் புரிந்து அகோரபயங்கர ராட்சதனைக் கீழே விழத் தள்ளினார்கள். ஆனால் அவன் உயிர் லேசில் போய்விடுகிறதுபோல் காணப்படவில்லை. அவன் வதைத்து வதைந்து வெகுநேரம் கிடந்தான், பல உயிர்கொண்ட பூனை உயிர் அவனுக்கு இருந்தது என்றே சொல்லவேண்டியது. கடைசியாகத் தைரியநெஞ்சன் அவன் தலையை வெட்டி அவனுக்கு முடிவை உண்டாக்கினார்.

ராட்சதனோடு செய்த போர். அவன் அபஜெயம் அழிவு.

அப்பால் அவர்கள் சந்தேக அரணைத் தரைமட்டமாக்க முயன்றார்கள். அகோரபயங்கர ராட்சதனே தொலைந்தானே, இனி அவன் அரணை இடிக்க அவ்வளவு கஷ்டம் இருக்குமா? அதை அந்தரநாசமாக்க அவர்களுக்கு ஏழுநாள் சென்றது. அவ்வரண்மனைக்குள் சாகப்போகிறதுபோல் காணப்பட்ட எக்கம் என்பவரும் அவருடைய செல்வபுத்திரியாகிய திகிலுற்றாளும் அகப்பட்டார்கள். இவ்விருவரையும் அவர்கள் உயிரோடு தற்காத்தார்கள். ஆனால் அதற்குள் அங்கும் இங்கும் கிடந்த செத்தபிணங்களையும் குவிந்துகிடந்த மனுஷ எலும்புகளையும் நீ பார்த்தால் பிரமிப்பு அடைவாய் என்பதற்கு ஐயம் இல்லை.

சந்தேக அரணைத்தை இடித்து விட்டது. அங்கே அகப்பட்ட கைதிகள்.

தைரியநெஞ்சனும் மற்றவர்களும் தாங்கள் போன காரியத்தை முடித்தபின்பு எக்கம் என்பவரையும் அவர் குமா



ரத்தி திகிலுற்றாளையும் தங்களோடு கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் அகோரபயங்கர ராட்சதனால் பிடிக்கப்பட்டுச் சந்தேக அரண்மனையின் சிறைச்சாலைக்குள் வாசம்பண்ணினவர்களாய் இருந்தாலும் அவ்விருவரும் உத்தமராகவே இருந்தார்கள். அவர்கள் அகோரபயங்கர ராட்சதன் பிணத்தின் மேல் கற்களைக் குவித்து அவன் தலையைமாத்திரம் வெட்டி கையில் தூக்கிக்கொண்டு, ஜெயம் ஜெயம் என்று சொல்லி ராஜபாதையில் இருந்த மற்றவர்களிடத்திற்கு வந்து காட்டினார்கள். அதைக் கண்ட கொண்டியும் ஏழைத்தனமும் இந்தத் அரக்கனுடைய தலைதான் என்று அறிந்து ஆனந்தங்கொண்டு துள்ளினார்கள். இப்பொழுது கிறிஸ்தினாள் கையில் ஒரு கின்னரமும் அவள் மருமகளாகிய தயாளியின் கரத்தில் ஒரு காககரமேளமாத்திரம் இருந்திருக்குமானால், அவர்கள் ஆட்டையும் பாட்டையும் கண்ணால் பார்க்கவும் வாயால் சொல்லவும் கூடாது. என்றாலும் அவர்கள் மனமகிழ்ச்சி அவ்வளவு அதிகமாய் இருந்ததினால் கிறிஸ்தினாள் ஒரு கீதம் பாடினாள். அந்தக் கீதத்துக்கு ஏற்ற தாளம் போட்டு கொண்டி கூத்தாடினான். பின்னும் அவர் எக்கம் என்பவன் மகளாகிய திகிலுற்றாளின் கையைச் சேர்த்துப் பிடித்துக்கொண்டு கூத்தாடிக் கும்மி அடித்துக்கொண்டே வழிநடந்தார். கொண்டி ஒருகையில் தடி பிடித்துக்கொள்ளுவது இன்றியமையாது அவசியமாய் இருந்தபோதிலும் கீதத்துக்கு ஏற்ற தாளமாகக் காலெடுத்துவைத்தார். திகிலுற்றாளாகிய அந்தப் பெண் இருக்கிறாளே, அவளை வெகுவாய்ப் புகழவேண்டியது. அவள் பாட்டின் அநுக்குக்கு ஏற்ற குறுக்குப் பண்ணி வெகு ஒய்யாரமாக நடனம் ஆடினாள்.

பிரயாணிகளின் ஜெயகோஷம்.

எக்கம் இருக்கிறாரே, அவர் பாட்டுக்கு அவ்வளவு ஆட்டாளி அல்ல. கூத்தாடுவதைப்பார்க்கிலும் கும்பியை நிரப்புவதையே அவர் கவலைப்பட்டு ஆசித்தார். ஏனெனில் அவர் வெகு காலமாகப் பட்டினியாய்க் கிடந்ததுண்டு. ஆதலால் கிறிஸ்தினாள் தன் துருத்தியில் இருந்த பானத்தில் கொஞ்சம் அந்த நேரத்தில் கொடுத்து உதவிசெய்து அப்பால் அவருக்கு அவசரமான போஜனத்தையும் ஆக்கிக்கொடுத்தாள். உண்ணா மயக்கத்தால் தள்ளாடின அந்தக் கிழவர் உண்ட மகிழ்ச்சியால் ஸ்திரமடைந்து ஆனந்தாட்டம்போட ஆரம்பித்தார்.

இக்காரியங்கள் நடந்தபோதெல்லாம் நான் என் சொப்பனத்தில் இருந்தேன். கடைசியாக தைரியநெஞ்சன் என்ப

வர் வழியோரத்தில் முன் கிறிஸ்தியான் பிரயாணிகளுக்கு எச்சரிப்பாக பேதவழி மைதானத்திற்குப் போகும் படிக்கட்டுக்குச் சமீபமாய் எழுப்பி இருந்த ஸ்தம்பத்துக்கு எதிரே ஒரு ஸ்தம்பம் கட்டி அதின்மேல் அகோரபயங்கர ராட்சதனுடைய தலையைக் கழுவில் ஏற்றிவைத்தார்.[1]

அந்த ஸ்தம்பத்தின் பால் வெள்ளைக்கல்லின்மேல்,

இந்தத் தலையை உடையவன்
நாமமே பிரயாணிகளை
பயப்படுத்தும்; அவன் அரண்
அவன் மனைவி அச்சம் என்பவள்
அனைத்தும் அழிந்தது, வீரன்
தைரியநெஞ்சனால்; எங்களும்
அவன் புத்திரி திகிலுற்றாளும்
தப்பினார்கள், குற்றமிராமலும்;
சந்தேகிப்பவர் கண்ணோக்குங்கால்
சந்தேகங்கள் யாவும் நீங்கும் பார்;
இத்தலையார்க்கும் வழிப்போக்கர்
இனிச் சங்கடம் இல்லை என்பார்

என்ற வாசகம் எழுதிவைக்கப்பட்டது.

இவ்வண்ணம் அவர்கள் தங்கள் வீரதீர பராக்கிரமச் செய்கைகளைக்கொண்டு அகோரபயங்கர ராட்சதனைச் சங்காரம் பண்ணி அவன் அரணை நாசமாக்கினபிற்பாடு தங்கள் வழியே நடந்து கிறிஸ்தியானும் திடநம்பிக்கையும் சிலகாலம் தங்கி பரமகாட்சிகளைக் கண்டு களிகூர்ந்த ஆனந்தமலை வந்துசேர்ந்தார்கள்.

## பிரயாணிகள் ஆனந்தமலை சேருதல்.

பிரயாணிகளைக் கண்டவுடனே ஆனந்தமலையைச் சேர்ந்த இடையர் அனைவரும் ஏகமாய் வந்து கிறிஸ்தியானையும் திடநம்பிக்கையையும் முன்னினதுபோலவே இவர்கள் ஒவ்வொருவரையும் மிகவும் உபசரித்தார்கள்.

[1] சந்தேக அரக்கன் அநேகந்தரம் இறந்துபோனபோதிலும் மேலாய் திரும்பவும் எழும்பக்கூடும். இந்தக் கோட்டை பிரயாணிகளால் தட்டப்பட்டிருக்கிறது; அந்த ராட்சதன் அவர்களுடைய பயங்கரம் சந்தேகம் இவற்றால் உண்டானவன். தேவன்பேரிலுள்ள பூரண நம்பிக்கைமாத்திரம் இந்தக் கோட்டையைத் திரும்பவும் கட்டப்படாமல் இருக்கப்போகும்.



பிரயாணிகள் ஆனந்தமலை சேருதல்.

இந்த இடையருக்கும் தைரியநெஞ்சனுக்கும் அதிகப் பழக்கம் இருந்ததினால் அவரோடேகூட வந்த கூட்டமான பிரயாணிகளை அவர்கள் கண்டு அதிசயப்பட்டு, இத்தனை பேரோடு வரும் வீரபராக்கிரமனே! இவர்களை எங்கே கண்டு பிடித்தீர் என்று கேட்டார்கள்.

அதற்கு தைரியநெஞ்சன் சொல்வார்,

கிறிஸ்தியாள், அவள் பந்து ஜனங்களுமாம்;
மக்கள் நால்வரும் அவர்கள் பாரியும் ஆக ஒன்பதுபேர்.
திசைக்கருவிபோல் திசைமாறாமலே இவர் எல்லாரும்
பாவவழி விட்டுத் திருவழி போனார்.
மற்றபடி இவர் ஆனந்தமலை காணார்;
இவர்களோடு கிழ யதார்த்தனும் வருகின்றார்.
கொண்டியாரும் ஏழைத்தனரும் எங்களும்
அவர் புகலிடமாம் நிச்சயத்தாலுமே,
சொல்லுவோ! இங்கு இடம் உண்டோ சொல்லும்,
இல்லாவிட்டால் எதும் இடம் எங்கே என்று சொல்லும்,

என்றார். அதற்கு அந்த இடையர்; இது எங்களுக்கு ஏற்ற கூட்டந்தான்; நீங்கள் வந்தது எங்களுக்குச் சந்தோஷந்தான்; இவ்விடத்தில் பெலவீனருக்கு ஏற்றதும் பெலவான்களுக்கு ஏற்றதுமான சகல சவரட்சணையும் உண்டு.[1] இவர்களில் சிறியோரானவர்களிலேயும் எங்கள் ராஜா கண்ணோக்குகிறார். ஆதலால் ஒருவனுடைய பலவீனம் அவன் இங்கே அங்கீகரிக்கப்படுவதற்குத் தடையாய் இருக்கமாட்டாது என்றார்கள்.[2] அப்புறம் அவர்களை ஆனந்த மலையின் அரமனைக்குக் கூட்டிப் போய், ஏழைத்தனனே! மனதிடனாய் வாரும்; கொண்டியே! துக்கமாய் வாரும்; ஏகமே! பாங்காய் வாரும்; திகிலுற்றவளே! குலுங்கி நகைத்துவா என்று வருந்தி அழைத்து இவர்கள் எல்லாரும் பின்வாங்கிப் போகாதபடிக்கு இப்படிப் பேர்பேராய்க்

[1] பெலசாலிகளுக்கும் பெலவீனருக்கும் ஒருப்போலவே ஒத்தாசையும் ஆதரவும் அவசியம். ஒரேவகையான குறைச்சல் இருவருக்கும் கிடையாது. ஒவ்வொருவருக்கும் ஒரோர் குறை உண்டு. அவரவருக்கு ஏற்ற சவரட்சணையை தேவன் ஏற்படுத்தி இருக்கிறார். உதவி அவசியப்படாதபடி ஒருவரும் பூரண பெலசாலிகளாய் இருப்பதும் இல்லை; தேவ பெலத்தால் ஸ்திரப்படுத்தக்கூடாதபடி அவ்வளவு பெலவீனரும் இல்லை.

[2] மத். 25. 40.

கூப்பிட்டோம்; இனி பிரியான பராக்கிரம வீரரே! நீங்கள் அனைவரும் உங்கள் தைரியத்தோடும் தாராளத்தோடும் உட்பிரவேசியுங்கள் என்று சொன்னார்கள். அதைத் தைரியநெஞ்சன் கேட்டு: உங்கள் நெற்றிகளில் இருமையின் ஜோதி ஜொலிப்பதையும் நீங்கள் என் ஆண்டவரின் உத்தம மேய்ப்பர் என்பதையும் இன்று நான் அறிந்துகொண்டேன். ஏனெனில் நீங்கள் பலவீனரைப் புறக்கணியாமலும் அவர்கள் சிதறிப்போகும்படி பக்கத்தினாலும் முன்னந்தொடையினாலும் தள்ளிப்போடாமலும் புஷ்பமாரி பொழிந்து புன்னகையோடு அரமனைக்குள் சேர்த்துக்கொண்டீர்கள்.[உ]

அப்படியே பலவீனரும் தள்ளாடிகளும் படிக்கட்டேறி அரமனைக்குள் பிரவேசித்தார்கள்; தைரியநெஞ்சனும் மற்றவர்களும் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள். அவர்கள் எல்லாரும் உள்ளே போய் உட்கார்ந்தவுடனே, முதலாவது பலவீனம் உடையவர்களுக்கு வேண்டியது என்ன? என்று கேட்டனுப்பினார்கள். ஏனெனில் இவ்விடத்தில் பலவீனரைப் பலப்படுத்தவும் ஒழுங்கில்லாதவர்களைச் சீர்ப்படுத்தவும் செய்யத்தக்க பிரயத்தனங்கள் என்ன உண்டோ அவை எல்லாம் செய்யப்படவேண்டிய வழக்கம் இருந்தது. அவர்களுடைய சுகத்துக்கு ஏதுவாக வெகு ஜீரணிக்கத்தக்கதும் நாவுக்கு ருசியுள்ளதும் பலத்துக்கு ஏதுவானதுமான பல பதார்த்தங்கள் கொண்டுவந்து கொடுக்கப்பட்டது. அவரவர் தம்தம் போஜனத்தை உண்டு ஆனபின்பு தங்கள் தங்கள் பள்ளியறைகளில் படுத்து இளைப்பாறும்படி போனார்கள்.

மறுநாள் அதிகாலையில் அவர்கள் எழுந்திருந்தவுடனே அம்மலை மா உயரமாய் இருந்ததாலும் அன்றையத்தினம் நல்ல பகலாய் இருந்ததினாலும் வந்த பிரயாணிகளுக்கு அம்மலையின் காட்சிகளைக் காண்பிப்பது அவர்கள் வழக்கமாய் இருந்தபடியினாலும் இவர்கள் கொஞ்சப் போஜனம் சாப்பிட்டுக்கொண்டு புறப்பட்டார்கள். இடையர் முதலாவது கிறிஸ்தியானுக்குக் காட்டின காட்சிகள் எல்லாவற்றையும் இவர்களுக்கும் காட்டினார்கள்.

அதிசயகிரியின் காட்சி.

அதன்பின்பு வேறு சில நூதன காட்சிகளையும் அவர்களுக்குக் காட்டினார்கள். முதலாவது பிரயாணிகளை அதிசயகிரிக்குக் கொண்டுபோனார்கள்; அங்கே இருந்து அவர்கள், கண்ணோக்குகையில் இதோ ஒரு மனிதன் தான் போட்ட

உ எசே. 34. 21.



சத்தத்தால் பர்வதங்களின் சிகரங்களைக் கிளறி மேலதாக்கப் போகிறதுபோல் பேசுகிறதைக் கண்டார்கள். இதின் தாற்பரியம் என்ன என்று பிரயாணிகள் இடையனைக் கேட்டார்கள். அதற்கு அவர்கள்: இந்த மனுஷன் நீங்கள் மோட்ச பிரயாணப் பிரபந்தத்தின் முதலாம் பங்கில் வாசித்து அறிந்த அருளாதிக்கருடைய மக்களில் ஒருவன். ஒருவன் விசுவாசத்தில் தாழ்ந்துபோகிறதும் அல்லது வழிபிசகி இடறிவிழுவதும் எப்படி என்றும், விசுவாசத்தினாலே எவ்வளவு பிரமாண்டமான தடைகளையும் நிவிர்த்திசெய்துவிடலாம் என்றும் பிரயாணிகளுக்கு உணர்த்தும்படி அவன் அங்கே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறான் என்றார்கள்.[௩] அது கேட்ட தைரியநெஞ்சன் நான் அவனை அறிவேன், அவர் அநேகரைவிட மேலானவர்தான் என்று சொன்னார்.

நிமலமலை, மாசில்லாமணி.

அப்புறம் இடையர் அவர்களை நிமலமலை என்னப்பட்ட பர்வதத்தின்மேல் கூட்டிக்கொண்டு போனார்கள். அவ்விடத்தில் ஒரு மனுஷன் வெண்ணுடை தரித்து நின்றதையும் அவன்மேல் எதிரி, துர்மனசு என்னும் இருவர் சேற்றையும் அழுக்கையும் வாரிவாரி எறிவதையும் கண்டார்கள். அவர்கள் எவ்வளவு சேற்றைத்தான் அவன்மேல் வாரி எறிந்தபோதிலும் இதோ அவை எல்லாம் வெகு சீக்கிரத்துக்குள்ளாக விழுந்துபோய், அவன் வஸ்திரம் முன்போல் வெண்மையாயும் சுத்தமாயும் இருந்ததென்று கண்டார்கள். இதின் அர்த்தம் என்ன என்று பிரயாணிகள் கேட்க இடையர் சொல்லுவார், இவருக்கு மாசில்லாமணி என்று பேர். இந்த வஸ்திரம் அவருடைய பழுதில்லா ஜீவியத்தைக் காட்டுகிறது. அவர்மேல் சேற்றைவாரி எறிகிறவர்கள் அவர் நன்றாய் இருப்பதை விரும்பாத துர்மனசாய் இருக்கிறார்கள். என்றாலும் அவர்மேல் அந்த அழுக்குகள் படியாமல் விழுந்துவிடுகிறதை நீங்கள் பார்க்கிறீர்களே; அதுபோலவே பரிசுத்தமாய் ஜீவனஞ்செய்கிறவர்கள் காரியமும் இருக்கும். அப்படிப்பட்டவர்களை அழுக்காக்கிப்போடவேண்டும் என்று அல்லும் பகலும் முயற்சிசெய்கிறவர்கள் வீணும் பிரயோஜனமுமற்ற வேலையிலே தங்கள் பிரயாசத்தைச் செலவிடுகிறார்கள். ஏனெனில் கொஞ்சக்காலத்துக்குள்ளாக தேவன் அவர்கள் நீதியை வெளிச்சத்தைப்போலவும் அவர்கள் நியாயத்

௩ மாற். 11. 23, 24.

தை பட்டப்பகலைப்போலவும் பிரகாசிக்கச் செய்வார் என்றார்கள்.

தருமமலைக் காட்சி.

அப்புறம் அவர்களை தருமமலைக்கு அழைத்துக்கொண்டு போய், ஒரு மனுஷன் முன்னே ஒரு மூட்டை துணிகள் இருப்பதையும் அதை அவன் குளிர்கிறவர்களுக்குச் சட்டை முதலிய உடுப்புக்கு என்று கிழித்துக்கொடுக்கிறதையும் கிழித்துக் கொடுக்கக் கொடுக்க அந்தத் துணிமூட்டை குறையாமல் அப்படியே இருக்கிறதையும் அங்கிருந்து காட்டினார்கள். இதின் தாற்பரியம் என்ன என்று பிரயாணிகள் கேட்டதற்கு தன் சம்பாத்தியத்தில் இருந்து ஏழைகளுக்குக் கொடுக்கும்படியான மனதுடையவன் எவ்வளவுதான் கொடுத்த போதிலும் குறைவு அடையமாட்டான். எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்; ஒரு தீர்க்கதரிசிக்கு அந்த விதவை ஒரு வடை கொடுத்ததினாலே அவள் பானையின் மாவு குறைவாய்ப் போனதில்லை என்று விவரித்தார்கள்.

கறுப்பனை வெள்ளையாக்கின காட்சி.

அப்பால் அவர்களை வேறொரு இடத்துக்குக் கூட்டிப்போனார்கள். அங்கே பித்தன், வைத்தியன் என்ற இருவரும் கூடி ஒரு எத்தியோப்பியனை வெள்ளையாகும்படி தேய்த்துக் கழுவிக்கொண்டு இருந்தார்கள். இதின் கருத்து என்ன என்று பிரயாணிகள் கேட்டார்கள். அதற்கு அவர்கள், சீர்கெட்ட பாவிகளின் நிலைமை இப்படி இருக்கிறது, அவன் நல்லவனெனப் பேர் எடுக்கவேண்டும் என்று செய்யப்படும் பிரயத்தனம் எல்லாம் அவன் முன்னிலும் கெட்டவன் ஆகவே ஏதுவாய் இருக்கிறது, பரிசேயர் காரியம் எல்லாம் இப்படியே இருந்தது, எல்லா மாயக்காரர்கள் காரியமும் இவ்வண்ணமே முடியும் என்றார்கள்.

தயாளி காண ஆசித்த நரக வாய்க் காட்சி.

அப்புறம் தயாளி தன் மாமியாரண்டைபோய், அம்மா! ஒரு மலைச்சாரலில் எதோ ஒரு கெபி இருக்கிறதாமே, அதை நரக ஒற்றைப் பாதை என்று சொல்லுவார்களாமே, அதைப் பார்க்க எனக்கு மெத்தப் பிரியம் இருக்கிறது என்று சொன்னாள். அந்தச் செய்தியைக் கிறிஸ்தீனாள் இடையருக்குத் தெரியப்படுத்தினாள். அப்படியே மலைச்சாரலில் இருந்த அந்தக் கெபிக்கு அவர்களைக் கூட்டிக்கொண்டுபோய், அதின் கதவைத் திறந்துவிட்டு, தயாளியைப் பார்த்து: அம்மா! உன்



அதை நிறும்மட்டும் பார்த்து காதடைக்குமட்டும் கவனித்துக் கேள் என்று சொன்னார்கள். அப்படியே அவள் அக் கெபிக்குள் இருந்து வரும் சத்தத்தை வெகு கவனமாய்க் கேட்டாள். கேட்டபோது என் காலை ஜீவவழியையும் சமாதானத்தின் பாதையையும் விட்டு விலகச்செய்த என் தகப்பன் சபிக்கப்பட்டவன் ஆவானாக என்று புலம்பும் ஒரு குரலையும் ஐயோ என் ஜீவனை இரட்சித்துக்கொள்ளும்படி என் மாம்சம் வார்வாராய்க் கிழிக்கப்பட்டு இருந்தாலும் நன்றாய் இருக்குமே, இப்போது என் ஆத்துமாவை இழந்துவிட்டேனே! என்று அலறும் குரலையும், இன்னொருவன் நான் இருப்பவும் பூலோகத்தில் ஜீவித்து இருக்கமாத்திரம் சகாயம் கிடைக்குமானால் இவ்விடத்துக்கு வரும்படி விரும்புவதிலும் என்னை முற்றிலும் வெறுத்து ஜீவபாதையில் நடப்பேனே என்று பிரலாபித்ததையும் அவள் கேட்டாள். இவை எல்லாம் அவளுடைய காதுகளில் விழவே அவள் மிகவும் பயந்தாள். அவள் நின்ற இடமும் அக்கம்பக்கமும் குமுறி அதிர்ந்தாற்போல் அவளுக்குக் காணப்பட்டது. அவள் முகம் வெளுத்துப் போயிற்று; கால் கைகளும் ஆட்டம் கொடுத்தது. அவள் பரவசமுண்டு இந்த இடத்தின் உபாதிகளுக்குத் தப்பிப் பிழைத்தவனும் பிழைத்தவளும் பாக்கியர், பாக்கியர் என்று சொல்லிக்கொண்டு வந்தாள்.

இவ்வளவு காட்சிகளையும் இடையர் அவர்களுக்குக் காட்டியபின்பு அவர்களை அழைத்துக்கொண்டு மறுபடியும் அரமனைக்கு வந்து அரண்மனையின் ஆசீர்வாதங்களை எல்லாம் அவர்களுக்கு அளித்தார்கள். தயாளி வாலிபமும் கொஞ்சக் காலத்துக்கு முன்னேதான் கலியாணம் பண்ணப்பட்டவளும் ஆனதால் அரமனையில் உள்ள ஒரு பொருளின்மேல் அவளுக்கு அதிக நாட்டம் இருந்தது. ஆனால் நாம் எப்படிக் கேட்கிறது என்று சற்று கூச்சப்பட்டாள். அவளுடைய முகம் குறுகி இருக்கிறதைக் கண்ட மாமி அவளைப் பார்த்து: உன் மனக் கவலை என்ன, சொல் அம்மா! என்று கேட்டாள். அதற்கு அவள், அம்மா! இவ்வரண்மனை போஜனமண்டபத்தில் ஒரு மாதிரிக் கண்ணாடி தொங்கவைக்கப்பட்டிருக்கிறது, அதைப்

தயாளி ஆசித்த கண்ணாடி.

பாராமல் என் மனம் ஆறாது. அதைப் பார்க்கும் சகாயம் எனக்குக் கிடையாவிட்டால் என் மனம் உடைந்துபோம் என்றாள். அதற்கு கிறிஸ்தீனாள்; பெண்ணே! உன் விருப்பம் இன்னது என்று நான் மேய்ப்பருக்குச் சொல்லி அது ஆகும்

படி செய்வேன்; அவர்கள் காட்டமாட்டோம் என்று சொல்லமாட்டார்கள் என்றான். அதற்கு அவள்: இதின்பேரில் எல்லாம் ஆசைபோல் காட்டுகிறேனே என்று அவர்கள் என்னைப்பற்றி எண்ணிக்கொள்ளுவார்களோ என்று நான் வெட்கப்படுகிறேன் என்றாள். அதற்கு மாமி: மகளே! இது வெட்கமாய் இராமல் வியந்துகொள்ளப்படத்தக்க விஷயமாய் இருக்கிறது, இதைப்போல நல் நோக்கம் உண்டோ என்றாள். அப்படியானால், அதை விற்பார்களா என்று கேட்டுப்பார் என்று தயாளி சொன்னாள்.

அந்தக் கண்ணாடியின் தத்துவம்.

இந்தக் கண்ணாடி[1] ஆயிரம் பொருளிலும் அரிய பொருள் என்று சொல்லவேண்டியது. அதை ஒரு பக்கம் திருப்பினால் அதைப் பார்க்கிற ஆளுடைய சுபாவமுகம் திட்டமாய்த் தெரியும்; இன்னொருபக்கம் திருப்பினால் பரதேசியின் முகச்சாயலும் ஜீவியமும் அதனில் இருக்கிறது என்று காட்டிவிடும். அதைப்பார்த்து இருக்கிற பலரும் எனக்குச் சொன்னபிரகாரம் அந்தக் கண்ணாடி வழியாகப் பார்த்தால் அவருடைய தலையின்மேல் இருந்த முட்கிரீடத்தையே காணலாம். மேலும் அதின் வழியாக அவருடைய கைகள் கால்கள் விலாவில் உண்டான ஆணித்துவாரங்களையும் ஈட்டித்துவாரங்களையும் அவர்கள் பார்த்து இருக்கிறார்களாம். அதின் வழியாகப் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு அவர்கள் அரசர் உயிரோடு இருக்கிறாரோ மரித்துப்போனாரோ, அவர் பூமியில் இருக்கிறாரோ வானத்தில் இருக்கிறாரோ, அவர் தமது தாழ்மையில் இருக்கிறாரோ மேன்மையில் இருக்கிறாரோ, அவதிப்பட வருகிறாரோ ஆளுகை செய்ய வருகிறாரோ, என்று இப்படிப்பட்ட மேலான காட்சிகளை எல்லாம் பார்த்துக்கொள்ளலாம்.[a]

அப்பொழுது கிறிஸ்தீனாள் அந்த மேய்ப்பர் இடத்தில் கேட்கப்போனாள். அவர்களுக்கு அறிவன், அனுப்பியாஸி, விழிப்பாளி, கபடின்மை என்று பேர் வழங்கப்பட்டது. கிறிஸ்தீனாள் அவர்கள் இருந்த மடத்துக்குப் போய், மேன்

[1] கண்ணாடி என்பது தேவவசனம். அது தேவ பரிபூரணத்தையும் அவருடைய குணாதிசயங்களையும் நமது சொந்த அவலட்சணத்தையும் நிலைமையையுங்கூட வெளிப்படுத்துகிறது. யாக். 1. 22–25 வாசித்துப் பார்க்க.

a யாக். 1. 23. 1 கொரி. 13. 12. 2 கொரி. 3. 18.



கைபொருந்திய மேய்ப்பரே! என் மருமக்கள்மாரில் ஒருத்தி இவ்வாரண்மனையில் உள்ள ஒரு பொருளின்மேல் தீராத ஆசைகொண்டிருக்கிறாள். கண்ணுக்கு எட்டின அப்பொருள் கைக்கு எட்டாது என்று நீங்கள் திருவாய் மலர்ந்தருளிவிட்டால், என் மகள் இளைப்பால் சாவாள்போல் இருக்கிறது என்றாள்.

அச்செய்தி கேட்டவுடனே அனுப்பியாஸி என்பவர் கூப்பிடு கூப்பிடு, அவளை வரச்சொல்லு, நாங்கள் செய்யத்தக்க சகாயம் என்ன உண்டோ அதை எல்லாம் செய்யக் காத்திருக்கிறோம் என்றார். அப்படியே அவளைக் கூப்பிட்டு, மாதே மயங்காதே! உன் மனக்கவலையை மறைக்காதே; உனக்கு வேண்டியது எதுவோ அதைச் சொல்லு என்று கேட்டார்கள். உடனே அவள் மெத்தக் கலங்கி, அடியாளுக்கு அசன அறையில் தொங்கவைக்கப்பட்டு இருக்கிற கண்ணாடி வேண்டும் என்ற ஆவலே அன்றி வேறு ஆசை இல்லை என்றாள். கபடின்மை உடனே ஓடி பூரண சந்தோஷத்தோடு அதை எடுத்துவந்து அவளுக்குக் கொடுத்தார். உடனே அவள் தலைகுனிந்து பணிந்து அதை வாங்கிக்கொண்டு, உங்கள் கண்களில் அடியாளுக்குத் தயவு கிடைத்தது என்பதை நான் இதினாலே அறிந்துகொண்டேன் என்றாள்.

அந்தக் கண்ணாடி அவளுக்குக் கிடைத்தது.

அதுவும் அன்றி அந்த மேய்ப்பர் மற்றப் பெண்கள் விரும்பிய பொருட்களையும் கொடுத்து, அவர்கள் புருஷன்மார் தைரியநெஞ்சனோடேகூடச் சேர்ந்துகொண்டு, அகோரபயங்கர ராட்சதனைச் சங்காரம் செய்து, சந்தேக துருக்கத்தையும் தரையாக்கிவிட்ட வீரத்துவத்துக்காக அவர்களை வெகுவாய்ப் புகழ்ந்து பேசினார்கள்.

மற்ற ஸ்திரீகளின் வெகுமதிகள்.

அதுவும் அன்றி அந்த மேய்ப்பர் கிறிஸ்தீனாளுடைய கழுத்திலும் அவளுடைய நாலு மருமக்கள்மார் கழுத்திலும் பொற்சரப்பளியையும் காதுகளில் நகைகளையும் போட்டு தலைக்கு நெற்றிப்பட்டம் கட்டினார்கள்.

அவர்கள் அவ்விடத்தில் இருந்து புறப்பட்டுப் போகும்படியான சமயம் வந்தபோது; முன் கிறிஸ்தியானுக்கும் நம்பிக்கைக்கும் சொன்னதுபோல பல எச்சரிப்புகள் ஒன்றும் சொல்லாமல் சமாதானத்தோடே புறப்படுங்கள் என்று மாத்திரம் சொன்னார்கள். இதற்கு முகாந்தரம் என்னவெ

ன்றால், இவர்களுக்கு வழித்துணையாக தைரியநெஞ்சன் கூடப் போகிறதினாலே அவருக்கு எல்லாக் காரியங்களும் தெரியும் என்றும், ஆபத்து கிட்டியிருந்தபோதிலும் அந்தச் சமயத்திற்கு ஏற்ற புத்திகளைச் சொல்லி யாதொரு சேதம் இல்லாமல் நடத்திக்கொண்டு போவார் என்றும் அவர்கள் அறிந்து இருந்தபடியினாலும் இந்த மேய்ப்பர் முன் கிறிஸ்தியானுக்கும் அவன் தோழனுக்கும் சொன்ன எச்சரிப்புகளை அவர்கள் தேவை உண்டான காலத்தில் நினைவுகூர்ந்து அதின்படி செய்யாமல் மறந்துபோனபடியாலும் இச்சமயத்தில் அவர்கள் பிரயாணிகளுக்கு யாதொரு எச்சரிப்பும் கொடுக்கவில்லை. ஆதலால் முந்தின பிரயாணிகளைவிட இவர்கள் இந்த விஷயத்தில் பாக்கியசாலிகளாய் இருந்தார்கள் என்று சொல்லவேண்டியது.

அப்புறம் அவர்கள்

(அம்மானை.)

மோட்ச பிரயாணிகளுக்கு ஆறுதலை உண்டாக்க,
வழிப்போக்கரான யாரும் வாழ்ந்து களித்திருக்க,
அத்தன் அருளாய் இருக்கும் ஆயன்களைக் கண்டாயோ?
தங்களுக்குத் தக்கால் தப்பார் எவரும் உண்டோ?
அல்ல, அல்ல; கண்டவுடன் கதவைத் திறக்கிறார்கள்,
அந்தந்த வீட்டில் உள்ள அரும்பொருளைத் தாருர்கள்,
இந்த உபசரணை பரலோக வாழ்வை எல்லாம்
இங்கேயே காட்ட, சந்தோஷச் செய்யுகப்பால்
சத்திரங்கள்தோறும் தந்த பொருள் அனைத்தும்
தங்குவோர் அல்ல, நாம்; பிரயாணி என்று உணர்த்தும்

என்று சொல்லிப் பாடிக்கொண்டே ஆனந்தமலை அரமனையை விட்டு தங்கள் வழியே போனார்கள்.

ஆனந்தமலையிலிருந்து பயணப்பட்டது.

1 உண்மையும் இரக்கமுமுள்ள போதகன்மாருடைய விசாரணையின் கீழ் இருக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவும் அவர்களுடைய எச்சரிப்பையும் ஆலோசனையையும் பெற்றுக்கொள்வார்கள். ஆனால் கிறிஸ்தியானைப்போல் அந்நாளில் அவர்களில் ஒன்றாய்ப் போய்க் குடியிருப்பவர்களுக்கு விசேஷித்த ஒத்தாசையும் போதனையும் தேவனிடத்தில் இருந்து வரவேண்டியது. போதகன்மாரின் கடமை பிரசங்கிப்பதுமட்டுமல்ல; சமயமான காலந்தோறும் கருணையாய் விசாரணையும் எச்சரித்து தைரியப்படுத்துவதும் கடமைதான்.



அவர்கள் ஆனந்த மலைத்தொடரைவிட்டுக் கடந்தவுடனே கிறிஸ்தியான் பாதிந்திய பட்டணத்தில் இருந்து வந்த மறுதலிப்பு என்பவனைச் சந்தித்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது நம்பிக்கை அவனைக்குறித்த சங்கதிகளை எல்லாம் பிரயாணிகளுக்குச் சொல்லத் தொடங்கி இந்த இடத்தில் தான் மறுதலிப்பு என்பவன் தன் செய்கையை முதுகின் மேல் போட்டுக்கொண்டு போகிறதாகக் கிறிஸ்தியான் கண்டான். அவன் காரியங்களைக்குறித்துச் சொல்லுகிறேன் கேளுங்கள்:—அவன் எவர்களுடைய ஆலோசனையையும் கேட்கமாட்டான். ஒருதரம் பட்டால் ஒதுங்கி வாழும் புத்தி அவனுக்கு இல்லை. அவன் சிலுவையும் கல்லறையும் இருக்கிறதே அந்த இடத்துக்கு வந்தபோது ஒரு ஆள் வந்து இதை நோக்கிப்பார் என்று சொல்லியே அவன் பாராமல் தன் பல்லைக் கடித்து, காலால் தரையில் உதைத்துக்கொண்டு, நான் திரும்பவும் தன் ஊருக்குப் போய்விடும்படி தீர்மானித்து இருக்கிறதாகச் சொன்னான். இடுக்குவாசலுக்குக் கிட்ட அவன் வந்தபோது சுவிசேஷகர் தமது கையை நீட்டி இங்கே வா, சரியான பாதையில் உன்னை வைக்கிறேன் என்று கூப்பிட்டார்; அவனோ அவருடன் எதிர்த்துப் பேசி வெகுவாய் அவமானப்படுத்திப்போட்டு சுவர் ஏறிவிழுந்து ஓடிப்போனான் என்று சொன்னார்.

## சத்திய வீரதீரனைச் சந்தித்தல்.

பிரயாணிகள் சத்திய வீரதீரனை சந்தித்தது.

அப்பால் அவர்கள் தங்கள் வழியே போய் அற்பவிசுவாசி கொள்ளையிடப்பட்ட ஸ்தானத்துக்கு வந்தார்கள். அவ்விடத்தில் வந்தபோது, உருவின பட்டயத்தோடும் இரத்தம் பட்ட முகத்தோடும் ஒரு மனுஷன் நிற்கிறதை அவர்கள் கண்டார்கள். நீ யார்? என்று தைரியநெஞ்சன் அவனைக் கேட்டார். அதற்கு அவன்: நான் சத்திய வீரதீரன் என்ற பேருடையவன்; நான் உச்சிதபட்டணம் போகும் பிரயாணிகளில் ஒருவன். நான் என் பாட்டிலே என் வழியே போகையில் மூன்று பேர் எதிர்ப்பட்டு என்னை வளைந்துகொண்டு, நீ எங்களோடு கூடிக்கொள்ளுகிறாயா? இல்லையானால் நீ புறப்பட்டு வந்த ஊருக்குத் திரும்பிப் போகிறாயா? இல்லையானால் இந்த இடத்திலேயே சாகிறாயா? என்று

மூன்று கேள்விகளைக் கேட்டார்கள்.[a] அவர்களுடைய முதலாம் கேள்விக்கு உத்தரவாக, நான் உத்தமனாகி வெகுகாலமாகிறதால் இனி திருடனோடு கூடிய திருடனாகிறது அசாத்தியம் என்று சொன்னேன். அப்படியானால் இரண்டாம் கேள்விக்கு என்ன ஆட்சேபனை சொல்லப்போகிறாய் என்று கேட்டார்கள். அதற்கு நான், என் ஜநநதேசம் எனக்குப் பிடித்து இருந்தால் அங்குள்ள வாழ்வை எல்லாம் மறந்து இப்படிப் பரதேசியாகி இருக்கமாட்டேன், அந்தத் தேசம் எனக்கு எவ்வளவேனும் ஒத்துக்கொள்ளாததினாலேயும், நான் அவ்விடத்தில் ஒரு பலனும் காணாததினாலுமே அதை முற்றிலும் கைவிட்டுப்போட்டு இப்படி பிரயாணி ஆனேன் என்றேன். அப்படியானால் மூன்றாம் கேள்விக்கு என்ன சொல்லுகிறாய் என்று கேட்டார்கள். அதற்கு நான், வீணாய் விட்டுவிடுகிறதற்கு என் ஜீவன் அவ்வளவு அற்பமான பொருள் அல்ல; அதுவும் அன்றி இப்படிச் செய்வாயா? அப்படிச் செய்வாயா? என்று என்னை நீங்கள் கேட்க அவசியமா? என் ஜீவனோடு நீங்கள் சருகுவீர்களானால் உங்கள் ஜீவனுக்கு அழிவுகாலம் வந்தது என்று எண்ணிக்கொள்ளுங்கள் என்று சொன்னேன். இப்படிச் சொன்னவுடனே துஷ்டப் பயல், திடரென்போன், வெடுக்கன் என்று பேருடைய அந்த மூவரும் அப்படியா செய்தி என்று வர்மம் கூறி என்னுடன் நெருங்கினார்கள்; நானும் நெருங்கினேன். அப்புறம் அந்த மூவரும், நான் ஒருவனுமாக சுமார் மூன்றுமணிநேரம் கலந்து சண்டைபோட்டு இதோ மேதாய்க் கிடந்து புரண்டோம். அவர்கள் தங்கள் வீரத்துவத்துக்கு சாட்சியாக என்மேல் நீங்கள் பார்க்கும் இந்தக் காயங்களை உண்டுபண்ணினார்கள்; என் வீராதிவீரத்துவம் அவர்கள்மேல் உள்ள காயங்களால் தெரியவரும். அவர்கள் இப்போதான் ஓடிப்போனார்கள்; நீங்கள் வந்த காலடி கேட்டுத்தான் ஓட்டம் பிடித்தார்கள் போல் இருக்கிறது என்று சொன்னான்.[1]

சத்திய வீரனை மடக்கிய தடை.

1 இவர்களுக்குள் உண்டான சண்டையானது உத்தமமான தொண்டர்களுக்கு விபரீத எண்ணமும் கோட்பாடும் உள்ளவர்களால் நேரிடும் விரோதத்தைக் காண்பிக்கிறது. அவர்களுடைய நம்பிக்கையிலும் செய்கையிலும் நாம் சரிபோகாது நடவாவிட்டால் நம்மைச்

a நீதி. 1. 11-14.



தைரி. இவ்விடத்தில் காரியம் விபரீதமாய் அல்லோ இருக்கிறது? மூவருக்கு விரோதமாய் ஒரு ஆள் நின்று இருக்கிறீரே!

சத். அது மெய்தான். ஆனால் சத்தியம் எவன் பட்சத்தில் இருக்கிறதோ அவனுக்கு விரோதமாய்க் கொஞ்சப்பேர் வந்தால் என்ன, அநேகம்பேர் வந்தால் என்ன? ஒன்றும் இல்லையே. "எனக்கு விரோதமாய் ஒரு பாளயம் இறங்கினாலும் என் இருதயம் பயப்படாது; என்மேல் யுத்தம் எழும்பினாலும் இதிலே நான் நம்பிக்கையாய் இருப்பேன்" என்று ஒரு பக்தன் சொன்னாரே.[a] அது மாத்திரமோ? ஒரு மனுஷன் ஒரு இராணுவத்தையும் எதிர்த்து மடக்கி ஜெயம்பெற்றிருக்கிறான் என்றும், சிம்சோன் என்பவர் கழுதையின் தாடை எலும்பைக் கொண்டு எத்தனையோபேரை முறியடித்தார் என்றும் நான் சரித்திர ஆகமங்களில் வாசித்து இருக்கிறேனே!

தைரி. இப்படிப்பட்ட ஆபத்தில் இருக்கையில் நீர் ஆள் உதவி கிடைக்கும்படி அபயமிடக் கூடாதா?

சத். அபயமிட மறப்பேனா? அக்ஷணமே எங்கள் அரசனை நோக்கி அபயம் இட்டேன். அவர் உடனே என் அபயக்குரலைக் கேட்டு என்னை அறியாமலே சகாயம் செய்வார் என்று எனக்குத் தெரியும்; அதுவே எனக்குப் போதும்.

தைரி. நீர் செய்த பிரயத்தனம் மெச்சிக்கொள்ளப்படத்தக்கது. உம்முடைய பட்டயத்தைக் காட்டும் பார்ப்போம் என்று தைரியநெஞ்சன் கேட்டார். அப்படியே காட்டினார்.

தைரியநெஞ்சன் அதை வாங்கி சற்றுநேரம் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு, ஆகா! இது அசல் எருசலேமின் பட்டயம்[1] என்றார்.

கொடுமையாய்த் துன்பப்படுத்துவோர் சிலர் உண்டு. நாம் சத்தியத்தில் நிலைத்திருக்க உறுதியாய்த் தீர்மானமும் பண்ணினால் அடிக்கடி இப்பேர்ப்பட்டவர்களுடன் மல்லுக்கு நிற்கவேண்டிவரும்.

1 முற்காலத்தில் கிறிஸ்தவ பட்டாளம் ஐரோப்பாவிலிருந்து பிரயாணப்பட்டு பரிசுத்ததேசத்தை (கானான்) துருக்கராண்டு ஜெயித்துக்கொள்ள வந்தபோது எதிரிகளை மடக்கி எருசலேமுக்குள் பிரவேசிக்கவேண்டியதாய் இருந்தபடியால் முதல்தரமான வாள்களை உண்டு பண்ணிக்கொண்டார்கள். ஆகவே சத்துருக்களை ஜெயிக்கத்தக்க முதல்தரமான கத்திக்கு எருசலேமின் பட்டயம் என்று பேர் உண்டாயிற்று.

a சங். 27. 3.

சத். ஆம், ஆம் இது அசல் எருசலேமின் பட்டயம்தான். இதின் ஒன்றுமாத்திரம் ஒருவனுக்கு இருக்கட்டும்; அவன் இதைத் தக்கபடி பிடிக்கும் புஜபலமும் பிரயோகிக்கும் சமர்த்தும் மாத்திரம் இருந்தால் பாதாளபூதத்துக்கும் எதிர்த்துப் போகலாமே. இதைப் பிரயோகிக்கும் சமர்த்துமாத்திரம் தெரியுமானால் பிடிக்கும் முறைமையைப்பற்றி அவன் அஞ்ச வேண்டியதில்லை. அதின் கருக்கு ஒருகாலத்திலும் மழுங்கிப் போகவேமாட்டாது. அது மாமிசத்தையும் எலும்புகளையும் ஆத்துமாவையும் ஆவியையும் மற்றது எல்லாவற்றையும் கண்டதுண்டம் ஆக்கிவிடும்.

தைரி. நீர் வெகுநேரம் போராடி இருக்கிறீர்; உமக்கு இளைப்பு உண்டாகாதது மெத்த ஆச்சரியம்.

வார்த்தையாலும், விசுவாசத்தாலும், இரத்தத்தாலும்.

சத். பட்டயம் என் கையோடு ஒட்டிக்கொள்ளுமட்டும் நான் போராடினேன். என் கைகள் இரண்டும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு, என் கைக்குள் இருந்தே ஒரு கத்தி வளர்ந்தாப்போல் இருந்தது. என் விரல்கள் வழியாய் இரத்தம் தாரைதாரையாய் வடிந்ததைக் காணக்காண நான் அதிக வீரத்தோடு போர்புரிந்தேன்.

தைரி. வெகு சமர்த்தாய் சண்டைசெய்து இருக்கிறீரே! பாவத்துக்கு விரோதமாய் இரத்தம் சிந்துமட்டும் போராடி இருக்கிறீர். நீர் எங்களுக்கு சமீபமாய் வாசம்பண்ணி எங்கள் வீட்டில் வந்து எங்களோடு புறப்படும். ஏனெனில் நாங்கள் உம்முடைய தோழர் என்று சொல்லி அவனைக் கூட்டிக் கொண்டுபோய், அவருடைய காயங்களையும் இரத்தங்களையும் கழுவி அவர் களையை ஆற்றும்படி தங்களிடத்தில் இருந்த வஸ்துக்களைக் கொடுத்து, அப்புறம் எல்லாரும் கூடி ஒன்றாய் வழிநடந்துபோனார்கள்.

இப்படி எல்லாம் ஒன்றாய் வழிநடந்து போகையில், அவர்களுடைய வழிகாட்டிக்கு உண்டான சந்தோஷம் இவ்வளவு என்று இல்லை. தன்னைப்போலொத்த பராக்கிரமனாகிய சத்திய வீரனைப் பலவீனரான மற்றப் பிரயாணிகளுடன் அகப்பட்டது தனக்குக் கை உதவிபோல் இருந்தது. ஆதலால் அவனுடன் அநேக விஷயங்களைக்குறித்து சம்பாஷித்துக்கொண்டு போனார்.

தைரியநெஞ்சன் கேட்கிறார்: ஐயா! நீர் எந்தத் தேசத்தான்?



சத். நான் அந்தகார பூமியான். அதுவே என் பிறந்தகம்; என் தாய் தந்தையும் அங்கேதான் இன்னும் இருக்கிறார்கள்.

தைரி. அந்தகார பூமியா? அது நாசபுரியில் இருக்கும் கடல் துறைப்பட்டணங்களில் ஒன்று அல்லவா?

சத்தியவீரர் பிரயாணியான வரலாறு.

சத். ஆம் ஆம், அங்கேதான் இருக்கிறது. நான் மோட்ச பிரயாணியாகும்படி என்ன காரணம் இது தான்: சுந்தியவாதி என்று நாமமுடைய ஒருவர் எங்கள் ஊருக்கு ஒருதரம் வந்து, நாசபுரியில் இருந்த கிறிஸ்தியான் என்ற ஒருவன் தன் மனைவி மக்கள் எல்லாரையும் வெறுத்துவிட்டது எப்படி என்றும் தன் ஜீவகாலம் எல்லாம் பிரயாணம் செய்தது இன்ன விதம் என்றும் விபரமாய்ச் சொன்னார். அவன் தன் வழியே போகும்போது அவனுக்கு எதிர்ப்பட்ட வல்லசர்ப்பம் ஒன்றை அவன் எப்படி எதிர்த்துக் கொலைசெய்தான் என்றும் தான் நாடிய தேசத்தை எப்படிச் சேர்ந்தான் என்றும் கேள்விப் பட்டேன். அதுவும் அன்றி அவனுடைய ஆண்டவரின் சந்நிதிகள்தோறும் அவனுக்குச் செய்யப்பட்ட உபசரணைகளும் என்பவைகளும் கொஞ்சம் இல்லையாம். விசேஷமாய் அவன் உத்தியானத்தின் அலங்காரவாசலை அடுத்த உடனே அவனுக்கு நடத்தப்பட்ட மரியாதைகளுக்கு ஒரு கணக்கு இல்லையாம். அங்கே போய்ச் சேர்ந்தவுடனே ஒளிமயமுடைய பலர் துணைபுரள எக்காளதொனியோடு அவனை உள்ளே அழைத்துக்கொண்டுபோனார்கள் என்றும் அவர் சொன்னார். அவன் உள்ளே போனவுடன் அங்குள்ள மணிகள் எல்லாம் எவ்வித இன்பமாக சந்தோஷ ஒலியால் முழங்கி அவனை ஏற்றுக் கொண்டது என்றும், எப்படிப்பட்ட பொன்சரிகை உடுப்பால் அவன் உடுத்தப்பட்டான் என்றும், இன்னும் என்னென்ன பாக்கியங்களோ அவனுக்கு உண்டாயிற்று என்றும் அவர் சொன்னார். அவை எல்லாம் இப்போது சொல்லிமுடியாது. ஒரே வார்த்தையில் அடக்கிச் சொன்னால், கிறிஸ்தியான் பெற்ற மேன்மைகளை எல்லாம் கேட்டவுடனே என் ஆவியில் அனல் மூண்டு, இந்தக்ஷணமே அவன் பிறகாலே போக வேண்டும் என்று ஆவல் எழும்பும்படியாக அவர் சொன்னார்.[1] என்னை நிறுத்திவிட என் தகப்பனாராலாவது தாயாராலாவது

[1] தேவனுடைய ஜனங்களின் அநுபோக சரித்திரத்தைச் சொல்லுதல் ஒரு நன்மையான காரியம். அது மற்றவர்களையும் அம்மாதிரியாக ஜீவனம் பண்ணவும் நடந்துகொள்ளவும் ஏவிவிடும்.

டவில்லை. ஆகவே நானும் புறப்பட்டு இவ்வளவு தூரம் பிரயாணம்செய்து இந்த இடத்தில் வந்திருக்கிறேன்.

ஞாநி. இட்டிவாசலுக்கு வந்தீர் அல்லவா?

சந். ஆம், வந்தேன். கிறிஸ்தியானுடைய சமாசாரங்களை யெல்லாம் சொன்னவர்தான் நீ இட்டிவாசல்வழியாய்ப் போகாவிட்டால் ஒரு பிரயோஜனமும் இல்லை என்றும் சொன்னார்.

ஞாநி. அதைக் கேட்ட வழிகாட்டி கிறிஸ்தினாளைப் பார்த்து; பார்த்தாயா அம்மா! உன் கணவனுடைய பிரயாணமும் அவருக்கு உண்டான பாக்கியங்களும் சமீபமானவர்களுக்கும் தூரமானவர்களுக்கும் பிரசித்தமாய் இருக்கிறது என்றார்.

சந். அந்த அம்மாள் யார்? கிறிஸ்தியானுடைய மனைவியா?

ஞாநி. ஆம், அது அவர் மனைவிதான்; இந்த நாலு வாலிபரும் அவருடைய பிள்ளைகள்தான்.

சந். என்ன ஆச்சரியம்! மோட்ச பிரயாணந்தான் போகிறார்கள்?

ஞாநி. ஆம், மெய்யாகவே இவர்கள் அவரைப் பின்தொடருகிறார்கள்.

சந். என் இருதயம் சந்தோஷமாய்த்தான் களிகூருகிறது! கிறிஸ்தியான் பாக்கியவான்.—தன்னோடு கூட வரமாட்டோம் என்று சொன்னவர்கள் தனக்குப் பின்னாலே புறப்பட்டு உட்டிணத்தின் அலங்காரவாசலை மிதிக்கிறதை அவன் காணும்போது எவ்வளவு சந்தோஷமாய்த்தான் இருப்பான்.

ஞாநி. அதற்கும் சந்தேகமா? தான் அங்கே இருக்கிறேன் என்ற மகிழ்ச்சியோடு தன் மனைவிமக்களும் வருகிறதைக் கண்டால், எவ்வளவு பேரானந்தமும் ஆறுதலும் அவனுக்கு உண்டாகும்.

சந். நாம் இப்பொழுது பரலோக சந்தோஷங்களைப்பற்றிய பேச்சில் இருக்கிறோமே; அதோடு அதாய் ஒரு காரியத்தைக் குறித்து உம்முடைய அபிப்பிராயம் என்ன என்று அறிய ஆசிக்கிறேன். பரலோகத்தில் நாம் ஒருவரை ஒருவர் இனம் அறிந்துகொள்வோமா?

மறுமையில் ஒருவரை ஒருவர் இனம் அறிவார்கள்.

ஞாநி. பரலோகம் சேர்ந்தவர்கள் தங்களை இன்னார் என்று அப்பொழுது அறிந்துகொள்வார்களா? அல்லது தாங்கள் அந்த பாக்கியங்களை அநுபவிக்கிறதாக அறிந்து சந்தோஷப்பட்டுக்கொள்ளுவார்களா? இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்? அவர்கள் தங்களை அறிந்து தாங்கள் அங்குள்ள பாக்கியங்களை அநுபவிப்பதை உணர்ந்துகொள்ளுவார்களானால், மற்றவர்களை அறிந்து அவர்களுடைய பாக்கியங்களைக் கண்டு ஏன் களிகூர மாட்டார்கள்? மேலும் பந்துக்கள் நம்மை அடுத்தவர்கள் ஆனதால் பரலோகத்தில் அந்தப் பந்தத்துவம் அற்றுப் போனபோதிலும் அவர்கள் அவ்விடத்தில் வராமல் இருப்பதிலும் வந்திருப்பது நமக்கு அதிக மகிழ்ச்சியை உண்டாக்கும் என்று நிர்மாணிப்பது புத்திக்கு விரோதமாய் இருக்கமாட்டாதே.[1]



சந். இதைப்பற்றி உமது அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்று இப்போது கண்டுகொண்டேன். என் பிரயாண ஆரம்பத்தைக் குறித்தும் இன்னும் ஏதாவது கேட்கப்போகிறீரா?

ஞாநி. ஆம், கேட்கத்தான் விரும்புகிறேன். நீர் பரதேச பிரயாணம்செய்வது உமது தாய்தந்தைகளுக்குச் சம்மதமாய் இருந்ததா?

சந். அவர்களுக்குச் சம்மதமாய் இருக்குமா? அவர்கள் தங்கள் வீட்டை விட்டுப் போகாதபடிக்குப் பண்ணாத பிரயத்தனம் எல்லாம் பண்ணினார்கள்.

ஞாநி. அவர்கள் செய்த தடைகள்தான் என்ன?

சந். பரதேசியாய்ப் போவது பயித்தியக்காரருடைய ஜீவனோபாயம்;[2] உனக்குச் சோம்பலும் அசதியும் பிரியம் இல்லை ஆனால் பரதேசியாகவும் பிரியப்படமாட்டாய் என்று சொன்னார்கள்.

ஞாநி. வேறே ஏதாகிலும் சொன்னார்களா?

சந். அவர்கள் சொன்ன தடைகளுக்குக் கணக்கு உண்டா?

---

[1] இது பன்னியன் என்பவர் காலத்தில் இருந்ததுபோலவே தற்காலத்திலும் தர்க்கிக்கப்படுகிற ஒரு கேள்வி. நாம் ஒருவரையொருவர் மோட்சத்தில் அறிந்துகொள்வோம் என்பது சாதாரண கோட்பாடு.

[2] சில கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய விஷயத்தில் கரிசனை உள்ளவர்களாய் இருக்கிறோம் என்று சாட்டுபண்ணிக்கொண்டு தங்கள் குடும்ப கடமைகளில் அசட்டையாய் இருக்கிறார்கள்; இது மிகவும் தப்பு. கிறிஸ்தவர்களை சோம்பலும் அசதியும் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்று அஞ்ஞானிகள் குறைகூறுகிறார்கள். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு இடங்கொடாதபடி மெய்க்கிறிஸ்தவர்கள் மற்றவர்களைவிட அதிக சுறுசுறுப்பும் சுறுசுறுப்பும் காண்பிக்க வேண்டும்.

அது மோசமும் நாசமுமான வழி. மோட்ச பிரயாணம் செய்வதைப்போல மோசமான பிரயத்தனம் இவ்வுலகத்தில் வேறு இல்லவே இல்லை என்றார்கள்.

தைரி. இந்த வழி மோசமானது என்பதற்கு ஏதாவது முகாந்திரங்கள் சொன்னார்களா?

சத். அவர்கள் அதற்குச் சொன்ன திருஷ்டாந்தங்கள் மெத்த உண்டு.

தைரி. அவைகளில் சிலவற்றைச் சொல்லும், பார்ப்போம்.

சத்தியவீரன் மோட்ச பிரயாணத் தடைகள்.

சத். கிறிஸ்தியான் விழுந்து நிர்மூலமாகிப்போன நம்பிக்கையிழவு உளையைப்பற்றிச் சொன்னார்கள். இட்டுக்கட்டிப்போய்த் தட்டுகிறவர்களை எய்து கொல்லும்படி பெயல்செபூலின் அரமனைமேல் பல வில்வீரர் நிற்கிறார்கள் என்பதாய்ச் சொன்னார்கள். வழியில் உள்ள காடுகள், அந்தகார பருவதம், கஷ்டகிரிச் சிங்கங்கள் இவைகளைப்பற்றிச் சொன்னார்கள். இரத்தப்பிரியன், சங்காரன், நலங்கொல்லி ஆகிய இம்மூவரைப்பற்றியும் சொன்னார்கள். மனத்தாழ்மையின் பள்ளத்தாக்கில் அவலட்சண ரூபம் உள்ள ஒரு பூதம் திரிகிறது என்றும் கிறிஸ்தியான் அவன் கைக்குத் தப்பினது தெய்வாதீனம் என்றும் சொன்னார்கள். அதுவும் அன்றி, காளிகளும் கூளிகளும் குடியிருப்பதும், இருளே ஒளியாய் இருப்பதும், கண்ணிகளாலும் பள்ளங்களாலும் பொறிகளாலும் நிறைந்து இருப்பதுமான மரணநிழலின் பள்ளத்தாக்கு வழியாய்ப் போக வேண்டியது என்றும் சொன்னார்கள். அதோடு அகோரபயங்கர ராட்சதனையும் சந்தேக அரணையும் பற்றிச் சொல்லி, பிரயாணிகள் அவனிடத்தில் படுகிற அவஸ்தைகளை எல்லாம் விபரித்தார்கள். அப்புறம் மயக்கபூமி என்ற ஓர் மைதானத்தைக் கடக்கவேண்டியது, அது மகா ஆபத்துள்ள இடம் என்று சொன்னார்கள். கடைசியாக இவை எல்லாவற்றையும் கடந்துபோனபின்பு அங்கே ஒரு பெரிய ஆறு உண்டு, ஆற்றுப் பாலமே இல்லை, ஆறு தாண்டி அக்கரை சேராவிட்டால் உச்சிதபட்டணம் சேரக்கூடாது என்று இப்படி எல்லாம் சொன்னார்கள்.

தைரி. இவ்வளவுதானா? இன்னம் உண்டா?

சத். இதோடே முடிந்ததா? இன்னும் இருக்கிறது இப்படி நாலுபங்கு. அந்தப் பாதை மோசக்காரரால் நிறைந்திருக்கிறது



என்றும் நல்மனிதரை நேர்வழியை விட்டு விலக்கிப்போடும்படி அநேகர் பாதை ஓரங்களில் பதிவிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள்.

தைரி. அந்த மோசக்காரரைக்குறித்து அவர்கள் சொன்னது எப்படி?

இரண்டாம் தடைகள்.

சத். லோகஞானி என்று ஒருவன் வஞ்சிக்கும்படி வழியில் காத்துக்கொண்டு இருக்கிறான்; அதற்குத் தப்பினால் வேஷக்காரன் மாயக்காரன் என்னும் இருவர் வழியிலே நிற்கிறார்கள்; அங்கும் தப்பினால் உபாயியாவது வாயாடியாவது தேமாவாவது உன்னை வாயில் போட்டுவிடுவார்கள்; அதற்கும் தப்பிக்கொண்டால் முகஸ்துதி உன்னை வலைக்கு உட்படுத்திவிடுவான்; இவை எல்லாவற்றுக்கும் நீ தப்பிக்கொண்டு உன் இளம்பிராயத்துக்கு ஏற்ற மதியீனத்தால் துணிந்து உச்சிதபட்டணத்தின் வாசலில் போய் நிற்பது மெய்யானால், நரகபாதாளத்தின் குறுக்குவழியே கொண்டுபோகப்பட்டு மலைச்சரிவில் இருக்கும் படுகுழியில் தள்ளப்படுவாய் என்று எல்லாம் சொன்னார்கள்.[1]

தைரி. உன் மனதை உடைக்கும்படி இவ்வளவே போதும் அல்லவா? ஆனால் இவ்வளவுதானா? இன்னும் உண்டா?

மூன்றாம் தடைகள்.

சத். இன்னும் இருக்குது, பொறுமையாய்க் கேளும்; இப்படிப்பட்ட ஒரு சிரேஷ்டதேசம் இருக்கிறது என்று பலரும் புகழ்ந்துபேசின செய்தியை நம்பி அம்மகிமைகளில் சிலவற்றைக் கண்டுகொள்ளலாம் என்று ஆவலாய்ப் புறப்பட்டுப் போன பலர் ஏமாந்துபோய்த் திரும்பிவிட்டார்கள் என்றும், அவர்கள் முந்தின தங்கள் மதியீனத்தை உணர்ந்து ஐயோ! நமது வீடுவாசலை மறந்து வீணாய்க் காலம் கழித்தோமே என்று எல்லாருடைய மனதுக்கும் திருப்தி உண்டாக அறிக்கையிட்டார்கள் என்றும் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட

[1] சத்துருக்கள் போர்க்கின்றவர்களுக்கு கெடுதி தொந்தரவுகளை பெருப்பித்துச் சொல்லுகிறதுமாத்திரம் அல்ல, அவர்களுடைய சேர்வையின் மகிமையையும் அபாக்கிய [illegible] வெறு [illegible]யாய் இருக்கிறார்கள். அயோக்கியராய் நடக்கும் கிறிஸ்தவர்கள் மெய்க்கிறிஸ்தவர்களுக்கு அவமதிப்பை உண்டுபண்ணுகிறார்கள்.

வர்களில் பிடிவாதன் ஒருத்தனும், இளகிநெஞ்சன் ஒருத்தனும், சந்தேகி ஒருவனாம், அச்சன் ஒருவனாம், மறுதலிப்பு ஒருவனும், நாஸ்திகன் ஒருவனும், இன்னும் இப்படி அனேக பேருடைய பேர்களைச் சொன்னார்கள்; இவர்கள் எல்லாரும் தாங்கள் கேள்விப்பட்ட வாழ்வைக் கண்டுபிடிக்கும்படி வெகுதூரம் போயும், ஒரு கோழி இறகுக்கு முதலாய் லாபம் இல்லை என்று திரும்பிவிட்டார்களாம்.

ஞாநீ. இன்னும் உமது மனதை உடைக்கும்படி அவர்கள் ஏதாவது சொன்னது உண்டா?

சத். ஆம் ஆம்; அச்சநெஞ்சன் என்று ஒருவன் பரதேசியாகி ஒண்டியாய் நடந்து, துயர சஞ்சலத்தை உடையவனாய் இருந்தானும்; மக்கம் என்ற ஒருவனும் அப்படியே தன் பயணத்தில் பசியும் பட்டினியுமாய்க் கிடந்து வெகுபாடு பட்டானும்; இன்னும் ஒரு சமயத்திலே மகத்தவனே போனவன், வெகு பிரஸ்தாபமாய்ப் பேசிக்கொள்ளப்பட்ட கிறிஸ்தியான் இருக்கிறானே, அவனும் உத்தமபட்டணத்தையும் கிரீடத்தையும் நாடிப்போய், கடைசியாகப் பாலமற்ற ஒரு கரும் ஆற்றில் ஆழ்ந்தே போனானும்; ஆற்றுக்கு அப்பால் அவன் ஒரு அடிமுதலாய்ப் போகாதிருந்தானும், அவனுடைய பட்சத்தார் அச்செய்தியை அப்படியே அடக்கிப்போட்டார்களாம்; இப்படி எல்லாம் சொன்னார்கள்.

காக்கும் தடைகள்,

ஞாநீ. இவைகளில் ஒன்றும் உன் மனதை அதைரியப்படுத்தவில்லையா?

சத். அவர்கள் என்னதான் சொல்லட்டும்; நான் யதார்த்தம் என்ற ஒரு குரு சொன்னதையே நம்பிப் பற்றிக்கொண்டேன். அது என் மனதை அசைக்கவே இல்லை.

ஞாநீ. உன் விசுவாசமே உனக்கு ஜெயம் ஆயிற்று என்று சொல்லவேண்டியது.

சத். அது சரியான வார்த்தை, நான் விசுவாசித்தேன் ஆகையினால் புறப்பட்டேன், ஆகையினால் மார்க்கத்தைச் சேர்ந்தேன், ஆகையினால் எனக்கு விரோதமாய் எழும்பிய தடைகளை எல்லாம் ஜெயித்தேன்; என் விசுவாசத்தினாலேதான் நான் இம்மட்டும் வந்து சேர்ந்திருக்கிறேன் என்றான்.



கும்மி.

1. சத்தியவீரனை, தீரனை, சூரனை
சாட்சியாகும் அற்புதனை
பார்க்க விரும்பினால் காட்டுவேன் வா அப்பா!
பரதேச பிரயாணம் போகவே.

2. காற்றோ, மழையோ, அடையோ, கோடையோ
கானலோ; வேனலோ வந்திடினும்
கால்வைத்த கால்பிசகாதபடி வைப்பான்
மேலுலகப் பிரயாணியாக.

3. யார் அவன் பின்னாலே என்னதான் சொல்லட்டும்
யார் அவன் முன்னாலே தோற்றுப் பார்க்கட்டும்
நின்றுநிலை பேரான், வந்தவர் வெட்குவார்,
மேலுலகப் பிரயாணியாக.

4. சிங்கம்வந் தெதிர்த்தபோதிலுமே அவன்
அஞ்சா வீரனாய் நின்றெதிர்ப்பான்
ஒன்றும் அவனை அசைக்கவே மாட்டாது
மேலுலகப் பிரயாணியாக.

5. காளிகள், கூளிகள் கரியருபிகள்
சலவாளி, பொறி பலசக்கடங்கள்
வந்திடினும் அவன் அஞ்சுவானோ? அல்ல,
மேலுலகப் பிரயாணியாக.

6. அந்தத்தில் நித்திய ஜீவன் இருக்குது
அதையே நானும் அனுபவிப்பேன்
என்றவன் அறிந்து அதில் தேறுவான்
மேலுலகப் பிரயாணியாக.

7. தன்னை அழிக்கவர் என்னதான் சொல்லட்டும்
அதற்கெல்லாம் அவன் அஞ்சமாட்டான்
அல்லும் பகலும் முயலுவானே அவன்
மேலுலகப் பிரயாணியாக.

## பிரயாணிகள் மயக்கபூமி சேருதல்.

இதற்குள்ளாகப் பிரயாணிகள் மயக்கபூமி வந்து சேர்ந்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். அதின் ஆகாயத்தன்மை எப்பேர்ப்பட்டவரையும் மயக்கிப்போடும். அந்த வனம் எங்கும் முள்ளும் குருக்கும் புதரும் காடுமாய் இருந்தது.

பிரயாணிகள் மயக்கபூமி சேர்ந்தது.

அங்கங்கே பிரயாணிகள் தாமதித்துத் தூங்கும்படி சில சோக மண்டபங்கள்[1] மாத்திரம் இருந்தன. அப்படிப்பட்ட பந்தலுக்குள் சிற் ஒருவன் போய் உட்கார்ந்தால் அல்லது தூங்கினால் அப்புறம் அவன் மறுபடியும் உயிரோடு விழித்து தன் பயணத்தில் நடப்பானோ என்பது லோகப்பிரசித்தமான சந்தேகந்தான். இந்த அபாயமான வனவழியாய் அவர்கள் பயணம் போகிறார்கள். தைரியநெஞ்சன் என்பவர் அவர்கள் வழிகாட்டி ஆனபடியால் அவர்களுக்கு முன்காவலாயும், யாதாம் ஓர் பூதமாவது வல்லசர்ப்பமாவது ராட்சதனாவது திருடனாவது பின்னால் இருந்து வந்து பிரயாணிகளைத் தாக்கிடுவும் தாக்குவார்கள் என்று சத்திய வீரதீரன் பின்காவலாயும், இப்படிக் கொண்டு பிரயாணிகளை நடத்தினார்கள். அந்த பூமி மகா மோசம் உள்ளது என்று அவர்கள் அறிந்து இருந்ததால் ஒவ்வொருவரும் உருவின பட்டயத்தோடு வழிநடந்தார்கள். அவர்களில் ஒருவரும் மனம் தளர்ந்து போகாதபடிக்கு ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்திக்கொண்டே போனார்கள். ஏழைத்தனம் தைரியநெஞ்சனின் பக்கத்திலும் மனம் சத்திய வீரன் பக்கத்திலும் நடந்துபோகும்படி வழிகாட்டி உத்தரவு கொடுத்தார்.

அவர்கள் கொஞ்சதூரம் போகவே, இதோ கனத்த பனி மூடிலும் காரிருளும் அவர்களைக் கவிந்துகொண்டது. அதனால் அவர்கள் வெகுநேரமாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கக்கூடாதபடி போயிற்று; அவரைச் சத்தம் காட்டி தாங்கள் தப்பிப்போகவில்லை என்றே ஜாடை காண்பித்து நடந்தார்கள்; ஏனெனில் அவர்கள் அப்பொழுது பார்த்து நடக்க இல்லை. எப்பேர்ப்பட்ட சமர்த்தனும் இவ்விடத்தில் தடுமாறிப் போவான் என்று நினைக்க ஆட்சேபனை இல்லை. வீரனைப்பற்றியே இப்படிச் சொல்லவேண்டியது ஆனால், காலும் மனமும் தள்ளாடின ஏழைப் பெண்பிள்ளைகளையும் பிள்ளை

[1] லௌகீக மனதுள்ளவர்கள் உத்தியோகவிஷயமாயும் சோம்பலையாயும் அதிகம் நெருக்கி உதவாமலிருந்தால் ஆத்துமத்திற்கு கேடு இம் மோசத்தை இது தெரிவிக்கிறது. லௌகீக விஷயங்களில் காரியசித்தியும் இந்த ஜீவியத்திற்குரியவைகளில் அநுகூலமும் பெறுவது மகிமையான பக்திவழியின் முடிவென்றும், ஜெபமும் விழிக்காமற்போகவும் செய்யும்போதும் என்று எண்ணப்படுகிறது. அநுகூலமும் சௌக்கியமும் பெறும்போது நாம் ஒடுங்கிப்போகாமல் தைரியமும் விழிப்பும் உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.



களையும் குறித்து என்ன சொல்லவேண்டியது! என்றாலும் அவர்களுக்கு முன்காவலும் பின்காவலுமாக வந்த தைரியநெஞ்சனும் சத்திய வீரதீரனும் அவர்களை உற்சாகப்படுத்தினதினாலே அவர்கள் சற்றுதூரம் எட்டி நடந்துபோனார்கள்.

அந்த வனவழியானது சேறும் சறுக்கலும் உள்ள பாதையாய் இருந்தது; இளைத்துப்போன பிரயாணிகள் இளைப்பாறிக்கொள்ளும்படியான ஒரு சத்திரமாவது சாவடியாவது அங்கே இருந்ததில்லை. பிரயாணிகள் உறுமுகிறதையும், பெருமூச்சு விடுவதையும் ஏங்கி ஏங்கி வலிப்பதையுமே கேட்கலாம். ஒருவன் சறுக்கி புதரில் விழுகையில் இன்னொருவன் சேற்றில் காலை மாட்டிக்கொள்ளுவான்; பிள்ளைகளில் சிலருடைய பாதரட்சை சேற்றுக்குள் அகப்பட்டுப் போயிற்று. ஒருவன் அப்படா சறுக்கிவிழுந்தேன் என்று அலறும்போது இன்னொருவன் ஓகோ எங்கே இருக்கிறீர்கள் என்று பரிதபிப்பான். வேறொருவன் ஐயோ புதருக்குள் அகப்பட்டுக்கொண்டேன், இனி நான் எப்படி வருவேன் என்று புலம்புவான்.

மயக்கபூமி அடைகிறார்கள்.

இப்படி அவர்கள் சங்கடப்பட்டு அப்பால் இருந்த ஒரு பூப்பந்தலில் சேர்ந்தார்கள். அது மெத்த அனலாயும் பிரயாணிக்கு வேண்டிய சந்தோஷங்களை எல்லாம் கொடுக்கிற ஒரு இடம்போலும் காணப்பட்டது. அந்தப் பந்தல் பச்சைக் கொடிகளால் மூடப்பட்டு வருவார் போவார் உட்கார்ந்து இளைப்பாறும்படியாக சில ஆசனங்கள் உடையதாய் இருந்தது. மெத்த அலுத்துப்போனவர்கள் படுத்து இளைப்பாறிக்கொள்ளும்படியாக பஞ்சமெத்தைபோட்ட கட்டில்களும் அங்கே இருந்தது. பிரயாணிகளைச் சோதனைக்கு உட்படுத்தும்படியாகவே இது எல்லாம் வைக்கப்பட்டு இருந்தன என்று நீ அறிந்துகொள்ளவேண்டியது. ஏனெனில் எந்தப் பிரயாணியும் இவ்விடத்திற்கு வருகிறதற்குள்ளாகப் படுகிற சங்கடங்களால் உட்காரவே மனங்கொள்ளுவான்; ஆனால் இந்தப் பிரயாணிகளில் ஒருவரும் அவ்விடத்தில் தாமதிக்கவேண்டும் என்பது போல ஜாடை காட்டவே இல்லை. அவர்கள் அனைவரும் தங்கள் வழிகாட்டியின் போதனைகளுக்குச் செவிகொடுத்து நடக்கிறதை நான் கவனித்தேன். வரப்போகிற ஆபத்தினையும் அவ்வாபத்தண்டை வந்தபோது அதின் தன்மையையும் வெகு திட்டமாய் வற்புறுத்தி வந்ததால் அவ்வாபத்துள்ள இடங்களுக்குச் சமீபமாய் வந்தவுடனே ஆவியில் வைராக்கி

யம் பூண்டு மாமிசத்தை ஜெயிக்கும்படியாக ஒருவர் மனதை ஒருவர் தைரியப்படுத்திக்கொண்டார்கள். இந்தப் பந்தலுக்கு சோம்பர் இளைப்பாறும் சத்திரம் என்று பேர் வழங்கப்பட்டது. சோம்பலுள்ள பிரயாணிகள் யாராவது வந்தால் அவர்களை மோசம் போக்கி இவ்விடத்தில் நிறுத்திவிடும்படியாகவே இது ஏற்படுத்தப்பட்டது.

சோம்பர் இளைப்பாறும் சத்திரம்.

அப்பால் அவர்கள் தங்கள் வழியே நடந்து எப்படிப்பட்ட சமர்த்தனும் வழிதப்பிப் போகும்படியான ஒரு இடத்தில்[1] வந்து சேர்ந்ததை நான் என் சொப்பனத்தில் கண்டேன். இவ்விடத்தில் அவர்கள் பட்டப்பகலில்மாத்திரம் வந்து இருப்பார்களானால், அவர்கள் வழிகாட்டி விபரீதவழி இன்னது என்று அவர்களுக்குக் காட்ட ஏது இருக்கும்; அவர்களோ இருட்டான சமயத்தில் அந்த இடத்திற்கு வந்ததினாலே அவரும்கூடத் திகைத்து நின்றுவிட்டார். உத்தம பட்டணத்துக்குப் போகிறதும் அங்கிருந்து வருகிறதுமான பாதைகளைத் திட்டமாய் உணர்த்தும் ஒரு படப்புஸ்தகம் அவர் மடியில் இருந்தது. அதைப் பார்த்தால்தான் மயக்கம் தெளியும் என்று அவர் தாம் எப்போதும் கூடவே கொண்டுபோகிற சக்கிமுக்கியைத் தட்டி பந்தம் கொளுத்திக்கொண்டு அந்தப் படப்புஸ்தகத்தைப் பார்த்தார். அதினாலே தாங்கள் நின்ற நிலையில் இருந்து சற்று வலதுபுறமாய் விலகி எச்சரிக்கையோடு திரும்பவேண்டும் என்று அறிந்துகொண்டார். இந்தப் புஸ்தகத்தைமாத்திரம் அவர் பார்த்துக்கொள்ளாவில்லை ஆனால், அவர்கள் எல்லாரும் பக்கத்தில் இருந்த சேற்றுப் பள்ளத்தில் அமிழ்ந்திப்போவார்கள் என்பதற்குச் சந்தேகம் இராது. ஏனெனில் அவர்களுக்கு எதிரே மகா விஸ்தாரமும் செவ்வையுமான ஒரு பாதையையும் அந்தப் பாதையின் முடிவில் சேறுநிறைந்த நெடுபாதாளமும் இருந்தது. பிரயாணிகளை விழுத்தாட்டி சேற்றுக்குள் திணித்துவிடவேண்டும் என்றே இந்தப் பாதாளம் ஏற்படுத்தப்பட்டது.

அந்தச் சமயத்தில் நான், வழியைக் காட்டப் படம்

[1] ஒரு கெட்டிக்காரனும் கூட தப்பிப்போகத்தக்கதாக விசுவாசிகள் அவ்வளவு மகிமையாக இருக்கும் என்று இதினால் அறியலாம். அப்பேர்ப்பட்ட தருணங்களில் தேவன் தமது பரிசுத்த வேதவாக்கியத்தில் அருளிச்செய்திருக்கும் வெளிச்சத்தை நாம் விசேஷமாய்க் கவனிக்கவேண்டும்.



இல்லாமலும் வழியைப்பற்றித் திகைப்பு உண்டானதையில் ஆலோசித்துக்கொள்ளும்படி ஒரு புஸ்தகம் இல்லாமலும் இப்படிப்பட்ட வனத்தில் பிரயாணம்செய்ய யாரால் முடியும்? என்று எண்ணிக்கொண்டேன்.

பூப்பந்தல் அசட்டை, வீம்பன்.

அவர்கள் எல்லாரும் தைரியநெஞ்சன் காட்டின திசையாகப் பின்னும் அந்த மயக்கபூமி வழியாகவே போகையில் வேறொரு பூப்பந்தலைக் கண்டார்கள். இது ராஜபாதையின் பக்கத்தில்தான் இருந்தது. அந்தப் பந்தலுக்குள் இரண்டுபேர் படுத்து இருந்தார்கள்; அவர்களுக்கு அசட்டை, வீம்பன் என்று பேர் வழங்கப்பட்டது. இந்த இருவரும் இவ்வளவு தூரம் பிரயாணம் செய்து இளைப்பினால் மேற்கொள்ளப்பட்டு சற்றுநேரம் கால் ஆறும்படி இவ்விடத்தில் உட்கார்ந்து அப்படியே தூங்கிவிட்டார்கள். இவர்கள் அவர்களைக் கண்டவுடனே, அவர்களுடைய பரிதாப நிலைமையை உணர்ந்து தங்கள் தலைகளை அசைத்துக்கொண்டார்கள். அப்புறம் நாம் நமது பாட்டிலே நடக்கிறது நலமா, அல்லது இவர்களைப் போய் எழுப்புகிறது நலமா என்று தங்களுக்குள் ஆலோசித்துக்கொண்டார்கள். கடைசியாக, நாம் போய் எழுப்புகிறதுதான் நலம்; ஆனால் அப்படி எழுப்பப்போகிறவர்கள் தங்களுக்குள்ள சகபாக்கியங்களை நாடி அவைகளின்மேல் ஆவது அங்கே உட்காரவே கூடாது என்று தீர்மானித்தார்கள்.

அப்படியே அவர்கள் அந்த பந்தலின் முன் நின்று வழிகாட்டி அவர்களை முன் அறிந்து இருந்தபடியால் அவ்விருவர் பேரையும் சொல்லிக் கூப்பிட்டு எழுப்பப் பார்த்தார்கள், ஆனால் ஒரு சத்தமும் இல்லை; அப்புறம் தைரியநெஞ்சன் குனிந்து அவர்களைத் தட்டி இழுத்து உருட்டி எழுப்பினார். அவர்களில் ஒருவன் எனக்கு வரவேண்டிய தொகை வந்தவுடனே உன் பாக்கியைச் செலுத்திப்போடுகிறேன் என்று சொல்லிக்கொண்டே திடுக்கென்று விழித்தான்; அதைக் கேட்ட வழிகாட்டி தமது தலையை ஆட்டிக்கொண்டார். மற்றவன்: கத்திபிடிக்கக் கையுள்ளமட்டும் நான் யுத்தம் செய்துவிடுவேன் என்று சொல்லிக்கொண்டே எழுந்தான். அதைக் கேட்டு பிள்ளைகளில் ஒருவன் கொல் என்று நகைத்தான்.

அப்போது கிறிஸ்தினாள் வழிகாட்டியைப் பார்த்து, இதின் அந்தரங்கம் என்ன என்று கேட்டாள். அதற்கு அவர்: இவர்கள் தங்கள் தூக்கத்தில் பேசுகிறார்கள். நீ இவர்களை அடித்

தாலும் சரி, உண்டாக்கினாலும் சரி, வேறென்ன செய்தாலும் சரி, அவர்கள் இப்படித்தான் உத்தரவு சொல்லுவார்கள். அல்லது அநேக ஆண்டுகளுக்கு முன்னே ஒருவர் சொன்னது போல் இவர்கள் நடுக்கடலிலே சயனித்து இருக்கிறவனைப் போலும் பாய்மரத்தட்டிலே படுத்து இருக்கிறவனைப்போலும் இருந்து நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்போது விழிப்பேன் என்கிறவனைப்போலும் இருக்கிறார்கள்.a மனிதர் தூங்கும்போது எதை ஆகிலும் பிதற்றுகிறார்கள். புத்தியினால் ஆவது விசுவாசத்தினால் ஆவது அது ஆளப்பட்ட வார்த்தைகளாய் இருக்கிறதில்லை. இவர்கள் பயணம் புறப்பட்டதற்கும் இவ்விடத்தில் வந்து தூங்கினதற்கும் எவ்வளவு ஒவ்வாமையாய் இருக்கிறதோ, அதுபோலவே இப்பொழுது அவர்கள் பேசின வார்த்தைகளும் ஒன்றுக்கொன்று இணக்கம் இல்லாமல் இருக்கிறது.1 இதிலேதான் இவர்களுடைய கேடெல்லாம் இருக்கிறது. அசட்டையாய்ப் பிரயாணம் செய்கிறவர்களில் இருபதுபேரில் ஒருவனாவது இப்படிப்பட்ட அபாயத்துக்குத் தப்பிக்கொள்ளுகிறது அபூர்வம். இந்த மயக்கபூமியே மோட்சப்பிரயாணிகளின் பகைஞனுடைய கடைசி எல்லை. பிரயாணிகளை மோசம் பண்ணும்படியாகப் பகைஞன் இடம் அறிந்து இந்தப் பந்தலைப் போட்டு இருக்கிறான்; நம்மைச் சிக்கும்படியாக வைத்து இருக்கும் கடைசிப் பந்தலே நம்மை அதிக விழிப்பாக்கும் வழியாய் இருக்கிறது. ஏனெனில் இந்தப் பிரயாணிகள் இளைப்பாய் இருக்கிறகாலத்தில் அல்லாமல் வேறே எப்பொழுது உட்காருவார்கள்? பிரயாணத்தின் முடிவில் உண்டாகாத இளைப்பு வேறு எங்கேதான் உண்டாகும் என்று பகைஞன் நினைத்து, இந்த மயக்கபூமி வாழ்க்கைகாட்டின் ஓரத்திலும் இவர்கள் பயணத்தின் அந்தத்திலும் வைத்து இருக்கிறான். ஆகையால் ஒவ்வொரு பிரயாணியும் ஜாக்கிரதையும் விழிப்பும் உள்ளவனாய் இருந்து, இந்தப் பிரயாணிகளுக்கு நேரிட்டதுபோல் தனக்கும் நேரிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டியது என்றார்.

அப்புறம் பிரயாணிகள் அங்கிருந்து போய்விட்டபடி ஆத்

1 இளிந்தவன் என்று பேர் இருக்கும்போதே தேவபக்தியை இழந்துவிடுவது எவ்வளவு எளிதான காரியம் என்று இதிலே விளங்குகிறது.

a நீதி. 23, 34, 35.



கிறப்பட்டார்கள். அப்பொழுது இருட்டாய் இருந்தபடியினால் அவர்கள் தங்கள் வழிகாட்டியை நோக்கி: நீர் உமது சக்கிமுக்கிக் கல்லைத் தட்டிப் பந்தம் கொளுத்திக்கொண்டு எங்களுக்கு வழிகாட்டினால் நலமாய் இருக்கும் என்று கேட்டுக்கொண்டதின்பேரில் இவரும் பந்தம் கொளுத்திக்கொண்டு அவர்களுக்கு முன்னே நடந்து வழிகாட்டினார்.a என்றாலும் பிள்ளைகள் அந்த வழியில் பட்ட அவஸ்தைகளுக்கும் அழுத கண்ணீருக்கும் ஒரு அளவு இல்லை. அவர்கள் மோட்ச பிரயாணிகளின் நேசரை நோக்கி, தங்களுக்குச் சற்று தெளிவான பாதையைக் காட்டிவிடவேணும் என்று வேண்டிக்கொண்டார்கள். அப்போது ஒரு காற்று வீசினதால் மேகமூடல் விலகி சற்று வெளிச்சமாகத் தோன்றிற்று; அவர்கள் இன்னும் மயக்கபூமியைக் கடந்துபோகவில்லை; ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியத்தக்கதான ஒரு வெளிவு உண்டானதே அன்றி வேறொன்றும் இல்லை.

பிரயாணிகள் திடநிற்போனைச் சந்தித்தல்.

அவர்கள் மயக்கபூமியின் அந்தத்தில் போகிறபோது, தங்களுக்கு முன்னே மனவியாகுலம் பூண்ட ஒரு மனிதனுடைய குரல் கேட்கிறாப்போல் கவனித்தார்கள். அவர்கள் இன்னும் சற்று முன்னுக்குப் போகவே, தாங்கள் எண்ணினதின்படியே ஒரு மனுஷன் முழங்காலில் நின்றுகொண்டு, தன் கண்களையும் கரங்களையும் வானத்துக்கு நேராக உயர்த்தி, அந்தரத்தில் இருக்கும் ஒருவரோடு மன்றாடிப் பேசுகிறதுபோலவும் அவர்கள் கண்டார்கள். அவன் பேசுகிற வார்த்தைகளை அறியவேண்டும் என்று அவர்கள் அருகேபோயும் கேட்கக் கூடாதே போயிற்று. ஆகையால் அவன் சொல்லுகிறதைச் சொல்லி முடிக்கட்டும் என்று மெதுவாய் நடந்துபோனார்கள். எல்லாம் முடிந்தவுடனே அவன் எழுந்து உச்சிதப்பட்டணத்துக்கு நேராய் விரைவில் ஓடுகிறதை அவர்கள் கண்டார்கள். அதைக் கண்ட தைரியநெஞ்சன் ஓய், ஐயா! நில்லும், நில்லும்; நீர் உச்சிதப்பட்டணம் போகிறவரானால் நாங்களும் உம்மோடு வருகிறோம் நில்லும் என்று கூப்பிட்டார். அப்படியே அவனும் நின்றான். அவனண்டை போகும்போதே கிழட்டு யதார்த்தன் நான் இவனை அறிவேன் என்றார். அப்படியானால் அவர் யார்? என்று சத்திய வீரன் கேட்டார். அதற்குக் கிழட்டு யதார்த்தன்:

a 2 பேதுரு 1. 19.

அவன் எங்கள் நாட்டில் உள்ளவன்தான்; இவன் பேர் நிலைநிற்போன் என்னப்படும்; இவன் உத்தம பிரயாணிகளில் ஒருவன் என்பது சத்தியம் என்றார்.

அவர்கள் ஒருவருக்கு ஒருவர் சமீபித்து எதிர்முகமாய் நின்றவுடனே, நிலைநிற்போன் கிழட்டு யதார்த்தனை நோக்கி: அப்பனே, யதார்த்தரே! நீரும் இங்கே இருக்கிறீரா? என்றான். அதற்கு அவர்: நீ இங்கிருக்கிறதுபோலவே நானும் இங்கே வந்து இருக்கிறேன் அப்பா என்றார். அதைக் கேட்டு அவன் நானே, நீர் என்னைக் கண்டுகொண்டீரா? என்றான். ஆம் கண்டுகொண்டேன்; உன்னைக் கண்டவுடனே எனக்கு உண்டான ஆனந்தம் கொஞ்சம் அல்ல என்றார். அதற்கு அவன்: என்னைக் கண்டவுடனே நீர் என்ன நினைத்தீர் என்று கேட்டான். அதற்கு யதார்த்தன், நினைத்தது! ஒரு உத்தமன் போகிறான், அவனோடேகூட நாமும் நடந்து போகலாம் என்றுதான் நினைத்தேன், வேறே என்ன நினைப்பேன் அப்பா என்றார். அதற்கு அவன்: நீர் என்னைப் பற்றித் தப்பானது ஒன்றும் நினைக்கவில்லையானால் நான் எவ்வளவு பாக்கியம் பெற்றவனாய் இருக்கிறேன்; ஆனால் உமது நினைவின்படி நான் இல்லையானால் அந்தப் பழியை நானே சுமக்கவேண்டியது என்றான். அதற்குக் கிழட்டு யதார்த்தன் சொல்வார்: நீ சொல்லுகிறது சரிதான் அப்பா! உனக்குள் இருக்கிற அச்சமானது பரதேசிகளின் ஆண்டவருக்கும் உன் ஆத்துமாவுக்கும் யாதொரு விதத்திலும் மனஸ்தாபம் இல்லை என்ற உண்மையை எனக்கு உறுதிப்படுத்துகிறதுபோல் இருக்கிறது. ஏனெனில் "எப்பொழுதும் பயந்து இருக்கிறவன் பாக்கியவான்" என்று அவரே சொல்லியும் இருக்கிறார் என்றார்.

சஙீ. அப்புறம் சத்திய வீரதீரன் அவனைப் பார்த்து: சகோதரனே! இவ்வளவு நேரமும் நீ முழங்காலில் நின்றாயே, அதின் காரணம் என்ன? ஏதாவது ஒரு விசேஷித்த இரக்கத்தின் நிமித்தம் நீ முழங்கால் படியிடும்படி நேரிட்டதோ? அல்லது வேறு முகாந்திரம் உண்டோ? சற்று சொல்லு என்று கேட்டார்.

நிஸ. அதற்கு அவன் சொல்லுகிறான்: நாம் இப்போது மயக்கபூமியில் இருக்கிறோம் என்பது உமக்குத் தெரியுமே; இதின் வழியாய் நான் நடந்துவரும்போதே இந்தப் பாதை எவ்வளவு மோசமும் ஆபத்துமான பாதையாய் இருக்கிறது; இம்மட்டும் வந்த பிரயாணிகள் எத்தனையோ பேர் தங்கள்



பயணத்தில் நின்று அப்படியே மாண்டுபோனார்கள் என்பதைக் குறித்து வெகுவாய் தியானித்துக்கொண்டே வந்தேன். இந்த இடத்தில் உண்டாகிற சாவின் தன்மையைக் குறித்தும் நான் மெத்தவும் அங்கலாய்த்தது உண்டு. ஏனெனில் இவ்விடத்தில் உண்டாகிற சாவெல்லாம் பலவந்தம் உள்ளதாய் அல்லது மனநோவு உள்ளதாய் இராமல் தூங்குகிறபோதே அவன் உயிரும் போய்விடுகிறது. இப்படித் தூக்கத்தோடு தூக்கமாய் ஜீவனைப் போக்கிவிடுகிறவனும் தன் பிரயாண ஆரம்பத்தில் எவ்வளவு ஆசையோடு அதில் நடக்கிறான்; இப்படிப் பயணம் செய்யவேண்டும் என்ற ஆவலும் தூங்கவேண்டும் என்ற பிரியமும் ஒரே மனதில் ஒத்து இருக்கிறதே என்ற இவை எல்லாவற்றையும் குறித்து நான் தியானம் செய்துகொண்டு வந்தேன்.

யஙா. அவன் பேசிக்கொண்டு வரும்போதே கிழட்டு யதார்த்தன் அவனைத் தடுத்து: அந்தப் பக்குவத்துக்கு ஆளினை இரண்டுபேரைக் கண்டாயா என்று கேட்டார்.

ஙிஸ. ஆம், ஆம்; அசட்டையையும் வீம்பனையும் அங்கே கண்டேன். அவர்கள் உருவு அழிந்துபோகும்மட்டும் அங்கேயே கிடப்பார்கள் என்று நான் நன்றாய் அறிவேன்.[a] அவர்கள் காரியத்தை நிறுத்தி என் கதையைச் சொல்லி முடிக்கிறேன் கேளும். நான் முன்னே சொல்லிய வண்ணம் தியானித்துக்கொண்டு வரும்போது மகா அலங்கார உடையும் அழகிய ரூபமுமான ஒரு ஸ்திரீ என் முன்னே வந்து நின்றாள், அவள் சற்றுப் பிராயம் சென்றவள்தான். அவள் என்னிடத்தில் வந்து: என் சரீரத்தையும் என் பணத்தையும் என் படுக்கைமெத்தையையும் நான் உனக்குத் தருகிறேன் வாங்கிக்கொள் என்றாள். இந்தச் சமயத்தில் எனக்குக் களைப்பும் ஏழைத்தனமும் இருந்தது. மேலும் என்னை ஆந்தைக்குஞ்சைப்போல் ஒத்த ஏழை என்று அஞ்ஞானக்காரன் முதலாய் அறிந்து இருக்கலாம். அவளை நான் இரண்டொருதரம் உதறிவிட்டேன்; அவளோ அதை எல்லாம் ஒரு பொருட்டாக எண்ணாமல் புன்னகைகொண்டு பல்லைக் காட்டினாள். அப்புறம் நான் மெத்த கோபதாபம் கொண்டேன்; அதையும் அவள் சட்டைபண்ணவே இல்லை. பின்னும் அவள் என்னண்டை வந்து, நான் சொன்னபடி நீ செய்கிறது உண்டானால் உன்னை மகாராஜனும் பாக்கியவானும் ஆக்கி விடு

---

[a] நீதி. 10, 7.

வேன், ஏனென்றால் நானே சர்வலோக நாணி, எல்லா மனுஷரும் என்னாலே பாக்கியர் ஆகிறார்கள் என்று சொன்னாள். அப்படி ஆனால் உன் நாமதேயம் என்ன என்று கேட்டேன். அதற்கு அவள், என் பேர் குமிழி அம்மாள் என்றாள். அவள் பேரே என்னை அவளைவிட்டுத் தூரத்தில் விலகிப்போகப் பண்ணிற்று; அப்படி இருந்தும் அவள் மறுபடியும் நய வசனிப்போடு என் பின்னாலே வந்தாள். அப்பொழுதுதான் நீங்கள் கண்ட பிரகாரம் முழங்காலில் நின்றுகொண்டு கைகளை உயர்த்தி கண்களை ஏறெடுத்து ஒத்தாசை செய்வோம் என்று வாக்கு அளித்திருக்கிறவரை நோக்கி அபயம் இட்டுப் பிரார்த்தனை செய்தேன். நீங்கள் வருகிற சத்தம் கேட்டவுடனேதான் அந்தக் அனாசாரி என்னை விட்டுப்போனாள். உடனே நான் பண்ணின பிரார்த்தனையோடு இந்தப் பெரிய ரட்சிப்புக்காக அவருக்கு ஸ்தோத்திரமும் செலுத்தினேன். ஏனெனில் அவள் எனக்கு நன்மையை உண்டாக்கும்படி வராமல் என் பயணத்தைத் தடுத்துவிடும்படியாகவே வந்தாள் என்று நான் நிச்சயமாய் அறிந்தேன்.

குமிழி அம்மாள்.

யதா. அவள் வந்த நோக்கம் கெட்டது என்பது வாஸ்தவம்; பொறு பொறு, அவளை நான் அறிவேன்போல் இருக்கிறது; அல்லது அவளைப்பற்றி வாசித்து இருப்பேன் என்று நினைக்கிறேன்.

நிலை. நீர் அவளை அறிந்தும் இருப்பீர், வாசித்தும் இருப்பீர்.

யதா. குமிழி அம்மாள்? ஒரு கெட்டச்சி, முகவெட்டானவள்தான்; முறிமந்தன் ஒத்த நிறம் உடையவள்தானே.

நிலை. சரி, சரி; பொட்டில் அடித்தாற்போல் சொல்லிவிட்டீர். அந்த ஆசாமிதான்.

யதா. அவள் மெத்த நளினமாய்ப் பேசுகிறாள் அல்லவா? ஒவ்வொரு சங்கதியையும் முடிக்கிற போது புன்சிரிப்பு சிரிப்பாள் அல்லவா?

குமிழி அம்மாள் குணாகுணமும் குறிகளும்.

நிலை. சகலமும் சரியாய்ச் சொன்னீர்; அவளுடைய நடபடிகள் எல்லாம் நன்றாய்ச் சொல்லிவிட்டீர்.

யதா. அவளுடைய இடுப்பில் ஒரு பெரிய பை தொங்குகிறது அல்லவா? அவள் மனம் எல்லாம் அந்தப் பையிலே



தான் இருக்கிறது என்று காட்ட எப்போதும் அவள் தன் கையை அந்தப் பைக்குள் இட்டுக்கொண்டு பணத்தைக் கிளறுவாள் அல்லவா?

நிலை. அவள் இப்போது நமது கிட்ட நின்றாலும் நீர் சொன்னதற்கு மேலாக ஒன்றையும் சொல்ல ஏது இருக்க மாட்டாது; அவ்வளவு திட்டமாய்ச் சொல்லுகிறீர்.

யதா. அப்படியானால் அவள் படத்தை எழுதிய சித்திரக்காரன் மகா நிபுணனும் அவளைப்பற்றி எழுதின சரித்திரக்காரன் மகா வல்லவனும் இருக்கவேண்டியது.

ஞாநி. அவள் ஒரு சூனியக்காரி, அவளுடைய சூனியங்களினாலேதான் இந்த பூமி இவ்வளவு மயக்கம் உள்ளதாய் இருக்கிறது. இவள் மடியில் போய் எவன் ஒருவன் தலை சாய்வானோ, அவன் கோடரிதொங்கும் பாறைக்கல்லுக்கு இடையில் தலையைச் சாய்க்கிறதற்குச் சரியாய் இருக்கிறது. அவளுடைய சௌந்தரியத்தின்மேல் கண்போடுகிறவர்கள் எவர்களோ, அவர்கள் தேவனுடைய பகைஞராக எண்ணப்படுகிறார்கள். இவளே மோட்ச பிரயாணிகளின் பகைஞர் எல்லாரையும் அவரவர் பவுஷிலே நிலைநிறுத்திக்கொண்டுவருகிறவளாய் இருக்கிறாள்.[அ] இவளே அநேகம் பிரயாணிகளை மோசப்படுத்தியும் இருக்கிறாள்; இவள் மகா[illegible]வாய்ச்சாலகி, இவளும் இவளுடைய குமாரத்திகளும் ஒரு பிரயாணி தப்பிவிட்டால் இன்னொரு பிரயாணியின் பிறகாலே போய் நளினமாய்ப் பேசி, இச்சீவியத்தின் வாழ்வுகளைச் சொல்லி அதையே தெரிந்துகொள்ளும்படி பிரயத்தனம் செய்கிறது உண்டு. அவள் மெத்த ஆணவம் பிடித்தவள். நாணமும் ஈனையும் கெட்ட ஸ்திரீ. எவளைக் கண்டாலும் அவளோடு பேசுவாள். அவள் ஏழைகளான பரதேசிகளைப் பழித்துப் பேசி பணக்காரரைப்பற்றிப் புகழுவாள். ஒருவன் உபாய தந்திரங்களால் பணம் சம்பாதிக்கும்படி முயற்சி செய்தால் அவனைக் குறித்து வீட்டுக்கு வீடுபோய் வெகு மேன்மையாகப் பேசுவாள். கூத்தாட்டம் என்றால் அவளுக்குக் கொண்டாட்டந்தான். விருந்து என்றால் மிகு விருப்பந்தான். நாடகம் என்றால் அவளுக்கு நாட்டந்தான். பதினெட்டு வகைப் பதார்த்தம் உள்ள பந்தியிலேதான் அவள் எப்போதும் உட்கார்ந்து தின்பாள். அவள் தான் ஒரு தேவதை

அவளுடைய வரலாறு.

அ யாக். 4, 4. 1 யோ. 2. 14, 15.

ஆக்கும் என்று சில இடங்களில் சொல்லி இருக்கிறதால் அநேகர் அவளை வணங்குகிறார்கள். பலவீனரைப் பகிரங்கமாய் ஏமாற்றிப்போடும்படியான காலமும் இடமும் அவளுக்கு உண்டு. மற்றவர்களை ஏமாற்றுகிறதில் என்னைவிடச் சமர்த்தர் உண்டோ என்று அவள் சொல்லவும் செய்வாள். தன்னை நேசித்து மதிக்கிறவர்கள் எவர்களோ, அவர்களோடும் அவர்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் தான் வாசமாய் இருப்பேன் என்றும் அவள் வாக்குக் கொடுப்பாள். அவள் சில இடங்களிலும் சில ஆட்களிடத்திலும் தன் பையைத் திறந்து பொன்னைத் தானத்தனையாக வாரி இறைப்பாள். மற்றவர்கள் தன்னை நாடித் தேடவும் புகழ்ந்துபேசவும் அவளுக்கு மெத்தப் பிரியம். புருஷர்களுடைய மடியில் தலை சாய்ந்து தூங்கும்படி அவளுக்கு மெத்த ஆவல் உண்டு. தனது சந்ததிகளையும் வஸ்திர ஆபரணங்களையும் தன் வீட்டு வாழ்வுகளையும் குறித்து பெருமையாய்ப் பேச அவள் இளைப்பு அடையமாட்டாள். தன்னைப்பற்றி ஆர் மதிப்பாய்ப் பேசுவார்களோ, அவர்கள்மேல் மட்டற்ற அன்பு பாராட்டுவாள். தன் ஆலோசனையின்படி மாத்திரம் நடந்தால் கிரீடம் சூட்டுவேன் என்று சிலருக்கும் ராஜ்யம் தருவேன் என்று சிலருக்கும் வாக்குக் கொடுப்பாள். இப்படி எல்லாம் சொல்லியும் இவள் அநேகரைத் தூக்குமரத்துக்கும் அதிலும் பதின்மடங்கு பேரை நரகபாதாளத்துக்கும் கொண்டுவந்து இருக்கிறாள் என்றார்.

நிலை. இவ்வளவும் கேட்டவுடனே கிலேசித்தவன் பிரமைகொண்டு, ஆ! நான் அவளை எதிர்க்கும்படி என்னை ஏவின கிருபை எவ்வளவோ மேலானது! இல்லாவிட்டால் அவள் என்னை எங்கே கொண்டுபோய்த் தள்ளிவிடுவாளோ தெரியாதில்லையே! என்றான்.

வைதி. எந்தேயோ? எங்கே என்று தேவன் ஒருவரே அறிவார். ஆனால் பொதுவாகச் சொன்னால் மனுஷரை அழிக்கும் நாசத்துக்கும் உட்படுத்துகிற மதிகேடும் சேதமுமான பல இச்சைகளுக்குள்ளும் உன்னை விழத்தள்ளிப் போடுவாள் என்பது நிஜம்.[a] அப்சலோமைத் தன் தகப்பனுக்கு விரோதமாகவும் யெரொபெயாமைத் தன் எஜமானுக்கு விரோதமாகவும் எழும்பப்பண்ணினவள் இவள்தான். யூதாஸ் தன் ஆண்டவரை விற்கும்படி ஏவினவளும் மோட்ச மார்க்கத்தில் நட

[a] 1 தீமோ. 6. 9.



வாறபடி தேமாவைத் தடுத்தவளும் இவள்தான். இவள் செய்கிற ஆகாமியங்கள் இவை என்று சொல்ல ஒருவராலும் முடியாது. அரசருக்கும் குடிகளுக்கும் அடிபிடியாகவும் தகப்பனும் மக்களும் தடி எடுக்கவும் தன் வீட்டுக்கும் அயல் வீட்டுக்கும் சச்சரவு உண்டாகவும் புருஷனுக்கும் மனைவிக்கும் பிணக்கு உண்டாகவும் ஆளுக்கு ஆள் கைகலக்கவும் மாமிசத்துக்கும் ஆவிக்கும் போர் உண்டாகவும் தூண்டிவிடுகிறது எல்லாம் இந்தச் சண்டாளிதான். ஆதலால் நிலைநிற்போனே நேசனே! உம்முடைய பேர் எப்படியோ அப்படியே இரும்; உம்முடைய பேரின்படியே எல்லாவற்றையும் நிறைவேற்றினபிற்பாடு நீர் நின்ற நிலையிலே நில்லும் என்றார்.

இந்தச் சமாசாரங்கள் எல்லாம் பிரயாணிகளுக்கு பாதி சந்தோஷத்தையும் பாதி துக்கத்தையும் கொடுத்தது. ஆனாலும் அவர்கள் சற்று நேரத்துக்குப்பின் மனம் தெளிந்து:

இராகம்—கன்னடகானா.

மோட்ச பிரயாணிகளின்
மோசம் எத்தனை அப்பா!—பாவப்
பாதை எத்தனை அப்பா! அவர்
பகைவர் தொகை இல்லையென்று
எவர் கூறுவார் அப்பா.

படுகுழியில் விழுந்து சிலர்
உருவழிந்தார் அப்பா! சிலர்
பாழானார் அப்பா!—சேற்றுப்
பள்ளங்களில் சறுக்கிவிழுந்
தாழ்ந்து போனார் அப்பா.

கொப்பளைக்கு அருகம் சிலர்
குதித்தாரே அப்பா—இயில்
மிதித்தாரே அப்பா அவர்
மோசம் எத்தனை? நாசம் எத்தனை?
மோட்சம் சேருமுன்னே

என்று பாடினார்கள்.

## பிரயாணிகள் வாழ்க்கைநாடு சேருதல்.

பிரயாணிகள் வாழ்க்கைநாடு சேருதல்.

பிரயாணிகள் அப்புறம் அல்லும் பகலும் அருணோதயமாய் விளங்கும் வாழ்க்கைநாட்டுக்கு வந்து சேரும்மட்டும் நான் அவர்களைப் பார்த்துக்கொண்டே இருந்தேன். அவர்கள் மிகவும் இளைப்பாய் இருந்தபடியால் சற்று கால் ஆறி

எழுந்திருப்போம் என்று அங்கே உட்கார்ந்தார்கள். இந்த நாடு மோட்ச பிரயாணிகளின் சருவமானியக் கொத்தாய் இருந்தபடியாலும், இங்குள்ள கனித் தோப்புகளும் திராட்சப் பந்தல்களும் உச்சிதபட்டணத்தின் உன்னதராஜனுடையது ஆனபடியாலும், இவர்கள் தங்கள் மனம்கொண்ட மட்டும் தங்கள் இஷ்டம்போல அவைகளை அநுபவிக்கச் சுயாதீனம் பெற்று இருந்தார்கள். அவர்கள் இப்படி எல்லாம் மாறிப்போக வெகுநேரம் செல்லவில்லை.[1] ஏனெனில் உச்சிதபட்டணத்தின் மணிகளின் ஓசையும் இம்பித எக்காளங்களின் ஒலியும் அங்கே ஓயாமல் தெரிவித்துக்கொண்டு இருந்தன. ஆதலால் அவர்கள் தூங்கி எழுந்திருக்க

காட்சிகள்.

முதலாய் ஏது இல்லாதிருந்தாலும் சனதூக்கம் தூங்கி எழுந்தவர்கள்போல் அவ்வளவு களை ஆறி இருந்தார்கள். மேலும் உச்சிதபட்டணத்தின் தெருவழி நடப்போர் அவர்களுடன் பேசிக்கொண்டுபோகும் வார்த்தைகளும் இவர்கள் காதில் கேட்டது. இன்று அநேக பிரயாணிகள் பட்டணத்துக்குப்போய்ச் சேர்ந்தார்கள் என்று ஒருவன் சொல்லுவான்; வேறொருவன், அநேகர் இன்று நதியைக் கடந்து அலங்காரச்சாலையின் வழியாய் நகரத்துக்குள் வந்தார்கள் என்பான். இன்னும் சிலர்: இன்று அநேக ஊழியருமேகப் பட்டணத்துக்குள் வந்தார்கள், ஆதலால் அனேகம் பிரயாணிகள் இப்போது தங்கள் பாதையில் இருக்கிறார்கள்போல் தோன்றுகிறது; அவர்களுடைய துக்கங்கள் சஞ்சலங்கள் எல்லாவற்றையும் மாற்றி ஆறுதல் படுத்தும்படி இவர்கள் முந்தியே வந்துவிட்டார்கள் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட சமாசாரங்கள் எல்லாம் அவர்கள் காதுகளில் விழுவே, அவர்கள் அனைத்து பரவசம் பூண்டு, அங்கும் இங்கும் திரிந்து அலைந்து சந்தோஷம் கொண்டாடினார்கள். இந்தப் பிரயாணிகள் வாழ்க்கைநாட்டில் இருக்கையில் உச்சிதபட்டணத்தைப்பற்றிக் கேட்ட செய்திகளும் கண்ட காட்சிகளும் இவ்வளவு என்று சொல்லாலும்

1 பின்வரும் சங்கதியானது வேய்லிகவாசிகளின் மத்தியில் குடியிருப்பது பாக்கியமானது என்று தெரிவிக்கிறது. அப்பேர்ப்பட்ட இடங்களில் மெய்யுத்துடன் மரிக்கிறவர்களின் திருஷ்டாந்தம் அடிக்கடி காணப்படுகிறது. இந்தக் காட்சிகளும் சம்பவங்களும் முன்னாலே கலங்கி தவிக்கிறவர்களின் இருதயங்களிலிருந்து சகலவிதச் சந்தேகம் முதலியவைகளை நீக்கி சந்தோஷத்தையும் மனதம்பிக்கையும் பிறப்பிக்கின்றன.



சொல்லி முடியாது. இந்த நாட்டில் இருந்த காலத்தில் அவர்கள் தங்கள் சரீரத்தின் புலன்களுக்கும் ஆத்துமாவின் அந்தக்கரணங்களுக்கும் தீமையை உண்டாக்கத்தக்கதாக எதை ஆவது கேட்டதும் இல்லை, பார்த்ததும் இல்லை, உணர்ந்ததும் இல்லை, முகர்ந்ததும் இல்லை, ருசித்ததும் இல்லை; இனிமேல் அவர்கள் கடந்து போகவேண்டிய ஆற்றின் ஜலத்தை அவர்கள் குடித்துப் பார்த்தபோதுமாத்திரம் அது அவர்களுடைய நாவிற்குக் கசப்பும் அன்னாளுக்குக்கு இனிப்புமாய் இருக்கிறது என்று கண்டார்கள்.

அருமையான வாழ்க்கை.

மேலும் இந்த இடத்தில் அதிபூர்வ பிரயாணிகளின் நாமங்களும் அவர்கள் நடப்பித்த அதிசிரேஷ்ட கருமங்களும் அடங்கிய ஒரு பெரிய நாளாகமமும் இருந்தது. இவ்விடத்தில் அந்த ஆறு சிலர் கடந்துபோகும்போது வற்றமாயும் சிலருக்கு ஏற்றமாயும் இருக்கிற காரணம் என்ன என்பதைக் குறித்தும் பல பேச்சுகள் நடந்தன. ஏனெனில் இந்த ஆறு சிலருக்கு வற்றிப்போகிறதும் சிலருக்குக் கரைபுரண்டு ஓடுகிறதும் உண்டு.

பட்டணத்தின் பாலியர் பலர் இந்த இடங்களில் திரிந்து அலைந்து அரசனின் நந்தவனங்களில் உள்ள நற்கந்தப் புஷ்பங்களைக் கொய்து பிரியத்தோடு பிரயாணிகளுக்கு வெகுமானம் பண்ணுவார்கள். இங்கே கற்பூரம், நளது, மருவு, மருக்கொழுந்து, மல்லிகை, முல்லை, இருவாச்சி, செம்பகம் முதலிய நறுகந்த புஷ்பாதிகளும், சந்தனம், சவ்வாது, தூபவர்க்கம், வெள்ளைப்போளம், இலவங்கம் முதலிய வாசனைத் திரவியங்களும் விளையும். இவைகளின் நற்கந்தவாசனை பிரயாணிகளின் பள்ளியறைகளைப் பரிமளிக்கும். மேலும் இங்கே இருக்கும்போதே ஆற்றைத் தாண்டவரும்படி எப்போது சீட்டு வருமோ, அப்பொழுதே புறப்படத்தக்கதாகப் பிரயாணிகளின் உடல்கள் மேற்சொல்லிய வாசனைச் சரக்குகளின் தைலாபிஷேகம் பெற்றிருக்கும்.

## கிறிஸ்தீனனின் மரணம்.

இந்த நாட்டில் அவர்கள் தங்கியிருந்து, தாம் நதியைக் கடக்கும் நற்காலம் எதுவென்று காத்து இருக்கும் சமயத்தில் பரிசையடைந்த பரிசுத்தியாகிய கிறிஸ்தியானுடைய மனைவி கிறிஸ்தீனனுக்கு விசேஷித்த சமாசாரம் அடங்கிய

கிறிஸ்தீனன் ஆற்றைக் கடத்தல்.

ஒரு கடிதம் வந்திருக்கிறதாகப் பட்டணத்துக்குள் பேச்சு உண்டாயிற்று.[1] உடனே தபால்காரன்;

அவளுக்கு வந்த கடிதம்.

அவள் எங்கே, அவள் வீடு எங்கே என்று தேடி விசாரித்து, கடைசியாகக் கண்டுபிடித்துக் கடிதத்தையும் அவள் கையில் கொடுத்தான். அக்கடிதத்தில், நல் உத்தமியே நீ வாழ்க! ஆண்டவர் உன்னை அழைக்கிறார்; இன்றும் பத்து தினத்துக்குள்ளாக நீ அழிவில்லா அங்கி தரித்தவளாய் அவரைத் தரிசிக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை நான் உனக்கு அறிவிக்கிறேன் என்பதாக எழுதி இருந்தது.

இந்தக் கடிதம் வாசிக்கப்பட்ட பின்பு, அந்த மனுஷன் தான் மெய்யாய் அனுப்பப்பட்ட உத்தம தூதுவனென்பதற்கும் அவள் தன் பயணத்துக்கேற்ற ஆயத்தங்களைத் துரிதத்தில் செய்யவேண்டும் என்பதற்கும் அடையாளமாக அன்பினால் கூர்மையாக்கப்பட்ட அம்பு ஒன்றை எய்தான். அதின் பலம் கிரமத்தில் குறிக்கப்பட்டிருந்தபடி பத்தாம் நாளில் அவள் தன் ஆண்டவருடைய இருப்பிடம் சேரும்படியாக அவளுக்குள் படிப்படியாய்க் கிரியை செய்தது.

தன் காலம் கிட்டிவிட்டதென்றும் தன்னுடைய வர்க்க பிரயாணிகளில் தானே முதலாவது அக்கரை சேரவேண்டியதாய் இருக்கிறதென்றும் கிறிஸ்தீனாள் கண்டபோது, தங்கள் வழிகாட்டியாகிய தைரியநெஞ்சனை அழைப்பித்து தன் காரியங்களை எல்லாம் அவனுக்குச் சொன்னாள். அதுகேட்டு அவன் சொன்னான்: அம்மா! உன் செய்தி எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது, உனக்கு வந்த கடிதம் எனக்கு வந்திருந்தால் என் மனமகிழ்ச்சியை என்னவென்று சொல்லுவேன்! என்றான். அப்புறம் அவள்: நான் பயண ஆயத்தத்துக்கேற்ற ஆலோசனைகளை எல்லாம் சொல்லித் தரவேண்டும்

[1] பிரயாணிகளுக்குக் கடிதம் கொண்டுவரும் தூதனானவன் குறிப்பிக்கப்படுகிறது. அவ்வாறு மநுஷருக்குள் பிராணனைப் பற்ற ஆயத்தப்படுத்தும்படி வாசிப்பாக தேவனே அனுப்புகிற வியாதிகளும் மரணத்துக்குறியே. தேவன் அவற்றை இரக்கமாக அனுப்பி வீட்டுக்கு அழைத்துக்கொள்ளும் ஆதரவின் விளங்குமே. அவர்கள் பலபல சூதாங்களில் பலபல மாதிரியாய் வருகிறார்கள். பிரயாணிகளின் மரண சம்பவங்களும் பேதகளும் பலபல மாதிரியாய் உண்டாகிறது. சிலர் அதிகமாய்ச் சொல்லுகிறார்கள்; சிலர் கொஞ்சமாய்ச் சொல்லுகிறார்கள். என்றாலும் எல்லாரும் சந்தோஷமாகவே காணப்பட்டார்கள்.



என்று கேட்டாள். அப்படியே இன்னின்ன விதமாய் நீ செய்யவேண்டும் என்று எல்லா ஆலோசனைகளையும் சொல்லி, இன்னும் பிறியாக இருக்கிற நாங்கள் ஆற்றங்கரைமட்டும் உனக்கு வழித்துணையாக வருவோம் என்றும் சொன்னான்.

அவள் தன் மக்களுக்குச் சொன்ன புத்தி.

அப்பால் அவள் தன் மக்களை வரவழைத்து அவர்கள் எல்லோரையும் ஆசீர்வதித்து, உங்கள் நெற்றிகளில் வைக்கப்பட்ட முத்திரைகள் மங்காதிருக்கிறதைக் கண்டு என் மனம் ஆறுதலடைகிறது; என்னோடேகூட வாழும்படி நீங்களும் அங்கே வந்துவிட்டால் என் மனம் களிக்கும்; உங்கள் அங்கிகள் இப்படியே அழுக்கில்லாதிருந்தால் என் உள்ளம் பூரிக்கும் என்று சொன்னாள். கடைசியாக அவள் தனக்குள்ள அற்பமான தட்டுமுட்டுகளை ஏழைகளுக்கென்று மரணசாசனம் எழுதி வைத்துவிட்டு தன் மக்களையும் மருமக்கள்மாரையும் பார்த்து, மரணமின் அதனுக்கு எப்போதும் எதிர்பார்த்திருங்கள் என்று எச்சரித்தாள்.

அவள் சத்திய நிஷ்டனுக்குச் செய்தது.

இவ்வண்ணம் அவள் தைரியநெஞ்சனுக்கும் தன் மக்கள் மருமக்களுக்கும் சொல்லவேண்டியது எல்லாம் சொல்லியானபின்பு, சத்திய விசுவாசியைக் கூப்பிட்டு: ஐயா நீர் எவ்விடத்திலும் உண்மைத்தனத்தை வெளிப்படுத்தியிருக்கிறீர், மரணபரியந்தம் [illegible] உண்மையாயிரும், அப்பொழுது என் ராஜா உமக்கு ஒரு ஜீவகிரீடத்தைத் தருவார். அதோடு என் பிள்ளைகள்மேலும் ஒரு கண்ணை வைத்துக்கொள்ளும்படியாக உம்மை மிகவும் மன்றாடுகிறேன். அவர்கள் சோர்வடையக் கண்டால் அவர்கள் ஆறுதலடையும்படி பேசும். என் மக்களின் மனைவிகளாகிய என் குமாரத்திகள் உண்மையுடையவர்களாய் இருந்தார்கள்; அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற பாக்கியமே அவர்களுடைய முடிவாய் இருக்கும் என்று சொன்னாள். அவள் [illegible] கூப்பிட்டு ஒரு மோதிரம் கொடுத்தாள்.

அவள் யாத்திரிகனுக்குச் சொன்னது.

அப்பால் அவள் நிஷ்கபட யாத்திரிகனைக் கூப்பிட்டு, இவர் கபடற்ற உத்தம இஸ்ரவேலன்[1] என்றாள். அவரோ இவளைப் பார்த்து: நீ சீயோன் மலைக்கு ஏறும் தருணம்போதும் நான் மட்டும் மனதாரவுமற்ற பிரயாணமாய்

[1] யோவா. 1, 47.

இருக்க விரும்புகிறேன். நீ ஆற்றில் கால் நனையாமல் கடந்து போகிறதைக் கண்டால், என் மனதுக்கு மெத்தச் சந்தோஷமாய் இருக்கும் என்று சொன்னார். அதற்கு அவன்: கால் நனைய ஜலம் இல்லாதிருந்தாலும் சரி, கழுத்தளவு ஜலம் நிரம்பிவந்தாலும் சரி, கரையைத் தாண்டவே என் நாட்டம் இருக்கிறது. நான் போகிறபோது அது எப்படி இருந்த போதிலும், ஆற்றைக் கடந்து அக்கரை போனபின்பு உட்கார்ந்து இளைப்பாறவும் நனைந்துபோன என் வஸ்திரங்களைக் காயச் செய்யவும் போதுமான காலம் இருக்கிறது என்றான்.

தொண்டியருக்குச் சொன்னது.

அப்பொழுது அவளைப் பார்க்கும்படியாக தொண்டியர் வந்து சேர்ந்தார். கிறிஸ்தினாள் அவரைப் பார்த்து: ஐயா இம்மட்டும் உமது பயணம் வெகு கஷ்டத்தில் இருந்ததே, அது அவ்வளவும் நல்லதுதான், அது உமது இளைப்பாறுதலை அதிக இனிமையாக்கும், நீர் விழித்துக்கொண்டு ஆயத்தமாய் இரும். ஏனெனில் நீர் நினையாத நேரத்தில் நாதன் வந்தாலும் வருவார் என்றாள்.

ஏக்கத்துக்கும் அவர் மகளுக்கும் சொன்னது.

அவருக்குப்பின்பு ஏக்கமும் அவருடைய குமாரத்தியாகிய திகிலுற்றாளும் [illegible] வந்தார்கள். அவர் [illegible] பார்த்து: நீங்கள் சந்தேகத் தாருகத்திலும் அகோரபயங்கர ராட்சதன் கையிலும் நின்று விடுதலையான மீட்பை எப்போதும் நன்றியறிதலோடு நினைவுகூரவேண்டும். அந்த மீட்பின் பயனே உங்களை இம்மட்டும் சுகத்தோடு சேர்த்திருக்கிறது. நீங்கள் அச்சத்தை அகற்றிவிட்டு விழிப்படையுங்கள், முடிவுபரியந்தம் தெளிந்த புத்தியும் நம்பிக்கையும் உள்ளவர்களாய் இருங்கள் என்றாள்.

அவள் [illegible] வலியுறுத்திக்கொண்டது.

அப்பால் அவள் [illegible] நோக்கி: நீர் ஜீவனுள்ள தேவனின் வெளிச்சத்தில் ஜீவிக்கவும் உமது ராஜாவை மனஆறுதலோடு தரிசிக்கவும் நலங்கொல்லியினுடைய பற்களிலிருந்து பிடுங்கப்பட்டீர். ஆதலால் உம்மை வரவழைக்கும் படியான கட்டளை பிறக்கும் முன் அவருடைய நன்மைகளைக் குறித்து நீர் பயந்து சந்தேகிக்கும் குணத்தைவிட்டு மனந்திரும்பவேண்டும் என்று மாத்திரம் உமக்கும் புத்திசொல்லுகிறேன்; அல்லாவிட்டால் அவர் வரும்பொழுது, இந்தக்



குற்றத்தின் நிமித்தம் நீர் அவர் முன்னே நாணத்தோடு நிற்கும்படி கட்டாயம் பண்ணப்படுவீர் என்றாள்.

அவள் ஆற்றைக் கடந்தது.

இத்தருணமாகக் கிறிஸ்தினாள் மேலோகம் போகுங்காலம் நெருங்கினது. அவள் பயணம்போகிற சமயத்தில் தெருவெல்லாம் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள்; ஆனால் இதோ ஆற்றுக்கப்பால் கிறிஸ்தினாளை உத்தமபட்டணத்தின் அலங்



கார வாசலுக்கு அழைத்துக்கொண்டு போகும்படியாக வானத்திலிருந்து இறங்கிவந்த குதிரைகளும் இரதங்களும் ஏராளமாய் இருந்தன. அவள் ஆற்றண்டை வந்து தன்னை வழி அனுப்பவந்தவர்கள் எல்லாருக்கும் சமிக்கையினால் பய

றுபசாரம் சொல்லிவிட்டு ஆற்றில் இறங்கினாள். அவள் பேசக்கேட்ட கடைசி வாசகம் என்னவென்றால்;

கிறிஸ்தீனாளின் கடைசி வார்த்தைகள்.

ஆண்டவரே!
உம்மோடிருக்கவும்
உம்மைப் போற்றவும்
இதோ வருகிறேன்

என்பதே.

அப்பால் கிறிஸ்தீனாள் கண்ணுக்கெட்டாத உயரத்தில் கொண்டுபோகப்பட்டதால், அவள் மக்களும் மற்ற சிநேகிதரும் தங்கள் தங்கள் இருப்பிடத்துக்குத் திரும்பிவந்துவிட்டார்கள். அவள் உச்சிதபட்டணத்தின் அலங்கார வாசலண்டை போனவுடனே, முன் அவளுடைய புருஷனுக்கு நடந்த உபசாரணைகளைப்போலொத்த சகல சந்தோஷ சடங்குகளோடும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பட்டணத்துக்குள் பிரவேசிக்கும்படி அருள்பெற்றாள். அவள் புறப்பட்டவுடனே பிள்ளைகள் அழுதார்கள்; ஆனால் தைரியநெஞ்சனும் சத்திய வீரனும் இன்பகீதமுள்ள கின்னரங்களையும் வீணைகளையும் வாசித்து ஆனந்தங்கொண்டார்கள். அப்புறம் அவரவர் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள்.

## மற்றப் பிரயாணிகளின் முடிவு.

இது நடந்து கொஞ்சக்காலமானபின்பு மறுபடியும் அந்தப் பட்டணத்துக்குள் ஒரு அஞ்சல்காரன் வந்தான். அவன் நொண்டியருக்குச் செய்திசொல்ல வந்தவன். அந்த அஞ்சல்காரன் நொண்டியரைத் தேடிக் கண்டுபிடித்து அவரை நோக்கி: நீர் தாங்குதடியோடு நொண்டி நொண்டி நடந்து தேடிவந்தவரும் நேசித்தவருமான ஆண்டவரிடத்திலிருந்து நான் வந்திருக்கிறேன். உமக்கு நான் சொல்லவந்த செய்தி என்னவென்றால், வருகிற உயிர்த்தெழுந்த திருநாளுக்கு அடுத்த தினத்தில் நீர் அவருடைய ராஜ்யத்தில் அவரோடு கூட ராப்போஜனம் பண்ண அவர் விரும்புகிறார். ஆதலால் இதற்கென்று உம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் என்று சொன்னான். பின்னும் அவன்: நான் என் ஆண்டவரின் உத்தம அஞ்சல்காரன்தான் என்பதற்கு அத்தாட்சியாக உன் பொன்கிண்ணியை நசுக்கி உன் வெள்ளிக்கயிற்றின்

நொண்டியரின் மரணம்.



கட்டை அவிழ்த்துவிட்டேன் என்று சொல்லி ஒரு அடையாளமும் கொடுத்தான்.[a]

இச்சமாசாரம் வந்தவுடனே, நொண்டியர் தமது உடன் பிரயாணிகள் அனைவரையும் வரவழைத்து அவர்களை நோக்கி: எனக்கு உத்தரவு வந்துவிட்டது, தேவன் மெய்யாகவே உங்களையும் சந்திப்பார் என்று சொல்லிவிட்டு, சத்திய வீரனைப் பார்த்து தன்னுடைய மரணசாசனத்தை எழுதும்படி கேட்டார். தமது பின்னடியாருக்கு வைத்துப் போகும்படியாக அவருடைய தடிகளையும் நல்விருப்பங்களையும் தவிர மற்றொரு அவகாசமும் அவருக்கு இல்லாதிருந்தபடியால் அவர் செய்த மரணசாசனம் என்னவென்றால்: என் அடிச்சுவடுகளில் நடந்துவரும் என் குமாரனுக்கு சகல வரங்களையும் கோரி, நான் இந்தத் தடிகளை தத்தஞ்செய்கிறேன். அவன் என்னிலும் உத்தமனாக நடக்கவேண்டும் என்பதே என் ஆசை என்று கண்டிருந்தது. அப்பால் அவர் தைரியநெஞ்சன் தன்னை வழிநடத்தினதற்காகவும் தனக்குச் செய்த பல சகாயங்களுக்காகவும் அவருக்கு நன்றியறிதல் சொல்லிப் பயணம் புறப்பட்டார். அவர் ஆற்றின் கரையோரத்தில் மிதித்தவுடனே அதோ அக்கரையில் இரதங்களும் குதிரைகளும் எனக்கென்று காத்திருக்கையில் இந்தத் தடிகள் என்னத்துக்கென்று அவைகளை எறிந்துவிட்டார். கடைசியாக அவர் வாழ்க, ஜீவனே வாழ்க! என்று சொல்லிக்கொண்டு ஆற்றைக் கடந்து அக்கரை சேர்ந்தார்.

அவருடைய கடைசி வார்த்தைகள்.

அதின்பின் ஏழைத்தனத்தின் வீட்டுவாசலுக்குமுன் ஒரு தபால்காரன் வந்து, கொம்பூதிக்கொண்டு நிற்கிறான் என்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது. அந்தத் தூதன் வீட்டுக்கு உள்ளே போய்: உன் எஜமான் உன்மேல் தாபந்தப்படுகிறார். நீ இன்னும் கொஞ்சகாலத்துக்குள் அவருடைய திருமுகப் பிரகாசத்தைத் தரிசிக்கவேண்டும் என்று சொல்லச்சொன்னார். என் வார்த்தைகள் மெய் என்பதற்கு அத்தாட்சியாக “பலகணி வழியாய்ப் பார்க்கிறவைகள் இருண்டுபோகும்”[b] என்றான். அப்பொழுது ஏழைத்தனம் தமது சிநேகிதரை வரவழைத்து, தமக்கு வந்த கட்டளையையும் அது மெய் என்

ஏழைத்தனத்தின் மரணம்.

[a] பிர. 12. 6. [b] பிர. 12. 3.

பதற்குக் கொடுக்கப்பட்ட அடையாளத்தையும் சொன்னான். பின்னும் ஏழைத்தனம் சொல்லுகிறான்: எனக்கு யாதொரு சொத்தும் இல்லையே, நான் மரணசாசனம் எழுதுவதினால் என்ன லாபம்? நான் விட்டுப்போகும் ஆஸ்தி தள்ளாடின என் மனமேயல்லாமல் வேறொன்றும் இல்லை. நான் போகிற இடத்திற்கு அப்பொருள் அவசியமும் இல்லை; ஏழைப்பரதேசிகளுக்கு அதைச் சாசனம்பண்ணுவதினால் எவ்வளவேனும் பயனும் இல்லை. ஆதலால் என் உத்தமசேகராகிய சத்திய வீரரே! நான் இவ்வுலகத்தை விட்டுப் போனவுடனே அதைக் குப்பைமேட்டில் புதைத்துவிடவேண்டும் என்று விரும்புகிறேன் என்றான். இவ்வாறு சொல்லியானபின்பு அவன் புறப்படும் நேரம் நெருங்கினது, அவன் மற்றவர்களைப்போல் ஆற்றில் இறங்கி விசுவாசத்திலும் பொறுமையிலும் உறுதியாய் நிலைத்திருங்கள் என்று கடைசியாகச் சொல்லி ஆற்றின் அக்கரை சேர்ந்தான்.

அவருடைய கடைசி வார்த்தைகள்.

அவர்கள் போய் வெகுநாளானபின்பு, ஏக்கம் வரும்படி செய்தி வந்தது. அவரண்டை ஒரு தபால்காரன் வந்து: ஐயா, ஏக்கமே! இதோ பாரினோ! உன் சந்தேகங்களிலிருந்து விடுதலையானதின் நிமித்தம் சந்தோஷத்தோடு ஆரம்பிக்கும்படியாக வருகிற ஓய்வுநாளில் நீ கர்த்தருடன் இருக்கவேண்டும் என்று உனக்குக் கட்டளையிட வந்தேன் என்று சொல்லி, என் சமாசாரம் சத்தியம் என்பதற்கு அத்தாட்சியாக, இதோ வெட்டுக்கிளியும் உனக்கு பாரமாய் இருக்கும் என்று ஒரு வெட்டுக்கிளியை அவனுக்கு அடையாளமாகக் கொடுத்தான்.[a]

ஏக்கத்தின் மரணம்.

ஏக்கத்தின் குமாரத்தியாகிய திகிலுற்றாள் இந்தச் செய்தியைக் கேட்டவுடனே தானும் தன் தகப்பனுடனே வருவேன் என்று சொன்னாள். அது கேட்ட தகப்பன்; தன் சிநேகிதரை வரவழைத்து: அண்ணன்மாரே! நானும் என் மகளும் எப்படி நடந்தோம் என்றும், எங்கள் தோழருக்கு எவ்வளவு தொந்தரவுகள் கொடுத்தோம் என்றும் நீங்கள் நன்றாய் அறிவீர்கள். ஆதலால் என்னுடையதும் என் மகளுடையதுமான மரணசாசனம் என்னவென்றால்: எங்களுடைய ஏக்கமும்

திகிலுற்றாளின் முடிவு.

a பிர. 12. 5.



திகிலுற்றாளும் நாங்கள் இவ்விடம் விட்டுப் பிரிகிற நாள்முதல் என்றென்றைக்கும் எவராலும் எடுத்துக்கொள்ளப்படலாகாதென்று தீர்மானிக்கிறோம். ஏனெனில் அதின் ரகசியத்தை உங்களுக்குத் திறந்து சொல்லுகிறேன் கேளுங்கள்; நாங்கள் முதலாவது மோட்ச பிரயாணிகளான சமயத்தில் இந்த ஆவேசங்கள் எங்களைப் பிடித்துக்கொண்டது. அப்பால் அவைகளை நீக்கித் துரத்திவிடும்படி என்ன பிரயத்தனம் நாங்கள் செய்தபோதிலும் அவை நீங்கவில்லை. நாங்கள் போனபின்பு இவைகள் அங்கும் இங்கும் அலைந்து யாருக்குள் நுழையலாம் என்று வகைபார்க்கும். ஆனால் எங்களின் நிமித்தம் அவைகளுக்குக் கதவை அடைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி, தாங்கள் புறப்படும் நேரம் வந்தவுடனே ஆற்றங்கரை சேர்ந்தார்கள். அவர்கள் ஆற்றைக் கடக்கிற சமயத்தில்; இரவே ஒழிந்துபோ, பகலே உதித்துவா! என்று ஏக்கம் சொல்லிக்கொண்டு அக்கரை சேர்ந்தார். அவருடைய குமாரத்தியாகிய திகிலுற்றாளோ இன்பகவி ஒன்று பாடிக்கொண்டே அக்கரை சேர்ந்தாள். ஆனால் அவள் பாடின பாட்டின் வார்த்தைகள் இன்னதென்று எவரும் அறிந்துகொள்ளக்கூடாதிருந்தது.

ஏக்கத்தின் கடைசி வாசகம்.

திகிலுற்றாளின் கீதம்.

இவைகளுக்குப்பிற்பாடு சம்பவித்ததென்னவென்றால், கிழட்டு யதார்த்தனைத் தேடித் திரிகிற ஒரு சேவகன் பட்டணத்துக்குள் வந்தான். அவன் அவருடைய வீட்டைத் தேடிக் கண்டுபிடித்து ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அதில், நீ இன்றைக்கு ஏழாம்நாள் இரவில் தமது பிதாவின் வாசஸ்தலத்தில் வீற்றிருக்கும் நமது ஆண்டவர் சமுகத்து வரவேண்டும் என்று உனக்கு இதினால் கட்டளையிடப்படுகிறது. நான் கொண்டுவந்த இந்தச் செய்தி சத்தியம் என்பதற்கு அத்தாட்சியாக கீதவாத்திய கன்னிகைகள் எல்லாம் அடங்கிப்போகும் என்றும் கண்டிருந்தது.[a]

கிழ யதார்த்தனுக்கு வந்த செய்தி.

அச்செய்தி வந்தக்ஷணமே கிழட்டு யதார்த்தன் தமது சிநேகிதர் முதலானவர்களை வரவழைத்து: என் தோழரே! இதோ நான் மரிக்கிறேன், ஆனால் நான் மரணசாசனம் எழுத

a பிர. 12. 1.

வேமாட்டேன். என் உண்மை என்னோடேகூடவே இருக்கும் என்று எனக்குப்பின்னே வருகிறவனிடத்தில் சொல்லிப்போடுங்கள் என்றார். அவர் போய்விடும் நாள் வந்தபோது ஆற்றைத் தாண்டும்படி ஆயத்தப்பட்டார். அன்றையத்தினம் ஆறு சில இடங்களில் கரைபுரண்டு ஓடிற்று. ஆனால் இவர் தமக்கு உதவிசெய்ய நல்மனச்சாட்சி என்னும் ஒருவரை நதி ஆற்றில் வந்து இருக்கும்படியாகத் தமது ஜீவகாலத்தில் ஒருதரம் கேட்டிருந்தார். அவரும் அப்படியே வந்திருந்து யதார்த்தனுக்குக் கைகொடுத்து, கடத்தி ஆற்றைக் கடத்தி அவரை அக்கரைப்படுத்தினார். அவர் ஆற்றைக் கடந்துபோகிறபோது, கிருபை பெருகி ஆளுகிறது என்று கடைசியாகச் சொல்லி அக்கரை சேர்ந்தார்.

*நல்மனச்சாட்சி.*

*அவருடைய கடைசி வசனம்.*

அதின்பின்பு சத்திய வீரதீரன் புறப்பட்டு வரும்படியாகச் செய்தி வந்திருக்கிறதென்றும் அச்சமாசாரம் உண்மை என்பதற்கு அத்தாட்சியாக, "ஊற்றின் அருகே சால் உடைக்கப்படும்"[a] என்று சொல்லப்பட்டதென்றும் பட்டணத்தில் ஒரு சத்தம் பிறந்தது. அவர் அதின் கருத்தை அறிந்துகொண்டபின்பு, தமது சிநேகிதர் அனைவரையும் வரவழைத்து தனக்கு வந்த கட்டளை இன்னதென்று தெரியப்படுத்தினார். பின்னும் அவர் அவர்களை நோக்கி: நான் என் பிதாவினிடம் போகிறேன், வெகு வருத்தத்தோடு இம்மட்டும் வந்து சேர்ந்தபோதிலும் அவ்வருத்தங்களையெல்லாம் நினைவுகூர்ந்து மனஸ்தாபப்படுகிறதில்லை. மோட்ச பிரயாணத்தில் என்னைப் பின்செல்லுகிறவன் எவனோ, அவனுக்கு என் பட்டயத்தை சாசனம் செய்கிறேன்; என் வீரதீரத்தையும் இராட்சத சமர்த்தையும் எடுத்துக்கொள்ள இயன்றவன் எவனோ அவனுக்கு விட்டுவிடுகிறேன். என் காயங்களையும் வடுக்களையும் இனி எனக்குப் பலன் அளிப்போரின்நிமித்தம் நான் பண்ணின போருக்கு அத்தாட்சியாக என்னோடே கொண்டுபோகிறேன் என்றார். அவர் மேலோகம் போய்விடும் நேரம் வந்தபோது அநேகர் அவரோடு

*சத்திய வீரதீரனின் முடிவு.*

*அவருடைய மரணசாசனம்.*

a பிர. 12. 6.



மரணநதியின் ஓரம் மட்டும் போனார்கள். அவர் ஆற்றில் இறங்கும்போதே, "மரணமே உன் கூர் எங்கே"[a] என்றார். அவர் பின்னும் ஆழத்தில் போகையில், "பாதாளமே உன் ஜெயம் எங்கே"[a] என்று சொல்லிக்கொண்டே அக்கரை சேர்ந்தார்; உடனே அங்கிருந்த எக்காளங்கள் எல்லாம் அவரை வாழ்த்தும்படி முழங்கின.

*கடைசி வாசகம்.*

அதின்பின் நிலைநிற்போனுக்கு ஒரு கட்டளை வந்தது. பிரயாணிகள் மயக்கபூமி வரும்போது முழங்காலில் நிற்கக்கண்ட ஆள் இவர்தான். அந்த சேவகன் அக்கட்டளை அடங்கிய நிருபத்தை விரித்துக்கொண்டே வந்தான். அதில், இவர் தமது எஜமானைவிட்டு இனிமேல் இவ்வளவு தூரத்தில் இருக்கிறது எஜமானுக்குப் பிரியம் இல்லை என்றும், தமது ஜீவியத்தையும் குடியிருப்பையும் மாற்றிக்கொள்ளும்படி அவர் விரும்புகிறார் என்றும் கண்டிருந்தது. இச்செய்தியை வாசித்தவுடனே நிலைநிற்போன் அசந்துபோனார். அப்போது அந்தச் சேவகன்: ஓய்! நிலைநிற்போனே என் சமாசாரம் நிஜமோ, அல்லவோ என்று நீர் சமுசயப்படவேண்டியதில்லை; அதை அனைத்தும் சத்தியம் என்பதற்கு அத்தாட்சியாக, "துரவண்டையில் சக்கரம் நொறுங்கிப்போகும்"[b] என்று சொன்னான். அப்போது அவர் வழிகாட்டியாக வந்த தைரிய நெஞ்சனைக் கூப்பிட்டு, அவரைப் பார்த்துச் சொல்வார்: ஐயாவே! என் பிரயாணத்தின் மிச்சமான பாகத்தில் நான் உமது நடத்துதலுக்குள் இருக்கும் பாக்கியத்தைப் பெறாதேபோனாலும் உம்மோடு கூடிக்கொண்ட காலமுதல் உம்மால் எனக்கு உண்டான பிரயோஜனங்கள் மெத்தவுண்டு. நான் என் வீட்டைவிட்டுப் புறப்பட்ட சமயத்தில் என் மனைவியையும் ஐந்து பிள்ளைகளையும் விட்டுவந்தேன். இன்னும் அநேக பரிசுத்த பிரயாணிகள் உமக்கு அகப்படுவார்கள்; அவர்களையும் எங்களைப்போல் வழிநடத்தலாம் என்ற நம்பிக்கையிருக்கில், நீர் மறுபடியும் உமது எஜமானுடைய அரமனைக்குத் திரும்பிப்போவீர் என்று நான் அறிவேன். ஆகையால் நீர் அவ்விடம் திரும்பிப் போனபின்பு என் குடும்பத்தாரை வரவழைத்து, இம்மட்டும் எனக்குச் சம்பவித்

*நிலைநிற்போனின் முடிவு.*

*அவர் தைரியநெஞ்சனைக் கேட்டுக்கொண்ட மன்றாட்டுகள்.*

a 1 கொரி. 15. 55. b பிர. 12. 6.

தவைகளையும் இனிமேல் எனக்கு சம்பவிப்பவைகளையும் அவர்களுக்கு விபரமாய்ச் சொல்லும்படி மன்றாடுகிறேன். அதோடு இப்பொழுதிருக்கிற என் பாக்கியமான நிலைமையையும் நான் உத்தரிக்கப்பட்டதினால் போய் அநுபவிக்கும் வாழ்வுகளையும் அவர்களுக்குச் சொல்லும்படி வேண்டுகிறேன். அதுவும் அன்றி கிறிஸ்தியானையும் கிறிஸ்தினாளையும் பற்றிய செய்திகளையும் அவரும் அவள் மக்களும் அவளைப் பின்தொடர்ந்தார்கள் என்பதையும் அவளுக்குக் கிடைத்த கடைசிவாழ்வு இன்னதென்றும், எந்த இடத்தில் வசிக்கிறாள் என்றும் தெளிவாய்ச் சொல்லும்படி மன்றாடுகிறேன். நான் அவர்களுக்கு அனுப்பும்படியாக என் கண்ணீரையும் ஜெபத்தையும் அல்லாமல் வேறொரு பொருளும் என்னிடத்தில் இல்லை என்று அவர்களிடம் சொன்னால் போதும்; ஒருவேளை அவர்கள் மனம் திரும்பி மோட்ச பிரயாணிகளாகுவார்கள் என்றான். நிலைநிற்போன் இவ்வளவும் சொல்லி, இவ்வண்ணம் தமது வீட்டுக்காரியங்களை ஒழுங்குபடுத்திவிட்டு மேலோகம் போகும்நேரம் வந்தபோது ஆற்றில் இறங்கினார். அச்சமயத்தில் எவரும் அதிசயப்படும்படியாக அந்த ஆறு அமைதலாய் இருந்தது. அவர் நடு ஆறுமட்டும் நடந்துபோன பின்பு அங்கே நின்றுகொண்டு, ஆற்றுக்கு இக்கரையில் தமக்காகக் காத்துக்கொண்டு நின்ற சிநேகிதரை நோக்கி: இந்த ஆறு அநேகருடைய பயங்கரமாய் இருக்கிறது. இதை நினைத்தமாத்திரத்தில் அநேகர் நடுங்குகிறார்கள்; ஆயினும் இதில் நான் சௌபாக்கியமாய் நின்றுகொண்டிருக்கிறதாக் எனக்குத் தோன்றுகிறது. இப்பொழுது என் பாதங்கள் முன் ஒரு காலத்தில் இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்தபோது, உடன்படிக்கைப் பெட்டியைச் சுமந்துபோன ஆசாரியரின் கால்கள் [a] நின்ற இடத்திலே பதித்திருக்கிறது. இதின் ஜலம் நாவுக்குக் கசப்பாயும் வயிற்றுக்குக் குளிர்ச்சியாய் இருக்கிறது; நான் என் இதைக் கடந்துபோகிறேன் என்று நினைக்கும், அதோ அக்கரையில் என்னைக் கூட்டிக்கொண்டு போகும்படி வந்து காத்திருக்கிற கும்பின் காட்சியும், என் இருதயத்துக்குள் அக்கினி தழல்போல் தகதகவென்று இருக்கிறது. இப்பொழுது நான் என் மோட்ச பிரயாணத்தின் முடிவைக் காண்கிறேன்; என் கஷ்டகாலம் எல்லாம் கழிந்துவிட்டது. நான்

அவர் சாவாற்றில் நின்று செய்த அறிக்கை.

a யோசு. 3. 17



இப்போது எனக்காக முள்முடி சூட்டப்பட்டிருந்ததே அந்த சிரசையும் உமிழப்பட்டிருந்ததே அந்த முகத்தையும் பார்க்கப்போகிறேன். இதுமட்டும் நான் கேள்வியினாலும் விசுவாசத்தினாலும் ஜீவித்துவந்தேன்; ஆனால் இப்பொழுதோ தரிசித்து ஜீவிக்கும் இடத்துக்குப் போய் என் ஆத்துமா நாடுகிறவரோடே வாசம்பண்ணப் போகிறேன். என் ஆண்டவரைப் பற்றிய புகழ்ச்சி என் காதுக்கு எப்போதும் பிரியமாய் இருந்தது; அவருடைய பரிசுத்த பாதங்களின் அடிச்சுவடுகளை நான் எங்கெங்கே கண்டாலும் அங்கே என் பாதங்களை வைக்கும்படி ஆசைகொண்டேன். அவருடைய திருநாமம் எனக்கு ஒரு கஸ்தூரி டப்பியைப்போலும், ஆம் சகல பரிமளங்களிலும் பரிமளமாயும் இருந்தது; அவர் சத்தம் எனக்கு மகா இன்பமாய் இருந்தது. சூரிய பிரகாசத்தைப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் கபோதிகளின் ஆசையிலும் எனக்கு அவருடைய திருமுகப்பிரகாசத்தின்மேல் அதிக ஆசையாய் இருந்தது. அவருடைய வசனங்களை எனக்குப் போஜனமாகவும் என் இளைப்பை மாற்றும் அருமருந்தாகவும் நான் பொறுக்கிச் சேர்த்துக்கொண்டுதான் வந்தேன். அவர் என் அக்கிரமங்களில் இருந்து என்னை விடுவித்து, எந்த அநியாயங்களிலும் என்னை அணுகொட்டாதபடி காப்பாற்றினார்; அவருடைய பிரமாணங்களின் வழியில் என் பாதங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்றார்.

இப்படி அவர் பேசிக்கொண்டு வரும்போதே அவருடைய [a] முகரூபம் வேறுபட்டது; அவருடைய பலசாலி அவருக்குள் தாழ்ந்தான். கடைசியாக என்னை எடுத்துக்கொள்ளும், ஏனெனில் நான் உம்மண்டை வருகிறேன் என்று சொன்னார். இதின்பின்பு அவரை அவர்கள் கண்கள் கண்டதில்லை.[1]

அவருடைய கடைசி வாசகம்.

[1] நாம் இப்படி பக்தர்களின் மரண விபரங்களை வாசிக்கிறதினால் நமது இருதயம் நமக்குள் எழும்புதல் அடைந்து பிலேயாமைப்போல் "நீதிமான் மரிப்பதுபோல் நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக" என்று ஜெபம் பண்ணுகிறோம் (எண் 23. 10.). ஆனால் இவர்களைப்போல் பிரயாணிகளாய் இருப்பவர்களுக்கு மாத்திரம் இந்தப் பாக்கியம் கிடைக்கும். நீதிமான்களைப்போல் ஜீவித்து போராட்டம்பண்ணுகிறவர்களுக்கு மாத்திரம் இந்த மகிமையான மரணம் அளிக்கப்படும்.

a பிர. 12. 3.

அச்சமயத்தில் அந்தரங்கத்தில் விளங்கிய காட்சியின் மகிமையை என்னவென்று சொல்ல. மோட்ச காட்சி. மேகமண்டலங்கள் எல்லாம் குதிரைகளாலும் இரதங்களாலும் எக்காளக்காரராலும் ராகசுரம் ஊதுவோராலும் கீதவாத்தியங்களை வாசித்துப் பாடுவோராலும் சாமண்டலங்களைத் தட்டி ஆடுவோராலும் நிறைந்திருந்தது. பரதேச பிரயாணிகள் மோட்ச பட்டணம் போகும்போது, இவர்கள் அணியணியாய் அவர்கள்பின்னே சென்று உச்சிதபட்டணத்தின் அலங்காரவாசலின் வழியாய் உட்பிரவேசித்தார்கள்.

கிறிஸ்தியானோடே புறப்பட்டுவந்த அவளுடைய நாலு பிள்ளைகளும் அவர்களுடைய மனைவிகள் கிறிஸ்தியானின் குடும்பம். மக்களுமானவர்கள் ஆற்றைக் கடந்து அக்கரை போகுமட்டும் நான் அந்த இடத்திலே நின்றுகொண்டிருக்கவில்லை. மேலும் நான் அவ்விடத்திலிருந்து திரும்பிவந்தபிற்பாடு அவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள் என்றும், ஆனதால் அவர்கள் சிலகாலம் தாமதித்திருந்த அந்த இடத்தில் சபை பெருகும்படி ஒரு உதவியாய் இருப்பார்கள் என்றும் ஒருவர் சொல்லக் கேள்விப்பட்டேன்.

அந்திசைக்குப் போகும்படியான சந்தர்ப்பம் எனக்கு மறுபடியும் ஒருதரம் நேரிட்டால், இப்போது சொல்லாமல் விட்டிருக்கிற சங்கதி ஆக்கியோன் வந்தனம். களைப்பற்றி அறிய விரும்புவோருக்குத் தெரியப்படுத்த ஆயத்தமாய் இருப்பேன். அதுமட்டும் இதை வாசிக்கிறவர்களே! உனக்கு வந்தனம்சொல்லி விடைபெற்று நிற்கிறேன்.

இரண்டாம் பங்கு முற்றிற்று.

# பொருள் அட்டவணை.

## முதலாம் பங்கு.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| முகவுரை ........ | v |
| பிரயாண ஆவல்.—சொப்பனங்கண்ட குகை; நாசலோகம்; பாவநோய்க்கு வேதமருந்து ........ | 1 |
| சுவிசேஷகனின் முதலாம் சந்திப்பு.—திட்டிவாசலின் வழியைக் காட்டுதல் ........ | 4 |
| திட்டிவாசல் பயணம்.—மோட்ச பிரயாணம் வெகு பிரயாசம்; இளக்குநெஞ்சனும் பிடிவாதனும் போய் வழிமறித்தல்; பிடிவாதன் திரும்பிவிடுதல்; இளக்குநெஞ்சன் கிறிஸ்தியானுடன்கூடப் போகுதல் ........ | 6 |
| வசனசம்பாஷணை.—தேவவிஷயங்களின் மாட்சிமை ........ | 10 |
| நம்பிக்கையீனத்தின் அவதி.—இருவரும் அதில் விழுதல்; இளக்குநெஞ்சன் ஊருக்குத் திரும்பிவிடல்; உளையின் ஸ்தோத்திரம்; அதன் மகாமத்துவம்; கிறிஸ்தியானை சகாயன் உளையிலிருந்து தூக்கிவிடுதல்; இளக்குநெஞ்சனின் முடிவு .... | 13 |
| லோகஞானி சந்திப்பு.—இருவரும் சம்பாஷித்தல்; லோகஞானியின் ஆலோசனை; சுவிசேஷகன் ஆலோசனையைக் குறைகூறுதல்; நல்லறநகரத்து நியாயசாஸ்திரி; கிறிஸ்தியான் அவனிடம் போகுதல்; அவன் சீனாய்மலையடிவாரத்தில் பயந்தது ........ | 16 |
| சுவிசேஷகனுடைய இரண்டாம் சந்திப்பு.—அவன் மிரட்டல்; கிறிஸ்தியானுடைய குற்றத்தை உணர்த்துதல்; அவனுக்குச் சொன்ன ஆலோசனைகள்; அவனுடைய இரட்சணிய சந்தேகம்; அவன் திரும்பவும் திட்டிவாசலுக்குப் போகுதல்; அதைத் தட்டுதல் ........ | 22 |
| திட்டிவாசல் கோட்டைசேருதல்.—பட்சதாபன் சம்பாஷணை; அவர் சொன்ன ஆலோசனை ........ | 31 |
| வியாக்கியானி வீடு சேருதல்.—படங்காட்சி; தூசிப்பெட்டிக் காட்சி; இரண்டு பாலியர் காட்சி; பணப்பையைக் கொட்டின காட்சி; அக்கினிச்சுவாலையின் காட்சி; ஒரு அரமனைக் காட்சி; அதினுள் பிரவேசித்த வீரன் காட்சி; இரும்புக்கூட்டில் கைதி | |

விஷயம் — பக்கம்

காட்சி; தூக்கிலிடப்பட்டவன் காட்சி; அவன் கண்ட சொப்பனம். ... 35

பிரயாணியின் இருவகை தரிசனை.—பாரம் அறாதுவிழுதல்; ஒளிமயரூபிகள் காட்சியளித்தல்; அங்கியையும் அடையாளத்தையும் பெற்றது; பேதை, சோம்பன், துணிகரன் ஆகிய மூவரையும் சந்தித்தது; வேஷக்காரன், மாயக்காரன் ஆகிய இருவர் சந்தித்தது. ... 49

பிரயாணி கஷ்டகிரி சேருதல்.—அந்த இருவருடைய முடிவு; கஷ்டகிரி தங்குமனையில் தூங்கினது; அச்சன், சந்தேகி சந்தித்தது. ... 57

பிரயாணி சுருளை இழந்தது; சுருளைத் தேடிப்போனது; சுருளைக் கண்டெடுத்தது ... 60

பிரயாணி சிங்காரமாளிகை சேருதல்.—சிங்கங்களைக் கண்டு பயந்தல்; சேவகனோடு சம்பாஷித்தல்; பூமி அவனை விசாரித்தல்; மற்றக் கன்னிகைகள் வந்து விசாரித்தல்; பயபக்தியின் சம்பாஷணை; விவேகியின் சம்பாஷணை; நேசமணியின் சம்பாஷணை; இராவிருந்து; புஸ்தகசாலைக் காட்சி; ஆயுதசாலைக் காட்சி; ஆனந்தமலைக் காட்சி; ஆயுதம் தரித்தல்; கிறிஸ்தியான் சிங்காரமாளிகையில் இருந்து புறப்படுதல். ... 63

பிரயாணி தாழ்மைப்பள்ளத்தாக்கில் சேர்ந்தது.—அப்பொல்லியோனைச் சந்தித்தல், அவனோடு தர்க்கித்தல்; அவனோடு போர்புரிதல்; அப்பொல்லியோனின் அபஜயம் ... 80

பிரயாணி மரணநிழல் பள்ளத்தாக்கைக் கடந்துபோதல்.—இரண்டுபேர் திரும்பும்படி எச்சரித்தும் அவன் போகுதல்; அந்தப் பள்ளத்தாக்கின் விபரம்; அதிலே கிறிஸ்தியான் பட்ட அவஸ்தைகள்; பூதசேனையின் காட்சி; கிறிஸ்தியானின் ஓடுதல்; மரணபள்ளம் கடத்தல். ... 88

பாப்பு ராட்சதன் சந்திப்பு.—அவன் குகையின் விபரம்; அவனுடைய இயலாமை ... 95

கிறிஸ்தியான் உண்மையோடு கூடுதல், இணங்குதல்; தெரிந்தவர்களைப்பற்றி விசாரித்தல்; வழியின் ஆபத்துகளைப்பற்றி விசாரித்தல்; மோகினியின் மோசங்கள்; முதல் ஆதாமின் மோசங்கள்; மோசே முனிவரின் உதைகள்; தாழ்மைப் பள்ளத்தில் கிறிஸ்தியானுக்கு உண்டான தடை; வெட்கம் என்பவனால் உண்டான சோதனைகள்; கிறிஸ்தியான் தான் பட்ட பாடுகளைச் சொல்லல். ... 98

வாயாடி வந்து கூடுதல்.—உண்மை அவனோடு பேசுதல்; வாயாடி அவனை பிரமிக்கப்பண்ணுதல்; வாயாடியின் உள்ளந்தியைக் கிறிஸ்தியான் உண்மைக்கு விளக்குதல். ... 112



விஷயம் — பக்கம்

சுவிசேஷகரின் மூன்றாம் சந்திப்பு.—அவருடைய போதனைகள்; மாயாபுரியில் உண்டாகும் பாடுகளை முன் அறிவித்தல். ... 130

பிரயாணிகள் மாயாபுரி சேருதல்.—மாயாபுரிச் சந்தையின் பூர்வோத்தரம்; இச்சந்தையின் சரக்குகள்; பிரபுக்களின் அதிபதியை முதலாய் இதில் சரக்கு வாங்கக் கேட்டது; மாயாபுரியில் அமளி உண்டானது; பரதேசிகள் கைதியானது; அவர்களுக்குச் செய்யப்பட்ட இம்சைகள்; மாயாபுரியாரில் சிலர் பரதேசிகள் பட்சம் பேசினதால் கலகம் உண்டானது; மாயாபுரியார் பரதேசிகள் பட்சம் சேர்ந்துகொண்டது; பரதேசிகள் நியாயவிசாரணை செய்யப்பட்டது; சாட்சிக்காரரின் வாக்குமூலங்கள்; ஜூரிமாரின் தீர்மானம்; உண்மையின் மேல் பிறந்த மரணாக்கினைத் தீர்ப்பு; உண்மை அக்கினிரதமானது; கிறிஸ்தியான் தேவாதீனமாய்த் தப்பி தன் வழியே போனது; நம்பிக்கை அவனோடு கூடிக்கொண்டது. ... 133

பிரயாணிகள் உபாயியைச் சந்தித்தல்.—அவன் பூர்வோத்தரமும் பந்துஜனங்களும்; அவன் போக்கும் தொழிலும்; பிரயாணிகள் அவனை விட்டுப் பிரிதல் ... 152

உபாயியின் தோழர் சந்திப்பு.—இவர்கள் பூர்வோத்தரம்; அவர்கள் சம்பாஷணை; குருவின் திருஷ்டாந்தம், வியாபாரியின் ஒப்பனையும் அவர்களுடைய தீர்மானமும்; தங்கள் தீர்மானத்தைக் கிறிஸ்தியானுக்கும் மற்றவனுக்கும் சொல்லல்; கிறிஸ்தியான் அதை ஆட்சேபித்து எதிர் நியாயம் உரைத்தல் ... 156

பிரயாணிகள் இரா[illegible]கிரி சேருதல்.—இளைப்பாற்றி கடத்தல்; அங்குள்ள [illegible]ச்சுரங்கம்; தேமாவின் ஏமாற்றம்; பிரயாணிகள் அதற்கு இணங்காதது; உபாயியும் அவன் தோழரும் அதை[illegible]து; உப்பு ஸ்தம்பக் காட்சி; அதைப்பற்றி உண்டான உ[illegible]க்தி ... 164

பிரயாணிகள் [illegible]நதி சேருதல்.—இவ்விடத்தில் அவர்கள் அநுபவித்த சுகம் ... 170

பிரயாணிகள் பக்கத்துவழி மைதானம் திரும்புதல்.—வீணுறுதி என்பவன் செய்த மோசம்; அதனால் வந்த நாசம்; பிரயாணிகள் திரும்புதல்; அங்குண்டான ஆபத்துகள் ... 172

அகோர பயங்கர ராட்சதன் பிரயாணிகளைப் பிடித்தல்.—அவர்களைக் கைதிகளாக்குதல்; சிறையில் அடைத்தல்; அவர்களை அடித்தல்; அவர்கள் தங்களைக் கொன்றுகொள்ளும்படி சொன்ன ஆலோசனை; கிறிஸ்தியானைத் திடம்பிக்கை

விஷயம் பக்கம்

ஏற்றுதல், எறும்புக் குவியல் காட்சி; அவர்கள் தப்பி ஓடு தல்; ஞாபகஸ்தம்பம் எழுப்புதல் ........ ........ 176

பிரயாணிகள் ஆனந்த மலை சேருதல்.—இடையரோடு பேசுதல்; தப்பறைப் பருமலின் காட்சி; சாவதான மலைக்கா ட்சி; நரகத்தின் குறுக்குவழிக் காட்சி; உச்சித பட்டணத்து அலங்கார வாசல் காட்சி; மேய்ப்பர் பிரயாணிகளுக்குச் சொன்ன எச்சரிப்புகள் ................................ 186

பிரயாணிகள் அறிவீனனைச் சந்தித்தல்.—நிர்க்கியான் அவனோடு விலகுதல்; அறிவீனன் பிரிந்துபோகுதல்; மறுத லிப்பின் முடிவு; அற்பவிசுவாசியின் சரித்திரம். ......... 193

பிரயாணிகள் முகஸ்துதியைச் சந்தித்தல். — அவன் அவர்களை வலைக்குட்படுத்தினது; அவர்கள் வலையிலிருந்து இரட்சிக்கப்பட்டது; அவர்களுக்கு உண்டான தண்டனை.... 207

நாஸ்திக சாஸ்திரி சந்தித்தல்.—அவன் மோட்சமே இல்லை என்று சொல்லி சிரித்தது .......... .............. .... 210

மயக்கபூமியில் பிரயாணிகள் நடந்தல்.—பிரயாணிக ளின் சம்பாஷணை ................ ................ .... 213

அறிவீனனை மறுபடியும் சந்தித்தல்.—அவன் எண்ணம் தப்பென்று உணர்த்தல்; மறுபடியும் பிரயாணிகள் பழைய படிச் சம்பாஷித்தல் ............................ 225

சொற்பகாலம் என்பவனைப்பற்றிய சம்பாஷணை. 236

பிரயாணிகள் வாழ்க்கைநாடு சேருதல்.—அந்நாட்டின் செழிப்பு; அங்கே அநுபவித்த சுகங்கள் .................. 240

பிரயாணிகள் மரணநதி கடத்தல் .................. 244

பிரயாணிகள் மோட்சம் ஏறுதல் .................. 248

பிரயாணிகள் மோட்சம் சேருதல் ................ 252

அறிவீனனுடைய முடிவு ............................ 254



## இரண்டாம் பங்கு.

விஷயம் பக்கம்

ஆக்கியோன் அறிவிப்பு ........ .................... 257

சூரியபுத்தி பிரசன்னம். — அவர் கிறிஸ்தியானைப் பற்றிப் பேசுகிறார்; அவன் அடைந்த வாழ்வுகள்; சூரியபுத்தி கிறிஸ் தீனாளைக் குறித்துச் சொல்லுவது .......................... 258

கிறிஸ்தீனாளின் பிரயாண ஏவுதல்கள்.—அவளை ஏவின முகாந்தரங்கள்; அவள் கண்ட சொப்பனம்; தோல்சுருள் கது; இருள்மயரூபிகள் கது; தன் புருஷனைக் கண்ட கது.... 262

அந்தரங்கன் அவளைச் சந்தித்தது. — அவர் சொன்ன செய்தி, கொடுத்த கடிதம் ........ .................... 265

கிறிஸ்தீனாளின் பிரயாண ஆயத்தம். — தன் மக்களுக் குச் சொன்னது; அவர்கள் மூட்டை கட்டினது; கோழையும் தயாளியும் சந்திக்க வந்தது; கோழையின் தடைகள்; தயாளி கிறிஸ்தீனாளுடன் கூடப் போகத் தீர்மானித்தது; கோழை போய்விட்டது; அவளுடைய தோழிமார்; மூடமங்கை; இருட்கண்ணி; சிற்சித்தனை; களிமயக்கி .................... 268

கிறிஸ்தீனாளின் மோட்சப்பிரயாணம். — தயாளியின் சந்தேகம்; அச்சந்தேக நிவிர்த்தி; பிறகு ஆத்தும ரட்சிப்பை நாடிய பிரலாபவிண்ணனம் ...... ...................... ...... 276

பிரயாணிகள் நம்பிக்கையிழவு உளை சேர்ந்தது. — உளையைப்பற்றிய சமாசாரம்; உளையைத் தாண்டினது; சூரி யபுத்தி விடைபெற்றுப்போனது ...... .................... 279

அவர்கள் இடுக்குவாசல் சேர்ந்தது.—வாசலைத் தட்டினது; கிறிஸ்தீனாளும் அவள் பிள்ளைகளும் உள்ளே சேர்த்துக்கொள் ளப்பட்டது; தயாளி வெளியே நின்றது; கிறிஸ்தீனாளின் மன் றாட்டு; தயாளியின் ஆத்திரம்; அவளும் உள்ளே ஏற்றுக் கொள்ளப்பட்டது; பிரயாணிகள் வார்த்தையாலும் செய்கை யாலும் மன்னிப்புப் பெற்றது; பிரயாணிகள் சம்பாஷணை; கடிநாயைப்பற்றிய ஆலோசனை; கடிநாயின் வரலாறு ..... 281

இடுக்கமான வழிப் பயணம்.—பெயெல்செபூலின் பழங் கள்; இருள்மயரூபிகள் பிரயாணிகளை மடக்குதல்; அவர்க ளுக்கு உதவியாக வந்த ஆட்கள்; துணையாளில்லாமல் புறப் படலாகாது; கேளாமல் கிடைக்கும் சகாயம் மதிக்கப்பட மாட்டாது; பிரயாணிகளின் வழிச்சம்பாஷணை ........... 292

விஷயம் — பக்கம்

பிரயாணிகள் வியாக்கியானி வீடு சேருதல். — மாளிகையான்; வியாக்கியானி வந்து அவர்களை ஏற்றுக்கொண்டது; கிறிஸ்தியான் கண்ட காட்சிகளை இவர்களும் பார்த்தது; குப்பைவாரியின் காட்சி; சிலந்தியின் காட்சி; அது விசுவாசத்தின் போதனை; குஞ்சுகள் தாய்க்கோழியின் காட்சி; ஆடு அறுப்போன் காட்சி; பூந்தோட்டக் காட்சி; பயிர் நிலக் காட்சி; சிட்டு சிலந்தியைக் கொன்றுபோன காட்சி; வியாக்கியானி ஞானசார சம்பாஷணைகள்; மக்கிப்போன மரத்தின் காட்சி; இராச்சாப்பாடு; பக்திநேர சம்பாஷணை; கிறிஸ்தினாள் ஊரிலிருந்து பயணப்பட்டது; வியாக்கியானி அவர்களை வாழ்த்தினது; தயாளியின் பயண வரலாறு; வியாக்கியானி அவளை வாழ்த்தினது; பிரயாணிகள் நீராடினது; முத்திரையிடப்படுதல்; வஸ்திராலங்காரம்பண்ணுதல்; அவர்கள் அங்கிருந்து பயணப்பட்டது; தங்களுக்காக தைரியநெஞ்சன் அனுப்பப்பட்டது...

அலங்காரமாளிகைப் பயணம்.—சிலுவைக்கு வந்தனம்; செய்கையால் இயும் பாவமன்னிப்பு; [illegible] களுக்கும் நீதி இன்னது; விசுவாசத்தினால் நீதியானும் வழியை கிறிஸ்தினாள் கண்டுபிடித்தது; கிறிஸ்துவின் அன்பு இருதயத்தை விளங்கும் வகை; ஆத்துமாவின் பாவத்துக்கு முகாந்தரம்; வழியில் மூவர் தொங்கும் காட்சி; அம்மூவரால் கெட்டோர் பலர் ....................

அவர்கள் கஷ்டகிரி வந்து சேர்ந்தது.—கஷ்டகிரி அடி; கஷ்டகிரி இருவழி; மோசம் பிரயாணிகள் பக்கவழிகளை நாடும் முகாந்தரம்; கஷ்டகிரி ஆரோகணம்; நட்டகிரி தங்குவனம்; தங்குவாரசம்பாஷணை; தங்குமனை மே[illegible]; அங்கிருந்து புறப்பட்டது; கிறிஸ்தினாள் [illegible] குப்பியை மறந்துவைத்துவிட்டது; ஒரு ஞாபகக் [illegible] காட்சி; சிங்கங்கள், இரத்தப்பிரிய இராட்சதன்; தைரிய[illegible]நெஞ்சன் இராட்சதனோடு போர்புரிதல்; இராட்சதன் அப[illegible]ஜயமானது.......

அலங்காரமாளிகை சேர்ந்தது.—வாச[illegible] காவலன்; தைரியநெஞ்சன் திரும்பிவிட்டது; சேவக உதவி [illegible]மானது; மனத்தாழ்மை மாது; பிரயாணிகள் மாளிகைக்குள் பிரவேசித்தது; இராப்போசனம்; பக்தகை துதை; பக்திவழி பிரயாணிகள் சம்பாஷணை; தயாளி சொப்பனம் கண்டது; அவள் கண்ட சொப்பனம்; அங்கே அவர்கள் சிலகாலம் தங்கியிருந்தது; விவேகியின் கேள்விகள் பிள்ளைகள் கேட்டது; யாக்கோபை விசாரித்தது; யோசேப்பை விசாரித்தது; சாமுவேலை விசாரித்தது; மத்தேயுவை விசாரித்தது; பாடசாலையின் ஆசிரியை ஆர்க்கை; விவேகியின் போதனை; தயாளிமேல் காதல்கொண்ட சுறுசுறுப்பன்; அவன் குணங்களைப்பற்றி விசாரித்தல்; அவ்விருவருக்குள்ளும் நடந்த பேச்சு; அவன் விலகிப்போனது; தயாளியின் தீர்மானம்; அவளுடைய சகோதரியின் விஷயம்; மத்தேயு வியாதிப்பட்டது; சர்மத்தியப் பண்டிதரும் அவர் வைத்தியமும்; வியாதியின் முகாந்தரம்; கொடுத்த மருந்து; கிறிஸ்துவின் இரத்தகுளிகை; குளிகையின் சேர்மானமும் அளவும்; மருந்தின் குணம்; தாய் மருந்தை ருசிபார்த்தல்; இந்தக் குளிகை சர்வரோக சஞ்சீவி; பேதிமருந்தைப்பற்றி; அதின் பிரயோசனம்; சூரியன் [illegible]; மேகங்களைப்பற்றிய போதனை; வானவில்; சிறுத்து; இயேசும் நிரியும்; காலைப் பட்சி; சேவல்; இவற்றின் போதனை; எவான் சென்ற பழக்காட்சி; யாக்கோபின் ஏணிக்காட்சி; தங்கக்கூடம் கொடுத்தது; ஆபிரகாம் இசாக்கைப் பலியிட்ட காட்சி; விவேகியின் தேவாத்திய சங்கீதம்; தைரியநெஞ்சனுக்காகக் கடிதம் எழுதுதல்; அவர் வழித்துணைக்காக வந்து சேருதல்; அவர் கொண்டுவந்த சாமான்கள் .................... 335

அவர்கள் அலங்கார மாளிகையை விட்டுப் புறப்படுதல்.—சேவகனை வழியனுப்புதல்; அவன் பிரயாணியை வாழ்த்துதல்; அந்நியர் சோலைப்பட்சிகள்; பயபக்தியின் பெருமை .................... 360

தாழ்மையின் பள்ளத்தாக்கு.—பிரயாணிகள் அங்கே வந்து சேருதல்; அதி[illegible] வரலாறு; கிறிஸ்தியானுடைய சண்டையின் ஞாபகஸ்தம்பம்; பள்ளத்தாக்கின் வரலாறு; தொடர்ச்சி; அவர்கள் ஒரு இடைப்பையனைச் சந்தித்தது; அவனுடைய மனோபாக்கியம்; [illegible]மைப் பள்ளத்தாக்கில் கிறிஸ்துவின் காட்டுப்புறவீடு [illegible]த்தது; மறுவிவரம்; மனத்தாழ்மை பட்டணத்திருப்பத்தா[illegible]யின் வாழ்வு; கிறிஸ்தியான் அப்பொல்லியோனை மடக்கின [illegible]டம்; அப்பொல்லியோனின் அபஜெயஸ்தம்பம் .................... 363

மரணநிழலின் பள்ளத்தாக்கு.—பிரயாணிகள் அங்கே வந்து சேருதல்; [illegible]க்கள் அ[illegible] கேட்ட சத்தம்; அதின் அவதிகள்; பா[illegible]ப வியாதிப்ப[illegible]பிக் குணமானது. [illegible] அஜேவதக்காட்சி; விக்காயமொத்த ஒரு மிருகத்தின் சா[illegible]; கரும்புகையும் கார்மேகமும்; பிரயாணிகள் கிறிஸ்தியானுடைய அவஸ்தைகளை நினைவுகூருதல்; அவர்கள் ஜெபம்; ஒரு கையனுடைய ஸ்மரணை; பெரும்பள்ளங்கள் மாண்டது, கவனிப்பு வேண்டாம் .................... 372

சங்கார ராட்சதன்.—பிரயாணிகள் சங்கார ராட்சதனை குகை அண்டை வந்தது; அவனுக்கும் வழிகாட்டிக்கும் நடந்த சம்பாஷணை; இருவரும் போர்புரிந்தது; இராட்சதன் அபஜெயமானது .................... 378

விஷயம் பக்கம்.

யதார்த்தனுடன் கூடுதல். — அவனைக் கண்டுபிடித்தது; அவர் பிரயாணிகளை பின்வருதல்; அவர் கிறிஸ்தியானைப் பற்றிச் சொன்ன செய்தி. .... 383

அச்சநெஞ்சனைப் பற்றிய சம்பாஷணை — அவனுடைய வரலாறு; நம்பிக்கையிழவண்டை அவன் பட்டபாடு; இடுக்கு வாசலண்டை பட்டபாடு; வியாக்கியானியின் வீட்டில் அவன் நடந்துகொண்ட விதம்; அலங்காரமாளிகையில் அவன் நடந்துகொண்ட விதம்; அவன் தாழ்மையின் பள்ளத்தில் சமாதானமாய் இருந்தது; அவ்வச்சங்களுக்கு முகாந்தரங்கள்; அவன் சரீரத்திற்கிருக்கும் [illegible] உண்டான உணர்ச்சி; தயாளியின் உணர்ச்சி; மத்தேயுவின் உணர்ச்சி; யாக்கோபின் உணர்ச்சி ............ 387

தன்னிஷ்டத்தைப் பற்றிய சம்பாஷணை. — அவனுடைய கோட்பாடு; அதற்கு ஆதாரம்; பக்தரின் பலவீனம் பாவிகளுக்கு அநீதியத்தைத் தொடுக்கமாட்டாது; இதின் இருள் தக்கும் சத்தியத்தை காணுகை............ 397

பரோபகார காயுவின் சத்திரம் சேருதல். — பிரயாணிகள் அங்கே சேருதல்; இராவிருக்கின் ஆயத்தம்; வழிகாட்டி கிறிஸ்தியான அறிமுகப்படுத்துதல்; கிறிஸ்தியானுடைய பூர்வோத்தரம்; அவனுடைய முற்பிதாக்கள்; அவனுடைய குடும்ப விருத்திக்காக சத்திரத்தியர் சொன்ன ஆலோசனை; ஸ்திரீஜாதிகளின் மேன்மை; பந்திமேஜையை ஆயத்தப்படுத்தினது; இராவிருந்து; பரிமாறின முன்னர்க்கொண்ட, அதை வாட்டப்பட்ட மார்க்கண்டம்; திராட்சரசப்பத்தி; பாலை டைப்பற்றி; வெண்ணெயும் தேனும் வந்த பானப்பற்றி; பழப்பற்றி; கொட்டைப்பற்றி; அரும்பத விடுகதை; யதார்த்தரின் விடுகதை; விடுகதை [illegible]; சாமுவேலின் ஆசை; மத்தேயுவுக்கும் தயாளிக்கும் விவாகம் நடந்தது; பணியர் இக்கிலைக்குப் போனது; நரியநெஞ்சனின் விடுகதை; யதார்த்தன் ஒரு விடுவித்தல்; இருபிரயாணி [illegible] இருக்கையைப் போதனை; கிறபுக்தரின் தப்பெண்ணம்; வாசிப்பு; நலங்கொல்லி ராட்சதனுக்கு சங்காரம் செய்ய ஆலோசித்தல்; ராட்சதனும் வழுத்தனமும்; தைரியநெஞ்சனும் ராக்கதனும் போர்புரிதல்; ராக்கன் அபஜெயமானது; மனந்தளர்ந்தவனின் ஆளிக்கை; அச்சநெஞ்சனைப்பற்றி கேட்டுப்பூட்டுதல்; சரியில்லாதவனுடைய முடிவு; யாக்கோபுக்கும் பெபேயாளுக்கும் விவாகம் நடந்தது ...... 403

பிரயாணிகள் பரோபகார காயுமடம் விட்டது. — மனமுந்தவனம் பின்தாங்கினது; தைரியநெஞ்சன் அவனை

விஷயம் பக்கம்.

வருத்தி அழைத்தது; கொண்டு வந்து சேர்த்தது; மனமுந்தவனும் கொண்டியும் பேசிக்கொண்டது .... ...... .......... 422

பூர்வபிரயாணிகளைப்பற்றிய சம்பாஷணை. — உண்மையைப்பற்றி; மாயாபுரியைப்பற்றி; இடக்கம்பிக்கை உபாயி இவர்களைப்பற்றி ... ...... ............................ 425

பிரயாணிகள் மாயாபுரி மினாசோன் வீடு சேர்ந்தது. — பிரயாணிகள் மினாசோன் வீடு வந்தது; ஊரிலே சேருதும் மாயாபுரி உத்தமர்; மினாசோன் பிரயாணிகளை அறிமுகப்படுத்துதல்; தொருங்கெபநெஞ்சன்; பிரயாணிகள் இம்மட்டும் சந்தித்த சங்கடங்கள்; பரிசுத்தன் சுந்தரசேனன்; பொய் சொல்லுதலியான் மனஸ்தாபன்; சாமுவேலுக்கும் யோசேப்புக்கும் விவாகமானது; மாயாபுரியின் அக்காலஸ்திதிமை. 427

வல்லசர்ப்பத்தோல்லை; அது பிடிக்கப்பட்டது; அதனால் உண்டான கீர்த்தி. .......................................... 434

பிரயாணிகள் மாயாபுரியை விட்டது. — அவர்கள் திரவியமில் மலையண்டை வந்தது; எச்சரிப்பு ஸ்தம்பம்...... 436

அவர்கள் தேவநதியண்டை வந்துசேர்ந்தது. — அக்கரை வனம்; அங்கிருக்க ஆட்டுக்குட்டிகளுக்கும் பட்டிகளும் .... 438

அதிகார பயங்கர ராட்சதனைச் சங்கரித்தல். — அவனைச் சங்கரிக்க ஆலோசித்தல்; படையெடுத்துப்போன சேனை; அவனோடு செய்த போர்; அவன் அபஜெயமானது; சந்தேக கோட்டையை இடித்தது; அங்கு கைதிகளாய் இருந்தவர்களை விடுதலைசெய்தது; பிரயாணிகளின் ஜெயகோலம்...... 440

பிரயாணிகள் ஆனந்தமலை சேருதல். — அங்குள்ள இடையருடன் அறிமுகமாகுதல்; அதிசயமான காட்சி; பொய் மலை மாகிஸ்ஸாமனி அருமையான காட்சி; கறுப்பான கொண்டையாத்தின காட்சி; தயாளி கண்ட அதிசய நரகவாசல் காட்சி; அவள் ஆசித்த கண்ணாடி; அதின் மகத்துவம்; அக்கண்ணாடி கிடைத்தது; மற்ற ஸ்திரீகள் வெகுமதிகள்; அவர்கள் அங்கிருந்து புறப்பட்டது......................... 444

சத்திய வீரதீரனைச் சந்தித்தல். — அவனை மடக்கின கூட்டம்; வார்த்தையாலும், விசுவாசத்தாலும், இரத்தத்தாலும் சத்திய வீரதீரனின் வரலாறு; மறுமையில் இவர் அடிவார்கள்; சத்திய வீரதீரனின் மேற்ட பிரயாணத் தடைகள்.......... 453

பிரயாணிகள் மயக்கபூமி சேருதல். — மயக்கபூமி அவ நிலை; சோம்பர் மடம்; பூப்பந்தல்; அசட்டை, வியர்ப்பு